அண்ணாமலைப் பல்கலைக்கழக சரித்திர வெளியீடு—

# கொங்கு நாட்டு வரலாறு

கோவை

ம. இராமச்சந்திரன் செட்டியார்

எழுதியது

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்
[illegible]

அண்ணாமலைப் பல்கலைக் கழக சரித்திர வெளியீடு

# கொங்கு நாட்டு வரலாறு


கோவை

ம. இராமச்சந்திரன் செட்டியார்



அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அண்ணாமலைநகர்

1954

திருப்பராய்த்துறை
தபோவன அச்சகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

# கொங்கு நாட்டு வரலாறு

## முதற் பகுதி

### பொருள் அடக்கம்


i. அணிந்துரை

ii. முன்னுரை

iii. மேற்கோள் நூல்கள்

| எண் | விவரம் | ஆண்டுகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கொங்கு நாட்டு எல்லைகள் | | 1 |
| 2. | கொங்கு நாடு ஒரு தனி நாடு | | 8 |
| 3. | கொங்கு நாட்டின் பரப்பு | | 19 |
| 4. | கொங்கு நாட்டின் பிரிவுகள் | | 24 |
| 5. | கொங்கு நாட்டு அமைப்பு | | 36 |
| 6. | பண்டைய நிலை | | 36 |
| 7. | பண்டைய குடிகள் | | 47 |
| 8. | நாட்டுப் பழைய குடிமக்கள் | | 51 |
| 9. | பண்டைய சரித்திரம் | கி.மு. 5 நூ. | 55 |
| 10. | உரோமானிய உறவு | கி.மு. 2 நூ.—கி. பி. 5 நூ. | 59 |
| 11. | உரோமானிய நாணயங்கள் | கி.மு. 44–கி. பி. 491 | 64 |
| 12. | அதிகமான் | கி. மு. 1 நூ. முதல் | 74 |
| 13. | மௌரியரும் கோசரும் | கி. மு. 3 நூ.–கி. பி. 2 நூ. | 76 |
| 14. | கொங்கு தேச அரசர்கள் | கி. பி. 3 நூ.–கி. பி. 9 நூ. | 82 |
| 15. | கொங்குதேச அரசர்கள் முதல் வமிசம் | கி. பி. 2 நூ. | 84 |
| 16. | ௸ 2-ஆம் வமிசம் | கி. பி. 3 நூ. | 91 |
| 17. | கங்கர்கள் | கி. பி. 3 நூ.–9 நூ. | 93 |
| 18. | கங்கர்கள் அரசியல் | ,, | 109 |
| 19. | கங்கர்கள் காலத்து நாட்டு நிலைமை | ,, | 117 |

| | | | |
|---|---|---|---|
| 20. | பல்லவர்கள் | கி. பி. 3 நூ - 9 நூ. | 120 |
| 21. | குறுநில மன்னர்கள் | 7, 8 நூ. | 129 |
| 22. | இராட்டிர கூடர்கள் | 783-968 | 132 |
| 23. | கொங்கு நாட்டில் சுந்தர மூர்த்திகள் விஜயம் | 9 நூ. | 136 |
| 24. | ஆட்சிக் கலவரங்கள் | 9 நூ. | 144 |
| 25. | புரட்சிகள் | 9-10 நூ. | 149 |
| 26. | இராட்டிரகூட கிருஷ்ணன் III | 940—968 | 153 |
| 27. | சேரர்கள் ஆதிக்கம் | 8-9 நூ. | 156 |
| 28. | சோழர் ஆட்சி | 894-1004 | 159 |
| 29. | கொங்கு சோழர்கள் | 1004-1303 | 165 |
| 30. | கொங்கு சோழ வம்சம் | ,, | 170 |
| 31. | கலிமூர்க்க விக்கிரமன் | 1004-1045 | 176 |
| 32. | அபிமான சோழ ராஜாதிராஜன் | 1080-1100 | 180 |
| 33. | இராஜ ராஜ உத்தமன் | 1100-1117 | 184 |
| 34. | இராஜாதிராஜ வீரசோழன் | 1117-1135 | 185 |
| 35. | உத்தம சோழ வீர நாராயணன் | 1135-1149 | 189 |
| 36. | குலோத்துங்கச் சோழ தேவன் | 1149-1183 | 191 |
| 37. | வீரசோழன் | 1183-1206 | 197 |
| 38. | வீர ராஜேந்திர சோழன் | 1207-1252 | 203 |
| 39. | விக்கிரம சோழன் II | 1255-1263 | 213 |
| 40. | ஒரு ராஜகேசரி, விக்கிரமன் III | 1263-1303 | 215 |
| 41. | சில பட்டப்பெயர்கள் | 10 நூ.-13 நூ. | 216 |
| 42. | கொங்கு சோழர் காலத்து நாட்டுநிலைமை | ,, | 219 |
| | சேர்க்கை I கோவைப் பெயர் | | 229 |
| | ,, II மருதமலை | | 236 |

# இரண்டாம் பகுதி

## பொருளடக்கம்


| எண் | விவரம் | ஆண்டுகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கீழை நாட்டு நிலை கி. பி. | 1000-1200 | 240 |
| 2. | தென்பால் நாட்டு நிலை | 1000-1200 | 245 |
| 3. | மேலை நாட்டு நிலை | 1000-1200 | 252 |
| 4. | வடபால் நாட்டின் நிலை | 1000-1200 | 258 |
| 5. | பாண்டியர் பெருக்கம் | 1190-1238 | 263 |
| 6. | பாண்டியப் பேரரசு | 1238-1303 | 265 |
| 6(a) | பாண்டியர் தளர்ச்சியும் வீழ்ச்சியும் | ,, | 270 |
| 7. | கொங்குநாட்டில் பாண்டியர் ஆதிக்கம் | 1250-1265 | 275 |
| 8. | கொங்கு பாண்டியர்-வீர பாண்டியன் | 1265-1285 | 279 |
| 9. | ஷை -சுந்தரபாண்டியன் | 1285-1300 | 283 |
| 10. | கொங்கு பாண்டியர் தளர்ச்சி | 1300-1335 | 287 |
| 11. | ஹொய்சளர்கள் | 1200-1335 | 291 |
| 12. | கேரள ஆர்ப்பாட்டம் | 1250-1350 | 299 |
| 13. | முகம்மதியத் தொல்லைகள் | 1300-1365 | 305 |
| 14. | விஜயநகர உற்பத்தி | 1336 | 311 |
| 15. | 14-ம்நூற்ருண்டு கொங்கு நாட்டு நிலை | 1300-1400 | 315 |
| 16. | சங்கம அல்லது முதல் வம்சம் | 1336-1485 | 319 |
| 17. | சாளுவ அல்லது 2-வது வம்சம் | 1485-1505 | 323 |
| 18. | உம்மத்தூர் தலைவர்கள் | 1489-1517 | 325 |
| 19. | துளுவ அல்லது 3-வது வம்சம் | 1505-1570 | 330 |
| 20. | ஆறவீடு அல்லது 4-வது வம்சம் | 1570-1600 | 336 |
| 21. | விஜயநகர ஆட்சியில் கொங்கு நாட்டுநிலை | 1350-1600 | 339 |
| 22. | நாயக்கர் உற்பத்தி | 1529 | 348 |

| | | | |
|---|---|---|---|
| 23. | மதுரை நாயக்கர் முன்னேற்றம் | 1529-1659 | 351 |
| 24. | மைசூர் வளர்ச்சி | 1578-1704 | 357 |
| 25. | மதுரையின் வீழ்ச்சி | 1659-1736 | 360 |
| 26. | நாயக்கர் ஆட்சியில் அரசாங்கம் | 1530-1780 | 362 |
| 27. | வெளிநாட்டுச் செய்திகள் | 1650-1757 | 370 |
| 28. | தளவாய்கள் ஆட்சி | 1704-1761 | 373 |
| 29. | ஐதர் ஆதிக்கம் | 1761-1766 | 381 |
| 30. | முதல் மைசூர்ப் போர் | 1767-1769 | 383 |
| 31. | ஐதரின் இடைக்கால ஆட்சி | 1769-1780 | 387 |
| 32. | 2-ஆவது மைசூர் சண்டை | 1780-1784 | 389 |
| 33. | 3-ஆவது ஷை யுத்தம் | 1785-1792 | 392 |
| 34. | 4-ஆவது ஷை ஷை | 1799 | 397 |
| 35. | ஐதர், திப்பு நாளில் கொங்கு நாட்டில் நடந்த சில செய்திகள் | 1768-1799 | 400 |
| 36. | அக்காலத்தில் கொங்கு நாட்டின் நாட்டு நகர நிலைமைகள் | 1799 | 405 |
| 37. | ஆங்கில ஆட்சித் தொடக்கம் | 1799-1804 | 411 |
| 38. | 19-ஆம் நூற்றாண்டின் முதற் பகுதி | 1800-1850 | 416 |
| 39. | ஷை பிற்பகுதி | 1850-1900 | 423 |
| 40. | 20-ஆவது நூற்றாண்டு | 1900-1950 | 429 |

சென்னை அரசியல் பொருள் மந்திரி
உயர்திரு. C. சுப்பிரமணியம் அவர்கள் M. A.; B. L.; M. L. A.
வழங்கிய

## அணிந்துரை

பண்டைக்காலத்தில் தமிழ்நாடு பல சிறு நாடுகளாக அமைந்திருந்தது என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அந் நாடுகளில், சேர சோழ பாண்டிய நாடுகளே பிரசித்தி பெற்றவை. கொங்கு நாடு என்று ஒரு பகுதி இருந்தது என்ற வரலாறு ஒரு சிலருக்குத்தான் தெரியும். இதற்குக் காரணம் தமிழ்நாட்டின் சரித்திரம் விரிவான முறையில் எழுதப்படாததே காரணம். தமிழ் மக்கள் பல துறைகளில் முன்னேற்றமடைந்திருந்தாலும் தங்கள் வரலாற்றை நல்ல முறையில் எழுதிவைக்கும் பழக்கம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டுச் சரித்திரத்தை எழுத வேண்டுமானால் அதற்கு வேண்டிய ஆதாரங்களை ஆங்காங்கு காணப்படும் கல்வெட்டுகளிலும், புலவர்கள் பாடிச்சென்ற தனிப் பாடல்களிலும்தான் காணமுடியும். இவைகளை அடிப்படையாகக் கொண்டு நம் நாட்டின் வரலாற்றை எழுதவேண்டுமானாலும் அதற்கு ஆராய்ச்சித் திறனும் பெருமுயற்சியும் தேவையாக இருக்கின்றது. அந்த ஆராய்ச்சியை நல்ல முறையில் தளரா ஊக்கத்துடன் செய்து, தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய கொங்கு நாட்டின் வரலாற்றை விரிவான முறையில் எழுதி வழங்கியிருக்கிறார் இப்புத்தக ஆசிரியர் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள். இப் பணிக்கு அன்னாருக்கு தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டுள்ளார்கள்.

இன்று கொங்குநாட்டுப் பகுதியில் சிறந்து விளங்கும் நகரம் கோயமுத்தூர். தொழில் துறையில் முன்னேறி இருக்கக்கூடிய நகரங்களில் கோவை முன்னணியில் இருக்கின்றது. ஆனால் இந்நகர் சமீப காலத்தில் வளர்ச்சியடைந்த நகரம்.

இந்நகரத்தின் பூர்வீக சரித்திரத்தையும் அதன் பெயருக்குக் காரணம் என்ன என்பதையும் இச் சரித்திர ஆசிரியர் தக்க ஆதாரங்களைக்கொண்டு விளக்கியிருக்கிறார்.

கொங்குநாட்டு மக்களின் வரலாறு தமிழ் மக்கள் வரலாற்றின் ஒரு பகுதியாகும். ஆகவே, மற்ற பகுதிகளின் சரித்திரத்துடன் கொங்குநாட்டின் சரித்திரமும் பிணைந்திருப்பதைக் காண்கிறோம்.

கொங்குநாடு மற்ற தமிழ்நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததுடன் அண்டை நாடாகிய மைசூருடனும் சிலகாலம் இணைந்திருந்ததைக் காண்கிறோம். மைசூர் அரசர்கள் கொங்குநாட்டின் பெரும் பகுதியை சிலகாலம் ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள். கோவையில் இன்றைக்கும் கன்னட மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். கோவை நகரம் இன்று தமிழ்நாட்டில் தலைசிறந்த நகரமாக விளங்கினாலும் அங்கு மலையாளம், கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய எல்லாத் தென்னிந்திய மொழிகளையும் பேசக்கூடிய மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதற்குக் காரணம் இச்சரித்திரத்தில் ஓரளவு காணலாம்.

இந்நூல் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன் படுமென நம்புகிறேன்.

# கொங்கு நாட்டு வரலாறு

## படஅட்டவணை

பக்கம்


I. நாட்டுப் படங்கள் :—

1. கொங்கு நாட்டு எல்லைகள் —முகப்பு

2. நாட்டுப் பிரிவினை
இருபத்திநான்கு நாடுகள்
சதகப்படி ... 30

3. நாட்டுப் பிரிவினை
கல்வெட்டுப்படி ... 31

4. கொங்கு நாடும் சமணமும் ... 116

5. கொங்கு நாட்டின் எல்லைகள்
ஆறுகளும் பழைய ஊர்களும் ... 120

II. உருவப் படங்கள் :—

1. தலைக்காடு கோகர்ணத் தீர்த்தம் ... 152

2. விஜயமங்கலம்
i. நெட்டைக் கோபுரம் ... 228
ii. கோயில் உட்புறப் பார்வை ... ,,

3. i. திங்களூர் புஷ்பநாதர் கோயில் ... 229
ii. திருமூர்த்திமலை ... ,,

4. குரக்குத்தளி - மூலத்தானம் ... 328

5. குரக்குத்தளி வடபால் தோற்றம் ... 329

6. கருவூர் ஆனிலை - முன்கோபுரம் ... 336

7. திருச்செங்கோடு மலைக்கோயில் ... 337

8. திருப்பேரூர் - கனகசபை ... 356

i. முருகக்கடவுள் ... ,,

ii. வீரபத்திரமூர்த்தி ... ,,

iii. புலி வேட்டை ... ,,

iv. யாளி யேற்றம் ... ,,

9. சத்தியமங்கலம் கோட்டை—வாணி ஆறு ... 358

10. பாரியூர் - சிவாலயம் ... 359

11. ஈரோடு – சிவன்கோயில் ... 360

12. மருதமலை - முருகர் ஆலயம் ... 361

# கொங்குநாட்டு வரலாறு

## முன்னுரை

பண்பாடு பெற்ற எந்த நாட்டிலும் வரலாற்றுக் கலை என்பது சிறந்த கலைகளில் ஒன்று என்று கருதப்படுகின்றது. மேல்நாடுகளில் வரலாற்று ஆராய்ச்சி சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது. கணக்கற்ற வரலாற்று நூல்கள் மேல் நாடுகளில் தோன்றியிருக்கின்றன. கீழ் நாடுகளிலும் வரலாற்றுக்கலைக்கு மதிப்பு குறையவில்லை. சீனம், பாரசீகம், அரபு, முதலிய நாடுகளில் வரலாற்றுக் கலை சிறந்து விளங்குகிறது. நமது பாரத நாட்டிலும் வரலாற்றுக் கலைக்குத் தற்போது ஏற்றம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலரின் தூண்டுதலால் நாளது வரை தொகுக்கப்பட்ட வரலாற்று நூல்கள் ஒரு தலையாக எழுதப்பட்டு வந்தன என்று கருதப் படுகின்றது. அவைகளைத் திருத்தி உண்மையான வரலாறுகளைத் தொகுத்து நூல் வெளியிடவேண்டுமென்று மக்கள் கருதுகின்றார்கள். அக்கொள்கைக்கு ஏற்றபடி வடநாட்டில் நூல்கள் ஆராய்ச்சி முறையில் தொகுக்கப்படுகின்றன. இந்த இயக்கத்திற்கு அரசியல் உதவியும் தோன்றியிருக்கின்றது. ஆகவே உண்மை வரலாற்று நூல்கள் இனி விரைவில் வெளிவரும்.

இனி தென்னாட்டைப் பொறுத்த மட்டில் தகுந்த ஆராய்ச்சி முறையில் நூல்கள் இன்னும் தோன்றவில்லை. தற்போதுதான் சில நூல்கள் தோன்றத் தொடங்கியிருக்கின்றன. முழு வரலாறும் தோன்றுவதற்குப் பல தடைகள் உண்டு. அத்தடைகள் நீக்கப்பட்டால் ஒழிய உண்மை வரலாறு நமக்குக் கிடைத்தல் அரிது.

வரலாற்றிற்குப் போதிய சான்றுகள் தேடப்பட வேண்டும். ஏற்கனவே எழுதியுள்ள ஏட்டுப் பிரதிகளைச் செவ்விய முறையில் வகுத்துத்தொகுத்து ஆராய்ச்சி செய்யவேண்டும். நமது ஏடுகளில் உள்ள கருத்துக்களை உள்ளவை உள்ளபடி எடுத்துக்கொள்ள முடியாது. உண்மை உரைகளோடு பொய்க் கதைகள், கட்டுக் கதைகள், உயர்வு நவிற்சிக் கதைகள் முதலியவைகள் எல்லாம் கலந்திருக்கின்றன.

இவைகளில் உண்மையை எடுத்துக்கொண்டு பொய்யுரைகளைத் தள்ள வேண்டும். கட்டுக் கதைகளின் கட்டுகளைப் பிரித்தெறிய வேண்டும். உயர்வு நவிற்சிகளைத் தன்மை நவிற்சிகளாக்க வேண்டும். இவ்வகை யான சீர்திருத்த முறையில் ஆராய்ச்சிகள் செய்தாலன்றி உண்மை வர லாறுகள் நமக்குக் கிடைக்கா.

மேலும் ஏட்டுப் பிரதிகளேயன்றி நாட்டுக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் பழக்க வழக்கங்களும் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன் அளிப்பன. ஆனால் அவைகளில் செய்யும் ஆராய்ச்சி மிகவும் கடுமையானதென்று அறியவேண்டும். ஆராய்ச்சியில் தேர்ந்த அறிஞர் கள்தான் உண்மை, இன்மை, முதலியவைகளைப் பகுத்தறிவு கொண்டு பிரிக்க முடியும். அவ்வித ஆராய்ச்சியினால் வரலாற்றிற்கு மிகுந்த பயன் உண்டு.

இனி இவ்விரண்டு பகுதிகளேயன்றி மற்றொரு சிறந்த ஆதாரச் சான்று உண்டு. அதுதான் கல்வெட்டுச் சான்று என்பது. நமது ஆல யங்களிலும் மற்றக் கட்டடங்களிலும் கணக்கற்ற கல்வெட்டுக்கள் இருக் கின்றன. அவைகளைத் தேடி எடுத்த வகையில் அளவற்ற சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கல்வெட்டுக்களைத் தேடி எடுப்பதற்கென்றே ஒரு அலுவல் அகமும் பல அலுவலாளர்களும் நியமிக்கப்பட்டனர். தொடக்கத்தில் இவ்வகம் நிரம்ப வேலை செய்தது. அப்போது மிகவும் படித்த ஐரோப்பிய நிபுணர்கள் அதில் வேலை செய்தார்கள். பிறகு அவர்களிடம் படித்த இந்தியர்கள் பணி செய்தார்கள். ஆனால் நாளுக்கு நாள் அலுவலாளர்களின் ஆர்வம் குறைந்து விட்டது. ஐம்பதினாயிரம் கல்வெட்டுக்களில் ஐயாயிரம்கூட வெளிவரவில்லை. ஆகவே நாட்டின் சரிதம் எவ்வகையில் சரிவர ஆராய்ச்சி செய்ய முடியும்?

மேலும், கல்வெட்டுக்களில் முழுப்பகுதிகளும் பதியப்பெறுவிட்டாலும் சுருக்கமாகவாவது பதிவு செய்யலாம். இந்த முறையும் சென்ற பதினைந்து ஆண்டுகளாகச் செய்யப்படவில்லை. பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் தென்னாட்டில் சிறப்பாகத் தமிழிலேயே உள்ளன. அலுவலகத்திலுள்ள வடநாட்டார் தமிழைப் புறக்கணிக்கிறார்கள். இந்தச் செய்திகள் தமிழ் நாட்டு ஆராய்ச்சிக்கு மிகுந்த தடையாக இருக்கின்றன. இத்தடைகள் நீங்கினாலன்றி ஆராய்ச்சி செவ்வைப்படாது.

நாளது வரை கைக்குக் கிடைத்த ஆதாரங்களை வைத்துக்கொண்டு தமிழ் நாட்டு வரலாறுகளைச் சில அறிஞர்கள் எழுதிக்கொண்டு வருகிறார்கள். மேலே கூறிய காரணங்களாலே அவ்வரலாறுகள் மிக்க குறைபாடு உடையன என்று சொல்லவேண்டியதில்லை. கல்வெட்டு ஆராய்ச்சியாளர் சிலரும் பல்கலைக் கழகத்து அறிஞர்கள் சிலரும் இவ்வேலையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். மற்றும் சில அறிஞர்கள் தனித்தனி கட்டுரைகளும் எழுதியிருக்கின்றார்கள். மேற்கூறியவைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் வந்திருக்கின்றன. சென்னைப் பல்கலைக்கழகத்தில் சில அறிஞர்கள் ஆங்கிலத்திலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சில அறிஞர்கள் தமிழிலும் சிற்சில வரலாறுகளை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வாறு வெளி வந்துள்ளவைகள் பெரும்பாலும் பல்லவர், சோழர், பாண்டியர், மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கர் முதலியோர்களுடைய வரலாறுகளேயாகும். மேலும் சேரர், கங்கர், சளுக்கியர், ஹொய்சளர் முதலியவர்களுடைய வரலாறுகளும் வந்திருக்கின்றன. ஆனால் கொங்கு நாட்டினுடைய வரலாறு நாளது வரையில் வெளிவரவில்லை. சிற்சில பகுதிகள் மட்டும் ஆங்கிலத் திங்கள் வெளியீடுகளிலும் தமிழ் வெளியீடுகளிலும் வந்திருக்கின்றன. வரலாறுகள் முற்றும் தொடர்பாகத் தொகுத்து எவர்களும் வெளியிடவில்லை.

கொங்கு நாட்டு வரலாற்றை வெளியிடுவது மிகவும் கடினம். கணக்கற்ற நூல்களைப் புரட்டிப் பார்க்க வேண்டும். ஒவ்வொன்றிலும் சிறிது சிறிதாகத்தான் வேண்டக்கூடிய செய்திகள் கிடைக்கும். கொங்கு நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள் முழுவதும் எடுக்கப்படவில்லை. எடுத்தவைகளும் பதிப்பிக்கப்படவில்லை. ஆகவே செய்திகளைத் திரட்டுவதென்றால் மிகவும் கடினம்.

கோவைத் தமிழ்ச் சங்கத்தில் கொங்கு மலர் என்ற ஒரு திங்கள் வெளியீடு நான்கு ஆண்டுகள் வெளிவந்தது. அதிலே வரலாற்றுப் பகுதி என்ற பகுதியில் கொங்கு நாட்டு வரலாறு தொடர்ச்சியாக வந்தது. அதில் வந்த 48 பகுதிகள் கொங்குசோழர்கள் ஆட்சிக்காலம் முடிய வெளி வந்துள்ளது. பிந்திய பகுதி வெளியிடுவதற்கு முன் அவ்வெளியீடே நின்று விட்டது. ஆகவே இதுவரை வெளிவந்த 48 பகுதிகளையும் சேர்த்து முதற் பகுதியாக இப்போது வெளியிடப்படுகிறது. மற்றப்பகுதிகள் எழுதுவதற்கு வேண்டிய ஆதாரங்கள் முன்னமே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

அவைகளைத் தொகுத்து இரண்டாவது பகுதியாக்கி, பின்னர் சேர்க்கப் பட்டுள்ளது.

கொங்கு மலரில் வெளிவந்த பகுதிகள் பெரும்பாலும் முன்னர் வெளி வந்தபடியே பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் மட்டும் பின்னால் கிடைத்த சான்றுகளைக்கொண்டு திருத்தப்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.

இந்நூல் தமிழ்நாட்டுப் பொது வரலாற்றிற்கு வெகுவாகப் பயன்படத் தக்கது. ஆகவே தமிழ் மக்கள் இதனைப்படித்துத் தமிழ் நாட்டின் செய்தி களை அறிந்துகொள்வார்களாக.

இந்நூல் வெளியிடுவதற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளி வந்துள்ளதைக் குறித்துத் தமிழ்நாடு மிகுதியும் மகிழ்ச்சி அடைய வேண்டும். அதற்காக அதன் வேந்தர் செட்டி நாட்டு அரசருக்குத் தமிழ் நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது.

இந்நூலைப் படித்து மகிழ்ந்து வெளியிடுவதற்கு ஆணையிட்ட பல் கலைக் கழகத்தின் முன்னைய துணை வேந்தராக இருந்து பெருந் தொண் டாற்றிய காலம் சென்ற சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களுக்கு அடியேன் நெஞ்சார்ந்த நன்றி உரித்தாயது. இதனைப் பின்னர் தொடர்ந்து பாராட்டிய தற்போதைய துணை வேந்தர் சர். சி. பி. இராமசாமி ஐயர் அவர்களுக்கும், அணிந்துரை தந்துதவிய சென்னை அரசியல் பொருள் அமைச்சர் உயர்திரு C. சுப்பிரமணியம் அவர்களுக்கும், பதிப்பாசிரியர் திரு ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்களுக்கும் நன்றி உடையவனாக இருக்கிறேன். இதனைத் தெளிவாக அச்சகம் ஏற்றிய தபோவனத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றிஉரித்து.

*சாந்தலிங்க அடிகளார்*
*தமிழ்க் கல்லூரி*
*பேரூர்.*

**கோவை ம. இராமச்சந்திரன்**

## எடுத்தாண்ட மேற்கோள் நூல்கள்


1. கொங்கு தேச ராஜாக்கள்
2. கொங்குமண்டல சதகம்
3. நன்னூற் காண்டிகை உ. வே. சா.
4. பேரூர்ப் புராணம்
5. அவிநாசிப் புராணம்
6. திருமுருகன்பூண்டிப் புராணம்
7. கரூர்ப் புராணம்
8. கொடுமுடிப் புராணம்
9. பவானிப் புராணம்
10. திருச்செங்கோட்டுப் புராணம்
11. கொங்குநாட்டுத் தேவாரங்கள்
12. திருவாசகம்
13. திருப்புகழ்
14. சோழன் பூர்வ பட்டயம்
15. பாளையக்காரர் கைபீத்துகள் Oriental MSS.
16. கொங்குவேளிர் மாக்கதை
17. சங்க நூல்கள்
18. சிலப்பதிகாரம்
19. கள்ளழகர் அம்மானை
20. நாட்டுப் பாடல்கள்
21. வீடுகதைகள், பழமொழிகள் முதலியன
22. Coimbatore Dt. Manual
23. Coimbatore Dt. Gazetteers
24. Salem Dt. Gazetteers-F. J. Richards
25. Baramahal Records
26. Epigraphical Reports
27. S. I. I. Vol. I to VI
28. Pandian Kingdom by K. A. Nilakanta Sastri.
29. History of the Nayaks of Madura
30. Rangachary's Inscriptions
31. Mythic Society Journals
32. Mysore Gazetteers


KONGU COUNTRY

# கொங்கு நாட்டு வரலாறு

## 1. கொங்கு நாட்டு எல்லைகள்.

கொங்கு நாடு என்பது வெகு பழமையான காலந்தொடங்கி ஏற்பட்டிருந்த ஒரு நாடு ஆகும். இதனுடைய அளவையைப் பற்றியும் எல்லையைப்பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்கு நான்கு வித ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாக இதனடியில் விவரிப்போம்.

1. தமிழ் நாட்டிலுள்ள ஏனைய நாடுகளாகிய சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு, தொண்டைநாடு முதலிய நாடுகளின் எல்லைகளைக் குறித்துப் பண்டைநாள்முதல் வழங்கிவரும் தனிப் பாடல்களைப் போல் கொங்கு நாட்டிற்கும் சில தனிப்பாடல்கள் கிடைக்கின்றன. அவ்விதம் எல்லைகளைக் குறிக்கும் தனிப்பாடல்கள் கம்பநாடரால் பாடப்பெற்றதாகக் கர்ண பரம்பரையும் தனிப்பாடல் திரட்டும் கூறுகின்றன. ஆனால், அப்பாடல்களைப் பாடினவர்கள் இன்னார் என்று உறுதியாக நாம் கூற இயலாது. எல்லைகளைக் கூறும் பாடல்களெல்லாம் வெண்பா வாகவே இயற்றப் பெற்றிருக்கின்றன.

தனிப் பாடல்

வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று—கிழக்கு
குழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவும் கொங்கு.

கொங்கு மண்டல சதகப் பதிப்பு

வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு.

செந்தமிழ்

வடக்குப் பெரும்பாலை வையாறு தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று—தடக்கீழ்

*கழித்தண் டலையளவு காவிரிசூழ் நாடா*
*குழித்தண் டலையளவு கொங்கு.*

இவ்வெண்பாக்களில் கொங்கு நாட்டின் வடக்கெல்லையானது தலை மலை என்றும் பெரும் பாலை என்றும் இரண்டுவிதமாகக் கூறப்பெற்றுள்ளது. மேற்கெல்லை வெள்ளிமலை என்று எல்லாவற்றிலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. அவ்வாறே கிழக்கெல்லையாகிய குளித்தலையும் தெற்கெல்லையாகிய வைகாவூர் என்ற பழநியும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ் வெல்லைகளைப்பற்றிக் கொங்கு மண்டல சதகம் என்றநூல் அடியில் கண்டவாறு கூறுகின்றது.

*மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழனி மதிகுடக்குக்*
*கதித்துள வெள்ளை மலைபெரும் பாலை கவின் வடக்கு*
*விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவிவிண்ணோர்*
*மதித்திட வாழ்வு தழைத்திடு நீள்கொங்கு மண்டலமே.*

இச் செய்யுளில் கொங்குமண்டலத்தின் கிழக்கெல்லை மதிற்கரை என்றும் தெற்கெல்லை பழநி என்றும் மேற்கெல்லை வெள்ளிமலை என்றும் வடக்கெல்லை பெரும் பாலை என்றும் அறிகிறோம். இதன்படி கிழக்கெல்லை சிறிது மாறியிருக்கின்றது. முன் சொல்லிய வெண்பாக்களில் குளித்தலை கிழக்கெல்லையாக விருக்க இச்செய்யுளில் மதிற்கரை கிழக்கெல்லையாகக் காட்டப் பெற்றிருக்கிறது. மதிற்கரை என்பது மதுக்கரை என்று இப்போது வழங்கிவருகிறது. இது குளித்தலைக்கு மேற்கே காவேரி ஓரமாக இருக்கும் ஒரு இடம். இவ்விடத்தில் செல்லாண்டியம்மன் கோயில் என்ற ஒரு கோயில் உண்டு. இதைப்பற்றி ஒரு கர்ண பரம்பரைக் கதை வழங்கிவருகின்றது. சேர சோழ பாண்டியர்களான மூவேந்தர்களும் தங்களுடைய நாட்டு எல்லையைப்பற்றி வாதஞ்செய்து கொண்டிருக்கையில் அம் மூவரும் மதுக்கரை செல்லாண்டியம்மன் கோயிலுக்கு அருகில் போராடினார்களாம். அப்போது கொங்கு வேளாளர்களில் சிறந்த கவுண்டர் ஒருவர் அம்மூவேந்தர்களுக்கும் மத்தியஸ்தம் செய்து செல்லாணடியம்மன் கோயிலையே அவரவ

ருடைய நாடுகளுக்கு எல்லையாகக் கொள்ளும்படி சொல்லவே அம் மூவேந்தரும் ஒத்துக்கொண்டு மிகவும் மகிழ்வுற்று அக் கவுண்டருக்கு கொங்குமண்டலத்து 24 நாடுகளுக்கும் தலைமைப் பட்டம் கட்டிவிட்டுச் சென்றார்களாம். அந்த ஒப்பந்தத்தின்படி செல்லாண்டியம்மன் கோயிலுக்கு மேற்கே சேர நாடு என்றும் கிழக்கே சோழ நாடென்றும் தெற்கே பாண்டிய நாடென்றும் கணிக்கப்பட்டதாம். அக்கோயில் மூவேந்தர்களுக்கும் பொது வாம். இவ்வாறு வழங்கும் கர்ணபரம்பரைக் கதையினால் சேர நாட்டு எல்லை மதுக்கரை வரையில் சென்றது எனக்கொள்ள வேண்டும். இதில் கொங்குநாட்டைச் சேரநாட்டுடன் கலந்து வைத்திருப்பதைக் கவனிக்கலாம். ஆகவே இக்கதை பிற் காலத்திய கதையாக இருக்கவேண்டும். இதைப்பற்றிப் பின் னால் விவரமாக ஆராய்வோம்.

சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் பிரதிச்சாலையில் கொங்கு நாட்டு 24 நாடுகளின் பெரிய பட்டக்காரராகிய வேணு உடையாக்கவுண்டர் என்பவருடைய வரலாற்றைக் கூறும் கைப்பிரதி ஒன்று இருக்கிறது. அந்தப் பிரதியில் கொங்கு நாட்டு எல்லையும் 24 நாடுகளின் பெயர்களையும் காண்கிறோம். கொங்கு நாட்டு எல்லை அடியில் கண்டபடி அதில் குறிக்கப் பட்டிருக்கிறது.

"வடபுறம் மறம் சோகரமலை
மதுகரைக்கு மேற்கு
வருஹ கிரிக்கு வடக்கு
வெள்ளி மலைக்கு கிழக்கு."

இந்தச் சதுரம் கொங்கு நாட்டு எல்லை.

இதில் தெற்கு மேற்கு எல்லைகள் மற்றவைகளோடு ஒத் திருக்கின்றன. கிழக்கெல்லை கொங்குமண்டல சதகத்தைப் போல் மதுகரை என்று சொல்லப்பட்டிருக்கிறது. பட்டக் காரர்களின் பரம்பரைக்கதை இவ்வெல்லையை வற்புறுத்து கிறது. இச்சமயத்தில் குளித்தலைக்கும் மதுக்கரைக்கும் அதிக

வேற்றுமை இல்லை என்று நாம் கூறவேண்டும். இவ்விரண்டும் தற்காலத்துத் திருச்சி ஜில்லாவில் குளித்தலை தாலுக்காவில் இருக்கின்றன.

இனி வடக்கெல்லையைப் பற்றி ஆராய்வோம். தனிப் பாடல் திரட்டில் வடக்கெல்லை தலைமலை என்று கண்டிருக்கிறது. ஆனால் மற்ற இரண்டு வெண்பாக்களிலும் கொங்கு மண்டல சதகச் செய்யுளிலும் அவ்வெல்லை பெரும்பாலை என்று கண்டிருக்கிறது. பட்டக்காரருடைய கையெழுத்துப் பிரதியில் மறஞ்சோகர மலை என்று கண்டிருக்கிறது. அவ் வாறு கூறிய மூன்று இடங்களும் எங்கேயிருக்கின்றன என் பதைச் சிறிது கவனிப்போம். தலைமலை என்பது கோயமுத்தூர் ஜில்லாவில் கோபிசெட்டிபாளையம் தாலுக்காவில் அத்தாலுக் காவிற்கு வடக்கெல்லையாக இருக்கும் மலையாகும். அம்மலை, அத் தாலுக்காவை மைசூர் பீடபூமியிலிருந்து பிரிக்கிறது. ஆகவே அம்மலை ஒரு இயற்கையான எல்லையாக இருக்கிறது. பெரும்பாலை என்பது சேலம் ஜில்லாவில் தொப்பூர் மலைகளுக்கு அருகிலுள்ள ஒரு ஊர். நாட்டுப் படத்தில் கவனித்துப்பார்த் தால் தலைமலையும் பெரும்பாலையும் ஏறக்குறைய ஒரே அளவில் இருப்பதைக் காணலாம். ஒன்று கோவை ஜில்லாவிலும் மற் றொன்று சேலம் ஜில்லாவிலும் இருப்பது மாத்திரமே இரண் டிற்குமுள்ள வேற்றுமை. ஆகவே இவ் வடக்கெல்லையைப் பற்றி அதிகமான வேற்றுமையில்லை. பட்டக்காரர் கைப்பிரதி யில்கண்ட மறஞ்சோகரம் மலை என்பது இன்னதென்று தெரிய வில்லை. பொதுவாக நோக்குமிடத்து தலைமலைக்கும் தொப்பூர் மலைக்கும் மத்தியில் உள்ள மலைகளாக அவ்வெல்லை இருக் கலாம். ஆகவே, கொங்கு நாட்டு வடக்கெல்லை மைசூர் பீட பூமிக்கும் கோவை, சேலம் இவைகளின் சமவெளிக்கும் மத்தி யில் உள்ள மலைத் தொடர்களாகிய தலைமலை, பிளிகிரி ரங்கன் மலை, மாதேசுவரன் மலை, தொப்பூர் மலை இந்த மலைத்தொடர் கள் எனலாம்.

இனி, கொங்கு நாட்டின் தெற்கெல்லை எதுவெனில் பழநியாகும். சில செய்யுள்களில் வைகாவூர் என்றும் பழநி என்றும் வராகமலை என்றும் கூறியிருப்பதைக் காணலாம். வைகாவூரும் பழநியும் ஒரே நகரத்தின் பெயர். அந்நகருக்கு அடுத்தாற்போல் சில நாழிகைத் தூரத்தில் உள்ள மலைத் தொடருக்கு வராகமலை என்று பெயர். அம்மலைத் தொடர்களே கோடைக் கானல் மலைத் தொடர்களாகும். ஆகவே தெற்கு எல்லையாக இருப்பவைகள் வராகமலைத் தொடரும் அதற்கடுத்த மேற்கே இருக்கும் ஆனைமலைத் தொடருமேயாம்.

இனி மேற்கெல்லை வெள்ளி மலைத் தொடர் என்று எல்லாப் பாடல்களிலும் சொல்லியிருக்கக் காணலாம். வெள்ளி மலையைச் சேர்ந்து வடக்கே படர்ந்திருப்பது நீலகிரியாகும். இவ்விரண்டும் கொங்கு நாட்டிற்கு மேற்கெல்லைகள்.

கிழக்கே குளித்தலையும் மதுக்கரையும் எல்லை என்று கண்டிருந்த போதிலும் தொப்பூர் மலைகளுக்கு தெற்கே படர்ந்து வரும் சேர்வராயன் மலை, கல்ராய மலை, பச்சை மலை, கொல்லி மலை என்ற மலைகள் கிழக்கெல்லைகளாக இருக்கின்றன. மேற்கூறிய எல்லைகளைத் தொகுத்துப் பார்ப்போமானால் தென் கிழக்கில் காவேரி நதி ஓடும் பள்ளத்தாக்கு ஒன்றைத் தவிர மற்ற மூன்றரைப் பக்கங்களிலும் உயர்ந்த மலைகளே எல்லைகளாக இருக்கின்றன. கொங்கு நாட்டுப் படத்தை எழுதிப் பார்த்தால் நாலா பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்ட ஒரு சமநிலமாகக் காணலாம். அந்நிலத்தின் மத்தியில் நாட்டை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டும் இரு பக்கங்களிலிருந்தும் ஓடிவரும்படியான பல கிளைநதிகளை தன்னுடன் சேர்த்துக் கொண்டும் காவேரி நதியானது தென்கிழக்காக ஓடிச் சோழ நாட்டில் புகுகின்றது. மேலே சொன்ன குறிப்புகளிலிருந்து கொங்கு நாட்டின் பரப்பானது தற்காலக் கோவை ஜில்லா முழுவதும் சேலம் ஜில்லாவில் ஓமலூர், திருச்செங்கோடு, சேலம், நாமக்கல் என்ற தாலுக்காக்களும், திருச்சி

ஜில்லாவில் கரூர், குளித்தலை என்ற இரண்டு தாலுக்காக்களும், மதுரை ஜில்லாவில் பழநி, திண்டுக்கல் என்ற இரண்டு தாலுக்காக்களும் கொண்டதாக இருக்கின்றது.

2. மேலே தனிப்பாடல்களைக் கொண்டு நிரூபித்த எல்லை யானது சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த பெரிய புராணச் செய்யுள்களால் ஆதரிக்கப் பெறுகின்றது. பெரிய புராண வரலாற்றின்படி சுந்தர மூர்த்தி சுவாமிகள் சோழ நாட்டை விட்டுக் கொங்கு நாடு சென்றதைக் குறிக்கும் போது சோழ நாட்டிலுள்ள ஈங்கோய் மலையைத் தரிசித்து விட்டுக் கொங்கு நாடு சென்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திரும்பி வரும் காலத்தில் நாயனார் வெஞ்சமாக் கூடலூரைத் தரிசித்த பிறகு சோழநாடு புகுந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டுப் படத்தைப் பார்த்தால் இவ்வரலாறு சரியாகக் குறிக்கப் பட்டிருக்கிறது எனத் தெரியும்.

" விரவிய வீங்கோய் மலைமுதலாக விமலர்தம் பதிபலவணங்கிக்
குரவலர் சோலை யணிந்திருப் பாண்டிக் கொடு முடி யணைந்தனர்
[கொங்கில் "

பெரிய புராணம் — ஏயர்கோன் 85.

" ஆயிடை நீங்கி யருளினாற் செல்வா ரருவரைச் சுரங்களும் பிறவும்,
பாயுநீர் நதியும் பலபல கடந்து பரமர்தம் பதிபல பணிந்து,
மேயவண்டமிழால் விருப்பொடும் பரவி வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார் தென்திசைக் கற்குடி
[மலையில்." (ஏயர் 92).

மேலும் கொங்கு நாட்டின் மேற் கெல்லையைப் பற்றியும் பெரிய புராணத்தின் அடியில் கண்ட செய்யுள்களால் நிரூபிக்கக்கூடும்.

" காருரு மலைநாடு கடந்தருளிக் கற்சுரமும்
நீருருங் கான்யாறு நெடுங்கானும் பலகழியச்
சீருரும் திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றார்.

(சேரமான்—164).

. . . . . . . . " கானகமும்

" துன்று மணிநீர்க் கான்யாறும் துறுகச்சுரமும்
கடந்தருளிக், குன்ற வளநாட்டகம் புகுந்தார்."

(வெள்ளானை— 15).

"கொங்கு நாடு கடந்துபோய்க் குலவு மலை நாட்டெல்லை யுற"

(சேரமான்—141).

3. திருச்செங்கோட்டுப் பண்டிதர் திரு. அ. முத்துசாமிக் கோனார் அவர்கள் பதிப்பித்திருக்கும் கொங்குமண்டல சதகத்தில் அனுபந்தமாகக் கொங்குமண்டலத்து ஊர்த்தொகையை சேர்த்துப் பதிப்பித்திருக்கின்றார்கள். அதில் கொங்கு நாட்டு 24 பிரிவுகளையும் அப்பிரிவுகளில் உள்ள ஊர்ப்பெயர்களையும் காணலாம். ஒரு படத்தில் அந்த நாடுகளையும் அந்நாடுகளிலுள்ள ஊர்களையும் குறிப்போமானால் மேலே சொன்ன வெண்பாவில் கண்ட எல்லைக்குள்ளேயே அவையெல்லாம் அடங்கும். அவ்விதம் எழுதிய படத்தின் உருவத்தைக் கண்டால் ஒரு ஐங்கோண உருவமாகத் தென்படும். அக்கோணத்தின் பக்கங்களெல்லாம் மலைகளால் சூழப்பட்டதெனக் காணலாம்.

4. மேலும் கல்வெட்டுச் சாசனங்களை எல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்தும் கொங்கு நாட்டின் எல்லையைப் பற்றி ஒரு திடமான முடிவுக்கு வரமுடியும். சில நாட்டுப் பெயர்கள் வேறு பெயர்களால் குறிக்கப் பெற்றிருந்த போதிலும் பொதுவாக எல்லைகள் முன் சொன்னவைகளே ஆகும். மேலே சொன்ன ஆதாரங்களிலிருந்து கொள்ளேகாலம் தாலுக்கா கொங்கு நாட்டின் ஒரு பாகமாக இருந்திருக்காது என்று எண்ணலாம். ஆனால் கல்வெட்டுச் சாசனங்களை ஆராயுமிடத்து கொள்ளேகாலம் கொங்கு நாட்டிற்குச் சேர்ந்ததென்றே கூற முடியும். அந்த தாலுக்காவிற்கு அடுத்திருக்கும் தலைக்காடு என்ற ஒரு ஊர் கொங்கு நாட்டிற்கு தலை நகராக வெகு காலம் இருந்தது. இதை 213/20 என்ற எண்ணுள்ள கல்வெட்டு நிரூபிக்கிறது.

கல் வெட்டுகள் பெரும்பாலும் சோழர்கள் காலத்தில் (9 முதல் 13 நூற்றுண்டு வரை) ஏற்பட்டவைகள். ஆதலால் அக்காலத்தில் கொங்கு நாட்டு எல்லைகள் ஸ்திரமாக ஏற்பட்டு விட்டன என்று நாம் உறுதியாகச் சொல்லலாம்.

## 2. கொங்கு நாடு ஒரு தனி நாடு.

பண்டைக்காலம் முதற் கொண்டு கொங்கு நாடு ஒரு தனி நாடாகக் கருதப் பெற்று வந்திருக்கிறது. அவ்விதக் கூற்றுக்குப் பண்டைக் காலம் முதல் பழைய சங்கச் செய்யுள்கள் ஆதியான பல ஆதாரங்கள் இருக்கின்றன. கடைச் சங்கத்துப் புலவர்கள் கொங்கு நாட்டை ஒரு தனி நாடாக எடுத்தாண்டு இருக்கின்றுர்கள். புறநானூற்றில், "கொங்கு புறம் பெற்ற கோற்ற வேந்தே" (373) என்ற அடியினுல் கொங்கு நாடு ஒரு தனி நாடாகக் கருதப் பெற்று வந்ததை அறியலாம். அந்நாட்டு மக்களைக் கொங்கர் என்ற பெயரால் அழைத்தனர் என்பதை

"கொங்கர் குடகட லோட்டிய ஞான்றை"

(160) என்ற அடியினுல் அறியலாம்.

சிலப்பதிகாரக் கதை நடந்த நாளில் பாண்டி மண்டலம், சோழ மண்டலம், சேர மண்டலம் என்ற மூன்று மண்டலங்களோடு கொங்கு மண்டலம் என்ற ஒரு மண்டலமும் இருந்ததாக அந்நூல் கூறுகிறது. அம்மண்டலத்து அரசர் பெயர் கோங்கு இளங்கோசர் என்றும் அந்நூல்கூறுகிறது. கண்ணகி வானுலகுக்குச் சென்ற பிறகு அவளைப் பத்தினிக் கடவுளாகக் கொண்டு ஆலயம் அமைத்துப் படிமை வைத்து வணங்கி வந்ததன்றி அவளுக்காக ஒரு விழாவும் ஏற்படுத்தி அரசர்களெல்லாரும் கொண்டாடினுர்கள். அவ்வாறு பாண்டியர், சோழர், சேரர் இவர்களோடு கொங்கு மண்டலத்துக் கொங்கு இளங்கோசரும் திருவிழாக் கொண்டாடினதாக அறிகிறேம். ஆகவே சிலப்பதிகாரக் காலத்துக் கொங்கு நாடு தனி நாடாக இருந்தது எனலாம், கோசர் என்ற பெயர் புற நானூற்றில்

169, 396 பாடல்களில் காணப்படுகின்றது. மேலும் பழைய சங்கத்து நூலாகிய பதிற்றுப் பத்திலும் கொங்கு நாடு கூறப் பெற்றுள்ளது. அக்காலத்தில் இந்நாடு ஒரு தனி நாடாக இருந் திராவிட்டால் அதனைத் தனியாகக் குறிப்பிட வேண்டிய அவ சியம் இருந்திராது.

மேற் சொல்லிய காரணங்களைக் கொண்டு கொங்கு நாடு எல்லாக் காலங்களிலும் ஒரு தனிப்பட்ட நிலைமையைக் கொண் டிருந்தது என்ருவது ஒரு சுயேச்சையான அரசியலைக் கொண் டிருந்தது என்ருவது கூற இயலாது. வெகு காலமாகப் பண்டைப் பெருமை வாய்ந்த சோழ பாண்டிய நாடுகளும் அடிக்கடி மாறிக்கொண்டும் பரப்பு வேறு பட்டுக் கொண்டும் அரசியல் மாறுபட்டும் சுயேச்சை பல விதமாக வேறு பட்டும் இருந்து வந்ததை அறிவோம். சில சமயங்களில் அவைகள் சுயேச்சையை யிழந்து மற்ற நாடுகளோடு சேர்ந்து அரசாளப் பெற்று வந்ததையும் அறிவோம். ஆனல் அந்நாடுகளின் எல்லை களும் பெயர்களும் சற்றேனும்மாறவில்லை. அவைகளைப்போல வேகொங்கு நாடும் பல மாறுதல்களை அடைந்தது. அக்கம்பக் கத்து நாட்டு அரசர்கள் அடிக்கடி கொங்கு நாட்டின்மீது படை எடுத்துப் பற்பல பாகங்களையும் சில சமயங்களில் முழுவதை யும் தம்தம் நாடுகளுடன் சேர்த்து ஆண்டிருக்கிறுர்கள். ஆனல் கொங்கு நாட்டின் எல்லைகள் மாறவில்லை. அமைப்பும் வடிவும் ஒரே விதமாக இருந்து வந்தன. பெயரும் போகவில்லை. நாட்டுப் பிரிவுகளும் மாறவில்லை. நாட்டுக்குடிகளின் தன்மை யும் சிறிதேனும் மாறவில்லை.

சிலப்பதிகாரம் நடந்த நாட்களில் கொங்கு நாட்டை ஆண்ட அரசர்கள் கோசர் என்ற பெயரை வகித்திருந்தார்கள். என்று முன்னமே சொன்னேம். பிறகு இந்நாட்டை இரட்டர் என்ற ஒரு வம்சத்தார் ஆண்டனர் என்றும் அவர்களுடைய தலை நகரம் ஸ்காந்தபுரம் என்றும் "கொங்கு தேச ராஜாக்

கள் '' என்ற நூலினால் அறிகிறோம். ஸ்காந்தபுரம் என்ற ஊர் எது என்று அறியக்கூடவில்லை. சிலர் அப்பெயர் கரூரின் பண்டைப் பெயர் என்பார்கள். ஆனால் தற்கால ஆராய்ச்சியில் தாராபுரம் எனப்படுகிறது.

பிறகு, இந்நாட்டைக் கங்க வம்சத்தினர் கைப்பற்றிக் கொண்டு தங்கள் நாடாகிய கங்கவாடி என்று வழங்கும் கங்கைப்பாடியோடு சேர்த்துக்கொண்டு ஆண்டார்கள். அக் கங்க அரசர்கள் காவேரி நதியின் வடகரையில் கொள்ளே காலத்திற்கு அடுத்தாற்போலுள்ள தலைக்காடு என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள். இவ்வம்சம் பல நூற்றாண்டுகள் ஆண்டு வந்தது. இவ்வம்சத்தைப்பற்றி விவரமாகக் கூறுகிற கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூல் இவர்களைக் கொங்கு அரசர்கள் என்று பெயரிட்டுக் கூறுகின்றது. இவ் வம்சத்தார் சோழர்களால் தாக்கப்படும் வரையில் அரசாண்டார்கள். ஆகவே கங்க மன்னர்கள் அரசாண்ட காலம் முழுவதும் கங்கவாடி என்ற கன்னடிய இராச்சியத்தோடு கொங்கு நாடு ஒன்றாக இணைக்கப்பெற்றிருந்தது எனலாம். ஆகவே அரசியலில் தனிப்பட்ட நிலை கொங்கு நாட்டிற்கு அந்நாளில் இல்லாமலிருந்த போதிலும் ஏனைய தன்மைகளில் இந்நாடு தனித்த நிலையை இழந்திருக்கவில்லை.

சோழர்கள் கங்கர்களை வென்று கொங்கு நாட்டைப் பிடித்த காலத்தில் இதனைச் சோழமண்டலத்தோடு சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் அரசாட்சி வகைக்காக இதனை ஒரு தனி மாகாணமாகக் கொண்டு இதற்குத் தனிப்பிரதிநிதிகளை அரசு செய்ய நியமித்திருந்தார்கள். அப்பிரதிநிதிகள் பிற் காலங்களில் சுயேச்சை அதிகாரம் பூண்டு அரசாள ஆரம்பித்தார்கள். அவ்வகை ஆண்ட அரச வம்சத்தினருக்குக் கொங்குச் சோழர்கள் என்ற பெயரைத் தந்திருக்கின்றார்கள்.

சோழர்கள் பெருங்கீர்த்தி பெற்றுச் சிறப்புடன் ஆண்ட காலத்தில் சேக்கிழார் பெருமான் பெரிய புராணம் என்ற

திருத்தொண்டர் புராணத்தை அருளிச் செய்தார். அப்பெருமான் சோழ மன்னரின் அமைச்சராக இருந்து வந்ததினுல் சரித்திரச் செய்திகளை நடந்தது நடந்தபடி எழுதியிருக்கின்ருர். அவர் கொங்கு நாட்டைத் தனி நாடாக எடுத்துக் காட்டியிருக்கின்ருர். சமயாசாரியர்கள் மூவரின் சரித்திரங்களைக் கூறுங் காலங்களில் அவர்கள், நாடு நாடாகச் செல்லும் போது ஒரு நாட்டைத் தாண்டி மற்ருெரு நாட்டிற்குள் செல்கையில், இன்ன இடத்தை விட்டு இன்ன இடத்திற்குப் போகையில், இந்த நாட்டு எல்லையைத் தாண்டினுர்கள் என்று, மிகவும் தெளிவாக எடுத்து உரைத்திருக்கின்ருர். அவ்விதம் கொங்கு நாட்டிற்கு ஏற்பட்டிருந்த தனிப்பட்ட எல்லைகளை அடியிற் கண்ட பாசுரங்களில் காணலாம்.

பரவியப் பதிகத் திருக்கடைக் காப்புச்
சாத்திமுன் பணிந்தருள் பெற்றுக்
கரவிலன் பர்கடங் கூட்டமுந் தொழுது
கலந்தினி திருந்துபோந் தருளி
விரவிய வீங்கோய் மலைமுத லாக
விமலர்தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை யணிதிருப் பாண்டிக்
கொடுமுடி யணைந்தனர் கொங்கில்.

கொங்கினில் பொன்னித் தென்கரைக் கறையூர்க்
கொடுமுடிக் கோயின்முன் குறுகிச்
சங்கவெண் குழைய ருழைவலஞ் செய்து
சார்ந்தடி யன்பினிற் ருழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது
புனிதர்பொன் மேனியை நோக்கி
இங்கிவர் தம்மை மறக்கவொண் ணுதென்
றெழுந்தமெய்க் குறிப்பினி லெடுப்ப.

உலகெலா முய்ய உறுதியாம் பதிக
முரைத்துமெய் யுணர்வரு ஒருமை
நிலவிய சிந்தை யுடன்திரு வருளா
னீங்குவார் பாங்குநற் பதிகள்

பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்துதன் பனிமலர்ப் படப்பைக்
குலவுமக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகினார் முறுகுமா தரவால்.

ஆயிடை நீங்கி அருளினால் செல்வார்
அருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து
பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் டமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார்
தென்றிசைக் கற்குடி மலையில்.

—ஏயர் கோன்கலிக்காமர் புராணம்.

அந்நாட் டெல்லை கடந்தணைய
அமைச்சர்க் கெல்லாம் விடையருளி
மின்னார் மணிப்பூண் மன்னவனார்
வேண்டு வாரை யுடன்கொண்டு
கொன்னா ரயில்வேன் மறவர்பயில்
கொங்கர் நாடு கடந்தருளிப்
பொன்னாட் டவரு மணைந்தாடும்
பொன்னி நீர்நாட் டிடைப்போவார்.

ஆய செயலின் அதிசயத்தைக் கண்டக் கரையில் ஐயாறு
மேய பெருமா னருள்போற்றி வீழ்ந்து தாழ்ந்து மேல்பாற்போய்த்
தூய மதிவாழ் சடையார்தம் பதிகள்பிறவும் தொழுதேத்திச்
சேய கொங்க நாடணைந்தார் திருவா ரூரர் சேரருடன்.

கொங்கு நாடு கடந்துபோய்க் குலவு மலைநாட் டெல்லையுற
நங்கள் பெருமான் தோழனார் நம்பி தம்பி ரான்தோழர்
அங்க ணுடனே யணையவெழுந் தருளா நின்றா ரெனும்விருப்பா
லெங்கு மந்நாட் டுள்ளவர்க ளெல்லா மெதிர்கொண்டின்புறுவார்.

ஆரூ ரவர்தமக்கு விடை அருளி யங்ககன்று
காரூரு மலைநாடு கடந்தருளிக் கற்சுரமு
நீரூருங் கான்யாறு நெடுங்கா னும் பலகழியச்
சீரூருந் திருமுருகன் பூண்டிவழிச் செல்கின்றார்.

கைக்கொண்டு கொடுபோமக் கைவினைஞர் தமையேவி.
மைக்கொண்ட மிடற்றுரை வணங்கிப்போய்க் கொங்கன்று
மெய்க்கொண்ட காதலினால் விரைந்தேகி மென்கரும்பும்
செய்க்கொண்ட சாலியுஞ்சூழ் திருவாரூர் சென்றணைந்தார்.

—சேரமான் பெருமாள் நாயனார் புராணம்.

நன்னீர்ப் பொன்னித் திருநாட்டு
நாதர் மகிழுந் திருப்பதிகள்
முன்னி யிறைஞ்சி யகன்றுபோய்
முல்லைப் படப்பைக் கொல்லைமான்
துன்னி யுகைக்குங் குடக்கொங்கில்
அணைந்து தூய மதிவானீர்
சென்னி மிசைவைத் தவர்செல்வத்
திருப்புக் கொளியூர் சென்றடைந்தார்.

பரவும் பெருமைத் திருப்பதிகம் பாடிப்பணிந்து போந்தன்பு
விரைவு மறையோன் காதலனை வெண்ணூல் பூட்டி அண்ணலார்
முரச மியம்பக் கலியாண முடித்து முடிச்சே ரலர்தம்பால்
குரவ மலர்ப்பூந் தண்சோலை குலவு மலைநா டணைகின்றார்.

சென்ற சென்ற குடபுலத்துச் சிவனார் அடியார் பதிதொறும்
நன்று மகிழ்வுற் றின்புற்று நலஞ்சேர் தலமுங் கானகமும்
துன்று மணிநீர்க் கான்யாறுந் துறுகற் சுரமுங் கடந்தருளி
குன்ற வளநாட் டகம்புகுந்தார் குலவுமடி யேனகம் புகுந்தார்.

மலைநாட் டெல்லை யுட்புகுத வந்த வன்தொண் டரைவரையில்
சிலைநாட்டியவெல் கொடித்தானைச்சேரர் பெருமான்எதிர்சென்று
தலைநாட் கமலப் போதனைய சரணம் பணியத் தாவில்பல
கலைநாட் டமுத வாரூரர் தாமுந் தொழுது கலந்தனரால்.

—வெள்ளானைப் படலம்.

செங்கட் குறவரைத் தேவர் போற்றும்
திகழ்திரு ஈங்கோய் மலையின் மேவும்
கங்கைச் சடையார் கழல்பணிந்து
கலந்த இசைப்பதி கம்பு னைந்து
பொங்கர்ப் பொழில்சூழ் மலையு மற்றும்
புறத்துள்ள தானங்க ளெல்லாம் போற்றிக்
கொங்கிற் குடபுலம் சென்ற ணைந்தார்
கோதின் மெய்ஞ்ஞானக் கொழுந்தனையார்.

அண்டர்பிரான் ஆலயங்கள் அம்மருங்குள் ளனபணிந்து
தெண்டிரைநீர்த்தடம்பொன்னித்தென்கரையாங் கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்கள் தொழுதணைந்தார்
கொண்டல்பயில் நெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர்.

அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலுஞ் சென்றேத்தித் திருநணு வினையிறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார்.

அந்நாளில் கொடிமாடச் செங்குன்றூர் அமர்ந்திருந்த
மெய்ஞ்ஞானப் பிள்ளையா ருடன்மேவும் பரிசனங்கள்
பன்னாளு மந்நாட்டில் பயின்றதனால் பனித்தகுளிர்
முன்னான பிணிவந்து மூள்வதுபோல் முடுகுதலும்

அவ்வினைக் கிவ்வினை யென்றெடுத்தையர் அமுதுசெய்த
செய்வினை தீண்டா திருநீலகண்ட மெனச் செப்பினார்.

அப்பதியின் கண் அமர்ந்து சிலநாளில் அங்ககன்று
துப்புறழ்வே ணியர்தானம் பலவும் தொழுதருளி
முப்புரிநூ லுடன்றாழ் வணிமார்பர் முனிவரொடும்
செப்பருஞ்சீர்த் திருப் பாண்டிக் கொடுமுடி சென்றணைந்தார்.

பருவமழைப் பொன்னிப் பாண்டிக் கொடுமுடியார் தம்பாத
மருவி வணங்கி வளத்தமிழ் மாலை மகிழ்ந்து சாத்தி
விரிசுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர்தம்
பொருவிறு னம்பல போற்றிக் குணதிசைப் போதுகின்றார்.

செல்வக் கருவூர்த் திருவானிலைக் கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசை வண்டமிழ்ச் சொற்றொடைபாடியங் நாடகன்று
மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கி வந்து
பல்குதிரைப் பொன்னித் தென்கரைத்தானம் பலபணிவார்.

மாணிக்க வெற்பு - இரத்தின கிரி.

திருஞான சம்பந்தர் புராணம்.

இப்பாசுரங்களை நன்றாக ஊன்றிப்படிக்குமிடத்து இக்கொங்கு நாடு ஒரு தனித்த நாடாக இருந்தது என்ற எண்ணத்தை அமைச்சர்களில் சிறந்த அமைச்சராகவும் கவிஞர்களில் சிறந்த கவிஞராகவும் இருந்த சேக்கிழார் பெருமான் கொண்டிருந்தார் என்று அறியக்கூடும்.

மேலும் சேக்கிழார் பெருமானுக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதே எண்ணத்தைக் கொண்டு இருந்தார்கள் என்பதற்கு அடியிற் கண்ட அவரது திருவாக்குகள் சான்றாகும்.

" கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய் "

— ஊர்த்தொகை.

" கொங்கே புகினும் கூறை கொண்டா றலைப்பாரில்லை "

—அவிநாசித் தேவாரம்.

" மீ கொங்கில் அணி காஞ்சிவாய்ப்பேரூரர் பெருமானை "

—கோயில் திருப்பதிகம்.

சோழர்களுக்குப் பின் இக் கொங்கு நாடு பாண்டியர்கள், ஹொய்சளர்கள், விஜயநகரத்தார், மைசூர் மன்னர்கள் முதலிய வம்சத்தினர்களிடம் சென்றது. இக்காலங்களிலெல்லாம் வெவ்வேறு இராஜ்ஜியங்களுடன் இணைக்கப்பெற்றிருந்த போதிலும் தனது தனிப்பட்ட வாழ்க்கையை இந்நாடு இழக்கவில்லை.

இந்நாட்டின் அமைப்பு மாத்திரமேயன்றி இந்நாட்டுக் குடிகளின் பழக்க வழக்கங்களும் பண்டைக்காலம் தொட்டு ஒரே விதமாக இருந்து வந்தது எனலாம். இக்காலத்திலும் ஜாதி விவகாரங்கள் நடைபெறும்போது கொங்கு நாட்டுப் பண்டை வகுப்பார்களுக்கு உள்ள உரிமைகள் சிறப்புடன் விளங்கி நிற்கும். பாண்டிய சோழிய தொண்டைமண்டலச் சாதியார்களை வேறாகப்பிரித்துக் கொங்கு மண்டலச் சாதியார்களைத் தனிப்படச் சிறப்பித்துக் காட்டுவதுண்டு. உதாரணமாகக் கொங்கு வேளாளர்கள், கொங்குப் பறையர்கள், கொங்குப் பள்ளர்கள், கொங்கு வண்ணார், கொங்கு நாவிதர் முதலான கொங்கு நாட்டு உரிமை மக்கள் ஜாதி வழக்கங்களில் தங்களை முதன்மைப்படுத்திப் பேசிக்கொள்வார்கள். சமூக வழக்கங்களிலும் இவர்களுடைய வழக்கங்கள் ஏனைய நாட்டார்களிடமிருந்து சிறிது வேறுபட்டே யிருக்கும். இவ்விதக் காரணங்

களினால் கொங்கு நாட்டைத் தனித்த நாடு என்று நிச்சயிக்கக் கூடும்.

மேலே காட்டிய கூற்றுக்கு எதிரிடையான கொள்கை ஒன்று உண்டு. வித்வான் திரு. இராகவய்யங்கார் அவர்கள் அவ்வித கொள்கையை வலியுறுத்தித் தாமியற்றிய "சேரன் செங்குட்டுவன்", "சேரர் பேரூர்" என்ற நூல்களில் வெளியிட்டிருக்கின்றார். பல மேற்கோள்களை எடுத்துக் காட்டிக் கொங்கு நாடு சேரமண்டலத்தின் ஒரு பகுதி என்றும் சேரருடைய ராஜதானி கொங்கு நாட்டின் கீழெண்டையிருக்கும் கரூர் என்றும் எடுத்து எழுதியிருக்கின்றார். அவ்வபிப்பிராயத்தை எடுத்தாளுவதற்காக அவர் கொண்ட சான்றுகள் எவைகளென்றால் தமிழ் மொழியில் வழங்கி வரும் மூவேந்தர், முந்நாடு முதலான பதங்களில் கொங்கு நாட்டின் பெயர் விலக்கியிருப்பது ஒன்று. இரண்டாவது ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் அருளின திருப்புகழில் கண்டவை. மூன்றாவது கொங்கு நாட்டில் உள்ள தலங்களைப்பற்றிய புராணங்கள் கூறும் கூற்றுக்கள் ஆகும். இச்சான்றுகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

எதிர் மறையைக் கொண்டு உடன்பாட்டை முழுவதுமாக நிரூபிப்பது கடினம். பதப்பிரயோகங்களில் சில பெயர்கள் விலகியிருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆகவே விலகின ஒரு காரணம் பற்றி மாத்திரம் விலக்கியவை இருக்கவில்லை என்று நிரூபிக்க முடியாது. மூவேந்தர் முதலிய பதப்பிரயோகங்கள் அக்காலத்தில் பெரும் புகழ் பெற்ற மூன்று வேந்தர்களைப் பற்றிச் சொன்னதே ஒழிய நான்காவது வேந்தன் இல்லை என்பது அதன் பொருள் அல்ல. அவ்விதமே முந்நாடும். நன்னூல் முதலிய நூல்கள் தமிழ் நாட்டில் பன்னிரண்டு பிரிவுகள் இருந்ததைச் சொல்லுகின்றன. ஆகவே இக்காரணம் சரியானதல்ல.

இனி ஐயங்காரவர்கள் எடுத்தாண்ட மேற்கோள்களில் மிகப் பழமை வாய்ந்தது அருணகிரிநாத சுவாமிகளுடைய திருப்புகழாகும். சுவாமிகள் பழநியைப்பற்றிக் குறிக்கும் போது

"சேரர் கொங்கு வைகாவூர் நனாடதில்"

என்று பாராட்டியிருக்கின்றார். இதனால் கொங்கு நாடு சேரர்களுடையது என்று பொருள்படும். சுவாமிகள் வாழ்ந்தகாலம் 450 ஆண்டுகளுக்கு முன். ஆகவே இவ்வாக்கியம் ஏற்பட்டது மிகச் சமீபகாலத்தில் தான். சுவாமிகள் காலத்தில் கொங்கு நாடு மைசூரார் ஆதிக்கத்தில் இருந்தது. ஆதலின் சுவாமிகள் கர்ணபரம்பரையை முன்வீட்டு இவ்வபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கலாம். சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் கொங்கு நாடு 9, 10 நூற்றாண்டுகளில் சிறிது காலம்தான் கேரளநாட்டு மன்னர்கள் ஆதிக்கத்தில் சேர்ந்திருந்தது என அறியலாம். அதை உத்தேசித்தே இவ்வித அபிப்பிராயத்தையும் சுவாமிகள் எடுத்தாண்டிருக்கலாம்.

அருணகிரி நாதர் காலத்திற்குப் பின்னர்தான் மற்ற தல புராண ஆசிரியர்கள் தோன்றினார்கள். திருப்பேரூர்ப் புராண ஆசிரியர்.

"கோதைநனி யாண்டதொரு கொங்குவள நாடு"

என்று வருணித்திருக்கிறார். இதில் கோதை என்பது சேர அரசரின் பெயர். இவ்வாசிரியரான கச்சியப்ப முனிவர் வாழ்ந்தது 150 ஆண்டுகளுக்கு முன்புதான். இவ்வாசிரியருக்குப் பின் அவிநாசிப் புராணம், கரூர்ப் புராணம், பவானிப் புராணம், திருச்செங்கோட்டுப் புராணம், திருமுருகன் பூண்டிப் புராணம் முதலியவைகள் ஏற்பட்டன. இவ்வாசிரியர்கள் அருணகிரி நாதர் வெளியிட்ட கூற்றினை மேற்கொண்டு கொங்கு நாட்டைச் சேரர்கள் ஆண்டார்கள் என்று கூறியிருக்கின்றார்கள். வித்வான் திரு. இராகவய்யங்கார் தம் அபிப்பிராயத்திற்

குச் சான்றாகக் கரூர்ப் புராணத்தைப் பெரும்பான்மையாக எடுத்து ஆண்டிருக்கின்றார். கரூர்ப் புராண ஆசிரியர் பெயர் அந்நூலில் கூறப்படவில்லை. ஆனால் அதனாசிரியர் அவிநாசிப் புராணம், அப்பிரமேயத்தலப் புராணம் இவைகளை எழுதின இளையான் கவிராயர் என்று கூறுகின்றனர். அவ்விதமாயின் இப்புராணம் நூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் எழுதப் பெற்றிருக்கவேண்டும். இத்தகைய சமீப காலத்து நூல்களில் கண்ட ஆதாரத்தைக் கொண்டு ஒரு அபிப்பிராயத்தை வற் புறுத்த முடியாது. சேரனுக்குக் கொங்கன் என்ற ஒரு தம்பி இருந்ததாகவும் அத்தம்பிக்கு இந்நாட்டை அவன் பகிர்ந்து கொடுத்ததாகவும் அதனால் இந்நாட்டிற்குக் கொங்குநாடு என்று பெயர் வந்ததாகவும் ஒரு கர்ண பரம்பரை உண்டு. இக்கதைக் குப் பண்டைய ஆதாரம் எதுவும் இல்லை. இக்கதையை அனு சரித்துப் பிற்காலப் புலவர்கள் தங்கள் நூல்களில் இதனைப் புகுத்தியிருக்கலாம்.

ஆனால் சேரநாடு என்னும் கேரளத்தில் வழங்கி வரும் பழக்க வழக்கங்களைக் கொங்கு நாட்டாரின் பழக்க வழக்கங் களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எக்காலத்திலும் இவ்விரு நாடு களும் ஒன்றாக இருந்திருக்க முடியாது என்று சொல்ல வேண் டும். கொங்கு நாடு சேரநாட்டின் ஒரு பகுதியாக இருந்திருந் தால் சேரநாட்டு வழக்கங்கள் கொஞ்சமேனும் கொங்கு நாட் டில் பரவி இருக்கும். சேர நாட்டுத் தலைநகர்கள் கொங்கு நாட்டின் கீழ்க்கோட்டில் இருந்திருக்குமானால் சேர நாட்டுப் பழக்க வழக்கங்கள் பெரும்பான்மையாகக் கொங்கு நாட்டில் இருந்திருக்க வேண்டும். இவை எல்லாம் ஆராய்ந்து பார்த் தால் ஆதிகாலம் முதல் இவ்விரு நாடுகளும் தனித்தனியே இருந்திருக்க வேண்டுமென்றும் கொங்குநாடு ஒரு தனி நாடாக இயற்கையிலேயே அமைந்து வந்ததென்றும் திண்ணமாகக் கூறலாம்.

---

கொங்கு மலியிற் எங்கும் மலியும்.

## 3. கொங்கு நாட்டின் பரப்பு.

நம் இந்திய நாடுகளின் பரப்பும் அளவும் அவ்வக் காலங்களில் ஏற்படும் அரசியல் மாறுதல்களுக்குத் தக்கபடி மாறுவதுண்டு. நம் கொங்கு நாடும் பலவேறு காலங்களில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களினுல் எவ்வாறு அமைக்கப்பெற்று வந்தது என்பதை இனி ஆராய்வோம்.

### 1. சங்ககாலம் (கிறிஸ்துவ ஆப்தம் ஏற்பட்டபோது)

சங்கத்தார் காலத்துப் பண்டை நூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து என்பவைகள் கொங்கு நாட்டின் பெயரை மாத்திரம் குறித்து அதன் மக்களைக் கொங்கர் என்ற பெயராலே குறிக்கின்றன. கொங்கு நாட்டு மலையான கொல்லி மலையைக் கூறுகின்றபடியால் அக்காலத்தில் கொங்கு நாட்டுக் கிழக் கெல்லை கொல்லிமலை அளவும் சென்று அம்மலையையும் சேர்த்துக்கொண்டிருந்தது எனலாம். தகடூர்த்தலைவனை அதிகமான் பெயரைப் பண்டைய நூல்களில் காணுகிறபடியால் இந்நாட்டில் தகடூரும் உட்பட்டிருந்தது எனலாம். நாட்டுப் பரப்பைப் பற்றிய ஏனைய விவரங்கள் புலப்படவில்லை. ஆனுல் இந்நாடு அக்காலத்தில் அடர்ந்த காடுகள் படரப் பெற்றிருந்ததென்றும் அக்காடுகள் இடைகளிலே வேளிர் என்ற பெயர்கொண்ட குறுநில மன்னர்கள் அரண்களைக்கட்டிக்கொண்டு ஆண்டு வந்தார்கள் என்றும் அறிகிறோம். அவ்வேளிர்கள் ஒருவரோடொருவர் அடிக்கடி போர் செய்துகொண்டிருந்தார்கள். என்றாலும் கல்வியில் ஆழ்ந்த அன்புகொண்டு கல்விமான்களைப் போற்றி வந்தார்கள். நாட்டு மக்கள் காடுகளின் இடையே வாழ்ந்து வந்தார்கள். ஆகையால் அவர்கள் குறிஞ்சி நாட்டிற்குரிய தொழில்களையும் பழக்கவழக்கங்களையும் கைக்கொண்டிருந்தார்கள்.

## 2. கங்க வம்சம் 200 — 700 கி. பி.

கங்க வம்சத்தாருடைய ஆதிக்கத்தை நமக்குத் தெரியப் படுத்தும் நூல் " கோங்கு தேச ராஜாக்கள் " என்பது. கொங்கு நாட்டிற்குத் தலைநகராக ஸ்கந்தபுரம் என்ற நகர் ஆதியில் இருந்ததென்றும் பின்னால் தலைக்காடு என்ற ஊர் தலைநகரா யிற்று என்றும் அந்நூல் கூறுகிறது. இவைகளில் ஸ்கந்தபுரம் என்பது இன்னதென்று தெரியவில்லை. சிலர் இது தாராபுரம் என்றும் சிலர் கரூர் என்றும் சொல்லுகின்றனர். ஆனால் இக்கூற்றுக்குத் தகுந்த ஆதாரம் கிடைக்கவில்லை. தலைக்காடு என்பது கொள்ளேகாலத்திற்கு அடுத்தாற்போல் காவேரிக்கு வடகரையில் மைசூர் பிராந்தியத்தில் இருக்கும் ஒரு ஊர். இவ்வூர் மிகவும் பழைமையான ஊர் என்பதற்கு இங்கே யிருக்கும் பண்டைச் சான்றுகளே போதுமானவை. இவ் வூரைத் தலைநகராகக்கொண்டு கங்கவம்சத்தினர் 6, 7 நூற் றூண்டுகள்வரை ஆண்டு வந்தனர். அவர்கள் ஆண்டுவந்த நாட்டிற்குக் "கங்கவாடி'' என்று பெயர். இந்நாடு பெரும் பாலும் தற்போதைய மைசூர் பிராந்தியத்தில் உள்ளது. கொங்குநாடு கங்கர்கள் ஆதீனத்தில் சேர்ந்தவுடன் கங்கவாடி யோடு இணைந்திருந்தது. இவ்விரண்டும் ஒரு நாடாகக் கருதப் பட்டு வந்ததாகத் தெரிகிறது. ஆகவே கங்கர் என்ற பெயரி லிருந்து கொங்கர் என்ற பெயரும் வந்ததாக ஒரு கொள்கை யும் ஏற்பட்டுவிட்டது. கங்கர்கள் காலத்து வடக்கெல்லை கங்கவாடியோடு கலந்துபோயிருக்கத் தெற்கெல்லை எதுவரை எட்டியிருந்தது என்பதை அறிய யாதொரு குறிப்பும் கிடை யாது.

## 3. சைவ ஆசாரியர்கள் காலம் 650 — 850 கி. பி.

7-ம் நூற்றூண்டில் சம்பந்தரும் அப்பரும் 9-ம் நூற்றூண் டில் சுந்தரரும் கொங்கு நாட்டில் விஜயம் செய்துள்ளார்கள். அவர்கள் பாடியுள்ள தலங்களைப் பாடல்பெற்ற தலங்கள் என்றும், பெயர் மாத்திரம் கூறியிருக்கும் தலங்களை வைப்புத்

தலங்கள் என்றும் கூறுவது வழக்கு. கொங்கு நாட்டில் ஏழு பாடல் பெற்ற தலங்களும் ஏழு வைப்புத் தலங்களும் உண்டு. அவைகளைக்கொண்டு அக்காலத்தில் கொங்கு நாட்டினுடைய பரப்பைத் தெரிந்துகொள்ளலாம். சம்பந்தர் பவானி, திருச்செங்கோடு, கொடுமுடி, கரூர் என்ற தலங்களைத்தரிசித்துப் பாடியிருக்கிறார்கள். இவைகள் காவேரியின் இருகரைகளிலும் சிறிது தூரத்திற்குள்ளாக இருப்பவைகள். ஆகவே அவர்கள் காவேரிக்கு அடுத்தாற்போலவே தேச சஞ்சாரம் செய்தார்கள் என்றும் மேல் கொங்கு நாட்டிற்குச் சென்றிருக்க மாட்டார்கள் என்றும் ஊகிக்கலாம். அப்பர் சுவாமிகள் கொடுமுடியில் பாடல் அருளிச் செய்தும் பேரூரை வைப்புத் தலமாக வைத்துப் பாடியும் இருக்கிறார்கள். "பேரூர் பிரமபுரம் பேரா ஊரும்" என்பது அவர்கள் வாக்கு. ஆகவே அப்பர் சுவாமிகள் மேல் கொங்கிற்கும் சென்றிருக்கலாம். இவ்வாசிரியர்களுக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிந்திவந்த சுந்தரர் அவிநாசி, திருமுருகன் பூண்டி, கொடுமுடி, வெஞ்சமாக்கூடலூர் என்ற தலங்களைப்பாடியும், பேரூர், குரக்குத்தளி என்ற தலங்களை வைப்புத்தலங்களாக வைத்தும் இருக்கிறார்கள். கோயில் பதிகத்தில் "மீ கொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர் பெருமானை" என்றும், ஊர்த்தொகையில், "கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்" என்றும் அருளியிருப்பதைக் காண்க. ஆகவே சுந்தரர் கொங்குநாடு முழுவதும் விஜயம் செய்துள்ளார்கள் எனலாம். மேலே காட்டிய மேற்கோள்களால் அக்காலத்துக் கொங்கு நாட்டு அளவு இன்னதென்று அறியலாம்.

### 4. சேக்கிழார் காலம் 12-வது நூற்றாண்டு.

சேக்கிழார் காலத்தில் கொங்கு நாட்டின் பரப்பைப்பற்றி முந்தியே ஒருவாறு கூறியிருக்கின்றோம். அவர் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணத்தில் வெகு தெளிவாக கொங்கு நாட்டின் பரப்பை எடுத்துக் கூறியிருக்கின்றார்.

"மீகொங்கில் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினர்" என்பது போன்ற பல ஆதாரங்கள் அந்நூலில் இருக்கக்காண்கிறோம். தற்போது கொங்கு நாடு என்று சொல்லப்படும் எல்லை முழுவதும் சேக்கிழார் காலத்தில் இருந்தது என்றே கூறமுடியும்.

## 5. சோழர்கள்—கொங்கு சோழர்கள் ஆதிக்கம் 900 — 1200 கி. பி.

இந்தக்காலத்தினுடைய நிலையை அறியக் கணக்கில்லாத கல்வெட்டுச்சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன. நாட்டினுடைய பரப்புமாத்திரமேயன்றி நாட்டின் உட்பிரிவுகளின் விவரங்களும் ஊர்களின் பெயர்களும் விவரமாகத் தெரிகின்றன. கல் வெட்டுக்களில் கிடைக்கும் விவரங்களைக்கொண்டு நாட்டின் படத்தை விவரமாக எழுதமுடியும். அக்காலத்தில் இந்நாடு தென் கொங்கு வட கொங்கு என்ற இரண்டு பெரும் பாகங்களாகப் பிரிக்கப்பட்டதையும் அவ்விரண்டையும் சேர்த்து ஆண்டதனால் வீரசோழன், வீரராஜேந்திரசோழன் என்ற இரண்டு கொங்கு மன்னர்கள் 'இரு கொங்கையும் ஆண்டவர்கள்' என்ற பட்டப் பிருதுவையும் வகித்துக்கொண்டதும் அறிகிறோம். இவ்விரு கொங்குகளையும் பிரித்த அடையாளம் நொய்யலும் காவேரியுமாக இருக்கவேண்டும். மேலும் வைஷ்ணவ ஆசிரியர் வேதாந்த தேசிகர் என்பவர் தமது "பரமத பங்கம்" என்ற நூலில் 53 செய்யுளில் "வடகொங்கில் வானியாற்றில்" என்று கூறியிருப்பதை இங்கே கவனிக்கலாம். இங்கே வட கொங்கு என்பது நொய்யலுக்கு வடக்கே பவானிக் கரையோரமுள்ள ஓடுவங்கநாட்டைக் குறித்துள்ளார்கள். சுந்தரர் காலத்திலும் பாண்டியன் மாறன் சடையன் காலத்திலும் சேக்கிழார் காலத்திலும் பிரயோகிக்கப்பட்டுவந்த மீ கொங்கு என்ற மேல் கொங்கின் பெயர் இக்காலத்தில் அதிகமாக வழக்கத்திலில்லை.

சோழர்கள் கொங்கு நாட்டைப் பிடித்த காலத்தில் அப்போது அதன் தலைநகராயிருந்த தலைக்காட்டைத் தகர்த்தினர்

கள். இந்நாட்டைச் சோழர்கள் பிடித்தவுடன் அதற்கு "முடி கொண்ட சோழ மண்டலம், கங்கைகொண்ட சோழ வளநாடு" என்ற பெயர்களைக் கொடுத்தார்கள். ஆகவே கொங்கு நாடு தலைக்காட்டிற்கு வடக்கேயும் சென்று இருந்தது எனலாம். அக்காலத்தில், கொள்ளேகாலத்திற்குச் சுற்றியுள்ள பிரதேசத்திற்கு "ஹடிநாடு அல்லது படிநாடு" என்ற பெயர் இருந்தது. பின்னல் இராஜேந்திரன், வீரராஜேந்திரன் என்ற சோழர்கள் காலங்களில் கொங்கு நாட்டிற்கு "அதிராஜராஜ மண்டலம்" என்ற பெயரும் விக்கிரம சோழன் காலத்தில் "வீர சோழ மண்டலம்" என்றும், குலோத்துங்கன் III காலத்தில் "சோழ கேரள மண்டலம்" என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

### 6. மத்தியகாலம் 13–15 நூற்றுண்டுகள்.

மத்தியகாலத்தில் கொங்கு நாட்டின் பரப்பைப்பற்றி அதிகமாகச் சான்றுகள் கிடையா. 15-வது நூற்றுண்டில் அருணகிரிநாத சுவாமிகள் கொங்கு நாட்டில் விஜயம் செய்து அங்கேயுள்ள தலங்களைப்பற்றித் திருப்புகழ் பாடியிருக்கிறார்கள். அத்திருப்புகழ்களில் அடங்கியுள்ள விவரங்களைக் கொண்டு நாட்டினுடைய பரப்பை ஒருவாறு அறியலாம். அவர்கள் பாடியுள்ள தலங்கள் அடியிற்கண்டவை: திருச்செங்கோடு, கொல்லி மலை, ஓதி மலை, குருடி மலை, தென்சேரி மலை, கொங்கணகிரி, கனகமலை (கிணத்துக்கடவு மலை) புகழி மலை (புகலூருக்கருகு) பட்டாலியூர் சிவமலை முதலிய மலைகளும், கருவூர், நெருவூர், வெஞ்சமாக்கூடல், கொடுமுடி, சேலம், இராசிபுரம், விசயமங்கலம், சிங்கை (காங்கயம்), திருமுருகன்பூண்டி, அவிநாசி, திருப்புக்கொளியூர், பேரூர், கீரனூர் முதலிய ஊர்களும் ஆகும்.

மேலும் 2½ நூற்றுண்டுகளுக்கு முந்தியிருந்த கார்மேகக் கவிஞர் பாடிய கொங்கு மண்டல சதகத்தில் நாட்டு எல்லை உட்பிரிவுகளின் விவரம், ஊர்களின் பெயர்கள், இவைகளைத்

காணலாம். அக்காலத்தில் கொங்கு நாடு ஏனைய அரசர்களால் பிடிபட்டு ஆண்டு வரப்பட்டபோதிலும் நாட்டு வழக்கப்படி எல்லை முன்போலவே இருந்தது என அறியலாம்.

## 7. மைசூர் ஆதிக்கம் 1600—1800 கி. பி.

கொங்கு நாட்டை மைசூர் மன்னன் கண்டீரவ நரச ராஜன் பிடித்து மைசூரோடு சேர்த்துக்கொண்டான். பின்னல் வந்த ஹைதர், திப்பு என்ற முகமதியத் தலைவர்கள் 1799 ஆண்டு வரை இந்நாட்டை ஆண்டார்கள். மைசூர் ஆதிக்கத்தில் இந்நாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதியை ஏற்படுத்தியிருந்தார்கள். கோவையில் மாதையன் என்ற ஒரு தலைவன் ஆண்டுவந்தான். ஆங்கிலேயர்கள் கொங்கு நாட்டைப் பெற்றவுடன் இதனை பவானி, தாராபுரம், சங்கரதுர்க்கம் என்ற மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆண்டார்கள். பின்னல் வேறு விதமாகப் பாகித்துக் கொங்கு நாட்டை கோவை, சேலம், திருச்சினுப்பள்ளி, மதுரை என்ற நான்கு ஜில்லாக்களுக்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டார்கள். இவ்வாறு பலவேறு காலங்களில் பலவேறு பிரிவுகளாகப் பாகிக்கப்பட்டபோதிலும் இயற்கைப் பிரிவினையையும் மக்களின் பழக்க வழக்கங்களையும் கவனித்தால் கொங்கு நாடு ஆதிமுதல் கொண்டு ஒரே நிலைமையில் இருந்ததை அறியலாம்.

## 4. கொங்கு நாட்டின் பிரிவுகள்.

கொங்கு நாடு வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பிரிவுகளைக்கொண்டிருந்ததாகத் தெரிகிறது. ஆனல் கொங்கு நாடு சிறப்புற்றிருந்த காலமாகிய கொங்கு சோழருடைய ஆதிக்கத்தில் அந்நாடு ஒரு குறிப்பிட்ட பிரிவுகளைக் கொள்ள ஆரம்பித்தது. நாட்டில் அரசியல் ஒழுங்கும் நிலைமையும்பெற ஆரம்பிக்கையில் அதனுடைய பிரிவுகளும் நிலைபெற ஆரம்பித்தன. பிரிவுகளின் பெயர்களும் கிரமாக ஏற்பட்டன,

அவைகளுடைய எல்லைகளும் ஒழுங்கு பெற்றன அரசியல் முறைக்காகப் பிரிவுகள் ஏற்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் அதிகாரிகள் ஏற்பட்டார்கள். அரசியல் அதிகாரிகளைப் போலவே சாதி ஒழுக்கங்களை நிலைநிறுத்துவதற்குப் பட்டக் காரர்கள் என்ற தலைவர்களும் ஏற்பட்டார்கள். இந்நாள் களிலும்கூட ஒவ்வொரு பிரிவிலும் சாதிகளின் நாட்டுப்பட் டக்காரர்கள் இருப்பதைப் பார்க்கலாம். இக்காலத்தில் அரசியல் சம்பந்தமாக நாட்டுப்பிரிவுகளின் பெயர்கள் வழக்கத் தில் இல்லாமல் போனபோதிலும் சாதிக்கட்டுப்பாட்டுச் சம் பந்தமாக நாட்டுப் பெயர்களை வழங்கி வருவதைக் காணலாம்.

## பெரும் பிரிவுகள்

கொங்கு நாடு, தென் கொங்கு வட கொங்கு என்ற இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்ததாகச் சாசனங் களால் அறிகிறோம். 10, 12 நூற்றாண்டுகளில் இவ்விரண்டு பிரிவுகளுக்கும் தனித்தனி அரசர்கள் இருந்தார்கள் என்றும் அறிகிறோம். மாறவர்மன் சுந்தர பாண்டியன் I என்பவன் காலத்தில் இவ்விரு அரசர்களுக்கும் பகை உண்டாக அம் மன்னன் இருவரையும் சமாதானப்படுத்திவிட்ட செய்தியைத் தன் சாசனத்தில் குறித்திருக்கிறான். அச்சாசனப் பகுதியை மேலும் வீரசோழன் (1183—1206) வீரராஜேந்திரன் (1207—1255) என்ற இரண்டு கொங்குச் சோழர்களும் இரு பிரிவுகளையும் தம் வசப்படுத்திக்கொண்டு ஒரு குடைக்கீழ் ஆண்டு வந்த வெற்றியைக் காட்டுவதற்காக இருகோங்கும் ஆண்டவர்கள் என்ற பட்டப் பிருதுவை அணிந்திருந்தார்கள்.

இவ்விரண்டு பிரிவுகளைத் தவிர மேல்கொங்கு (மீ கொங்கு) என்ற ஒரு பிரிவு இருந்ததாகச் சுந்தரமூர்த்திகள் தேவாரத்திலும் பெரியபுராணச் செய்யுள்களிலும் அறி கிறோம். மேல்கொங்கு என்பதற்கு எதிரிடையாகக் கீழ் கொங்கு என்ற ஒரு பிரிவு இருந்ததாகத் தெரியவில்லை,

சாசனங்களிலாவது நூல்களிலாவது கீழ்கொங்கு என்ற பெயரைக் காணவில்லை.

## சிறு பிரிவுகள்

கொங்குநாடு செழிப்பாக இருந்த காலத்தில் அது 24 உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது என்ற செய்தி கொங்கு மண்டல சதகத்தில் பதிப்பித்து இருக்கும் செய்யுள்களாலும் கல்வெட்டுகளாலும் அறிகிறோம். ஆனால் இவ்விரண்டு ஆதாரங்களுக்கும் சிலவேறுபாடுகள் இருக்கின்றன.

உதாரணமாக, கொங்குமண்டல சதகப் பதிப்பில் காணும் "ஆறை நாடு" என்ற பெயர் கல்வெட்டுகளில் கிடைக்க வில்லை. ஆனால் அந்த நாட்டுப் பிரதேசத்தில் ஒரு பாகத்திற்கு 'பேரூர் நாடு' என்றும் மற்றொரு பாகத்திற்கு 'வடபாரிசார நாடு' என்றும் கல்வெட்டுகளில் காண்கிறோம். மேலும் ஆறை நாட்டில் உட்பிரிவுகளாக கோவங்கநாடு, மன்னி நாடு, கவயநாடு, செம்பை நாடு, தணக்கு நாடு, பழன நாடு என்ற பெயர்கள் கொங்கு மண்டல சதகப் பதிப்பில் காண்கிறோம். ஆனால் கல்வெட்டுகளிலோ வெள்ளா நாடு, பூளுவ நாடு, சேவூர் நாடு, நிரற்றூர்ப்பற்று, வழையனூர் நாடு, நாலூர்ப்பற்று நாடு, பழனநாடு முதலிய உட்பிரிவுகளைப் பார்க்கிறோம்.

நாட்டுப் பிரிவுகளின் விவரங்களை இதன் கீழ் குறித்திருக்கிறேன். பிரிவுகள் ஒவ்வொன்றுக்குள்ள சம்பந்தத்தைக் காட்டி தற்காலத்தில் அப்பிரிவுகளுக்கு உள்ள தாலூக்காப் பெயர்களையும் எடுத்து எழுதியிருக்கிறேன். அதனைச் சென்னைப் பூமிசாஸ்திரச் சங்கத்தார் பத்திரிகையிலும் பதிப்பித்துள்ளேன்.

## ஏனைய பிரிவுகள்.

மேற் பகுதியில் கொங்கு நாட்டின் பிரிவுகளைப் பற்றி எழுதினபோது மேல் கொங்கு என்பதற்கு எதிரிடையாக கீழ் கொங்கு என்ற பிரிவு இருந்ததாகத் தெரியவில்லை

என்றும் சாசனங்களிலாவது நூல்களிலாவது கீழ் கொங்கு என்ற பெயரை காணவில்லை என்றும் எழுதினேம். * அவ்வாறு கீழ் கொங்கு என்ற ஒரு பிரிவின் பெயரை காணுமற் போனபோதிலும் மழகோங்கம் என்ற ஒரு பெயர் சாசனங்களில் கூறப்பட்டிருப்பதை எனது நண்பர் திரு. K. V. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் எடுத்துக் காட்டினுர்கள். மழகொங்கம் என்ற பெயர் பாண்டியன் நெடுஞ்சடையனுடைய வேள்விக்குடிச் செப்பேட்டில் கூறப்பட்டிருக்கிறது. அச்சாசனத்தின்படி நெடுஞ்சடையனுடைய தகப்பனுன தேர்மாறன் என்ற பாண்டியன் தன் எதிரிகளை நெடுவயல், குறுமடை, மன்னிகுறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர் முதலிய போர்க்களங்களில் தோற்கடித்துப் பல்லவ அரசனை குழும்பூர் யுத்த களத்தில் வென்று, பெரியலூர் என்னுமிடத்தில் எதிரிகளை அழித்துக் காவிரியைக் கடந்து, மழகோங்கத்தை தன் வசப்படுத்திப் பாண்டிக் கொடுமுடி சென்று, பசுபதியை வணங்கி, கங்கராஜனேடு சம்பந்தம் செய்து, கூடல், வஞ்சி, கோழி என்ற நகரங்களின் மதில்களை புதுப்பித்தான் என்று கண்டிருக்கிறது. இவ்வீரச் செயல்களைச் சொல்லும் பாகம் அடியில் கண்டபடி இருக்கின்றது.

1.70. கொன்னவின்ற நெடுஞ்சுடர்வேற் கோங்கர் கோமான் கோச்சடையன்

மற்றவர்க்குப் புத்திரனுய் மண்மகளது பொருட்டாக
மத்தயானை செலவுந்தி மானவேல் வலனேந்திக்
கடுவிசையாலெதிர்ந்தவரை நேடுவயல்வாய்நிகரழித்துக்
கறுவடைந்த மனத்தவரைக்குறுவடைவாய்க் கூர்ப்பழித்து
மன்னிகுறிச்சியுந் திருமங்கையு முன்னின்றவர் முரணழித்து
மேவலோர் கடற்றுனை யோடேற்றெறதிரேய் வந்தவரைப்
பூவலூர்ப் புறங்கண்டுங்

* 24 நாடுகளில் கிழங்கு நாடு என்ற ஒரு பெயர் வழக்கத்தில் இருக்கிறது. கிழங்கு என்பது கிழங்க அல்லது கீழ் கொங்கு என்பதின் மருவு ஆக இருக்கலாம் அல்லவா ?

கொடும்புரிசைந் நெடுங்கிடங்கிற் கோடும்பாளூர்க் கூடார்
கடும்பரியுங் கருங்களிறுங் கதிர்வேலிற் கைக்கொண்டுஞ்
சேவ.......................................................
கூடாத பல்லவனைக் குழும்பூருட் டேசழிய
எண்ணிறந்த மால்களிறு மிவுளிகளும் பலகவர்ந்தும்
தரியலராய்த் தறித்தவரைப் பெரியலூர்ப் பீடழித்தும்
பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்
டழகமைந்த வார்சிலையின் மழகோங்க மடிப்படுத்து
மீண்டொளிய மணி இமைக்கு மெழிலமைந்த
நெடும்புரிசைப் பாண்டிக்கோடுமுடி சென்றெய்திப்
பசுபதியது பங்மபாதம் பணிந்தேத்திக்
கநக ராசியுங் கதிர்மணியும் மணமகிழக் குடுத்திட்டுங்
கொங்கர் வந்நறுங் கண்ணிக்
கங்கராஜனொடு சம்பந்தஞ் செய்தும்
எண்ணிறந்தன கோசகஸ்ரமும் ஹிரண்யகர்ப்பமுந்
துலாபாரமும்
மண்ணின்மிசைப் பலசெய்து மறைநாவினோர்
குறைதீர்த்துங்
கூடல் வஞ்சி கோழி என்னு மாடமாமதில் புதுக்கியு
மறைகடல் வளாகங் குறையா தாண்ட
மன்னர் மன்னன் றென்னவன் மருகன்

1.88. மான வெண்குடை மான்றேர் மாறன்.

மேலே கூறிய வெற்றிச் செயல்களைச் செய்த தேர்மாறன் கி. பி. 710 முதல் 740 வரை ஆண்டிருக்கவேண்டு மென்று ஆராய்ச்சியாளர்கள் கணித்திருக்கின்றார்கள். தேர்மாறனுடைய தகப்பன் கோச்சடையன் என்ற பாண்டியன் கொங்கர் கோமான் என்ற பட்டத்தை வகித்திருந்தான். தேர்மாறனே கொங்கு நாட்டின் ஒரு பாகமாகிய மழங்கொங்கத்தை வசப்படுத்திப் பாண்டிக் கொடுமுடி மட்டும் படை எடுத்திருந்தான். தேர்மாறனுடைய மகன் நெடுஞ்சடையன் வட

கொங்கின் தலைவனை தகடூர் அதிகமான்மீது படை எடுத்துச் சென்றான். ஆகவே 8வது நூற்றாண்டுப் பாண்டியர்கள் கொங்கு நாட்டின்மீது மிகுந்த ஆவல் கொண்டிருந்தார்கள் என்று அறிகிறோம்.

அவ்வாறு கொங்கு நாட்டை தன்வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற ஆவலோடு தேர்மாறன் படை எடுத்துச் சென்ற பாகத்திற்கு **மழகொங்கம்** என்ற பெயர் அக்காலத்தில் வழங்கி வந்ததாக அறிகிறோம். "மழகொங்கம் அடிப்படுத்து, பாண்டிக் கொடிமுடி சென்றெய்தி, பசுபதியது பத்மபாதம் பணிந்தேத்தி", என்று கூறியுள்ளதால் மழகொங்கமானது பாண்டிக் கொடுமுடி மட்டும் பரந்திருக்க வேண்டுமென்று யூகிக்கலாம். பாண்டிக் கொடுமுடியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு கொடுமுடி ஈசர் அல்லது மகுடேசுவரர் என்பது பெயர். பசுபதி என்ற சிறப்புப் பெயர் இல்லை. ஆனால் கொடுமுடிக்கு தென்கிழக்கே உள்ள கரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு பசுபதி என்ற பெயர் உண்டு. ஆகவே தேர்மாறன் சென்றது கொடுமுடியுடன் கரூருமாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தபோதிலும் மழகொங்கத்தினுடைய மேற்கெல்லை கொடுமுடிக்கும் கரூருக்கும் அடுத்து ஓடும் காவிரி நதியாக இருக்கலாம். ஆகவே கொங்கு நாட்டின் கிழபாகம் மழகொங்கம் என்ற பெயரோடு 8வது நூற்றாண்டில் வழங்கியிருக்கலாம்.

இனி மழகொங்கம் என்ற பெயரைப்பற்றி ஆராயலாம். மழவர்கள் என்ற குடிப்பெயர் முன் காலத்தில் இருந்தது. அப்பெயர் படைத்தவர்கள் சிற்றரசர்களாக இருந்திருக்கின்றார்கள். அவர்கள் பெயரைச் செப்பேடுகளில் சோழர், பாண்டியர், கேரளர், ஹேஹயர், ஹாலிபர் முதலிய அரச வம்சங்களோடு சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பண்டைய நூல்களில் மழவர் என்ற பெயரும் அவர்கள்

நாடான மழநாடு என்ற பெயரும் கூறப்பட்டுள்ளன. அந்நாடு திருச்சி, தஞ்சை ஜில்லாக்களின் எல்லையில் இருந்ததாகத் தெரிகிறது. இந்நாட்டில் கொல்லிமலை இருந்ததாகத் தமிழ் நூல்களில் காணப்படுவதால் இந்நாடு கொங்கின் ஒருபாக மாக அக்காலத்திலேயே கருதப்பட்டு வந்தது எனலாம். மழநாட்டு மன்னர்கள் அதிகமான் வம்சத்தார்களின் கீழ் குறுநில மன்னர்களாக இருந்தனர் என்றும் அறிகிறோம். ஆகவே மழகொங்கமானது கொங்கு நாட்டில் காவிரிக்குக் கீழ் உள்ள பாகத்திற்கு ஒரு பெயராக வழங்கி வந்தது எனலாம்.

தேவாரத்தில் மழபாடி என்பது ஒரு தலமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அம்மழபாடி மழநாட்டின் ஓர் நகரமாக இருந்திருக்கும். மழவர்கள் ஆண்டதினால் மழபாடி என்ற பெயர் பெற்றிருக்கவேண்டும். இம்மழபாடி திருவையாற் றிற்கு 3 கல் தொலைவில் இருக்கிறது. மழவ மன்னர்கள் உயர்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர்களுடைய புதல்விகளை சோழ அரசர்களுக்கும் கூட அரசிகளாகக் கொடுத்திருக்கின்றார்கள். கி. பி. 907—953ல் ஆண்ட பராந்தகன் I என்ற சோழ அரசனுடைய இரண் டாவது புதல்வரான கண்டராதித்தியர் மழவ மன்னரின் குமாரத்தியை மணம் செய்துகொண்டதாகவும் அவ்வரசியின் பெயர் பராந்தகன் மாதேவடிகளார் என்றும் தென்னிந்திய சாசனங்கள் பு. II. பா. III ப. 375ல் கண்ட சாசனத்தினால் அறிகிறோம். இவைகளெல்லாம் கூர்ந்து பார்க்கில் 8, 9 நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டில் மழகொங்கு என்ற ஒரு பிரிவு இருந்து பின்னால் அப்பிரிவு மறைந்து போயிற்று என ஊகிக்கமுடியும்.


KONGU NADU



| கொங்கு மண்டல சதகப் பதிப்பில் காணும் நாட்டுப் பெயர்களும் உட் பிரிவுகளும். | கொங்கு நாட்டில் அகப் படும் கல் வெட்டுகளில் கிடைக்கக்கூடிய நாட் டுப்பெயர்களும் உட் பிரிவுகளும் | அவைகளின் தற்கால இட அமைதிகள் |
|---|---|---|
| 1. ஆறைநாடு | பேரூர்நாடு | ஆறைநாடு = கோயமுத்தூர்த் தாலூக்கா + அவிநாசித் தாலூக்கா + பல்லடம் தாலூக்காவில் வடமேற்குப்பாகம். |
| | வடபாரிசார நாடு | பேரூர்நாடு = கோயமுத்தூர்த் தாலூக்கா |
| | | வடபாரிசார நாடு = அவிநாசித் தாலூக்கா |
| 1. கோவங்கநாடு | 1. வெள்ளாநாடு | கோவங்கநாடு = கோவையைச்சுற்றி |
| 2. மன்னிநாடு | 2. பூளுவநாடு | மன்னிநாடு = அன்னூரைச்சுற்றி |
| 3. கவையநாடு | 3. சேலூர் நாடு | கவையநாடு = கோவில்பாளையத்தைச்சுற்றி |
| 4. செம்பைநாடு | 4. நிரற்றூர்நாடு | |
| 5. தணக்குநாடு | 5. வழையலூர்நாடு | |
| 6. பழனநாடு | 6. நாலூர்ப்பற்றுநாடு | பழனநாடு = பெருமாநல்லூரைச்சுற்றி |
| | 7. பழனநாடு | |
| 2. ஒடுவங்கநாடு | ஒடுவங்கநாடு | ஒடுவங்கநாடு = கோபிசெட்டிப்பாளையம் தாலூக்கா வடபாகமாக பவானி நதி ஓரத்திலுள்ள பாகம். |
| 1. டணாயகன் கோட்டை நாடு | படிநாடு அல்லது கங்கை கொண்ட சோழவள நாடு | டணாயகன் கோட்டை நாடு = ஷை தாலூக்கா மேல் பாகமும் அவிநாசித்தாலூக்கா வடகிழக்கு பாகமும் (பவானி ஓரம்) |
| 2. படிநாடு | | படிநாடு = கொள்ளேகாலம் தாலூக்கா |

| | | |
|---|---|---|
| 3. வாரக்கநாடு | வாயிரக்கநாடு | வாரக்கநாடு=பல்லடம் தாலூக்காவில் மேல்பாகமும் பொள்ளாச்சி தாலூக்காவின் வடகிழக்கு பாகமும், |
| 4. பொன்கலூர் நாடு | பொங்கலூர்க்கா நாடு | பொன்கலூர் நாடு=பல்லடம் தாலூக்காவின் கிழ பாகம் |
| 1. தென் பொங்கலூர் நாடு (இதனை பொன் குலிக்கிநாடு என்பர்) | | தென்பொன்கலூர் நாடு=தாராபுரம் தாலூக்காவின் தென்பாகம். |
| 5. காங்கேயநாடு | காங்கய நாடு<br>1. நற்காவேரி நாடு | காங்கேய நாடு=தாராபுரம் தாலூக்காவில் வட பாகமாகிய காங்கயம், வெள்ளைக்கோயில் பிர்க்காக்கள். |
| 6. குறும்புநாடு | குறுப்பு நாடு<br>1. வீரசோழ வளநாடு | ஈரோடு தாலூக்காவில் மேல்பாகம் (கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்) |
| 7. காஞ்சிக் கோயில் நாடு | காஞ்சிக் கோவல் நாடு | கோபி, பவானி, ஈரோடு தாலூக்காக்கள் சந்திக்கும் பாகம். |
| 8. வடகரைநாடு | வடகரை நாடு | பவானித் தாலூக்காவில் சமஸிலம் (மலைத்தொடர்களுக்குத் தெற்கே). |

| | | |
|---|---|---|
| **9. பூந்துறைநாடு** | பூந்துறை நாடு | மேல்கரை பூந்துறை=ஈரோடு தாலூக்காவின் வடகிழக்குப் பாகம். |
| ய. 1. மேல்கரை பூந்துறை நாடு | 1. மேல்கரை | |
| | 2. கீழ்கரை | கீழ்கரை பூந்துறை நாடு=திருச்செங்கோடு தாலூக்கா. |
| 2. கீழ்கரை பூந்துறை நாடு அல்லது குன்றத்தூர்க்கூற்றம். | 1. பருத்திப்பள்ளி | |
| | 2. குன்றத்தூர் | பருத்திப்பள்ளி நாடு=சேலம் தாலூக்காவில் ஒரு பாகம். |
| | 3. நாடாள்வான் | |
| இணை நாடுகள் | 4. சேல நாடு | சேலம் நாடு=சேலம் தாலூக்கா. |
| 1. பருத்திப்பள்ளி நாடு | 5. ஏழூர் நாடு | ஏழூர் நாடு=நாமக்கல் தாலூக்காவின் வடகிழக்குப் பாகம். |
| 2. ஏழூர் நாடு | | |
| **10. அரயநாடு** | அரயநாடு | மேல்கரை அரயநாடு=ஈரோடு தாலூக்காவின் தென் கிழக்குப் பாகம். |
| 1. மேல்கரை | | |
| 2. கீழ்கரை | | கீழ்கரை அரயநாடு=நாமக்கல் தாலூக்காவில் மேல் பாகம். |
| **11. தென்கரைநாடு** | தென்கரை<br>1. நரையனூர் நாடு | தென்கரை நாடு=தாராபுரம் தாலூக்காவின் தென் பாகம். |
| **12. மணநாடு** | வடகரை நாடு<br>மணத்தூர்நாடு | கரூர் தாலூக்காவின் தென்மேற்குப் பாகம். |
| **13. வெங்காலநாடு** | வெங்காலநாடு | கரூர் தாலூக்காவின் கீழ்பாகம். |
| 1. இடைப்பிச்ச நாடு | 1. இடைப்புழுதி நாடு | |

| | | |
|---|---|---|
| 14. தட்டையநாடு | தட்டையூர் நாடு | குளித்தலை தாலூக்காவின் வடமேற்குப் பாகம். |
| 15. கிழங்குநாடு | கிழங்கநாடு | கரூர் தாலூக்காவில் குளித்தலை ஓரமாக காவேரியின் தென்கரை. |
| 16. தலையநாடு | தலையூர்நாடு | கரூர் தென்பாகம். |
| 17. அண்டநாடு | அண்டநாடு | பழனித் தாலூக்கா தென்கிழக்கு. |
| 18. வையாபுரிநாடு | வைகாவிநாடு<br>1. கரைவழி நாடு<br>2. ராஜராஜவள நாடு | பழனித் தாலூக்கா மேல்பாகமும் உடுமலைப் பேட்டைத் தாலூக்கா ஆம்ராவதிக் கரையும்.<br>கரைவழிநாடு = ஆம்ராவதிக்கரை. |
| 19. நல்லுருக்காநாடு | நல்லுருக்காநாடு | உடுமலைப்பேட்டைத் தாலூக்கா மேல்பாகம். |
| 20. காவடிக்கனடு | காவடிக்கானடு | பொள்ளாச்சித் தாலூக்கா கிழபாகம். |
| 21. ஆனைமலை நாடு | கல்வெட்டுகளில் பெயர் காணவில்லை | பொள்ளாச்சித் தாலூக்கா தென்மேற்குப் பாகம். |
| 22. பூவாணிய நாடு<br>1. நங்கமல்லி நாடு<br>2. பக்க நாடு<br>3. பெரும்பாலைய நாடு | வடபூவாணிய நாடு<br>1. கீட்பா நாடு<br>2. வஞ்சி நாடு | ஓமலூர் தாலூக்கா, தர்மபுரி தாலூக்கா. |
| 23. வாழவந்தி நாடு<br>1. தாகூர் நாடு<br>2. விமலய நாடு | இல்லை | நாமக்கல் தாலூக்கா வடபாகம். |

| | | |
|---|---|---|
| **24.** இராசிபுர நாடு<br>1. கொல்லி மலையில் பதினன்கு நாடுகள்<br>2. சேல நாடு<br>3. சேர்வராயன் மலையில் மூன்று நாடுகள் | இல்லை | சேலம், இராசிபுரம் தாலூக்காக்கள். |

இவைகளைத்தவிர கல் வெட்டுகளில் அடியிற்கண்ட நாட்டுப் பெயர்கள் காணப்படுகின்றன. அவைகளுடைய விவரங்கள் சரியாகத் தெரியவில்லை. அவையாவன:—

1. புறமலை நாடு.
2. புறங்கரம்பை நாடு.
3. வறுப்புக்கா நாடு.
4. விரகேரளவள நாடு.
5. வளுநப்புற்றக்கூ நாடு.
6. பருள் நாடு.
7. தென்கடம்பை நாடு.
8. போசல நாடு.
9. தகடை நாடு.

## 5. கொங்குநாட்டு அமைப்பு.

முன்னர் கொங்குநாட்டெல்லைகளை விவரித்தபோது கிழக்கே சேர்வராயன், கொல்லிமலைகளும், வடக்கே தலைமலை பருகூர்மலை, தோப்பூர்மலைகளும், மேற்கே நீலகிரி வெள்ளி மலைத் தொடர்களும், தெற்கே ஆனைமலை, வராகமலைகளும் எல்லைகளாக இருக்கின்றன என்றோம். அவ்வாறு நாற்புறங் களிலும் மலையரண்களால் சூழப்பட்டுத் தென்கிழக்கில் மாத் திரம் சிறிதுபாகம் வெளியாக நிற்கின்றது. ஆகவே நாற் புறங்களும் உயர்ந்து நடுவில் தாழ்ந்து, அத்தாழ்வு தென்கிழக் கோரமாக வெளியே செல்கின்றது. நடுவில் தாழ்வான பாகத் தில் காவேரி நதியானது ஓடுகின்றது. அது கொங்குநாட்டு நான்கு எல்லை அரண்களிலிருந்தும் பெருகிவரும் உபநதிகளைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு சிறிது தூரம் நடுப்பள்ளத்தாக் கில் தென்புறமாகவும் பிறகு தென்கிழக்காகவும் ஓடி குழித் தலைக்கருகில் சோழநாடு புகுகின்றது. இவ்வுபநதிகளும் பெரு நதியும் கொங்கு நாட்டு மலைவளப்பமும் நாட்டு வளப்பமும் கரைத்துக்கொண்டு தென்கிழக்கு வெளிவழியாகச் சோழநாட் டுக்குக் கொண்டுபோய் அந்நாட்டை வளப்பம் செய்கின்றன.

கொங்குநாட்டின் பூநிலைப்படம் ஒன்று எழுதினால் அது ஒரு குயவன் விளக்கைப்போல் காணும். குயவன் மண் விளக்கு நாற்புறமும் மேடாகவும் மத்தியில் சமபாகமாகவும் மூக்குப்பாகம் திரியிடும் பள்ளமாகவும் இருக்கும். அதைப் போலவே கொங்குநாடும் நாற்புற மலையரண்களால் சூழ்ந்து நடுவில் சமநிலமாக இருந்து குழித்தலை ஓரமாகக் காவிரிநதி ஓடும் பள்ளமாக அமைந்திருக்கின்றது. விளக்கில் உள்ள எண்ணெயின் குணமெல்லாம் திரிமூலமாக அதன் மூக்கில் எரிகின்றதே அதைப்போலவே கொங்குநாட்டு வளப்பம் எல்லாம் உபநதிகளின் மூலமாக திரியாகிய காவிரிநதி வழியாக ஓடி சோழநாட்டு நன்செய் நிலங்களில் விளைபொருள்களாகப் பிரகாசிக்கின்றன.

மலையரண்களில் கிழக்குப் பக்கத்தில் சேர்வராயனும் கொல்லியும் சுமார் 4000 அடி உயரமும், வடக்கே தலைமலை பருகூர்மலைகள் 3000 அடி உயரம், மேற்கே வெள்ளி, நீலகிரி மலைகள் சுமார் 6000, 7000 அடியும் தெற்கே ஆனைமலை வராக மலைகள் சுமார் 6000 அடி உயரமும் இருக்கின்றன. இவைகள் செங்குத்தாக உயர்ந்து நிற்க அவைகளுக்கு அடுத்து உள்ள அடிவாரங்கள் அனேகமாக 1000 முதல் 1500 அடி உயரமுள்ள இடங்களாக இருக்கின்றன. அவ்வடிவாரங்களிலிருந்து நிலம் சிறிது சிறிதாக வாட்டமாகத் தாழ்ந்து நிற்கிறது. ஆகவே உபநதிகளும் காட்டாறுகளும் சுற்று அரண்களில் உற்பத்தியாகி நடுவில் ஓடும் காவிரியில் சங்கமம் ஆகின்றன. மேற்கில் பவானி நொய்யல் ஆம்ராவதியும், கிழக்கில் மணிமுத்தா நதியும் உபநதிகளாக இருக்கின்றன. இவைகளில் பவானிக்குச் சிறுவாணி, பாய்கரை, கல்லாறு குன்னூராறு மாயாறும் பல காட்டாறுகளும் உபநதிகள். நொய்யலுக்குக் காஞ்சிநதி, நீலிப்பள்ளம், வண்ணாற்றங்கரை, நள்ளாறு முதலியவை உபநதிகள். ஆம்ராவதிக்கு குதிரையாறு சண்முகநதி, குழகனாறு, உப்பாறு முதலியவை உபநதிகள். பொதுவாக இவ்விதம் நிலவாட்டம் இருக்க, சில சிற்றாறுகள் மாத்திரம் மேற்கே பாலைக்காட்டுக்கணவாய் வழியாக ஓடி மேற்குக் கடலுக்குப் போகின்றன.

கொங்குநாடு நாற்புறமும் மலையரணால் சூழப்பட்ட ஒரு சமநிலம் என்று கண்டோம். இதனை இயற்கையிலேயே வரையறைக்கப்பட்ட ஒரு நிலபாகமாகச் சொல்லலாம். மத்திய பாகம் முழுவதும் சமநிலமாக இருந்தாலும் சில தனிக் குன்றுகள் ஆங்காங்கு நிற்கக் காணலாம். கடவுளிடத்து அன்பு மிகுந்த இந்நாட்டார்கள் இம்மலைகளை ஆலயங்களுக்குத் தகுந்த இடங்களாகக்கொண்டு அழகிய ஆலயங்களைக் கட்டியுள்ளார்கள். ஆங்காங்கே வழிபாட்டிற்காகப் பெருந்தொகையினராக மக்கள் செல்வதுண்டு. அவ்விதமான சிறுமலைகளில் சிறந்தவை வருமாறு:—

அவிநாசி தாலூக்கா:— ஓதிமலை, குருந்தமலை, பெட்டத்தம் மன்மலை.

கோவை தாலூக்கா:— சிரவணம்பட்டிக்கரடு (இரத்தினகிரி,) பாலமலை, குருடிமலை, மருதமலை, வெள்ளிமலை, ஐயாசாமி மலை, பெருமாள்மலை.

பொள்ளாச்சி தாலூக்கா:— கிணற்றுக்கடவுமலை (பொன் மலை) ஆனைமலைக்கரடு.

உடுமலைப்பேட்டை:— திரிமூர்த்திமலை.

பல்லடம்:— செஞ்சேரிமலை (தென்சேரி) முத்துக்குமாரமலை, அலகுமலை.

தாராபுரம்:— ஊதியூர்மலை, சிவமலை.

ஈரோடு:— சென்னிமலை, பெருமாள்மலை, அரசண்ணாமலை, கதித்தமலை.

கோபி:— குன்னத்தூர்மலை, தவளகிரி.

பவானி:— ஊராய்ச்சிக்கோட்டை, பாலமலை.

கொள்ளேகாலம்:— மாதேசுவரன்மலை.

திருச்செங்கோடு:— திருச்செங்கோடு, சங்ககிரி, மோரூர் கரடு.

இராசிபுரம்:— கொங்கணமலை.

சேலம்:— சேர்வராயன்மலை.

நாமக்கல்:— நாமக்கல், கொல்லிமலை, கபிலமலை.

கரூர்:— தான்தோன்றி, வெண்ணெய்மலை, வேலாயுதமலை, (புகழிமலை).

பழனி:— பழனி, ஐவர்மலை, கொண்டரங்கிமலை.

இக்குன்றுகளில் பெரும்பாலும் முருகக்கடவுள் சன்னிதிகளைக் காணலாம். சிலவற்றில்தான் திருமால் சன்னிதிகள் உண்டு. பலவற்றிற்குத் திருப்புகழ்கள் இருக்கின்றன.

சுற்றிலுமுள்ள மலைச்சரிவுகளிலும் அடிவாரங்களிலும் காடுகள் இருக்கின்றன. ஆற்றோரங்களிலும் பள்ளத்தாக்கு களிலும் சிறிது நன்செய் நிலங்கள் இருக்கின்றன. ஏனைய பாகங்கள் புன்செய் நிலங்களாகவும் சிறுகற்களும் பாறைகளும்

உள்ளவைகளாகவும் இருக்கின்றன. புன்செய் நிலத்தில் கரிசலும் செம்மண்ணும் உண்டு. மழை வருடம் 25-முதல் 30 அங்குலம் வரையில்தான் பெய்வதால் விளைவு மற்ற கிழக்கு நாடுகளைப்போல் செழிப்பானதல்ல. பயிரிடுவோருக்கு அதிகம் பாடுபட்டால்தான் கூலி கிடைக்கும். அத்தன்மைய அமைப்பு வாய்ந்தது இந்நாடு.

## 6. பண்டைய நிலை.

உறுதியாகச் சரித்திரம் என்று சொல்லக்கூடிய காலம் ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்குட்பட்டது தான். அதற்கு முந்தி நாடு இருந்த நிலைமையும் நாட்டு மக்கள் இருந்த நிலைமையும் நாம் உறுதியாகக் கண்டு பிடிக்கத்தகுந்த ஆதாரங்கள் இல்லை. ஆகவே அக்காலத்தில் மனிதர்கள் எவ்விதமான ஆட்சியைக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லுவது கடினம். இக்காரணத்தைக் கொண்டு சரித்திர ஆராய்ச்சியாளர்கள் காலத்தை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகள் சரித்திர காலம், சரித்திரத்திற்கு முந்தியகாலம் என்னும் இரண்டே ஆகும்.

சரித்திரத்திற்கு முந்திய காலமானது பல்லாயிர ஆண்டுகள் கொண்டது. அதனுடைய கால அளவைக் கணிக்க முடியாது. அது உலகம் ஏற்பட்டது முதல் கொண்டு 2500 ஆண்டுகளுக்கு முந்தியவரை உண்டான பல்லாயிர வருடகாலமாகும். அக்காலத்தை ஆண்டு ஆண்டாகப் பிரித்துக் கூறமுடியாது. ஆகவே பெருங்கால அளவைகளாக வகுத்திருக்கிறார்கள். அக்காலத்தைப் பிரிப்பதற்கு ஏதுவாக அவ்வக் காலத்தில் இருந்த மக்கள் என்னென்ன சாமான்களை உபயோகித்து வந்தார்களோ அந்தந்த சாமான்களின் பெயர்களைக் கொண்டு பாகுபாடுகளை ஏற்படுத்தி அப் பிரிவுகளை அப்பெயர்களால் குறித்திருக்கின்றார்கள். உதாரணமாக கற்களாலே ஆக்கப்பட்ட கத்தி முதலிய ஆயுதங்களை உபயோகித்து வந்த ஜனங்கள் வாழ்ந்த காலத்தைச் சிலாகாலம் அல்லது கற்காலம்

என்று கூறுவார்கள். அக்காலத்து மக்களுக்கு உலோகங்கள் இன்னவை என்ற சங்கதியே தெரியாது. ஆகையால் தான் அவர்கள் கூர்மையான கற்களையே பதப்படுத்தி அவைகளை ஆயுதங்களாக உபயோகித்து வந்தார்கள்.

அச் சிலாகாலத்திலும் இரண்டு மூன்று பிரிவுகள் உண்டு. அவை ஆதி சிலாகாலம், மத்திய சிலாகாலம், பிந்திய சிலா காலம் என்பவை. பிறகு மனிதர்கள் சிறிது தேர்ச்சியடைந்து தங்கள் அறிவை அபிவிருத்தி செய்து உலோகங்களைக் கண்டு பிடிக்கலானார்கள். கல்லினால் செய்யும் ஆயுதங்கள் வேண்டிய அளவு கூர்மையாக இல்லை யென்பதைக்கண்டு, உலோகங் களால் ஆயுதங்களை செய்யலானார்கள். முதலில் வெங்கலத் தால் கத்தி முதலிய ஆயுதங்களைச் செய்தார்கள். அதற்கு வெங்கலக் காலம் என்று பெயர். பிறகு இரும்பைக் கண்டு பிடித்தார்கள். இரும்பு மிகவும் உபயோகமுள்ள உலோகம். அதனால் தங்கள் குடித்தனத்துக்கு வேண்டிய ஆயுதங்கள் முதலிய பொருள்களைச் செய்யலானார்கள். அக்காலத்திற்கு இரும்புக் காலம் என்று பெயர். இவ்விதமாகச் சரித்திர காலத்திற்கு முந்திய பண்டைக் காலத்தை மக்கள் உபயோ கித்து வந்த பொருள்களின் பெயர்களை வைத்துக் கால அள வையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

## சிலா காலம்.

கொங்கு நாட்டிலுள்ள பண்டைக் காலத்துப் பொருள் களைக் கண்டு பிடித்து ஆராய்ந்து பார்த்ததில் சிலா காலத் துப் பொருள்கள் சில கிடைத்திருக்கின்றன. ஆதி சிலா காலம் மத்திய சிலா காலம் இந்த இரண்டு காலத்துப் பொருள் கள் எவையும் கிடைக்கவில்லை. ஆனால் பிந்திய சிலாகாலத் துப் பொருள்கள் அநேகம் கிடைத்திருக்கின்றன. அவை களுடைய வேலைப்பாடும் தக்ஷிணத்தில் மற்ற பாகங்களில் உள்ளவைகளைப் பார்க்கிலும் சிறந்ததாக இருக்கின்றது.

பிந்திய காலத்துப் பொருள்களெல்லாம் அநேகமாக காவேரிக்குக் கீழ்ப்பாகத்தில் கிடைத்தன. அவைகள் சம நிலத்தில் கிடைக்கவில்லை. பெரும்பான்மையாக மலைகள் மீதே கிடைத்தன. ஒருவேளை அக்காலத்து மக்கள் மலைகள் மீது அதிகமாக வாசஞ்செய்திருக்கலாம். முக்கியமாக அவைகள் அகப்பட்ட இடங்கள் சேர்வராயன்மலை, கல்ராயன்மலை, கொல்லிமலை, வட்டமலை, மேலகிரி, குத்திராயன்மலை முதலிய மலைகளாகும்.

அம்மலைகளின் மீது அகப்பட்ட பொருள்கள் உளி போன்றவைகளும், சுத்திபோன்றவைகளுமே. உளிகள் கூர்மையாகவும், சுத்திகள் தடிப்பாகவும் உள்ளன. சேலம் ஜில்லாவில் பொறுக்கி எடுத்துச் சென்னை கண்காட்சி சாலையில் வைத்திருக்கும் பொருள்களில் 70 உளிகளும், 5 சுத்திகளும், 3 உரைகல்களும், ஒரு ஆட்டாங்கல்லும் ஒரு லிங்கம் போன்ற கல்லும் இருக்கின்றன. குடித்தனத்திற்கு உபயோகமாகக் கூடிய மற்ற பொருள்கள் கிடைக்கவில்லை. ஆகவே அக்காலத்து மக்கள் எவ்விதம் உண்டார்கள், எவ்வாறு ஆடை அணிந்தார்கள், என்பதைக் காட்டக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் உரை கல்லினுடைய தன்மையைப் பார்த்தால் ஒருவிதமான நெசவுத் தொழில் அக்காலத்து மக்களுக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்று ஊகிக்க முடியும். இவ்வுரைகல் என்பது துணிகளைத் தேய்த்துப் பளபளப்பு உண்டாக்குவதற்காக முற்காலத்தார் உபயோகித்து வந்த ஒரு கல்லாகும்.

மேலே சொல்லிய ஆயுதங்களை வெண்கற்செங்கல் முதலிய கற்களால் செய்திருக்கிறார்கள். இப் பொருள்கள் பருகூர் என்ற இடத்தில் மாத்திரம் பெரும்பான்மையாகக் கிடைத்தன. காடுகளில் வசிக்கும் மலையாளிகள் இப்படிப்பட்ட பண்டை ஆயுதங்களைப் பொறுக்கி எடுத்துத் தங்கள் ஆலயங்களில் வைத்துப் பூஜித்து வருவதுண்டு. பருகூரில்

அநேக ஆயுதங்கள் ஒரே இடத்தில் கிடைத்தன. அக்காரணத்தைக்கொண்டு அங்கே முற்காலத்தில் ஒரு ஆயுதச்சாலை இருந்திருக்கலாமென்று ஆராய்ச்சியாளர்கள் ஊகிக்கிறார்கள். சேர்வராயன் மலையின்மேல் அக்காலத்துப் பானைத் துண்டுகளும் சில கிடைத்தன. பருகூரில் கிடைத்த சில உளிகளின் வேலைப்பாடு நன்றாக இல்லை. ஒருவேளை அவைகள் தள்ளிவிடப்பட்டவைகளாக இருக்கலாம்.

## இரும்புக்காலம்.

**இரும்புக்காலம்** என்பது இரும்பின் உபயோகத்தை அறிந்து அதனால் கருவிகளைச் செய்து உபயோகித்து வந்த காலம் ஆகும். அக்காலத்தில் ஜனங்கள் உபயோகித்து வந்த பல சின்னங்கள் கொங்கு நாட்டில் அகப்பட்டிருக்கின்றன. அச்சின்னங்கள் பலவிதமாய் இருக்கின்றன. பாண்டவர் குழிகள் (Cairn) கிஸ்துவேன் (Kistvaen,) டால்மென் (Dolmen or Cromlech) கல்வட்டம் (Stone circle) வீரக்கல், மாஸ்திக்கல் என்று சொல்லும் பலவேறு சின்னங்கள் இங்கே அகப்பட்டிருக்கின்றன. அச்சின்னங்களில் க்ராம்லெக் (Cromlech) என்பது நான்கு செங்குத்தாய் நிறுத்தப்பட்ட பலகைக் கற்களால் ஆக்கப்பட்டு ஒரு பெட்டிபோல இருக்கும். கெய்ர்ன் (Cairn) என்பதில் அவ்விதமான கல் பாவப்பட்டிருக்காது. ஆனால் அதில் பெரிய மண்சாடி (தாழி) இருக்கும். வெளிப் பார்வைக்கு கெய்ர்ன் (Cairn) க்ராம்லெக் (Cormlech) என்பவை ஒரே மாதிரியாய்த் தோன்றும். அவை மண்மேடுகளாகவும் சுற்றிலும் வட்டமாகக் கற்கள் வைக்கப்பட்டும் காணப்படும். அவை 3 அடிமுதல் 20 அடி குறுக்களவும், 1 அடிமுதல் 4 அடி வரை உயரமும் கொண்டிருக்கின்றன. சில சின்னங்களில் நாற்புறங்களிலும் நான்கு பெரிய கற்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. க்ராம்லெக்களின் வாசல் கிழக்குப் பார்த்திருக்கும். வாயிலில் ஒரு பெரிய பலகைக்கல் வைத்திருப்பது உண்டு.

க்ராம்லெக் (Cormlech) களில் சிறிய மண்சாடிகளும் இரும்புக் கருவிகளும் உள்ளன. வெந்த எலும்புகள் மாத்திரம் சிலவற்றில் கிடைக்கும். அவைகளின் அளவு பலவிதமாய் இருக்கும். சில 3 அடி நீளமும் 2 அடி அகலமும் 2 அடி ஆழமும் கொண்டிருக்கும். சில 5 அடி நீளமும் 3½ அடி அகலமும் 4 அடி ஆழமும் கொண்டிருக்கும்.

கெய்ர்ன் (Cairn) களில் பெரிய சாடிகள் உண்டு. அவைகளில் மனித எலும்புகளும் சிறுபாத்திரங்களும் இரும்புக்கருவிகளும் நகைகளும் கிடைத்திருக்கின்றன. சவங்களின் கால்களை மடக்கித் தலையை முழங்கால்களுக்குள் அமுக்கிய வண்ணமாய் சாடிகளில் பிணங்களை வைத்திருக்கிறார்கள். சிலவற்றில் எலும்புகள் பலவிதமாய் அடுக்கியிருப்பதால் ஒருவேளை சாடி முழு மனித உடம்பையும் கொள்வதற்கு போதாததினால் அவ்வுடம்பின் அவயவங்களை முறித்துச் சாடிக்குள் வைத்திருக்கலாம். சில கெய்ர்ன் களில் ஒன்றும் இருப்பதில்லை. சிலவற்றில் சிறு கருவிகளும் உடைந்த எலும்புகளுமே காணலாம். ஒருவேளை சுட்டு எரித்த பிணத்தின் எலும்புகளை அச்சாடிகளில் போட்டிருக்கலாம்.

பெரிய சாடிகள் அல்லது தாழிகள் தொட்டால் உதிர்ந்து போகும்படியாக அவ்வளவு துர்ப்பலமாக இருக்கின்றன. பூமியிலுள்ளதைத் தோண்டி எடுத்தால் அவைகளைச் சுற்றி உள்ள மண்ணை எடுத்த உடன் அவை உதிர்ந்து விடுகின்றன. பார்வைக்கு அவை பெரிய சால்கள்போல் இருக்கும். சில செம்மண்ணாலும் சில கருமண்ணாலும் செய்யப்பட்டிருக்கின்றன. மேல்பாகம் பளபளப்பாக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் கிடைத்த நகைகள் மாலைகளாகவும் வளையல்களாகவும் இருக்கின்றன. இரும்புச் சாமான்களில் முக்கியமாய்க் கத்திகள் கிடைத்தன. அவைகள் அநேகமாக உடைந்து இருக்கின்றன.

கொங்குநாட்டில் கெய்ர்ன்கள் பெருந்துறைக்கு 6 மைலிலுள்ள நல்லாம்பட்டியிலும் பல்லடத்துக்கு 13 மைலிலுள்ள

கண்டியன் கோயிலிலும் அண்ணூருக்கு அடுத்த கஞ்சப் பள்ளியிலும் பொள்ளாச்சிக்கு அடுத்த நாட்டுக்கல்பாளையத் திலும் இருந்தன. பாண்டவக் குழிகள் பேரூரிலும் வெள்ள லூரிலும் அண்ணூருக்கு அடுத்த எல்லைப்பாளையத்திலும் இருந்தன. கிஸ்ட்வேன் (Kistavaen)கள் முத்துக்கோனன் பட்டியிலும், உடுமலைப்பேட்டைக்கு அடுத்த பூண்டியிலும் இருந்தன. டால்மென் (Dolmen) கள் இந்நாட்டில் அதிக மாக இருக்கின்றன. மேட்டுப்பாளையத்திற்கு அருகில் 100 டால்மென் (Dolmen) கள் கிடைத்தன. தாராபுரத்தில் அவை அநேக இடங்களில் இருக்கின்றன. வீரக்கற்களும் மாசதிக் கற்களும் பல கிராமங்களில் பாதைகள் பிரியும் இடங்களில் காணலாம். கோவை நகரில் பெரிய குளத்திற்குக் கிழக்கே குளத்து மேட்டில் ஒரு பெரிய வீரக்கல் இருக்கிறது. பேரூரில் அணைக்கு அடுத்தாற்போலும் ஆலமரங்களின் கீழும் சில வீரக்கற்கள் இருக்கின்றன. சிறுமுகைக்கு அடுத்த கூத்தா முண்டியில் ஒரு பெரிய விரக்கல் இருந்தது. இன்னும் பல கிராமங்களில் வீரக்கற்களும் மாசதிக்கற்களும் இருப்பதைப் பார்க்கலாம்.

கொங்குநாடு முழுவதும் இவ்விதமாகப் பண்டையகாலத் துச் சின்னங்கள் சிதறிக்கிடப்பதைப் பார்க்குமிடத்து, அக் காலத்தில் இந்நாட்டில் குடியிருந்த மக்கள் அடைந்திருந்த நாகரீக நிலைமையை நாம் ஒருவாறு அறியக்கூடும். சரித்திர காலத்திற்கு முந்தி வாழ்ந்த ஜனங்கள் இறந்தவர்களுக்குப் பலவித முறைகளில் சாமக்கிரியைகள் செய்து வந்தார்கள். சவங்களை அப்புறப்படுத்தும் முறைகளை மணிமேகலை என் னும் பண்டைக்காலத்து நூலில் அடியிற்கண்டவாறு கூறப் பட்டுள்ளது :—

“ சுடுவோர் இடுவோர் தொடுகுழி படுப்போர்
தாழ்வையின் அடைப்போர் தாழியில் கவிப்போர் ”

இவ்வடிகளில் பலவித காலத்துப் பலவித நாகரிகம் கொண்டவர்கள் கையாண்டுவந்த முறைகள் எல்லாம் கூறப்பட்டுள்ளன. அவைகளில் தாழியில் கவிப்பது என்பது மிகவும் பிரபலமாக இருந்தது எனலாம். இதனைப் புறநானூற்றில்

> " தேவர் உலகம் எய்தினன் ஆதலின்
> அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி "

எனக் கூறப்பட்டிருத்தல் காண்க. இறந்தவர்களை அடக்கம் செய்ததாழிகளுக்கு முதுமக்கட்டாழி என்று கூறப்பட்டுள்ளது.

அவ்விதத் தாழிகளில் நாம் முன்னமே கூறியுள்ளபடி இறந்தவர்களுடைய எலும்புகளேயன்றி அவர்கள் மனதுக்கு உவந்த பொருள்களையும் புதைத்து வைப்பது வழக்கம். கொங்கு நாட்டில் கிடைத்த பற்பல தாழிகளில் எரித்த எலும்புகளோடு மட்பாத்திரங்களும் கிண்ணங்களும் செம்புகளும் கிண்டிகளும் தட்டங்களும் இருந்தன. வெண்கலத்தால் செய்யப்பட்டவை மிகுந்த வேலைத்திறத்தைக் காட்டக் கூடியதாயிருந்தன. வெங்கலமும் பலவிதக் கலப்புகள் கொண்டு ஆக்கப்பட்டிருந்தது. ஆகவே அக்காலத்து மனிதர்களுக்கு உலோகப் பயிற்சி தெரிந்து இருந்தது. இரும்புக் கருவிகளும் சிறந்த வேலைப்பாடு கொண்டிருந்தன. சில இடங்களில் பொன் கிரீடங்களும் கிடைத்தன. அவைகள் பிரபுக்களாலும் அரசர்களாலும் அணியப்பெற்றிருக்கவேண்டும். வெண்கலப் பாத்திரங்கள் புலிபோன்ற உருவங்கள் செதுக்கப்பட்ட கால்களைக் கொண்டிருந்தன. அவைகளின் மூடிகளில் பூவேலையும் சேவல் உருவங்களையும் அவைகொண்டிருந்தன. மேலும் வெண்கலச் சாடிகள், கிண்ணங்கள், கரண்டிகள், வளையல்கள், மாலைகள், சலங்கைகள், கத்திகள், மரப்பிடிகொண்ட ஈட்டிகள், அம்புகள், குத்து ஈட்டிகள், மண்வெட்டிகள், உளிகள் முதலானவைகளும் கிடைத்தன. தாழிகளில் இவ்விதப் பொருள்கள் கிடைப்பதைப் பார்க்குமிடத்து, வெற்றிபெற்றுப் புகழ் அடைந்த வீரர்களையும்

குறுநில மன்னர்களையும் அவைகளில் புதைத்திருக்கக் கூடு மென்று ஊகிக்கலாம். குறித்த இடங்களில் பலதாழிகள் கிடப்பதை ஆராய்ந்து பார்த்தால், ஏதோ ஒரு காலத்தில் அவ்விடங்களுக்கருகில் ஒரு போர் நேரிட்டிருக்கக்கூடும் என் றும் அப்போரில் இறந்த வீரர்களை அவ்வாறு அடக்கம் செய் திருக்கக்கூடும் என்றும் எண்ண இடமுண்டு.

பாண்டவர் குழிகள் பேரூருக்கு அருகில் இருந்ததாகக் கூறினோம். அவைகள் பேரூரில் நொய்யல் ஆற்றைத் தாண்டிச் சித்திரச்சாவடிக்குப் போகும் இட்டேரி வழியில் இருந்தன. அவைகளின் உருவம் பேரூர்ப் புராணம் 2-வது பதிப்பு 50-வது பக்கத்தில் அச்சிடப்பெற்றிருக்கிறது. மேல் பாகத்தில் பலகைக் கற்களால் மூடப்பட்ட அறைகள் மூன்று இருந்தன, பலகைக்கல் ஒவ்வொன்றும் 3 அடி அகலமும் 3 அங்குல கனமும் கொண்டிருந்தது. அவ்வறைகளுக்குக் கீழே மண்தாழிகள் மூன்று இருந்தன. இவைகள் பூமி மட்டத்திற்குக் கீழே புழுதிமண்ணில் இருந்தன. சமீபகாலத் தில் அவை இருந்த நிலத்தை அரசாங்கத்தாரிடமிருந்து பெற்ற ஒரு குடியானவர் அக்கற்களை எல்லாம் எடுத்து வேறு வகைக்குப் பயன்படுத்திக்கொண்டு நிலத்தைச் சமன் படுத்தி உழுதுவிட்டார். ஆகவே, இப்பொழுது அக்குழிகளைக் காண முடியாது. நம் நாட்டுச் சம்பிரதாயப்படி, அக்குழிகளை இதிகாச புராணங்களோடு சம்மந்தப்படுத்தி அவைகளைப் பாண்டவர் குழிகள் என்று வழங்க ஆரம்பித்துவிட்டார்கள். உண்மையில் அவைகள் மாண்டவர் குழிகள் ஆகும்.

மேலும் இறந்தவர்களைப் பெருமைப் படுத்துவதற்காகக் கற்கள் நட்டு வந்தார்கள் என்று முன்னமே சொன்னோம். இவ்வழக்கம் புறநானூற்றிலும் புறப்பொருள் வெண்பா மாலை யிலும் கூறியிருக்கக் காணலாம். போர்களில் புகழோடு விழ்ந்த ஆடவனையோ, கணவன் இறக்க அவனுடன் உடன் கட்டை ஏறின கற்பிற் சிறந்த பெண்ணையோ நினைவூட்டும்

பொருட்டு உருவப்படுத்திச் சிலை நட்டு வணங்கி வந்தார்கள். அவைகளுக்கு வீரக்கல், மாசதிக்கல் என்ற பெயர்கள் வழங்கி வந்தன. இவ்வழக்கம் தமிழ் நாடேயன்றி கன்னட நாட்டிலும் பெரும்பான்மையாக இருந்தது. கர்ண பரம்பரைகளை ஆராயும்போது ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்கு முந்தியும் கூட இவ்வழக்கம் இந்நாட்டில் இருந்து வந்தது என அறியலாம்.

## 7. பண்டைய குடிகள்.

கொங்கு நாட்டைச் சுற்றிலும் பெரும் பாகங்கள் மலைத் தொடர்களாக இருப்பதை அறிவோம். அம்மலைத் தொடர்கள் உயர்ந்த மரங்கள் முளைத்த காடுகளாக இருக்கின்றன. அக் காடுகளில் தேக்கு முதலிய பெரும் மரங்களும், புலி, சிறுத்தை, யானை முதலிய காட்டு விலங்குகளும், மயில், வல்லூறு, போன்ற அழகிய பறவைகளும், பாம்பு, உடும்பு போன்ற ஊர்வனகளும் நிரம்ப இருக்கும். அன்றியும் அழகிய சுனைகளும், அருவிகளும் செழிப்பு செய்கின்றன. இத்தன்மைய நிலப்பகுதிகளில் சாதாரணப் பொதுமக்கள் வாழுதல் அரிது. அங்கு மலைபடுபொருள்கள் சிறப்பாகக் கிடைக்கும். அவைகளைக் கொண்டு விலங்குகளோடு உறவு பூண்டு வாழும் மக்களும் உண்டா என்று கேட்கலாம். நீர் அருவிகள் ஓடுகின்ற பள்ளத் தாக்குகளுக்கு அருகே பாறைகளுக்கிடையில் சின்னஞ் சிறு மேட்டிடங்களில் வட்டவடிவமான ஓலைக் குடிசைகளைக் கட்டிக் கொண்டு அவைகளில் பிழைக்கும் சில வகுப்பார்களை அங்கே காணலாம். அவர்களைக் கண்டால் காட்டு விலங்குகளோ மானிட உருவில் திரிகின்றன என்று சந்தேகிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆட்கள் தான் நமது நாட்டுப் பண்டைய குடிகள். சென்ற ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாகரீகம் இன்னதென்று அறியாமல் இந்தக் காட்டு மக்கள் வாழுகிறார்கள். எத்தனை முயற்சி எடுத்தாலும் இவர்களைச் சீர்திருத்துவது கடினமாக இருக்கிறது.

இவ்வாறாக மலைகளில் வாழும் குடிகள் ஓரே வகுப்பினர் அல்ல. பல வகுப்பினர்களாகப் பிரிவு பட்டு தங்கள் தங்கள் பழக்கவழக்கங்களை நழுவ விடாமல் பாதுகாத்து வருகிறார்கள். கொங்கு நாட்டு மலைகளில் வாழும் இக்காட்டு மக்கள் நாட்டு மக்களோடு உறவு கொள்ளாமலும் உரிமைகளை இழக்காமலும் வாழ்ந்து வருவது வியப்பு அல்லவா? முதலில் அவர்கள் வகுப்புப் பேர்களை மட்டும் குறிப்போம். கொங்கு நாட்டின் மேற்கே உள்ள வெள்ளிமலைத் தொடர்களில் இருளர், மலசர் முதலிய வகுப்பார்கள் சின்னஞ் சிறு ஊர்களைக் கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் ஊர்களின் பெயர் பதி எனப்படும். வெள்ளைப் பதி, மருதைப் பதி முதலியவை அப் பெயர்கள். இனி வடமேற்கே உள்ள நீலகிரிச் சரிவுகளில் வாழ்பவர்கள் தொதவர், கோத்தர், குறும்பர், படுகர் என்ற வகுப்பார்கள். இவர்களில் தொதவர், மிகவும் பண்டைய குடிகள். இவர்களுடைய பழக்க வழக்கங்கள் ஏனைய மலை ஜாதியாரிலும் வேறு பட்டவை. சைத்தியம் போன்ற வளைவான குடிசைகளில் வாழ்வார்கள். எருமை இவர்களுக்கு மிகப் பிரியமான கால்நடை. இவர்கள் மொழி மிகப்பண்டைய மொழி. தமிழின் ஒரு கூறு என்றுங்கூட கூற முடியாது. அவர்களைப் போலவே கோத்தர் என்ற வகுப்பாரும் உள்ளார். ஆனால் படுகர் என்ற வகுப்பார் தமிழ் நாட்டு மக்கள் அல்லர். அவர்களுடைய பெயர் குறிக்கிறபடி வடக்கே இருந்து வந்தவர்கள். கன்னடச்சார்பான மொழியைப் பேசுகிறார்கள். இனி கொங்கு நாட்டின் வடக்கே உள்ள மலைகள், தலைமலை, தாளவாடி, திம்பம், மாதேஸ்வரன் மலை முதலியவைகள் — இவைகளிலே பெரும்பாலும் கன்னடியக் குடிகளே வசிக்கிறார்கள். இனி கொங்கு நாட்டின் கிழக்கெல்லையில் சேர்வராயன் மலை கொல்லிமலை முதலியவைகள் இருக்கின்றன. இவைகளில் மலையாளிகள் என்ற ஒரு வகுப்பார் வசிக்கிறார்கள். அவர்கள் பேசுகிற மொழி தமிழ்தான். ஆனால் உச்சரிப்பு சிறிது மாறி

யிருக்கும். அவர்களுடைய வீடுகள் வட்டவடிவமாக கட்டப் பட்டிருக்கும். மேல் கூரை திருப்பி வைத்த பம்பரம் போல இருக்கும். இவர்களுடைய ஊர்கள் பல நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கும். ஏற்காட்டுக்கருகே சேர்வராயனையும், கொல்லி மலையிலே அறப்பளீசுரரையும் தொழுவார்கள். மலைகளின் மேல் உள்ள சம நிலங்களில் தினை கம்பு முதலிய தானியங் களைப் பயிரிட்டுப் பிழைப்பார்கள். இனி, கொங்கு நாட்டின் தெற்கே உள்ள ஆனைமலைத் தொடர்களில் பல பகுதிகளிலும் பல வகுப்பார்கள் வாழுகிறார்கள். இம்மலைகள் மிக உயர மானவை. ஆம்ராவதி, பாலாறு, முதலிய ஆறுகள் உற்பத்தி யாகின்றன. இம்மலைகளிலே தேக்கு, ஈட்டி, மருது, முதலிய விலை பொருந்திய மரங்கள் விளைகின்றன. யானைகள் அதிகம். புலி முதலிய கொடிய விலங்குகளும் அதிகம். ஏலக்காய், மெழுகு, தேன், குங்கிலியம், மஞ்சள், இஞ்சி முதலிய மலைப் பொருள்கள் ஏராளமாய் விளைகின்றன. உயர்ந்த பீட பூமிகள் 7000 - அடிவரை உயர்ந்திருக்கின்றன. அங்கே நூறு சதுர மைல் வரையில் வனாந்திரம் இருக்கின்றது. பள்ளத்தாக்கு களோ 2000 - முதல் 3000 அடி வரை உயர்ந்திருக்கும். அவ் விடங்களில் பண்டைய குடிகள் நிரம்ப வசிக்கிறார்கள். சுமார் 2000 - குடும்பங்கள் இருக்கலாம். சமீபத்தில் தோன்றியிருக் கும் காப்பி, தேயிலைப் பண்ணைகளில் இவர்களுக்கு வேலை கிடைக்கும். ஆனால் பெரும்பான்மையான பேர் காட்டிலாகா வில் வேலை செய்கிறார்கள்.

ஆனைமலைத் தொடர்களில் நான்கு விதமான குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் முதுவர், காடர், மலசர், புலையர் என்பவர்கள். இவர்கள் வசிக்கும்படியான மலைப் பகுதிகள் நான்கு தாக்குகளாய் இருக்கின்றன. கிழக்கே உள்ள தாக்கு உடுமலைப்பேட்டை அடிவாரத்திலிருந்து மூனாருக்குப் போகும் வழியிலுள்ளது. இதற்கு அஞ்சநாட்டுப் பள்ளத்தாக்கு என்று

பெயர். இரண்டாவது தாக்கு திருமூர்த்தி மலைக்குத் தெற்கே உள்ள மலைத் தொடர். இங்கே ஒரு சிறு நீர்வீழ்ச்சி உண்டு.

மூன்றாவது தாக்கு வால்பாறைப் பீடபூமியாகும். இந்தப் பீடபூமி தற்போது செழிப்பான தேயிலைத் தோட்டங்கள் அடங்கிய பிராந்தியமாக இருக்கின்றது. அங்கே வால்பாறைத் தோட்டங்களும் எட்டு முடிகளும் இருக்கின்றன. சம நிலங்களிலிருந்து குடிமக்கள் பண்ணைத் தொழிலாளிகளாக வந்து விட்டபடியால் மலசர் முதலிய காட்டாட்கள் மற்றப் பகுதிகளுக்குக் குடியேறி விட்டார்கள். நான்காவது தாக்கு தூணக் கடவு என்று பெயர். இது 2000 - அடி அளவில் உள்ளது. தேக்கு ஈட்டி முதலியவை மிகுதி. மூங்கில் விளைவு அதிகம். யானைகள் நிரம்ப இருக்கின்றன. யானை பிடித்துப் பழக்குவது ஓர் தொழில் ஆகும். அந்தத் தொழிலில் பல குடும்பங்கள் பிழைக்கின்றன. தூணக் கடவு ஆற்றோரத்தில் சிற்றூர்கள் உண்டு. அவ்வூர்களைப் பாடி என்பார்கள். இங்கே வசிக்கும் மக்களின் பெயர்கள் மலசர், மலை மலசர், காடர், புலையர் என்பார்கள். மலசர் என்றால் மலையில் வாழும் மக்கள் என்று பொருள். காடர் என்றால் காட்டில் வாழும் மக்கள் என்று பொருள். இவர்களுடைய பழக்க வழக்கங்கள் பெரும்பாலும் சீர்திருத்தம் அடையவில்லை. இவர்கள் எல்லோரும் காட்டிலாகா வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். தங்கள் பழக்க வழக்கங்களை விடுவது கடினம். கிறிஸ்து மிஷனரிகளின் தூண்டுதலும் இவர்களிடம் பலிக்கவில்லை.

மேலே கூறிய மலை வாழும் மக்களுக்கும் கொங்கு நாட்டில் சமபரப்பில் வசிக்கும் மக்களுக்கும் வேறுபாடுகள் நிரம்ப உண்டு. முகத்தினுடைய அமைப்பு, மண்டை ஓட்டின் அளவு, உடலின் பருமன் இவைகளெல்லாம் வேற்றுமைப்பட்டிருக்கக் காண்கிறோம். பழக்க வழக்கங்களும் வேறே. ஆகவே தமிழ் மக்கள் கொங்கு நாட்டில் குடியேறினதற்கு வெகு காலத்திற்கு முந்திய இந்த காட்டு மக்கள் இந்த நாட்டில் இருந்திருக்க

வேண்டுமென்று ஊகிக்கப்படுகின்றது. இவர்களே கொங்கு நாட்டின் மிகப் பண்டைய மக்கள் என்று அறியவேண்டும். நாகரீகமும் படிப்பும் இல்லாத குறைவினால் இவர்களுடைய பண்டைய வரலாறு நாம் அறிந்து கொள்வதற்கு வகையில்லை. இவர்கள் உபயோகப்படுத்தும் தட்டு முட்டுச் சாமான்கள், வழிபாடு செய்யும் தெய்வக் கொள்கைகள் முதலியவைகளை ஆராய்ச்சி செய்யும் வகையில் ஒன்றிரண்டு வரலாற்றுக் கருத்துக்கள் கிடைக்கலாம். மற்றப்படி வேறு கருத்துக்கள் நமக்குக் கிடையா.

## 8. நாட்டுப்பழைய குடிமக்கள்.

இதுவரை காட்டுக்குடிமக்களைப்பற்றிக்கூறினோம். இனி நாட்டுக்குடிமக்களைப்பற்றிச் சிலகருத்துக்கள் கூறவேண்டியது அவசியமல்லவா? நாட்டுக்குடிமக்களிலே தற்போது பல வகைப்பட்ட மக்களிருக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து குடியேறியிருக்கும் வகுப்பார்கள் அளவற்றவர்கள். அவர்களிலே கன்னடம், தெலுங்கு பேசுகிறவர்கள் அளவில்லாதவர்கள். ஆகவே கொங்குநாடு தற்போது ஒரு கலப்புநாடாகிவிட்டது. பிறமொழிபேசும் மக்களை விலக்கிவிட்டு தமிழ்மொழிமட்டும் பேசும் மக்களை எடுத்துக்கொண்டு அவர்களுடைய பண்பாடுகளை ஆராய்ந்து பார்க்கின் மக்களைப் பொருத்தின மட்டில் கிடைக்கும் வரலாற்றை ஒருவாறு அறியலாம். அவ்வகைப்பட்ட ஆராய்ச்சியில் கிடைக்கும் சில கருத்துக்களை இங்கே ஒரு சிறிது எழுதுவோம். அதனாலே நாட்டினுடைய மக்கட் சரிதம் ஒரு சிறிது விளங்கக்கூடும்.

கொங்கு நாட்டில் சமபரப்பில் வாழும் குடிமக்களிலே இரண்டு பெரிய தொகுதிகள் இருக்கின்றன. அவர்கள் இருவரும் நாட்டுப்பழங்குடிகளே. அவர்கள் நாட்டிற்கு உரிமை உள்ளவர்கள் என்று கூறும் கதைகளும் கொள்கைகளும் பல உண்டு. அவர்கள் வேட்டுவர், வேளாளர் என்ற

இரண்டு வகுப்புப் பெயர்களைக்கொண்டவர்கள். இவ்விரு குடிமக்களும் கவுண்டர் என்ற பட்டப் பெயரை வகித்திருப்பவர்களே. இவ்விருவகுப்பார்களின் வகுப்புப் பெயர்களே அவரவர்களுடைய குணங்களையும் எடுத்துக்காட்டும். வேட்டுவர் என்றால் வேட்டையாடி பிழைத்தவர்கள் என்ற பொருள். வேளாளர் என்றால் நிலத்தை அண்டிப்பிழைப்பவர் என்று பொருள். தற்போது இரண்டு வகுப்பார்களும் நிலத்தை அண்டிப்பிழைப்பார்கள். ஆனால் முன்னாளிலே வேட்டுவர்கள் வேட்டையாடுதலையே பிழைப்புத் தொழிலாக கொண்டிருந்தார்கள் என்று அறியவேண்டும். காட்டிற்கும் நாட்டிற்கும் உள்ளவேற்றுமையே வேட்டுவர்க்கும் வேளாளர்க்கும் இருந்திருக்கவேண்டுமென்றறிக. இந்த இரண்டு குலத்தாருக்கும் கருத்து வேறுபாடும் தொழில் வேறுபாடும் மிகுதியாக இருந்தன. ஆகவே இவ்விருவகுப்பார்களுக்குள் பகைமை மிகுதியாக இருந்திருக்கவேண்டுமல்லவா? பகைமையினால் சண்டை சச்சரவுகளும், கட்சிப்பிரதிகட்சிகளும் ஏற்பட்டு போர்களில் முடிவதே இயற்கையல்லவா? அவ்வாறு ஏற்பட்டு பெரிய கலவரங்கள் நாட்டில் விளைந்தன என்று நாட்டுக்கதைகளும் பாடல்களும் முழங்குகின்றன. இச்செய்தியைக் கூறும் ஒரு சிறந்த நாட்டுப்பாடல் கள்ளழகர் அம்மானை என்பது. அந்த நாட்டுப்பாடலை இந்த நாளிலும் நாட்டுப்புறங்களில் படிப்பார்கள். அப்பாடல்களை படிக்கும்போது ஊர்மக்கள் வெகு ஆவேசத்தோடு கேட்பார்கள்— இந்த நாளிலும் இக்கதைகளைக் கேட்கிற நாட்டுப்புறத்தார்களுள் அடிக்கடி உணர்ச்சி எழும்பி வீராவேசம் பொங்குவதுண்டு.

கள்ளழகர் அம்மானை என்ற பாடல் தெளிவாகவும், உருக்கமாகவும் இருப்பது. அது மக்களுடைய உணர்ச்சியில் வெகு விரைவில் படிந்துவிடும். குன்றுடையாக்கவுண்டன் அக்கதைக்கு வீரன். அவன் வேளாளர்களின் தலைவன்.

அவனுக்குப் பொன்னர், சங்கர் என்ற இரண்டு வீரமக்களும், நல்லதங்கை என்ற ஒரு பெண்மணியும் உதித்தார்கள். குன்றுடையாக்கவுண்டனும் அவன் மக்களும் வேளாளருக்குள் தலைமைபூண்டு மிகச் செழிப்போடு விளங்கினார்கள். காளி என்பவன் வேட்டுவர்களுக்குத் தலைவன். அவன் போரில் வல்லவன். வேளாளர்களிடம் பரம்பரையாகப் பகைபூண்டவன். ஒருகாலத்தில் இந்த இரண்டு தலைவர்களுக்கும் ஒரு வஞ்சகனுடைய தூண்டுதலாலே பகை ஏற்பட்டு போர் மூண்டது. அப்போரின் விளைவாக இரு தலைவர்களும் அவர்களுடைய ஆட்களும் தொலைகிறார்கள். ஆனால் பகைபோகவில்லை. அவ்விரு வகுப்பார்களுக்குள் இன்னும் பகைமையுண்டு. அவைகளைத் தற்போது தேர்தல்களில் காணலாம்.

மேற்கூறிய செய்திகளாலே கொங்குநாட்டுப் பழங்குடிகள் இரண்டு வகுப்பினர்களாக இருக்கும் செய்தியை அறியலாம். இவ்விரு வகுப்பார்களுக்குள்ளும் காணும் பழக்கவழக்கங்கள் மாறுபட்டிருப்பதையும் காணலாம். இவ்விரு வகுப்பார்களையண்டி இவர்களுக்குத் தொழில் செய்யும் தொழிலாளிக்கூட்டங்களும் அத்தலைவர்களுடைய வேறுபாடுகளையே தாங்களும் கொண்டிருக்கின்றனர். அவ்வாறு தொழில் செய்து பிழைக்கும் குடிகளின் சில சிறப்பு பழக்கவழக்கங்களைப்பற்றி ஒரு சிறிது கூறவேண்டியது அவசியமாகயிருக்கின்றது. அதைப் பற்றிக்கூறுவோம்.

கொங்குமண்டலத்தை மற்றைய மண்டலங்களிலிருந்தும் பிரித்துக்காட்டும் சான்றுகள் பல உண்டு என்று முன்னே சொல்லியிருக்கின்றோம். அவைகளிலே ஒன்று குடிமக்களின் வழக்கவேறுபாடாகும். கொங்குநாட்டு வேளாளருக்கு கொங்கு வேளாளர் என்று பெயர். மற்றநாடுகளிலும் இப்பெயர் போல சோழியர், பாண்டி, சேரகுல, தொண்டைமண்டல வேளாளர்கள் என்ற பெயர்களைக் காண்கிறோமல்லவா? கொங்குவேளாளர்கள் கொங்கு நாட்டை தங்கள் தாயகமாகக்

கொண்டிருக்கும் வேளாண்மக்கள். இவர்களில் திருமணம், அந்தியக்கிரியை முதலியவைகள் மற்றநாட்டார்களைக்காட்டிலும் சிறிதுவேறுபாடாக இருக்கும். குணமும் அவ்வாறே இருக்கும். சொல் ஒன்று, வெட்டு ஒன்று என்றேயிருப்பார்கள். மங்கையர்கள் அணியும் அணிவகைகளும் மாறுபட்டிருக்கும்.

இன்னோர்களுக்கு அகத்தொழில் செய்யும் வகுப்பார்களும் அப்படிப்பட்டவர்களே. கொங்கு நாவிதர், கொங்கு வண்ணார், கொங்குக் குயவர், கொங்கு பள்ளர், முதலிய வகுப்பார்கள், கொங்கு வேளாளர்களுடைய அணிகள், பழக்கங்கள் முதலியவைகளையே கொண்டிருப்பார்கள். தற்போது ஏனைய நாடுகளிலிருந்து கணக்கற்ற வகுப்பார்கள் கொங்குநாட்டில் குடியேறி தங்கள் பழக்கங்களை புகுத்தியிருந்தாலும் கொங்கு நாட்டின் பழங்குடிகளிடையே விளங்கியிருந்த பழக்கவழக்கங்கள் முன்னாள்களைப்போலவே இக்காலத்திலும் இருக்கின்றன. பண்டைத்தமிழர்கள் மூக்கைக்குத்தி மூக்கணிகளை அணிந்ததில்லை. அவ்வழக்கம் வடநாட்டிலிருந்து வந்தது. பண்டைத் தமிழ் நூல்களில் அவ்வழக்கம் கூறப்படவில்லை. நாளது வரையில் கொங்கு நாட்டில் பழங்குடிகள் அவ்வழக்கத்தையே கொண்டிருக்கின்றனர். வேளாளர், நாவிதர், குயவர், பள்ளர் அகமுடையார் முதலிய கொங்கு வகுப்பார்கள் மூக்கணி அணிவதேயில்லை. திருமண உறவுகளில் மாமன்மகளை மணப்பது தான் முதல் உரிமை. அவளுக்கு உரிமைப்பெண் என்றே பெயரும் உண்டு. உரிமைப் பெண் மணமகனைவிட மூத்தவர் ஆகவும் இருக்கலாம், திருமணம் நடக்கலாம். இந்தக்கொள்கை சிறிதுகாலம் வரை வழக்கத்தில் இருந்தது. இந்த வகையாகப் பல பழக்க வழக்கங்கள் பரம்பரையாக இருந்து வருகின்றன. இந்தப்படி சில கருத்துக்களைச் சொல்லி பழங்குடி வழக்கச் சரிதத்தை நிறுத்திக்கொள்ளுவோம்.

## 9. பண்டைய சரித்திரம்

கிறிஸ்தவ ஆப்தத்திற்கு முன் 5-நூற்றுண்டுகள் அளவில் சரித்திர ஆரம்பகாலம் என்று கூறலாம், அதற்கு முந்திய கதைகளைத் தென்னுட்டு வரலாற்றைக் குறித்த மட்டில் சரித்திரபாகமாகக் கூற முடியாது. கிறிஸ்துவாப்தத்திற்கு முன் 5-ம் நூற்றுண்டில் ஜைன மதமும், புத்தமதமும் வடநாட்டில் ஸ்தாபிக்கப்பெற்றன. மகாவீர வர்த்தமானர் ஜைனமதத்தைப் போதித்தார். அதற்கு அடுத்தாற்போல் சித்தார்த்தர் பௌத்த மதத்தைப் போதித்தார். அன்று முதல்கொண்டு இவ்விருமதங்களும் நாடெங்கும் பரவ ஆரம்பித்தன. இரண்டு மூன்று நூற்றுண்டுகளில் தென்னுட்டிலும் அம்மதங்கள் பரவத் தொடங்கின.

வடநாட்டில் மகத ராஜ்யம் வெகு பிரபலமாக அப்போது இருந்தது. அங்கே நந்தர்கள் என்ற அரசர்கள் சக்ரவர்த்திகளாய் ஆண்டுவந்தார்கள். அக்காலத்தில் யவன நாட்டில் மாசிடோனியா பிரதேசத்தில் அலெக்ஸாந்தர் என்ற ஒரு பிரபல மன்னன் தோன்றி உலக முழுவதும் ஜெயிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் கீழ்நாடுகளின் பேரில் படையெடுத்து வந்தான். பாரசீகம் முதலிய பலநாடுகளை வென்று சிந்துநதி கடந்து பாஞ்சாப்பின்மீது படை எடுத்தான். அங்கே புரூரவன் என்ற இந்திய மன்னன் அவனை எதிர்த்துப் போர் செய்தான். புரூரவன் போரில் தோற்றுலும் வெகு பராக்கிரமத்தோடு போர்செய்ததினுல் அவனை மெச்சி அவனுக்கு அரசை மீண்டும் அலெக்ஸாந்தர் கொடுத்தான். அக்காலத்தில் மிகப் பிரபலமாயிருந்த மகத ராஜ்ஜியத்தை ஜெயிக்க வேண்டுமென்பது அலெக்ஸாந்தருடைய எண்ணம். ஆனுல் அவனுடைய போர்வீரர்கள் களைத்துப்போயிருந்தபடியாலும் தங்கள் சுயநாட்டு ஞாபகம் வந்துகொண்டிருந்தபடியாலும் போருக்குச்செல்ல மறுத்துவிட்டார்கள். ஆகையால் அலெக்ஸாந்தரும் திரும்பிவிட்டான், அக்காலத்தில் மகத அரச

வம்சத்தில் ஒரு தாதி புதல்வனுன சந்திரகுப்தன் என்ற இள வரசன் சாணக்கியன் என்ற கபட மந்திரியின் சூழ்ச்சியினுல் பட்டத்தைக் கவர்ந்தான். அது முதல் அவ்வம்சம் மௌரிய வம்சம் என்று அழைக்கப்பெற்றது. மகத ராஜ்ஜியமும் மிகப் பிரபலம் அடைந்தது. சந்திரகுப்தன் பேரன் அசோகவர்த் தனன் கி. மு. 272 முதல் 231 வரை அரசாண்டான். அச் சக்ரவர்த்தி உலகப்பிரசித்தி பெற்றவன். பௌத்தமதப்பற்று டையனுகி அம்மதத்தை நாடுமுழுவதும் பரவச் செய்தவன். இந்தியதேசம் மாத்திரமேயன்றி இலங்கைக்கும் சீனுவுக்கும் சமயபோதகர்களை அனுப்பி அச்சமயத்தைப் பரவச்செய்தான். அவன்காலத்தில் இந்திய தேசத்தில் பெரும்பான்மையான பாகம் அவன் குடைக்கீழ் இருந்தது. தன்குடிகள் எல்லோருக் கும் சன்மார்க்கம் போதிப்பதற்காக நீதிகளைக் கற்களில் பதித்து நாட்டில் பலபாகங்களிலும் நாட்டிவைத்தான். அவ்விதம் அசோகன் வெளியிட்ட கல்வெட்டுகளில் ஒன்று மைசூர் பிர தேசத்துச் சித்திர துர்க்கம் ஜில்லாவில் சித்தாபுரத்தில் இருக் கிறது. ஆகவே அக்காலத்தில் அசோகனுடைய ராஜ்ஜியம் தக்ஷிணபீடபூமி முழுவதும் அடங்கியிருந்தது எனலாம். ஒரு வேளை கொங்குநாடும் அதற்குள் சேர்ந்திருக்கலாம்; அல்லது அதன் எல்லையாக இருந்திருக்கலாம். இந்நாட்டின் பெரும் பாகம் அக்காலத்தில் காடடர்ந்த பிரதேசமாக இருந்தது. ஏதோ சிற்சில பாகங்கள் மட்டும் குடிவளம் பெற்றிருக்கலாம். சிற்சிலமலைகளை அரண்களாகக்கொண்டு சில குறுநில மன்னர் கள் ஆண்டுவந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் தனி அரசர் களாகவே ஆண்டிருக்கலாம்.

அசோகவர்த்தனன் கி. மு. 231-ல் இறந்தான். அவனுக் குப்பின் மகதராஜ்யம் சீர் குலைய ஆரம்பித்தது. ஆனுல் பௌத்தமதம் பெருகிக்கொண்டே வந்தது. அவ்வரசன் காலம் முதல்கொண்டே பௌத்தமதாச்சாரியர்கள் தெற்கே வர ஆரம்பித்தார்கள். பௌத்த மதத்தில் பிட்சுக்கள் என்ற

சந்நியாசிகள் முக்கியமானவர்கள். ஆனால் சமணமதத்திலோ சிரவணர்கள் என்ற தவமுனிவர்கள் முக்கியமானவர்கள். இத் தவமுனிகள் கல்வியில் சிறந்தவர்கள். ஞானத்தைப்பெற வேண்டி எப்போதும் தவம் புரிந்து வருபவர்கள். உடலின் சுகங்களைச் சிறிதேனும் போற்றாது உண்டி சுருக்கித் தவத் திலேயே காலம் கழிப்பார்கள். ஜனக்கூட்டம் உள்ள ஊர் களைப் புறக்கணித்து ஆரண்யங்களில் தங்குவார்கள். யாரும் எளிதில் எட்டக்கூடாத மலைச்சிகரங்களை வாசஸ்தலமாகக் கொண்டிருப்பார்கள். அவர்கள் தவத்தை எவரும் கலைக்க முடியாதபடி பாதுகாத்துக்கொள்வார்கள். மலைச்சிகரங்களில் குகைகள் தோண்டி அவைகளில் தவம்புரிந்து வருவார்கள், அல்லது இயற்கையாய் இருக்கும் குகைகளில் வசிப்பார்கள். அவ்விதக்குகைகளில் தவம் செய்வதற்காக ஆசனங்களைச் செதுக்கிவைப்பார்கள். அவர்கள் படுப்பதற்காக படுக்கை போலப் பாறைகளை செதுக்கிக்கொள்வார்கள். இவ்விதமான பாறைகள் தமிழ்நாட்டில் பல இடங்களில் இருக்கின்றன. சில குகைகளில் அக்காலத்தில் வழங்கிவந்த எழுத்துக்களால் எழுத் துக்களை வெட்டியும் வைத்திருக்கின்றார்கள். அவ்வெழுத்துக் களைக்கொண்டு அருமையான செய்திகளை நாம் அறியக்கூடும். இவ்விதப் பாறைகளை நமது மக்கள் பஞ்சபாண்டவர்கள் படுக்கை என்று சொல்லுகிறார்கள்.

பாண்டிய நாட்டில் மதுரையைச்சுற்றி எட்டு குன்று களில் இவ்விதப் படுக்கைகள் இருக்கின்றன. அவைகள் சமணர்களுடைய வாசஸ்தலங்கள் என்று அறியவேண்டும்; இதனை சம்பந்த சுவாமிகள்

“ ஆனைமாமலை ஆதியாய இடங்களில்
பல அல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன் ”

என்ற அடிகளில் கூறியிருக்கின்றார். இவ்வெட்டு மலைகளை எண்பெருங்குன்றம் என்று பெரியபுராணமும் திருவிளையா

டற் புராணமும் கூறுகின்றன. தற்காலத்தில் சமணர் களுடைய நினைவுபோய் அவைகளை பஞ்சபாண்டவர்களோடு இணைத்துவிட்டார்கள். பாண்டவர்களுக்கும் சமணர் தவப் படுக்கைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மதுரையைச் சுற்றிலும் மாத்திரமேயன்றி திருநெல்வேலி ஜில்லாவில் கழுகு மலையில் அநேக சமணர் சின்னங்கள் இருக்கின்றன. இனிக் கொங்கு நாட்டிலோ கரூர் தாலூகாவில் புகலூருக்கு அருகில் உள்ள * ஆறுநாட்டார் மலையில் சில குகைகள் இருக்கின்றன. அவைகள் இயற்கையான குகைகள். அவைகளில் சில கற் படுக்கைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் காணும் கல்வெட்டுகளிலிருந்து கி. மு. 3-வது நூற்றாண்டில் அவை எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஒரு கல் வெட்டில் சில மைல்களுக்கு அப்பால் உள்ள கருவூரிலிருந்த ஒரு தட்டானைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அக்காலத்தில் கருவூர் ஒரு முக்கிய ஊராக இருந்திருக்கவேண் டும். இக்குகைகளில் சமண பௌத்த சந்நியாசிகள் அக் காலத்தில் இருந்திருக்கலாம்.

மேலே சொல்லிய குகைக் கல்வெட்டுகள் ஏற்பட்ட காலத்தில்தான் சமண சமயாசாரியர் ஹரிசேனர் என்பவர் பிரஹத் கதாகோசம் என்ற நூலை எழுதி இருக்கின்றார். அந்நூலில் ஒரு ஜைன சங்கத்து அங்கத்தினர்கள் தெற்கே சென்று புன்னாட தேசத்தை அடைந்தார் என்று கண்டிருக் கிறது. புன்னாட தேசம் என்பது மைசூர்பிரதேசத்திற்கு தென் மேற்கில் இருந்தது. அந்நாட்டில் கோமேதகங்கள் கிடைத்ததாக தாலமி என்ற ஆசிரியர் கி. பி. 2-வது நூற்றாண் டில் எழுதியிருக்கின்றார். கல்வெட்டுக்களில் புன்னாடதேசத்துத்

[*—ஆறுநாட்டார் மலை என்பது புகலூர் ஸ்டேஸனுக்கு வடக்கே 3 மைல் தூரத்தில் உள்ள வேலாயுதம்பாளையத்திற்கு அருகில் காவேரி ஆற்றிற்குத் தெற்கில் உள்ள புகழி மலை எனப்பெயர் பெற்றது. இதற்குத் திருப்புகழ் உண்டு.]—

தலைநகர் கித்திபுரம் என்று அறிகிறோம். தற்போது கப்பினி நதியின் தீரத்தில் உள்ள சித்தூர் என்ற ஊர்தான் அத்தலைநகர் என்று ஊகிக்கிறார்கள்.

மேலும் பழனி தாலூகாவில் ஐவர்மலை என்ற ஒரு குன்று இருக்கின்றது. இதில் ஒரு பாறையின்கீழ் பஞ்சபாண்டவர் படுக்கைகள் இருக்கின்றன. அவைகளும் சமண முனிவர்களுடைய மடங்களாக இருந்திருக்கின்றன. உடுமலைப் பேட்டை தாலூக்காவில் திருமூர்த்திமலை அடிவாரத்தில் ஒரு பெரிய உருண்டைப் பாறை இருக்கின்றது. அதில் ஒரு சமண தீர்த்தங்கரர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அதனை அறியாதார் மும்மூர்த்திகளின் உருவம் என்று ஆராதிக்கின்றனர். கொங்குநாட்டைச்சேர்ந்த சேலம் ஜில்லாவில் திருச்செங் கோட்டு மலையில் அர்த்தநாரீசுவரர் ஆலயத்திற்கு மேலே ஒரு இயற்கைக் குகையும் அதில் நான்கு ஐந்து படுக்கைகளும் இருக்கின்றன. இவைகளும் சமண முனிவர்களது படுக்கைகளே. இவைகளால் கிறிஸ்துவாப்தத்திற்கு முந்தி கொங்கு நாட்டில் சமணமதம் இருந்த நிலையை அறியலாம்.

## 10. உரோமானிய உறவு.

அசோகவர்த்தனன் இறந்ததும் மகத ராஜ்ஜியம் நிலை குலைந்தது. ஆனால் அச்சம்பவம் தமிழ்நாடுகளைச் சிறிதேனும் பீடிக்கவில்லை. ஏனெனில் அசோகன் பிரக்கியாதியோடு ஆண்டகாலத்திலும் அவன் ஆளுகைக்குள் தமிழர்கள் அடங்கியிருக்கவில்லை. ஆகையால் வடக்கே அசோகன் இறந்த பிறகு மகத ராஜ்ஜியத்தின் பலபாகங்கள் கலவரமடைந்து நிலைகுலைய ஆரம்பித்தபோதிலும் அவ்விராஜ்ஜியத்திற்குப் புறம்பேயிருந்த தமிழ் நாடுகள் எப்போதும் போலவே இருந்துவந்தன. அக்காலத்திலேயே தமிழ் நாடுகளான சேர, சோழ, பாண்டிய நாடுகள் நாகரீகத்தில் சிறந்து விளங்கின. கலைப்பயிற்சியில் தேர்ச்சியடைந்திருந்தன. ஆகையால் அவை

களுடைய நிலைமையை வடக்கேயிருந்த புரட்சியானது சிறிதும் மாற்றவில்லை.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் எப்போதும் ஒருவரோடொருவர் பகைமை பூண்டு அடிக்கடி தம்முள் போர் புரிதலையே விளையாட்டாகக் கொண்டிருந்தார்கள். தம்மில் போர் ஏற்படாத காலத்தில் அடுத்தாற்போல் இருந்த காடுகளில் வசித்துவந்த காட்டாள்களான மலசர், காடர் முதலியவர்களோடு சண்டையிடுவார்கள். அல்லது காடுகளிலும் குன்றுகளிலும் அரண்களைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்த சிற்றரசர்களான வேளிர்களோடு போர் புரிவதுண்டு. இவ்விதமாய் எப்போதும் போருக்கு ஆயத்தமாய் இருந்தபடியினால் அவர்கள் சுறுசுறுப்பாகவும் ஆண்மையுடனும் இருப்பார்கள். ஆகையால் அக்காலத்திலேயே தமிழர்களைப் பற்றி வெளிநாடுகளில் நற்பெயர் இருந்தது. அச்சமயத்தில் உரோமானிய தேசம் உலகத்திலேயே சிறந்த நாடாகவும் வெற்றிபெறும் நாடாகவும் இருந்தது. ஜூலியஸ் சீஸர் என்ற ஒரு தளகர்த்தன் தோன்றி வெகு தூரதேசங்களை எல்லாம் பிடித்து ரோமானிய சாம்ராஜ்யத்திற்குள் சேர்த்துவிட்டான். அவ்விதம் அவன் திக்கு விஜயம் செய்து வருகையில் கி. மு. 47-ல் ஈஜிப்ட் தேசத்தில் இருக்கிற பெரு நகராகிய அலெக்ஸாண்டிரியாவைப் பிடித்தான். அக்காலத்தில் அலெக்ஸாண்டிரியா என்ற ஊர் சிறந்த வாணிபத்துறையாக இருந்தது. ஈஜிப்ட் தேசத்தார்கள் பல நூற்றாண்டுகளாக அலெக்ஸாண்டிரியாவை மத்தியஸ்தலமாக வைத்துக் கொண்டு கிழக்கு நாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தார்கள். ஈஜிப்ட் தேசத்திலிருந்து இந்தியாவிற்கு கடல் மார்க்கமாகப் பெருத்த வியாபாரம் நடந்து வந்தது. அலெக்ஸாண்டிரியா நகரம் சீஸர் கையில் அகப்பட்டவுடனே அந்த வியாபாரம் முழுவதும் உரோமானியர் கைக்குள் கிடைத்து விட்டது. அது முதல் உரோமானியர்கள் கடல் மார்க்கமாக

இந்தியாவுடன் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். இப்புது மார்க்கம் சுலபமாயிருந்தபடியால் வியாபாரம் நாள்தோறும் விருத்தியடைந்து வந்தது. உரோமானிய கப்பல்கள் ஈஜிப்ட் துறைமுகங்களின் வழியாகக் கடலில் கிழக்கே சென்று சேர நாட்டு மேற்கரைத் துறைமுகங்களான வஞ்சி, முசிரி முதலிய வைகளோடு வாணிபம் செய்தன. முந்தி வெகு காலம் பிடித்த பிரயாணமானது இப்போது சுலபத்தில் செய்து விடப்பட்டது. மலையாளக் கரையில் எப்பேர்ப்பட்ட புயல் காற்று வீசினாலும் சேதமடையாமல் காப்பாற்ற வல்ல துறை முகங்கள் இருந்தன. வெகு நாள் பிடித்த பிரயாணமானது பருவக் காற்றின் உதவியால் சீக்கிரமாகவும் நிச்சயமாகவும் கரைவந்து சேரமுடியும். மேலும் மலையாள நாட்டில் மிகவும் அவசிய பதார்த்தமாகிய மிளகு ஏராளமாயிருந்தது. இலங் கைத்தீவின் கரைகளில் முத்துச் சலாபம் ஏராளமாய்க் கிடைத் தது. பெரில்ஸ் என்ற இரத்தினங்கள் கொங்கு நாட்டில் காங்கேயத்திற்கு அருகே படியூரில் அதிகமாய்க் கிடைத்தன. அக் கற்கள் உயர்ந்த பார்வையும் நீரும் பெற்று இருந்தன. ஆகவே உரோமானிய சீமாட்டிகள் அக்கற்களை மிகவும் விரும்பினார்கள். மேலும் பாரசீக வளைகுடாவிலும் தூத்துக் குடிக்கு அருகிலும் உயர்ந்த முத்துக்களை எடுத்தார்கள். அம்முத்துக்களை அணிவதிலும் உரோமானிய பெண்களுக்கு வெகு பிரியம். மேற்கு மலைத் தொடர்ச்சிகளில் மிளகும் ஏலக்காயும் செழிப்பாக வளர்ந்தன. அவைகளையும் உரோ மானியர்கள் வாங்க வந்தார்கள். ஆகவே நிலம் படுபொருள், கடல்படுபொருள், மலைபடுபொருள் ஆகிய இம்மூவகைப் பொருள்களையும் உரோமானியர்கள் கொள்வதற்காகத் தென் னிந்தியாவுடன் பெரும் வர்த்தகம் செய்ய ஆரம்பித்தனர், தென்னிந்திய நாடுகளில் தமிழர் நாகரிகம் முற்பட்டிருந்தது என்று சொன்னோம். ஐரோப்பாவிலும் உரோமானியர் நாகரிகத்தில் முற்பட்டிருந்தார்கள். ஆகவே இவ்விரு நாட் டார்க்கும் வியாபார சம்பந்தம் ஏற்படுவது சுலபமாயிற்று.

தென்னிந்தியாவில் கடற்கரையோரமாக பல துறை முகங்கள் இருந்தனவென்று சொன்னோம். தமிழர்கள் திரை கடலோடித் திரவியம் சேர்ப்பதற்காக நாவாய்களைக்கட்டி வாணிகத்தில் ஈடுபட்டார்கள். கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியே பிறநாட்டார் பலரும் தங்கள் நாவாய்களில் வியாபார நிமித்தமாகத் தமிழ் நாடுகளுக்கு வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் கிரேக்கர் ஈஜிப்தியர், ரோமர், பாரசீகர், அரபியர், சீனர் முதலியோர். ஆகவே பரஸ்பரம் வியாபாரம் விருத்தியாயிற்று. ஈஜிப்டு தேசம் ரோமர்களால் பிடிபடும் மட்டும் பெருத்த வியாபாரத்தைத் தென்னிந்தியாவுடன் கொண்டிருந்தது. கி. மு. 47-ல் சீஸர் அலெக்ஸாண்டிரியாவைப் பிடித்தான். அதுமுதல் உரோமானியர்கள் அந்த வியாபாரத்தைக் கைக்கொண்டார்கள். அகஸ்தஸ் காலத்தில் கி. மு. 30-ல் ஈஜிப்டு தேசம் முழுவதும் உரோமானியர் கைக்குள் வந்துவிட்டது. அது வரை ஈஜிப்டு தேசம் மூலமாக உரோமானியருக்குச் சென்று கொண்டிருந்த இந்திய விளைபொருள்களெல்லாம் நேராக செங்கடல் மார்க்கமாக ரோமுக்குச் செல்ல ஆரம்பித்தது. அதுமுதல் உரோமர்களுடைய கப்பல்கள் தென்னிந்தியத் துறைமுகங்களுக்குக் கிரமமாக வர ஆரம்பித்தன. இவ்விதம் தமிழர்களுக்கும் உரோமானியருக்கும் ஏற்பட்ட வியாபாரமானது கி. பி. 6-வது நூற்றாண்டு வரை ஒழுங்காக நடைபெற்று வந்தது. இவ்வியாபாரத்திற்கு அறிகுறியாக பல சின்னங்கள் தமிழ் நாட்டிலும் உரோமானியப் பிரதேசத்திலும் காண்கின்றோம்.

இக்காலத்தில் தமிழர்களைக்கண்டால் இவர்களுக்குக் கடல் வர்த்தகம் எப்போதாவது இருந்திருக்குமா என்று ஐயந்தோன்றும். கட்டு மரங்களையும் சிறுபடகுகளையும் கட்டுவதற்கு மாத்திரம் தெரிந்துள்ள கடற்கரைத் தமிழர்களுக்குப் பெருங் கடலைத் தாண்டவல்ல நாவாய்களைக் கட்டத் தெரிந்திருக்குமா?

என்றாலும் பண்டைக்காலத்து நூல்களைக் காணும்போது இவர்கள் பெரிய மரக்கலங்களைக் கட்டிக்கொண்டு கடலைத் தாண்டி வர்த்தகம் செய்துகொண்டும் இருந்தார்கள் என்பதை அறிவோம். பிற்காலத்தில் அரசியல் மாறுதல்களினால் அப்பெருந் தொழிலையே மறந்தார்கள். முதல் முதலில் சிரியா தேசத்தோடு வர்த்தகம் செய்தார்கள். அக்காலத்தில் தான் தமிழ்நாட்டு மயிலை சிரியர்கள் அறிந்தார்கள். தமிழில் வழங்கி வந்த தோகை என்ற பதத்தை சிரியர்கள் கொண்டு துகி என்று அழைத்தார்கள். தமிழில் உள்ள அகில் என்ற பதத்தை ஹீப்ரு பாஷையில் அகலிம் என்று எடுத்துக்கொண்டார்கள். சிரியர்களுக்குப் பிந்தி கிரேக்கர்களுடைய சம்பந்தம் ஏற்பட்டது. அவர்களுடைய சின்னங்களும் அதிகமாகக் காண்கிறோம். கிரேக்கர்களை அயோனியன்கள் என்று சொல்வதுண்டு. அயோனியன் என்ற பதம் யவனம் என்ற பெயரால் இந்தியாவில் வழங்கிவந்தது. யவன நாட்டுத் தொழிலாளிகள் தமிழ் நாட்டில் குடியேறி இருந்தார்கள். மதுரைக்காஞ்சியிலும், கொங்குவேள் மாக்கதையிலும் அதனைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள. தமிழ் அரசர்கள் யவனர்களை மெய்க்காப்பாளர்களாகவும் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பதமாகிய அரிசி என்பது கிரீக் பாஷையில் அரிஜா என்றும் இஞ்சி என்பது ஜிஞ்ஜர் என்றும் இஞ்சிவேர் என்பது ஜிஞ்ஜிபார் என்றும் கரவ என்றபதம் கர்ப்பியன் என்றும் கிரேக்க பாஷையில் வழங்கிவர ஆரம்பித்தன. ஆகவே கிரேக்கர்களுடைய வியாபார சம்பந்தம் அக்காலத்தில் அதிகமாக இருந்திருக்க வேண்டும்.

கிரேக்கர்கள் க்ஷீண தசை அடைந்ததற்குப் பிந்தி உரோமானியர்கள் முன்னேற்றம் அடைந்தார்கள். உரோமானியர்களுடைய வர்த்தகம் எவ்விதமாகப் பிரபலமடைந்ததென்று முன்னே கூறினோம். மேலே கூறிய மூவ்வகைப் பொருள்களில் சிலப்படு பொருளாகிய இரத்தினக் கற்கள் கொங்கு

நாட்டில் படியூரில் கிடைத்தன என்று சொன்னோம். அவ் விரத்தினங்கள் கடல் பச்சை நிறம் வாய்ந்திருந்தன. சமீப காலம் வரைக்கும் அவைகளைத்தோண்டி எடுத்துக்கொண்டு இருந்தார்கள். 1819–20 கி. பி. யிலும் கூட, அவ்விடத்தில் 60 சேர் கற்கள் கிடைத்தனவாம். அவைகள் மதிப்பு 18,000 ரூபாயாகுமாம். கற்கள் எடுக்கும் தொழில் இப்போது அடி யோடு போய்விட்டது. 1820-ல் 18,000 ரூபாய் பெருமான கற்களை எடுத்திருந்தால் 1800 ஆண்டுகளுக்கு முந்தி எத்தனை மடங்கு கற்களை எடுத்திருந்தார்களோ அறியோம்! உரோ மானிய நாட்டு நூல்களை ஆராய்ந்தால் பன்மடங்கு கற்கள் கொங்கு நாட்டிலிருந்து ரோம் தேசத்திற்குச் சென்றன என அறியலாம். ரோமர்களில் அகஸ்தஸ் என்பவன் முதல் சக்கர வர்த்தி. அவனுக்குப் பிறகு நான்கு நூற்றாண்டுகள் வரை பல சக்கரவர்த்திகள் ஆண்டார்கள். அவர்கள் காலத்தில் உரோமானிய சீமாட்டிகள் மிகுந்த செல்வம் படைத்தவர் கள். ஆகி ஆபரணங்களை அணிவதில் மிகுந்த விருப்பம் கொண்ட வர்களாக இருந்தார்கள். பெரும் பணங்களை இறைத்து அழகிய நீரோட்டமுள்ள கற்களைத் தருவித்து அணிந்து கொள்வதில் அவர்களுக்குப் பெரும் விருப்பம். அவ்விதக் கற்கள் கொங்கு நாட்டிலேயே கிடைத்தனவாகையால் உரோ மானிய வர்த்தகர்கள் கொங்கு நாட்டின் பேரிலேயே அதிக மாகக் கண்வைத்திருந்தார்கள். அதன் காரணமாக கொங்கு நாட்டில் உரோமானிய திரவியம் குவிய ஆரம்பித்தது. அதனை இனி விவரிப்போம்.

## 11. உரோமானிய நாணயங்கள்.

தமிழ் நாட்டில் உரோமானிய நாணயங்கள் பெருவாரி யாகக் கிடைத்திருக்கின்றன. அவைகள் பூமியின் கீழ் மண் பாத்திரங்களில் புதைக்கப் பெற்று இருந்தன. குடியானவர் கள் நிலத்தை உழும் பொழுதோ அல்லது வீடு கட்டுவதற்கு

அஸ்திபாரம் தோண்டும்பொழுதோ அல்லது கிணறு, சோளக் குழி முதலியவைகளை வெட்டும் பொழுதோ தற்செயலாகக் கிடைத்திருக்கின்றன. இவ்விதப் புதையல்கள் முன் காலத்தில் அடிக்கடி அகப்பட்டுக் கொண்டிருந்தன. அவைகளைக் கண்டு பிடித்தவர்கள் தங்களுக்கென்று பயன்படுத்திக்கொண்டிருந் தார்கள். ஆங்கிலர் வந்த பிறகு சில ஆராய்ச்சியாளர்கள் அவைகளை வாங்கி ஆராய்ந்து பார்த்தார்கள். இப்புதையல் களைச் சேகரித்து ஆராயும் பொருட்டு ஒரு நிபந்தனைச் சட்டம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அச்சட்டத்தின்படி புதையல் கள் கிடைத்தால் அவைகளை சர்க்கார் உத்தியோகஸ்தரிடம் ஒப்புவிக்க வேண்டும். தவறினால் திருட்டுக் குற்றத்திற்கு ஆளாவார்கள். உத்தியோகஸ்தர்கள் புதையல் யாருக்குச் சொந்தமென்று விசாரிப்பார்கள். சொந்தக்காரர்கள் இல்லா விட்டால் புதையலில் கிடைத்த பொருள்களை ஏலம் போட்டு வந்த பொருளைச் சர்க்காருக்குச் சேர்த்துக் கொள்வார்கள். புதையலில் சரித்திர சம்பந்தமான பொருள்கள் இருந்தால் அவைகளைச் சென்னைப் பொருள்காட்சிச்சாலைக்கு ஆராய்ச்சி செய்வதற்காக அனுப்பி விடுவார்கள். அவைகளைப் பற்றிய விவரத்தைப் பொருட்காட்சியாளர்கள் ஆராய்ச்சி செய்து தம் அறிக்கையில் அவைகளைப் பற்றி வெளியிடுவார்கள். இவ்விதப் புதையல்கள் மதுரை, பொள்ளாச்சி, கரூர், வெள்ளலூர் முதலான பல இடங்களில் கிடைத்தன. அவைகளில் கொங்கு நாட்டில் கிடைத்தவைகள் மிகவும் சிறந்தவை.

பணப்புதையல்களில் தென் நாட்டில் கிடைத்தவைகளைப் பற்றி இனி விவரமாக எழுதுவோம்.

| அரசன். | காலம். | இடம். | புதையல் கிடைத்த வருஷம். |
|---|---|---|---|
| 1. அகஸ்தஸ் Augustus | B. C. 44–14 | பொள்ளாச்சி | 1888 |
| | | வெள்ளலூர் | 1842 |
| | | கரூர் | 1878 |

| | | | |
|---|---|---|---|
| 1. a ட்ரூஸஸ் Drusus (Senior) | B. C. 8 | வெள்ளலூர் | 1842 |
| | | கலயமுத்தூர் | 1856 |
| 1. b. அந்தோனியா Antonia (wife of 1a) | ,, | கரூர் | 1806 |
| 1. c. ஜெர்மேனிகஸ் Germanicus | ,, | வெள்ளலூர் | 1842 |
| II. டைபீரியஸ் Tiberius | A. D. 14–37 | பொள்ளாச்சி | 1800 |
| | | கரூர் | 1806 & 1878 |
| | | வெள்ளலூர் | 1842 |
| | | கண்ணனூர் | 1851 |
| | | கலயமுத்தூர் | 1856 |
| III. கேலிகுலா Caligula | 37—41 | வெள்ளலூர் | 1842 |
| | | கலயமுத்தூர் | 1856 |
| IV. க்ளாடியஸ் Claudius | 41—54 | கரூர் | 1806 |
| | | வெள்ளலூர் | 1842 |
| | | கலயமுத்தூர் | 1856 |
| V. நீரோ Nero | 54—68 | கண்ணனூர் | 1851 |
| | | கலயமுத்தூர் | 1856 |
| VI. வெஸ்பெஸியன் Vespesian | 69—79 | கிருஷ்ணு | 1888 |
| VII. டோமிஷியன் Domitian | 81—96 | மதுரை, கலயமுத்தூர் | 1856 |
| | | கிருஷ்ணு | 1888 |
| VIII. நெர்வா Nerva | 96—98 | கலயமுத்தூர் | 1856 |

| | | | | |
|---|---|---|---|---|
| IX. | ட்ராஜன் Trajan | *98—117* | நெல்லூர் | *1787* |
| | | | கடப்பா | *1838* |
| | | | கலயமுத்தூர் | *1856* |
| X. | ஹேத்திரியன் Hadrian | *117—138* | கலயமுத்தூர் | *1856* |
| | | | கிருஷ்ணை | *1888* |
| XI. | அந்தோனியஸ் பயஸ் Antonius pius | *138—161* | கிருஷ்ணை | *1888* |
| | | | சோலாப்பூர் | *1840* |
| XII. | L. வீரஸ் L. Verus | died *169* | கிருஷ்ணை | *1888* |
| XIII. | மார்க்கஸ் ஆரீலியஸ் Marcus Aurelius | *161—180* | Do | Do |
| XIV. | கம்மோடியஸ் Commodius | *180—193* | கலயமுத்தூர் | *1856* |
| | | | சோலாப்பூர் | *1840* |
| | | | கிருஷ்ணை | *1888* |
| XV. | செவிரஸ் Severus | *193—211* | சோலாப்பூர் | *1840* |
| XVI. | கேரகல்லா Caracalla | *211—212* | கிருஷ்ணை | *1888* |
| XVII. | கேதா Geta | *212—217* | சோலாப்பூர் | *1840* |
| XVIII. | அலெக்ஸ் செவிரஸ் Alex Severus | *222—235* | கிருஷ்ணை | *1888* |
| XIX. | கான்ஸ்டான்டினஸ் Constantinus | *323—337* | கரூர் | |

| | | | |
|---|---|---|---|
| XX. | ஜூலியானஸ் Julianus | 361—363 | |
| XXI. | வெலன்டியன் Velentian | 364—375 | Elliot's Collection. |
| XXII. | தியோடோஸியஸ் & யுடோசியா Theodosius and Eudocia | 393 | Elliot's and Tracy's Madura Collection and seven Pagodas. |
| XXIII. | ஹனோரியஸ்-ஆர்க்கேடஸ் Honorious and Arcadus | 395—423 395—408 | Scott's Collection. |
| XXIV. | இரண்டாவது கான்ஸ்டன்ஸ் Constans II. | 421 | மதுரை (Tracy's) |
| XXV. | ஜெனோ Zeno | 474—491 | Elliot's Madura Collection. |

மேலே சொன்ன பட்டியில் கண்டிருக்கும் பொள்ளாச்சி, வெள்ளலூர், கரூர், கலயமுத்தூர் முதலான ஊர்கள் கொங்கு நாட்டில் உள்ளன. ஆகவே கொங்கு நாட்டில் கிடைத்த நாணயங்கள் கி. மு. 44 முதல் ஆண்ட அகஸ்தஸ் சக்ரவர்த்தி முதல் கொண்டு கி. பி. 117 முதல் ஆண்ட ஹேட்ரியன் அரசன் வரையில் பெரும்பான்மையான நாணயங்களும் கி. பி. 180-ல் ஆண்ட கமோடியஸ் கி. பி. 323-ல் ஆண்ட கான்ஸ் டன்டைன் என்பவர்கள் காலங்களில் சில தொகுதி நாணயங் களும் கிடைத்திருக்கின்றன. ஆகவே கொங்கு நாட்டுடன் உரோமானியர்கள் கிறிஸ்து சமய ஆரம்பத்தில் மூன்று நான்கு நூற்றுண்டுகள் வரை பலத்த வியாபாரம் செய்திருக்கவேண் டும் என்று அறியலாம்.

மேலே குறித்த பட்டியானது பூர்த்தியானது என்று சொல்ல முடியாது. பல கிராமங்களில் பல புதையல்கள் கிடைத்திருக்கலாம். அவைகளை உருக்கி ஜனங்கள் சர்க்காருக்குத் தெரியப்படுத்தாமல் தாங்களே உபயோகித்துக்கொண்டிருக்கலாம். இன்னும் எடுபடாமல் பூமிக்குள் பல புதையல்கள் இருக்கலாம். ஏனெனில் சமீபகாலத்தில் வெள்ளலூரில் மறுமுறை ஒரு புதையல் எடுக்கப்பட்டது. வெள்ளலூர் கோவைக்கு அடுத்த போத்தனூர் சந்திக்குக் கிழக்கே மூன்று கல் அளவில் உள்ள ஒரு பழமையான ஊர். அவ்வூரில் கூத்தாண்டி மேடை என்ற ஒரு மேடை இருக்கிறது. அம் மேடைக்கு அருகில் 1931 ஜனவரி 16 தேதியன்று ஒரு சிறுவன் விளையாடிக்கொண்டிருக்கையில் புழுதி மண்ணில் குழி தோண்டவே ஒரு சிறு மண்குடம் கிடைத்தது. அக்குடத்தை உடைத்துப்பார்க்கையில் அதில் 121 வெள்ளி நாணயங்கள் இருந்தன. அச்சங்கதி கிராம அதிகாரிக்குத் தெரிந்து அந்நாணயங்களை வாங்கி ஜில்லா அதிகாரிக்கு அனுப்பிவைத்தார். அவைகளைப் பார்வையிட்டதில் அவை உரோமானிய நாணயங்களாக இருந்தன. அவைகளின் எடை 25 ரூபாய் கொண்டிருந்தது. பத்து நாணயங்கள் அழகாகவும் நன்றாகவும் இருந்தன. ஏனையவை மண் ஒட்டிக்கொண்டிருந்தன. வெள்ளியோ சொக்கமாகவும் பளபளவென்று ஒளி வீசிக்கொண்டும் இருந்தது. நாணயங்களில் அச்சிடப்பட்டிருந்த உருவங்கள் ஓவிய உருவங்களைப்போன்று வெகு நன்றாக இருந்தன. அவ்வுருவங்களைப் பார்த்தால் அவ்வரசர்களுடைய குணத்தையும் எடுத்துச் சொல்லக்கூடிய அமைப்பை அவைகள் கொண்டிருந்தன. அந்நாணயங்கள் சுத்தமாகவும் தேயாமலும் இருந்தபடியால் அவைகள் வெகுநாள் பழக்கத்தில் இருந்திருக்கமாட்டா என்று துணிவாகக் கூறலாம். அக்காரணத்தினாலே அவைகள் ஒருவேளை தேசீய அல்லது ராஜரீக புரட்சியின் காரணமாக வெகு காலத்திற்கு முந்தி புதைக்கப்பட்டிருக்கலாம் என்று நாம் ஊகிக்க முடியும்.

அந்நாணயங்களிற் சிலவற்றின் விவரங்களை இனிக் குறிக்கிறேன். ஒரு நாணயத்தில் ஒரு புறத்தில் கி. மு. 44 முதல் கி. மு. 14 வரை ஆண்ட அகஸ்தஸ் சக்ரவர்த்தியின் உருவமும் அதனைச்சுற்றி Caesar Augustus என்ற எழுத்துக்களும், மற்றொரு பக்கத்தில் ஒரு மானிட உருவம் ஒரு கையில் ஈட்டியும் மற்றொரு கையில் பூவேலை செய்த செங்கோலும் கொண்டிருக்கவும், அதனைச்சுற்றி Maxim Pontif என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. மற்றொரு நாணயத்தில் ஒரு புறம் ஒரு சக்ரவர்த்தியின் உருவமும் அதனைச் சுற்றி Caesar என்றும், மற்றொரு பக்கத்தில் எட்டு மூலைகள் காட்டும் கோடுகளும் அதனைச்சுற்றி Divus Julius என்றும் வரையப்பட்டிருக்கிறது. மற்றொரு நாணயத்தில் ஓர் அரசன் தலையும் அதனைச் சுற்றி Davius Pater Patrias என்றும் கண்டிருக்கிறது. மற்றொன்றில் 4 குதிரைகள் ஒரு இரதத்திற்குக்கட்டப்பட்ட உருவமும் அதனைச்சுற்றி Imp Vii என்றும் எழுதப்பட்டுள்ளது. மற்றொன்றில் ஓர் அரசன் உருவமும் அதனைச்சுற்றி Augustus என்றும் மற்றொரு புறத்தில் ஓர் காளை தன் வாலைத் தூக்கிக் கொண்டு பாய்கிற நிலையில் உள்ள உருவமும் அதனைச் சுற்றி Impx என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. மற்றொன்றில் ஓர் உட்கார்ந்த உருவமும் அதனைச்சுற்றி Constantine என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வரசன் கி. பி. 323 முதல் கி. பி. 337 வரை ஆண்டவன். இன்னமும் பல இருக்கின்றன. ஆகவே இந்நாணயங்கள் கி. மு. 44 முதல் கி. பி. 337 வரை ஆண்ட அரசர்களின் நாணயங்களாக இருக்கின்றன.

இதே வெள்ளலூரில் 1842-வது ஆண்டில் கிடைத்த புதையலைப்பற்றி முன்னே குறித்த பட்டியில் எழுதியிருக்கின்றோம். அதன் விவரத்தைத் தனியாக எழுதும் பட்சத்தில் அடியில்கண்டவாறு இருக்கும்.

| | | |
|---|---|---|
| அகஸ்டஸ் Augustus | கி. மு. 44 | கி. பி. 14 |

| | | |
|---|---|---|
| ட்ரூசஸ் Drusus | do. | 8 |
| ஜெர்மேனிகஸ் Germanicus | | |
| டைபீரியஸ் Tiberius | | 14—37 |
| கலிகுலா Caligula | | 37—41 |
| க்ளாடியஸ் Clauduis | | 41—54 |

இப்பட்டியினால் அகஸ்டஸ் காலம் முதல் க்ளாடியஸ் காலம் வரை 100 ஆண்டுகள் அளவில் வழங்கின நாணயங்கள் அப்புதையலில் அகப்பட்டிருந்தன என்று கூறலாம். இவ் விவரத்தைப் போலவே கொங்கு நாட்டிலுள்ள மற்ற இடங்களாகிய பொள்ளாச்சி, கரூர், கலயமுத்தூர் முதலிய ஊர்களில் கிடைத்த புதையல்களையும் விவரமாகப் பாகுபடுத்திப் பார்த்தால் பல விஷயங்களை அறியலாம்.

மேலே, தென்னாட்டில் கிடைத்த உரோமானிய நாணயங்களின் பட்டியை எடுத்து எழுதினோம். அந்நாணயங்கள் பெரும்பாலும் மிகவும் நேர்த்தியாயிருந்தன. நாணயம் ஆக்கப்பட்ட வெள்ளியோ சொக்க வெள்ளியாயிருந்தது. நாணயங்களில் வார்க்கப்பட்ட உருவங்களோ மிகவும் அழகாகவும் உண்மைச் சித்திரம் போலவும் இருந்தன. உதாரணமாக அகஸ்தூர் சீஸர், அந்தோனியா, அக்ரிப்பினா இவர்களுடைய உருவங்கள் புகைப்படம் பிடித்தால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறே அமைக்கப் பெற்றிருந்தன. மேலும் அவை மிகுந்த அழகு வாய்ந்திருந்தன.

டாக்டர் கால்டுவெல் என்ற நிபுணர் இந் நாணயங்களைப் சோதித்துவிட்டு அகஸ்தஸ் காலத்தில் ரோம் நகரத்திற்கு விஜயம் செய்த இந்திய தூதன் பாண்டிய அரசனால் அனுப்

பிக்கப்பட்டவனுய் இருக்கவேண்டும் என்று அபிப்பிராயப் படுகிருர். அகஸ்தஸ் காலத்தில் தான் சிங்களத்தீவு என்னும் இலங்கைத் தீவானது உரோமானியரால் கண்டு பிடிக்கப் பட்டது. அதன் பிறகு இரு நாட்டார்க்கும் வியாபார சம்பந்தம் அதிகமாய் ஏற்பட்டது. அகஸ்தஸ் முதல்கொண்டு கான்ஸ்டன்டைன் ஈருக உரோமானிய வர்த்தகம் விருத்தி அடைந்துகொண்டே வந்தது. ஆனுல் ரோம் நகரத்தில் அடிக்கடி புரட்சிகள் ஏற்பட்ட காலத்தில் வியாபாரம் ஒரு வாறு தடையுற்றது.

இனி தென்னுட்டில் கிடைத்த நாணயங்களைப்பற்றி சில பொதுவான குறிப்புகளை எழுதுவோம்.

1. நாணயங்கள் புதையலிலிருந்து எடுத்தபோது தங்க சாலையிலிருந்து புதிதாக வெளிவந்த நாணயங்களைப்போல் சுத்தமாக இருந்தன. அவைகளைப் பார்த்த மாத்திரத்தில் செலாவணியாகாத புத்தம் புதிதான நாணயங்கள் எனலாம்.

2. நாணயங்கள் பெரும்பாலும் உள் நாடுகளிலேயே கிடைத்தன. கடல் வியாபாரம் அதிகமாக செய்யப்பட்டு வந்த கடற்கரைத் துறைமுகங்களிலாவது அவைகளுக்குச் சேர்ந்த கரையோர நாடுகளிலாவது நாணயங்கள் கிடைக்க வில்லை. கொங்குநாடு போன்ற உள் நாடுகளில் நாணயப் புதையல்கள் கிடைத்தன.

3. நாணயங்கள் செம்பொன்னினுலும் சொக்க வெள்ளி யினுலும் செய்யப்பட்டிருந்தன. உருவங்களின் அழகும் வேலைப்பாடும் ஆச்சரியப்படத்தக்கவை. கைதேர்ந்த நிபுணர் கள் அந்நாணயங்களை வார்த்திருக்கவேண்டும்.

4. சில இடங்களில் கிடைத்த புதையல்களில் கண்ட நாணயங்கள் நகைகளுக்காகப் பிரயோஜனப் பட்டிருந்தன. அவைகளில் துவாரங்களும் குந்துகளும் இருந்தபடியால் அவ்வாறு யூகிக்கக்கூடும்.

5. புதையல்களில் நாணயங்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் அகப்பட்டன. இப்பெருந் தொகுதிகளுக்குக் காரணம் யாதாக இருக்கலாம்.

6. 10-வது நூற்றுண்டிற்கு முந்தி அகப்பட்ட நாணயங்கள் எல்லாம் உரோமானியருடையனவே. தமிழ் அரசர்களுடைய நாணயங்கள் 10-வது நூற்றுண்டுக்கு முந்தி கிடைக்கவில்லை.

7. தமிழ் நாட்டுக் கல்வெட்டுகளிலிருந்து கிடைக்கும் ருஜுவினுல் உரோமானிய நாணயங்களான டினுர், டிராச்சம் இவைகள் தென்னுட்டில் வழக்கத்தில் இருந்தன எனலாம்.

8. மதுரை ஜில்லாவில் கிடைத்த புதையல்களில் அநேக தாமிர நாணயங்கள் கிடைத்தன.

மேலே குறித்த குறிப்புகளை நன்ருக ஊன்றி ஆராய்ந்தால் அடியில்கண்ட இரண்டு முடிவுகள் நம் மனதிற்குத் தோன்றும்.

1. தமிழ் நாட்டில் பத்தாவது நூற்றுண்டு வரையில் உரோமானிய நாணயங்கள் செலாவணியில் இருந்தன.

2. தென்னுட்டில் உரோமர்களுடைய குடியேற்ற ஸ்தலம் ஒன்று இருந்திருக்கலாம்; என்பவைகளே.

இவை உண்மையாயின் இரண்டு சந்தேகங்கள் தோன்றும். அக்குடியேற்ற ஸ்தலம் எங்கேயிருந்தது? அது எப்பொழுது அழிந்தது? அதைப்பற்றி தமிழர் ஏன் எழுதி வைக்கவில்லை? மேலும் உரோமானியருடைய பெயரே தமிழ் மொழியில் ஏன் காணும்? உரோமானியர் வர்த்தகத்தில் அத்தனை பிரசித்தி பெற்றிருந்தால் அவர்கள் பெயரையும் கூட தமிழர் ஏன் குறிக்கவில்லை? ஆனுல் உரோமானியருக்குப் பதிலாக யவனரை (கிரேக்கர்) ஏன் குறித்திருக்கவேண்டும்? இந்த ஐயப்பாடுகளுக்கு தகுந்த விடையை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வெளியிடவேண்டியது அவசியம்.

## 12. அதிகமான்.

கிறிஸ்தவாப்தத்தின் போது கொங்கு நாட்டில் பல மன்னர்கள் வெவ்வேறு அரண்களைத் தலைமை நகர்களாகக்கொண்டு ஆண்டிருத்தல்வேண்டும். காவேரிநதிக்குக்கிழக்கே உள்ளபாகத்தைக் கீழைக்கொங்கம் என்று அழைக்கலாம். அப்பாகம் முழுவதும் வெகு நூற்றாண்டுகளாக அதிகமான் பரம்பரையினர் ஆண்டு வந்தார்கள். அவர்களுடைய தலைநகர் தகடூர் என்பது. அவ்வூர் தற்காலத்துத் தருமபுரி என்று அவ்வூர் ஆலயத்துக் கல்வெட்டுக்களால் அறிவோம். அந்நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த அதிகமான் வம்சத்தினர் அவ்வூருக்குத் தெற்கேயுள்ள பிராந்தியத்தைத் தங்கள் ஆளுகைக்குள் உட்படுத்தியிருந்தார்கள். ஒரு காலத்தில் அவர்களுடைய அரசு தெற்கே நாமக்கல் வரைக்கும் எட்டியிருந்தது. நாமக்கல்லில் உள்ள பெருங்கற்குன்றில் இரண்டு கற்குகை ஆலயங்கள் இருக்கின்றன. அவை மகாவிஷ்ணுவின் ஆலயங்கள். இரண்டாவது குகையில் ஒரு கல்வெட்டில் அவ்வாலயத்திற்கு அதியேந்திர விஷ்ணுக்கிரகம் என்ற பெயர் இருந்ததாகக் கண்டிருக்கிறது. இதனால் இவ்வாலயம் அதிகமானால் ஆக்கப்பட்டது என்று அறியமுடியும். ஆகவே, நாமக்கல் அதிகர்களுடைய ஆளுகைக்குள் இருந்தது என அறியலாம்.

இனி, அதிகர்களைப்பற்றி அடிக்கடி பண்டைப் பாண்டியர்களின் சாசனங்களில் அறிகிறோம். அச்சாசனங்களில் அதிகர்களைக் கொங்குநாட்டு மன்னர்கள் என்றே காண்கிறோம். வேள்விக்குடிச் சாசனத்தின்படி நெடுஞ்சடையன் பராந்தகன் என்ற பாண்டிய மன்னன் கொங்கு அரசர்களை ஓட்டினதாக அறிகிறோம். மற்றொரு சாசனத்தில் அப்பாண்டிய அரசன் தகடூர் அதிகமானை அயிரூர், புகலியூர், ஆயிரவேலி என்ற இடங்களில் வென்றதாகவும் காண்கிறோம். இது நடந்தது கி. பி. 8-வது நூற்றாண்டு. ஆகவே அதிகமானுடைய பரம்பரை 8 நூற்றாண்டுகளாக அரசு புரிந்திருக்க வேண்டுமென்று அறியலாம்.

அதிகமான் பரம்பரையில் சங்கத்தார் காலத்திலிருந்த முதல் அரசன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன். இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். யுத்தத்தில் பேர்பெற்ற வீரன். பல பகை மன்னரைப் போரில் வெற்றி கொண்டவன். இவன் வீரர்கள் வகுப்பாகிய மழவர்களுக்குத் தலைவன்: அதனால் இவன் ஆண்ட ஒரு பாகத்திற்கு மழகொங்கம் என்ற பெயரும் ஒரு காலத்தில் ஏற்பட்டது. இவன் தலைமையூர் தகடூர். இவன் மலை குதிரைமலை. சேரமானுக்கு உறவினன். ஆகவே, பனை மாலையை மாலையாகக் கொண்டவன். இவன் மகன் பொருட்டெழினி.

இவ்வரசன் பல புலவர்களை ஆதரித்தான். இவனைப் புகழ்ந்து ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார் என்ற புலவர்கள் பாடியிருக்கின்றார்கள். ஒரு காலத்தில் ஒரு அருமையான கருநெல்லிப் பழத்தைத் தான் உண்பதற்குப் பதிலாக ஔவையாருக்குக் கொடுத்துப் பெரும் புகழைப்பெற்றான். பின்னொரு நாள் காஞ்சி நகரத்தில் ஆண்ட தொண்டைமான்களின் பகையின்றி அன்புபெற வேண்டி ஔவையாரைத் தூது விடுத்தான். கோவலூரை ஆண்ட மலையமான் திருமுடிக் காரியின் பேரில் போருக்கு எழுந்து அவனை வென்றான். அப்போரை வியந்து பரணர்பாடியிருக்கின்றார். அக்காலத்தில் சேர நாட்டில் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற ஒரு மன்னன் இருந்தான். முன் தோற்றுப்போன திருமுடிக்காரி சேரமானிடம் அடைக்கலம் புகுந்தான். சேரமான் கொல்லி நாட்டை ஆண்ட ஓரியின்மீது படையெடுத்தான். ஓரிக்கு உதவியாக அதிகமான் அஞ்சி சென்றான். அப்போது ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அதிகமான் தோற்றுத் தன் தகடூர்க் கோட்டைக்குள் புகுந்தான். சேரமான் தகடூரை முற்றுகையிட்டான். அப்போது ஔவையார் அதிகமானைக்கடும்போர் புரியச்செய்து உற்சாகம் ஊட்டினாள். எனினும் அதிகமான் அப்போரில் விண்ணுலகடைந்தான். ஔவையார் அவனை மிகவும்பாராட்டி

அவன் மகன் பொகுட்டெழினுக்குப் பட்டம் சூட்டி வாழ்த்தினன்.

இவ்வதிகமானுடைய முன்னோர்கள் தேவர்களைப்போற்றி வழிபட்டு விண்ணுலகிலிருந்து கரும்பை மண்ணுலகிற்குக் கொண்டுவந்தனர் என்பர். ஆகவே விவசாயக் கலையிலும் இவ்வம்சத்தார் மிகவும் வல்லவர்கள் என்று அறியலாம். ஆகவே, அதிகமானுடைய பரம்பரையானது வெகு புராதனமானது என்று அறியலாம்.

## 13. மௌரியரும் கோசரும்.

கிறிஸ்தவாப்தத்திற்கு முந்தி 3-வது நூற்றுண்டில் வட இந்தியாவில் பாடலிபுரத்தில் மௌரியர்கள் என்ற ஒரு வம்சத்தார் வெகு கீர்த்தியுடன் அரசாண்டு வந்தது நாம் அறிவோம். அவ்வம்சத்தில் சந்திரகுப்தனும் அசோகனும் பேர்பெற்ற மன்னர்களாக இருந்தார்கள். அசோகர் காலத்தில் இந்தியா தேசம் முழுவதும் அவன் ஆளுகைக்கு உட்பட்டது நாம் அறிவோம். தக்ஷிணத்தில் பெரும்பாகம் அவன் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. அவ்வம்சத்தாராகிய மௌரியர்கள் தென்னுட்டில் படையெடுத்து வந்ததுண்டா என்பதும், கொங்கு நாட்டிற்கு அவர்கள் வந்ததுண்டா என்பதும் ஆராயத்தக்க செய்திகள் ஆகும்.

மேலும்,கோசர் என்ற ஒரு வகுப்பார் பண்டைக்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அவர்களில் ஒரு பிரிவார் கொங்கு நாட்டில் இருந்ததாகவும் தெரிகிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குத் திருவிழா நடத்தியவர்களில் கொங்கு மண்டலத்துக் கொங்கிளங்கோசரும் ஒருவர். இக்கோசர்கள் யார்? இவர்களுக்கும் கோயமுத்தூர் என்ற ஊருக்கும் சம்பந்தமுண்டா? என்பது மற்ருெரு கேள்வி.

மௌரியர்களையும் கோசர்களையும் சேர்த்து ஒரு கட்டுரையில் எழுதுவானேன் என்று கேட்கலாம். அகநானூற்றில் ஓரே

செய்யுளில் இவ்விருவரையும் சேர்த்துக் கூறியிருப்பதே அதற்குக் காரணமாகும். அச்செய்யுள் அடியில்கண்டபடி இருக்கிறது.

"வெல்கொடித் துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியி
லின்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்.
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
விலங்குவெள் ளருவிய வறைவாய்.

அகம் 251. 6 14.

இதில் கோசர்களுக்கு மோகூர் பணியாமையினால் மோரியர் படையெடுத்து வந்தார்கள் என்றசெய்தி கண்டிருக்கிறது. இதில் கண்ட மோகூர் தலைவர் யார் என்று தெரியவில்லை. சேரன் செங்குட்டுவன் மோகூர் தலைவரின் மீது போர்புரிந்து வென்ற செய்தி பதிற்றுப்பத்து 44, 49 செய்யுள்களில் காண்கிறோம் அவையாவன.

நுண்கொடி யிழிஞை வெல்போ ரறுகை
சேண னுயிருங் கேளென வொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையா பூசற்
கான்கடா வுறீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
யொழுகை யுய்த்த கொழுவில் பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றுங் குராலம் பறந்தலை
முரசுடைத் தாயத் தரசுபல வோட்டித்
துளங்குநீர் வியலக மாண்டினது கழிந்த
மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே.

பதிற் 44. 11. 10—23.

எஃகுதுரந் தெழுதருங் கைகவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை யதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி.

பதிற் 49. 11. 6. 17.

பதிற்றுப்பத்தில் இச்செய்யுள்களில் கண்டிருக்கும் மோகூர் அகநானூற்றில் கண்ட மோகூராக இருந்தாலும் இருக்கலாம். அகநானூற்றில் கண்டபடி மோகூரின் மீது கோசர்கள் படையெடுத்தார்கள். அவர்கள் வெல்ல முடியாமற் போக மோரியர்கள் மோகூரின் மீது பின்னர் படையெடுத்தனர். ஆகவே, கோசர்கள் மோரியர்களுடைய நண்பர்களாக இருக்கலாம். மற்றொரு அகநானூற்றுச் செய்யுளின்படி கோசர்கள் துளுநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது அறியப்படும். அச்செய்யுள்

மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவிற் றுளுநாட் டன்ன.

அகம் 15, 11. 2—5.

என்பது. துளுநாடு கொங்காண் என்னும் பெயரோடு இப்போதும் வழங்கி வருகிறது. இதனைத் தமிழர்கள் கொண்காணம் என வழங்கினர். அந்நாட்டை நன்னன் என்ற அரசன் ஆண்டு வந்தான். இச்செய்தியை நற்றிணையில்

“கோண்கான நன்ன னன்னாட்
டேழிற் குன்றம் பெறினும் பொருள்வயின்
யாரே பிரிகிற் பவரே.”

நற். 391, 11. 6—7.

என்று காண்கிறோம். ஆகவே நன்னன் ஆண்ட கொங்காணம் என்னும் துளு நாட்டுக்குச் சேர்ந்த கோசர்கள் மோகூரின்மீது படையெடுத்தார்கள் எனத்தெரியவரும். மோகூர் எனப் பெயருடைய ஊர் கொங்கு நாட்டிற்கு வடக்கே மைசூர்பிராந்தியத்

தில் தென் பாகத்தில் உள்ள ஒரு ஊர். அவ்வூரை வடமேற்கே யிருக்கும் கொங்காணத்திலிருந்து கோசர்கள் படையெடுத்தார்கள். அவர்கள் ஜெயிக்கக் கூடாமையால் அவர்களுடைய நண்பர்களும் அவர்களுக்கு வடபுறத்தில் இருந்தவருமான மோரியர்கள் கோசருக்குத் துணையாக வந்து போர் புரிந்தார்கள். இந்த மௌரியர்கள் ஒரு வேளை வடநாட்டுப் பாடலீபுரத்தில் ஆண்ட மௌரியவம்சத்தினரின் சந்ததியாராக இருக்கலாம். கி. பி. 567 முதல் 597 வரையில் ஆண்ட சாளுக்கிய வம்சத்து கீர்த்திவர்மன் I என்ற அரசனுக்கு மௌரியர்கள் விரோதிகளாக இருந்தார்கள் என்று பம்பாய் கெஜட்டியர் 1. வா. ப. 257-ல் கண்டிருக்கிறது.

மௌரியர்களைப்பற்றியும் கோசர்களைப்பற்றியும் இன்னும் பல செய்யுள்கள் கிடைக்கின்றன. அவையாவன

விண்பொரு நெடுவரை யியறேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த வறை
அகம் 69. 11. 10—12.

ஒல்கியன் மடமயி லொழித்த பீலி
வான்போழ் வல்விற் சுற்றி நோன்சிலை
யவ்வார் விளிம்பிற் கமைந்த நொவ்வியற்
கணைகுர லிசைக்கும் விரை செலற் கடுங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த வறை.
அகம் 281. 11. 4—12.

வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித் தேர் மோரியர்
திண்கதிர்த் திரிதரக் குறைத்த
வுலக விடைகழி யறைவாய்.

புறம் 175. 11. 5—8.

மேலே கண்ட செய்யுள்களில் மோரியர்கள் யுத்தத்தில் வல்லவர்கள் என்று காண்கிறோம். இச்செய்யுள்களை ஆதார

மாகக்கொண்டு திரு. டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் சந்திரகுப்தன் அல்லது பிம்பிசாரன் காலத்தில் மௌரியர்கள் தென்னிந்தியாவில் படையெடுத்தார்கள் என்று கூறுகிறார். மேலும் அவர்கள் மதுரையை அடைந்து பொதியில் மலைமீது படையெடுத்ததாகவும் கூறுகின்றார். ஆனால் அவ்வித மான செய்திகளை திரு. P. T. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் மறுக்கிறார். பொதியில் என்பது பொதியமலையின் பேர் அல்ல வென்றும் ஒரு கிராமத்தின் பொது இடமாகிய ஆலமரத்தின் கீழ் உள்ள மன்றம் என்றும் திரு. ஸ்ரீ. அய்யங்கார் அவர்கள் மறுத்துக் கூறுகின்றார். மேலே கூறிய பாடல்களிலிருந்து மௌரியர்கள் தென்னாட்டின்மீது படையெடுத்தார்கள் என்பதைத் தவிர கொங்கு நாட்டிற்கு வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் மௌரியர், கோசர் என்ற இரு வகுப்பார் பெயர்களும் ஒரு செய்யுளில் இருக்கக்கண்டு அவர்களில் கோசரை கோவை நகருக்கு இணைத்துவிட்டு அது காரணத்தினால் இவ்விரு வகுப்பார்களும் கொங்கு நாட்டிற்கு வந்தார்கள் என்று இரண்டு அய்யங்கார்களும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இனி கோசர்களைப்பற்றிய பாடல்களை எழுதுவோம்.

நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
வொன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டும்.

குறுந்தொகை 73. 11. 2—5.

பறைபடப் பணில மார்ப்ப விறை கொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல

குறுந்தொகை 15—11.

மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன.

மதுரைக் காஞ்சி 11 507—589.

இம்மூன்று செய்யுள்களிலிருந்தும் ஒன்று மொழிக் கோசர், பொதியில் தோன்றிய நல்லூர்க்கோசர் நன்மொழி,

அவையகம் விளங்க நான்மொழிக்கோசர் என்ற அடைமொழி கள் கோசர்களைப்பற்றிக் கிடைக்கின்றன. அதாவது கிராமத் துச் சபைகளில் நன்மொழியாகவும் ஒரே மொழியாகவும் பேசக்கூடிய கோசர் என்று பொருள்படும். இவர்கள் நல் லூரிலும் மோகூரிலும் இருந்தார்கள் எனத் தெரியவரும். ஆகவே கோசர்கள் வாக்குவல்லமையும் நற்குணமும் பொருந் திய ஊர்த்தலைவர்கள் எனச்சொல்லலாம். ஆனால் திரு. ஸ்ரீ அய் யங்கார் அவர்கள் நான்மொழிக்கோசர் என்ற பதத்திற்குத் துளு, கன்னடம், தெலுங்கு, தமிழ் என்ற நான்கு மொழிகளை யும் பேசத் தெரிந்த கோசர் என்ற பொருள் படுத்துகிறார். மேலும் இந்நான்கு மொழிகளும் கோவை நகரத் தெருக்களில் இன்றும் பேசப்படுவதாகவும் கூறுகிறார். இதைத்தவிர துளு நாட்டுக்கோசர்கள் கொங்கின்மீது படையெடுத்து கோயம்புத் தூரை தங்கள் பெயரால் உண்டாக்கியதாகவும் கூறுகிறார். அதற்கு அறிகுறியாகக் கோசர்புத்தூர் என்பது கோயம்புத் தூர் என்று ஆனதாகவும் கூறுகிறார். இதே அபிப்பிராயத்தை திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் முன்னொரு காலத் தில் ஒரு உபந்நியாசத்தில் கூறியிருக்கின்றார்.

இவ்வபிப்பிராயம் ஒப்பக்கூடியதாக இல்லை. மேலே காட் டிய செய்யுள்களில் கொங்கு நாட்டின் பேர் எங்கும் காண வில்லை. கோயமுத்தூர் என்ற ஊர் சங்கத்தார் காலத்தில் ஏற் பட்டிருந்ததற்கு யாதொரு அத்தாக்ஷியுமில்லை. மேலேசொன்ன அபிப்பிராயம் வெறும் யூகமே தவிர, சான்றுகள் கொண்ட தன்று. கோயமுத்தூரில் துளு பேசியதை அய்யங்கார் அவர் கள் எப்போது கேட்டாரோ தெரியவில்லை. மேலும் கல்வெட்டு களின்படி கோவன்புத்தூர் என்பதுதான் சரியான பெயர் என் பதை அறியலாம். சோழன் பூர்வபட்டயம் என்ற ஒரு நூலின் படியும் இவ்வூர் ஒரு கோவன் என்ற இருளன் தலைவனால் ஏற் பட்டதென்றும் அறியவேண்டும். இவ்வூர் சுந்தரமூர்த்தி சுவா மிகள் காலத்திற்குப் பிந்தியே உண்டாக்கப்பட்டது என்பதும்

ஆராய்ச்சியில் கண்ட ஒரு செய்தியாகும். சிலப்பதிகாரத்தில் கொங்கு மண்டலத்து இளங்கோசர் என்ற ஒரு பதப்பிரயோகத்திலிருந்து இவ்வித அபிப்பிராயத்தை அய்யங்கார்கள் கொண்டார்கள் போலும்.

## 14. கொங்கு தேச அரசர்கள்.

சென்ற இதழ்களில் சரித்திர பாகங்களில் கிறிஸ்துவாப்தத்தின் ஆரம்பத்தில் அதாவது ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் வரை கொங்கு நாட்டின் சரித்திரத்தை ஒருவாறு தொகுத்து எழுதினோம். இனி கிறிஸ்தவாப்தத்தின் மூன்றாவது நூற்றாண்டு முதல் சோழர்கள் கொங்கு நாட்டை ஆக்கிரமித்துக் கொண்ட காலம் அதாவது 9-வது நூற்றாண்டுவரை உள்ள சரிதத்தை ஆராயவேண்டி வரும். அக்காலத்திய சரித்திரத்தைப்பற்றி கூறக்கூடிய கல்வெட்டுகளோ அல்லது இலக்கிய நூல்களோ கொங்கு நாட்டில் நாளதுவரை கிடைக்கவில்லை. ஆனால் "கொங்கு தேச ராஜாக்கள்" என்ற பெயர் கொண்ட ஒரு கையெழுத்துப் பிரதி அரசாங்கத்தார் கையெழுத்துப் புத்தக சாலையில் இருக்கின்றது. மதுரைப் பாண்டியன் புத்தக சாலையில் இருக்கும் பிரதியில் உள்ளபடி செந்தமிழில் முந்தி பிரசுரித்திருக்கிறார்கள். இந்நூலில் கொங்கு தேசத்தை ஆண்ட அரச பரம்பரையைப்பற்றி சொல்லியிருக்கிறது. ஆதிமுதல் ஆண்டுவந்த அரச பரம்பரையினருடைய விவரம் முழுவதும் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. வடமொழிப்பதங்கள் அதிகமாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. வசன நடையும் தற்கால நடையைப்போல் இருக்கின்றது. இந்நூலை ஆராய்ந்து படித்த ஒரு சரித்திராசிரியர் இது பதினாறும் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு சரித நூல் என்று கூறியிருக்கின்றார். ஆனால் அந்நூலின் நடையைப் பார்க்குமிடத்து அது இன்னமும் பிந்திய காலத்தியதாக இருக்கலாம் என்று தோன்றும். இந்நூல் எழுதியவர் இன்னார்

என்றுவது அது இன்ன இடத்தில் எழுதப்பெற்றது என்று வது தெரியவில்லை.

ஆகவே இந்நூலில் கண்ட சங்கதிகள் உண்மையாய் இருக்குமா என்று கூட ஐயம் ஏற்படலாம். ஆனால் நூலில் கண்ட பல விஷயங்களைக் கவனித்துப்பார்த்து அவைகளை மற்ற அக்கம் பக்கத்துத் தேசங்களின் சரித விஷயங்களோடு ஒத்திட்டுப்பார்க்கும் பக்ஷத்தில் பல விஷயங்கள் ஒத்திருப்ப தால் இந்நூல் சரித்திர ஆராய்ச்சிக்கு ஒத்ததான ஒரு நூல் என்று கூறவேண்டும். முதலிலிருந்து ஆண்டதாகச் சொல்லி யிருக்கும் அரசர்களின் பெயர்களும் அவர்கள் ஆண்ட இடங் களின் பெயர்களும் சுத்த வடமொழிப் பெயர்களாக இருப் பதைப் பார்க்கும்போது வடமொழி அதிகமாகக் கலக்காத நாடாகிய கொங்கு நாட்டில் இப்பெயர்கள் எங்கே வந்தன என சந்தேகிக்கலாம். ஆனால் ஒரு சமாதானம் கூற முடியும். நான்கு ஐந்து நூற்றாண்டுகளாக நூலாசிரியர்கள் வடமொழிக் கலப்பையே மேன்மையானதென்று கொண்டிருந்தார்கள். சுத்தமான தமிழ் வார்த்தைகளுக்கும் வடமொழிப்பெயர் தேடிக்கொடுத்து அதனையே உபயோகப்படுத்துவார்கள். அரசர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நாடு, நகரம், நதி, குளம் முதலியவைகளுக்கும் தமிழ்ப் பெயர் வழக்கத்திலிருக்க வட மொழிப்பெயரை நூல்களில் எழுதிவிடுவதுண்டு. பிட்டி தேவனை விஷ்ணுவர்த்தனன் என்றும், இளையாழ்வாரை இராமாநுஜர் என்றும், பெரிய நம்பியை மகாபூர்ணர் என்றும், கொடுமுடியை மகுடாபுரி என்றும், பட்டீசுவரரை கோஷ்டீஸ்வரர் என்றும், பச்சைநாயகியை மரகதாம்பாள் என் றும், கப்பினி நதியை கபில நதி என்றும் மொழிபெயர்த்துப் பதிப்பித்த நோக்கத்தை இங்கு அறிந்து கொள்ளலாம். இந் நோக்கத்தை அனுசரித்தே பிற்காலத்தில் எழுதிய கொங்கு தேச ராஜாக்களின் சரித்திராசிரியர் தமிழ்ப் பெயர்களை வட மொழிப்பெயர்களாக மாற்றியிருக்கக்கூடும்.

கொங்கு தேசத்தை ஆரம்பத்தில் ஆண்டதாகக் கூறியிருக்கும் ஏழு எட்டு அரசர்கள் தங்களுக்குத் தலைநகராக ஸ்கந்தபுரத்தைக்கொண்டு அங்கே ஆண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்கந்தபுரம் எது என்று தெரியவில்லை. அப்பெயர் உலகவழக்கில் வழங்கும் ஒரு தமிழ் மொழியின் வடமொழிப் பெயராக இருக்கலாம். பேரூருக்கு ஆதிபுரி, முத்தூருக்கு முக்தாபுரி, வள்ளலூருக்கு அன்னதான சிவபுரி என்ற பெயர்கள் போல எனலாம். பிறகு பத்தாவது தலைமுறையில் வந்த கொங்கு மன்னன் தளவனபுரத்தை தலைநகராகக்கொண்டு அரசாண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தளவனபுரம் என்பது தலைக்காடு என்ற தமிழ்ப்பெயரின் வடமொழியாகும். வடமொழிப் பெயர் புகுத்திவிட்டதற்கு ஒரு கதைகட்டி அதனை ஒரு புராணத்திலும் ஏற்றியிருக்கிறார்கள். இவ்விரண்டு உதாரணங்களாலேயே கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூலில் உள்ள பெயர்களெல்லாம் புனைப்பெயர்களாக இருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். ஆனால் சரித்திர உண்மைகள் இந்நூலில் பெரிதும் உண்டு என்றே கொள்ளவேண்டும். அவைகளைப்பற்றி அதிகமாக அடுத்த இதழில் எழுதுவோம்.

## 15. கொங்குதேச அரசர்கள்.

### முதல் வமிசம்

கொங்கு தேச ராஜாக்கள் என்ற தமிழ்க் கையேட்டுப் பிரதியில் கொங்கு நாட்டில் கங்க வம்சத்தார் அரசாண்டதற்கு முந்தி ரெட்டி காலத்தில் தோன்றிய ஏழு அரசர்கள் இந்நாட்டை ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் பெயர்கள் அடியிற் கண்டபடி குறிக்கப்பட்டிருக்கின்றன.

1. ஸ்ரீ வீரராஜ சக்கரவர்த்தி.
2. கோவிந்தராயர்.
3. கிருஷ்ணராயர்.

4. கலவல்லவராயர்.
5. கோவிந்தராயர்.
6. சதுர்ப்புய கன்னரதேவ சக்கரவத்தி.
7. திருவிக்கிரமதேவ சக்கரவர்த்தி.

இவர்கள் எல்லாரும் ரெட்டி குலத்தவர்கள் என்றும் அவர்கள் ஸ்கந்தபுரத்தில் அரசாண்டார்கள் என்றும் அந் நூலில் கூறப்பட்டுள்ளன. அரசு தகப்பனுக்குப் பின் மகன் அவனுக்குப்பின் அவன் மகன் என்ற முறையில் சென்றது என அறிகிறோம். அவர்கள் சூரிய வம்சத்தவர்கள் என்றும் அறிகிறோம். ஒருவனைவிட ஒருவன் அதிககீர்த்தியோடு ஆண்ட தாக எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாரும் ஜெயின மதத்தினர்கள். கடைசி அரசன் சைவ மதத்தில் பிரவேசித்த தாகத் தெரிகிறது. இனி இவர்களைப்பற்றி சிறிது விவரமாகக் கூறுவோம்.

1. ஸ்ரீ வீரராஜ சக்கரவர்த்தி. இவ்வரசன் கலியுகத்தில் முதலில் கொங்கு தேசத்தில் ஸ்கந்தபுரத்தில் ரெட்டி குலத்தில் தோன்றி அத்தேசத்திற்கு அரசனாகிக் கிரீடம் தரித்து சகல பாக்கியத்தையும் அடைந்து நல்ல ஞானமுடையவனாக அர சாண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வரசன் கலியுகத்தில் எந்த ஆண்டில் அரசாண்டான் என்பது தெரியவில்லை. ஸ்கந்த புரம் என்பது கொங்கு தேசத்தில் எங்கு உள்ளது என்பதும் தெரியவில்லை. லேசன் (Lassen) என்ற ஆசிரியர் ஸ்கந்தபுரம் என்பது கஜ்ஜல்ஹட்டிக் கணவாயில் இருக்கலாம் என்று கூறு கிறார். கஜ்ஜல்ஹட்டிக் கணவாய் என்பது கோபிசெட்டிப் பாளையம் தாலூக்காவுக்கும் கொள்ளேகாலம் தாலூக்காவுக் கும் மத்தியிலுள்ள மலைப்பிராந்தியம். ஆனால் ஸ்கந்தபுரத்தைப் பற்றி வருணிக்கும் காலத்தில் நஞ்சை நிலங்களுக்குமத்தியிலும் நதியோரமாகவும் இருப்பதாகக் கூறியுள்ளதால் அது மலைப் பிராந்தியத்தில் இருக்கமுடியாது. சில அறிஞர்கள் அது தாரா

புரமோ அல்லது கரூரோ எனச் சந்தேகிக்கின்றார்கள். ஏனெனில் கொங்கு மன்னர்கள் சோழபாண்டியர்களோடு அடிக்கடி கலந்துகொண்டவர்களாய் இருந்தபடியால் அன்னார்களுடைய நாட்டு எல்லைகளுக்கு அடுத்தாற்போல ஸ்கந்தபுரம் இருக்கக் கூடும் என்ற ஒரு காரணத்தைக் காட்டுகிறார்கள். கஜ்ஜல்ஹட்டியில் ஒரு பாழடைந்த கோட்டை இன்னும் இருக்கின்றது. தாராபுரத்திலும் கரூரிலும் கோட்டைகள் இருந்தன. ஆனால் அவைகள் எவ்வளவு பழமையானவை என்பதைப்பற்றிக் கூற ஆதாரங்கள் இல்லை.

மேலும் இவ்வரசன் ரெட்டி குலத்தில் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ரெட்டிகுலம் என்பது எந்தக் குலம் என்று தெரியவில்லை. வடக்கே தெலுங்கர்களில் ரெட்டி குலத்தார் விசேஷமாக இருக்கின்றார்கள். ஐந்தாறு நூற்றாண்டுகளாக அவர்களில் மன்னர்களும் ராஜ கவிகளும் இருந்திருக்கிறார்கள். அந்தக் குலமா என்பது ஒரு கேள்வி. ஆனால் இந்நூலின்படி இவ்வரசன் சுமார் 20 நூற்றாண்டுகளுக்கு முந்தி இருந்திருக்கவேண்டும். அத்தனைப் புராதன காலத்தில் தெலுங்கர்கள் பிரபலமான நிலைக்கு வந்திருக்கவில்லை. அவர்களிலும் ரெட்டி குலத்தார் பெயரையே கேட்டறியோம். தெலுங்கு மொழியும் தெளிந்த நிலை அக்காலத்தில் அடையவில்லை. ஆகவே இவ்வரசன் தெலுங்கு நாட்டு ரெட்டியாக இருந்திருக்க முடியாது. மேலும் இந்நூலை ஆராய்ந்த சில சரித்திர அறிஞர்கள் ரெட்டி என்ற பதத்தை ரட்ட என்று எழுதியிருக்கிறார்கள். ஐந்நாறு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தக்ஷணப்பீடபூமியில் அரசாண்ட இராஷ்டிரகூட நாட்டு அரசவம்சத்தை ரட்ட குலம் என்று அழைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசனும் ஒரு வேளை அப்படிப்பட்ட பண்டைய குலத்தில் பிறந்திருக்கலாம். இனி இவ்வரசன் ஸ்கந்த புரத்தில் தோன்றிக் கொங்கு தேசத்திற்கு அரசனாகி கிரீடம் தரித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இவன் தோன்றிய வம்சம் அரச வம்சம் அல்ல

வென்றும், ஆனால் பின்னர் இவன் அரசன் ஆனான் என்றும் அறியலாம். ஆகவே சாதாரண குடியாக இருந்த இவன் தன்னுடைய பலத்தினால் அந்நாட்டிற்கு அரசனாகிவிட்டான் என ஊகிக்கலாம். இச்சில செய்திகளைத் தவிர இவன் எவ்வளவு ஆண்டு ஆண்டான், என்னென்ன காரியங்கள் செய்தான் முதலான விவரங்கள் ஒன்றும் சொல்லப்படவில்லை.

2. கோவிந்தராயன். இவ்வரசன் முன் சொன்ன வீரராஜ சக்கரவர்த்தியின் மகன். இவன் சூரிய வம்சத்திலே கொங்கு தேசத்து ஸ்கந்த புரத்திலே பட்டங்கட்டிக்கொண்டு தன் தகப்பனைக்காட்டிலும் மிக்க கீர்த்தியோடு உலகில் தனக்குச் சமானமாக ஒருவரும் இல்லை எனும்படி சந்தோஷத்துடன் அரசாண்டான் என்று கண்டிருக்கிறது. இவ்வரசனைப்பற்றிக் கூறும் போதுதான் இவனுடைய வம்சம் சூரிய வம்சம் எனக்கூறப் பட்டிருக்கிறது. ஆகவே ரெட்டி குலத்தார் சூரிய வம்சத்தார்கள் ஆகவேண்டும். ஒருவன் எத்தனைத் தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும் தன் வல்லமையால் அரசனாகிவிட்டால் அவனுக்கு ஒரு கோத்திரமும் ஒரு அரச பரம்பரையும் ஒரு வம்சமும் கற்பித்துவிடுவது நம் நாட்டாருடைய ஒரு குணம். மிகவும் பிரக்கியாதியைத் தருவதற்காக சூரிய வம்சம் சந்திர வம்சம் என்ற இரண்டில் ஒன்றை ஏற்படுத்திவிடுவது சகஜம். ஆகவே இவ்வம்சத்திற்குச் சூரிய வம்சத்தைக் கற்பித்துவிட்டார்கள் போலும். இவ்வரசன் தன் தகப்பனைவிட அதிக கீர்த்தியோடு ஆண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. புதிதாக ஏற்படும் அரச பரம்பரையில் முதல் அரசனைவிட இரண்டாவது அரசன் அக்கம்பக்கத்து நாடுகளைப் பிடித்துப் பிரக்கியாதியோடு ஆளுவது உலக வழக்கம்.

3. கிருஷ்ணராயன். இவன் கோவிந்தராயனுடைய மகன். இவனும் ஸ்கந்தபுரத்திலே பட்டங்கட்டிக்கொண்டு தன் தகப்பனைக் காட்டிலும் நீதி சாஸ்திரப்படி நியாயம் விசாரித்து இரர்ஜ்ஜியத்திலே இவனுக்குச் சமானம் ஒருவரும்

இல்லையென்று சொல்லும்படி கீர்த்தி அடைந்து அரசாண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவன் அரசாட்சியில் நன்றாக நீதி செலுத்தினான் என்பது மாத்திரம் பெறப்படுகிறது. இவனைப் பற்றி மற்ற விவரங்கள் தெரியவில்லை. ஆகவே இவன் போர் முதலிய செய்கைகளில் கீர்த்தி பெறவில்லை என கூறலாம்.

5. கலவல்லவராயன். இவன் கிருஷ்ணராயனுடைய மகன். இவனும் ஸ்கந்த புரத்தில் தன் தகப்பனைக் காட்டிலும் நீதி சாஸ்திரப்படி நியாயம் விசாரித்து அரசாண்டு மிக்க இன்பம் அனுபவித்துக் கீர்த்தி அடைந்தான் என்று கூறப்பட்டுள்ளது. இவனைப்பற்றி நீதி செலுத்தியதும் இன்பம் அனுபவித்ததும் தவிர வேறு விவரம் கிடைக்கவில்லை. இவன் கலைகளில் வல்லனாக இருந்து அவற்றின் இன்பங்களை நுகர்ந்துகொண்டே காலம் கடத்தினான்போலும்.

6. கோவிந்தராயன்:—

இவன் முன்சொன்ன கலைவல்லவராயனுடைய மகன். "இவனும் ஸ்கந்தபுரத்தில் அவன் தகப்பனுக்குப் பிறகு பட்டங்கட்டிக்கொண்டு அவனைக்காட்டிலும் மிக்க கீர்த்தியடைந்து பகை அரசர்களைப் போரில் வென்று அவர்களிடத்தில் கப்பம் வாங்கிப் பல தர்மங்களைச் செய்து அரசாண்டான். மேலும் இப்பேர் அரசன் சாலிவாகன சகவருஷம் 4 சுபானு வைகாசி சுத்த பௌர்ணமியில் அரிஷ்டனன் என்னும் பெயரை உடைய ஜெயினனுக்குப் பூமி சாசனம் பண்ணிக்கொடுத்தான். இப்பூமி குசைத கிராமத்தில் சேர்ந்திருக்கிற பொம்மகொம்மன் என்கிற கிராமத்திலே ஏழு கண்டகம் பெஸ்தி ஜெயின தேவர் அர்ச்சனை நிமித்தம் கோயிலுக்குக் கொடுத்த தருமமாம். இக் கோயிலில் பூசை பண்ணுகிற அரிஷ்டனனுடைய குரு பிரஞாபனுசாரி, அவன் ஸ்ரீ காரோகவிருக்ஷமூலத்திலே வாசம்பண்ணுகிறவன். அக்காலத்திலிருந்த ஜெயினர்களுடைய பேர் பஞ்சநந்தி, சொக்கப்பன்னன், ஜெயதேவன்."

மேலே சொன்ன விவரங்களினால் இவ்வரசன் போரில் வல்லவன் என்று தெரிகிறது. இவன் காலம் கி. பி. 82 என்று தெரிகிறது. அந்த ஆண்டில் இவன் ஜெயின அர்ச்சகருக்குக் கொடுத்த தானத்தைப்பற்றியும் அந்த தானத்தின் விவரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. குலசதம், பொம்மகம்மன், கண்டகம் முதலிய பெயர்களைப்பார்த்தால் அந்நிலம் இருந்த நாடு தற்காலம் மைசூர் பிராந்தியத்தில் அல்லது கொள்ளே காலம் தாலூக்காவில் இருந்திருக்கிறது எனலாம். கண்டகம் என்பது தானிய அளவை. கொங்கு நாட்டுச் சலகைக்குச் சமானம். அக்காலத்தில் ஆரிஷ்டணன் அவன் குரு ப்ரஞாபனுசாரி, பஞ்சநந்தி, சொக்கப்பன், ஜெயதேவன் முதலான ஜெயினர்கள் இருந்தார்கள் என அறிகிறோம். பெஸ்தி என்பது ஜெயினர்களுடைய ஆலயத்திற்குப் பெயர். இவ்வரசன் ஜெயின சமயத்தில் பற்றுடையவன் என அறிகிறோம். இவ்வரசன் செய்து கொடுத்த சாசனம் கிடைக்கவில்லை. அச்சாசனத்தில் கண்ட வருடம் 4 சகம் என்பது எத்தனை உண்மை என்பது ஆராயத் தக்கது.

**6. சதுர்ப்புய கன்னரதேவ சக்கரவர்த்தி:—**

இவனைப்பற்றி அடியில்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது. "சூரிய வம்சத்திலே ரெட்டி குலத்திலே தோன்றிய அவனுக்கு நான்கு கைகள் இருந்தன. அவன் கொங்க தேசத்திலே ஸ்கந்தபுரத்திலே பட்டம்கட்டிக்கொண்டு அரசாண்டான். இவன் போர்க்குச் செல்ல வேண்டுமானால் போர்க்குரிய வாத்திய முழக்கக் களிப்புடனே சென்று பகைவரை வென்று திரும்புவன். இவன் வீணை பரதம் முதலிய சாஸ்திரங்களில் வல்லவன். இவன் கோதண்டம் முதலிய நாகாதி மந்திரம் தெரிந்தவன். அக்காலத்து மூவர்கள் ஜைன சாஸ்திரம் தெரிந்தவர்கள். அவர்களில் குருநாத நந்தி என்கிறவன் அவர்களுடைய சாஸ்திரத்தில் மிக்க பாண்டித்தியம் உடையவன். அவன் அம்மதத்

தின் கண்ணுள்ள அரசருக்குச் சாஸ்திரோபதேசம் செய்பவன். அவன் வயோதிகமுடையவனுயிருந்தான்.''

இவ்வரசனுடைய வரலாறு நம்பத்தகாததாய் இருக்கிறது. கிருஷ்ணனுடைய பெயர் கொண்டதினுலே இவனுக்கு நான்கு கைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது போலும். இவன் போரில் வல்லவனுயிருந்ததுமன்றி சங்கீதம், பரதம், மந்திரம் முதலியவைகளிலும் வல்லவனும். இவன் காலத்திலும் ஜெயினர்கள் பிரபலமாக இருந்தார்கள்.

7. திருவிக்கிரம தேவ சக்கரவர்த்தி:—

இவன் கன்னர தேவனுடைய மகன். இவனைப்பற்றிய வரலாறு அடியிற்கண்டபடி. "அவன் மகன் திருவிக்கிரம தேவ சக்கரவர்த்தி. ஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அரசாண்டான். அக்காலத்து அவனுக்குச் சங்கர தேவர் தோன்றி ஜைன மதத்தைவிட்டு சைவ மதத்திலே வரும்படி கட்டளையிட்டனர். அவன் பின்னர்ச் சிவஞானம் அடைந்து வாழ்ந்திருந்தான். அவன் தென் தேசத்திற்குப்படையெடுத்துப்போம்பொழுது பூதான முதலிய தானம் பண்ணிச் சென்று சேர சோழ பாண்டிய மண்டலங்களை வென்று வந்தான். அப்பொழுது அவன் தானம் பண்ணின சாசனமாவது சாலிவாகன சக வருஷம் 100 சித்தார்த்தி 53 வைகாசி மாதம் சுக்கில பக்ஷத்திலே திங்கட்கிழமையில் சந்திரகிரணம் பாதி பிடிக்கிற வேளையிலே திருவிக்கிரம சக்கரவர்த்தியானவன் பார்த்துவாச கோத்திரத்திலே தோன்றிய வித்துவான் நரசிங்க பட்ட குருவுக்குப் பஞ்சதச கோடி கிராமம் தர்ம சாசனம். இந்த கிராமம் கொங்க தேசத்திலே அந்தச் சங்கரதேவர் கோவில் ஸ்கந்தபுரத்திலே இருக்கிறது. இவன் கன்னட தேசத்தையும் அரசாட்சி செய்து வந்தான்."

மேலே சொன்ன வரலாற்றினுல் இவ்வரசன் ஜெயின சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறினுன் என்றும்

அதற்குக் காரணமாயிருந்தவர் சங்கர தேவர் என்றும் தெரிகிறது. இவன் ஒரு சாசனம் சக வருஷம் 100 அதாவது கி. பி. 178-ல் சந்திரகிரகண காலத்தில் செய்ததாகத் தெரிகிறது. இவன் தர்மம் செய்த கிராமம் கொங்கு நாட்டில் இருந்ததாகவும் அச்சங்கர தேவர் கோயில் ஸ்கந்தபுரத்தில் இருப்பதாகவும் தெரிகின்றன. இச்சங்கர தேவர் யாராக இருக்கலாம்? அத்வைத மதத்தைப் பிரபலம் செய்த சங்கராச்சாரியாரோ? அப்படியாயின் மேலே சொன்ன காலம் சரியானதா? சங்கராச்சாரியருடைய காலத்தைப் பற்றி பல அபிப்பிராய பேதங்கள் உண்டு. சிலர் கிறிஸ்தவாப்தத்தின்போது என்பார்கள். சிலர் கி. பி. 788 என்பார்கள். பிந்தியதாயின் இச்சங்கரதேவர் அப்பெரியாராய் இருக்கமுடியாது. இவ்வரசனோடு இரட்டி வம்சம் நின்றுவிட்டது.

## 16. இரண்டாம் வம்சம்.

இதுவரை கொங்குநாட்டை ஆண்ட ரெட்டி வம்சத்து அரசர்களைப்பற்றிக் கொங்குதேச ராஜாக்கள் என்னும் நூலில் சொன்னபடி எழுதினோம். இனி அவ்வம்சத்துக்குப் பின் கொங்குநாட்டை ஆண்ட கங்க வம்சத்தாரைப்பற்றி அந்நூலிலே கூறியிருக்கிறபடி எடுத்துச் சொல்வோம்.

ரெட்டி வம்சத்துக் கடைசி மன்னன் விக்ரமதேவன் என்று கூறினோம். அவனுக்குப்பின் ஆண்ட முதல் கங்க வம்சத்து மன்னன் பெயர் கொங்கணி வர்மன் என்பது. ரெட்டி வம்சம் எவ்விதமாய் அழிந்தது அவ்வம்சத்திற்குப் பிறகு எவ்விதமாக கொங்கணி வர்மன் அந்நாட்டைப்பெற்றான் என்ற செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. ரெட்டி வம்சம் பிரபலமாய் ஆண்ட காலத்தில் கங்க மன்னர்கள் குறுநில மன்னர்களாய் இருந்திருக்கலாம் என்றும், ரெட்டி வம்சம் க்ஷீணதிசை அடையவே கங்க வம்சத்துக் குறுநில மன்னர்கள் தலைநிமிர்ந்து கொண்டு கலகம்செய்து சிங்காதனத்தைப் பிடித்துக்கொண்டி

ருக்கலாம் என்றும் சிலர் ஊகிக்கின்றார்கள். மேலும், கோவை ஜில்லா மானியலே எழுதியவர், கங்க வம்சத்தார் குடகு நாட்டிலிருந்து இந்நாட்டிற்கு வந்து நாட்டைக் கைப்பற்றினார்கள் என்று கூறுகிறார். இந்த இரண்டு வரலாறுகளுக்கும் யாதொரு ஆதாரமும் கிடையாது. கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூலிலும் இதைப்பற்றிய விவரம் ஒன்றும் இல்லை. இவ்வம்சத்தைப் பற்றி அந்நூல் சொல்வது அவர்கள் வம்சம் கங்க வம்சம் என்பதும் அவர்கள் கோத்திரம் கன்வயனச கோத்திரம் என்பதும் ஆகும்.

கொங்குநாட்டை கங்க வம்சத்தார் ஆண்டார்கள் என்பதைப்பற்றி எவரும் சந்தேகப்பட நியாயமில்லை. நாளதுவரை கிடைத்திருக்கும் சகலமான ஆதாரங்களிலிருந்தும் கங்கவம்சம் நீண்டகாலமாக ஆண்டு வந்ததென்பதும் அவ்வம்சம் கடைசியாக சோழ மன்னர்களால் அழிக்கப்பட்டது என்பதும் அறியலாம். அவ்வம்சத்தில் ஆண்ட அரசர்களின் பெயர்களும் இன்னவை என்று அறிவோம். முதல் அரசன் கி. பி. 189—ல் ஆள ஆரம்பித்தான். அவனுக்குப் பின் 20 அரசர்கள் ஆண்டார்கள். கடைசி மன்னனை சோழர்கள் 9-வது நூற்றாண்டின் கடைசியில் தொலைத்தார்கள். நாளது வரை கிடைத்திருக்கும் செப்பேடுகளும் இவைகளையெல்லாம் ஆதரிக்கின்றன. ஆனால் டாக்டர். பிலீட் என்னும் ஆங்கில ஆசிரியர் கொங்குதேச ராஜாக்கள் என்னும் நூலையும் அதனை ஆதரிக்கும் செப்பேடுகளும் நம்பத்தக்கவை அல்ல என்று எழுதியிருக்கிறார். அவருடைய கூற்றை நாம் ஒப்புக்கொள்வதற்கில்லை.

எகிப்து தேயத்தில் கண்டுபிடிக்கப்படும் கல்லறைகளிலிருந்து (Pyramids) சேலம் எஃகுவினால் செய்யப்பட்ட ஆயுதங்கள் கண்டெடுக்கப்படுகின்றன.

இரும்பிலிருந்து எஃகு செய்வதற்குத் தமிழ்நாட்டாரைத் தவிர வேறு யாருக்கும் அக்காலத்தில் வழிதுறை தெரியாதென்று கிரீஃச் உரோம் புலவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஆகையால் எஃகு வியாபாரமானது எகிப்து நாட்டில் Pyramids கட்டப்படுவதற்கு முன்னரேயேநடந்துவந்ததாகத் தெரிகிறது. அது சுமார் கி. மு. 10000 ஆண்டுகள் ஆகின்றன.

ஆகையால், கொங்கு மண்டலமானது 12000 வருடங்களுக்கு முன்னமேயே சுய ஆட்சியுடன் அன்னிய நாடுகளில் கப்பல் மூலமாய் வியாபாரம் செய்து வந்தது என்று கொள்ளுவதில்முரண் ஒன்றுமில்லை.

கி. மு. 326-ல் அலெக்ஸாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபொழுது புருஷோத்தமன் (Porus) என்னும் சக்கரவர்த்தி 38 பவுண்டு எடையுள்ள உருக்கை (Salem steel) அலெக்ஸாந்தருக்கு வெகுமதியாக அளித்தான் என்று சரித்திரம் கூறுகிறது.

' கி. மு. முதல் நூற்றூண்டிலேயும் அதற்கு முந்தியும் கொங்கு ஒரு தனிப்பட்ட மண்டலமாகவும் சுயஆட்சி உடையதாகவும், எஃகு, இரத்தினக் கற்கள், தங்கம் முதலிய வியாபாரங்களையுடையதாகவும், அன்னிய நாட்டாராகிய கிரேக்கர், உரோமர், எகிப்தியர் இவர்கள் நாடி வரக்கூடிய நாடாகவும் இருந்தது.

ஆனுல் கி.பி. 12-ம் நூற்றூண்டிலோ "காருலாம் கொங்கு நாட்டைக் கனவிலும் நினைக்கொணுதே" என்று 'கம்பர்' பாடும் படியாக அவ்வளவு தாழ்ந்த நிலைக்குக் கொங்குநாடு வந்து விட்டது.

வடகொங்கில் எஃகுவினுடைய வியாபாரமே போன்று மேல் கொங்கிலும் கடல் நிறமுள்ள ஒருவித இரத்தின வியாபாரம் (Sea green Beryl) நடைபெற்று வந்திருக்கிறது.

## 17. கங்கர்கள்

கங்க வம்சத்து முதல் அரசன் கொங்கணி வர்மன் என்பவன். இவன் முந்தி அரசாண்ட இரட்ட வம்சம் க்ஷீணதசை

அடைந்த பிறகு கொங்கு தேசத்தை ஆண்டான். இவனைப் பற்றிக் கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூல் அடியில் கண்டபடி கூறுகிறது.

"காணவாயன் கோத்திரத்திலே கங்கை குலத்திலே உண்டாயிருக்கிற ஸ்ரீமத் கொங்கணிவர்ம தர்ம மகாதிராயன் கொங்கதேசத்திலே விசய ஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அரசாண்டனன். இவன் போருக்குச் செல்லும்போது தன்னுடைய கத்தியினாலே ஒரு கல்லை வெட்டித் துண்டித்துவிட்டு இக்கல் துண்டமானதுபோலப் பகையரசருடைய உடலைத் துண்டம் பண்ணுவேனென்று சபதம் செய்து பகையரசர்களை அவ்வண்ணமே வெட்டியெறிந்தனன். தனக்குக் கீழ்ப்படிந்து வணங்கிய அரசர்களிடத்திலே கப்பம் வாங்கி வந்தனன். இவன் கொங்கர் குலத்திலே செய்கிற பாபமாகிற அந்தகாரத்துக்குச் சூரியனைப் போன்றிருந்தனன். இவன் பெரிய சம்பத்துடையவனாய் இருந்தபடியினால் ஸ்ரீமது என்ற பட்டம் எய்தினான். தர்ம சாஸ்திரப்படி ஆண்டதினால் தர்ம மகாதிராயன் என்று பெயர் பெற்றனன். இவன் பெயர் கொங்க தேசத்து பட்டயத்து ஸ்ரீமத் கொங்கணிவரம் தர்ம மகாதிராயன். மிக்க கீர்த்தி அடைந்து அரசாண்டனன் என்று காணப்படுகிறது. இவன் பட்டாபிஷேகம் சக-வருடம் 101 பிரமோதூத-ஸு."

மேற்சொல்லிய வரலாற்றில் கொங்கணிவர்மன் கங்கை குலத்திலே பிறந்தவன் என்று காண்கிறோம். தற்காலத்திலும் கூட கொங்கு வேளாளர்கள் கங்கை குலத்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆகவே இவ்வரசன் கொங்கு வேளாளரின் பூர்வீக சந்ததியில் பிறந்தவனாய் இருக்கலாம். இவன் பட்டாபிஷேகம் செய்துகொண்டது விஜயஸ்கந்தபுரம். இதனைத் தற்கால தாராபுரம் என்று சொல்லுவார்கள். ஆனால் இதனை நிச்சயிக்கத் தகுந்த ஆதாரம் இப்பொழுது கிடைக்க

வில்லை. இவன் பெற்ற பட்டங்கள்: ஸ்ரீமத் தர்ம மகாதிராயன் என்பவை. இவன் பட்டாபிஷேகம் பெற்றது சகம் 101 பிரமோதூத-ஸூ அதாவது கி. பி. 179.

**2. மாதவ மகாதிராயன்:—** இவனைப்பற்றி அந்நூல் சொல்லுகிறதாவது.

"தர்ம மகாதிராயன் புத்திரனாகிய ஸ்ரீமத் மாதவ மகாதிராயன் விசய ஸ்கந்தபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு தன்னுடைய தகப்பனைக்காட்டிலும் அதிகமாக குடிகளுக்கிதம் செய்து அரசாண்டனன். இவன் கல்வி கேள்விகளில் தேர்ச்சியுற்றவன். அனேக கவிராயர்களைத் தன்னவையில் அழைத்து வைத்துப் பாதுகாத்து வந்தவன். கற்பக விருக்ஷம்போல யார்வந்து என்ன பொருளைக்கேட்டாலும் அவர்கட்கு இல்லை என்று சொல்லாமல் கொடுத்துக் கீர்த்தி பெற்றவன். இங்ஙனம் கொடுத்தலாலே உலகத்தவர்கள் ஸ்ரீமத் மாதவ மகாதிராயனென்று பெயரிட்டு அழைத்து வந்தனர்."

இவன் முன் சொன்ன கொங்கணீவர்மனுடைய புத்திரன். தன் தகப்பனுக்குப்பிறகு பட்டத்துக்கு வந்தான். இவனுக்குக் கல்வியில் பிரீதி அதிகம். தர்மம் அதிகமாகச் செய்வான்.

**3. அரிவர்ம மகாதிராயன்:—** இவன் மேலேகண்ட மாதவனுக்கு மகனாகத்தோன்றிக்கொங்குநாட்டை ஆண்டான். இவன் வரலாறு அடியிற்கண்டபடி.

"மேற்கூறிய அரசன் புத்திரனாகிய ஸ்ரீமத் அரிவர்ம மஹாதிராயன் கொங்கதேசத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு கன்னட தேசத்திற்குத் தலைநகரமாகிய தளவன் புரத்திலே வீற்றிருந்து கொங்கதேசத்தையும், கன்னட தேசத்தையும் அரசாண்டு வந்தனன். இவன் சாமபேத தான தண்டமாகிய சதுர்வித உபாயங்களினாலே பகையரசர்களை அடக்கிக்

கப்பம் வாங்கி வந்தான். சமுத்திர மத்தியிலே இருக்கிற தேசங்களிலும் இவன் மகாசூரன் என்று பெயர் பெற்றிருந் தனன். இவன் இலக்குமியோடு கூடியிருக்கிற ஹரியைக் காட்டிலும் அதிக செல்வமுடையவனுயிருந்த காரணத்தி ஞலே இவனை ஸ்ரீமத் ஹரிவரும மகாதிராயனென்று அழைத் தார்கள். இவன் அனேக ஜனங்களுக்குப் பூதானம் செய்தான். இதுவன்றிச் சக-வருடம் 210 சௌமிய வருடம் பங்குனி-மீ சுக்கில பட்சம் பௌர்ணமி பிரஹஸ்பதி வாரத்திலே தகடூர் என்ற கிராமம் தலைக்காட்டின் முன்னேயிருக்கிற பேட்டையில் குடியிருக்கிற சிப்பாய்கள் சகலர்க்கும் மூன்று பங்கும் அந்த கிராமத்திலே இருக்கிற மூலஸ்தானேஸ்வர சுவாமி கோயில் பூஜை செய்கிற பிராமணனுக்கு ஒரு பங்குமாகத் தானம் பண்ணினுன்."

கங்க வம்சத்தில் மூன்ருவது அரசனுகிய இந்த அரிவர் மன் கொங்கு தேசத்தோடு கன்னட தேசத்தையும் சேர்த்து அரசாண்டான். கன்னட தேசத்திற்குத் தலைநகராக இருந்த தளவனபுரம் என்னும் தலைக்காட்டைத் தனக்கு ராஜதானி யாகக்கொண்டான். இவ்வரசன் முதல்கொண்டு தலைக்காடு கங்கவம்சத்தாருக்குத் தலைநகராகிவிட்டது. இவ்வரசன் ப்ராக்கிரமசாலியாக இருந்து பல மன்னர்களையும் தன்னடிக் கீழ் அடக்கிக்கொண்டு அவர்களிடம் கப்பம் வாங்கி வந்தான். இவன் பல தான சாசனங்கள் செய்திருக்கிறுன். அவைகளில் ஒன்று சகவருடம் 210 அதாவது கி. பி. 285 சௌமிய வருஷம் பங்குனி-மீ பௌர்ணமி வியாழக்கிழமை யன்று தகடூர் என்ற கிராமத்தைத் தன் போர்வீரர்களுக்கும் மூலஸ்தானேஸ்வர சுவாமிக்கும் தானம் பண்ணினுன்.

4. சாலிவாகன சகம் 210-ல் ஆண்ட அரிவர்ம மகாதி ராயன் மகன் விஷ்ணுகோப மகாதிராயன் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தான். அவனைப்பற்றி நூல் கூறுவது என்னவெனில்:—

"மேற்கூறிய அரசன் புத்திரனாகிய விஷ்ணுகோப மகாதிராயன் தளவனபுரமென்கிற தலைக்காடென்ற பட்டணத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அரசாண்டான். இவன் சதுரங்கசேனைகளுடனே பூர்வ திக்கிலுள்ள அரசர்களை வென்று சூரனெனப் பெயர் பெற்றிருந்ததோடு ஜீவகாருண்யமுள்ளவனாய்ப் பிராமண போஜனம், குருபூஜை முதலிய செய்து பலவிடங்களில் விஷ்ணு கோவிற் கட்டி முடித்து விஷ்ணுவினிடத்தில் மிக்க பக்தியுடையவனா யிருந்தான். அதனால் இவனை விஷ்ணுகோப மகாதிராஜனென்று பெயரிட்டழைத்து வந்தார்கள். இவன் கொங்க தேசத்தையும், கன்னடதேசத்தையும் ஆண்டு வந்தனன்."

இதனால் இவ்வரசன் போரில் வல்லவன் என்றும் விஷ்ணு பக்தன் என்றும் தர்மம் செய்து வந்தான் என்றும் அறிகிறோம். இவன் காலத்தில் கொங்குநாடும் கன்னட நாடும் சேர்ந்திருந்தன. இவ்வரசனுக்குப் பிள்ளையில்லாமல் தத்து எடுத்துக்கொண்டான்.

5. அத்தத்துப் புத்திரன் பெயர் வளத்துக்கொண்ட மாதவ மகாதிராயன். அவன் சிறிது காலமே ஆண்டதினால் அவனைப்பற்றி விசேஷமாக ஒன்றும் சொல்லப்படவில்லை.

6. அம்மாதவராயனுடைய மகன் கிருஷ்ணவர்மன் அவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தான். அவனைப்பற்றி நூல் கூறுவதாவது:—

"மேற்கூறிய அரசன் புத்திரனாகிய கிருஷ்ணவர்ம மஹாதிராயன் தளவனபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அரசாண்டனன். இவன் முன்னிருந்த மாதவ மகாதிராயனுக்குக் கணவாய்மலைச் சமீபங்களிலுள்ள சில தேசங்களைவிட்டு ஆண்டுவரும்படி சொன்னான். அவன் அங்ஙனமே ஆண்டு வந்தனன். இக் கிருஷ்ணவர்ம மஹாதிராயன் கொங்க, கன்னட தேசங்களிலே மிக்க நீதியுடனே

அரசாட்சி செய்துவந்ததோடு தளவனபுரத்திலே சில சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அக்கோயில்களுக்குச் சில பூமிகளைத் தானம் பண்ணி நித்திய நைமித்திகங்கள் குறைவின்றி நடந்து வரும் வண்ணஞ்செய்தனன். இவன் குடிகளுக்கு வரும் தீங்குகளை நீக்கித் தன் தகப்பனைக்காட்டிலும் மிக்க நீதியுடனே அரசாட்சி செய்து வந்தனன்.''

இவ்வரசன் சிவபக்தன். தலைக்காட்டில் சிவாலயங்களைக் கட்டி வைத்து அவைகளுக்காக நிலங்களையும் தானம் செய்து வந்தான். இவ்வரசனுக்கும் புத்திரன் இல்லை. ஆகவே முந்தி ஸ்வீகாரம் பெற்ற குலத்திலேயே இருந்த பரிகுலாத்திரிராயன் மகன் டிண்டீகராயன் அவனுக்குப்பின் ராஜ்யத்தை அடைந்தான். ஆனால் அப்போது மந்திரிகளும் சேனாதிபதிகளும் அதில் திருப்தியடையாமல் கிருஷ்ணவர்மனுடைய தங்கை மகனான கொங்கணி என்பவனுக்குப் பட்டம் கொடுத்தார்கள்.

7. அக் கொங்கணிவர்மனுடைய சரிதம் அடியில் கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது.

''இங்ஙனம் இருக்குங்காலத்து, மந்திரிகளும் சேனாதிபதிகளும் யோஜனை பண்ணி, கிருஷ்ணவர்ம மஹாதிராயன் தங்கை மகனாகிய கொங்கணி என்பவனுக்குத் தளவனபுரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக் கொங்கதேசமும், கன்னடதேசமும் ஆளும்படி செய்தார்கள். இச்சம்பவம் சகவருடம் 288 பிரபவ வருடம் நடந்தது. இவன் பல சாஸ்திரங்களையுங் கற்றுப் பண்டிதனாயிருந்ததோடு பல மன்னர்களையும் வென்று கப்பம் வாங்கிப் பல தருமங்கள் செய்துவந்தான். இவன் தன் முன்னோர்களைக் காட்டிலும் குடிகளுக்கு இதஞ் செய்து வந்தான். அக்காலத்து இவன் வம்சத்திலுள்ள எறேசந்திர டிண்டிகராயன் ஆட்சியிலே சில நாடுகளிருந்தன. அவற்றுள் ஆலூர்க்குச் சமீபத்திலேயுள்ள பமேருளகேனூர்க் கிராமத்தை அவன் சர்தார் பெண்சாதிக்குத்தானம் பண்ணினான்.''

முந்திய அரசன் கிருஷ்ணவர்மன் புத்திரனில்லாமல் இறந்தபடியால் ஆண் சந்ததியில் வந்த வம்சம் அவனோடு நின்றுவிட்டது. அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த கொங்கணீவர்மன் அவ்வரசனுடைய தங்கை மகன். ஆகவே வம்சம் மாறிவிட்டது எனலாம். இவன் பட்டத்திற்கு வந்தது சக வருஷம் 288. அதாவது கி. பி. 366. இவன் காலத்தில் பல மன்னர்களை வென்று கப்பம் வாங்கப்பட்டது. ஸ்வீகார வம்சத்தில் வந்த டிண்டீகராயனும் சில நாடுகளை ஆண்டு வந்தான். ஆகவே இவ்விராஜ்ஜியத்தில் இரண்டரசர்கள் இருந்தார்கள் எனக்கூறலாம்.

8. துர்வினீதன் :—

முன்கூறிய கொங்கணீவர்மனுக்குப் பிறகு அவன் மகன் துர்விநீதராயன் பட்டத்திற்கு வந்தான். இவனைப்பற்றி நூல் கூறுகிறதாவது.

"மேற்கூறிய அரசன் புத்திரனாகிய துர்வனீதராயன் தளவன் புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணியரசாண்டனன். இவன் மந்திர சாஸ்திரங்களைக் கற்று மந்திரசித்தியடையப் பெற்று அம்மந்திர பலத்தால் பகையரசர்களையும், அவர்கள் சேனைகளையும்வென்று ஜெயமடைந்தனன். இவனைப் பகையரசர்கள் பிரளய காலத்து ருத்திரனென்றே எண்ணிப் பயப்படுவார்கள். கிருதார்ச்சுனீயமென்னும் நூலிற் பதினைந்து சருக்கங்களுக்கு டீகா பண்ணினவன். இவன் சேர, சோழ, பாண்டிய, ஆந்தர, கலிங்கமுதலாகிய தேசங்களை வென்று கப்பம் வாங்கி வந்தவன். இவன் பக்கத்தில் பகைவர்கள் வருவதற்குப் பயப்படுகிறபடியினாலே துர்விநீதராயனென்று பெயர் பெற்றனன்."

இவ்வரசன் மிகவும் பராக்கிரமசாலி என்று தெரிகிறது. அதனுடன் கல்வியிலும் வல்லவன் என்று தெரிகிறது. வடமொழியில் பாண்டித்யம் பெற்றுக் கிருதார்ச்சுனீயம் என்னும்

வடமொழி நூலுக்கு உரை எழுதினவன். அந்நூல் பாரவி என்னும் ஒரு சிறந்த வடமொழிக் கவிஞர் எழுதியது ஆகும். மேலும் இவ்வரசனே குணாட்டியர் என்ற முனிவர் பைசாச பாஷையில் எழுதிய பிருகத்கதை என்ற ஒரு பெரிய நூலை வடமொழியில் மொழி பெயர்த்தவனாகும். அதனையே தமிழில் ஒரு பெருங்காவியமாக கொங்குவேள் என்ற ஒரு சிறந்த கவிஞர் எழுதியிருக்கின்றார். இதனுடைய விவரத்தை மகாமகோபாத்யாய உ. வே. சுவாமிநாதையர் அவர்கள் அந்நூல் பதிப்பில் எழுதியிருக்கும் முகவுரையிலும், பாதர் டேபார்டு (Father Tabbard) என்ற ஆராய்ச்சியாளர் மிதிக் (Mythic Journai) சஞ்சிகையில் எழுதியிருக்கும் வியாசத்திலும் காணலாம். ஆகவே இக்கொங்குநாட்டு அரசன் கல்வித்திறமையின் மூலமாகத்தான் மாக்கதை என்ற பெருங்காவியம் தமிழ் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது. இவ்வரசன் கி. பி. 482ல் பட்டாபிஷேகம் பெற்றதாக செந்தமிழ் 15 ம் தொகுதி 142-வது பக்கம் கூறுகின்றது.

முன் சஞ்சிகையில் இவ்வரசன் தகப்பன் கொங்கணிவர்மனைப்பற்றி கூறுகையில் இந்நூலில் கண்டபடி அவன் சக வருஷம் 288-ல் இருந்ததாக எழுதினோம். ஆகவே துர்வனீதன் காலம் 488 ஆக எப்படி இருக்கமுடியுமோ?

9. புஷ்கரராயன் :— இவ்வரசனைப் பற்றி அடியிற்கண்டபடி நூல் கூறுகிறது.

"மேற்கூறிய அரசன் மகன் புஷ்கரராஜன் தளவன் புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு தன் தகப்பன் துர்வினீதராயனைக் காட்டிலும் வில்வித்தை, மந்திர சாஸ்திரம் முதலியவைகளைக் கற்றறிந்தனன். இவன் தன் தகப்பனால் பகையரசர்களிடத்திலிருந்து கைக்கொள்ளப்பட்ட தேசங்களிலே கப்பம் வாங்கினதோடு எல்லா அரசர்களும் தன்னை வணங்கும்படி செய்து பிராமணர் முதலியோருக்குத் தர்மங் கொடாதபடியினாலே உலகத்திலுள்ளவர்கள் இவனைப் பிரமஹத்திராயனென்று பெயரிட்டு அழைத்தார்கள்."

இவ்வரலாற்றினல் இவ்வரசன் பிராமணர்களுக்கு விரோதியாயிருந்தானென்று அறிகிருேம். இவன் புறச்சமயச் சார்பாக இருக்கலாம்.

10. திருவிக்கிரமராயன்:— இவன் புஷ்காராயனுடைய மகன். இவனைப்பற்றி அடியில்கண்டபடி சொல்லப்பட்டிருக்கின்றது.

"மேற்கூறிய அரசன் மகன் திருவிக்கிரமராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு உலகத்திலுள்ள அறுபத்து நான்கு வித்தைகளிற் பதினன்கு வித்தைகளை நன்ருகக்கற்றறிந்தனன். இவன் சாம, பேத, தான தண்டமாகிய சதுர்வித உபாயங்களினுலே அநேக தேசங்களைக் கைவசம் பண்ணிக் கப்பம் வாங்கித் துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் பண்ணி அரசாண்டனன்."

11. பூவிக்கிரமராயன்:— மேற்சொன்ன திருவிக்கிரமராயனுடைய மகன். இவன் வரலாறு அடியிற்கண்டபடி கூறப்பட்டுள்ளது.

"மேற்கூறிய அரையன் மகன் தளவன்புரத்திலே பட்டமெய்தியது சாலிவாகன சகம் 461-வதுசித்தார்த்தி வருடமாம். இவன் பட்டமெய்தியபின் கொங்கு தேசத்தையும், கன்னட தேசத்தையும் ஆண்டு வந்தனன். இவன் தன் தகப்பனைக் காட்டிலும் தான தருமங்கள் செய்து அநேக தேசங்களையும் கைக்கொண்டு யானைக்கூட்டங்களைச்சேர்த்துவைத்துக் கஜபதியென்னும் பெயரும் பெற்றனன். இவன் யானைக்கொம்புகளாலே செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தனன். இவன் வெற்றிச் சின்னங்களுடன் தம் முன்னேர்களால் ஜெயம்பண்ணப்பட்ட தேசங்களிற் சென்று கப்பம் வாங்கிவந்தனன். சிலகாலம் சென்ற பின்னர் அத்தேசத்தரசர்கள் கப்பம் கொடாமையினுல் இவன் நால்வகைச் சேனைகளுடன் சென்று போர்செய்து சோழ, பாண்டிய, ஆந்திர, கலிங்க, மராட, மகாராஷ்டிர

தேசங்களையெல்லாம் வென்று கப்பம் வாங்கியரசாண்டனன். இவன் தளவன் புரத்திலேயுள்ள கோட்டையை நன்றாகக் கட்டினதோடு அநேக தருமங்கள் செய்து வந்தனன்.''

மேற்கூறிய வரலாற்றின்படி இவ்வரசன் பட்டத்திற்கு வந்தது கி. பி. 539 ஆகும். இவனுக்குக்கஜபதி என்ற ஒரு பட்டம் உண்டு. இப்பட்டம் பிற்காலத்தில் ஆந்திர தேசத்தில் விஜயநகர (வட சர்க்கார்) மன்னர்கள் கொண்டிருந்ததை நினைவூட்டும். இவன் தலைக்காட்டுக் கோட்டையை நன்றாகக் கட்டினது அவனுடைய சிறந்த காரியங்களில் ஒன்றாகும்.

12. கொங்கணிமகாதிராயன்:— இவன் முன் கூறிய பூவிக்கிரமராயனுடைய மகன். இவனைப்பற்றி அடியிற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"மேற்கூறிய அரசன் மகன் கொங்கணிமகாதிராயனென்பவன் நவரத்தின கசிதமாயிருக்கிற சிம்மாசனத்திலே மிக்க அலங்காரமாக இருந்துகொண்டு தன் தமையனைச் சேனாதிபதியாக்கி மற்றையரசர்களிடத்துக் கப்பம் வாங்கிக்கொண்டு வந்தனன். அத்தேசத்தரசர்கள் இவனுக்குக் கப்பம் கொடுக்காதபடியினாலே.........இருக்கிற சதுரங்க சேனைகளுடனே சென்று கலிங்க மராட முதலிய தேசங்களை வென்று கப்பம் வாங்கிப் பூவிக்ரமராயனன்று யாவரும்புகழ்மிக்ககீர்த்தியோடு தளவன் புரத்திலே கட்டிச் சீர்கேடாயிருந்த கோட்டையைச் செப்பஞ் செய்து அநேக தருமங்களைச் செய்து வந்தனன். சேனாதிபதியாகிய வல்லபாக்கிராயன் தம்பியின் கட்டளைப்படியே தேயங்களிலெல்லாஞ்சென்று கப்பம் வாங்கி வந்தனன். இவன் அநேக பகையரசர்களை வென்று கொங்கு, கன்னடதேச முதலிய தேசங்களையுமாண்டனன்.''

இவ்வரசனுடைய வரலாற்றினால் தமையன் இருக்க தம்பியும் பட்டத்திற்கு வரலாம் என்று தெரிகிறது. இவன் காலத்தில் கொங்கும் கன்னடமும் சேர்ந்திருந்தன,

*13.* ராஜகோவிந்தராயன்:— இவனைப் பற்றிய வரலாறு அடியிற்கண்டவாறு.

"மேற்கூறிய அரசன் மகன் இராஜகோவிந்தராயனென்பவன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு அரசாண்டனன். இவன் கங்கை வம்சத்திலே பிறந்தவருள்ளே மிக்க பரிசுத்தமானவன், வில்வித்தையிலே பரசுராமனையும், செல்வத்திலே இந்திரனையும் ஒத்தவன். இவன் எல்லா அரசர்களுடைய கிரீடங்களும் தன்னடியிற்படும் வண்ணம் அவர்களை யடக்கியாண்டனன். இவன் கையில் வில்லெடுத்துப் பணியாத அரசர்களையும் அவர்கள் படைகளையும் வைவச்சுதபட்டணத்துக்கு அனுப்புமாற்றலுடையவன். இவன் வீரசைவ மதத்திலே மிக்க விருப்புடையவன். ஆகையால் இவனை நந்திவர்மனென்று யாவரும் அழைத்தனர். இவன் சிலகாலம் முகுந்தபட்டணத்திலிருந்து அரசாண்டனன்."

இவ்வரசனுடைய வரலாற்றினால் வீரசைவமதம் இக்காலத்தில் பிரபலமடைந்து வந்ததென்று அறிகிறோம். மேலும் நாட்டின் தலைமைப் பட்டணமும் சிறிது காலம் முகுந்தப் பட்டணத்திற்கு மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. இம்முகுந்தப் பட்டணம் எது என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம்.

*14.* சிவகாமராயன்:—இவனைப் பற்றிய வரலாறு அடியிற்கண்டபடி.

"மேற்கூறிய அரசன் தம்பி சிவகாமராயனென்பவன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு தேவப்பிராமணரிடத்தில் வெகு பக்தியுடன் நீதி சாஸ்திரம் விசாரித்து இராச்சிய பரிபாலனம் பண்ணினான். அப்போது பூமிதானம் பண்ணினவயணம்:—

சிறிதுநாள் முகுந்தப் பட்டணத்திலே இருந்துகொண்டும் இராச்சிய பரிபாலனம் பண்ணினான். சாஸனம் பண்ணின வயணம்:—

சாலிவாகன சகம் வருஷம் வஸ்துகிரஹபாணயுத்ம் 591 பிரமோதூத ஸம்வத்ஸரம் 10 மாகமாசம் 10, உத்தராயண சத்துரு ராஜாக்களாகிற சிங்கத்துக்குக் கண்ட பேரண்டனு யிருக்கிற வேதசாஸ்திரந் தெரிந்து குணவானுயிருக்கிற விஷ்ணு வினுடைய குமாரன் வாசபேயனுக்கு உரியூர், ஒபளி, ஹளி ஹள்ளி சர்வமானியமாய்த் தானம் பண்ணிக்கொடுத்தான். இப்படி இன்னும் அநேக தர்மங்கள் பண்ணினுன்.''

இவ்வரலாற்றினுல் இவ்வரசனும் கூட முகுந்தபட்டணத் தில் சிறிது காலம் இருந்ததாகத் தெரிகிறது. இவன் காலம் கி. பி. 669 ஆகிறது.

15. பிரிதிவி கொங்கணி மகாதிராயன்:—

இவன் சிவகாமராயனுடைய பேரன். இவனைப்பற்றி நூலில் அடியில்கண்டமாதிரி சொல்லப்பட்டிருக்கிறது.

“அவன் மகனுக்கு மகன் பிரிதிவி கொங்கணிமகாதிராயன் தளவன்புரத்திலே பட்டங்கட்டிக்கொண்டு தனக்குச் சேனுதி பதியாயிருக்கிற ஸ்ரீ புருஷராயனை விஜயகந்தபுரத்திலே அவ னுக்குப் பன்னிரண்டு கிராமங்கொடுத்து அவன் அதிலேயிருந்து கொண்டு சத்துரு ராஜாக்களுடனே யுத்தம் பண்ணிச் செயித்து இராஜாவுக்குச் சந்தோஷம் பண்ணின படியாலே அவனுக் குச் சௌரிய பரணநரேந்திர சேனுதிபதியென்று பெயர் வைத் துப் பூமி கொடுத்த வயணம்:— சாலிவாகன சகம் வருஷம் 1. அஷ்டஷஷ்ட யோத்திர சதம் 968 பிரபவ வருஷம் 1 சித்திரை மீ சுக்கிலபட்சம் பஞ்சமியிலே அசுவனி நக்ஷத்திரத்திலே 1. சோமவாரத்திலே ஸ்ரீ புருஷராய சேனுதிபதி விசயஸ்கந்த புரத் திலே சேர்ந்த கணவாய் மேலேயிருக்கிற பன்னிரண்டு சோழ தேசமும் கிராமத்துடனேகூட விஜயஸ்கந்தபுரம் தர்மம் பண் ணிக்கொடுத்தான். அதற்குச்சாக்ஷி தன் குலத்திலே பிறந்திருக் கிற மந்திரி ராஜகுமாரர்கள் தெய்வசாக்ஷி மல்லிகார்ச்சுன சுவாமி இந்தப்படி தர்மம் பண்ணிக் கொடுத்தான். அவன் மிக

வும் அலங்காரத்துடனே இருக்கிற படியினுலேயும், நித்தியம் அவன் மனையிலே மங்களகரமாயிருக்கிற படியினுலேயும் அவனுக்குச் சிவகாமராஜனென்று பெயர்வந்தது. இவன் சந்தோஷமாக அரசாண்டனன்."

மேலே சொன்ன வரலாற்றிலிருந்து சிவகாம ராயனுக்குப் பிறகு அவன் பேரன் பட்டத்திற்கு வந்தான் என்றுதெரிகிறது. இவன் தலைக்காட்டிலேயே பட்டங்கட்டிக்கொண்டுஆண்டான். தனக்குக்கீழ் இருந்த மற்றொரு நகரமாகிய விஜயகந்தபுரம் என்ற ஊரைத் தன் சேனுதிபதிக்குக் கொடுத்தான். யுத்தத்தில் அவன் செய்த சிறந்த உதவிக்காக அவனுக்குத் தானம் கொடுக்கப்பட்டது. இதில் 12 சோழ தேசம் என்பதின் பொருள் விளங்கவில்லை. தர்மம் செய்த பன்னிரண்டு கிராமங்கள் கணவாய்க்கு மேலே இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதாகையால் அவைகள் மலை நாடுகளாக இருக்கலாம். தற்கால ஹாசனூர், கஜ்ஜலுஹட்டி மலைத்தொடர்களாக இருக்கலாம்.

16. இராஜமல்ல தேவராயன்:—

"அவன் தம்பி விசயாதித்த ராயனுடைய மகன் இராஜமல்ல தேவராயன் தளவன்புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு கன்னடதேசம், கொங்குதேசம் இவைகளையாண்டனன். அவன்ரூபத்திலே மன்மதனைப் போலவும், யுத்தத்திலே அர்ச்சுனனைப் போலவும், கெம்பீரத்திலே மேரு பர்வதத்தைப் போலவும், தயையிலே இராமரைப் போலவும், இப்படி அநேக குணங்களுடனேயும், மிக்க பராக்கிரமத்துடனேயும், திராவிட தேசத்துக்குப் போய் காஞ்சிப்பட்டணத்திலேயிருக்கிற திராவிட இராஜாக்களை ஜெயித்து சோழ ராஜாவுடன் யுத்தம்பண்ணி அவனுக்குப் பயம் பண்ணுவித்துப் பிறகு அவனுடனே சிநேகம் பண்ணிக்கொண்டு இந்தப்படி கெங்கா குலத்துக்கு மிக்க கீர்த்தி செய்துவைத்து அரசாண்டனன்."

இந்த வரலாற்றினுல் பிரிதிவி கொங்கணிக்கு மக்கள் இல்லை என்றும் அவனுக்கு முந்தியே அவனுடைய தம்பி விச

யாதித்யன் இறந்துவிட அவன் மகன் இராஜமல்ல தேவன் பட்டத்திற்கு வந்தான் என்று அறிகிறோம். இராஜமல்ல தேவனும் தலைக்காட்டிலேயே பட்டம் கட்டிக்கொண்டான். இவன் பராக்கிரம சாலியாக இருந்து காஞ்சிப்பல்லவர்கள் மீதும் போர்புரிந்து பின்னர் அவர்களோடு சிநேகம் செய்து கொண்டதாக அறிகிறோம்.

17. கெந்த தேவராயன்:—

'இராஜமல்லனுக்குப் பிறகு அவன் மகன் கெந்த தேவராயன் தளவன் புரம் என்ற தலைக்காட்டிலே பட்டம் கட்டிக்கொண்டு பல விருதுகளோடு தமிழ் மன்னர்களிடம் கப்பம் பெற்றுக்கொண்டு சோழ பாண்டிய அரசர்களோடு சிநேகம் செய்துகொண்டு அரசாண்டு வந்தான்.'

18. சத்திய வாக்கிய ராயன்:—

'இவன் கெந்த தேவனுடைய மகன். இவனும் தளவன புரம் என்ற தலைக்காட்டிலே பட்டம் கட்டிக்கொண்டு சத்தியம் தப்பாமல் அரசாண்டு வந்தான். ஆகவே இவனுக்குச் சத்தியவாக்கியன் என்ற பெயர் வந்தது.'

19. குணதுத்தம ராயன்:—

'இவன் சத்திய வாக்கியனுடைய தம்பி. சத்திய வாக்கியனுக்கு மக்கள் இல்லாததினால் அவன் தம்பி பட்டத்திற்கு வந்தான். இவனும் தளவன் புரத்திலே பட்டம் கட்டிக்கொண்டு கொங்கு கன்னட தேசங்களை ஆண்டுவந்தான். தங்கள் முன்னோர்கள் செய்துவைத்த தர்மத்தைச் சரியாகப் பரிபாலனம் செய்துவந்தான். மற்ற அரசர்களோடு நட்புரிமை பூண்டு நன்றாக வாழ்ந்தான்.'

20. இராஜமல்ல தேவராயன்:—

இவன் குணதுத்தம ராயனுடைய தம்பி. இவனைப் பற்றி அடியிற்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது,

"அவன் தம்பி இராஜமல்ல தேவராயன். தளவன்புரத்திலே பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு சகல ராஜாக்களுடைய விருதுமடைந்து அப்பொழுது பாண்டிய ராஜன் யுத்தத்திற்கு வந்தவிடத்திலே அவனுக்கு அபசெயம் பண்ணுவித்துச் சகல ராஜாக்களுள்ளும் இவனுக்குச் சமானமான பலசாலி இல்லை என்று கீர்த்தியை அடைந்து தன்னுடைய அண்ணனை விஜயஸ்கந்த புரத்திலேவைத்து அரசாண்டனன். அப்பொழுது அவன் அண்ணன் குணதுத்தமராயன் தருமம் பண்ணின வயணம்:— சாலிவாகன சகை வருஷம் நோபாவளி 89 விகாரி வருஷம் 303 ஆனி மாசத்திலே குருவாரத்திலே பூர்ணமியிலே புனர்வசு நக்ஷத்திரத்திலே 7 விஷ்ணு குஹாலயமென்கிற சைன தேவரது நவகரும பலிபூசை முதலான தருமத்துக்குக் கொங்கணீசுவர பகவந்தனுடைய சிஷ்யன் தேசசோம பகவந்தன் அவன் சிஷ்யன் அகோர சோம பகவந்தன், அவன் சிஷ்யன் சகிபூஷண மகாமுனி அவனுக்குத் தலைக்காடு நாடு வடகரை நாடு வீர அள்ளியென்கிற கிராமம் சர்வ மானியமாய்த் தர்மம் பண்ணிக்கொடுத்தான். அதன் பிறகு உபய காவேரி மத்தியத்திலே பச்சிமரெங்க நாயகருடைய சேவை வெகு நாளாய்க் கௌதம பூசை செய்து இருந்த பிறகு இந்தஸ்தலம் வனமாய்ப் போய்த் திருமலையனென்கிறவன் இரங்கநாயகர் கோவில்கட்டி வைத்துக்கொஞ்சம் பிரகாரங்கட்டி ஸ்ரீ ரங்கபுரமென்று பெயர் வைத்து அந்த கோயிலுக்கு மேற்கே தன் பெயர் வைத்துத் திருமலைதேவரென்று ஒரு விஷ்ணு பிரதிஷ்டைபண்ணி இந்த இரண்டுகோயிலுக்கும் பூஜை முதலான தருமம் நடப்பித்துக்கொண்டு வந்தான். சகை வருஷம் 894 ஆனந்த வருஷம் வைசாக மாதம் சுக்கில பக்ஷம் சப்தமி சுக்கிர வாரம்."

மேற்சொன்ன வரலாற்றினால் இவ்வரசன் ஸ்ரீ ரங்கப்பட்டணத்தைப் புதிப்பித்தவன் என்று தெரிகிறது. இவன் இருந்த காலம் கி. பி. 894 என்று மேலே சொன்ன வரலாற்றினால்

தெரிய வருகிறது. கங்க வம்சத்து அரசர்களில் இவன்தான் கடைசி அரசனாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவனுக்குப் பிறகு கொங்கு தேசம் சோழர் வம்சத்திற்குச் சேர்ந்துவிட்டதாக இந்நூல் கூறுகிறது. எவ்விதம் கொங்கு தேசத்தின் பட்டம் சோழர்களுக்குச் சேர்ந்துவிட்டது என்ற காரணத்தை இந்நூல் எடுத்துக் காட்டவில்லை. ஆகையால் சோழ வம்சத்தார் இந்நாட்டின்மீது படைஎடுத்துத்தலைக்காட்டைப்பிடித்து கங்க வம்சத்தைத் தொலைத்துக் கொங்கு நாட்டைத் தம் நாட்டோடு சேர்த்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். ஏனெனில் இவ்வரசனுடைய வரலாற்றுக்குப்பிந்தி அடியிற்கண்டபடி கூறப்பட்டிருக்கிறது.

"சோழ வம்சத்திலே கொங்குதேச பட்டம் சோழ வம்சத்திலே விச(ய)ரடராயன் மகன் ஆதித்திய வர்மராயன் சோழ தேசம் தஞ்சாவூரிலே பட்டங்கட்டிக்கொண்டு கொங்கு தேசத்துக்கு வந்து ராசா வேடர்களைச் செயம்பண்ணித் தலைக்காடென்ற பட்டணங் கட்டிக்கொண்டு இந்த ராச்சியங்களிலே அநேக அக்ரகாரம் சர்வமானியமாய்த் தருமம் பண்ணி அந்த அரசை அரசாண்டனன்."

இவ்வரலாற்றினால் முன்சொன்ன இராஜமல்ல தேவனுக்குப்பிறகு கொங்கு நாட்டிற்கு வந்து அரசாண்டது சோழவம்சத்து ஆதித்தியவர்மன் என்று தெரிகிறது. இவன் சோழவம்சத்தை ஸ்தாபித்த விஜயாலயனுடைய மகன். பராந்தகன் I என்பவனுடைய தகப்பன். கி.பி. 9-வது நூற்றாண்டில் சோழவம்சத்தில் பிரக்கியாதியோடு ஆண்டவன். மேலே கூறிய வரலாற்றுக்குப் பிறகு சோழ வம்சத்து அரசர்களுடைய பெயர்களும் அவர்களுக்குப் பிறகு ஒயிசள வம்சத்து அரசர்களுடைய பெயர்களும் இந்நூலில் காணப்படுகின்றன. ஆகவே கங்க வம்சம் இராஜ மல்லனோடு தொலைந்தது என்று நாம் கொள்ள வேண்டும்.

## 18. கங்கர்கள் அரசியல்

இது காறும் கொங்கு தேச ராஜாக்கள் என்னும் நூலில் இருந்து வீரராஜ சக்கரவர்த்தி முதல் விக்கிரமதேவன் வரை ஆண்ட ரெட்டி வம்சத்தின் வரலாற்றையும் பின்னர் கொங் கணிவர்ம மகாதிராயன் முதல் இராஜமல்லதேவன் வரை கங்க வம்சத்தினர் வரலாற்றினையும் கூறினோம். இவ்வரலாற் றிலிருந்து அரச பரம்பரையும் அவ்வரசர்கள் செய்த போர் முதலிய செயல்களையும் அறிவதுமாத்திரமன்றி அவ்வரசர்கள் நடத்திய அரசியல் முறைமையும் இந்நூலினால் அறியமுடியும். ஆங்காங்கு குறித்திருக்கும் குறிப்புகளைக் கொண்டு கங்கர் காலத்து அரசியல் முறையைச் சிறிது ஆராய்ந்து சொல்வோம்.

**கோங்கு அரசியல் முறை.**

நாட்டின் அரசியலை அரசன் தன் மந்திரிகளின் உதவி யைக்கொண்டு நடத்தி வந்தான். அவ்விதம் உதவிபுரிந்து வந்த மந்திரிமார்கள் பலர் இருந்தனர். அரசு ஒரே குடும்பத்தில் தலை முறை பரம்பரையாக வந்துகொண்டு இருந்தது. ஒரு அரசன் இறக்க அவனுக்குப்பின் அவன் மகனுக்குப் பட்டம் வந்தது. அரசனுக்கு ஆண் மக்கள் இல்லாத காலத்தில் தத்து எடுத்துக் கொள்வதும் உண்டு. ஒரு அரசனுக்கு மகன் இருந்தபோது அவ்வரசனுடைய தம்பிக்குப் பட்டம் கிடைக்காது. ஆண் மக்கள் இல்லாத காலத்து பட்டம் அரசனுடைய தம்பிக்குக் கிடைக்கும். அரச வம்சத்தில் பிறந்த ஏனைய குமாரர்களுக்கு அரசாங்கத்தில் பெரிய உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன.

அரசர்கள் பட்டாபிஷேகம்செய்துகொண்டு ஆளுவார்கள். அப்பட்டம் தலைநகரிலேயே வழங்கப்பட்டது. அரச சின்னங் கள் அநேகம் உண்டு. அவைகளில் சிம்மாசனம், கிரீடம் இவை கள் முக்கியமானவை. மேலும் வாள், முத்திரை, குடை, கொடி, வெண்சாமரை முதலியபிருதுக்கள் உண்டு. இவைகள் உயர்ந்த இரத்தினங்கள் முதலிய பொருள்களால் அலங்கரிக்கப்பட்டன.

அரசனுடைய பிருதுக்களுக்கும் ஏனையோருடையபிருதுக்களுக்கும் வெகு வித்தியாசம் உண்டு. அரசுக்குத் தகுந்தபடி சிறப்புடன் செய்யப்பட்டிருந்தன. அரசனுடைய மாளிகை மிகச்சிறந்ததாக இருக்கும். நகரின் மத்தியில் கட்டப்பட்டிருக்கும். அது அரணோடு கூடியது. சுற்றிலும் அகழி இருக்கும். அதற்குப் பாதுகாவல் உண்டு. அரசன் சகல கௌரவத்திற்கும் மூல காரணமாகக் கருதப்பட்டான்.

அரசர்கள் கொடுங்கோல் மன்னர்கள் அல்லர். தன்னிஷ்டப்படி நடக்கக் கூடியவருமல்லர். ஏனெனில் அவர்களுக்கு அரசியல் முறையைக் காட்ட பல மந்திரிமார்கள் இருந்தனர். அம்மந்திரிமார்களில் முக்கிய மந்திரி ஒருவர். அவருக்குக் கீழ் ஏனைய மந்திரிகள் பதவி வகித்திருப்பார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் சேனைத்தலைவர், பிரதானி, தூதர்கள், ஒற்றர்கள் முதலானவர்கள். அரசன் அறநூல் அல்லது நீதி சாஸ்திரப்படி அரசாட்சி செய்வான். அரசர்கள் எல்லோரும் படித்தவர்களே. நீதி சாஸ்திரத்தைப் படித்து அறிந்தவர்கள். விவகாரங்களைத் தீர்ப்பதில் தாமே நீதி சாஸ்திரத்தை அறிந்து நீதி செலுத்துவார்கள். விவகாரம் முதிர்ந்ததாயும் சிக்கலாயும் இருக்கும் பக்ஷத்தில் மந்திரி, சேனாதிபதி முதலிய உத்தியோகஸ்தர்களின் ஆலோசனையின்பேரில் அவ்விவகாரம் முடிவு செய்யப்படும். மந்திரிகளுடைய சபையன்றித் தற்காலத்துச் சட்டசபை போன்ற சபை இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அரசன் வீற்றிருக்கும் ஆஸ்தான மண்டபத்தில் மந்திரிமார்களும் ஏனைய உத்தியோகஸ்தர்களும், புரோகிதர்கள், வித்வான்கள், மகா ஜனங்கள் முதலியோர்களும் இருப்பதுண்டு. இப்பேர்ப்பட்டவர்கள் இருக்கும் சபையில் விவகாரம் தீர்க்கப்படும் பக்ஷத்தில் அவர்களுடைய சம்மதமே பெரும்பாலும் எதிர்பார்க்கப்படும். ஆகையால் அரசர்கள் சபை தற்காலச் சட்டசபைக்கு ஒத்திருக்கலாம். ஆனால் தேர்தல் ஒன்று மாத்திரம் இல்லை. போர் செய்ய நிச்சயித்தல் முதலான

ராஜரீகச் சங்கதிகளும் அரசர்கள் சபையிலேயே தீர்மானித்து வந்தார்கள். மந்திரிமார் முதலிய உத்தியோகஸ்தர்கள் அரசன் இஷ்டப்படிதான் நியமிக்கப்பட்டார்கள். அவன் இஷ்டப்படியே நீக்கவும் படுவார்கள். அரசனே உயர்ந்த நீதிபதி. போர்களிலும் அவனே தலைவன். பெரும்பான்மையாக அரசியல் நிர்வாகத்தில் பிராமணர்களுக்குச் செல்வாக்கு அதிகமிருந்தது.

கங்க வம்சத்து அரசர்கள் எல்லாரும் அறிவில் சிறந்தவர்கள். அரசியல் முறையை நன்றாக அறிந்தவர்கள். சிலர் நூலாசிரியர்களாவும் இருந்திருக்கின்றார்கள். ஒருவன் தரும சாஸ்திரத்தில் தத்து எடுக்கும் முறையைப்பற்றி ஓர் நூல் எழுதியிருக்கின்றான். மற்றொரு அரசன் கிராதார்ச்சுனீயம் என்னும் நூலுக்கு உரை எழுதியிருக்கின்றான். மற்றொரு அரசன் பிரகத்கதையை வடமொழியில் எழுதியிருக்கின்றான். பலர் மந்திர சாஸ்திரம் அறிந்திருந்தார்கள். பதிநான்கு கலைஞானங்களும் தெரிந்தவரும் உண்டு.

அரசியல் முறைக்காக இராஜ்ஜியத்தைப்பல நாடுகளாகப் பிரித்திருந்தார்கள். ஒவ்வொரு நாட்டிலும் உட் பிரிவுகளும் அதற்குள் கிராமங்களும் உண்டு. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிராமாதிகாரி கணக்குப் பிள்ளை உண்டு. இவர்கள் கிராம விவகாரத்தை கவனித்து வந்தார்கள். அதற்காக அவர்களுக்கு நிலங்கள் மான்யமாக விடப்பட்டன. அவர்கள் வரிவசூலித்து அரசனுக்குரிய பாகத்தைக் கொடுத்து விடுவார்கள். இவ்வதிகாரிகள் சிற்றரசர்களைப்போல் மதிக்கப்பட்டு வந்தார்கள்.

அரசனுக்குக் கீழ் இருந்த நாடுகளுக்கு நாட்டுத்தலைவர்கள் உண்டு, இவர்கள் அந்தந்த நாட்டிலுள்ள வரிவசூலுக்கு ஜவாப்தாரிகள். ஏனைய விவகாரங்களையும் தீர்ப்பார்கள். பிற்காலத்தில் இப்படிப்பட்ட தலைவர்களுக்குப் பாளையக்காரர்கள் என்ற பெயர் வந்தது.

அரசனுக்குப் பலவகைகளிலும் வருமானம் உண்டு. தனக்குட்பட்ட சிற்றரசர்கள் வருஷந்தோறும் கொடுக்கும் கப்பம்

வெகு முக்கியமானது. அதிலிருந்தே பெருந்தொகை கிடைக்கும். அச்சிற்றரசர்கள் தம் குடியானவர்களிடம் வரிவசூலிப்பார்கள். அரசர்கள் வெளிநாட்டாரோடு போர்செய்து ஜெயித்தால் அவ்வாறு ஜெயிக்கப்பட்ட அரசன் பெருந்தொகைகளைக் கப்பமாகக் கட்டுவான். அவ்விதமாகவும் வருமானம் கிடைக்கும். மேலும் அரசன் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு தலைவனை நியமித்திருப்பான். அத்தலைவர்கள் வரிகளை வசூலித்து அதில் ஒரு பாகத்தை அரசனுக்குக் கடமையாகச் செலுத்துவார்கள். அரசுக்குப் பேருதவி புரிந்தவர்களுக்கு வரியில்லாத மான்யங்கள் கொடுப்பதுண்டு. இதனால் வரிக்குப் பதிலாகத் தொழில் பெறப்பட்டது எனலாம். பெரும்பான்மையாக நிலவரி விலை பொருளாகவே கொடுக்கப்பட்டது. இந்நூலில் இவை தவிர வேறுவித வருமானங்கள் சொல்லப்படவில்லை.

**சேனை அமைப்பும் யுத்தமும்:—**

கங்கர்கள் நிரந்தரமான சேனைகளை வைத்திருந்ததாகத் தெரியவில்லை. அவசியமான காலங்களில் சேனைகளைத் திரட்டிப் பயிற்சி தருவார்கள். அவர்களுக்குச் சம்பளமும் நிரந்தரமாகக் கிடையாது. யுத்தங்களில் செய்த வேலைக்காக பூமி மான்யங்கள் கொடுப்பதுண்டு. அரசன்தான் பெருந்தலைவன். அவனுக்கீழ் சேனாதிபதியும் அவனுக்குக் கீழ் மற்ற சேனைத்தலைவர்களும் கீழ்ப்படிந்து நடப்பார்கள்.

இவ்விதமான யுத்த காலத்துச் சேனைகளைத்தவிர சாதாரண காலத்தில் அரண்மனை காக்கச் சிறு சேனைகள் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் தற்கால போலீசுக்குச் சமானம். அவர்களைச் சேனை வகுப்பில் சேர்க்கவேண்டியதில்லை.

அக்காலத்தில் போர்ச்செயல் மிகுந்த பக்குவம் அடைந்திருந்தது. அதனைச் சாஸ்திரீகமாகவே கற்றிருந்தார்கள். யானைகள் போரில் முக்கிய சாதனங்கள். பிறகு குதிரைகளும் காலாட்களும் வருவார்கள். வாள், ஈட்டி, வில், அம்பு, கதாயுதம் முக்

கிய ஆயுதங்கள். அரசர்களுக்கு ஆயுதப் பழக்கம் உண்டு. ஒரு இடத்தில் ஒரு பல்லவ அரசனை யானை மிதித்துக் கொன்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே யானைகளைப் போரில் முன்னணியில் நிறுத்துவார்கள் என ஊகிக்கலாம். யுத்தங்களில் ஒரு அரசன் சேனைக்கும் எதிர் அரசன் சேனைக்குமே பொது வாக யுத்தம் நடக்கும். இதிகாச காலங்களில் நடந்தபடி ஒரு தனிப்போர்வீரனுக்கும் மற்றொரு தனிப்போர்வீரனுக்கும் நடந்த யுத்தங்களைப் போல் கங்கர் காலத்தில் யுத்தம் நடை பெறாது. ஒரு யுத்தம் நடந்தால் அநேக போர் வீரர்கள் ஒரே காலத்தில் இறப்பார்கள். யுத்தம் ஆரம்பிப்பதற்குப் பறை கொட்டுவார்கள். அதைக் கேட்டவுடன் இருதிறத்துச் சேனைகளும் ஒருவரோடொருவர் தாக்குவார்கள். சில அரசர்கள் மந்திரங்களில் வல்லவர்கள் என்றும் எதிர் அரசனை மந்திரத்தினால் கட்டிக் கொல்வதுண்டென்றும் நூல் கூறுகிறது. இதனை இக் காலத்தில் நம்புவது கஷ்டம். யுத்தங்களில் ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தனிக் கொடியிருக்கும். கொடி வீழ்த்துவது வெற்றியின் அறிகுறியாகும். அநேகமாக யுத்தங்களில் சமாதானமாய்ப் போவது அரிது. ஒருவர் மற்றொருவருக்குக் கீழ்ப்படிந்து கப்பம் கட்ட நேருவதே யுத்த முடிவாகும். ஒவ்வொரு சமயத்தில் அரசனைத் தொலைத்து நாட்டைக் கைப்பற்றிக் கொள்வதுண்டு.

யுத்தங்கள் நேருவதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு அரசன் பராக்கிரமசாலியாக இருந்தால் அடுத்த நாட்டின்மீது படையெடுத்து அதைச்சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று யுத்தம் செய்வான். நாட்டு எல்லைத் தகராறுகள், கப்பங்கட்ட மறுத்தல் முதலியவைகளும் யுத்தங்களுக்குக் காரணங்கள். ஒவ்வொரு முறை அடுத்த நாட்டிலே தாயாதி விவகாரம் நேரிட்டால் ஒரு கட்சியைச் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குச் செல்வதுண்டு.

கப்பம் கட்டாத குறுநில மன்னர்களிடம் முதலில் தூது அனுப்புவது உண்டு. கொடாவிட்டால் யுத்தம்தான் முடிவு.

வேறு காரணங்களுக்கும் முதலில் தூதரை அனுப்பி ஒழுங்குக்கு வராவிட்டால்தான் யுத்தம் நடக்கும். ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் சிநேக பாவ ஒப்பந்தங்களும் ஏற்படுவதுண்டு. எதிரியின் பலத்தை அறிய ஒற்றர்களை அனுப்பி இரகசியங்களைத் தெரிவதுண்டு. பாதுகாப்பிற்காகக் கோட்டை கொத்தளங்கள் கட்டியிருந்தார்கள். அவைகளைத் தகர்க்க முற்றுகைகள் இடுவதுண்டு. யுத்த காலத்தில் கோட்டைக்குள் அவசியமான பொருள்களையெல்லாம் சேகரித்து வைப்பார்கள். நீர் நிலை எப்போதும் பாதுகாக்கப்படும். கோட்டைகள் மண்ணாலும் கல்லாலும் கட்டப்பெறும். சில கோட்டைகள் மலைகளின்மீது கட்டப்பட்டிருந்தன. இக்கோட்டைகளை அவ்வப்போது பழுதுபார்த்து வைத்திருப்பார்கள்.

நாட்டு மக்கள்:— கங்கர்கள் காலத்தில் கொங்குநாட்டு மக்கள் நிலைமையை அறிவதற்கு அந்நூலில் யாதொரு குறிப்பும் விவரமாக இல்லை. ஒரு இடத்தில் சோழர்கள் கொங்கு நாட்டு வேடர்களை வென்றதாகக் கூறியிருக்கிறது. இதனால் இந்நாட்டில் வேடர்கள் இருந்தனர் என ஊகிக்கலாம். ஆனால் வேடர்கள் என்ற பதம் வேட்டுவர்களைக் குறிக்கும் என்று ஊகிக்க வேண்டும். ஏனெனில் வேட்டுவர்கள் இந்நாட்டில் பிரபலமாய் இருந்தது பல நூல்களால் அறியக்கூடும். குறவர், வலையர் என்ற வகுப்பார்கள் கொங்கு நாட்டில் விசேஷமாக உண்டு. இவர்களைக் குற்றம் செய்யும் வகுப்பாராக இப்போது போலீசார் விதித்திருக்கிறார்கள். இவ்வகுப்பார்கள் தங்களை வேடர் குலத்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுவார்கள். பண்டைத் தமிழ் நாட்டில் வேடர்கள் பாலை நிலத்து மக்கள் என்று அறிய வேண்டும்.

இனிக் கொங்கு நாட்டில் முக்கிய குடிகள் கொங்கு வேளாளர்கள் ஆவார்கள். இவர்கள் இந்நாட்டை 24 நாடுகளாகப்பிரித்துக் கொண்டு ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு தலைவனைக்கொண்டு இருப்பார்கள். அத்தலைவனுக்குப் பட்டக்

காரர் என்று பெயர். அவ்வழக்கம் இன்றைக்கும் இருக்கிறது. இக்கொங்கு வேளாளர்க்கும் வேட்டுவர்களுக்கும் ஜென்மப் பகை உண்டு. எப்போதும் சில்லறை விஷயங்களுக்கும் இவ்விரு வகுப்பார்களுக்குள் யுத்தம் நடைபெறுவதுண்டு. இக்காலத்திலும் அவ்விரோதம் நீங்கவில்லை. இவ்வகுப்பார்களுள் நடந்த ஒரு பெரும்போர் கள்ளழகர் அம்மானை என்ற நாட்டு பாடல் நூலில் அறியலாம்.

இவ்விரு பெரும் வகுப்பார்களைத்தவிர வடக்கேயிருந்து கன்னடம் பேசுவோர்கள் குடியேறி மலைக்கணவாய்கள் அருகில் வாழ ஆரம்பித்தனர். அவர்களில் முக்கியமாக ஒக்கிலியர், குறும்பர் முதலான வகுப்பார்கள் இருந்தனர். அவர்கள் சந்ததியார் இன்னமும் பிரபலமாக இருக்கின்றனர். இவர்களைத்தவிர சிறுபான்மையாகப் பிராமணர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தானம் வழங்கியதாக இந்நூல்கூறுகின்றது. இவர்கள் வடக்கு கிழக்கு இத்திசைகளிலிருந்து குடியேறி இருக்கவேண்டும்.

மொழி :— கொங்கு நாட்டில் மக்கள் ஆதிமுதல் பேசிவந்த மொழி தமிழ் ஆகும். சங்கத்துச்செய்யுட்களும் கொங்கு வேண் மாக்கதையும் தமிழிலேயே எழுதப்பட்டன. ஆனால் கங்கர்கள் தலைமை வகித்த பிறகு கன்னடமும் சிறிது சிறிதாக உட்புகுந்தது. கன்னடம் பேசிய மக்கள் குடியேறினார்கள். அவர்கள் முக்கியமாக மலையோரங்களிலும் கணவாய்களிலுமே வசிக்க ஆரம்பித்தனர். அதிகாரிகள் கன்னடர்களாக நியமிக்கப் பட்டார்கள். ஆகவே கன்னடம் பிரபலம் அடையவும் ஆரம்பித்தது. சமவெளிகளில் பொதுவாகத்தமிழே முக்கிய மொழி. அதையே மக்கள் கற்றிருந்தனர். கிராமப் பாடசாலைகளிலும் கற்கப்பட்டது. இங்கு வந்து குடியேறிய ஜெயினர்கள் (சமணர்கள்) கன்னடம் பேசுவார்கள். ஆனால் அவர்களும் தமிழ்கற்று பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். சில அரசர்கள் வடமொழியைப் பரிபாலித்து வந்தனர். இரண்டு அரசர்கள் வடமொழியில் நூல்கள் இயற்றியுமுள்ளார்கள்.

சமயம்:— கங்கர்கள் அரசாள ஆரம்பித்தபோது நாட்டில் சைன (சமண) மதம் பரவியிருந்தது. ஏனெனில் அவர்களுக்கு முன் இருந்த ரெட்டி வம்சத்தினர் சைனர்களாயிருந்தனர். கடைசி அரசன் தான் சைவத்திற்குத் திரும்பினுன். கொங்கு நாட்டில் கங்கர்கள் காலத்தில் தான் சைனம் பிரபலமடைந் திருக்கலாம். சைனர்களின் முக்கிய ஸ்தாபனங்களின் ஒன்ருகிய விஜயமங்கலம் இந்நாட்டில் இருக்கின்றது. அதனைச் சுற்றிலும் 4 தலங்கள் இப்போதும் இருக்கின்றன. அவையாவன திங்க ளூர், வெள்ளோடு, பூந்துறை, அரசண்ணுமலை என்பவைகள். இன்னமும் பல இடங்களில் அமணலிங்கம் என்ற பெய ரால் ஜைன சின்னங்கள் அகப்படுகின்றன. பொள்ளாச்சி தாலூக்காவிலும் உடுமலைப்பேட்டை தாலூக்காவிலும் அவை கள் விசேஷம். திருமூர்த்தி மலையில் உள்ள சில ஜைன தீர்த் தங்கருடையதே. ஆகவே கங்கர்கள் காலத்தில் ஜைனம் பிரபல மடைந்திருந்தது. 3-ம் நூற்ருண்டில் ஜைனம் இங்கு வந் திருக்கலாம். ஹரிவர்மன் காலத்தில் ஒரு புத்த சந்நியாசியோடு ஒரு பிராமணர் வாதம்செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜைன ஆலயங்கள் கட்டப்பட்டன. அவைகளுக்கு மானியங் கள் விடப்பட்டன. "கொங்கணிவர்மபாரதி" என்ற பெயரி ஞல் அரசன் ஆலயம் கட்டி அதற்குத் தன் பெயரால் நாமகர ணம்செய்தான் எனத் தெரியவரும். ஜைனர்கள் தமிழ் கற்றுப் பல நூல்களை இயற்றினுர்கள். கொங்குவேள் மாக்கதை அவை களில் முக்கியமானது. பல உரைகாரர்களும் இலக்கண ஆசிரி யர்களும் இங்கு ஏற்பட்டனர். நாளாவட்டத்தில் ஜைனமதம் குன்றியது. அதற்குக் காரண பூதராக இருந்தவர்கள் சைவ சமயாசாரியர்கள். சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவரும் இக் கொங்கு நாட்டில் விஜயம் செய்து ஜைனத்தை ஓட்டி சைவத் தை நிலை நாட்டியிருக்கலாம்.

சைவ ஆலயங்கள் பெருகின. கொங்கு நாட்டில் ஏழு பாடல் பெற்ற தலங்களும் பல வைப்பு ஸ்தலங்களும் ஏற்பட்

டன. ஆங்காங்கு சிறிய கோயில்களும் ஏற்பட்டன. மேலும் அக்காலத்தில் நாகர் வணக்கம் இருந்ததாகவும் இந்நூலால் தெரிகிறது. பூர்வீக ஜனங்கள் பண்டைய இயற்கைத் தேவதைகளைத் தொழுது வந்தார்கள். அரசர்கள் ஆலயங்களுக்கு மானியங்கள் கொடுத்து வந்தனர். அமாவாசை, பௌர்ணமி, கிரகணம், யுத்த வெற்றி இக்காலங்களில் ஆலயங்களுக்குப் பூமிகள் விடப்பட்டன. பூசாரிகளுக்குத் தானங்கள் செய்யப்பட்டன. 7 கண்டகம் முதல் 70 கண்டகம் வரை தானங்கள் செய்யப்பட்டதாக நூல் கூறுகிறது. கண்டகம் என்றால் சலகை, அது விளையக்கூடிய நிலமாக இருக்கலாம்.

## 19. கங்கர்கள் காலத்து நாட்டு நிலைமை

வேளாண்மை, கைத்தொழில் முதலியன:— இப்பொழுது இருக்கிறாற் போலவே கங்கர்கள் காலத்திலும் வேளாண்மைத் தொழில் நாட்டு மக்களுடைய முக்கிய தொழிலாக இருந்தது. கொங்கு நாட்டில் காவேரி நதி மத்தியில் ஓடுகின்றது. அதற்கு இருபுறங்களிலும் உபநதிகள் பல உண்டு. அவைகளில் முக்கியமானவை பவாநி, நொய்யல், ஆம்ராவதி. இம்மூன்று நதிகளின் மூலமாக நீர்ப்பாய்ச்சல் வசதிகள் ஏற்படுத்தியிருந்தார்கள். இம்மூன்று நதிகளுக்கும் பண்டைக் காலத்திலிருந்தே பல அணைகள் கட்டி வாய்க்கால் வழியாக ஆற்று நீரைக்கொண்டு போய் வயல்களுக்குப் பாய்ச்சுவார்கள். ஒரு சிறு நதியாகிய நொய்யலுக்கு 32 அணைகள் இருக்கும்பக்ஷத்தில் அக்காலத்து மக்களுடைய முயற்சி எத்துணைச் சிறப்பாக இருக்கவேண்டும். இத்துணைச் சிறந்த முன்னேற்றத்திற்கும் அக்காலத்து மன்னர்களுடைய நல் ஆட்சியே காரணம். மேலும் பல காட்டாறுகளை அணைகள் இட்டுத் தேக்கி குளங்களும் குட்டைகளும் உண்டாக்கினார்கள். இவைகளில் தேக்கின நீரிலிருந்து வயல்களுக்குப் பாய்ச்சி நெல் சாகுபடி செய்துவந்தார்கள். வயல்களில் நெல்லே முக்கிய விளைபொருள். நீர் பாயாத புன்செய் நிலங்களில் ராகி, சோளம், வரகு முதலியவைகள் விளைந்தன. இந்

நாட்டின் வடபாகத்தில் கண்டகம் முகத்தல் அளவையாகவும், தெற்கிலும், கிழக்கிலும் சலகை என்பது அவ்வளவையாகவும் வழங்கி வந்தன. கொங்குதேச அரசர்கள் என்னும் நூலில் கண்டகம் குறிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டுப்புறங்களில் கால்நடைகளை மேய்ப்பது ஒரு தொழிலாகவும் கொண்டிருந்தார்கள். இப்பிரதேசத்தில் மலைகளில் எங்குப் பார்த்தாலும் புல் செழிப்பாக வளரும். ஆகவே கால் நடைகளுக்கு ஆகாரம் நிறைய இருந்தது. இப்பொழுதும் காங்கேய நாட்டிலும் ப ரு கூ ர் மலைகளிலும் காளைகள் பெயர் போனவை. இவைகள் பண்டைக் காலத்திலிருந்தே விளங்கி வந்திருக்கின்றன. மேலும் பெரும் காடுகளில் யானைகள் பெருவாரியாக இருக்கும். அவைகளைத் தந்திரமாகப் பிடித்துப் பழக்குவார்கள். அரசர்கள் யானைகளைச் சேனைகளுக்குப் பயன் படுத்திக்கொள்ளுவார்கள். இச்செய்தியும் 'கொங்கு தேச ராஜாக்கள்' என்னும் நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டு மக்கள் கைத்தொழிலிலும் பின் வாங்கினவர்கள் அல்ல. நகை வேலையில் கீர்த்தி பெற்றிருந்தார்கள். யானைத் தந்தங்களிலும் பல அற்புத வேலை செய்வார்கள். இரும்பு, எஃகு முதலியவைகளிலும் ஆயுதங்களும், சாமான்களும் செய்வார்கள். வெகு பூர்வீக காலத்திலிருந்தே கொங்கு நாட்டில் எஃகு வேலை உண்டு. உலகத்தில் மற்ற நாடுகளில் எஃகு என்பது இன்னதென்று அறியாத காலத்திலே கொங்கு நாட்டில் எஃகினால் ஆயுதங்கள் செய்திருக்கிறார்கள். இந்நாட்டில் பல பாகங்களிலும் இரும்புக் கைத்தொழில் இருந்தது. இப்போதும் காந்தக் கற்களும் இரும்புச் சத்துகளும் பல இடங்களில் காணலாம். கஞ்சமலை, சேந்தமங்கலம் முதலிய இடங்களில் இரும்பு வெகு காலத்திலிருந்து உருக்கிக் கொண்டிருந்தார்கள். கி. மு. 6-வது நூற்றாண்டிலேயே இரும்பு வேலை இருந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பொன்னும் வெள்ளியும் கூட இந்நாட்டில் அகப்பட்டதால் 'கொங்குப் பொன்' என்ற ஒரு பிரயோகம் பண்டையத் தமிழ்நூல்களில் இருக்கக்காணலாம். அக்காலத்தில் இரத்தினங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. கொங்கு நாட்டில் இருந்துதான் ரோமனியர்களுக்கு வைடூரியக்கற்கள் அனுப்பப்பட்டன. காங்கேயத்திற்கு அடுத்த படியூரில் வைடூரியச் சுரங்கங்கள் இருந்தன என அறிய வேண்டும். சிவமலைக்கருகில் குருந்தக்கல் இன்னும் விசேஷமாக இருக்கிறது.

கொங்கு நாட்டு மக்கள் கிரக நிலைகளையும் சோதிட நூலையும் அறிந்திருந்தார்கள். வருடம் மாதம் தேதி முதலியவைகள் அக்காலத்தில் வழங்கி வந்தன. சாலிவாகன சகாப்தம் வழக்கத்தில் இருந்தது. தேய்பிறை வளர்பிறை கிரகணம் இவைகளைக் கணித்திருக்கிறார்கள். இச்செய்திகளுக்கு ஆதாரம் கொங்குதேச ராஜாக்கள் என்னும் நூலே.

மேலும் இந்நூலில் ஆலயங்கள், அரண்மனைகள், கோட்டைகள் கட்டினதாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே இந்நாட்டு மக்கள் சிற்ப வேலையில் தேர்ந்திருந்தார்கள் எனலாம். ஜனங்கள் எழுதப்படிக்கத் தெரிந்திருந்ததோடு கல்லிலும் தாம்பிரத்திலும் சாசனங்கள் வெட்டி வைத்தார்கள். சங்கீதத்தில் தேர்ச்சியுண்டு. யாழைப் பிரயோகித்து வந்தார்கள்.

**வியாபாரம்:—** மற்ற தமிழ் நாடுகளைக்காட்டிலும் கொங்கு நாட்டில் வியாபாரம் அதிகமாக இருந்தது. அந்த வியாபாரம் அக்கம் பக்கத்து நாடுகளோடு மாத்திரமேயன்றி மேற்கு தேசங்களாகிய ரோம், கிரீஸ் நாடுகளோடும் செய்துவந்தார்கள். இதைப்பற்றி முன்னமே ஒரு இதழில் குறித்திருக்கிறோம். பேரூர், வெள்ளலூர், பொள்ளாச்சி முதலிய இடங்களில் கிடைத்த அளவில்லாத உரோமனிய வெள்ளி நாணயங்களைக் கொண்டு அக்காலத்தில் இருந்த வியாபார நிலைமையை அறியலாம். வியாபாரத்திற்கு அனுகூலமாக இரத்தினங்களே யன்றி

சந்தனக் கட்டை, தேக்கு, ஈட்டி முதலிய மரங்களும், காளை மாடுகளும், பல விளைவுப் பொருள்களும் பெரும்பான்மையாக இருந்தன. ஆகவே கங்கர்கள் காலத்தில் கொங்கு நாட்டு மக்கள் நாகரீகத்தில் உயர்ந்திருந்தார்கள் என்றே சொல்லவேண்டும்.

## 20. பல்லவர்கள்.

கொங்குநாடு கங்கர்கள் வம்சத்தில் இருந்த காலத்தில் தொண்டை நாடு பல்லவர்கள் வம்சத்தில் இருந்தது. ஆரம்பத்தில் சிற்றரசர்களாயிருந்த பல்லவர்கள் நாளுக்கு நாள் விருத்தியடைந்து சில நூற்றுண்டுகளில் பிரக்கியாதி பெற்ற சக்கரவர்த்திகளாக ஆகிவிட்டார்கள். சுமார் கி. பி. 3, 4-வது நூற்றுண்டில் அரசாளத் தொடங்கின அம்மன்னர்கள் 8, 9 நூற்றுண்டுகள் வரை மிகச் சிறப்புடன் ஆண்டுவந்தார்கள். காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு வடக்கு, மேற்கு, தெற்கு இம்மூன்று திக்குகளிலும் தங்கள் செல்வாக்கைச் செலுத்தி வந்தார்கள். வடக்கே சாளுக்கியர்களோடும், மேற்கே கங்கர்களோடும், தெற்கே சோழர்களோடும் அடிக்கடி போராட வேண்டி வந்தது. சில நூற்றுண்டுகள் வரை சோழநாடு அவர்கள் வசத்திலேயே இருந்தது. ஆகவே கங்கர்கள் சிறப்புடன் மேற்கே ஆண்ட காலம் முழுவதும் கிழக்கே தொண்டை மண்டலத்தில் பல்லவர்கள் சிறப்போடு ஆண்டுவந்தார்கள். கங்கர்களுடைய செல்வாக்கு வெகு காலம் குறைவுபடாமல் இருந்தபடியால் பல்லவர்கள் அவர்களுடைய நாட்டிலே வாலாட்ட முடியவில்லை. ஆகவே கொங்கு நாட்டில் பல்லவர்களுடைய ஆதிக்கம் சிறிதேனும் ஏற்படாமல் போய்விட்டது. ஆனால் ஒரு காலத்தில் பல்லவர்களுடைய நாகரீகம் மட்டும் ஒரு சிறிது கொங்கு நாட்டில் புகுந்தது எனச் சொல்லலாம். ஏனெனில் தமிழ் மொழி வளர்ச்சி, சமய மேம்பாடு இந்த இரண்டு விதங்களில் பல்லவர்கள் நாட்டிலிருந்து கொங்கு நாட்டிற்கு வந்த ஆசிரியர்கள் பல்லவநாட்டு நாகரீகத்தை கொங்கு நாட்டில்



புகுத்திவிடக் காரணமாக இருந்திருக்கலாம். இச்செயலை மட்டும் ஒரு சிறிது விவரிப்போம்.

தொண்டைநாட்டில் 4-வது நூற்றாண்டு முதல் பல்லவர்களுடைய அரசியல் ஊர்ச்சிதமாக நின்றுவிட்டது. அவ்வம்சத்து அரசர்கள் சுற்றுப் பக்கத்துச் சிறு மன்னர்களை வென்று தங்கள் அரசியலைப் பெருக்கினார்கள். அவர்கள் சிறந்த யுத்த வீரர்கள். அதுமட்டுமேயன்றி மொழி வளர்ச்சியிலும் சமயப் பற்றிலும் சிறந்தவர்கள். அவ்வரசர்கள் பல நூல்கள் வடமொழியிலும் தென்மொழியிலும் இயற்றினதற்குக் காரணபூதர்களாயிருந்தார்கள். மேலும் ஆலயங்கள் நிர்மாணிப்பதில் முதல் முதலாக அவ்வரசர்களே பெருந்தொண்டு புரிந்துவந்தார்கள். ஆரம்பத்தில் சாதாரணமான மண், செங்கல் முதலியவைகளால் கட்டப்பட்ட ஆலயங்களுக்குப் பதிலாக மலைகளைக் குடைந்து நிரந்தரமான குகை ஆலயங்கள் செதுக்க ஆரம்பித்தார்கள். 6, 7-வது நூற்றாண்டுகளில் இவ்வித ஆலயங்கள் நாடெங்கும் ஏற்பட்டன. இவ்விதத் திருப்பணிகள் அக்காலத்திற்கு முந்தி சமணர்களாலும் புத்தர்களாலும் செய்யப்பட்டன. அச்சமயத்தார்களுடைய திருப்பணிகளைப் பின்பற்றிப் பல்லவ அரசர்கள் வெகு அற்புதமான குகை ஆலயங்களை நிர்மானித்தார்கள். முதல் முதலில் இக்கைங்கரியத்தில் ஈடுபட்டவன் மகேந்திரவர்மன். அவனுக்கு முந்தி காணகோபன் முதல் சிம்ஹவிஷ்ணுவரை பல பல்லவ மன்னர்கள் ஆண்டார்கள். அவர்களுடைய பிரசித்தி அதிகமாக இருக்கவில்லை. மகேந்திரவர்மனே மிகப்பிரக்கியாதியோடு ஆண்டதுமன்றி தன் செயல்களை என்றும் அழியாத வண்ணம் நிலைநிறுத்திச் சென்றிருக்கிறான். இவ்வரசன் முதலில் சமணமதத்தில் சேர்ந்து சைவர்களை வெறுத்து வந்தான். ஆனால் அவனால் இம்சிக்கப்பட்ட திருநாவுக்கரசர் என்னும் சைவ சமயாச்சாரியரால் அவன் திரும்பி சைவ மதத்திற்கு மாற்றப்பட்டான். பிறகு அவன் பல சமயப்பாழிகளை அழித்துச் சிவாலயங்களை ஏற்படுத்தினான்.

திருச்சிராப்பள்ளித் தாயுமானவர் மலையில் உள்ள இரண்டு அழகிய குகை மண்டபங்களையும் இவ்வரசனே நிர்மாணித்தவன். மேலும் மகாபலிபுரம் என்று சொல்லும் மாமல்லபுரத்தில் சில ஆலயங்களை இவனே வெட்டினவன். இன்னும் தமிழ் நாட்டில் உள்ள பல குகாலயங்களுக்கும் இம்மன்னனே காரண பூதன்.

இம்மன்னன் காலத்தில் அவதரித்தவர் திருநாவுக்கரசர் என்று முன்னமே சொன்னோம். அச்சமயாசிரியர் தமிழ்நாடுகள் முழுவதும் சுற்றி ஆலயங்களில் தேவாரங்கள் பாடிச் சைவ சமயப் பிரசாரம் செய்து வந்தார். அவ்விதம் நாட்டு விஜயம் செய்த காலத்தில் கொங்கு நாட்டிற்கும் வந்துள்ளார். கொங்கு நாட்டில் கொடுமுடித் தலத்திற்கு அப்பெரியார் தேவாரம் அருளிச் செய்திருக்கின்றார். மேல் கொங்கிலுள்ள ஆலயங்களுக்கு அப்பெரியார் விஜயம் செய்ததாகப் பெரிய புராணத்தின் மூலமாகத் தெரியவில்லை. ஆனால் க்ஷேத்திரக்கோவையில் "பேரூர் பிரமபுரம் பேராவூரும்" என்று கூறியிருக்கிறபடியால் அப்பெருமான் திருப் பேரூருக்கு வந்திருக்கக்கூடுமென்று ஊகிக்க முடியும். இவ்வாறு கொங்கு நாட்டில் அப்பெருமான் விஜயம் செய்த வகையில் பல்லவர்களுடைய தமிழ் வளர்ச்சி, சமயப் பற்று முதலான நாகரிகக் கொள்கைகளைக் கொங்குநாட்டிற்குத் தந்திருக்கிறார்கள். ஞாபகார்த்தமாக அந்நாயனாருடைய பதிக உதாரணம் ஒன்று இங்கே தருகிறோம்.

சிட்டனைச்சிவனைச்செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை யாலநிழலமர்
பட்டனைத்திருப் பாண்டிக் கொடுமுடி
நட்டனைத்தொழ நம்வினை நாசமே,

திருப்பாண்டிக் கொடுமுடி.

தொண்டைமண்டலத்தில் காஞ்சியில் ஆண்ட பல்லவபரம்பரையில் மேலே சொன்ன மகேந்திரவர்மனுக்குப் பிந்தி அவன்

மகன் நரசிம்மவர்மன் பட்டத்திற்கு வந்தான். இம்மன்னன் ஒரு பெரிய போர்வீரன். இவனைப்பற்றிக்கூறும் கல்வெட்டுகள் இவனை வாதாபிகொண்ட நரசிம்ம போத்தரயர் என்று கூறுகின்றன. அக்காலத்தில் மேற்குச் சாளுக்கிய மன்னர்கள் வாதாபி என்ற நகரத்தைத் தலைநகராக்கிக்கொண்டு வெகு கீர்த்தியோடு ஆண்டு வந்தனர். அவர்களில் புலிகேசி I என்பவன் வாதாபி நகரத்தைக் கட்டினன். அது தற்கால பீஜப்பூர் ஜில்லாவிலிருக்கின்றது. நகரத்திற்கு அரண் போல இயற்கையாக ஒரு மலைத்தொடர்ச்சி இருக்கிறது. அம்மலை ஒரு சுவர்போல் செங்குத்தாய் நிற்கிறது. அம்மலையின்பேரில் கோட்டைக் கொத்தளங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இயற்கையாக ஏற்பட்ட இப்பலத்தை அறிந்து புலிகேசி என்ற மன்னன் செயற்கையால் அதனை விருத்தி செய்துத் தகர்க்க முடியாத ஒரு பெரும் நகரத்தை உண்டாக்கினன். அவனுக்குப் பிறகு புலிகேசி II பட்டத்திற்கு வந்து வெகு பிரக்கியாதியோடு ஆண்டான். சுற்றுப்பக்கத்து நாடுகளைப் பிடிக்கவேண்டுமென்பது பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் ஏற்பட்டிருந்த முக்கிய நோக்கமாகும். ஆகவே பல்லவ நரசிம்மனும் சாளுக்கிய புலிகேசனும் பகைபூண்டு போர்புரியத் தொடங்கினர். அக்காலத்தில் நரசிம்மவர்மனுடைய படைத்தலைவர் பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்டநாயனர். தம் மன்னனகிய நரசிம்மவர்மனுக்காக சிறுத்தொண்டநாயனர் பெரும் சேனைகளைத் திரட்டிக்கொண்டு வடக்கே சென்று சாளுக்கிய மன்னரோடு போர்புரிந்தார். அப்போரில் வெற்றிகொண்டு சாளுக்கியனைத் துரத்திக்கொண்டு சென்றார். கடைசியில் அவ்வரசனுடைய தலை நகராகிய வாதாபியைப் பிடித்து அதை அழித்தார். அப்போரில் வெற்றியடைந்து தம்மன்னனுகிய பல்லவனுக்குப் பெரும் செல்வங்களைக் கொண்டு வந்து சேர்த்தார். இவ்விதப் பெரும் வெற்றியை சேக்கிழார் பெருமான் தம் பெரிய புராணத்தில்,

ஈசனடி யார்க்கென்றும் இயல்பான பணிசெய்தே
ஆசில்புகழ் மன்னவன்பால் அணுக்கராய் அவற்காகப்
பூசல்முனைக் களிறுகைத்துப் போர்வென்று பொரும் அரசர்
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார்.

மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன் கொணர்ந்தார்.

என்று கூறுகிறார்.

பெரிய புராணத்தில் பல்லவனுடைய பெயர் நரசிம்மவர்மன் என்று கூறவில்லை. எனினும் கல்வெட்டுகளில் வாதாபிக் கொண்ட நரசிம்ம போத்தரயன் என்று கூறியிருக்கிறதினால் அவ்வரசன் பெயர் நரசிம்மவர்மன் என்று நிச்சயிக்கப்பட்டது. மேலும் வாதாபியில் இருக்கும் ஒரு கல்வெட்டினாலும் இச் சங்கதி உறுதியாக்கப்பட்டிருக்கிறது. வாதாபி என்ற ஊர் இப்பொழுது பாதாமி (Badami) என்ற பெயரால் வழங்கு கின்றது. இது கதக் என்னும் ஸ்டேஷனிலிருந்து ஹோட்கி என்னும் ஸ்டேஷனுக்குச் செல்லும் இருப்புப்பாதையில் இருக் கின்றது. இங்கிருக்கும் மலைக்கோட்டைகள் பார்க்கத் தக்கவை. அக்கோட்டையில் 5 பெரும் குகைகள் செதுக்கப் பெற்றிருக்கின்றன. அக்குகைகளில் உள்ள சித்திரவேலைகள் அதிசயிக்கத்தக்கவை. சிவபெருமான், திருமால், அருகக்கடவுள் முதலிய கடவுளர்களுக்குத் தனித்தனி குகை ஆலயங்கள் ஏற் பட்டிருக்கின்றன. நரசிம்மனுடைய தகப்பன் மகேந்திரவர் மன் காலத்தில் தென்னிந்தியா குகை ஆலயங்கள் ஏற்பட்டன வென்று முன்னமே சொன்னோம். அக்குகை ஆலயங்களைப் போலவே பாதாமிக் குகை ஆலயங்களும் இருக்கின்றன. ஆகவே இவைகளும் அதே காலத்தில் ஏற்பட்டிருக்கலாம்.

சிறுத்தொண்டர் வாழ்ந்த காலத்தில் திருஞானசம்பந்தர் அந்த நாயனாரை அவர் தலமாகிய திருச்செங்காட்டங்குடியில்

கண்டு தரிசித்திருக்கின்றார். அச்செய்தியை சேக்கிழார் குறிப்பதோடு அன்றி திருஞானசம்பந்தரும் தாம் அருளின திருச்செங்காட்டங்குடி பதிகத்தில் அந்த நாயனுரைப் புகழ்ந்திருக்கின்றார்.

செடிநுகருஞ் சமணர்களுஞ் சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப்பார்க் கருளாத பண்பினன்
பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள் செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே.

ஆகவே சம்பந்த சுவாமிகள் தாம் இருந்த காலத்து மன்னர் பெயரை குறிக்காமல் போன போதிலும் அம்மன்னனே வாதாபி கொண்ட நரசிங்க போத்தரயன் என்று அறியவேண்டும்.

இப்பல்லவமன்னன் கொங்கு நாட்டை எட்டிப் பார்க்காமல் போன போதிலும் அப்பல்லவ நாட்டுச் சமயமேம்பாடு கொங்கு நாட்டில் எட்டியது என்று கூறவேண்டும். ஏனெனில் முந்தி அப்பர் கொங்கு நாட்டிற்கு விஜயம் செய்ததைப் போலவே சம்பந்தப் பெருமானும் கொங்கு நாட்டில் விஜயம் செய்து சைவ சமயத்தைப் பரப்பி இருக்கின்றார்.

சம்பந்த சுவாமிகள் கோங்கு நாட்டில் விஜயம் செய்த காலத்தில் திருநணு (பவானி), திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு), திருப்பாண்டிக் கொடுமுடி (கொடுமுடி), திருக்கரூவூர் ஆநிலை (கரூர்) என்ற தலங்களைத் தரிசித்துத் தேவாரப்பதிகங்கள் அருளிச் செய்திருக்கின்றார். அப்பதிகங்களின் முதற்கடைச் செய்யுள்களைக் குறிப்போம்.

### திருநணு

பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
அந்தார் அரவணிந்த அம்மானிடம்போலும் அந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் தெளியொளிரத் தேமாக் கனியுதிர்க்குந் திருநணுவே.

கல்வித் தகத்தால் திரைசூழ் கடற்காழிக் கவுணிசீரார்
நல்வித் தகத்தால் இனிதுணரும் ஞானசம் பந்தன் எண்ணும்
சொல்வித் தகத்தால் இறைவன் திருநணா ஏத்துப்பாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியிலரிம் மண்ணின்மேலே.

## திருக்கொடிமாடச்செங்குன்றூர்

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல் திகழ்மார்பின் நல்ல
பந்தண வும்விர லாள் ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன் றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே.

அலைமலி தண்புனல் சூழ்ந் தழகார் புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச் செங்குன் றா ரேத்தும்
நலம்மலி பாடல் வல்லார் வினையான நாசமே.

## திருப்பாண்டிக்கொடுமுடி

பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுல்கு செஞ்சடையாருங்
கண்ணமர் நெற்றியி னாருங் காதம ருங்குழை யாரும்
எண்ணம ருங்குணத் தாரும் இமையவ ரேத்தநின் றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே.

கலம்மல்கு தண்கடல் சூழ்ந்த காழியுள் ஞானசம் பந்தன்
பலமல்கு வெண்தலை யேந்திப் பாண்டிக் கொடுமுடி தன்னைச்
சொலமல்கு பாடல்கள் பத்துஞ் சொல்லவல் லார்துயர் தீர்ந்து
நலம்மல்கு சிந்தையராகி நன்னெறி யெய்துவர் தாமே.

## திருக்கரூவூரானிலை.

தொண்டெ லாம்மலர் தூவி யேத்தநஞ்
சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னூர் கரு வூரு ளானிலை
அண்ட னாரரு ளீயும் அன்பரே.
கந்த மார்பொழில் காரு ஞானசம்
பந்தன் சேர்கரு வூரு ளானிலை
எந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யில்தூய ராய தீர்வரே.

மேலே குறித்ததலங்களில் திருச்செங்கோட்டிற்குச் சம்பந்த மூர்த்திகள் சென்ற காலத்தில் மழைகாலம் நீங்கிப் பனிகாலம் வந்து குளிர் மிகுதியாயிற்று. அக்குளிரினால் நாயனருடைய திருக்கூட்டத்து அடியார்களில் நளிர்சுரம் ஏற்பட்டு வருந்தினார்கள். அதைக் கண்ட பிள்ளையார் 'அவ்வினைக்கிவ்வினை' என்ற திருநீலகண்டப் பதிகத்தைப்பாடி அருளினார். உடனே அடியார்களுக்கும் மற்றவர்களுக்கும் ஜுரம் நீங்கிற்று. இவ்வற்புதம் நடந்தபின் நாயனார் வேறிடங்களுக்குச் சென்றார்.

மேலே கூறிய தலங்கள் காவேரி நதிக்கு அணித்தார்ப் போல் இருப்பதைக்காணலாம். ஆகவே சம்பந்தப்பெருமான் காவேரி ஓரமாகவே கொங்குநாட்டில் விஜயம் செய்தார் போலும். மேல்கொங்கு நாட்டிற்கு அவர் சென்றதாகச் சரித்திரம் கூறவில்லை. தேவாரச் சான்றுகளும் இல்லை. ஆகவே சமயப் பிரசாரவகையில் பல்லவர் காலத்து நாகரீகம் கொங்கு நாட்டை அடைந்தது எனலாம்.

முன் பக்கங்களில் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் என்ற இரண்டு பல்லவ மன்னர்களைப்பற்றிச் சொன்னோம். அவர்களில் மகேந்திரவர்மன் பல குகை ஆலயங்களைத் தோண்டினான் என்றும் நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தில் பல குகாலயங்களையும் இரதங்களையும் நிர்மாணித்தான் என்றும் அறிவோம். அவன் பெயராலே மாமல்லபுரம் என்ற பெயரும் அவ்வூருக்கு ஏற்பட்டது. அக்காலத்தில் (636 கி. பி.) நரசிம்மவர்மன் பாதாமிச் சாளுக்கியர்களை வென்று வாதாபிகொண்ட நரசிம்மபோத்தரயன் என்ற பெயரும் பெற்றான். நரசிம்மவர்மனுக்குப் பிந்தி பரமேசுவரவர்மன் அரசனானான். அவன் காலத்திலும் (674 கி. பி) சாளுக்கிய அரசன் விக்கிரமாதித்யன் காஞ்சியின்மீது படையெடுத்தான். பரமேசுவரவர்மனுக்குப் பிந்தி நரசிம்மவர்மன் ராஜசிம்மன் என்பவன் மாமல்லபுரத்தில் பல ஆலயங்களைக் கட்டினான். இவன்தான் மாமல்லை ஜலசயனம், காஞ்சி ராஜசிம்மேசுவரம் என்ற

கைலாசநாதர் கோயில் இவைகளைக் கட்டினவன். இவ்வரச னுக்குப்பிந்தி பல்லவவம்சத்துப் பரம்பரைக்குப் பலம் குறைந் தது. அப்போது அப்பல்லவ வம்சத்தில் மற்ருெரு கிளையில் உதித்த நந்திவர்மன் பல்லவமல்லன் என்ற ஒரு அரசகுமாரன் முந்திய வம்சத்து அரசனை துறத்திவிட்டுப் பட்டத்திற்கு வந் தான். குடிகள் இவ்விளவரசனைத் தெரிந்தெடுத்துக்கொண் டார்கள். அம்மன்னனுக்கு உதயசந்திரன் என்ற ஒரு தளகர்த் தன் இருந்தான். அவன் ஒரு பெரும் போர்வீரன். தன் மன்னனுக்கு மிகவும் உதவியாக இருந்து முந்திய வம்சத்துச் சித்திரமாயனைப்போரில் தன் கையிலேயே வெட்டித் தன் தலை வனுக்கு முடிசூட்டினுன். உதயசந்திரன் தன் அரசனுக்காக வடக்கே நெல்லூர் முதல் தெற்கே திருநெல்வேலி வரைக்கும் பெரும் போர்கள் புரிந்து வெற்றிகொண்டு நாட்டைக் கைப் பற்றினுன். இவனுடைய வெற்றிகள் உதயேந்திரச் செப் பேடுகளால் நமக்குக் காணக்கிடைக்கின்றன. உதயேந்திரம் என்ற ஊர் அத்தளகர்த்தனுடைய பெயரால் ஏற்பட்டது. அவ்வூர் சேலம் ஜில்லாவின் எல்லையில் இருக்கிறது. ஆகவே அக்காலத்தில் கொங்கு நாட்டின் ஒரு பாகமாவது பல்லவர்கள் ஆதிக்கத்தில் இருந்திருக்கவேண்டும் அல்லவா?

நந்திவர்மன் பல்லவ மன்னன் வெகுகாலம் ஆண்டான். ஏறக்குறைய 50 வருட காலம் ஆண்டதாகத் தெரிகிறது. 22 வருட காலம் அவனுடைய ராஜ்யம் முழுவதும் அவன் ஆதிக் கத்தின்கீழ் இருந்தது. கி. பி. 733ல் சாளுக்கிய நாட்டில் விக்கிர மாதித்யன் II என்பவன் பட்டத்துக்கு வந்தான். உடனே தன் னுடைய மூதாதைகளைப் போல அவனும் பல்லவர்கள்மீது யுத்தத்திற்கு வந்தான். 735ல் பல்லவனைத் தோற்கடித்து காஞ்சி நகரத்தைக் கைப்பற்றினுன். ஆனல் அந்நகரத்தைப் பாழ் செய்யவில்லை, கடற்கரையில் ஒரு ஜெயஸ்தம்பத்தை நாட்டிச் சிவாலயத்திற்கு பெரும் கொடைகள் தந்துவிட்டுத் திரும்பி தன் நகரத்திற்குச் சென்றுவிட்டான். அவ்விதம் அவன்

பாராட்டின சிவாலயம் ராஜசிம்மேசுவரம் என்பது. விக்கிரமாதித்தன் 746ல் இறந்தான். அவனுக்குப்பின் கீர்த்திவர்மன் II என்பவன் பட்டத்துக்கு வந்தான். ஆனால் சாளுக்கியர்களுடைய ஆதிக்கம் வெகுநாள் நிலைபெறவில்லை. 757ல் இராஷ்டிரகூடர்கள் சாளுக்கியர்களை வேர் அறுத்துவிட்டார்கள்.

விக்கிரமாதித்தனால் அபஜெயம் அடைந்த நந்திவர்மன் பல்லவ மன்னனோடு பல்லவர்களுடைய ஆதிக்கமும் குறைந்துவிட்டது. பல்லவமல்லன் இறந்தபிறகு பல்லவர்கள் அரசு பிரிந்துவிட்டது. ஒரு பாகம் கங்கபல்லவர்கள் ஆண்டார்கள். மற்றொரு பாகம் நுளம்ப பல்லவர்கள் ஆண்டார்கள். மேலும் பாணர்கள் என்ற ஒரு வம்சமும் மேற்கு கங்கர்கள் என்ற மற்றொரு வம்சமும் அந்நாட்டில் சில பாகங்களை ஆண்டுவந்தார்கள்.

## 21. குறுநில மன்னர்கள்.

*1.* கங்கபல்லவர்கள்: இவ்வம்சத்து அரசர்கள் தங்கள்பெயர்களோடு கோ, விஜய என்றபட்டங்களை வகித்திருந்தார்கள். மேலும் பழைய பல்லவர்களைப்போல வர்மன் என்ற பட்டத்தையும் கொண்டிருந்தார்கள். இவர்கள் ஆண்ட பிரதேசம் பெரியதாக இருந்தது. ஆனால் நாகரீகத்திலோ பழைய பல்லவர்களைவிட சிறிது குறைந்தவர்கள் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இவ்வரசர்களுடைய கல்வெட்டுகள் எவைகளைப் பார்த்தாலும் நிறை மீட்சியில் அதாவது கால்நடைகளை கொள்ளைகொள்வதில் இறந்துபோன தலைவர்களைப் பற்றியே உள்ளதால் அவ்வாறு கூறவேண்டியிருக்கிறது.

இவ்வரசர்களுடைய சாசனங்கள் தஞ்சை, திருச்சி, செங்கல்பட்டு, ஆர்க்காடு, சேலம் முதலிய ஜில்லாக்களில் கிடைக்கின்றன. பெண்ணாகரத்திற்கு அடுத்த அனுமந்தபுரத்தில் விஜய ஈஸ்வரவர்மனின் 17ம் ஆண்டுக் கல்வெட்டுகள் இரண்டு இருக்கின்றன. இராயகோட்டைச் சாசனம் கோவிஜய ஸ்கந்தசிஷ்ய விக்ரமவர்மன் என்பவனின் 14ம் ஆண்டில் ஏற்பட்டது. கோ

விய நரசிம்மவர்மனுடைய சாசனம் ஒன்று தகடூர் நாட்டைக் (தர்மபுரி) குறிக்கிறது. இவ்வரசர்களைப்பற்றிய மற்றய விவரங்கள் கிடைக்கவில்லை.

2. நளம்ப பல்லவர்கள்:— நுளம்பவாடி 32000 என்ற ஒரு நாடு இருக்கிறது. அந்நாட்டில் 32000 கிராமங்கள் இருந்தது போலும். இந்நாடு தலைக்காட்டிற்குவடகிழக்கே உள்ளது. வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் காலத்தில் சில பல்லவர்கள் இந்த நாட்டில் குடிபுகுந்து ஆதிக்கம் பெற்றிருக்கலாம். அவர்கள் சந்ததியார்கள் நுளம்ப பல்லவர்கள் ஆனார்கள்.

3. பாணர்கள்:— காஞ்சிபுரமும் பாதாமியும் சீர்குலைந்த பிறகு பாணர்கள் வம்சம் தலை எடுத்தது. இவர்களுடைய நாடு வடுகவழியின்மேற்குஎன்பார்கள். மைசூரில் ஓர்பாகமும் சேலம் ஆர்க்காடு இவைகளின் ஓர் பாகமும் பாணர்கள் நாடாக இருந்தது. வாணபுரம் என்ற பழைய பெயர்பெற்ற திருவல்லம் இவர்களுடைய இராஜதானியாக இருக்கலாம். சேலத்தில் மலைப்பிரதேசமாகிய 'பாரமஹால்கள்' இவ்வரசர்கள் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன.

4. மேற்கு கங்கர்கள்:— வாதாபி சாளுக்கியர்கள் சீர்குலைந்து போகவே கங்க வம்சத்திற்குச் சேர்ந்த சிவமாரன் என்ற ஒரு இளவரசன் தலை எடுக்க ஆரம்பித்தான். கொங்கல் நாடு 8,000 என்ற நாட்டின் சிற்றரசனாக இவன் இருந்தவன். இவன் 755 முதல் 765 வரை ஆண்டான். சில சாசனங்களில் அரசு பிருதுகள் இல்லாமல் இவன் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. சில சாசனங்களில் இவனைக் கொங்கணி மகாராஜன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவனுக்குப் பிறகு ஸ்ரீ புருஷன் முத்தரசன் என்பவன் பட்டத்திற்கு வந்தான். ஆதியில் இவன் ஒரு குறுநில மன்னனாக இருந்து பிறகு சுதந்திர அரசனாக ஆகிவிட்டான். ஏனெனில் இவனைப்பற்றி மகா ராஜாதிராஜ பரமேஸ்வர என்று பிருதுகள் பின் சாசனங்கள் கூறு

கின்றன. இவனுடைய நாடு கங்கவாடி 96000 என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது 96000 கிராமங்கள் ஒரு காலத்தில் இருந்ததுபோலும். 764 முதல் 805 வரையில் இவன் அரசாண்டான், இவனுடைய தலைமைநகர் காவேரிக்கரையில் இப்போது மணலால் புதைபட்டிருக்கும் தலைக்காடு என்பது.

பல்லவர்கள் தாழ்ச்சி அடைந்த பிறகு சுமார் இரண்டு நூற்றாண்டுகள் வரை தமிழ் நாடு முழுவதும் மிகத்தாழ்ந்த நிலையிலேயே இருந்தது. பல்லவர்கள் கை ஓய்ந்துவிட்டது. சோழர்கள் இன்னமும் தலைநிமிர முயலவில்லை. பாண்டியர்கள் வீரம் குன்றியிருந்தது. சேரர்கள் தங்கள் அளவிலேயே இருந்தார்கள். இவர்கள் இடையிலிருந்த கொங்குநாடு ஆதரவு அற்று இருந்தது.

தமிழ் மன்னர்கள் இவ்விதமாகத் தாழ்ந்த நிலையில் இருந்ததினால் தமிழர் நாட்டிற்கு வடக்கேயிருந்த தக்ஷிண பீடபூமியில் இருந்த மன்னர்கள் ஓங்க ஆரம்பித்தனர். ஆகவே அவர்கள் ஆதிக்கத்துள் தமிழ் மன்னர்கள் ஈடுபட ஆரம்பித்தனர். பாதாமியில் ஆண்ட சாளுக்கியர்கள் இராஷ்டிரகூடர்களால் தோல்வியுற்றார்கள். அதுமுதல் இரண்டு நூற்றாண்டுகள் இராஷ்டிரகூட மன்னர்கள் சிறந்து வாழ்ந்தார்கள். இரண்டு நூற்றாண்டுகள் ஆண்ட ஆட்சியின் பிறகு அவ்விராஷ்டிரகூடர்களைக் கல்யாண நகரத்தில் தோன்றிய சாளுக்கியர்கள் நசுக்கிவிட்டார்கள். அக்காலத்தில் கங்க பல்லவர்கள் தங்கள் சுதந்திரத்தை இழக்காமல் இருப்பதற்காக வெகுதூரம் போராடினார்கள். சுமார் 1½ நூற்றாண்டு வரைக்கும் பலவிதமாய் முயன்றும் தாங்க முடியாமல் சோழர்களால் அடிபட்டுப் போயினர். அக்காலத்தில் விஜயாலயச் சோழன் தோன்றிச் சிறிது சிறிதாகத் தன் பலத்தைப் பெருக்கி வந்தான். அவனுடைய வம்சம் சிறிது காலம் மட்டும் முன்னேற்றமடையாமல் இராஷ்டிரகூடர்கள் தடை செய்து வந்தார்கள். ஆனால் இரண்டு நூற்றாண்டுகள் வரை பிரபலமாய் ஆண்டுவந்த இராஷ்டிரகூட வம்சம் தளர்ச்

சியடைய ஆரம்பிக்கவே சோழ வம்சமானது பலப்பட ஆரம்பித்தது. 10-வது நூற்றுண்டில் சோழ வம்சத்தில் மன்னர் மன்னனாய் விளங்கிய இராஜராஜ சோழன் அக்கம் பக்கத்து நாடுகளை எல்லாம் வளைத்துத் தன்னுள் அடக்கிக்கொண்டான்.

## 22. இராஷ்டிரகூடர்கள்

இவ்விதம் பாதாமி சாளுக்கியர்களைத் தோற்கடித்து முன்னேற்றத்திற்கு வந்த இராஷ்டிரகூட வம்சம் சோழர்களால் நசிக்கப்படும் காலம் வரை உண்டான இரண்டு நூற்றுண்டுகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. யுத்த காலமும் அதன் பிறகு ஒன்று சேர்ந்த காலமும் —இராஷ்டிரகூட மன்னன் கோவிந்தன் III என்பவன் காலம் 783—814.

2. அமைதி காலம்—அமோக வருஷன் 815—878.

3. அராசக காலம்—இதில் இராஷ்டிரகூடர்கள் சீர் குலைந்த காலம் (878—973) இதன் மத்தியில் கிருஷ்ணன் III (940—968) என்பவன் காலத்தில் சிறிது ஏற்றம் அடைந்தது.

மேலே சொன்ன மூன்று பிரிவுகளில் கொங்குநாடு சுதந்திர நிலைமை சிறிதேனும் இல்லாமல் தவித்துக்கொண்டு இருந்தது. அவ்வக்காலத்துச் சரித்திரத்தைக் குறிக்கும்போது கொங்கு நாட்டின் சரித்திரத்தையும் குறிப்போமாக.

1. **கோவிந்தன் III (783—814):**— 9வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் இராஷ்டிரகூட மன்னனுகிய கோவிந்தன் III என்பவன் தக்ஷிண பீடபூமி முழுவதற்கும் அதிபனுகிவிட்டான். அவன் தலைக்காட்டுக் கங்கர்கள் மீது சென்று அவர்களைத் தோற்கடித்துத் தன் ஆளுகைக்குள் அடக்கிக்கொண்டான். அதுவரையில் கொங்குநாடு தலைக்காட்டு மன்னர்கள் ஆட்சிக்குள் இருந்ததறிவோம். ஆகவே கங்கர்கள் கோவிந்தன் கைக்குள் அடங்கிப்போகக்கொங்குநாடும்ஒருவாறுக இராஷ்டிர

கூட ஆதிக்கத்துள் சேர்ந்து விட்டது. அது முதல் இரண்டு நூற்றுண்டுகள் கொங்கு நாட்டிற்கு அவ்வடிமைத்தனம் நீங்கவில்லை.

அக்காலத்தில் கங்க வம்சத்தில் ஸ்ரீ புருஷமுத்தரசன் ஆட்சி புரிந்துவந்தான். அவன் முன் வைத்துக்கொண்டிருந்த பிருதுகளை விடவேண்டி நேர்ந்தது. இராஷ்டிரகூடச் சாசனங்களை ஆராயும்போது துருவன் என்ற அரசன் ஒரு கங்க இளவரசனைச் சிறைப்படுத்தியதாகவும் அவன் வெகுநாள் சிறையிலிருந்த பிறகு கோவிந்தன் III அவனே சிறையிலிருந்து பிறகு விடுவித்து அவன் நாட்டிற்கு அனுப்பியதாகவும் அறிகிறோம். ஆனால் அவ்விளவரசன் நம்பிக்கைத் துரோகமாய் நடந்ததாகவும் அதனால் கோவிந்தன் III கங்க நாட்டின் மீது மறுபடியும் படை எடுத்து அவனைத் தோற்கடித்து அவன் கர்வத்தை அடக்கி அவனை மறுபடியும் சிறைப்படுத்தியதாக அறிகிறோம். இச்சம்பவம் நடந்தது சுமார் 810 கி. பி. யில்.

மேற்படி சாசனத்தில் கங்க இளவரசனுடைய பெயர் குறிக்கப்படவில்லை. முத்தரசனுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் சிவமாரன் II இளையவன் பெயர் இரணவிக்கிரமன். ஒரு சாசனத்தில் சிவமாரன் இராஷ்டிரகூடர், சாளுக்கியர் முதலானவர்கள் படைகளை வென்றதாகவும் துருவனுடைய கணக்கற்ற குதிரைப் படைகளைத் தோற்கடித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இச்சாசனத்தில் கண்ட செய்தி உண்மையானல் அவ்வரசன் முத்தரசனுடைய மகன் சிவமாரன் II ஆக இருக்கலாம். தன் தகப்பன் ஏவலினால் சிவமாரன் II வடக்கேயுத்தத்திற்குச் சென்றிருக்கலாம். அப்போது துருவனால் பிடிபட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கலாம். துருவன் இறந்த பிறகு அவன் மகன் கோவிந்தன் பட்டத்திற்கு வந்தபின்மேல் அவனை விடுவித்து கங்க நாட்டிற்கு அனுப்பி அவனைத்தன் குறுநில மன்னனுக நியமித்திருக்கலாம். இது 805 கி. பி. யில் நடந்தது. சிவமாரன் மீண்டும் பட்டம் பெற்ற

பிறகு கர்வம் அடைந்து தன் எஜமானன்மீது கலகம் செய்ய ஆரம்பித்தான். அதைக்கண்டு சினந்த இராஷ்டிரகூட மன்னர் மன்னன் கங்கநாட்டின் மீது படை எடுத்து சிவமாரனைத் தள்ளிவிட்டு அவனைச்சிறைப்படுத்தி அவன்தம்பியாகிய இரண விக்கிரமனை கங்க நாட்டுச் சிம்மாசனத்தில் வைத்தான்.

ஒருவேளை சிறையில் வைக்கப்பட்ட அரசன் சிவமாரன் அல்லாவிட்டால் அவன் தகப்பன் ஸ்ரீ புருஷமுத்தரசனுயிருக்க வேண்டும். ஏனெனில் இவன் சிறிதுகாலம் மன்னர் பிருதுக்கள் இல்லாமல் இருந்து பின்னுல் வைத்துக்கொண்டான். அச்செய் தியே அவன் வீழ்ச்சிக்குக் காரணமாயிருக்கலாம். சுமார் 810 கி. பி. யில் முத்தரசனுடைய இரண்டாவது மகன் இரண விக்கிரமன் பட்டத்திற்கு வந்தான். அவன் இராஷ்டிரகூட மன்னர்களுக்குக் கீழ்ப்பட்டு ஒழுக்கத்துடன் ஆண்டுவந்தான். இந்தக் சமயத்தில் கங்க வம்சம் இரண்டு பிரிவு அடைந்தது. மேற்கு கங்கர்கள் தலைக்காட்டிலும் கிழக்கு கங்கர்கள் கோலாரிலும் ஆள ஆரம்பித்தனர். கோலாரில் ஆண்ட கங்க மன்னர் கள் சிவமாரன் II, பிருதிவிபதி I, மாரசிம்மன், பிருதிவி பதி II ஹஸ்திமல்லன் என்பவர்கள்.

அமோகவர்ஷன்—கி. பி. 814 — 877:— இராஷ்டிரகூட மன்னன் கோவிந்தன் III என்பவனுக்குப் பிறகு இவன் மகன் அமோக வர்ஷன் 814 கி. பி. யில் பட்டத்திற்கு வந்தான், அவ் வரசன் வெகு நீண்ட காலம் அதாவது 62 வருடகாலம் அர சாண்டான். அவன் சமயத்தில் ஈடுபட்டவன். கடவுளிடம் மிகுந்த அன்போடுஇருந்தவன். ஜைனமதச்சார்பு உடையவன். கல்வியில் மிகுந்த பிரீதி உடையவன். கல்வியில் வல்லவர் களுக்கு மிகுந்த ஆதரவு அளித்தவன். அவன் தகப்பன் வெகு நாள் நடத்தின யுத்தங்களின் பலனை அனுபவித்தான். ஏனைய மன்னர்கள் இராஷ்டிரகூடர்களைக் கண்டால் பயந்து நடுங்கி னார்கள். சாளுக்கியர்கள் பக்கத்தில் அணுகவே இல்லை. இவ்வர சன் வெகு காலம் செங்கோல் நடத்திவந்து மிகவும் தளராத

வயதில் தன் மகன் கிருஷ்ணனை இளவரசனுக்கித் தனக்குப் பதிலாக அதனை ஆட்சி புரியும்படி வைத்துக்கொண்டான்.

இவ்வரசனுடைய ஆட்சியில் நாடு முழுதும் அமைதி ஏற்பட்டிருந்தது. இராஜ்ஜியத்தின் எல்லைப்புறங்களில் இருந்தநாடுகளிலும் கூட சமாதானம் மேலிட்டிருந்தது. அக்கம்பக்கத்து மன்னர்களோடு போராட்டம் ஆடுவதற்குப் பதிலாக இவ்வரசன் அவ்வரச குடும்பங்களோடு கல்யாண சம்பந்தங்கள் ஏற்படுத்தி வைத்தான். அக்காலத்தில் இராஷ்டிரகூட வம்சத்திற்கும் கங்கபல்லவ வம்சத்திற்கும் ஒரு சம்பந்தம் ஏற்படுத்தப் பட்டது. கங்க பல்லவர்களில் இவ்வரசனைப் போலவே நீண்டகாலம் ஆண்ட நந்திவிக்கிரம வர்மன் அமோகவர்ஷனுடைய மகளை திருமணம் செய்துகொண்டான். பாணர்களுடைய தலைவன் விக்கிரமாதித்யன் 1 என்பவன் கங்க பல்லவர்களுக்கு அடங்கிய ஒரு சிற்றரசனுகி விட்டான். மேற்குக் கங்கர்களில் இருகிளைக் குடும்பத்தார்களும் விரோதப்பான்மையின்றி இருந்தார்கள். கோலாரில் ஆண்ட கங்க அரசன் சிவமாரன் இறந்துபோக அவன் மகன் பிருதிவீபதி I என்றவன் பட்டத்துக்கு வந்தான். இவ்வரசனும் அமோகவர்ஷன் நந்திவிக்கிரமவர்மன் என்பவர்களைப்போல வெகு நீண்ட காலம் ஆட்சி புரிந்தான். பிரதிவீபதியினுடைய மகள் பாணர் மன்னன் விக்கிரமாதித்யனை மணம் செய்து கொண்டாள். ஆகவே பாணர்களுக்கும் கங்க பல்லவர்களுக்கும் சம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. தலைக்காட்டு கங்கர்கள் கூட அமைதியும் செழிப்பும் பெற்று ஆண்டார்கள். ஸ்ரீ புருஷமுத்தரசன் மகன் இரணவிக்கிரமன் காலத்திலும் அவன் மகன் இராஜமல்லன் காலத்திலும் (840—871) தலைக்காடு சிறந்திருந்தது. அடுத்தாற்போல் நுளம்பவம்சத்தில் பல்லவாதிராஜன் மகன் நுளம்பாதி ராஜன் ஆண்டு வந்தான். அவனுக்கு ராஜமல்லன் தன் மகள் ஜெயப்பையை மணம் செய்து கொடுத்தான். ஆகவே கங்கர்களுக்கும் நுளம்பர்களுக்கும் சம்பந்தம்

ஏற்பட்டுவிட்டது. இவ்விதமாக அமோகவர்ஷன் காலத்தில் ஒவ்வொரு வம்ஷத்திற்கும் கல்யாணச் சம்பந்தம் ஏற்பட்டு மன்னர்களெல்லாம் பந்துக்களாகி சமாதானத்துடன் விளங்கினார்கள். அதனால் நாடுகள் எங்கும் அமைதிஏற்பட்டு ஜனங்கள் செல்வத்திலும் வியாபாரத்திலும் விவசாயத்திலும் ஓங்கி வளர்ந்தார்கள். இக்காலம் தென்னாட்டில் சிறந்த காலம் எனலாம்.

**சுந்தரமூர்த்திகள் விஜயம்:—** அமோகவர்ஷன் செழிப்போடு ஆண்ட காலத்தில் கொங்குநாடு கங்கர்கள் கீழ் அடங்கியிருந்தது. கங்கர்களோ இராஷ்டிரகூடர்களின் ஆதிக்கத்தில் இருந்தார்கள். ஆகவே கொங்குநாடு இராஷ்டிரகூடர்களின் ஆதிக்கத்துள் இருந்தது எனலாம். நாடுகள் எங்கும் அமைதியுடன் இருந்தபடியால் கொங்குநாடு அவ்வமைதியின் பலனை அனுபவித்து வந்தது. ஆகவே கொங்கு நாட்டில் விவசாயம், வியாபாரம் இவைகள் சிறந்து விளங்கின. பொருட்செல்வம் சிறக்கவே சமய மேம்பாடும் விளங்கியது. அக்காலத்தில் கிழக்கே திருமுனைப்பாடி நாட்டில் சுந்தரமூர்த்திகள் அவதரித்திருந்தார். அப்பெரியார் சைவசமயப் பிரசாரத்திற்காகத் தமிழ் நாடுகள் எல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து, வருகையில் கொங்கு நாட்டையும் விஜயம் செய்திருக்கின்றார். அவ்வாறு அச்சைவ சமயாசிரியர் கொங்கு நாட்டிற்கு விஜயம் செய்தது மூன்று முறை ஆகும். இம்மூன்று முறைகளிலும் கொங்கு நாட்டில் பல தலங்களையும் தரிசித்து சைவசமயத்தைப் பரப்பிவைத்தார். அப்பெரியார் விஜயம் செய்தது 9-வது நூற்றாண்டின் முதற் பகுதி.

## 23. கொங்குநாட்டில் சுந்தரமூர்த்திகள் விஜயம்.

ஸ்ரீமத் சுந்தரமூர்த்திகள் திருமணத்திற்காக மணப் பந்தரில் மணக்கோலத்துடன் வீற்றிருக்கையில் ஈசனால் தடுத்தாட் கொள்ளப் பெற்றார். பிறகு பல சிவஸ்தலங்கள் தோறும்

சென்று பதிகங்கள் பாடித் திருவாரூர் நகர் அடைந்தார். அந்த நகரிலிருக்கையில் பரவை நாச்சியார் மணம் நடந்தேறியது. பின்னர் தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார்களைத்தொழுது "திருத்தொண்டத் தொகை" பாடினார். அந்நகரை விட்டுச் சோழநாட்டுத் திருப்பதிகளைத் தரிசித்துச்சென்ற சுந்தரமூர்த்திகள் திருப்பைஞ்ஞீலி முதலிய ஸ்தலங்களை வணங்கித் திருஈங்கோய் மலையைப் பணிந்து பின் அங்கிருந்து காவிரி தாண்டிக் கொங்குநாடு புகுந்தார்.

முதல் விஜயம்:— கொங்கு நாட்டில் காவேரிக்குத் தென் கரையில் கறையூர் எனப்பெயர்கொண்ட திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் ஸ்தலத்திற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்று சிவபெருமானை வணங்கி உள்ளத்தில் அன்பு பெருக ஈசனை மறக்க ஒண்ணு ஆர்வத்தினால்,

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனினிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாவுனை நான்ம றக்கினுஞ் சொல்லுநா நவச்சி வாயவே."

என்று தொடங்குவதாகிய "உலகெலாம் உய்ய உறுதியாம் பதிக"மாகிய பஞ்சாட்சரத் திருப்பதிகத்தை அருளினார். பின்பு அந்நகரை விட்டு நீங்கிப்,

"பாங்கு நற்பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போர்ந்து தண் பணிமலர்ப் படப்பை
குலவுமீ கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகினார் மூறுகுமா தரவால்"

(பெரிய புராணம், ஏயர்கோன்-88)

என்றபடி கொங்கு நாட்டுத் திருப்பதிகள் பலவும் சென்று திருப்பேரூரை அடைந்தார். அங்கே சிவபெருமான் தில்லைக் கனகசபையில் நடனம் செய்யும் அற்புதத் திருக்கோலத்தைத்

தமக்குக் காட்டக்கண்டு பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கின வராய் நமது சுவாமிகள் உள்ளம் மகிழ்ந்து தேவாரம் பாடியரு ளினார். பின் சிதம்பரம் செல்ல எண்ணினவராய் அந்நகர்விட்டு புறப்பட்டுச் சுரங்களும் நதிகளும் பல பல கடந்து திருப்பதிகள் பல பணிந்து பாடல்கள் பாடி வெஞ்சமாங்கூடலைச் சார்ந்தார். *அங்கே ஈசனைப் பணிந்து, சோழநாடு புகுந்து பல பதிகளைத் தரிசித்துச் சிதம்பரம் போய்ச்சேர்ந்தார். அங்கே ஸ்ரீ சபாநாத ரைத் தரிசித்துத் தாம் பேரூரிலே கண்ட நிலையைச் சிறப்பித்து "மடித்தாடும் அடிமைக்கண்" என்னும் பதிகத்தில்,

"பாருரு மரவல்கு லுமை நங்கை யவன் பங்கன் பைங்க ணேற்ற
னூரரன் றருமனார் தமர் செக்கி லிடும்போது தடுத் தாட்கொள்வா
னாரூரன் றம்பிரானாரூரன் மீகொங்கிலணி காஞ்சி வாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றா மன்றே"

என அருளிப்பாடினார். இதுதான் சுந்திரமூர்த்திகளின் கொங்கு நாட்டு முதல் விஜய வரலாறு.

இரண்டாவது விஜயம்:— பின்னர் சுந்திரமூர்த்தி சுவாமி கள் தமிழ்நாட்டுத் திருப்பதிகள் பலசென்று பதிகங்கள் பாடித் திருவொற்றியூரில் சங்கிலியாரைமணந்து அவ்விடம் சிலகாலம் இருந்து திருவாரூரை நினைந்து புறப்பட்டார். அவ்வாறு செல் கையில் தாம் சபதம் தவறிய காரணத்தால் கண்கள் இழந்து,

---

*சுவாமிகள் வெஞ்சமாங் கூடலில் பாடிய தேவாரம்:—

"எறிக்கும் கதிர் வேய் உதிர் முத்தம் ஓடு ஏலம் இலவங்கம்
தக்கோலம் இஞ்சி
செறிக்கும் புனலுள் பெய்து கொண்டு மண்டித்திளைத்
தெற்று சிற்றாறதன் கீழ் கரை மேல்
முறிக்கும் தழைமா முடப்புன்னை ஞாழல் குருக்கத்தி
கண்மேற் குயில் கூவலரு
வெறிக்கும் கலைமா வெஞ்சமாங்கூடல் விகிர்தா
அடியேனையும் வேண்டுதியே"

என்பதை முதலாக உடைய திருப்பதிகம்.

காஞ்சியில் ஒரு கண்ணும் திருவாரூரில் மற்ருெரு கண்ணும் அருளப்பெற்ருர். அங்கு பரவை நாச்சியாருடைய ஊடலை ஈசனருளால் நீக்கப்பெற்று பல ஸ்தலங்கள் தரிசித்துவிட்டுப் பின்பும் அந்நகரிலேயே சிலகாலம் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது சேரநாட்டுக் கொடுங்கோளூரில் அரசு புரிந்துகொண்டிருந்த ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனுர் ஸ்ரீ சுந்திரமூர்த்திகளுடைய பக்தி மகிமையைக் கேட்டறிந்து அவரைத் தரிசிக்க விரும்பித் திருவாரூரையடைந்தார். ஸ்ரீ சுந்திரமூர்த்திகளும் சேரமான் பெருமானை மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு உபசரித்து அவருடன் நட்புரிமை பூண்டார். சிலநாள் கழித்த பின்னர் சேரமான் பெருமாள் சுந்திரமூர்த்திகளைச் சேரநாட்டுக்கு எழுந்தருளும்படி வேண்ட அவரும் அதற்கிசையவே அவ்விருவரும் புறப்பட்டுச் செல்லுகையில் திருவையாற்றில் காவிரி நீர் பிரிந்து தமக்கு வழி விடும்படி ஸ்ரீ சுந்திரமூர்த்திகள் திருப்பாடல் பாட அவ்வண்ணமேயாகக் காவிரி கடந்து மேற்றிசை நோக்கிக் கொங்குநாடு புகுந்தார்கள். அந்நாட்டைக் கடந்து மலைநாடு செல்லவே அங்குள்ளார் அவர்களை எதிர்கொண்டு உபசரிக்கப்பெற்று கொடுங்கோளூர் சென்று சேர்ந்தார்கள். அங்கே ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் சிலநாள் வசித்திருந்து பின் ஸ்ரீ சேரமான் பெருமாள் பெரும் பொருள் தரப்பெற்று மலைநாடு விட்டு நீங்கினுர். வழியில் கற்சுரங்களையும் கான்யாறுகளையும் நெடுங்கானல்களையும் கடந்து கொங்கு நாட்டுத் திருமுருகன் பூண்டியின் வழியே சென்ருர். அவ்வாறு செல்லுகையில் சிவபெருமான் ஏவலினுல் கணங்கள் வேடுவராய் வந்து சுந்தர மூர்த்திகள் கொண்டேகும் பொருள்களைப் பரிசனங்களிடமிருந்து வழிபறித்தார்கள். சுவாமிகளும் திருமுருகன் பூண்டியடைந்து திருக்கோவிலுட் புகுந்து எம்பெருமானை வணங்கி,

"கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறை கொண்டாறலைக்கு மிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ் முருகன் பூண்டிமா நகர்வாய்

இடுகு நுண்ணிடை மங்கை தன்னெடு மெத்துக்கிருந்தீ
ரெம்பிரா னீரே"

என்று தொடங்கும் திருப்பதிகம் பாடியருள, கடவுள் திருவருளினுல் அவ்வேடுவராகிய கணங்கள் பறித்த பொருள்களெல்லாம் கோயில் வாயிலிற் கொண்டு குவித்தார்கள். சுவாமிகள் அவ்வண்ணம் பெற்று அந்நகர் நீங்கிக் கொங்குநாடு கடந்து திருவாரூரடைந்து அங்கே இனிதிருந்தார். இதுதான் கொங்கு நாட்டில் சுந்திரமூர்த்திகள் செய்த இரண்டாவது விஜயம்.

மூன்றும் விஜயம்:— சிலநாள் சென்றபின் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமாணுயனுரைக்காண ஆவல் கொண்டார். அதற்காக மலைநாடு செல்லக்கருதி கொங்கு நாடு கடக்கையில் திருப்புக்கொளியூர் அவிநாசி சேர்ந்தார். அவ்வூரினுள்ளே போகும்போது ஒரு வீதியிலே ஒரே காலத்தில் ஒரு மனையில் மணவொலியும் ஒரு மனையில் அழுமொலியும் எழக் கேட்டு நாயனுர் "இவ்விரண்டொலியும் ஒருங்கு நிகழ்வது என்னை" என வினவ, சில வருடங்களின் முன் ஒரு மடுவிற்குக் குளிக்கச் சென்ற இரு மக்களில் ஒருவனை ஒரு முதலை விழுங்கியதும் மற்றவன் தப்பி வீடு வந்ததும் தப்பினவனுக்கு அப்போது அவன் மனையில் உபநயனம் நடப்பதும் அதனைக்கண்டு இறந்தவன் வீட்டில் அழுகை உண்டாவதும் முதலான விஷயங்கள் வெளியாயின. அவற்றைக் கேட்டறிந்த நாயனுர் அவ் வீறந்த புதல்வனைப் பிறப்பிக்கத் திருவுள்ளம்கொண்டு மடுவை அடைந்து எம்பெருமான் மீது "எற்றுன் மறக்கேன்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினுர். அதனில்,

உரைப் பாருரை யுகந்துள்க வல்லார் தங்களுச்சியாய்
அரைக் காடரவா வாதியுமந்தமு மாயினுய்
புரைக் காடு சோலைப் புக்கொளியூ ரவிநாசியே
கரைக் கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே.

என்ற நான்காம் திருப்பாட்டு முடிவதற்குள் அம்மடுவிலிருந்த முதலை முன் விழுங்கின பிள்ளையை அன்றுவரை சென்ற வய

தும் நிரம்பக் கரையில் உமிழ்ந்தது. பிள்ளையைத் திரும்பப் பெற்ற பெற்ருேர் சுவாமிகளைத் தொழவும் அவர் அவிஞசி யீசனைத் துதித்து அப்பிள்ளைக்கும் உபநயனம் புரிவித்தார். பின்னர் கொங்குநாடு நீங்கிக் "குடபுலத்துச் சிவனுர் அடியார் பதிகள் தோறும் மகிழ்வுற்று கானகமும், கான்யாறும், கற்சுரமும் கடந்தருளி மலைநாடு புகுந்தார். அவ்விடமே சுவாமிகள் சேரமான் பெருமாள் நாயனுருடன் சிலகாலம் அளவளாவி இருந்த பின்னர் இரண்டு பரம பக்தர்களும் சிவபெருமான் திருவருளால் திருக்கைலாயம் அடைந்தனர். இதுதான் சுந்தர மூர்த்திகள் கொங்குநாட்டில் மூன்ருவதாகவும் இறுதியாகவும் செய்த விஜயம்.

மேலே கூறிய வரலாறு நமக்குக் கிடைக்கக்கூடிய வரலாறுகளிலெல்லாம் முதன்மையானது. அனபாயச் சோழர் எனப்பெயர்கொண்ட குலோத்துங்க சோழன் II (கி. பி. 1133 —1146) காலத்தில் அவனுடைய ராஜாங்கத்தில் மந்திரித் தொழில் பூண்டிருந்த ஸ்ரீமத் சேக்கிழார் சுவாமிகள் மேற்கண்டவாறு சுந்திரமூர்த்தி சுவாமிகளுடைய சரித்திரத்தைத் தாம் அருளிச்செய்த பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தில் விரித்துக் கூறியிருக்கின்ருர். அதாவது சுந்தர மூர்த்தி சுவாமிகள் வாழ்ந்த காலத்திற்குச் சுமார் 300 ஆண்டுகளுக்குள் மேற்கூறிய சரித்திர விருத்தாந்தம் எழுதப்பட்டது. அதை எழுதினவரோ அரசாங்கத்தில் பெரிய பதவி பூண்டவரும் சரித்திர வரலாறுகளை எளிதில் ஆராய்ந்து வரைவதற்கு வேண்டிய சாதனங்களைக் கொண்டவருமான ஒரு பெரும் புலவர் சிகாமணி. அவரது நூலோ சரித்திர உண்மைகளை உள்ளவாறு எடுத்துக்கூறும் ஒரு உன்னதமான நூல். இந்நூலைத் தற்காலம் சரித்திர நிபுணர்கள் தென்னிந்தியா சரித்திரத்தை எழுதுவதற்கு ஒரு முக்கிய ஆதரவாக எடுத்தாளுகின்றனர். ஆகவே மேற்கூறிய வரலாறே சரியான வரலாறென்று நாம் கொள்ளவேண்டாமா ?

மேலும் நமக்குக் கிடைக்கும் ஆதரவுகளில் பெரிய புரா ணத்திற்கு இரண்டாவதாகக்கொள்ளக்கூடியது கச்சியப்ப முனிவரால் அருளிச் செய்யப்பட்ட பேரூர்ப் புராணம் அதில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கொங்கு நாடு அடைந்த வரலாறு அடியில்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் வெண்ணெ நல்லூரில் சிவபிரானால் ஆட்கொள்ளப்பெற்றுத் தெற்கே பல திருப்பதிகள் தரிசித்துச் சென்று திருவாரூரை அடைந்து அங்கே பரவையாரை மணந்து, திருத்தொண்டத் தொகை என்னும் பதிகம் பாடிப் பின் மேற்காகப் பல சிவஸ்தலங்கள் தரிசித்துக்கொண்டே கொங்கு நாட்டில் கொடுமுடி அடைந்தார். அங்கே அவ்வூர் ஈசனை வழுத்திப் பின் மேற்கே சென்று காஞ்சிவாய்ப் பேரூரை அணுகினார். அத்திருப்பதி வாழும் அடியார்கள் "தம்பிரான் தோழர் வந்தார்" எனக்கொண்டாடி ஊர் அலங்கரித்து அவரை எதிர்கொள்ளவே சுந்தரமூர்த்திகளும் அவர்களுடன் அளவளாவியிருந்து காஞ்சி நதியில் நீராடித் திருக்கோயில் புகுந்தார். ஆனால் அவர் வருவதற்கு முன்பே சிவபெருமான் ஒரு திருவிளையாட்டை முன்னிட்டு உயர்ந்ததும் இழிந்ததும் ஆனவெல்லாம் தானே என்று மறை ஓதுவதை நிரூபிக்க முன்னர் வேதியனாய் வந்ததுபோலத் தானே இப்போது ஒரு பள்ளனாயும் தேவியார் ஒரு பள்ளியாகவும் உருவெடுத்து, உழுதல், நடுதல் முதலிய மழவர் தொழிலைப்புரிந்து கொண்டிருந்தனர். பெருமானைக் கோயிலில் காணப்பெறாமல் நாயனார் நந்தீசனை வினவவே, அவர் ஈசனால் முன்னமே சொல்லக்கூடாதென்ற கட்டளை இடப்பெற்றவராயிருந்ததினால், யாதொன்றும் கூறாமல் தன் பார்வையை மட்டும் அத்திக்கிலே செலுத்த அக்குறிப்பை உணர்ந்த ஸ்ரீமத் சுந்தரமூர்த்திகள் அவ்வழியே சென்று அங்கே வயலிடத்தே சுவாமியையும் தேவியையும் கண்டு வணங்கினர். சிவபெருமான் நாயனாரோடு கரையேறி ஆலயம் அடைந்து, தன் கட்டளை தவறின குற்றத்துக்காக

நந்தியின் முகத்தைச் சேதித்து, வெள்ளியம்பலத்தில் திருநடனம் புரிந்தார். அதனை தரிசித்து மகிழ்ந்த நாயனார் பொன் தரும் படி கேட்கவும், கொடாமல் சிவபிரான் "உனது பாட்டிற்கு நமது ஆட்டே பரிசு; இது முத்திஸ்தலம், ஆகையால் மற்றைய ஸ்தலங்களில் பொன் தருவோம்; சேரமானுக்கு உனது செய்தி தெரிவித்தோம்; அவன் தருவான்" என அருளிச் செய்தார். பின்னர் நாயனார் விடைபெற்று பல ஸ்தலங்களையும் தரிசித்துச் சிதம்பரம் செல்ல, அங்குப் பொன்னம்பலத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமான் பேரூரில் காட்டிய தரிசனம் காட்டவே, அதனை பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே" எனச் சிறப்பித்துப் பாடினார்.

பிறகு சோழ நாடு, நடு நாடு, தொண்டை நாடுகளில் உள்ள திருப்பதிகளைத் தரிசித்துத் திருவாரூர் சென்ற நாயனார் அங்கு சேரமான் பெருமானைச் சந்தித்து அவருடன் நட்புரிமை பூண்டு திருவஞ்சைக் களம் சேர்ந்து அங்கு சில நாளிருந்து சேரமான் பெருமாளிடம் பெரும் பொருள் பெற்றுத் திரும்பும் வழியில் பறிகொடுத்துத் திருமுருகன் பூண்டியில் அதனை மீண்டும் பெற்றுத் திருவாரூர் சேர்ந்தார்.

மீண்டும் மலை நாடு செல்லக் கருதிக் கொங்கு வழியே செல்கையில், திருப்புக்கொளியூரில் ஒரு மனையில் அழுகையும் ஒரு மனையில் மணமும் கண்டு வியந்து, விளைவி நடந்தவாறு அறிந்து, பதிகம் பாடி முதலைவாய்ப்பிள்ளை அழைப்பித்துப் பின் திருவஞ்சைக்களம் சேர்ந்து கையிலை அடைந்தார்.

இவ்வாறு கூறும் பேரூர்ப் புராணச் சரித்திரத்திற்கும் பெரிய புராணச் சரித்திரத்திற்கும் இரண்டு வித்தியாசங்கள் உண்டு. அவைகளில் ஒன்று ஈசன் பள்ளனாக நடித்தத்திருவிளையாடல்; மற்றொன்று சுந்தரமூர்த்திகள் பேரூரில் சிவபெருமானைப்பொன் தரும்படி பாடியதாகச் சொல்லிய வரலாறு. இவைகளில் முன்னைய வரலாற்றிற்கு ஆதாரமாகப் பேரூரில் சில

சின்னங்கள் உண்டு. ஈசன் பள்ளனுன உருவம்; அதற்கு ஆண்டு தோறும் திருவிழா நடப்பது; முளைநட்ட பூமி; இவைகளெல்லாம் இப்போதும் காணலாம். ஆனல் இவைகளுக்குப் பெரிய புராணத்தில் ஆதாரமில்லை.

மேலும் சுந்தரருடைய விஜயத்தைப்பற்றி அவிநாசிப் புராணம், திருத்துடிசைப் புராணம், திருமுருகன் பூண்டித் தலப்புராண்ம் என்ற நூல்களில் காணலாம். இவ்வரலாறுகளில் சிலமாறுபாடுகள் உண்டு. அவைகளின் வீவரம் ''ஸ்ரீமத் சுந்தர மூர்த்தி சுவாமிகளும் கொங்குநாடும்'' என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

## 24. ஆட்சிக் கலவரங்கள்

இது வரையில் இராஷ்டிரகூட மன்னன் அமோகவர்ஷன் அரசாண்டதைப்பற்றியும் அவன் காலத்தில் கொங்கு நாட்டிற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் விஜயம் செய்ததைப்பற்றியும் கூறினேம். அமோகவர்ஷன் கி. பி. 807ல் காலகதி அடைந்தான். அவனுக்குப்பின் இராஷ்டிரகூடர்கள் தளர்ச்சியடைய ஆரம்பித்தார்கள். அந்தக் காரணமாகத் தென்னிந்தியாவில் பல கிளர்ச்சிகளும் அமைதியின்மையும் ஏற்பட்டன.

கங்க பல்லவர்களில் நந்திவிக்கிரமவர்மன் இறந்த பிறகு அவன் மகன் நிருபதுங்கன் பட்டத்திற்கு வந்தான். அவன் கங்க பல்லவர்களுடைய வம்சத்திலேயே மிகுந்த சாமர்த்தியவான். தன் கீர்த்தியையும் எல்லாரும் அறியும் வண்ணம் நிலை நாட்டினன். அக்காலம் வரையில் கங்க பல்லவர்கள் யானை, அன்னம் இவைகளைத் தங்கள் பிருதுக்களாகக் கொண்டிருந்தார்கள். ஆனல் நிருபதுங்கனே பழைய பல்லவ வம்சத்திற்குச் சேர்ந்த ரிஷபத்தைத் தன் பிருதுவாக மாற்றிக்கொண்டான். இதனலே, "தான் ஒரு குறுநில மன்னன் அல்ல. ஒரு பெரிய அரச வம்சத்திற்குச் சார்ந்தவன்,'' என்று தெரிவிப்பதற்காக அவ்விதம் தன் பிருதுவை மாற்றிக்கொண்டான்.

மேலும் தன் நாட்டினை விசாலப்படுத்துவதற்காகத் தெற்கே படை எடுத்துச் சென்றான்.

ஆனால் தென்னாட்டில் மதுரையில் ஆண்டுவந்த பாண்டியர்களோ சும்மா இருக்கவில்லை. வெகு காலம் தளர்ச்சியடைந்திருந்த பாண்டிய வம்சம் சிறிது தலை உயர்த்த ஆரம்பித்தது. கி. பி. 862ல் வரகுண பாண்டியன் பட்டத்திற்கு வந்தான். அவன் தன் முன்னோர்களின் கீர்த்தியை நிலைநாட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு வடக்கே சென்றான். அது வரையில் பாண்டியர்கள் இழந்த நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமென்பது அவன் எண்ணம். வரகுணன் வடக்கே செல்லவும் கங்க பல்லவர்கள் தெற்கே வரவும் இருதிறத்தார்க்கும் யுத்தம் மூண்டுகொண்டது. கும்பகோணத்தருகில் உள்ள திருப்புறம்பியம் என்ற இடத்தில் சண்டை நடந்தது. அச்சண்டையில் கங்க பல்லவர்களுக்குத் தலைவனாக அபராஜிதன் போர்புரிந்தான். அவனுக்கு அனுகூலமாக பிருதிவிபதி I என்பான் தலைமைக் கீழ் கோலார் கங்கர்கள் சண்டையிட்டார்கள். இவ்விருதிறத்தார்க்கும் எதிராக வரகுணன் போர்புரிந்தான். அம்மகா யுத்தத்தில் வரகுணன் தோல்வி அடைந்தான். கங்க பல்லவர்கள் வெற்றியடைந்து தலை நிமிர்ந்தனர். அந்த யுத்தத்தில் பிருதிவிபதி I உயிர் துறந்தான். அவ்வரசனுடைய இறுதிச் சாசனம் 879ல் உள்ளதால் திருப்புறம்பியச் சண்டை 880 நடந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது.

திருப்புறம்பியச் சண்டை மிகவும் முக்கியமானது. அச்சண்டையின் காரணமாகத் தென்னிந்தியாவில் அரசியலானது வேறு விதமாக மாறிற்று. மதுரைப் பாண்டியர்கள் ஆதிக்யம் குறையத் தொடங்கி சோழர்கள் தலை நிமிருவதற்குக் காரணம் ஏற்பட்டது. இச்சண்டைக்கு முந்தி சோழர்கள் என்ற பெயரே சொல்லுவாரில்லாமல் இருந்தது. வரகுணன் தோல்வியடையவே பழைய சோழர்கள் வம்சத்தில் தோன்

றின ஆதித்யன் என்று ஒரு இளவரசன் சமயத்துக்குத் தகுந்த படி நடந்துகொண்டு முன்னேறிவிட்டான். இவன் 880ல் பட்டத்திற்கு வந்தவன். சிறிது சிறிதாகத் தன் ராஜியத்தை விசாலப்படுத்த ஆரம்பித்தான்.

திருப்புறம்பியச் சண்டைக்குப் பிறகு அதில் தோற்றுப் போன வரகுணவர்மன் வெகுநாள் இருக்கவில்லை. அவன் சந்ததி இல்லாமல் இறந்துபோனான். அவனுக்குப்பின் அவன் தம்பி பராந்தக வீரநாராயணச்சடையன் பட்டத்திற்கு வந் தான். இவன் ஒரு தடவை கொங்குநாட்டின் மீது சென்று கரகிரி என்ற இடத்தில் சண்டையிட்டுப் பெண்ணாகடம் என்ற ஊரை அழித்ததாகச் சாசனங்களால் அறிகிறோம். ஆகையால் பாண்டிய வம்சம் தோல்வியுற்ற போதிலும் தங்கள் அதிகாரத்தை மீண்டும் செலுத்துவதற்குப் பிரயத்தனப்பட்ட தாகத் தெரிகிறது. பாண்டியன் சேர மன்னன் புதல்வி வான வன்மகாதேவியை மணம் செய்துகொண்டதாக அறிகிறோம்.

திருப்புறம்பியச் சண்டையில் வெற்றியடைந்த அபராஜி தன் வெகுகாலம் தன் நாட்டை வைத்துக்கொண்டிருக்க முடிய வில்லை. மேலே கூறிய சோழ மன்னன் ஆதித்யன் முதலில் தஞ்சை நகரைப்பிடித்து அதனைத் தனது ராஜதானியாக்கிக் கொண்டான். பிறகு வடக்கே சென்று அபராஜிதனை முறி யடித்துக் கங்க பல்லவர்களை வீழ்த்திவிட்டான். அது முதல் கங்கபல்லவர்கள் தொலைந்தார்கள். பிறகு மேற்கே உள்ள நாடுகளைக் கைப்பற்ற ஆரம்பித்தான். அவனே கொங்கு நாட்டின்மீது படை எடுத்து அதனை கி. பி. 894-ல் பிடித்த தாக "கொங்குதேச ராஜாக்கள்" என்னும் நூல் கூறுகிறது. இச்செய்திக்கு ஆதாரமாகச் சேலம், திருச்செங்கோடு என்ற கொங்குநாட்டு ஊர்களில்காணும் சாசனங்கள் நிரூபிக்கின்றன. சேலத்துச் சாசனங்கள் (47 & 48 of 1888) திருச்செங்கோட் டுச் சாசனங்கள் (625, 627 & 629 of 1905) இவைகள் ராஜ கேசரிவர்மன் காலத்தவை. பின் சொன்னவைகள் அவ்வரச

னுடைய 16, 14, 13 ஆண்டுகளில் ஏற்பட்டவைகள். சோழர் கள் பிரக்யாதி அடைந்தபின் தான் தனிப்பெயர்களால் சாச னங்கள் எழுதினுர்கள். அதற்கு முன் ராஜகேசரிவர்மன், பரகேசரிவர்மன் என்ற பொதுப் பெயர்களாலே சாசனங்கள் ஏற்படுத்தினுர்கள். இவ்விதச் சாசனங்கள் ஆலயங்களுக்கும் அந்தணர்களுக்கும் கொடுத்த தானதர்மங்களாயிருந்த போதி லும் அரசர்களுடைய பெயர்கள் மூலமாகச் சரித்திர விஷயங் கள் அறியக்கூடும். இவ்விதக் காரணங்களினுல் சேலம், திருச்செங்கோட்டுச் சாசனங்கள் ஆதித்யன் I என்பவனுல் ஏற்படுத்தியவை என்று நிரூபிக்கிறுர்கள். ஆகவே ஆதித்யன் I காலத்திலேயே கொங்குநாட்டின் ஒருபாகம் சோழர்கள் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டது எனலாம்.

கோவை ஜில்லாப் பொள்ளாச்சி தாலூக்காவில் பெரிய களந்தை என்ற பழைய ஊர் ஒன்று இருக்கின்றது. இவ் வூரில் ஒரு பண்டைய சிவாலயம் இருக்கின்றது. இது கோய முத்தூர் பொள்ளாச்சிப் பாதையில் மத்தியில் இருக்கும் கிணற்றுக்கடவுக்குக் கிழக்கே 8 கல்லில் உள்ளது. இந்த ஸ்தலத்து மூர்த்திக்கு ஆதித்தேஸ்வரர் என்று பெயர், ஆதீஸ் வரர் என்றும் மறு பெயர் உண்டு. விக்கிரமசோழன் வீர ராஜேந்திரசோழன் என்ற கொங்கு சோழர்களின் கல்வெட்டுக் கள் இவ்வூர் ஆலயத்தில் காண்கிறபடியால் இவ்வாலயம் பண்டைக்காலத்து ஆலயம் என்பதில் சந்தேகமில்லை. கருவூர்த் தேவர் அருளிச்செய்த திருவிசைப்பாவில் காணும் களந்தை ஆதித்தேச்சரம் இந்தஸ்தலம் என்று எண்ணப்படுகிறது. ஆகவே இவ்வூர் ஆலயம் ஆதித்தன் என்ற அரசனுல் ஏற்பட் டிருக்கவேண்டும். கொங்குச் சோழர்கள் தஞ்சை சோழ மன்னருடைய பிரதிநிதிகளாக வந்தவர்களாதலால் இந்த ஆதித்தன் தஞ்சையில் ஆண்ட சோழ மன்னனுயிருக்கவேண் டும். ஆகவே அவன் 880 முதல் 906 வரை ஆண்ட ஆதித்யன் I ஆக இருக்கலாம்; அல்லது 970 முதல் 980 வரை ஆண்ட

ஆதித்யன் II ஆக இருக்கலாம். ஆதித்யன் I காலத்தில் முதல் முதலாக சோழர்கள் கொங்குநாட்டிற்கு வந்தார்கள். அவர் களுடைய பிரக்கியாதியும் அப்போதுதான் வளர ஆரம்பித் தது. ஆகவே அவ்வரசன் கொங்குநாட்டின் மேற்குப் பாகத்தி லுள்ள களந்தை மட்டும் வந்து அங்கே ஒரு ஆலயத்தை ஸ்தா பித்திருக்க முடியுமா? என்ற கேள்வி பிறக்கலாம். ஆதித்தன் II ன் காலத்திற்குள்ளாக சோழர்களுடைய ஆதிக்கம் பலத்து விட்டது. மேலும் அவனுக்குக் கரிகாலன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. கொங்குநாட்டுச் சாசனங்களில் கரிகாற் சோழன் என்ற பெயர் அதிகமாக வருகின்றது. பேரூர்ப்புரா ணம் முதலிய ஸ்தலப்புராணங்களிலும் கரிகால் சோழன் பெயர் காண்கிறோம். இப்பொழுதும் பேரூரில் காஞ்சிமா நதிக்கு உள்ள ஸ்நான கட்டத்திற்குச் சோழன்துறை என்ற பெயர் உண்டு. அத்துறை கரிகால் சோழனால் கட்டப்பட்ட தென்பர். ஆகவே களந்தை ஆதித்தேச்சரம் ஆதித்தன் II என்பவனால் ஆக்கப்பட்டிருக்கவேண்டும்.

இது நிற்க ஆதித்தன் I என்பவன் 906ல் இறக்க அவன் மகன் பாரந்தன் I என்பவன் பட்டத்துக்கு வந்தான். இவன் பெரிய தீரன். அரசியலிலும் நிபுணன். இவன் காலத்தில் சோழ ராஜ்யம் வெகுபிரபலமடைந்தது. இவன் நீண்டகாலம் ஆண்டவன். 948 வரை இவன் அரசாட்சி நடந்தது. நாலா பக்கங்களில் இருந்த நாடுகள்மீது படையெடுத்து வெற்றி கொண்டான். இவனுடைய சாசனங்கள் குமரி முதல் சீகாளத்தி வரை பட்டியிருக்கின்றன. அவன் மதுரையைப் பிடித்து பாண்டியனைத் தோற்கடித்து "மதுரை கொண்ட வன்" என்ற பட்டத்தை வகித்துக் கொண்டான். இவனு டைய சாசனங்கள் சேலத்திலும் (632, 633, 640, of 1905 முறையே 36, 20, 27-ம் ஆண்டுகள்) திருச்செங்கோட்டிலும் உள்ளன. ஆகவே கொங்கு நாட்டின் கீழ்ப்பாகம் இவன் ஆட்சியில் இருந்த தென்பதற்கு ஐயமில்லை.

## 25. புரட்சிகள்

நுளம்பர்கள் :— பத்தாம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் சோழ வம்சம் பிரபலமடைந்து கொங்கு நாட்டின் ஒரு பாகத்தைச் சோழன் பராந்தகன் I வசப்படுத்திக் கொண்டதை முன்னே சொன்னேம். அவ்வாறு சோழர்கள் கிழக்கு நாடுகளில் அபிவிருத்தி அடைந்து வருகையில், வடமேற்கிலிருந்து நுளம்பர்கள் கொங்கு நாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கினர்கள். நுளம்பர்களுடைய நாட்டிற்கு நுளம்பவாடி 32000 என்ற பெயர் இருந்தது. இந்த நாடு தற்கால மைசூர் பிராந்தியத்தின் வடகிழக்கே இருந்த நாடாகும். இந்நாட்டின் அரசன் நுளம்பாதி ராஜன் என்பவன் அக்காலத்தில் ஆண்டு வந்தான். அவன் பல்லவாதி ராஜன் என்ற அரசனுடைய மகன். அக்காலத்தில் தலைக்காட்டில் அரசாண்டு வந்த கங்க அரசன் ராஜமல்லன் நுளம்பாதி ராஜனேடு உறவுகொண்டாடித் தன் மகள் ஜெயப்பையை அவனுக்கு மணம் செய்துவைத்தான். அம் மணத்தின் பயனுக மகேந்திரன் என்ற ஒரு மகன் பிறந்தான். மகேந்திரன் நுளம்பவாடிக்கு 878ல் பட்டத்திற்கு வந்தான். இம் மகேந்திரன் சண்டை வெறி பிடித்தவன். அக்கம்பக்கத்து நாடுகளை வெல்ல வேண்டுமென்ற பேராசை கொண்டவன். அவன் பட்டத்திற்கு வந்த சிறிது காலத்திற்குள்ளாகக் கொங்கு நாட்டின் வடக்கே ஆண்டுகொண்டிருந்த பாணர்கள் மீது படை எடுத்தான். அப்போரில் பாணர்களுடைய வம்சத்தையே அழித்துவிட்டதாக அவன் பெருமை பேசிக்கொண்டான். தற்காலத்துச் சேலம் ஜில்லாவின் வடபாகமாகிய பாராமஹால் என்ற பிரதேசத்திலிருந்து பாணர்களை துரத்திவிட்டதாகத் தருமபுரி சாசனத்தால் அறிகிறேம். அச்சாசனம் 892 கி. பி. யில் ஏற்பட்டது. அதுமுதல்கொண்டு தருமபுரியும் அதன் சுற்றியிலுமுள்ள பிரதேசமும் நுளம்பர்கள் ஆதிக்கத்தில் இருந்தன. மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் ஐயப்பன் பட்டத்திற்கு வந்தான். இவ்வய்யப்ப

னுடைய சாசனங்கள் 2 தருமபுரியில் இருக்கின்றன. (304 & 305 of 1901) ஐயப்பன் இறந்ததற்குப் பிறகு அவன் மகன் அண்ணிகன் பட்டத்திற்கு வந்தான். அவனுக்குப் பிறகு அவன் மகன் இருளன் பட்டத்திற்கு வந்தான். அவ்விருளன் காலத்திய சாசனம் ஒன்று தருமபுரியில் இருக்கின்றது. அது 930 ஆண்டில் ஏற்பட்டதால் நுளம்ப ராஜ்ஜியமானது மகேந்திரன் முதல் இருளன் காலம் வரை அதாவது 892 முதல் 930 வரை கொங்கு நாட்டின் வடபாகத்தில் இருந்து வந்தது எனலாம் (சாசன அறிக்கை 1910-11 பக்கம் 65) நுளம்பர்களில் கடைசியாய் ஆண்ட அரசன் பெயர் திலீபரசன் என்பது. அவனோடு நுளம்பராஜ்ஜியம் அழிந்தது.

பாணர்வம்ச வீழ்ச்சி:- அக்காலத்தில் பாணவம்சத்தார் வடுகவழி என்ற பிரதேசத்தை ஆண்டு வந்தார்கள். அவர்கள் நாடானது தற்கால மைசூரின் கிழக்கு பாகமும் சேலத்தில் ஒரு பாகமும் வட ஆர்க்காட்டில் ஒரு பாகமும் கொண்டிருந்தது. அவர்கள் வாணபுரம் என்ற ஊரிலிருந்து அரசாண்டு வந்தார்கள். திருவல்லத்திற்கு முற்காலத்தில் வாணபுரம் என்ற பெயரும் இருந்தது. இப்பாணவம்சத்தார் கங்கபல்லவர்களோடு நட்புப் பூண்டிருந்தார்கள். ஆனால் ஆதித்தியச்சோழன் கங்கபல்லவர்களை அழித்த பிறகு இவர்களுடைய பலம் குறைந்து விட்டது. மேலும் நுளம்ப அரசன் மகேந்திரன் இப்பாணர்களுடைய நாட்டில் பாதியைப் பிடுங்கிக் கொண்டான். இக்காரணங்களினால் பாணவம்சம் க்ஷீணதசை அடைய ஆரம்பித்தது. பாணவம்சத்தரசன் விக்கிரமாதித்யன் I என்பவன் கங்கபல்லவன் நந்தி விக்கிரபல்லவனுக்குக் கீழ் சிற்றரசனாக ஆண்டு வந்தான். அவ்விக்கிரமாதித்யனுக்குப் பிறகு விஜயாதித்யன் II என்பவன் பட்டத்திற்கு வந்தான். அவன் காலத்துச் சாசனங்கள் 897, 904 என்பவை இரண்டு கிடைத்துள்ளன. அவ்வாண்டுச் சாசனங்களால் அவ்வரசன் தனிமையில் ஆண்டதாகத் தெரிகிறது. அவனுக்குப் பிறகு விக்கிர

மாதித்யன் II என்பவன் பட்டத்திற்கு வந்தான். இவன் இராஷ்டிர கூடர்களோடு சேர்ந்து கொண்டு கிருஷ்ண II என்பவனுடன் நட்பு பூண்டான். ஆனால் அடுத்த நாட்டில் அரசாண்டு வந்த கோலார் கங்கர்கள் வெகு தந்திரமாய் நடந்து கொண்டார்கள். அவர்கள் க்ஷீணித்து வரும் அரசரோடு சேராமல் வெற்றியடைந்து வந்த சோழர்களோடு நட்புப் பூண்டார்கள். ஆகவே அவர்கள் பிழைத்திருக்க வழி கிடைத்தது. திருப்புறம்பியச் சண்டையில் வென்ற பிருதிவிபதி I என்பவனுக்குப் பிறகு அவன் மகன் மாரசிம்மன் பட்டத்திற்கு வந்தான். அவன் யாதொரு முக்கிய காரியமும் செய்யவில்லை. அவனுக்குப் பிறகு அவன் மகன் பிருதிவிபதி II என்பவன் பட்டத்திற்கு வந்தான். அவனுக்கு ஹஸ்திமல்லன் என்ற மற்றொரு பெயர் உண்டு. இவ்ஹஸ்திமல்லன் சோழவரசன் பராந்தகன் I என்பவனோடு சேர்ந்து கொண்டான். ஆகவே பாண அரசன் வீக்கிரமாதித்யன் II என்பவன் இராஷ்டிர கூடர்களோடு சேர்ந்து கொள்ள கங்க அரசன் ஹஸ்திமல்லன் சோழர்களோடு சேர்ந்து கொண்டான் என ஏற்படும். இரு திறத்தார்க்கும் பகை ஏற்பட்டது. அது காரணமாக 914 கி. பி. யில் பராந்தகன் பாணர்கள் மீது படை எடுத்து அவ்வரசியலை அழித்து விட்டான். பிறகு பாணர்களுடைய நாட்டைக் கோலார் கங்கன் ஹஸ்திமல்லனுக்குக் கொடுத்து விட்டான். இவ்விதம் பாணவம்சமே தொலைந்தது.

பாணர்களுடைய நாட்டை ஹஸ்திமல்லனுக்குக் கொடுத்ததற்கு ஒரு நியாயம் உண்டு. பாண அரசன் வீக்கிரமாதித்யன் I என்பவன் ஹஸ்திமல்லனுடைய அத்தையை மணம் செய்திருந்தான். இவ்வுறவை மேற்கொண்டு ஹஸ்திமல்லன் இரு வம்சங்களுக்கும் தானே தலைவன் என்று சொல்லி பாணர்களுடைய கொடியாகிய கடமான், ரிஷபம் இவ்விரண்டையும் தானே வைத்துக் கொண்டான். அது முதல் கொண்டு ஹஸ்திமல்லன் சோழர்களுக்கு அடங்கி நன்றியுடன் ஆண்டுவந்தான்.

**தலைக்காட்டில் புரட்சி :–** இனி தலைக்காட்டுக் கங்க மன்னர்களைப்பற்றி சிறிது ஆராய்வோம். இராஜமல்லன் கி. பி. 870 வரை ஆண்டான். அவனுக்குப் பிறகு அவன் மகன் புதூகன் I பட்டத்துக்கு வந்தான். அவன் 908 கி. பி. யில் இறக்க அவன் மகன் எரயப்பன் பட்டத்திற்கு வந்தான். எரயப்பன் புதூகனுடைய இரண்டாவது மகன். முதல் மகனான ராசய கங்கன் நுளம்பர்களோடு யுத்தம் செய்ததில் 891 கி. பி. யில் மாண்டுபோனான். ஆகவே எரயப்பன் இளவரசனாக இராமற் போயிருந்த போதிலும் பட்டத்திற்கு வந்தான். எரயப்பன் நுளம்பர்களோடு சிநேகம் பூண்டிருந்தான். இராஷ்டிர கூடர்களுக்கும் அவனுக்கும் விரோதம். நுளம்பர்கள் தனது தமையன் இராசயனைக் கொன்றதை முன்னிட்டு இராஜ்ஜியத்தைத் தானே அபகரித்துக் கொண்டான். எரயப்பன் 938ல் இறக்க அவன் மகன் இராஜமல்லன் பட்டத்திற்கு வந்தான். ஆனால் ராசயகங்கனுடைய மகன் புதூகன் ராஜ மல்லனைக் கொன்று விட்டுத் தான் பட்டத்திற்கு வந்து விட்டான். இவ்விதம் தலைக்காட்டில் ராஜரீகப் புரட்சி நடந்து வந்தது. அவர்களுடைய வம்சாவளி பின்வருமாறு.

புதூகன் I 870—908

- இராசய கங்கன் 891-ல் கொல்லப்பட்டான்
  - புதூகன் II 940—953
- எரயப்பன் 908—938
  - ராஜமல்லன் 938ல் புதூகன் II ஆல் கொல்லப்பட்டான்.



தலைக்காடு கங்கர் தலைநகரம்
கோகர்ணத்தீர்த்தம்

## 26. இராஷ்டிரகூட அரசன் கிருஷ்ணன் III. 940—968

கங்கவம்சத்தரசன் எரயப்பன் கி. பி. 938 ஆண்டில் இறந்தான். அவனுக்குப்பின் அவன் மகன் இராஜமல்லன் பட்டத்திற்கு வந்தான். அக்காலத்தில் இராஷ்டிரகூடர்களில் கிருஷ்ணன் III. பட்டத்திற்கு வந்தான். அக்கிருஷ்ணன் தன்னுடைய தமக்கை ரேவக்காளை ஒரு புதூகனுக்கு மணம் செய்து வைத்தான். எரயப்பன் இறந்துபோன ஒரு வருஷத்திற்குள்ளாக அந்தப் புதூகன் புதிதாய்ப் பட்டத்திற்கு வந்த இராஜமல்லனைக் கொன்று தான் ஆள ஆரம்பித்தான். இந்தச் செய்தியைக்கல்வெட்டுகள் (EP. Ind. VI Pag 70.) ஒரு உவமை அணியைப் புகுத்திக் கூறுகின்றன. அதாவது 'இராஜமல்லன் என்ற ஒரு விஷப்பூண்டைப் பிடுங்கிவிட்டுப் புதூகன் என்ற ஒரு நல்ல மரத்தை அதே இடத்தில் கிருஷ்ணன் III. என்பவன் நட்டான்' என்று கூறுகின்றது. கிருஷ்ணன் பட்டம் கட்டிவைத்த புதூகன் இராசய கங்கனுடைய மகன் புதூகன் II. ஆக இருக்கலாம். ஆகவே, கிருஷ்ணன் III. செய்த புரட்சியானது கங்கவம்சத்தில் பட்டத்தை அக்கிரமமாகப் பிடுங்கிக்கொண்ட எரயப்பன் சந்ததியைத் தள்ளி விட்டு உண்மையில் பாத்தியம் பாராட்டின புதூகனுக்குப் பட்டத்தைக் கட்டினதாகும்.

**தக்கோலயுத்தம்:—** கிருஷ்ணன் III அரசியல் விஷயத்தில் மிகுந்த தந்திரசாலி; மிகுந்த முன் யோசனை உள்ளவன். அவன் புதூகனைப் பட்டத்திற்குக் கொண்டுவந்தது புத்திசாலித்தனமான செயலாகும். அவனை பட்டத்திற்குக் கொண்டு வந்தது மாத்திரமல்லாமல் அவனுக்குப் பெருத்த இராச்சியத்தையும் தந்தான். புதூகனே இராஜமல்லன் இறந்ததினால் கங்கவாடி 96000-மும் பெற்றான். ரேவக்காளை மணந்ததினால் சீதனமாகப் புரிகெரை 38, பௌவொள 300, கிசுகாடு 70, பாகி நாடு 70, ஆகிய இந்நாடுகளைப் பெற்றான்.

ஆகவே புதூகனுடைய இராச்சியம் பலப்பட்டது. கிருஷ்ண னுடைய ஆதரவினுல் புதூகன் இப்பெருமை அடைந்ததை ஒருகாலமும் மறந்தவன் அல்ல. கிருஷ்ணன் நடத்தின யுத் தங்களிலெல்லாம் புதூகன் பெரும் உதவி செய்து வந்தான். புதூகனுடைய ஆதரவினுல் இரா்ஷ்டிரகூட நாட்டில் யாதொரு பயமுமில்லாமல் இருந்தது. ஆகவே கிருஷ்ணன் தென்னுட்டின்மீது ஆசை கொண்டு சோழர்கள் மீது படை யெடுக்க வந்தான். அந்தக் காலத்தில் சோழர்கள் சுற்றுப் பக்கத்திலுள்ள நாடுகளை வென்று கர்வித்திருந்தார்கள். கி. பி. 949ல் இராஷ்டிரகூடக் கிருஷ்ணனுக்கும் சோழர்களுக் கும் யுத்தம் ஆரம்பமாயிற்று, ஒரு வருஷத்திற்குள்ளாக யுத் தம் பலப்பட்டுத் தக்கோலம் என்ற இடத்தில் (அறக்கோணத் திற்கு அருகே) சண்டை நடந்தது. அச்சண்டையில் ஒரு புறத்தில் இராஷ்டிரகூடக் கிருஷ்ணனும் கங்கப்புதூகனும் சண்டை யிட்டார்கள். எதிர்ப்புறத்தில் சோழ அரசன் எதிர்த்தான். அச்சண்டையில் சோழர் படைகள் புறங் காட்டி ஓடின. சோழ இளவரசன் இராஜாதித்யன் இரண களத்தில் இறந்தான். இந்த யுத்தத்தின் பலனுகப் புதூகனுக்கு வனவாசி 12000 என்ற நாடு பரிசு அளிக்கப்பட்டது. இவ் வெற்றியைக் கண்டு கோலார் கங்கன் ஹஸ்திமல்லன் இரா்ஷ் டிரகூட மன்னனுக்குச் சாமந்தனுகிவிட்டான். இவ்விதம் வெற்றியடைந்த கிருஷ்ணன் III அந்த வெற்றிக்குப் பிறகு 20 ஆண்டுகள் வரை மிகச்சிறப்புடன் ஆண்டு வந்தான். புதூ கனே 953-ல் இறந்தான். அவனுக்குப் பிறகு மாரசிம்மன் பட்டத்திற்கு வந்தான். இவனும் தன் தந்தையைப் போல ஒரு வீரன்.

**இராஷ்டிரகூட வீழ்ச்சி:—** மாரசிம்மன் தன் தந்தையைப் போலவே இராஷ்டிரகூடர்களுக்கு உதவிபுரிந்து வந்தான். அவன் பட்டத்திற்கு வந்த உடன்பத்திலேயே நுளம்பர் களோடு சண்டையிடச் சென்றுன். அதில் வெற்றியடைந்

தத்தினால் அவனுக்கு 'நுளம்ப குலாந்தகன்' என்ற பட்டம் கிடைத்தது. இதைத் தவிர நுளம்பவாடி 32000 என்ற நாட்டையும் அடைந்தான். மேலும் சந்தலிகை 1000 என்ற ஒரு நாட்டையும் பிடித்தான். ஆகவே இவ்வரசனுடைய இராச்சியம் தென்னாட்டிலேயே மிகப் பெரியதாக இருந்தது. தார்வார் ஜில்லாவில் லச்மேஸ்வரர் என்ற இடத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டில் 'பரமேஸ்வரன்' என்ற ஒரு பிருதும் இவனுக்குக் கொடுபட்டதாகத் தெரிகிறது. இவ்வரசனுடைய உதவியைப் பெற்றுக்கொண்டு கிருஷ்ணன் III வடக்கே சௌராஷ்டிர (குஜராத்) தேசம் வரைக்கும் படை எடுத்துச் சென்றான். ஆனால் இவ்வளவு பிரக்கியாதிபெற்ற இராஷ்டிர கூட அரசியல் வெகு காலம் நீடித்திருக்கவில்லை. கிருஷ்ணன் 968ல் இறந்தான். அவனோடு அந்த வம்சத்தின் பெருமையே போய்விட்டது. இராஷ்டிரகூடர்களுக்கு மாரவர்மனுடைய உதவி இருந்தும் பயன்படவில்லை. ஏனெனில் அக்காலத்தில் கல்யாணபுரியில் தைல II என்பவன் பட்டத்திற்கு வந்தான் அவன் இராஷ்டிரகூடர்கள் மீது படை எடுத்து அவர்களுடைய ஆட்சியைத் தொலைத்தான். தன்னுடைய உறவினரும் சக்ரவர்த்தியுமாக இருந்த இராஷ்டிரகூட அரசு வீழவே கங்கர்களுக்கு யாதொரு சகாயமுமில்லாமல் போய்விட்டது. மாரவர்மன் வயது முதிர்ந்தவனாய் கி. பி. 974ல் பட்டத்தைத் துறந்துத் தன் மகனைச் சிம்மாசனத்தில் வைத்துவிட்டுத் தவம் செய்யச் சென்றான். அவன் ஜைனகுரு அஜித சேனருக்குச் சீஷனாகப் போய் பங்காபுரத்தில் 'சல்லேகானம்' என்று சொல்லும் விரதத்தை அனுசரித்து உயிர் துறந்தான். சல்லேகானம் என்ற விரதமானது சமணர்கள் அனுசரித்து வந்த ஒரு கடுமையான விரதம். அவ்விரதத்தை அனுசரிப்பவர் அன்ன ஆகாரமின்றித் தன் குருவின் முன்னால் உட்கார்ந்துகொண்டு உயிரைத்துறப்பது. இதனைப் பண்டைத் தமிழ் நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. சங்க நூல்களில் 'வடக்கிருத்தல்' என்ற பெயர் காணப்படுகிறது. மாரவர்மன் இவ்விரதத்தை

அனுசரித்து அசிதசேனர் பாதங்களில் மூன்று நாள்களில் உயிர் துறந்தான். அவனுடைய மருமகன் இந்திரன் என்பவன் அதற்குப் பிறகு 8- வருஷங்கள் அலைந்து வந்து 982ல் சிரவண பௌகுள என்ற இடத்தில் சல்லேகான முறைப்படி உயிர் துறந்தான். மாரவர்மனுக்குப் பிறகு இரண்டு மன்னர்கள் பட்டத்திற்கு வந்தார்கள். ஆனால் அந்நாட்டின் பலம் முழுதும் குன்றிப்போய் அவர்களோடு வம்சம் பாழ் அடைந்தது. கங்க நாடு முழுதும் சாளுக்கியர் வசமாகிப் பின் சோழர்கள் கையில் கிடைத்தது. அக்கங்க நாட்டோடு கொங்கு நாடும் அவர்கள் வசமே சென்றுவிட்டது.

இதுவரை இரண்டு நூற்றாண்டுகளாக நடந்த தென்னிந்திய சரித்திரத்தை எடுத்து உரைத்தோம். இந்தக் காலத்தில் இராஷ்டிரகூடர்கள் சக்கரவர்த்திகளாக ஆண்டார்கள். கோவிந்தன், அமோகவர்ஷன், கிருஷ்ணன் இம்மூன்று மன்னர்களும் பெரும் பிரக்கியாதியோடு தென்னாட்டை ஆண்டு வந்தார்கள். கலியாணச் சம்பந்தம், வீரசாகசம் இந்த இரண்டு தந்திரங்களையும் மேற்கொண்டு இவ்வம்சத்தார் தங்கள் செல்வாக்கை நிலை நிறுத்தினார்கள். இவர்களுடைய சாகசத்தினால் கங்கர்கள் அவர்களுக்குக் கீழ் மன்னர்களாக இருக்கவேண்டி வந்தது. அக்கங்கர்களுக்குக்கீழ் கொங்கு நாட்டின் பெரும் பாகம் இருந்து வந்தது. ஆகவே கொங்கு நாடானது இரண்டு நூற்றாண்டுகள் வரை இராஷ்டிர கூடர்களுக்கு அடிமை நாடாக இருந்தது எனலாம். அந்தக்காலத்தில் கொங்கு நாட்டின் பொருளாதாரநிலை எந்த நிலைமையில் இருந்தது என்று சொல்ல ஆதாரங்கள் கிடைக்கவில்லை. மற்ற அடிமை நாடுகளைப்போலவே இந்நாடும் யாதொரு விருத்தியும் அடையாமல் இருந்திருக்கவேண்டும்.

## 27. சேரர்கள் ஆதிக்கம்.

8, 9 நூற்றாண்டுகளில் மேற்கே மலைநாட்டில் ஆண்டு கொண்டிருந்த சேரமன்னர்கள் கொங்கு நாட்டின்மீது சிற்சில

சமயங்களில் படை எடுத்ததாகத் தெரிகிறது. ஆனால் சேரர்கள் கொங்கு நாட்டில் எப்பாகத்தையும் நிரந்தரமாகப் பிடித்தாளவில்லை என்று அறியவேண்டும். அவர்கள் இந்நாட்டின் மீது படை எடுத்த விவரங்களைச் சில கல்வெட்டுகளில் காணும் பெயர்களால்தான் ஊகிக்க முடியும். அவர்கள் படை எடுத்து வந்தபோது சில ஊர்களைப் பிடித்து அவ்வூர்களுக்குத் தங்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்பெயர்கள் வழக்கத்திற்கு வரவில்லை எனலாம். ஏனெனில் அவ்விதப் பெயர்கள் இக்காலத்தில் ஒன்றும் கிடையா.

கோவைக்கு 5 கல் தூரத்தில் தென்கிழக்கில் வெள்ளலூர் என்ற ஒரு பழைய கிராமம் நொய்யலாற்றிற்குத் தென் கரையில் இருக்கின்றது. இவ்வூரில் பண்டைக் காலத்து நாணயங்களும் கிடைத்திருக்கின்றன. இவ்வூரில் இரண்டு பழைய தேவாலயங்கள் உண்டு. அவைகளில் கல்வெட்டுகள் இருக்கின்றன. ஒரு கல்வெட்டு பண்டைக் காலத்துத் தமிழ் எழுத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. அதில் கோக்கண்டன் வீரநாராயணன், கோக்கண்டன் ரவிகோதை என்ற இரண்டு சேரமன்னர்கள் பெயர்களைக் காண்கிறோம். இவ்வரசர்களைப் பற்றிச் சந்திர சூரிய வம்சத்தின் ரத்திலங்கள் என்ற பட்டப் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. ஆகையால் அம்மன்னர்கள் இரண்டு வம்சத்திலும் ஆண்வழி பெண்வழிகளில் தோன்றியிருக்கவேண்டும். சேரர்கள் சூரிய வம்சத்தினரென்று நாமக்கல் சாசனத்தால் தெரியவரும்.

வெள்ளலூர்ச் சாசனத்தில் அவ்வூரின் பெயர் வள்ளலூர் அல்லது அன்னதான சிவபுரி என்று குறிக்கப்பெற்றுள்ளது. ஆகவே இவ்வூர் அக்காலத்தில் ஒரு பிரபலமான நகரமாக இருந்திருக்கலாம். மற்றொரு கல்வெட்டில் வரகுண பராந்தகன் என்ற அரசன் சந்திராதித்ய குலதிலகன் என்ற பெயர் வகித்ததாகக் கூறுகிறது. இப்பட்டம் சேர அரசருடையதாகும். இவ்வரசன் 862 இருந்த வரகுணன் பெயரையும்

907-ல் இருந்த பராந்தகன் பெயரையும் தனக்கு இட்டுக் கொண்டான்.

மேலும் பழனியில் பலசேரர்களுடைய சாசனங்கள் காண்கிறோம். அவைகளில் வரும் பெயர்களாவன :—

1. வீரநாராயண வீரகேரளன்
2. வீரகேரள வீரநாராயணன்
3. வீரகேரள அமர புஜங்கவர்மன்.
4. வீரகேரள அதிராஜராஜ தேவன்.
5. கேரள அதிராஜராஜ ஸ்ரீ ராஜராஜ தேவன்

இந்தக் கல்வெட்டுகளைப் பார்த்தால் 10-வது நூற்றாண்டில் ஏற்பட்டவைகளைப்போலத் தோன்றுகின்றன. இவைகளே அன்றி ஆம்ராவதிநதி ஓரமாக உள்ள ஆலயங்களிலும் பல சேரர் கல்வெட்டுகள் காணலாம். ஊர்களின் பெயர், ஆலயங்களின் பெயர், மூர்த்திகளின் பெயர் இவைகளும்கூட சேரர் பெயர்களால் குறிக்கப்பெற்றிருக்கின்றன. வெள்ளலூர்ச் சாசனங்களால் கோவை நகரும் அதற்குச் சுற்றிலுமுள்ள பிரதேசமும் ஒரு காலத்தில் சேரர் ஆட்சியில் இருந்ததெனலாம். கோவைக்கு வீரகேரளநல்லூர் என்றும் அவ்வூருக்கு அடுத்த ஒரு வாய்க்காலுக்கு அதிராஜராஜ வாய்க்கால் என்றும் பெயர் இட்டிருப்பதை அறியலாம்.

அக்காலத்தில் பேரூர் நாடென்பது கிழக்கே வெள்ளலூரிலிருந்து மேற்கே வெள்ளிமலை அடிவாரம் வரையில் சென்றிருந்தது. வெள்ளிமலை அடிவாரத்தில் காஞ்சிமா நதிக்கரையில் உள்ள நாகேஸ்வரம் என்ற ஆலயத்தில் அவ்வூருக்கு அமரபுஜங்கநல்லூர் என்ற பெயர் இருந்ததாகத் தெரிகிறது. மேலும் அமரபுஜங்க சதுர்வேதிமங்கலம், வீரகேரள அமர புஜங்கவர்மன் முதலிய பெயர்களைக் காண்கிறோம்.

ஆம்ராவதி நதிக்கரையோரமாக பழனி வரையில் ஒரு காலத்தில் சேரர் ஆதிக்கத்தில் இருந்திருக்கவேண்டும். அந்த

நதிக்கரையிலுள்ள சங்கிராமநல்லூர் என்ற ஊருக்கு பரிதிகுலதிலக சதுர்வேதமங்கலம் என்றும், தேவன்பாடி என்ற ஊருக்கு வீரநாராயணநல்லூர் என்றும் பழைய பெயர்கள் இருத்தல் காண்க. சில கல்வெட்டுகளில் அதிராஜ ராஜேஸ்வர முடையார், சேரனை மேல்கொண்ட சோழன் பெருவடி என்ற பெயர்கள் காண்கிறோம். இப்பெயர்கள் எல்லாம் சேரர்களுடைய ஆதிக்கத்தை ருஜுப்படுத்துகின்றன.

## 28. சோழர் ஆட்சி.

சோழ நாட்டில் சோழமன்னர்கள் அநேக நூற்றாண்டுகளாக ஆண்டு கொண்டுவந்திருக்கிறார்கள். கிறிஸ்துவாப்தத்தின் ஆரம்பத்தில் சோழ மன்னர்கள் மிகுந்த பிரக்கியாதி பெற்றிருந்தார்கள். அவர்கள் அக்காலத்திலிருந்த நிலைமையைச் சங்கத்துப் புலவர்கள் வெகு நன்றாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு பல்லவர்களுடைய ஆதிக்கம் தென்னாட்டில் பரவவே, சோழர்களுடைய பெருமை ஒருவாறு குறைய ஆரம்பித்தது. பல்லவர்கள் க்ஷீணமடைந்த பிறகும்கூட சோழர்கள் உடனுக்குடனே தலை நிமிர முடியவில்லை. ஆனால் அதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு சோழ வம்சத்தில் விசயாலயன் என்பவன் தோன்றி அவ்வம்சத்தை நிலை நிறுத்தினான். அக்காலத்தில் மிகச்சிறிதாயிருந்த சோழராச்சியம்இருக்க இருக்கப் பெருகி, சில ஆண்டுகளுக்குள்ளாகத் தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய நாடாக விளங்கியது. விசயாலய வம்சமும் மிகப் பிரசித்தி அடைந்தது. இவ்வம்சத்தினர் சோழநாடு மாத்திரமேயன்றிச் சுற்றுமுள்ள ஏனைய நாடுகளிலும் கீர்த்தி பெற்று வந்தார்கள். மிகச் சிறந்த தேவாலயங்களின் கட்டிடங்களைக் கட்டினது மாத்திரமேயன்றித் தங்களுடைய அரசாட்சியைக் கடல்தாண்டச் செய்து அதற்கப்பாலுள்ள நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டு அவற்றை ஆண்டார்கள். உண்மையில் சோழர்களால்தான் தமிழருக்கு மிகப்பிரக்

கியாதி கிடைத்தது. அவர்கள் வெளிநாடுகளுக்குத் தமிழ் நாகரீகத்தைப் புகட்டினார்கள். சோழர்களுடைய அதிகாரம் கொங்குநாட்டிலும் புகுந்தது.

ஆதித்தன் I:— விசயாலய வம்சத்தில் ஆதித்தன் I என்பன் 880 கி. பி. யில் பட்டத்துக்கு வந்தான். அவன் 894 கி. பி. யில் கொங்கு நாட்டைப் பிடித்ததாக "கொங்கு தேச இராசாக்கள்" என்னும் நூலினால் அறிகிறோம். அதை அனுசரித்துச் சேலம், திருச்செங்கோடு என்ற இடங்களில் கிடைத்த கல் வெட்டுகளும் அச்செய்கையை நிரூபிக்கின்றன.

பராந்தகன் I:—907-ல் ஆதித்தனுடைய மகன் பராந்தகன் I பட்டத்திற்கு வந்தான். அவன் பெரிய யுத்த வீரன், அரசியல் நிபுணன், நீண்டகாலம் அரசாண்டவன். 948 வரை அவன் அரசாட்சி எட்டிற்று. அவன் மதுரையை ஜெயித்ததினால் "மதுரை கொண்ட" என்ற பட்டமும் பெற்றான். அவனைப்பற்றிக் கொங்கு நாட்டில் பல சாசனங்கள் கிடைத்துள்ளதினால் அந்நாட்டின் ஒரு பெரும்பாகம் அவனால் அரசாளப்பட்டதென்று அறியவேண்டும். பராந்தகன் தனியாகப் படையெடுப்பு ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே ஆதித்தன் செயித்த பாகத்தை அவன் போக்கடிக்காமல் ஆண்டுவந்தான் என்றறியவேண்டும். கொங்கு நாட்டில் சோழர் ஆதிக்கத்திற்குள் சென்ற பாகமாகிய கிழக்குப்பாகம் நாளடைவில் அமைதியடைந்து சோழராச்சியத்தில் ஒரு மாகாணமாகிவிட்டது. அந்நாட்டு ஜனங்களும் சோழர்கள் ஆதிக்கத்திற்குத் தாழ்ந்தவராகி அவர்களது அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் பராந்தகனுக்குப் பிறகு சோழவம்சம் சிறிது காலம் முன்னேற்றமடையாமல் தயங்கி இருந்தது. கி. பி. 950-ல் தக்கோலம் என்ற இடத்தில் நடந்த சண்டையில் சோழர்கள் தோற்றுப் போனார்கள். அந்த யுத்தத்தில் சோழர் இளவரசன் இராசாதித்தியன் என்பவனும் இறந்தான். அதுமுதல் சோழர்களுடைய ஆதிக்கம்

சிறிது குறைந்தது. அந்த யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வி யிலிருந்து மீளுவதற்குச் சுமார் 50 வருடகாலம் பிடித்தது. அக்காலத்தில் சோழர்கள் வெளிநாடுகளை ஆக்கிரமிக்க முடிய வில்லை. பிறகு தென்னிந்தியாவில் ஏற்பட்டிருந்த இராசரீகப் புரட்சிகள் ஒருவாறுகத் தேர்ச்சியடைந்து நாடுகளில் சிறிது அமைதி ஏற்பட ஆரம்பித்தது.

இராசராசன் I:— சுமார் 35 வருடகாலம் தென்னிந்தியா முழுவதும் பலவித புரட்சிகள் ஏற்பட்டு ஒருவாறு அமைதி பெற ஆரம்பித்த காலத்தில் சோழ நாட்டிலும் ஒரு பெயர் பெற்ற அரசன் தோன்றினுன். அவன்தான் இராசராசன் I என்ற பெரு மன்னன். கி. பி. 985-ல் அவன் பட்டத்திற்கு வந்து சோழநாடு முழுவதையும் ஒற்றுமைப்படுத்திப் பெரும் சேனைகளைத் திரட்டிக்கொண்டு சுற்றுப்பக்கங்களில் இருந்த நாடுகளை எல்லாம் பிடித்துப் பெரும் புகழோடு ஆண் டான். இவன் காலத்தில் தான் சோழர்களுடைய கீர்த்தி உலகமெங்கும் பரவ ஆரம்பித்தது. அரசியலில் மாத்திரமே யன்றிச் சமயத்தையும் கல்வியையும் சிற்ப சாஸ்திரத்தையும் பரிபாலித்து வந்தவன் இவனே. தஞ்சையில் பெரியகோயில் கட்டினவன் இவனே. இவன் பட்டத்திற்கு வந்தபிறகு நாடெங்கும் அமைதி ஏற்பட்டுச் சனங்கள் முன்னேற்றம் அடைந்தனர். கி. பி. 997-ல் சாளுக்கிய வம்சத்துத் தைலன் இறந்தான். அந்த நாட்டில் பலவீனம் ஏற்பட்டது. இராச ராசன் அந்தச் சமயத்தைக் கைப்பற்றிக்கொண்டு ஒரு பெரும் போர் தொடங்க ஆரம்பித்தான். அப்பெரும்போர் சரித் திரத்திலேயே மிகவும் பிரசித்தி பெற்றது. கங்கவாடி, நுளம்பவாடி, குடகு, வேங்கி முதலிய நாடுகளை எல்லாம் ஒரே முறையில் எதிர்த்துப் படை செலுத்தினுன். அந்நாடு களையெல்லாம் பிடித்துத்தன் ஆட்சிக்குள் அடக்கிக்கொண் டான். வடகிழக்கேயுள்ள வேங்கிநாட்டைப் பிடித்தவுடன் அந்நாட்டைப் பிடித்த சனி தொலைந்தது. அராசகம் நீங்கி

அங்கு அரசியல் அமைதி ஏற்பட்டது. அந்நாட்டு இளவரசன் விமலாதித்யனுக்குத் தன் மகளை மணம்செய்து கொடுத்தான். பிறகு கி. பி. 1002-1003ல் ஈழநாடு (இலங்கை), கொல்லம் (மேற்குக்கரை), கலிங்கம் (வடகிழக்குப் பிரதேசம்), என்ற நாடுகளைக் கைப்பற்றினான். கி. பி. 1004-ல் மறுபடியும் தென்னாட்டுப் பீடபூமியின்பேரில் படையெடுத்தான். அப்பொழுது தனக்கு யுவராசனைத் தன் மகன் இராசேந்திரனை அழைத்துத் தலைக்காட்டைப் பிடிக்க அனுப்பினான். இராசேந்திரனும் தலைக்காட்டைப் பிடித்து மேற்கு கங்க வம்சத்தையே அழித்துவிட்டான். தலைக்காடானது மேற்குக்கங்கர்களுடைய இராசதானியாயிருந்ததை முன்னமே குறித்திருக்கிறோம். கொங்கு நாட்டின் பெரும்பாகம் அக்கங்கர்களுடைய வசத்தில் இருந்ததறிவோம். கி. பி. 1004ல் தலைக்காடு விழவே, பிடிபடாமல் இருந்த கொங்கு நாட்டின் ஏனைய பாகமாகிய மேற்கு மண்டலமும் சோழர்கள் கைக்குள் வந்துவிட்டது.

அக்காலத்தில் அரசர்கள் நாடுகளையும் நகரங்களையும் கைப்பற்றினால் அவைகளுக்குத் தம் பெயர்களை இட்டு அப்புதுப்பெயர்களால் வழங்குவது வழக்கம். அல்லது தமது வெற்றியைக் குறிப்பதற்காகப் புது நகரங்களை ஏற்படுத்தி அவைகளுக்குத் தம் பெயர்களை இடுவது வழக்கம். தலைக்காட்டைப் பிடித்துக் கங்க வம்சத்தை அழித்த இராசேந்திரனும் தன் பெயரைக்கொண்டு தலைக்காட்டுக்கருகில் ஒரு ஊரைக்கட்டினான். இராசேந்திரனுக்கு முடிகொண்ட சோழன் என்ற ஒரு பெயர் உண்டு அப்பெயரைக்கொண்டு தலைக்காட்டிற்கு அருகில் காவேரிக்கு எதிர்க்கரையில் சிறிது தூரத்தில் முடிகொண்ட சோழபுரம் என்ற பெயர் வைத்து ஒரு ஊரைக்கட்டினான் இப்பெயர் இந்நாளிலும் மறந்து போகாமல் வழங்கி வருகின்றது. கொள்ளேகாலம் என்ற ஊருக்கு அருகில் முடிகண்டம் என்ற ஒரு ஊர் இருப்பதை

அறியலாம். இம் முடிகுண்டம் என்பது முடிகொண்ட சோழபுரம் என்பதின் மருவு ஆகும். இப்பெயர் தமிழ்ப் பெயர் என்று அறிய எல்லாரும் ஆச்சரியப்படுவார்கள். ஏனெனில் அந்நாடு முழுவதும் கன்னடநாடு ஆகும். ஆகவே அதன் மத்தியில் தமிழ்ப்பெயர் ஒன்று வந்ததென்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். இவ்வூர் மத்தியில் ஒரு பிள்ளையார் மேடையின்பேரில் அரசமரத்தின் கீழ் நான்கு கற்பலகைகள் நிற்கின்றன. அவைகளைத் தெய்வங்களாகக்கொண்டு இந்நாட்டு ஜனங்கள் வழிபடுகிறார்கள். அப்பலகைக் கற்களில் அழகான கல்வெட்டுகள் இருக்கின்றன. அவைகள் 900 ஆண்டுகளுக்கு முந்தியிருந்த தமிழ் லிபியில் வெட்டப்பட்டிருக்கின்றன. அவைகளைப் படித்துப் பார்த்தால் அவ்வூரின் பெயர் முடிகொண்ட சோழபுரம் என்று ஏற்படும். இதுதான் கன்னட நாட்டில் தமிழ்மொழி கிடைத்ததின் காரணமாகும். 1004 கி. பி. யில் தலைக்காடு போய், முடிகுண்டம் ஏற்பட்டவுடனே கொங்குநாடு முழுவதும் சோழர்களுடைய ஆதிக்கத்திற்குள் வந்துவிட்டது.

சோழர் ஆதிக்கம் பிரபலமடைந்து அம்மன்னர்கள் தமிழ் நாடு முழுவதையும் அதற்கு அடுத்த நாடுகளையும் கைப்பற்றிக் கொண்ட பிறகு அந்நாடுகளை அரசாட்சி செய்வதற்காக ஆறு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பிரதிநிதியை ஏற்படுத்தியிருந்தார்கள். அவ்விதம் பிரித்த பிரிவிற்கு மண்டலம் என்று பெயர். முந்தியிருந்த பெயர்களை எல்லாம் நீக்கிவிட்டுத் தாம் ஏற்படுத்திய மண்டலங்களுக்குப் புதுப் பெயர்களைத் தந்தார்கள். எந்த அரசன் பிடித்தானோ அந்த அரசன் பெயராலும், அல்லது எந்தப் பிரதிநிதி ஆளுகிறானோ அந்தப் பிரதிநிதியின் பெயராலும் பெயர்கள் இடப்பட்டன. புதுப் பெயர்கள் ஏற்படுத்தியிருந்தும் பழைய பெயர்கள் வழங்காமல் இருக்கவில்லை. சோழ மண்டலத்து ஆறு மண்டலப்பிரிவுகள் அடியிற்கண்டவாறு ஏற்படுத்தப்பட்டன.

(1) செயங்கொண்ட சோழமண்டலம் :— இது இராசாதிராசன் I என்பவன் பெயரால் வழங்கப்பட்டது. இதில் தொண்டைமண்டலம் சார்ந்தது. கிழக்குப் பிரதேசத்தில் தென் பெண்ணையிலிருந்து வட பெண்ணை மட்டும் உள்ள சமப்பிரதேசம் இதுவாகும். அதாவது இது பழைய பல்லவ நாடு ஆகும்.

(2) சோழமண்டலம் :— தஞ்சை, திருச்சி ஜில்லாக்கள் அடங்கியுள்ள பழைய சோழவளநாடு.

(3) இராசராசமண்டலம் :— இது மதுரை, திருநெல்வேலி, திருவிதாங்கூர் இந்த பிராந்தியங்கள் கொண்டது. இராசராசன் பிடித்ததினால் அவன்பெயர் இதற்கிடப்பட்டது. பழைய பாண்டிய நாடும் கேரள நாட்டில் ஒருபாகமும் இதில் அடங்கியிருந்தன.

(4) அதிராசராசமண்டலம் அல்லது சோழ கேரள மண்டலம் :— இப்பெயர் கொங்குநாட்டிற்கு இடப்பட்ட பெயர்.

(5) கங்கைகொண்ட சோழமண்டலம் :— கங்கை பாடியின் மேற்கு பாகத்திற்கு இடப்பட்ட பெயர்.

(6) நிகரிலி சோழமண்டலம் :— இதில் கங்கை நாட்டின் கீழைப்பாகமும் வாண நாடும் கலந்ததாகும்.

மேலே சொன்ன பிரிவுகளில் கொங்கு மண்டலமென்பது கோவை ஜில்லா முழுவதும் சேலம் ஜில்லாவில் தாழ்க்காடு என்ற பாகமும் சேர்ந்தது. கொங்குநாடு வட கொங்கு, மேல் கொங்கு, தென் கொங்கு என்ற பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. காவேரிக்கு எதிர்புறம் வடகொங்கும் கோவை ஜில்லாவில் மேல் கொங்கு தென் கொங்கு என்பனைகளும் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். சேலம் ஜில்லாவில் கொங்கு நாட்டிற்குச் சேர்ந்த பாகம்போக ஏனைய வடக்குபாகம் நிகரிலி சோழமண்டலம் என்ற பிரிவிற்குளடங்கிவிட்டது. அந்நாட்டிலுள்ள மல்லாபுரம், தீர்த்தமலை, திருப்பத்தூர் முதலான

இடங்களில் கண்ட சாசனங்கள் இப்பெயரை நிரூபிக்கின்றன.

மேலும் மண்டலங்களுக்கு இட்ட பெயர்கள் வேறு வேறு அரசர்கள் காலத்தில் வேறுவேருக மாறியும் வந்திருக்கின்றன. உதாரணமாக இராசேந்திரன் I, வீரராசேந்திரன் I இச்சோழ அரசர்கள் காலங்களில் கொங்குநாடு அதிராசராச மண்டலம் என்றும், குலோத்துங்கன் III என்ற அரசன் காலத்தில் சோழ கேரள மண்டலம் என்றும், விக்கிரம சோழன் காலத்தில் வீரசோழ மண்டலம் என்றும் வழங்கியிருக்கின்றன. கடைசியாகச் சொன்ன பெயர் பின்னுல் வந்த பாண்டியர் ஆட்சியிலும் வழங்கப்பட்டது. மேலும் விஜய நகர அரசர்கள் அச்சுதராயன், சதாசிவராயன் காலங்களிலும் கூட அப்பெயர் வழங்கிவந்ததாகத் தெரிகிறது. மேலே சொல்லியபடி மண்டலங்களினுடைய பெயர்கள் மாற்றப்பட்டன வேயன்றி நாடுகளின் பெயர்கள் முன்னிருந்தபடியே வழங்கப்பட்டன. கொங்கு நாட்டில் ஆதியிலிருந்து இருந்த 24 நாடுகளும் அப்பெயர்களாலேயே வழங்கப்பெற்று வந்தன.

## 29. கொங்கு சோழர்கள்

கொங்கு நாட்டில் தஞ்சைச் சோழர்கள் ஆதிக்கம் பெற்றதைப்பற்றி முந்தியே கூறியுள்ளோம். ஏனைய நாடுகளைப் போலவே அந்நாட்டையும் ஆளுவதற்காகப் பிரதிநிதிகளை நியமித்திருந்தார்கள். அப்பிரதிநிதிகள் ஆரம்பத்தில் தங்கள் தலைவர்கள் பெயராலேயே அரசாட்சிக்குச் சேர்ந்த ஒவ்வொரு காரியத்தையும் நடத்தி இருக்கவேண்டும். ஏனெனில் கொங்கு நாட்டைக் கைப்பிடித்த ஆண்டு ஆகிய 894 முதல் 1004 ஆண்டு வரை சுமார் 110 ஆண்டுகள் அப்பிரதிநிதிகளைப்பற்றிய கல்வெட்டுகள் எவையும் கிடைக்கவில்லை. வேறுவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை. ஆகவே 1004 வரையில் சோழர்கள் தங்கள் பெயராலேயே எவ்வெக்காரியங்களையும் செய்துவந்தார்கள் என்று சொல்லவேண்டும்.

ஆனால் கி. பி. 1004 முதல் 1303 வரை தமிழ்நாடு முற்றும் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அவைகளில் எல்லாம் சோழர்களுடைய பெயர்களே காணப்படுகின்றன. ஆனால் கொங்கு நாட்டில் கிடைக்கும் சோழர்களின் பெயர்களுக்கும் சோழநாட்டு விஜயாலய வம்சத்துச் சோழ மன்னர்களின் பெயர்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றது. இக்காரணத்தைக்கொண்டு கொங்கு நாட்டுச் சோழர்களும் விஜயாலய வம்சத்துச் சோழர்களும் வேறு வேறு என்று எண்ண வேண்டும்.

கி. பி. 1004 க்கு முந்தி பிரக்கியாதி பெற்ற அரசர்களான இராஜராஜன் I முதலானவர்கள் சோழ நாட்டில் ஆண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட திறமை பெற்ற அரசர்களின் கீழ் பிராந்தியங்களில் ஆட்சிபுரியும் பிரதிநிதிகள் எந்த விதத்திலும் தலை எடுக்க முடியாது. ஆகவே மற்ற பிராந்தியங்களைப்போல் கொங்கு நாட்டிலும் ஆட்சிபுரிந்து வந்த பிரதிநிதிகள் தங்கள் பெயரால் யாதொன்றும் செய்யமுடியாமல் இருந்தார்கள். அதனால் தான் பிரதிநிதிகளின் பெயரால் கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை.

ஆனால் தலைமைத்தானத்தில் அதிகாரம் குறைய ஆரம்பித்தால் பிரதிநிதிகள் தலை எடுப்பது சகஜமல்லவா? இவ்விதச் சம்பவம் இந்திய சரிதத்தில் அடிக்கடி ஏற்பட்டிருக்கிறது. தலைமை வம்சம் தன் அதிகார தோரணையைச் சிறிது சிறிதாகத் தளர்த்திவிட்டால் பிரதிநிதி மன்னர்கள் சிறிது சிறிதாகத் தலைதூக்க ஆரம்பித்து நாளடைவில் தங்களுக்கென்று ஒரு வம்சாவளியையும் ஸ்தாபித்துக்கொண்டு சுதந்திரமும் பெற ஆரம்பிப்பார்கள். நாளுக்குநாள் அப்படிப்பட்டவர்களுடைய வம்சம் பரம்பரை வம்சமாகவும் ஆகிவிடலாம்.

இப்படிப்பட்ட சம்பவமானது கொங்கு நாட்டில் கி. பி. 1004ல் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். ஏனெ

னில் அந்த ஆண்டு முதல் கொங்கு நாட்டில் பல அரசர்கள் சோழப் பெயர் பூண்டு ஆண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் பெயராலேயே கல்வெட்டுக்களைப் பொறித்துத் தங்கள் ஆட்சிகளை நிலை நிறுத்தியிருக்கிறார்கள்.

இக்கொங்கு நாட்டில் ஆண்ட தனிச் சோழர்கள் தங்களுக்கென்று ஒரு பரம்பரையை ஏற்படுத்திக் கொண்டதைப் பற்றி பின்னர் நிரூபிப்போம். விஜயாலய வம்சத்துச் சோழர்கள் தாங்கள் கைப்பற்றின நாடுகளை ஆட்சி புரிவதற்காகத் தங்கள் வம்சத்திலிருந்தே இளவரசர்களைப் பிரதிநிதிகளாக அனுப்புவதுண்டு.

அவ்வழக்கப்படி கொங்கு நாட்டிற்கும் ஒரு இளவரசனை அனுப்பியிருக்கக்கூடும். ஆகையால் அப்பிரதிநிதி மன்னன் சோழன் என்ற பட்டப் பெயராலே அழைக்கப்பட்டிருக்கிறான். கி. பி. 1004 முதல் கொங்கு நாட்டை ஆண்ட பிரதிநிதி மன்னன் தனக்கென்று ஒரு வம்ச பரம்பரையை ஏற்படுத்திக்கொண்டான் போலும். இவ்விதம் தனியாகக் கொங்கு மண்டலத்தை ஆண்டு வந்த சோழர்களுக்குக் கொங்கு சோழர்கள் என்று சௌகர்யார்த்தமாக ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். இவ்விதக் கொங்கு சோழ வம்சத்தின் பல அம்சங்களையும் இனி விவரிப்போம்.

விஜயாலய வம்சமும் கொங்கு சோழ வம்சமும் வெவ்வேறானது என்பதற்குக் காரணம் காட்டுவோம். கொங்கு நாட்டை ஆண்ட 4 முக்கிய கொங்கு சோழர்கள் அடியிற் கண்டவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | விக்கிரமசோழன் | 1004—1045 | 41 | வருஷம் |
| 2. | குலோத்துங்கச் சோழன் | 1149—1183 | 34 | ,, |
| 3. | வீரசோழன் | 1183—1206 | 23 | ,, |
| 4. | வீரராஜேந்திரன் | 1207—1255 | 48 | ,, |

இதே பெயர்களை இட்டுக்கொண்டு சோழநாட்டில் ஆண்ட

விஜயாலய வம்சத்து அரசர்களும் இருக்கிறார்கள். அவர்களின் பெயர்களைக் குறிப்போம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. விக்கிரமசோழன் | | 1118—1135 | 17 | வருஷம் |
| 2. குலோத்துங்கன் | I | 1073—1118 | 45 | ,, |
| ,, | II | 1123—1146 | 23 | ,, |
| ,, | III | 1178—1216 | 38 | ,, |
| 3. வீரசோழன் | | 1078—1088 | 10 | ,, |
| 4. வீரராஜேந்திரன் | | 1062—1070 | 8 | ,, |

குறிப்பு:— மேலே மூன்றாவதாக குறிக்கப்பட்ட வீரசோழன் என்பவன் சோழ நாட்டில் ஆளவில்லை. அப்பெயர் கொண்ட ஒருவன் சோழர் பிரதிநிதியாக வேங்கி நாட்டில் ஆண்டான். ஆனால் நான்காவதாகச் சொன்ன வீரராஜேந்திரனுக்கு வீரசோழன் என்ற பெயர் இருந்ததாக வீரசோழியம் என்ற தமிழ் இலக்கண நூலினால் அறிகிறோம்,

மேலே குறித்த இரண்டு அட்டவணைகளிலும் சொல்லப்பட்ட அரசர்களின் காலமும், ஆண்ட வருஷங்களும் வித்தியாசமாயிருப்பதைக் காணலாம். சிறிது கவனித்துப் பார்த்தால் இரு அட்டவணைகளும் இரண்டு வேறான வம்சங்களுக்குச் சேர்ந்தவை என்பதை அறியலாம், கொங்கு மன்னர்கள் ஆண்ட காலத்தில் அதே பெயர்களைக் கொண்ட விஜயாலய வம்சத்து மன்னர்கள் சோழ நாட்டில் ஆளவில்லை. ஆகவே கொங்குச் சோழர்களும் விஜயாலய வம்சமும் வெவ்வேறென்று அறியவேண்டும்.

விஜயாலய வம்சத்தைவிட்டு வேறான ஒரு வம்சத்தைக் கொங்குச் சோழர்கள் கொண்டிருக்கவேண்டுமென்பதற்கும் அவர்கள் தனி அரசர்களாக ஆண்டிருக்க வேண்டுமென்பதற்கும் மற்றுமுள்ள சில காரணங்களைக் கூறுவோம். கொங்குச் சோழர்கள் சோழர் பெயரை வைத்துக்கொண்டிருப்பதால் அவர்கள் சோழ வம்சத்தில் உற்பத்தியானவர்கள் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை. ஆனால் அவர்கள் ஒரு இளைய

வம்சத்தில் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். மூத்த வம்சம் சோழ நாட்டில் ஆளவும் இளைய வம்சம் கொங்கு நாட்டிற்கு முதல் முதலில் பிரதிநிதிகளாக வந்து பின்னர் அரசர்களாக மாறியுமிருக்கவேண்டும். இவ்வாறு தனி அரசர்களாக அவர்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று ஊகிப்பதற்கு நமது நாட்டில் முன்னும் பின்னும் ஏற்பட்ட ஏனைய சரித்திரச் சான்றுகளே போதுமானவை. பின்னொரு காலத்தில் தென்னிந்திய சரித்திரத்தில் விஜயநகரத் தரசர்கள் தென்னாடு முழுவதையும் கைப்பற்றி ஆண்டதையும் அம்மன்னர்கள் தங்கள் தளகர்த்தனை விசுவநாதநாயகனை மதுரையில் தங்கள் பிரதிநிதியாக ஆளும்படி அனுப்பியதையும் அறிவோம். விசுவநாத நாயகன் ஆரம்பத்தில் விஜயநகரத்துப் பிரதிநிதியாகவே ஆண்டு வந்தான். அவனுக்குப் பிறகு அவனுடைய வம்சத்தினர் சிறிது சிறிதாகச் சுதந்திரத்தைக் கைப்பற்ற ஆரம்பித்தனர். அதற்கேற்றபடி விஜய நகரத்திலும் பலம் குறைய ஆரம்பித்தது. திருமலை நாயகன் ஆட்சிக்கு வரவே நாயக அரசர்களுக்குப் பூர்ண சுதந்திரம் கிடைத்துவிட்டது எனலாம். மதுரையைப் போலவே தஞ்சையிலும் செஞ்சியிலும் வேறு நாயக தளகர்த்தர்களை விஜய நகரத்தார் நியமித்திருந்தார்கள். அவர்களும் நாளாவட்டத்தில் சுதந்திரம் பெற்றுத் தனித் தனி ராஜ வம்சங்களை நிலை நிறுத்திவிட்டார்கள்.

இவ்விதமாகவே வடக்கே முகலாய வம்சத்திலும் ஏற்பட்டது. முகலாய சக்ரவர்த்திகள் உன்னத ஸ்திதியில் இருந்த மட்டும் பிரதிநிதிகள் என்ற சுபேதாரர்கள் தலைகாட்டவில்லை. ஔரங்கசீப்பிற்குப் பிறகு முகலாய வம்சம் க்ஷீணதசை அடைந்தது. உடனே வங்காளத்திலும் அயோத்தியிலும் நவாப்புகளும் தக்ஷிணத்தில் நிஜாமும் தலை நிமிர ஆரம்பித்தனர். வம்ச பரம்பரையும் ஏற்பட்டது.

மேலே சொல்லிய சரித்திரங்களைப் போலவே கொங்கு நாட்டிலும் ஏற்பட்டிருக்கவேண்டும். தஞ்சைச் சோழர்கள்

ஏற்படுத்தியனுப்பிய பிரதிநிதி மன்னர்கள் காலக்கிரமத்தில் சுயேச்சையடைந்துத் தனி அரச வம்சத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அவர்களே கொங்கு சோழர்கள் எனப்படுகிறார்கள்.

## 30. கொங்கு சோழ வமிசம்

கொங்கு நாட்டில் ஆலயங்களில் உள்ள கல்வெட்டுக்களை எல்லாம் பாகுபடுத்தி ஆராய்ந்து பார்க்கும் பக்ஷத்தில், அநேக கொங்குசோழ மன்னர்களின் பெயர்களைக் காண்கிறோம். ஆனால் அம்மன்னர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள இரத்த சம்பந்தம் இன்னதுதான் என்று கல்வெட்டுகளால் அறியக்கூடவில்லை. யாருக்குப் பின்னுல் யார் பட்டத்துக்கு வந்தார்கள், என்ன உரிமையைக்கொண்டு பட்டத்துக்கு வந்தார்கள், என்ற விவரங்களை அறியக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆகவே, இவ்வரசர்களுக்குள் ஒரு வம்ச பரம்பரை இருந்ததோ என்று சந்தேகிக்கக் கூடிய அளவு ஆதாரமில்லாமல் நிற்கிறது. ஆனுல், பழைய அனுபவத்தைக் கொண்டு நுணுக்கமான ஆராய்ச்சி செய்யும் பக்ஷத்தில், யாருக்குப் பின்னுல் யார் பட்டத்திற்கு வந்திருக்கக்கூடும். எந்த உரிமையைக்கொண்டு வந்திருக்கக் கூடும், என்று ஒருவாறு கூறலாம். பல காரணங்களைக்கொண்டும், அவ்வித ஆராய்ச்சி செய்யும் பக்ஷத்தில் கொங்கு சோழ வம்சம் ஒரு பரம்பரை வம்சம் என்றும், அந்த வம்சம் அடியில்கண்டபடி இருந்திருக்க வேண்டுமென்னும், ஒருவாறு நிச்சயிக்கலாம். அவ்வாறு இணைக்கப்பட்ட வம்ச பரம்பரையை இங்கு எடுத்து எழுதுவோம்.

**கொங்கு சோழ வம்ச பரம்பரை:—**

*விக்கிரம சோழன் (1004–1045)*

*அபிமான சோழ ராஜாதிராஜன் (1080–1110)*

*ராஜாதிராஜ உத்தமன் (1110–1117)* | *ராஜாதிராஜ வீரசோழன் (1117–1135)*

*உத்தமசோழ வீரநாராயணன் (ராஜகேசரி) (1135–1149)*

*குலோத்துங்கன் (ராஜகேசரி) (1148–1183)*

*வீரசோழன் (பரகேசரி) (இரண்டு கொங்குகளையும் ஆண்டவன்) (1183–1206)*

*வீரராஜேந்திரன் (ராஜகேசரி) (இரண்டு கொங்குகளையும் ஆண்டவன்) (1207–1255)*

*விக்கிரமன் II (பரகேசரி) (1255–1263)*

*ஒரு ராஜகேசரி (பெயர் தெரியவில்லை) (1263–1273)*

*விக்கிரமசோழன் III (பரகேசரி) (1273–1303)*

**மேற்சொன்ன வம்சபரம்பரைக் கொள்கைக்குக் காரணங்கள்:—** கொங்கு சோழர்கள் ஒரு வம்ச பரம்பரைக்குச் சேர்ந்தவர்கள் என்று மேலே சொன்ன கொள்கைக்கு அடியில்கண்ட காரணங்கள் எடுத்துக்காட்டலாம்.

1. ஒவ்வொரு கல்வெட்டிலும் ஒரு அரசன் பெயரைக் குறித்து அவ்வரசனது ஆட்சியில் இத்தனையாவது ஆண்டில் அக்கல்வெட்டு பொறிக்கப்பட்டதென்று கண்டிருக்கிறது.

எந்த ஆண்டில் அவ்வரசன் பெயர் கடைசியாய்ச் சொல்லப் பட்டிருக்கிறதோ அந்த ஆண்டு மட்டிலாவது அவ்வரசன் ஆண்டிருக்கவேண்டும். இவ்விதமாக ஒவ்வொரு அரசனும் தான் ஆண்ட வருடகாலம் நிச்சயிக்கப்படும்.

2. எல்லாக் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்படாமல் போனாலும் சில கல்வெட்டுக்களிலாவது அவ்வரசன் ஆண்ட சக வருடக்கணக்காவது கலியுகாப்த வருடமாவது குறிக்கப் பட்டிருக்கும். அந்த அப்தங்களோடு ஆண்ட வருடமும் குறிக்கப்பட்டிருக்குமாயின் அவ்வரசன் பட்டம் எய்தின வருடத்தைச் சுலபத்தில் கண்டுபிடிக்கலாம். அதைக்கொண்டு அவ்வரசனது இறுதி வருஷத்தையும் கண்டுபிடிக்கலாம். மேலே சொன்ன வருடங்களாகிய பட்டம் பெற்ற வருடம் இறந்த வருடம் இவ்விரண்டையும் நிச்சயப்படுத்திக்கொண்டு வருடக்கிரமமாக அரசர்களின் பெயர்களை எடுத்து எழுதினல் சுலபமாக ஒரு அரச அட்டவணையை எடுத்து எழுதமுடியும்.

3. மேலே கண்டபடி ஒரு அட்டவணை எழுதி அதனைக் கவனித்துப்பார்த்தால் ஒரு அரசனுடைய இறுதி வருடமும் அடுத்த அரசனுடைய பட்டத்து வருடமும் ஒத்திருந்தால் ஒருவனுக்குப்பின் மற்றொருவன் ஆண்டான் என்று நிச்சயமாகக் கூறமுடியும். அவ்விதம் வருடங்கள் ஒத்து வராமல் ஒன்றிரண்டு வருடங்கள் வித்தியாசப்பட்டாலும் அது அக் கொள்கையைப் பாதிக்காது. ஆனல் 5 வருடம் அல்லது 10 வருடம் மத்தியில் நின்றுவிட்டால் வேறொரு அரசன் இருவருக்கும் மத்தியில் இருந்திருக்கலாம் என்று ஊகிக்க முடியும். இந்தக் காரணங்களைக்கொண்டு மேலே சொன்ன வம்சபரம்பரை எடுத்து எழுதப்பட்டது.

4. மேலே சொன்ன அரசபரம்பரையைக் கவனித்துப் பார்த்தால் முதல் அரசனை விக்கிரமன் 1045 வரை ஆண்டதாக அறிகிறோம். ஏனெனில் அவ்வரசனுடைய 41-வது

ஆண்டுச் சாசனம் கிடைத்திருக்கிறது. அதற்குப் பிந்திய ஆண்டுச் சாசனம் கிடைத்ததாகத் தெரியவில்லை. மேலும், ஒரு அரசன் 41 ஆண்டுகளுக்கு மேல் அரசியல் நடத்தினன் என்றால் எவரும் நம்பமாட்டார்கள் அல்லவா? ஆகவே, விக்கிரமன் I என்பவன் 1004 முதல் 1045 வரை ஆண்டனன் என்று ஒருவாறு கூறலாம்.

5. அடுத்த கொங்கு சோழர்களுடைய பெயர் அபிமான ராஜாதி ராஜன். இவ்வரசன் 1080 முதல் ஆண்டதாகத் தெரிகிறது. ஆகவே, விக்கிரம சோழன் இறந்த 1045 முதல் அபிமான சோழன் பட்டத்திற்கு வந்த 1080 வரையில் சுமார் 41 வருடங்கள் வரை எந்த அரசன் பெயரும் காணவில்லை. ஆகவே, அந்த 41 வருட காலமும் ஒரு பிரக்கியாதி யில்லாத அரசனோ அரசர்களோ ஆண்டிருக்கக்கூடும். அவர்கள் விக்கிரமன் I என்பவனுடைய மகன் பேரன்களாகவும் அபிமான சோழனுடைய தகப்பன் பாட்டன்களாகவும் இருந்திருக்கலாம்.

6. தென்னிந்தியாவில் தமிழர்களில் அரசர்களானபோதிலும் பாமரர்களானபோதிலும், பெயரிடுவதில் ஒருவிதப் பழமையான வழக்கம் உண்டு. அது என்னவெனில், ஒருவன் தன் முழுப்பெயரை எடுத்து எழுதும்போது, தகப்பன் பெயரை முன்வைத்துத் தன் பெயரைப் பின்வைப்பது அந்தப் பண்டைக் காலத்து வழக்கு. அவ்வழக்கம் இன்னும் இருந்துவருகிறதல்லவா? அந்த வழக்கத்தை அனுசரித்துப் பார்த்தால் விக்கிரமன் I க்குப் பிறகு அவன் மகனோ பேரனோ அபிமான சோழன் என்ற பெயரில் பட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். அவன் சக்தியில்லாதவனாய் இருந்தபடியால் அவன் பெயர்குறிக்கப்படவில்லை. அவன் 1045முதல் 1080வரை ஆண்டிருக்கலாம். இந்தக் காலம் வெகு நீண்டதென்று தோன்றுமாயின் இரண்டு அரசர்கள் அக்காலத்தில் ஆண்டிருக்கலாம். அவர்கள் பிந்தியவன் பெயர் அபிமானன் என்றிருத்தல் வேண்டும்.

7. மேலே சொன்ன அபிமான சோழனுக்குப் பின் அவன் மகன் ராஜாதிராஜன் 1080ல் பட்டத்திற்கு வந்து 1110 வரை ஆண்டிருக்கிருன். தமிழரில் பெயரிடும் சம்பிரதாயத்தை ஒத்து அவ்வரசன் அபிமான சோழ ராஜாதிராஜன் என்ற பெயருடன் விளங்கிஞன்.

8. மேற்படி இராஜாதிராஜன் 1110ல் இறந்துபோக அவனுக்குப் பிறகு ராஜாதிராஜ உத்தமன் (1110-1117) என்பவனும், ராஜாதி ராஜ வீரசோழன் 1117-1135 என்பவனும் ஒருவர் பின் ஒருவராக அரசாண்டிருக்கிருர்கள். இவர்கள் பெயர்களில் ராஜாதிராஜன் என்ற பகுதி அவன் தகப்பனேக் குறிக்கும். பிந்தியிருக்கும் உத்தமன்; வீரசோழன் என்ற பெயர்கள் அவ்விராஜாதி ராஜனுடைய மக்களேக்குறிக்கும். அவர்களில் உத்தமன் பெரியவஞகவும், வீரசோழன் சின்னவஞகவும் இருக்கலாம். உத்தமனுக்குப் பிறகு வீரசோழன் பட்டம் பெற்றிருக்கிருன். வீரசோழனுக்குப் பிறகு உத்தம சோழ வீரநாராயணன் என்பவன் 1135ல் பட்டத்திற்கு வந்திருக்கிருன். இந்தப் பெயர் முறையைக்கொண்டு பார்த்தால் இராஜாதிராஜ உத்தமனுடைய மகன் உத்தமசோழ வீரநாராயணஞக இருக்கலாம் என்று ஊகிக்கவேண்டும். அப்படியாஞல் உத்தம சோழனுக்குப்பிறகு அவன் மகன் வீரநாராயணன் ஏன் பட்டத்திற்கு வரவில்லே என்ற கேள்வி பிறக்கும். அதற்கொரு சமாதானம் கூறுவோம். உத்தமன் 1117ல் இறந்துபோக, அவன் மகன் உத்தமசோழ வீர நாராயணன் இராஜ்ஜியத்தைப் பரிபாலிக்க வல்ல வயது முதிராத ஒரு பாலகஞக இருக்கலாம். ஆகவே, அப்போது வயது முதிர்ந்து அரசியல் நடாத்தத் தகுதியுள்ளவஞயிருந்த வீரசோழன் தன் தமையன் இறக்கத் தான் பட்டமெய்திஞன். அவன் 1135ல் இறக்க பட்டத்திற்கு உரிமை பாத்தியம் கொண்ட வீரநாராயணன் 1135ல் பட்டம் எய்திஞன். இந்தச் செய்திகளே வருடக் கணக்குகளிலிருந்து ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும்.

இவ்விதம் பாலனான மகன் இருக்கச் சிறிய தந்தை பட்டத்திற்கு வருவது இந்திய சரித்திரத்தில் சகஜமானது. மத்திய இந்தியாவில் போஜராஜன் சிறுவனாயிருந்தபோது முஞ்சன் பட்டத்திற்கு வந்ததை உதாரணமாகக் கூறலாம். மேலும் சாளுக்கிய வம்சத்தில் புலிகேசன் இருக்க மங்கலேசன் பட்டத்திற்கு வந்ததும் இதுபோலவேயாகும்.

9. வீரநாராயணன் 1149ல் இறக்கக் குலோத்துங்கன் 1149ல் பட்டம் எய்தினன். இதைப்போலவே குலோத்துங்கனுக்குப் பின் வீரசோழனும், அவனுக்குப் பின் வீரராஜேந்திரனும், அவனுக்குப் பின் விக்கிரமன் IIம் பட்டம் எய்தியிருக்கிறார்கள்.

10. விஜயாலயச் சோழர்களில் ஒரு அரசன் இராஜகேசரி என்று பட்டம் வகித்தால் அவன் மகன் பரகேசரி என்று பட்டம் வகிப்பதுண்டு. இந்த முறையைக் கொங்குச் சோழர்களும் அனுசரித்திருக்க வேண்டும். ஏனெனில், இராஜகேசரி குலோத்துங்கனுக்குப் பிறகு பரகேசரி வீரசோழனும், அவனுக்குப்பின் ராஜகேசரி வீரராஜேந்திரனும், அவனுக்குப்பின் பரகேசரி விக்கிரமன் IIம், பட்டத்திற்கு வந்திருப்பதை மேலே சொன்ன அட்டவணை நிரூபிக்கிறது. ஆகவே, ஒருவருக்குப் பின் வந்த மற்றொருவன் முந்தியவனுடைய மகனாக இருக்க வேண்டும்.

11. வீரசோழன் (1183-1206), வீரராஜேந்திரசோழன் (1206-1255) இவ்விருவரும் "இரண்டு கொங்குகளையும் ஆண்டவர்கள்" என்று குறிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இவ்விரு அரசர்களும் வடகொங்கு, தென் கொங்கு, என்ற இரண்டு பிரிவுகளையும் ஒரு ஆட்சிக்குள் சேர்த்தாண்ட பராக்கிரமசாலிகளாக இருக்க வேண்டும். மேலும், இவ்விரண்டு கொங்கு சோழர்களுடைய கல் வெட்டுக்கள் கொங்குநாடு முழுவதும் நூற்றுக்கணக்காகப் பரவியிருக்கக் காணலாம். பல ஆலயங்களையும் இவர்கள் கட்டிப் பல ஊர்களுக்கும் தங்கள்

பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் காலத்தில் நாடு அமைதியோடிருந்த தன்றிப் பட்டம் பெறும் விஷயத்தில் ஒருவிதப் புரட்சியும் நாட்டில் ஏற்பட்டிருக்காது. ஆகவே, கொங்கு சோழ வம்சமானது வாழையடி வாழையாக வந்திருக்க வேண்டும்.

12. விக்கிரமன் II (1255–1263) பரகேசரி என்றும் பட்டம் பெற்றவன். அவனுக்குப் பின் மற்றொரு பரகேசரி விக்கிரமன் III 1273 முதல் 1303 வரை ஆண்டிருக்கிறான். ஆகவே, இவ்விரண்டு பரகேசரிகளுக்கும் மத்தியில் ஒரு ராஜகேசரி இருந்திருக்க வேண்டும். அவன் 1263 முதல் 1273 வரை ஆண்டிருக்க வேண்டும். அவன் யாதொரு சாமர்த்தியமும் இல்லாதவனாய் இருந்தபடியால் அவனைப்பற்றிய கல்வெட்டு ஒன்றும் கிடைக்கவில்லை.

மேலே சொன்ன 12 காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால், கொங்கு சோழர்களுடைய வம்ச பரம்பரையானது தெளிவாக ஒரு ஒழுங்கு படைத்த வம்சம் என்று நமக்குத் தோன்றும். அவ்வம்சம் 1004 முதல் 1303 வரை மூன்று நூற்றாண்டுகள் ஆட்சி புரிந்து வந்தது. மேலே சொன்ன கொள்கைக்கு விரோதமாக யாதொன்றும் கல்வெட்டுகளில் காணவில்லை.

பட்டங்கள்:— மேலே சொன்ன பெயர்களைத் தவிர, கரிகால் சோழன், கோனேரின்மை கொண்டான் என்ற இரு பட்டப் பெயர்களைக் கல்வெட்டுகளில் காண்கிறோம். இவைகள் பட்டங்களேயன்றி அரசர்களுடைய தனிப் பெயர்கள் அல்ல. அவைகளைப்பற்றிப் பின்னால் விவரமாகக் கூறுவோம்.

## 31. கலிமூர்க்க விக்கிரமன்

விக்கிரமன் I *1004—1045* :—

நமக்குத்தெரிந்த மட்டில் கொங்கு சோழர்களில் முதல் அரசன் விக்கிரமன் I என்பவனே. இவனைப்பற்றிப் பல

அடைமொழிப் பெயர்கள் காணப்படுகின்றன. அவையாவன கோனாட்டான், கலிமூர்க்கன், பரகேசரி வர்மன், திருச்சிற்றம்பல முடையான், கோக்கலி மூர்க்கன். இப்பெயர்களில் கோக்கலி மூர்க்கன் என்ற பெயர் மிகச் சிறப்பாகப் பல இடங்களில் காணப்படுகின்றது. இப் பட்டப்பெயர் ஏன் இவனுக்கு இடப்பட்டது என்ற காரணம் தெரியவில்லை.

இவனுடைய கல்வெட்டுகள் கோவை ஜில்லா முழுவது மேயன்றி மதுரை ஜில்லாப்பழனி தாலூக்காவிலும் அகப்படுகின்றன. ஆகவே இவ்வரசன் வெகு பிரக்கியாதியுடன் ஆண்டிருக்கவேண்டும். இவ்வரசன் அரசாண்ட பூபாகத்தின் அளவை அறிவதற்காக அடியில்கண்ட இலக்கங்களை குறிக்கின்றோம்.

| ஊர். | அரசனது ஆண்டு. | கல்வெட்டுத்தொகை. |
|---|---|---|
| 1. பேரூர் | 12—27 | 4 |
| 2. வெள்ளலூர் | 3—18 | 4 |
| 3. போளுமாம்பட்டி | 17—32 | 2 |
| 4. திங்களூர் | 40 | 1 |
| 5. விஜயமங்கலம் | 4 | 1 |
| 6. திருமுருகன் பூண்டி | 3—14 | 11 |
| 7. கண்ணுடிப் புத்தூர் | 20 | 2 |
| 8. குமரலிங்கம் | 2—27 | 3 |
| 9. சோழமாதேவி | 3—27 | 11 |
| 10. தாராபுரம் | | 21 |
| 11. கீரனூர் | 20—23 | 2 |
| 12. பெரியகோட்டை | 20—22 | 3 |
| 13. களந்தை | | |
| 14. சமத்தூர் | | |
| 15. அண்ணூர் | | |
| 16. கோவில்பாளையம் | | |

முதலியன இவ்வட்டவணையைக் கவனித்தால் இவ்வரசனு

டைய இராஜ்ஜியத்தின் பரப்பு எவ்வளவு இருந்ததென்பதை ஒருவாறு அறியலாம். கொங்கு நாட்டில் அக்காலத்தில் இருந்த முக்கியமான ஆலயங்களிலெல்லாம் இவன் பெயரைக் காண்கிறோம். அக்காலத்திலிருந்த முக்கியமான ஊர்களிலெல்லாம் இவன் கீர்த்தி பரவி இருந்தது. முக்கியமாக நொய்யல், ஆம்ராவதி என்ற இரண்டு நதிகளின் பள்ளத்தாக்குகளில் முழுவதிலும் இவன் கீர்த்தியைக் காட்டும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அதாவது மேல் கொங்கு, தென் கொங்கு இவ்விரண்டிலும் இவன் செல்வாக்கு நிறைபெற்றிருந்தது.

இவ்வரசன் பட்டத்திற்கு வந்தகாலத்தைத் திங்களூர்க்கல் வெட்டினால் அறியக்கூடும். அக்கல்வெட்டில் இவ்வரசனுடைய 40-வது ஆண்டு 967 சகம் என்று கண்டிருக்கிறது. அதாவது கி. பி. 1045. ஆகவே, இவ்வரசன் கி. பி. 1004-ல் பட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். இவன் ஆளுகையில் 40 வருஷத்திற்கு மேற்பட்ட கல்வெட்டு கிடைக்கவில்லை. ஆகவே இவ்வரசன் 40 வருஷங்களாவது அரசு செலுத்தியிருக்க வேண்டும். இந்தச் செய்தியும் திங்களூர்க்கல் வெட்டே நிரூபிக்கிறது. மேலே காட்டிய அட்டவணையிலிருந்து இவ்வரசனுடைய ஏனைய ஆண்டுகளின் கல்வெட்டுக்களையும் அவ்வக்காலத்தில் ஏற்பட்ட செய்திகளையும் அறியக்கூடும். ஆகவே இவ்வரசன் கி. பி. 1004 முதல் 1045 வரையில் ஆண்டிருக்கலாம் என்று நிரூபிக்கப்படுகிறது.

இனி இவ்வரசனைப்பற்றி நமக்குக் கிடைக்கக்கூடிய சில குறிப்புகளை எடுத்து எழுதுவோம். இவ்வரசன் காலத்தில் ஐயபொழில் என்ற ஒரு வர்த்தகச் சங்கம் தென்னாட்டில் பரவியிருந்தது. அதில் 500 அங்கத்தினர்கள் இருந்தார்கள். பல கிராமங்களிலும் அதன் அங்கத்தினர்கள் இருந்தார்கள். அச்சங்கத்தின் மூலமாக வியாபாரமானது விருத்தியாகி வந்தது.

இவ்வரசனுடைய மற்றொரு கல்வெட்டில் இராஜராஜபுரத்து அழகிய பாண்டிய தேவன் என்றவன் விக்கிரம

னுடைய 'உரிமையில்' ஒருவன் என்று கூறப்பட்டுள்ளது. உரிமையில் என்று சொன்னதிலிருந்து அரசனுடைய சுற்றத் தான் என்று கூறலாம். இராஜராஜபுரம் என்பது தற்காலத் தாராபுரத்தின் பழைய பெயராகும். ஆகவே அக்காலத்தில் அவ்வூர் ஒரு சிறந்த ஊராகவும் கொங்கு சோழர்களின் தலைமைப் பட்டணமாகவும் இருந்ததெனக் கூறலாம். அழகிய நாச்சி ஆழ்வி என்பவள் வேளப்பெண்களில் ஒருத்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேளம் என்ற பதத்திற்கு தஞ்சா ஊர்ச் சாசனங்களின்படி ஒரு குறிப்பிட்ட வீதியாகும். இந்தக் கல்வெட்டை உற்று நோக்கினுல் வேளம் என்பது அரண் மனைக்குள் இருந்த ஒருபாகம் என்று சொல்லலாம். அதி லுள்ள பெண்டுகளுக்கு வேளப்பெண்டிர் எனக்கூறலாம்.

இவ்வரசனுடைய 20-வது ஆண்டில் கோனுட்டான் என்ற பெயர் காணப்படுகிறது. அண்ணூரில் இவ்வரச னுடைய கல்வெட்டுகள் வட்டெழுத்து அல்லது பழய எழுத் தில் பல சாசனங்களைக்காணலாம். அவைகள் 27 முதல் 42 ஆண்டுகள் வரை உள்ளன. அக்கல்வெட்டுகளில் இவ்வரசன் பெயர் கலிமூர்க்க விக்கிரமன் என்று கண்டிருக்கிறது. இப் பெயரின் காரணம் இன்னதென்று தெரியவில்லை என்று முன்னமே கூறியுள்ளோம். சேர அரசன் இரவிகோதை என்பவன் கலிமூர்க்கப் பட்டத்தை வகித்திருந்ததாக ஒரு கல் வெட்டு கூறுகிறது. மற்ருெரு கல்வெட்டு இவனுடைய மெய்க்கீர்த்தியைப் பற்றிக் கூறுகிறது. அதில் "வேங்கி நாட்டைக் கைக்கொண்டு வெண்குடைக்கீழ் வீற்றிருந்து, செங் கோலாச்சி, நிலத்தில் ஆறிலொரு பங்கு மாத்திரம் கொண்டு, மற்றவற்றை விலக்கித், தன் குடிகளுக்குப் பிறந்த குழந்தை களுக்கு, தாயிருப்பது போல் இருந்து, வந்த அரசன் என்று பொருள்கொண்ட சொற்களைக் காண்கிறேம்" (183-185/20) வேருெரு கல்வெட்டில் இவ்வரசனுடைய மகளின் பெயர் விக்கிரம சோழமா தேவியார் என்றும் காண்கிறேம்.

பொள்ளாச்சி தாலூக்காக் களந்தையிலும் இவ்வரசனுடைய 3, 7, 10, 12, 18, 30 ஆண்டுகளின் கல்வெட்டுகள் இருக்கின்றன. இக்களந்தையின் ஆலயம் ஆதித்தேசுவரமுடையார் ஆலயம் என்று கண்டிருக்கிறது. மேலும் இவ்வூருக்கு மற்றொரு பெயர் ஆதிபுராணமேசுவரமுடையார் என்பது. இவன் காலத்தில் துலவை என்ற காவேரிபுரத்துச் சாத்தன் கருவூரான் என்ற கன்னட தேவமாயிரத்தி என்பவரால் இவ்வூர் ஆலயமாகிய ஜலகண்டேசுவரர் ஆலயம் கட்டப்பட்டது. விக்கிரமன் காலத்தில் இவ்வாலயத்தின் பெயர் திருநாட்டீசுவரமுடையார் ஆலயமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அண்ணூரில் கிடைத்த ஏழு கல்வெட்டுகளிலிருந்து அடியில்கண்ட விஷயம் அறியலாம்.

இவ்வரசன் காலத்தில் கவயன் புத்தூரிலிருந்து (கோவில் பாளையம்) ஒருவன் தன் அடியார்களை ம் அவர்கள் மக்களையும் ஆலய வழிபாட்டிற்காக அடிமைகளாகக் கொடுத்ததுமன்றித் தன்னைப்போல் ஒரு உருவம் அவ்வாலயத்தில் செய்துவைத்தும் ஒரு பெண் வடிவம் கொண்ட விளக்கைக்கொடுத்தும் சாசனம் எழுதிவைத்தான். இவ்வரசனுடைய 7-வது ஆண்டில் ஒரு நம்பி என்றவன் திருவோலக்கக்கூடத்தை ஆலயத்தில் கட்டிவைத்தான்.

## 32. அபிமான சோழ ராஜாதிராஜன் (1080—1100)

மேலே கொங்குச் சோழ வம்சத்தின் முதல் மன்னன் விக்கிரமனைப்பற்றிச் சொன்னோம். அவ்விக்கிரம சோழன் கி. பி. 1045 வரை அரசாண்டான். அவனுக்குப் பின்தி ஒரு மன்னனோ அல்லது இரண்டு மன்னர்களோ ஆண்டிருக்க வேண்டும். அவர்களைப்பற்றிய பெயர் முதலிய விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. கல்வெட்டுகளும் கிடையாது.

விக்கிரமனுக்குப் பிறகு அபிமான சோழ ராஜாதிராஜனுடைய பெயரை மட்டும் காண்கிறோம். இவ்வரசன் 1090-க்கு முன் பட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். ஏனெனில் ஈரோடு தாலூக்கா விஜயமங்கலத்துக் கல்வெட்டு ஒன்றில் இவ்வரசனுடைய பெயரும் சக வருஷமும் குறிக்கப்பட்டுள்ளன. அக்கல்வெட்டில் 1022 சகம் என்று குறிக்கப்பட்டுள்ளது, ஆகவே அக்கல்வெட்டின் ஆண்டு கி. பி. 1090 என அறிகிறோம். எனவே உத்தேசமாக அக்கல்வெட்டின்படி இவ்வரசன் கி. பி. 1080 முதல் ஆண்டிருக்க வேண்டுமெனலாம். திருமுருகன்பூண்டிச் சாசனப்படி இவ்வரசன் பன்னிரண்டு வருஷங்களுக்கு மேல் ஆண்டிருக்கவேண்டும்.

இவ்வரசனுடைய பெயர் அபிமான சோழ ராஜாதிராஜன் என்றிருப்பதனால் இவனுடைய தகப்பனார் பெயர் அபிமான சோழன் என்றிருக்கவேண்டும். இவனுடைய பட்டம் பரகேசரி வர்மன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இவனுடைய தகப்பன் அபிமான சோழன், இராஜகேசரியாய் இருந்திருக்கவேண்டும்.

இவனைப்பற்றி 8 கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன.

| | |
|---|---|
| தாராபுரம் | 3 |
| திருமுருகன்பூண்டி | 1 |
| விஜயமங்கலம் | 4 |

தாராபுரம் தாலூக்காவில் கண்ணபுரத்தில் விக்கிரம சோழேசுவர ஆலயத்தில் நித்தியச்செல்வியம்மன் சன்னதியில் தென்சுவரில் இவ்வரசனுடைய 3-வது ஆண்டுக்கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதன்படி அரையன் சோமன் என்பவன் அன்னதானம் செய்ததாக அறிகிறோம். மேலும், கீரனூர் ஆதிநாதேசுவர சுவாமி ஆலயத்தில் அர்த்தமண்டபத்து வடசுவரில் இராஜாதிராஜனுடைய 3-வது ஆண்டுக்கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதன்படி சுவாமிக்கு நித்திய பூஜைக்காக

தேவதானமாய் வரியிலியாக ஒரு பூதானம் அரசன் செய்த தாகக் காண்கிறோம்.

தாராபுரம் தாலூக்காவில் பிரமியம் என்னும் ஊரி லுள்ள திருவலஞ்சுழிநாத சுவாமி ஆலயத்தில் கர்ப்பக்கிரகத் திற்குத் தென்புறச் சுவரில் இவ்வரசனுடைய கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. அது இவ்வரசனுடைய 10-வது ஆண் டில் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன்படி அவ்வூர் ஆலயத்து முகமண்டபத்தின் மேற்றளவரிசையை எதுப்பன் நீலன் சிலம்பன் என்பவனுடைய நற்கதிக்காக வேண்டி வீரசங்காதசதுர்வேதி மங்கலத்துக் காவலன் சிலம்ப நடைக் காவலன் என்பவன் கட்டினதாக் கண்டிருக்கிறது. ஆகவே அக்காவலன் அக்காலத்தில் பக்திவாய்ந்த ஒரு பிரபு வாக இருந்திருக்கவேண்டும்.

மேற்சொன்ன கல்வெட்டுக்களில் திருமுருகன்பூண்டிக் கல்வெட்டு மிகவும் முக்கியமானது. இவ்வரசனுடைய 12-வ்து ஆண்டில் திருமுருகன் பூண்டி உடையார் ஆலயத்து அபிமான சோழ பட்டருக்கும் அவ்வாலயத்துத் திருமடை விளாகத்தில் குடியிருந்து வந்த தவசியர், தேவரடியார், மேளக்காரர் முதலான கோயில் பணியாளர்களுக்கும் பல வரிசைகளை (உரிமைகள்) அரசன் கொடுத்ததாகக் கண்டிருக் கின்றது. அவ்வரிசைகளாவன, இராஜாதிராஜன் என்னும் கொடியை ஏற்றுதல், குதிரை ஏறிச் சவாரி செய்தல், ஊர் கோலம் போகும்போது பேரி, சேகண்டிகை அடித்தல் முதலிய வைகள். மேலே கூறியதைத் தவிர தங்கள் வீடுகளில் இரண்டு நிலைகட்டுதல், இரண்டு தலைவாசல் வைத்தல், வீடு களுக்குக் காறையிடல் முதலிய உரிமைகளும் கொடுக்கப்பட் டன. இவ்வுரிமைகளை ஆராய்ந்தால் கோனேரின்மை கொண்டான் காலத்தில் கருவூர் முதலிய ஐந்து கொங்குநாட்டு ஆலயங்களில் கம்மாளர்களுக்கு அவ்வரசன் கொடுத்த உரிமை களைப்போல் இவை உள்ளன எனலாம்.

ஈரோடு தாலூக்கா விஜயமங்கலம் என்ற பழைய ஊரில் உள்ள நாகேசுவர சுவாமி ஆலயத்தில் தென்னண்டைச் சுவரில் இவ்வரசனுடைய ஒரு ஆண்டில் குறித்த கல்வெட்டு ஒன்றில் சகம் 1022 என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆண்டு இன்னதென்று தெரியவில்லை. அது தெரிந்திருந்தால் இவ்வரசன் பட்டமேற்றிய வருடம் தெரியலாம். அதன்படி ஆலயத்திற்கு விளக்குதானம் செய்யப்பட்டது. அதற்கு அடுத்த கல்வெட்டில் அதே ஆண்டில் திருநாகேசுவரமுடையார்க்குக் கட்டளைக்காக ஒரு தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. மற்றொரு கல்வெட்டிலும் ஆண்டு தெரியவில்லை. அதில் வீரசோழ வளநாட்டு உத்தம சதுர்வேதிமங்கலம் என்ற பெயரைக் காண்கிறோம். அவ்வாலயத்து அம்மன் சன்னிதியிலும் அதே ஆண்டுக் கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. அதுவும் ஒரு பூதானத்தைப் பற்றித்தான் குறிக்கின்றது. ஆகவே விஜயமங்கலத்தில் உள்ள 4 கல்வெட்டுகளிலும் இவ்வரசனுடைய சகம் 1022-வது ஆண்டில் ஏற்பட்ட 4 தானங்களைப்பற்றியும் அறிகின்றோம்.

ஆகவே இவ்வரசனுடைய ஆட்சி மத்தியக்கொங்கும் தென்கொங்கும் பரவி இருந்தது. விஜயமங்கலம், திருமுருகன் பூண்டி, தாராபுரம் இம்மூன்று இடங்களிலும் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம். இவ்வரசன் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டவன் என்றும் ஆலயச்சீர்ஞேத்தாரணம் செய்வித்து நித்திய பூசைக்கும் தானதருமங்கள் செய்து வைப்பதில் பிரீதி உள்ளவன் என்றும் ஊகிக்கலாம். இவன் காலத்திலும் வட்டெழுத்து வழக்கத்தில் இருந்தது. பொதுக்காரியங்களான சமய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பணிவிடையாளர்களுக்குப் பல உரிமைகளைத்தந்து கவுரவப்படுத்தியதை முக்கியமாகக் குறிக்கவேண்டும். அவ்விதச் சிறப்புவாய்ந்த உரிமைகளை மேலே குறித்துள்ளோம்.

## 33. இராஜராஜ உத்தமன் (1100—1117 கி. பி.)

இவ்வரசன் முன்னற் கூறிய அபிமான சோழ இராஜாதி ராஜனுடைய மகன். இவனுக்கு இராஜாதிராஜ வீரசோழன் என்ற ஒரு தம்பி உண்டு. அபிமான சோழன் 1100-ல் இறந்து போக அவனுடைய மூத்த மகனாகிய இவ்வுத்தம சோழன் பட்டத்திற்கு வந்தான். இவன் பட்டத்திற்கு வந்த வருஷத்தை நிரூபிக்கும் படியான கல்வெட்டு ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் இவனுடைய 8, 17 ஆண்டுகளில் ஏற்பட்ட கல்வெட்டுக் கள் கிடைத்திருக்கிறபடியால் இவ்வரசன் 17 ஆண்டுகளாவது அரசாண்டிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். மேலும் இவ னுக்குப் பின் பட்டத்தைப் பெற்ற இவனுடைய தம்பியின் கல்வெட்டு ஒன்றில் அவன் 1117-ல் பட்டம் பெற்றதாக அறி கிறோம். இவ்வுத்தமன் குறைந்த பக்ஷம் 17 ஆண்டுகள் ஆண்டிருக்கிறபடியால் இவன் 1100-ல் பட்டத்திற்கு வந் திருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். இவனைப்பற்றி இரண்டே கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. அவைகளும் தாராபுரம் தாலுக்காவிலேதான் கிடைத்தன. ஆகவே இவ னைப்பற்றி இதுவரை அதிகமான விஷயங்கள் தெரியவில்லை. இவனுக்கு இராஜகேசரி வர்மன் என்ற பட்டமுண்டு. இவ் வரசனுடைய கல்வெட்டுகள் இரண்டும் ஆம்ராவதி நதிக்குக் கீழ்க்கரையில் பிரமியம் என்ற பண்டைத்தலத்தில் திருவலஞ் சுழிநாதசுவாமி ஆலயத்தில் உள்ளன. இவனுடைய 8-வது ஆண்டில் ஏற்பட்ட முதல் கல்வெட்டில் கேரள கேசரி அமர பயங்கர கோட்புலியன் என்பவர் இவ்வூர் ஆலயத்துக் கடவு ளுக்கு திருமுழுக்குக்காக மூன்று குடம் தீர்த்தம் தினந் தோறும் கொண்டுவர அரைக் கழஞ்சு பொன் தானம் செய்த தாக் கண்டிருக்கிறது. இத்தானம் செய்தவன் பெருமாள் வாழிலார் என்பதாகக் கண்டிருக்கிறது. ஆகவே அவன் அரச னுடைய சாமந்தனாக இருக்கலாம். இவன் பெயர் கேரள கேசரி அமரபயங்கரன் என்று இருக்கிறதினால் அவன் கேரளம்

அல்லது மலையாள நாட்டுப் பிரபுவாக இருக்கவேண்டும். கோட்புலியார் என்ற பெயர் கவனிக்கத்தக்கது. திருத்தொண்டர் புராணத்தில் சைவ அடியார்களில் கோட்புலி என்ற பெயர் இருக்கக் காணலாம். ஆகவே இப்பிரபு ஆழ்ந்த சைவப்பற்று உள்ளவனாய் இருக்க வேண்டும். இவ்வரசனுடைய இரண்டாவது கல்வெட்டு 17-வது ஆண்டு அதாவது அவனுடைய இறுதி ஆண்டில் ஏற்பட்டது. இதில் அரசனுடைய சாமந்தர்களில் ஒருவனுடைய உரிமையரான கந்துகன் அபிமான சோழ இராஜாதி ராஜன் என்பவனுடைய பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. உரிமையர் என்றால் சொந்தக்காரர் என்று பொருள் படும். இவன் அரசனிடம் ஒரு அதிகாரியாக இருக்க வேண்டும். ஆகையால்தான் அரசன் பெயரைப் பட்டமாக வகித்திருக்கிறான்.

## 34. இராஜாதிராஜ வீரசோழன் (1117—1135 கி. பி.)

இவ்வரசன் முன் கூறிய இராஜாதிராஜ உத்தமனுடைய தம்பி. இவ்வரசன் அவன் தமையனார் இறந்த பிறகு பட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். உத்தமனுக்கு ஒரு ஆண் மகன் இருந்தான். அவன் மிகச் சிறியவனாக இருந்ததினால் இராஜ்ஜியபாரத்தை வகிக்க முடியாமல் இருந்தான். அதை உத்தேசித்து வீரசோழன் பட்டத்தை ஏற்றுக் கொண்டான். வீரசோழன் பட்டத்திற்கு வந்த ஆண்டு 1117 என்று கணிக்கப் பட்டிருக்கிறது. ஏனெனில் விஜயமங்கலத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் இவ்வரசனுடைய ஐந்தாவது ஆண்டு சாலிவாகன சகம் 1044 என்று கண்டிருக்கிறது. அதற்குச் சரியான கி. பி. 1122 ஆகையால் இவ்வரசன் 1117ல் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டும். இவ்வரசனைப் பற்றிக் கல்வெட்டுகளில் கிடைத்த கடைசி ஆண்டு 24 என்று கண்டிருக்கிறது. அதாவது கி.பி. 1141 ஆகும். ஆனால் 14 ஆண்டு முதல் 24 ஆண்டு வரை வேறு கல்வெட்டுக்கள் கிடைத்தில. ஆகவே 24 என்பது 14

ஆக இருக்கக்கூடும். அப்படியாயின் இவ்வரசன் கி. பி. 1117 முதல் 1135ம் வருடம் வரைதான் ஆண்டிருக்கவேண்டும்.

இவ்வரசனுடைய கல்வெட்டுக்கள் ஈரோடு, தாராபுரம் தாலுக்காக்களில் கிடைத்திருக்கின்றன. இதுவரை 6 கல்வெட்டுக்கள் இவ்வரசன் பெயரால் கிடைத்திருக்கின்றன. அவைகளில் இரண்டு கல்வெட்டுக்களில் இராஜாதிராஜ வீர சோழன் என்றும் (245, 192, of 20) மூன்று கல்வெட்டுகளில் வீரசோழ கலிமூர்க்கப் பெருமாள் என்றும் (111, 189, 204, of 20) இன்னும் பல கல்வெட்டுக்களில் வீரசோழன் என்று மாத்திரமும் இவ்வரசன் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. அக் கல்வெட்டுகளின் லிபி வித்தியாசமாய் இருக்கிறதைக்கொண்டு இரண்டு வீரசோழர்கள் இருந்திருக்க முடியுமா என்று சந்தேகிக்கலாம். மேல் சொன்னதிலிருந்து இவ்வரசனுக்கு கலிமூர்க்கன் என்ற பட்டமும் இருந்திருக்கிறது. முதல் கொங்கு சோழனை விக்கிரமன் I என்பவன் கலிமூர்க்கன் என்ற பட்டத்தை வகித்திருந்ததை அறிவோம்.

இவ்வரசனுடைய கல்வெட்டுக்கள் (ஈரோடு தாலூக்காவில்) விஜயமங்கலம், தாராபுரம் தாலூக்காவில் பல இடங்கள், இவைகளில் காணப்படுகின்றபடியால் கொங்கு நாட்டின் நடுப் பாகம் இவன் ஆதிக்கத்தில் இருந்தது என அறிவோம்.

இனி இவ்வரசனைப்பற்றி நாளதுவரை கிடைத்திருக்கும் செய்திகளைக் கண்டு எழுதுவோம். ஈரோடு தாலூக்கா விஜயமங்கலத்தில் நாகேசுவரசுவாமி ஆலயத்தில் (593 of 1905) இவ்வரசனுடைய 5-வது ஆண்டு கல்வெட்டு ஒன்றில் ஒரு பூதானம் செய்யப்பட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டு 1044-வது சகம் என்று கண்டிருக்கிறது. இதைக் கொண்டுதான் இவ்வரசன் பட்டம் பெற்ற ஆண்டை அறிகிறோம். இக்கல்வெட்டில் காங்கய நாடு, விஜயமங்கலத்துக்கு அடுத்த தென்னூரில் இருந்த நங்கை நீலி ஆலயம், உகாப்பாடி

என்ற பெயர்களைக் காண்கிறோம். நங்கை நீலி என்னும் பெயர் தென்னூர் கிராம தேவதையின் பெயராக இருக்கலாம்.

தாராபுரம் தாலூக்கா பிரமியத்தில் திருவலஞ்சுழிநாத சுவாமியின் ஆலயத்தில் இவ்வரசனுடைய 5 + 1 ஆண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது (192 of 1920). இக்கல்வெட்டு வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே பின்னால் வந்த வீரசோழனுடைய கல்வெட்டு அல்ல என்று சொல்லலாம். இக்கல்வெட்டு ஒரு முக்கியமான செய்தியை எடுத்துச் சொல்லுகிறது. அக்காலத்தில் வீரசங்காதசதுர்வேதி மங்கலத்தில் காமக்கண்ணி சோமாசி என்ற பிராமணன் இருந்தான். அவன் ராஜத்துரோகமான காரியங்களைச் செய்ததினால் அவனுடைய நிலம் அரசனால் பறிமுதல் செய்யப்பட்டது. பிறகு அந்நிலத்தை ஒரு பெரியான் சோழன் என்ற வீரசோழகாங்கயன் விலைக்குப் பெற்றுக்கொண்டான். அவன் அரசனுடைய சாமந்தன். அதை வாங்கி அதற்காக அரசனுடைய பண்டாரத்தில் அதன் விலை 30 பொன்னையும் செலுத்தி அந்நிலத்தை அவ்வூர் ஆலயத்திற்கு தானம் செய்தான். அதன் வரும்படியிலிருந்து திருப்பதிகம் ஓதுவதற்காக ஏற்பாடு செய்தான். இவ்விதச் செய்திகள் அக்கல்வெட்டில் காண்கிறோம். ஆகவே அக்காலத்தில் ராஜதுரோகத்திற்காக நிலத்தைப் பறிமுதல் செய்து வந்த வழக்கம் இருந்ததெனக் காண்கிறோம். அரசனுடைய சாமந்தர்கள் அரசனுடைய பெயரைப் பட்டமாக வைத்துக்கொண்டதையும் அறிகிறோம். வீரசோழ காங்கயன் என்ற பெயரைக் கவனிக்க. இதே ஆலயத்தின் வேறு கல்வெட்டுகளிலும் கூட வீரசங்காதசதுர்வேதி மங்கலம் என்ற பெயரைக் காண்கிறோம். இப்பெயர் பிரமியத்தின் பண்டைக் காலப் பெயராக இருக்க வேண்டும்.

பரஞ்சேர்வழி என்ற கிராமத்தில் வீரநாராயணப் பெருமாள் ஆலயத்தில் இராஜாதிராஜ வீரநாராயண வீரசோழனுடைய 9-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது. (550 of

1908). பெயரைக் கவனிக்குமிடத்து இக்கல்வெட்டு இவ்வரசனுடையதாக இருக்கலாம். இதில் ஒரு பூதானம் செய்யப்பட்டதாகக் கண்டிருக்கிறது.

மேலே குறித்த பிரமியம் திருவலஞ்சுழிநாதசுவாமி ஆலயத்தில் இவ்வரசனது 13-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது (189 of 20). இதில் அரசன் பெயர் வீரசோழ கலிமூர்க்கப் பெருமாள் என்ற பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. எழுத்து வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பிரம்மாதிராஜன் என்பவன் ஒரு நிலத்தை வாங்கி அதற்காக 15 கழஞ்சு பொன்னைக் கொடுத்து வரியிலியாகச் செய்து அதை ஆலயத்துக்குத் தானம் செய்து அதிலிருந்து வரும் வரும்படியிலிருந்து சுவாமிக்கு திருமுழுக்கும், அபிஷேகமும் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்தான். இதைத் தவிர அக்கல்வெட்டு மழநாடு, அயிலூர் என்ற பெயர்களைக் குறிக்கின்றது.

தாராபுரம் தாலூக்கா கொடுவாய் விண் நிறைந்த பெருமாள் ஆலயத்தில் இவ்வரசனுடைய 14-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (111 of 20). அதிலும் அரசன் பெயர் வீரசோழ கலிமூர்க்க தேவன் என்று கண்டிருக்கிறது. இவ்வாலயத்தில் ஒரு தீர்த்தக்கிணறு தோண்டின செய்தி குறிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், மேலே கூறிய பிரமியத்தில் இவ்வரசனுடைய 24-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று வட்டெழுத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. (204 of 20). அதிலும் அரசன் பெயர் வீரசோழ கலிமூர்க்கப்பெருமாள் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்வூர் சபைக்கு 1½ மா நிலத்தை அரசி தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. அரசியின் பெயர் மாதேவியார் என்ற எழுத்துக்களைத் தவிர மற்றவை அழிந்து போயின. அந்நிலத்தின் வரும்படியிலிருந்து கோயிலைப் பெருக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதென்று கண்டிருக்கிறது. இக்கல்வெட்டு 24 ஆண்டு என்றிருப்பதால் இவ்வரசனுடையதோ என்பது ஐயம்.

## 35. உத்தம சோழவீரநாராயணன்

## (1135—1149 கி. பி.)

இவ்வரசன் இராஜாதிராஜ உத்தமனுடைய மகன். தன் தந்தை இறந்தபோது சிறிய பாலனாய் இருந்தபடியால் இவன் சிற்றப்பன் இராஜாதிராஜ வீரசோழன் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அவன் இறந்த பிறகு தனக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய பட்டத்தை வீரநாராயணன் அடைந்தான். இவன் சிற்றப்பனுக்குக் குழந்தைகள் உண்டோ இல்லையோ என்பது தெரியவில்லை. வீர நாராயணன் தகுந்த வயது வந்ததும் இராஜ்ஜியத்தைக் கைக்கொண்டிருக்கவேண்டும்.

இவ்வரசனுடைய சாசனங்களில் இவன் பட்டத்திற்கு வந்ததும் இறந்ததும் ஆன வருடங்கள் புலப்படவில்லை. எக் கல்வெட்டுகளிலும் சக வருடங்கள் குறிக்கப் படவில்லை. முந்திய அரசனுடைய கடைசி ஆண்டும் பிந்திய அரசனுடைய முதல் ஆண்டும் நமக்குத்தெரிகிறபடியால் இவ்வரசனுடைய காலம் இவ்விரண்டு ஆண்டுகளுக்கும் மத்தி என்று நாம் கொள்ளவேண்டும். அதாவது 1135 முதல் 1149 ஆகும். இவனுடைய கல்வெட்டு ஒன்றில் 10-வது ஆண்டு குறிக்கப் பட்டுள்ளதால் இவன் 10 வருடங்களுக்குக் குறையாமல் அரசாண்டிருக்கவேண்டும்.

இவனுடைய சாசனங்கள் அநேகமாக தாராபுரம் தாலூக்காவில் கிடைத்திருக்கின்றன. வீரநாராயணன் என்ற பெயர் கொண்ட சாசனங்கள் கிடைத்திருந்தபோதிலும் எல்லாச்சாசனங்களும் இவனுடைய சாசனங்களோ என்பது சந்தேகம். பேரூர் (98), பழனி (229) இவ்வூர்களில் கிடைத்த சாசனங்களில் 'கோ. அதிசயதேவ' என்ற அடைமொழி இருக்கின்றது. இவ்வடைமொழியை வைத்துக் கொண்டு அவ்வரசன் சோழன் பராந்தகன் I ஆக இருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். வெள்ளலூர்ச் சாசனத்தில் கோக்

கண்டன் வீரநாராயணன் என்ற பெயர் இருக்கக் காண்கிறோம். இப்பெயர் சேரனுடைய பெயர் என்று எண்ணுகிறார்கள்.

இவ்வரசனுடைய பெயர்களில் இராஜகேசரிவர்மன், கோனேரின்மை கொண்டான் என்ற பட்டங்களைக் காண்கிறோம்.

தாராபுரம் தாலூக்கா காத்தங்காணி நன்மணீசுவர சுவாமி ஆலயத்தில் இவ்வரசனுடைய 2-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது. (276 of 1920) அதில் இவ்வாலயத்து நித்திய பூஜைக்காக பூதானம் செய்த விஷயம் கண்டிருக்கிறது.

இவ்வரசனுடைய 3-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று (121 of 1909) ஆம்ராவதி நதிக்கரையில் குமரலிங்கம் கரிவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் உள்ளது. அதன்படி வீரசோழப்பிரம்மேந்திரன் என்ற சோமயாஜியார் கரியபிரான் ஆலயத்திற்குப் பூதானம் செய்த விஷயம் கண்டிருக்கிறது. அவன் பெருமாள் வீரசோழ தேவனிடமிருந்து அப்பூமியைப் பெற்றதாகவும் கண்டிருக்கிறது.

கோவில்பாளையத்துக் காலகாலேசுவரமுடையார் ஆலயத்தில் இவ்வரசனுடைய 7-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது (652 of 1922). அதன்படி வடபாரிசார நாட்டு மன்னியூர்க்குடி ஒருவன் கால கால தேவருடைய ஆலயத்தைச் செப்பனிடுவதற்காக 3½ கழஞ்சுப்பொன் கொடுத்ததாகக் கண்டிருக்கிறது.

இவ்வரசனுடைய 10-வது ஆண்டு கல்வெட்டு ஒன்று (214 of 1909) கண்ணாடிப்புத்தூர் கைலாசநாத சுவாமி ஆலயத்தில் உள்ளது. அதன்படி திருவனந்தீசுவரமுடையார் ஆலயத்திற்கு வீரசோழ குலசேகரவர்மன் என்ற சேனாதிபதி திருவிளக்கு வைப்பதற்காகத் தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது.

சங்கிராமநல்லூர் கொழுமம் சோழீசுவரமுடையார் ஆலயத்துக்கல்வெட்டு ஒன்றில் (157 of 1909) தேவன்பாடி என்கிற வீரநாராயணநல்லூர் என்ற ஊரின் பெயர் காவடிக்கா நாட்டில் இருந்ததாகக் கூறுகிறது. இவ்வூரின் பெயரினுல் இவ்வரசன் காலத்தில் ஏற்பட்ட ஊர் அது என்று நாம் அறிய வேண்டும். இக்கல்வெட்டு கோனேரின்மைகொண்டான் என்ற பட்டப்பெயர்கொண்ட அரசன் காலத்தில் ஏற்பட்டது. அரசனுடைய மாமன் நற்கதிக்காக அக்கிராமத்தைத் திரிபுவன சுந்தர ஆலயத்திற்குத் தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. மேலும் அதே கல்வெட்டில் திரிபுவனசுந்தரருக்கும் தேவிக்குமாக ஒரு தானமும் தக்ஷிணுமூர்த்திக்கு மற்ருெரு தானமும் கண்டிருக்கிறது. மேலும் ஒன்பது கரைநாடு திரிவாளன் துறை என்கிற கேரள கேசரிநல்லூர் என்ற பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. இத்தான சாசனத்தை எழுதினவன் வீர நாராயண வீரசிங்கதேவன்.

மேலும் பல்லடம் தாலூக்கா நடுவாச்சேரி ஆலயக்கல்வெட்டில் (113 of 1926) கோதைப்பிராட்டீசுவரமுடையார் என்ற பெயர் கண்டிருக்கிறது. இப்பெயர் அரச வம்சத்துக்குச் சேர்ந்த ஒரு இளவரசியின் பெயராக இருக்கலாம்.

## 36. குலோத்துங்கச் சோழதேவன்
## (கி. பி. 1149—1183)

இவ்வரசன் மிகப்புகழ் பெற்றவன். இவனும் இவனுக்குப் பின் வந்த சந்ததியார்களும் கொங்கு நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தார்கள். இவர்கள் காலத்தில் கொங்கு நாடு சுயேச்சைப் பெற்று விளங்கியிருந்தது எனலாம்.

இவனுடைய கல்வெட்டுகள் கொங்கு நாட்டில் நாலா பக்கங்களிலும் தென்படுகின்றன. அவிநாசி, சேவூர், முத்தூர், திங்களூர், விஜயமங்கலம், சத்தியமங்கலம், திருமுருகன்பூண்டி, கீரனூர் அண்ணூர், நடுவாச்சேரி, காவேரிபுரம் முதலான பல

இடங்களிலும் இவன் கீர்த்தியைக் காட்டும் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. இவைகளில் கீரனூர் என்பது மதுரை ஜில்லாவில் இருக்கின்றது. ஆகவே இவனுடைய கீர்த்தி ஆமராவதி நதிக்குத் தெற்கிலும் சென்றிருந்தது என அறியவேண்டும். இவ்வரசன் பட்டத்திற்கு வந்த வருஷம் 1149 ஆகும். இதனை விஜயமங்கலக் கல்வெட்டு 250-ல் காண லாம். அதன்படி இவ்வரசனுடைய 14-வது ஆண்டு சகம் 1085 (கி. பி. 1163) என்று கண்டிருக்கிறது. இனி இவ்வரசன் 35 ஆண்டுகள் ஆண்டதாக 661 of 1905 என்ற சாசனம் கூறுகின்றது. அதாவது இவ்வரசனுடைய கடைசி ஆண்டு 1183 ஆகும்.

இவ்வரசனுடைய வீருதுக்கள் ராஜகேசரி வர்மன், திரிபுவன சக்ரவர்த்திகள், கோனேரின்மைகொண்டான் என்பவைகள். மேலும் இவ்வரசன் பெயர் பூண்ட ஊர்களும் ஆலயங்களும் இருந்தன. குலோத்துங்கச் சோழநல்லூர் (181 of 1920), குலோத்துங்கச் சோழீசுவரமுடையார் (124) முதலிய பெயர்கள் கல்வெட்டுக்களில் காண்கிறோம். மேற் சொன்ன ஊரும் ஆலயமும் இவ்வரசனால் ஆக்கப்பெற்றவைகள்.

இனிக் குலோத்துங்கச்சோழன் ஆளுகையில் என்னென்ன செய்திகள் நடந்தன என்பதைப்பற்றிக் கல்வெட்டுக்களில் கண்டவற்றை எடுத்து எழுதுவோம். அவினாசி தாலூக்கா சேவூரில் வல்லீசுவரசுவாமி ஆலயத்தில் குலோத்துங்கனுடைய 2-வது ஆண்டில் மும்முடி சோழனால் ஒரு தானம் செய்யப் பட்டது.

மூன்றாவது ஆண்டு :— விஜயமங்கலம் நாகேசுவர சுவாமி கோயில் (582-1905) என்ற கல்வெட்டின்படி நாட்டு அரசன் பல நாடுகளில் இருந்த கோயில் பூசாரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஆணை அனுப்பின செய்தி கூறப்பட்டுள்ளது.

பாரியூர் அமரபணீசுவரர் கோயில் - (185-1910) படி வடகொங்கில் இருபது நாடுகளின் பெயர்களைக் குறித்து அங்

கிருந்த சிவாலயங்களுக்கு ஓட்டச்சு என்ற வரியை அரசன் நீக்கினான். இக்கல்வெட்டு கோயில்களுக்கும் அரசியலுக்கும் இருந்த சம்பந்தத்தை விளக்குகிறது. மற்றொரு கல்வெட்டில் (191-1910) பாரியூர் பனைய வேட்டுவரில் பொன்னப்பனையன் என்பவன் கோயிலுக்கு கதவு நிலை தானம் செய்தது கண்டிருக்கிறது.

தாராபுரம் தாலூக்கா கொங்கூர் கிராமத்தில் பசுபதீசுவரர் ஆலயத்தில் குலோத்துங்கனுடைய 3-வது ஆண்டில் ஏற்பட்ட கல்வெட்டின் (165 /20) படி பொங்கலூர்க்காநாட்டு கொங்கூர் என்கிற ஜயங்கொண்ட சோழநல்லூர் பசுபதீசுவரமுடையார்க்கு அன்னம் படைப்பதற்காக சுந்தரம் நிலையுடைய பெருமாள் என்ற குலோத்துங்கச்சோழ அணுத்திரப் பல்லவரையன் என்றவன் இரண்டு மாநிலத்தைத் தானம் செய்தான்.

அவிநாசி தாலூக்கா திருமுருகன்பூண்டி முருகநாதசுவாமி ஆலயத்தில் ஒரு கல்வெட்டில் (102/15) குலோத்துங்கனுடைய 3-வது ஆண்டில் தவசிகளுக்கு உணவு அளிப்பதற்காக நெல் தானம் செய்யப்பட்டது. அதிகமாசம் வரும் வருஷங்களுக்கும் வேண்டிய அளவு நெல் கொடுக்கவேண்டு மென்றும் கண்டிருக்கிறது.

தாராபுரம் தாலூக்கா காத்தங்காணி சொக்கப்பெருமாள் ஆலயத்தில் உள்ள ஒரு கல்வெட்டின்படி (280/20) குலோத்துங்கனுடைய 3+1 ஆண்டில் ஒரு அடியார் கொடுத்த பொன்னிலிருந்து வருப்வட்டியைக் குலோத்துங்கச் சோழ விண்ணகர் எம்பெருமான் ஆலயத்திற்குச் சிலநாள்களுக்கு நடத்தவேண்டிய கட்டளைக்கு உபயோகிப்பதற்காகத் தானம் செய்யப்பட்டது.

4-வது ஆண்டு :—சத்தியமங்கலம் மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் (171/1910) குறுப்பு நாட்டுத் திங்களூர் இதில் கூறப்பட்டுள்ளது.

அவிநாசியில் ஈசுவரன் கோயிலில் குலோத்துங்கனுடைய 4-வது ஆண்டில் அரசனுடைய சாமந்தரில் ஒருவனுன மருதன் மலையன் என்ற குலோத்துங்கச் சோழ விக்கிரமாதித்ய தேவன் ஆலயத்தில் ஒரு விளக்கு வைக்கப் பணம் தந்தான். மேலே கண்ட மருதன் மலையன் என்ற பெயரை ஆராய்ந்து பார்த்தால், கோவைக்கு மேற்கில் 7 கல்லில் உள்ள மருதமலை என்ற மலையின் பெயர் ஞாபகத்திற்கு வரலாம். இம்மலையில் மருதாசலக் கடவுள் என்ற பெயரோடு முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கிறார். ஆகவே இம்மலையின் பெயரை மக்கள் வைத்துக் கொள்ளும் வழக்கம் குலோத்துங்கன் காலத்திலேயே இருந்தது எனலாம். இம்மருத மலையின் மகிமையை அறியவேண்டுமாயின் பேரூர்ப்புராணம், மருதமலை மான்மியம் என்ற இரண்டு நூல்களில் விரிவாகக்காணலாம். பவானிக்கரையோரம் உள்ள சத்தியமங்கலத்தில் மீனுக்ஷிசுந்தரேசுவரர் ஆலயத்தில் குலோத்துங்கச் சோழனுடைய 4-வது ஆண்டுக்கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதில் குறும்பு நாட்டிற்குச் சேர்ந்த திங்களூரைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. கற்கள் மாற்றிக்கட்டியிருக்கிறபடியால் அதிக விவரங்கள் தெரியவில்லை. அவிநாசி தாலூக்கா அண்ணூர் மன்னீசுவரர் ஆலயத்தில் குலோத்துங்கனுடைய 4-வது ஆண்டில் கல்வெட்டு (620/22) ஒன்றில் மன்னியூர் ஆண்டவர்க்குச் சேர்ந்த தேவதான கிராமமான வெள்ளைப்பாடியில் வசித்துவந்த ஒரு குயவன் அதே கிராமத்து மற்ருெரு குடியிடம் பணம் பெற்றுக்கொண்டு அப்பணத்தின் வட்டிக்காக அவ்வாலயத்தில் இருக்கும் சிவனடியார்களுக்கு மாதந்தோறும் 5 மண் ஓடு தருவதாக ஒப்பந்தம் செய்தான் என்று கண்டிருக்கிறது.

5-வது ஆண்டு :—(610/1922)ன் படி அதே கோயிலில் ஒரு விளக்குவைப்பதற்காக ஒரு கைக்கோளன் 1¼ கழஞ்சு பொன் அளித்தான்.

அவிநாசி தாலூக்கா மன்னீசுவரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டின்படி (610/22) குலோத்துங்கச்சோழனுடைய 5-வது

ஆண்டில் அவ்வாலயத்தில் ஒரு விளக்கு வைப்பதற்காக ஒரு கைக்கோளனால் 1¾ கழஞ்சு பொன் தானம் செய்யப்பட்டது.

7-வது ஆண்டு:— முத்தூர்சோழீசுவரமுடையார் (158/1910) படி முத்தூர் குலோத்துங்கச் சோழீசுவரமுடையார் கோவிலுக்கு காங்கயத்துக்கு ஒரு வியாபாரி விளக்கு தானம் செய்தான். 160/1910-படி அதே கோவிலுக்கு மற்றொரு தானம் செய்யப்பட்டது.

அண்ணூர் மன்னீசுவரர்கோயில் (608/1922) ஒருவாணியன் விளக்குக்காக 1¾ கழஞ்சும், 618/1922 படி (சகம் 1125) அந்த ஆண்டு முழுவதுமாக 129 விளக்குகளும், 619/1922-படி 19 விளக்குகளும், 636/1922-படி அம்மன்கோயிலில் செங்கொண்டமேச்சுரம் உடையார்க்குத் திருமுழுக்கு, மாலை, பூசை முதலியவைகளுக்கு 15 பொன்னும் தானம் கொடுக்கப்பட்டன.

8-வது ஆண்டு:—முத்தூர்க்கல்வெட்டுஒன்று (162/1910). முத்தூர் என்ற ஊர் காங்கயநாட்டில் உள்ளதென்றும், மற்றொன்று (163/1910)— அக்கோவிலிருந்து சில குடிகளுக்கு கடன் வழங்கப்பட்டது என்றும் கூறுகின்றன.

விஜயமங்கலம் :— நாகேசுவரசுவாமிகோயிலில் (577/1905). அம்மையின் வடிவம் தாபிக்கப்பட்டுப் பூசைக்கும், 2 விளக்குகளுக்கும் தானம் செய்யப்பட்டது. 578/05ன்படி செப்பனிடப்பட்டபோது குலோத்துங்னுடைய 2 கல்வெட்டுக்கள் மீண்டும் பொறிக்கப்பட்டன.

திருமுருகன்பூண்டி முருகநாதசுவாமிகோயிலில் 573, 574/05 என்ற கல்வெட்டுகளில் சில தானங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அண்ணூர் மன்னிசுவரர்கோயிலில் (612/1922) விளக்கு தானம் செய்யப்பட்டது.

11-வது ஆண்டு :— காவேரிபுரம் சலகண்டேசுவரர்கோயிலில் உள்ள 194/1927 என்ற கல்வெட்டின்படி அக்கோயில் கற்கோயிலாகக் கட்டப்பட்டது. கட்டினவன் கள்ளப்பாழி

தாருவனம் பொழில் சேரமான் சக்கிரவர்த்தியை நடை கொண்ட நாட்டுக்குடியானவன் என்பவனும். இப்பெயரில் சேரமான்தோல்வி குறிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

12-வது ஆண்டு :-அவிநாசிஈசுவரர்கோயில் (191-1909): வடபரிசாரநாட்டு வெள்ளனூர்க் குடிகள் பெருங்கருணைச்செல்வியாருக்கு குடிக்காணம் என்ற வரியைத் தந்தனர். இதன்படி ஓவ்வொரு ஆண்டும், 12-படி தானியம் கொடுக்கப்பட்டதாம். அம்மன் பெயர் தற்போதும் அதுவே என்றறிக.

13-வது ஆண்டு :— விஜயமங்கலம் நாகேசுவரசுவாமி கோயில் (579-1905) குலோத்துங்கச்சோழ விக்கிரமாதித்திய தேவன் என்ற சாமந்தன் தானம் செய்தது. நடுவாச்சேரி (442-1925) படி மூன்று பூண்டிக்கிராமத்து எட்டு குலத்தார்கள் இடைக்கிடாய், பண்குறுணி என்ற வரிகளை கோயிலுக்குக் கொடுத்தார்கள். இவ்வரிகள் ஆடு, தானியம் இவைகளைப் பற்றியவாம்.

விஜயமங்கலம் (598-1905) சந்த்ரநாதசுவாமி கோவில் சகம் 1085-ல் வீரசங்காதப் பெரும்பள்ளிக்கு நிலதானம்செய்யப்பட்டது. இதனால் தான் குலோத்துங்கன் கி. பி. 1149-ல் ஆட்சிக்கு வந்தான் என்று அறிகிறோம். இது சமணப்பள்ளி. அதன் பழைய பெயர் இதில் கூறப்பட்டுள்ளது. அப்போது சமயப்பூசல் குறைந்திருந்தது என அறியலாம். ஒரு சைவ அரசன் நாளில் சமணப்பள்ளிக்கும் தானம் செய்யப்பட்டது என்று அறிக.

15-வது ஆண்டு :— அவிநாசி ஈசுவரர் கோயில் (173-1909). அவிநாசி ஆண்டாருக்கு விளக்கு வைப்பதற்காக பொன் தானம் செய்யப்பட்டது. நடுவாச்சேரி (445-1925) கோதீச்சரர்கோயில் அடிக்கீட்டலத்து ஸ்ரீபூமன் நம்பி என்ற வணிகனுடைய மனைவி சோழன் உமை என்பவள் பொன் தானம் செய்தாள்.

17-வது ஆண்டு :—அண்ணூர் மன்னீசுவரர் கோயில் அவ்வூரில் (605 & 606-1922) படி திருஞானசம்பந்த நம்பி மடம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. கோயில் நைவேத்தியத்திற்கு 9 அச்சு கொடுக்கப்பட்டு அந்த நைவேத்தியம் மேற்சொன்ன மடத்திற்கு வினியோகம் செய்யப்பட்டது.

இனி, தீர்த்தமலையில் உள்ள (661-1905) என்பதனால் இவ்வரசன் 34-ஆண்டுகள் வரையாவது ஆண்டிருக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுகிறது. ஆனால் 17-முதல் 34 ஆண்டு வரை ஒரு கல்வெட்டும் காணப்படாததன் காரணம் தெரியவில்லை. மேலும் தீர்த்தமலை வெகு தொலையில் இருப்பதால் இக்கல்வெட்டு இவ்வரசனுடையதோ என்பது ஐயம்.

மேலும், ஆண்டு குறிக்காத இரண்டு கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. ஒன்று திங்களூரிலும், (605-1905) மற்றொன்று நடுவாச்சேரியிலும், (449-1925) காணப்படுகின்றன.

## 37. வீரசோழன் (கி. பி. 1183—1206.)

இவ்வரசன் மிகுந்த பிரக்கியாதி பெற்றவன். இரண்டு கொங்குகளையும் ஆண்டவன் என்ற பிருது இவனுக்கு உண்டு. ஆகவே இவன் காலத்தில் கொங்குநாடு மிகச்சிறந்திருந்தது மன்றி ஐக்கியமும் அடைந்திருந்தது. இவ்வைக்கியத்தை உண்டு பண்ணி அரசாண்ட முதல் அரசன் இவனே ஆவான். இவனைப் பற்றிய கல்வெட்டுகள் அநேகம் கிடைக்கின்றன.

ஆனால் இவனுடைய காலத்தை நிச்சயமாய்க் குறித்துக் காட்டுவதற்குத் தேதியைக் குறித்துக்காட்டும் கல்வெட்டு இது வரையில் கிடைக்கவில்லை. ஆனால் சில காரணங்களை வைத்துக் கொண்டு இவனுடைய காலத்தை நிச்சயிக்க முடியும்.

1. இவனுடைய கல்வெட்டுக்களில் தேதிகள் குறிக்கப் படாமல் போனபோதிலும் இவனுடைய ஆட்சி வருடங்கள்

குறிக்கப்பட்டுள்ளன. அவைகளில் இரண்டு முதல் 23 வருடங்கள் வரை நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகவே இவ்வரசன் 23 வருடங்களாவது ஆண்டிருக்க வேண்டும்.

2. இரண்டு கொங்குகளையும் ஆண்டவர் என்ற பிருது இரண்டே அரசர்களுக்கு உண்டு. அவர்கள் முறையே வீர சோழன், வீரராஜேந்திர சோழன் என்பவர்கள். இவ்விருவர்களும் ஒருவருக்குப்பின் ஒருவர் வந்திருக்கவேண்டும். இவர்களில் வீரராஜேந்திரன் பட்டத்திற்கு வந்த வருடத்தைப் பற்றிக் கல்வெட்டு ஆதாரம் கிடைத்திருக்கிறது. அது கி. பி. 1207 ஆகும். அதைக்கொண்டு வீரசோழனுடைய காலத்தை எளிதில் கண்டுபிடிக்கலாம்.

3. முந்தி சொன்ன குலோத்துங்க சோழனுக்கும் பிந்தி வரும் வீரராஜேந்திரனுக்கும் மத்தியில் 23 வருடகாலம் வெறுமனே இருக்கிறது. அதாவது குலோத்துங்கன் இறந்த வருடமாகிய 1183 முதல் வீரராஜேந்திரன் பட்டத்திற்கு வந்த வருடமாகிய 1206 வரை ஒரு அரசன் இருந்திருக்கவேண்டும் அல்லவா. அவனே வீரசோழன் என ஊகிக்கலாம்.

4. குலோத்துங்கனும் வீரராஜேந்திரனும் இராஜகேசரி என்ற பட்டம் பெற்றவர்கள். ஆகவே இவர்களுக்கு மத்தியில் ஒரு பரகேசரி இருந்திருக்கவேண்டும் அல்லவா? அவனே வீர சோழன் ஆவான்.

5. மேலும் குலோத்துங்கன், வீரசோழன், வீரராஜேந்திரன்என்ற மூவர்களைப்பற்றியும் ஏராளமான கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இம்மூவர்களும் அடுத்தடுத்தே அரசாண்டிருக்க வேண்டும். கீர்த்தி பெற்ற அரசர்கள் ஒரே வம்சத்தில் அடுத்தடுத்து வருவது சரித்திரத்தில் சகஜமானதே. மேலே சொன்ன ஐந்து காரணங்களாலும் வீரசோழன் 1183-ல் பட்டத்திற்கு வந்து 1206-ல்பட்டத்தை விட்டு விலகி இருக்கவேண்டும் அல்லவா ?

இனி இவ்வரசனுடைய கீர்த்தி வெகுதூரம் பரவி இருந்ததற்கு அடியில்கண்ட கல்வெட்டுக்கள் நிரூபிக்கின்றன.

| கல்வெட்டு ஆலயம். | ஆட்சி வருடம். | கல்வெட்டுகள். |
|---|---|---|
| 1. அவிநாசி | 2-4 | 2 |
| 2. சேவூர் | | 1 |
| 3. பேரூர் | 15 | 1 |
| 4. வெள்ளலூர் | 17 | 1 |
| 5. கண்ணுடிப்புத்தூர் | 17 | 2 |
| 6. கொழுமம் | 11, 21 | 7 |
| 7. சங்கராமநல்லூர் | 21 | 7 |
| 8. குமரலிங்கம் | 20 | 2 |
| 9. சோழமாதேவி | | 1 |
| 10. தாராபுரம் | | 3 |
| 11. கீரனூர் | | 2 |

இனி இவ்வரசனுடைய பட்டங்கள் அடியில் கண்டவை

1. பரகேசரி 416
2. இருகொங்கு ஆண்டவன் 444
3. கலிமூர்க்கன் (தாராபுரம் கல்வெட்டு)

இவன் இரு கொங்குகளையும் பிடித்து ஒன்ருக்கின காலம் எதுவென்று நிச்சயமாகச் சொல்லக்கூடவில்லை. கலிமூர்க்கன் என்ற பட்டத்தினுடைய பொருள் இன்னதென்றும் தெரியவில்லை.

உடுமலைப்பேட்டை தாலூக்கா சங்கராமநல்லூர் என்ற கிராமத்துக் கோயிலை இவ்வரசன் கட்டி அதில் தன் பெயரால் சிவலிங்கத்தை ஸ்தாபித்தான். அதுமுதல் அக்கோயிலுக்கு வீரசோழீசுவரமுடையார் கோயில் என்று பெயர் வந்தது (கல்வெட்டு நெ. 437.) இதைப்பற்றிப் பின்னுல் விவரிப்போம்.

இனி கல்வெட்டுக்களில் கண்டபடி வீரசோழன்காலத்தில் நடந்த சம்பவங்களை வருட வாரியாக எடுத்து எழுதுவோம்.

இரண்டாவது ஆண்டு:- அவிநாசியில் ஒருதூணில் கண்ட கல்வெட்டில் அவ்வாலயத்து ரிஷிப தேவருடைய மண்டபம் கட்டுகையில் ஒரு தூணிற்கு ஏற்பட்ட பணம் ஒருவர் தந்த தாகக் கண்டிருக்கிறது. தாராபுரம் தாலூக்கா அலங்கியம் கலி யுக கண்ணீசுவர சுவாமி ஆலயத்தில் ஒருகல்லின்படி அவ்வால யத்தில் வடுகப்பிள்ளையார் சன்னிதிக்கு விஷு, அயனம், சங்க ராந்தி நாள்களிலும் நித்தியபூஜைக்கும் படித்தரத்திற்கும் பூதானம் செய்யப்பட்டது. அது அலங்கியத்து முதலிகளில் தலையன் ஆளவந்தான் என்ற வீரராஜேந்திர அதிகமான் என்பவருடைய மனைவி சேரும்மையாரால் அளிக்கப்பட்டது.

நான்காவது ஆண்டு:- அவிநாசி ஈசுவரர் ஆலயத்தில் மற் றொரு கல்வெட்டில் அவிநாசி ஆளுடைய தேவர்க்குச் சில வரி களைத்தானம் செய்தது கண்டிருக்கிறது.

ஐந்தாவது ஆண்டு:- விஜயமங்கலத்து நாகேசுவர சுவாமி ஆலயத்தில் சகாப்தம் 1044 தேதியிட்ட ஒரு கல்வெட்டு இருக் கிறது. அதில் காங்கயநாடு விஜயமங்கலத்தருகில் தென்னூரில் நங்கைநீலியின் ஆலயம், உகாப்பாடி என்ற பெயர்கள் காணப் படுகின்றன. இக்கல்வெட்டில் கண்ட அரசன் 1117 முதல் 1123 வரை ஆண்டிருக்க வேண்டும். ஆகவே இக்கல்வெட்டு சந்தே கத்தைத் தருகிறது. தாராபுரம் தாலூக்கா பிரமியத்தில் கண்ட ஒரு கல்வெட்டின்படி (192C 20) வீரசங்காதி சதுர்வேதி மங்கலத்து பிராமணன் ஒருவன் துரோகம் செய்ததற்காக நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. இக்கல்வெட்டும் இவ்வரச னுடையதோ என்பது சந்தேகம்.

பதின்மூன்றாவது ஆண்டு:- பிரமியத்தில் கண்ட மற்றொரு கல்வெட்டு (189C 20) வட்டெழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதின்படி பிரம்மாதிராஜன் என்பவன் ஒரு நிலத்திற்கு 15

கழஞ்சு கொடுத்து வரியை நீக்கிவிட்டான். பிறகு அதை சுவாமியின் திருமஞ்சனத்திற்காகத் தானம் செய்தான்.

**பதினான்காம் ஆண்டு:-** கொடுவாய் வெண்ணிறைந்த பெருமான் ஆலயத்தில் வட்டெழுத்தில் ஒரு கல்வெட்டிருக்கிறது (111C 20). அதன்படி ஆலயத்திற்குள் ஒரு கிணறு வெட்டப்பட்டது.

**பதினைந்தாம் ஆண்டு:-** பேரூரில் பட்டீசுவரர் ஆலயத்தில் இவ்வரசனுடைய கல்வெட்டின்படி நெல்தானம் செய்யப்பட்டது.

**பதினேழாவது ஆண்டு:-** வெள்ளலூரில் தேனீசுவரர் ஆலயத்தில் ஒருகல்வெட்டின்படி கோவன்அரசன் என்பவனுடைய நற்கதிக்காக ஒரு கதவு தானம் செய்யப்பட்டது. கண்ணுடிப் புத்தூர் கைலாசநாதர் ஆலயத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் அவ்வூர்க்குடிகள் திரு அனந்தீசுவரமுடையார் ஆலயத்திற்கு நெல்தானம் செய்தது கண்டிருக்கிறது.

**பத்தோன்பதாவது ஆண்டு:-** குமரலிங்கத்தில் பத்தொன்பதாவது ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் (125 of 1909) அரசன் பெயர் அழிந்துவிட்டது. ஆனால் சங்கராமநல்லூர் (137 of 1909) கல்வெட்டொன்றை இதற்கு ஒப்பிட்டுப் பார்த்தால் இதையும் வீரசோழனுடையதென்றே சொல்லலாம். இதில் ஒரு பூதானம் குறிக்கப்பட்டிருக்கிறது. அண்ணூர் ஆலயத்துக் கல்வெட்டொன்றின்படி (613 of 1922) அவ்வாலயத்து வரிகளை வசூலிப்பதற்காக பல கிராமத்துக் குடிகளுக்கு மன்றுடி என்ற வரியில் ஐந்து பங்குகள் கொடுக்கப்பட்டன. இக்கல்வெட்டில் வடபாரிசார நாட்டு வெள்ளைப்பாடி என்ற வீரசோழநல்லூர் குறிக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்வூர் வீரசோழனால் கட்டப்பட்டதென்று ஊகிக்கவேண்டும்.

**20-வது ஆண்டு:-** குமரலிங்கம் கரிவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஒரு கல்வெட்டில் (119 of 1909) கரைவழிநாட்டு

பிரம்ம தேயமாகிய குமரங்க பீம சதுர்வேதி மங்கலத்து குரங் காட்டு ஸ்ரீ கிருஷ்ணன் என்பவன் கரியபிரான் ஆலயத்திற்கு பூதானம் செய்தான். அங்கேயே மற்ருெரு கல்வெட்டில் அவ் வாலயத்தில் வைத்திருந்த நந்தவனத்தைப்பற்றி சொல்லப்பட் டிருக்கிறது (120 of 1909.) சங்கராமநல்லூர் சோழேசுவரர் ஆலயத்தில் ஒரு கல்வெட்டில் (141 of 1909) வீரகேரள வள நாட்டு வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து நிலத்தைத்தானம் செய்தது கண்டிருக்கிறது. சோழமாதேவி ஆலயத்தில் ஒரு கல் வெட்டில் ஒரு பூதானம் கூறப்பட்டிருக்கிறது.

21-வது ஆண்டே:- சங்கராமநல்லூர் ஆலயத்தில் ஒரு கல் வெட்டில் (139 of 1909) தானம் செய்த நிலத்தின் எல்லையை குறிக்கும்போது 'சேரனை மேன் கொண்ட சோழன் பெருவழி' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனுல் இவ்விடத்தில் சேரனை சோழன் வென்றனன் என்று ஊகிக்கலாம். மற்ருெரு கல்வெட் டின்படி (142 of 1909) சிறியநாயகன் என்ற வீரசோழ நுளம் பன் தீபம் வைக்க நெல் தானம் புரிந்தான். மற்ருெரு கல்வெட் டில் 144 of 1909) இவ்வரசனுடைய பிருதுகள் பரகேசரிவர் மன், திரிபுவனசக்கரவர்த்தி, இருகொங்குகளையும் ஆண்டவன் என்று கூறப்பட்டுள்ளன. இவ்வரசனுடைய சாமந்தரில் ஒரு வன் கண்டராதித்தன் செட்டி என்ற அதிராஜராஜ கண்டிய தேவன் என்றும் அவன் பூதானம் செய்தான் என்றும் கண் டிருக்கிறது. மற்ருெரு கல்வெட்டில் (150 of 1909) மேலே கண்டமூன்றுபிருதுகளும் கூறப்பட்டுள்ளன. கரைவழி நாட்டுக் கொழுமத்தில் வீரசோழீசுவரம் என்ற ஆலயத்தை அரசன் கட்டினதும் அதற்குப்பூதானம் கொடுத்ததும் கண்டிருக்கிறது. அதே இடத்தில் மற்ருெரு கல்வெட்டில் ஆலய ஸ்தாபனமும் பூதான விவரமும் கண்டிருக்கிறது. சோழமாதேவி குலசேகர சுவாமி ஆலயத்தில் ஒரு கல்வெட்டில் (226 of 1909) இரண்டு வேளாள மாதர்களால் ஆலயத்திற்குத் தானம் செய்தது சொல் லப்பட்டிருக்கிறது. மற்ருெரு கல்வெட்டில் (229 of 1909)

அவ்வாலயத்தில் க்ஷேத்திரபாலப் பிள்ளையார் சன்னிதிக்கு நித்திய பூஜைக்காகத் தருமம் செய்தது கண்டிருக்கிறது.

22-வது ஆண்டு:- அண்ணூர் ஆலயத்தில் (629 of 1922) ஒரு கல்வெட்டில் விக்கிரம சோழவளநாட்டு மானம்பாடி என்ற மதுராந்தக சதுர்வேதி மங்கலத்துச் சபையார் நெல் தானம் செய்தது கண்டிருக்கிறது. மேலும் சங்கராமநல்லூர் ஆலயத்தில் (150 of 1909) ஒரு கல்வெட்டில் வீரசோழன் திருமடைவிளாகம் என்ற இடம் குறிக்கப்பட்டுள்ளது.

24-வது ஆண்டு:- பிரமியம் ஆலயத்தில் (204 of 1922) வீரசோழ கலிமூர்க்கப் பெருமாள் என்ற அரசனுடைய கல் வெட்டில் ஆலயத்துக்கு திருவலகு வேலைக்காக 1½ மா நிலம் தானம் செய்தது குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வரசன் அதே அரசனா என்பது சிறிது சந்தேகம்.

## 38. வீரராஜேந்திரசோழன் 1207—1252

இவ்வரசன் கொங்கு சோழர்களிலே பெரும்புகழ் பெற்றவன். எல்லாரைக்காட்டிலும் மிகச் சிறந்தவன். மிகப் பெரிய நாட்டைத் தன் வெண்கொற்றக் குடையின்கீழ் ஒன்று சேர்த்து ஆண்டவன். இவனைப்பற்றி 161-கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன என்றால் இவனுடைய ஆட்சியின் பெருமையைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? கோவை ஜில்லாமட்டுமேயன்றி திருச்சி, மதுரை ஜில்லாக்களிலும் இவனுடைய புகழ் பரந்திருந்தது. இருகொங்கும் ஆண்டவன் என்ற பட்டத்தை இவன் வகித்ததுமட்டுமல்ல, உண்மையாகவே வடகொங்கு தென்கொங்கு என்ற இரண்டு கொங்குகளையும் இவன் ஆண்டிருக்கிறான்.

இவ்வரசனுடைய காலம்:— குமரமங்கலம் கரிவரத ராஜப்பெருமாள் ஆலயத்துக்கல்வெட்டு ஒன்றில் (135/1909) கோனேரின்மைகொண்டான் வீரராஜேந்திரதேவன் 25-வது ஆண்டு சகம் 1153-என்று கண்டிருக்கிறது. இந்த ஆண்டி

விருந்து கணக்கிட்டால் இவ்வரசன் கி. பி. 1207-இல் ஆட்சிக்கு வந்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. மேலும் சங்கராமநல்லூர் சோழீசுவரமுடையார் ஆலயத்து கல்வெட்டின்படி (136/1909) இவ்வரசன் 45 ஆண்டுகள் ஆண்டதாகத் தெரிகின்றது. ஆகவே இந்த இரண்டு கல்வெட்டுகளின்படி வீரராஜேந்திரன் 1207-முதல் 1252 வரை ஆண்டு வந்தான் என அறிகின்றோம். இவனுடைய ஆட்சிதான் மிக நீண்ட ஆட்சிஎன்று கூறவேண்டும். ஆகவே இவனைப்பற்றிய செய்திகள் மிகவாகக் கிடைத்திருக்கின்றன.

இவ்வரசனுடைய ஆட்சியின் பரப்பு:—

இவ்வரசனைப்பற்றிய கல்வெட்டுக்கள் அடியிற்கண்ட இடங்களில் கிடைத்திருக்கின்றன.

| | ஊர்ப்பெயர் | ஆண்டு | எண் |
|---|---|---|---|
| 1. | அவிநாசி | 14, 29 | 9 |
| 2. | பேரூர் | 16 | 1 |
| 3. | போளுமாம்பட்டி | 27 | 2 |
| 4. | முத்தூர் | 4, 20 | 4 |
| 5. | வெள்ளிறைச்சல் | 16 | 1 |
| 6. | ஈரோடு | 29 | 1 |
| 7. | பெரியபாளையம் | 13 | 1 |
| 8. | திங்களூர் | 20, 41 | 4 |
| 9. | விஜயமங்கலம் | 3, 42 | 12 |
| 10. | கொடுவேரி | 9, 13 | 2 |
| 11. | பெருமாநல்லூர் | 4 | 1 |
| 12. | திருமுருகன்பூண்டி | 27, 40 | 13 |
| 13. | கண்ணுடிப்புத்தூர் | 18 | 3 |
| 14. | குமாரலிங்கம் | 20, 25 | 10 |
| 15. | சங்கிராமநல்லூர் | 45 | 2 |
| 16. | சோழமாதேவி | 15, 30 | 3 |

| | | | |
|---|---|---|---|
| 17. | தாராபுரம் | | 48 |
| 18. | முடச்சூர் | 13 | 1 |
| 19. | வெஞ்சமாங்கூடல் | 41 | 1 |
| 20. | கீரனூர் | 20 | 20 |
| 21. | பெரியகோட்டை | 18 | 3 |

மேற்கூறிய அட்டவணையின்படி ராஜேந்திரசோழனுடைய ஆட்சி பரவின பரப்பை அறிகின்றோம். இத்தனைப் பரப்புப் பெற்ற நாடு முழுவதும் எந்தக்கொங்கு சோழனும் ஆண்டதில்லை.

அரசனுடைய பட்டங்களும், பெயர்களும்:—

இவ்வரசனுடைய பெயர்கள் இராஜகேசரிவர்மன் திரிபுவனசக்கரவர்த்திகள், இராஜேந்திரசோழன் என்பன. மற்றும் இவனுக்கு உலகுடைய பெருமாள், கோனேரின்மை கொண்டான், இருகொங்கும் ஆண்டவன் என்ற மூன்று பட்டங்கள் உண்டு. இவனுடைய மகன் நச்சினார்க்கினியன் கண்டிய தேவன் என்ற ஒருவன் இருந்தான். இவனுடைய அரசியின் பெயர் உலகுடையபிராட்டி என்பதாகும். அவளுடைய பெயராலே உலகுடையபிராட்டி சதுர்வேதிமங்கலம் என்ற ஒரு ஊரும் கட்டப்பட்டது. அவ்வூரில் அழகர்கோயில் ஒன்றும் இருந்தது. அதற்கு இவ்வரசன் காலத்தில் ஒரு நிலம் தானம் செய்யப்பட்டது.

இவ்வரசன் காலத்தில் நிகழ்ந்த சில செய்திகள்:— இவ்வரசன் காலத்தில் அடியிற்கண்ட சிலமுக்கிய செய்திகள் நடந்தன. இவனது 27-வது ஆண்டில் முட்டம் நாகேசுவரசுவாமி ஆலயத்தில் உள்ள கல்வெட்டின்படி சில பூதானங்கள் பொறிக்கப்பட்டன. அத்தானங்கள் அதிராஜராஜன், ராஜராஜன் என்ற சேர அரசர்கள் அந்தப்பிரதேசத்தை ஆண்டகாலத்தில் அக்கோயிலுக்குத் தானம் செய்தவைகள் ஆகும். தானம் செய்த நிலங்கள் முட்டம் என்ற ஊரில் இருந்தவை. அக்காலத்தில்

முட்டத்திற்கு ரவிவர்மசதுர்வேதிமங்கலம், அமரபுஜங்கநல்லூர் என்ற சேரநாட்டுப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆகவே ஒரு காலத்தில் சேரருடைய ஆட்சி முட்டம் வரைக்கும் சென்றது என அறியவேண்டும் (154/1910). இவ்வரசனுடைய பத்தாவது ஆண்டில் பொறிக்கப்பட்ட விஜயமங்கலத்துக் கல்வெட்டு ஒன்றின்படி இடங்கை ஜாதியார் 99-பேர் கொண்ட ஒரு குழு அவன் செய்த தானத்தை ரட்சிக்கக்கடவது என்று கண்டிருக்கிறது. இடங்கை ஜாதியாரில் 99-பேர் யார் என்று அறியக்கூடவில்லை. அக்கோயிலின் பெயர் குறுப்பு நாட்டு விஜயமங்கத்தில் திருமேற்கோயில் சித்திரமேழி விண்ணகர் ஆழ்வார் என்பதாகும். குறும்புநாடு என்பது சுந்தரர் வாக்கு (546/1905). சங்கராமநல்லூர் சோழீசுவரர்கோயிலில் அரசனது 45-வது ஆண்டுக் கல்வெட்டின்படி கரவெளி நாட்டுக்குழுமத்தில் வீரசோழீசுவரமுடையார் ஆலயத்தில் கச்சிராயன் என்ற ஒருவன் நித்தநின்றுடுவார் ஆலயத்தைக் கட்டினதாகக் காண்கிறோம். வீரசோழீசுவரர் கோயிலை அரசனுடைய தகப்பன் வீரசோழன் கட்டியிருக்கக்கூடும். கச்சிராயன் என்றபெயர் சோழன் பூர்வபட்டயத்தில் வந்துள்ளது. அவன் கொங்கு நாட்டில் அநேக கோயில்களைப் புதிப்பித்தவன் (136/1909).

இவ்வரசனுடைய மற்றொரு கல்வெட்டின்படி கரை வழி நாட்டுப் பல கோயில்களுக்கு வைகாவிநாட்டு இரட்டையன் பாடி என்ற ஊர் தானம் செய்யப்பட்டது. அரசன் கரைவழி நாட்டின்மீது தண்டெடுத்தபோது பல ஊர்களும் கோயில்களும் அழிவுற்றனவாம். அந்தச் செயலில் ஏற்பட்ட பாவத்தைப் போக்குவதற்காக அரசன் அந்த கிராமத்தைத் தானம் செய்தானும் — படையெடுப்புக்களில் கோயில்களும் பாழாகின்றன என்பதை அறிகின்றோம் (143/1909). வைகாவி நாடு என்பது பழனியைச் சுற்றி உள்ள நாடு.

இவ்வரசனுடைய காலத்தில் வழங்கிவந்த நாணயங்களின் பெயர்களும் சில கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. அவைகள் ஆனையச்சு, சீயக்கி, பழஞ்சலாகை என்பன. ஆனையச்சு, உண்டியச்சு என்ற பெயர்கள் மலையாள நாட்டில் 13-வது நூற்றாண்டில் வழங்கின நாணயங்களாகும். நாணயங்கள் பேரில் யானை உருவமோ, இயக்கியன் உருவமோ பொறிக்கப்பட்டிருந்ததனால் அப்பெயர்கள் வந்தனபோலும். (93/1915)-

ஒரு யச்சுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குன்றி வட்டி வருமாம். அல்லது தானியமானால் இரண்டு தூணி, ஒரு பதக்கு கம்பு கொடுக்கவேண்டுமாம். ஆகவே வட்டிவிகிதங்களும் இக்கல்வெட்டின் உதவியால் தெரியவருகின்றன.

காலவரிசையில் அரசன் செய்த செயல்கள்:—

3-ம் ஆண்டு — விஜயமங்கலம் நாகேசுவர சுவாமி கோயிலுக்கு விளக்குத்தானம்– (180/1905). மற்றும் சோமேசுவரர் ஆலயத்திலும் ஒரு கல்வெட்டுண்டு. 4-ம் ஆண்டு – முத்தூர் சோழீசுவரர் கோயிலுக்கு ஒரு மாது விளக்குத்தானம் செய்தது. மற்றும் முத்தூர் குவாலன்வளவரில் ஒருவனான உத்தமசோழ பல்லவரையன் மகன் குலோத்துங்கச் சோழீசுவரமுடையார் கோயிலின் பெரிய நாச்சியார் முன்னிலையில் விளக்கு வைக்கப் பொன்தானம் செய்தது — (164, 165/1910).

5-ம் ஆண்டு – முத்தூர் சோழீசுவரமுடையார் கோயிலில் விளக்குவைக்க ஒரு வியாபாரி பணம் தந்தது (159/1910).

10-ம் ஆண்டு விஜயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் ஆலயத்தில் ஆராதனைகளுக்காக தானம் செய்யப்பட்டது. இக்கோயில் அக்காலத்தில் திருமேற்கோயில் சித்திரமேழி விண்ணகராழ்வார் என்று கண்டிருக்கின்றது. இடங்கை சாதிகளில் 99-பேர் என்ற குறிப்பு காணுகின்றது. மற்றும் குமரலிங்கத்தில் விசுவநாதர்கோயிலில் அதிராஜராஜன் திரு

மடைவிளாகம் என்ற இடத்தில் ஒரு மடம் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் நடுவாச்சேரியில் கோதீசுவர சுவாமி கோயிலில் சந்தியா விளக்கு எரிக்க வடக்கில் பள்ளிக்குச் சேர்ந்த ஒரு வியாபாரியின் மனைவி ஒன்றேகால் கழஞ்சு பொன் தானம் செய்தாள்—

13-ம் ஆண்டு- பெரியபாளையம் சுக்ரீவீசுவரர் கோயில். இது வீரசோழவளநாடு முகுந்தனூர் குரக்குத்தளி ஆளுடைய நாயனார் என்று கண்டிருக்கின்றது. இது சுந்தரர் பாடிய வைப்புஸ்தலம். வடபரிசார நாட்டு மன்னியூர் ஆளுடைய நாயனார் குருக்கள் அப்பன் வீரராஜேந்திர சோழ சக்ரவர்த்திக்குப்பூதானம் செய்யப்பட்டது. குருக்களும் அரசனுடைய பெயரை வைத்துக்கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. மேலும் விஜயமங்கலம் நாகேசுவரசுவாமி கோயிலில் இந்த ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும், அண்ணூர் மன்னீசுரர் கோயிலில் இரண்டு கல்வெட்டுக்களும் இருக்கின்றன. ஒன்றில் பாரசிவர் குலத்தார் ஒருவர் மன்னியூர் ஆண்டார்க்கு ஒரு சந்தியாவிளக்கு எரிக்க ஒன்றேகால் கழஞ்சு பொன் கொடுத்ததும் மல்லி கேசி என்ற ஒரு அரசி ஒரு விளக்குக்காக 1¼ கழஞ்சு பொன் கொடுத்ததும் கண்டிருக்கின்றன. பாரசிவர் என்பவர் பஞ்சமுக வாத்தியம் அடிக்கும் உரிமை உள்ளவர் என்று அறியவேண்டும். (திருவாரூர், திருத்துறைப்பூண்டி வரலாறுகளைக் காண்க). அரசனுடைய இராணி கோக்கிழான் அடிகள் என்பவளுடைய வேலைக்காரியின் பெயர் மல்லிகேசி என்று கூறப்பட்டுள்ளது.

14-ம் ஆண்டு. சேவூர் ஈசுவரன் கோயிலில் ஒரு கல்வெட்டும் விஜயமங்கலம் நாகேசுவரர் கோயிலில் மற்றொன்றும், அண்ணூர் கோயிலில் இரண்டும் இருக்கின்றன. விஜயமங்கலத்தில் சிவராத்திரியில் 90 விளக்குகள் வைக்கப்பட்டன. அண்ணூரில் ஞாயிற்றுக்கிழமை உற்சவத்திற்கு- 7½ கழஞ்சுப் பொன் அளிக்கப்பட்டன.

15-ம் ஆண்டு. அவிநாசிஈசுரர்கோயிலில் அவிநர்சிச்சீகாழி யான் என்பவன் 32 விளக்குகளும், ஏராளபுரம் வியர்பாரி ஆற்றூர் உடையான், திருப்புரம்பியமுடையான் தேசாந்திரி களுக்கு அன்னம் இடவும் உதவினூர்கள். மற்றும் சோழமா தேவிக் கல்வெட்டில் கடற்றூரில் கொங்கவிடங்க ஈசுவரர் கோயில் இருந்ததாகக் கூறுகிறது. மேலும் அண்ணூர்க் கோயிலில் வடுகப்பிள்ளையாருக்குப் பூஜை செய்ய உத்திராபதி பிராமணன் 30 கழஞ்சு பொன்கொடுத்தானும்.

16-வது ஆண்டு. பேரூர்ப்பட்டீசுரருக்குப்பாண்டியநாட்டு வியாபாரி விளக்குத்தானம் செய்தான். மற்றும் காங்கயநாட்டு வெள்ளியிறைச்சல் மாந்தீசுரமுடையார்க்குத் தானம் செய்யப் பட்டது.

17-ம் ஆண்டு. அவிநாசிஈசுரர் கோயிலில் பூஜைக்காகப் பொன் தரப்பட்டது.

18-ம் ஆண்டு. கண்ணுடிப்புத்தூர் கைலாசநாதர் கோயில் விநாயகர் பூஜைக்கு அரசனுடைய படைத்தலைவன் தானம் செய்தான். அக்காலத்துக் கோயிலின் பெயர் திரு அனந்தீசுவரமுடையார். மேலும் பெருகளந்தை ஆதிபுரீசு வரர் கோயிலில் ஐயங்கொண்ட சோழமண்டலத்து வியாபாரி ஒருவன் பொன் தானம் செய்தான்.

19-ம் ஆண்டு. குமரலிங்கம் வெங்கடேசப் பெருமாள் கோயிலில் கரைவழிநாட்டுக் கொழுமம் முத்திரட்டீசுரமுடை யார் கோயிலுக்கு அருகே இருந்த திருநீறிட்டான் திருமடத் துத் துறவி ஒருவருக்கு வைகாவிநாட்டு இரட்டையன்பாடிக் குடியானவன் நிலதானம் செய்தான்.

20-ம் ஆண்டு. முத்தூர் சோழீசுரர்க்கோயிலில் நிலதானம் செய்யப்பட்டது— சுவாமி பெயர் குலோத்துங்கச் சோழீசு வரர். திங்களூர் சந்திரமௌளீசுவரர் கோயிலில் விஜயமங் கலத்துக் குடியானவன் சந்திராபுர உடையார் கோயிலைச்

செப்பனிட்டான். விஜயமங்கலம் நாகேசுரர்கோயில் அம்மனுக்குப் பொன் அணி அளிக்கப்பட்டது. குமரலிங்கம் விசுவநாத சுவாமி கோயில்- கரைவழிநாட்டுத் திருவாளந்துறை உடையார் கோயிலுக்குச் சோழன் லிங்கேசுதேவன் பொன் தானம் செய்தான். அரசன் இரு கொங்கும் ஆண்டதாகக் கல்வெட்டு கூறுகிறது.

21-ம் ஆண்டு. அவிநாசிசுவரர் கோயில். அரசனுடைய பிள்ளைமார்களில் ஒருவன் வீரப்பெருமாள் எதிரிலாதான் க்ஷேத்திரபாலர் கோயிலுக்குப் பொன்தானம் செய்தான்- அண்ணூர் மன்னீசுரர்கோயில்- அணுக்கப்பல்லவரையன் நினைவுக்காக மகன் உத்தமபாண்டிய பல்லவரையன் 3 விளக்குகளுக்காக ஒரு கழஞ்சு 6 மஞ்சாடி பொன் கொடுத்தான். (650/1927).

மற்றொருகல்வெட்டில் முச்சந்திகளுக்காக- முச்சந்தி விளக்குகள் எரிக்கத் தானம் செய்யப்பட்டது. மேலும் கவயன் புத்தூர்க் (கோயில்பாளையம்) குடி ஒருவன் பூசையின்போது 3 விளக்குகள் எரிப்பதற்கு ஒரு கழஞ்சு, 6 மஞ்சாடி கொடுத்தான்.

22-ம் ஆண்டு. அண்ணூர் ஆமட்டம் கண்டன் தெரிந்த கைக்கோளர் சேனபதி விளக்கு எரிக்க 1¼ களஞ்சு பொன் கொடுத்தான்.

23-ம் ஆண்டு. அண்ணூர் கோயில் கைக்கோளரில் அதே குலத்தான் மற்றொரு தானம் செய்தான்.

குமாரலிங்கத்தில் அதே ஆண்டுக் கல்வெட்டில் அடிய சோழீசுரமுடையார் என்ற பெயர் கண்டிருக்கிறது.

24-ம் ஆண்டு.கோயில்பாளையம் காலகாலேசுரர் கோயில் கள்ளிமடை பெண் ஒருத்தியும் கவயன் புத்தூர் வேளாளர் ஒருவனும் தானம் செய்தார்கள்.

25-ம் ஆண்டு. குமரலிங்கம் பெருமாள் கோயில். கரைவழி நாட்டு உலகுடையபிராட்டி சதுர்வேதிமங்கலத்து நிலத்தை பாண்டி மண்டலம் கீழ் இரணியமுட்டநாட்டுத் திருமாலிருஞ்சோலை அழகர்கோயிலில் 10 ஆழ்வார்களுக்கு ஆராதனை நடத்த நிலதானம் செய்யப்பட்டது. இங்கே சொன்ன இரணிய முட்டம் பெருங்கௌசிகனூர் நாடு ஆகும். உலகுடையபிராட்டி வீரராஜேந்திரனுடைய மனைவி (139/1909).

27-ம் ஆண்டு. முட்டம் நாகேசுரர் கோயில். கோயில் திருக்கதவுகளை அதிராஜராஜன் திருமடை விளாகத்தான் ஒருவன் செய்து வைத்தான். மற்றொரு கல்வெட்டின்படி முட்டத்தின் பெயர் ரவிவர்ம சதுர்வேதிமங்கலம் என்றும் அமரபுஜங்கரநல்லூர் என்றும் கண்டிருக்கிறது. மற்றும் அண்ணூரிலும், நடுவாச்சேரியிலும் இரண்டு கல்வெட்டுகள் இருக்கின்றன (447/1927).

28-ம் ஆண்டு. அவிநாசி—சனிக்கிழமைதோறும் சுவாமிக்கும் அம்மனுக்கும் அபிஷேகம் செய்ய அரசனுடைய குமாரன் நச்சினார்க்கினியரான கண்டியதேவர் எண்ணெய்க்காகப் பொன் தானம் செய்தான். அண்ணூரில் யாத்ரீகர்களுக்கு அன்னம் இட 10 பழஞ்சலாகை அச்சு கொடுக்கப்பட்டது.

29-ம் ஆண்டு. அவிநாசி பேரூர் நாட்டு முட்டத்து வணிகச்சக்கரவர்த்தியான மருதன் முதலி நிலதானம் செய்தான். சேவூர் வாலீசுரர் கோயிலுக்குத் தானம் செய்யப்பட்டது. சோழமாதேவி கோயிலுக்கு மேற்கே ஒரு மடத்திற்கு நிலதானம் செய்யப்பட்டது.

30-வது ஆண்டு. சோழமாதேவி குலசேகரர் கோயிலில் ஒரு தானமும், அண்ணூர் மல்லீசுரர் கோயிலில் மற்றிரண்டும் விஜயமங்கலம்கோயிலில் மற்றொன்றும் செய்யப்பட்டன. அண்ணூரில் அபிஷேகத்திற்காக நான்கு ஸ்ரீயக்கிய பழஞ்சலாகை

அச்சு கொடுக்கப்பட்டது. மற்றொன்றில் திருப்பள்ளியெழுச்சிக் காகத் தானம் செய்யப்பட்டது.

35-வது ஆண்டு. திங்களூர் சந்திரமௌளீசுரர் ஆலயத்தில் ஒரு கல்வெட்டில், அண்ணூர் மன்னீசுரர் ஆலயத்துச் சில கைக்கோளர்களும் சேனுபதிகளும் கோயிலில் ஸ்தாபித்த இடங்கை நாயக மூர்த்திக்கு 24 அச்சுக்கள் தரப்பட்டன. மற்றும் திங்களூர் சந்திரமௌளீசுரர் ஆலயத்திற்கும் தானம் செய்யப்பட்டது.

37-ம் ஆண்டு. நடுவாச்சேரி கோதேசுரர் கோயிலில் ஒரு வியாபாரி 3 அச்சுகள் கொடுக்க கோயிலில் ஆராதனை நடத்துவதற்காக 3 சிவ பிராமணர்கள் ஒப்பந்தம் செய்து கொடுத்தார்கள். சுவாமியின் பெயர் கோதை பிராட்டீசுரமுடையார் என்றும் அக்காலத்து நெல் அளவைக் கருப் பரகேசரி என்று பெயர் இருந்ததாகவும் அறிகிறோம்.

38-ஆண்டு விஜயமங்கலம் நாகேசுவர சுவாமி கோயிலில் ஒரு விளக்கு தானம் செய்யப்பட்டது.

40-ம் ஆண்டு திருமுருகன் பூண்டி முருகநாதர் கோயிலில் ஒரு விளக்குத் தானம். நடுவாச்சேரி கோதேசுவரர் கோயிலில் கோதை பிராட்டீசுவரமுடையார் சிவபிராமணர்கள் 17 ஆனை அச்சு பெற்றுக்கொண்டு ஆராதனம் செய்வதாக ஒப்பந்தம். கோதை பிராட்டீசுவரம் வடபரிசார நாட்டில் வடக்கே பள்ளியில் இருக்கும் ஒரு கோயில்.

41-ம் ஆண்டு. திங்களூர் சந்திரமௌளீசுவரர் கோயிலில் ஒரு விளக்கு தானமும், நான்கு வரிசைக் கல் தூண்களும் கொடுக்கப்பட்டன. மற்றும் விஜய மங்கலத்தில் இருமுறை விளக்கு தானங்கள் செய்யப்பட்டன.

42-ம் ஆண்டு. விஜயமங்கலத்தில் நாகேசுர சுவாமி கோயிலுக்கு ஒரு விளக்கு தானம் செய்யப்பட்டது.

45-ம் ஆண்டு. சோழீசுவரமுடையார் கோயிலில் ஒரு க்கச்சியராயன் கட்டிய நித்தனின்ருடுவார் ஆலயத்திற்கு ஆராதனை செய்ய நிலதானம் செய்யப்பட்டது.

மேலே கூறிய செய்திகளை ஆராய்ந்தால் வீரராஜேந்திரனுடைய திருப்பணிகள் எல்லாம் நொய்யலாற்றுப்பள்ளத்தாக்கில் முட்டத்திலிருந்து கிழக்கே விஜயமங்கலம் வரைக்கும் படர்ந்திருப்பதும் ஆம்ராவதி பள்ளத்தாக்கில் அவ்வாற்ருேர ஊர்களிளெல்லாம் படர்ந்திருப்பதும் அறியலாம்.

## 39. விக்கிரம சோழன் II. (1255—1263)

இவ்வரசன் வீரராஜேந்திரனுடைய மகனுக இருக்கக் கூடும். ஏனெனில் இவன் பரகேசரி என்ற பட்டம் பெற்றும் 1255-ல் வீரராஜேந்திரன் இறந்த உடன்பத்தில் அரசாளத் தொடங்கினதுமே சான்ருக இருக்கின்றன. இவ்வரசனைப்பற்றி 26 கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. அவைகளில் ஒரு கல்வெட்டு மட்டும் (586/22) பரகேசரி வர்மன் திரிபுவன சக்கரவர்த்திகள் விக்கிரம தேவன் என்று கூறுகின்றது. மற்றக் கல்வெட்டுகள் எல்லாம் இவனுடையதோ அல்லது இவனுடைய பேரனை 3வது விக்கிரமனுடையதோ கூற இயலாது. ஆகவே பொதுவாக மேலே சொன்ன தொகையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**அரசியல் காலம்:-** இவனுடைய ஆட்சித் தொடக்கம் கி. பி. 1255. அதனை விஜய மங்கலத்துக் கரியமாணிக்கப் பெருமாள் கோயில் கல்வெட்டு ஒன்று (555/1905) நிரூபிக்கிறது. அக்கல்வெட்டு விக்கிரம சோழனுடைய இரண்டாவது ஆண்டு ஆண் சகம் 1179-ல் பொறிக்கப்பட்டது. அதற்குச்சரியானது கி. பி. 1257 ஆகும். ஆகவே இவன் 1255-ல் பட்டத்திற்கு வந்திருக்க வேண்டும். இவனுடைய இறுதிக்கல்வெட்டு 7-வது ஆண்டு என்று அதே ஊர் நாகேசுவரசுவாமி கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. (578/1905). அதில் 7-வது ஆண்டுக்குச்

சமானமாக சகம் 1185 குறிக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சமமானது கி. பி. 1263 ஆகும். ஆகவே இவ்வரசன் 1255 முதல் 1263 வரை ஆண்டான் என்று அறியலாம். இவனுடைய தகப்பனுன புகழ்பெற்ற வீரராஜேந்திரன் 45 ஆண்டுகள் வரை நீண்டகாலம் ஆண்டு வந்ததினுல் அவனுடைய மகன் குறுகிய காலம்தான் ஆட்சி புரிந்தது இயற்கை அல்லவா? மற்ருெரு சிறு குறிப்பு இங்கே கூறவேண்டும். நாகேசுவரசுவாமி கோயிலில் மற்ருெரு கல்வெட்டு (571/1905) விக்கிரம சோழன் 13-வது ஆண்டைப்பற்றிக் குறிக்கின்றது. இக்கல்வெட்டு இவ்வரசனுடையதாகுல் இவ்வரசனும் கி. பி. 1268 ஆண்டு வரை ஆட்சி செய்திருக்கக்கூடும். அக்கல்வெட்டு இவனுடைய பேரனுடையதாக இருக்கலாம்.

ஆட்சியின் பரப்பு:- மிகக்கீர்த்தி வாய்ந்த அரசன் வீரராஜேந்திரனுக்குப்பிறகுவிக்கிரமன் II அரசாளத் தொடங்கியதினுல் அவனுடையஆட்சியின்பரப்பும்முந்தியவனைப்போலவே மிகப்பெரிதாக இருந்திருக்கும். விஜயமங்கலத்திலும், இடிகரையிலும் அண்ணூரிலும் உள்ளகல்வெட்டுகள் இவனுடையதே. விக்கிரமன் என்ற பெயராலே மொத்தம் 72 கல்வெட்டுகள் காணப்படுவதால் நிச்சயமாக இவையிவை இன்னின்ன அரசர் காலத்தில் பொறிக்கப்பட்டன என்று கூறுவதற்கில்லையென்று முன்னமே சொல்லப்பட்டதல்லவா ?

இவ்வரசன் காலத்துச் செய்திகள்:- இவ்வரசனைப்பற்றியுள்ள இடிகரைக் கல்வெட்டுகள் எல்லாம் இவனது 3-வது ஆண்டில் பொறிக்கப்பட்டுள்ளன. ஒருவேளை அந்த ஆண்டில் தான் இடிகரைக் கோயில் புதுப்பிக்கப்பட்டது போலும். அக்கல்வெட்டுகளின்படி இடிகரை ஆலயத்திற்கு அளித்த தானங்கள் எல்லாம் ஒரு ஆளே பெற்றிருக்கின்ருன். அவன் பெயர் காசிபகோத்திரத்துத் திருநாட்டான் அகத்தீசுவரமுடையான் ஆன சித்திரமேழி பட்டன். இதே மனிதன் பெயரைக்குறித்து

1. வீரராஜேந்திரன் (604/22)
2. வீரபாண்டியதேவன் (5 & 32/23)
3. சுந்தரபாண்டியன் (16, 21, 26, 27/23)
4. விக்கிரம பாண்டியன் (25/23)
5. ஹொய்சள, வீரவல்ளாளன் (6, 8, 31/23)

என்ற மன்னர்களுடைய கல்வெட்டுக்களில் கூறியிருக்கக்காண்கிறோம். இதில் கூறியிருக்கிற வீரவல்ளாளன் 2-வதுவனோ, 3-வதுவனோ தெரியவில்லை. தானம் பெற்ற பட்டன் ஒருவனோ இருவர்களோ என்றும் சொல்லமுடியாது. ஒருவனாயிருக்கும் பக்ஷத்தில் வெகுநீண்ட ஆயுள் உள்ளவனாக இருக்கவேண்டும். அது சாத்தியமில்லை. 78 அல்லது 98 ஆண்டுகள் ஒருவன் புகழ் பெற்று இருக்கமுடியுமா? ஆகவே ஒரே பேர்கொண்ட இருவர் ஒரு குடும்பத்தில் இருந்திருக்க முடியும்.

அண்ணூர்க் கல்வெட்டில் (586/1922) அரசனின் முதலிகளில் ஒருவனாக முனைதரையன் என்ற ஒருவன் பெயர் கூறப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டில் (616/1922) துளு நாயகர் முதலிஎனவும் (617/1922) துளு முதலி என்ற பெயரும் வருகின்றன.

துளுநாட்டிலிருந்து குடிவந்த ஒரு படையாக அது இருக்கக்கூடுமோ என்பது ஒரு கேள்வி. கொங்கு நாட்டில்தற்போதும் துளுவவேளாளர் என்ற ஒருவகுப்பு இருக்கின்றதல்லவா?

## 40. ஒரு ராஜகேசரி (1263—1273)

இரண்டாவது விக்கிரமன் 1263-ல் பட்டம் துறந்தான். 3-வது விக்கிரமன் 1273-ல் பட்டத்திற்கு வந்தான். இவர்கள் இருவரும் பரகேசரிகள். ஆகவே இவர்களுக்கு இடையிலே ஒரு ராஜகேசரி இருந்திருக்க வேண்டும். அவன் 1263-முதல் 1273-வரை ஆண்டிருக்க வேண்டும். அவனுடைய பெயரும் தெரியவில்லை. அவனைப்பற்றியகல்வெட்டுக்களும் கிடையாது. ஆகவே அவன் சுருங்கிய காலத்தில் குறிக்கத்தக்க யாதொரு செயலும்

செய்யாமல் மறைந்திருக்க வேண்டும். அவன் காலத்திலே கொங்கு சோழர்களுடைய ஆட்சி மிகவும் குறைந்திருக்கவேண்டும். தெற்கே பாண்டிய நாட்டிலிருந்து பாண்டியர்கள் நாட்டைக் கவர்ந்துகொண்டார்கள். வீரபாண்டியன் கொங்குநாட்டின் பெரும்பகுதியைப் பிடித்துக் கொண்டான். வடக்கேயிருந்து வந்த ஹொய்சளர்கள் கொங்கு நாட்டின் வடபகுதியைப் பிடித்துக் கொண்டார்கள். ஆகவே இந்த ராஜகேசரி பெயருக்கு மாத்திரம் அரசனாக இருந்திருக்கவேண்டும்.

## விக்கிரமன் III (1273—1303)

3-வது விக்கிரமன் 1273-ல் பட்டத்திற்குவந்தான். இவன் தான் கொங்கு சோழரில் கடைசி மன்னன். இவனைப் பற்றி ஒன்றிரண்டு கல்வெட்டுக்கள் தான் கிடைத்திருக்கின்றன.

காலம்:—இவன் 1273-ல் பட்டத்திற்கு வந்தான். இதனைச் சங்கிராமநல்லூர்க் கல்வெட்டு நிரூபிக்கிறது. இவனுடைய ஆண்டுகள் 27ம் 30ம் காண்கின்றோம். ஆகவே இவன் 1303—வரை ஆண்டிருக்கலாம்.

ஆட்சிப் பரப்பு:- முன்னர் கூறியபடி கொங்கு சோழவம்சம் குறுகிவிட்டது. தெற்கே பாண்டியரும் வடக்கே ஹொய்சளரும் கொங்கு நாட்டைப் பகிர்ந்துகொள்ள இவ்வரசன் காலத்தில் ஆம்ராவதிக்கரையில் ஒரு சிறு பகுதிதான் இவன் ஆட்சியில் இருந்திருக்க வேண்டும். அப்படியிருந்தும் இவன் பரகேசரிவர்மன் திரிபுவன சக்ரவர்த்தி என்ற பட்டத்தை விடவில்லை. இவனுடைய 13—வது ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் (196/1920) இவனுக்குப் பரகேசரி திருச்சிற்றம்பலம் உடையான் என்ற ஒரு பட்டம் கூறப்பட்டுள்ளது. இந்த அரசனோடு கொங்கு சோழவம்சம் முடிவடைந்தது.

## 41. சில பட்டப் பெயர்கள்.

தென்னாட்டு மன்னர்களான சோழர்கள், பாண்டியர்கள், போலவே கொங்கு சோழர்களும் பல பட்டங்களையும், விருது

களையும் வைத்துக்கொண்டிருந்தார்கள். அவ்விருதுக்களிலே இரண்டு சிறந்த பெயர்களைக் காண்கிறோம். அவைகள் 1. கரிகாற்சோழன், 2. கோனேரின்மைகொண்டான் என்பன. இவ்விரண்டு பெயர்களும் வெறும் பட்டங்களாயிருந்தபோதிலும் அப்பெயர்களை மட்டும் கொண்ட கல்வெட்டுகள் பல இருக்கின்றன. அவைகள் எந்தஅரசனைப்பற்றிக்குறிக்கின்றன என்று கூற இயலாமையால் அப்பட்டப் பெயர்களைக்கொண்ட கல்வெட்டுக்களில் கிடைக்கும் அரிய செய்திகளை மட்டும் தனியாக இந்தப் பகுதியில் கூறுவோம்.

1. **கரிகாற் சோழன்:-** இப்பெயர் மட்டும் கொண்ட கல்வெட்டுக்கள் 9 கிடைத்திருக்கின்றன. அவைகள் 2-முதல், 12-வரை ஆட்சி ஆண்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் சக வருஷம்குறிக்கப்படவில்லை. அந்தக் காரணத்தால் ஆட்சிக்காலமும் அறிய முடியவில்லை. இப்பெயர்கொண்ட கல்வெட்டுக்கள் பேரூரில் 6-ம், சாமளாபுரத்தில் ஒன்றும், குமரலிங்கத்தில் இரண்டும் இருக்கின்றன. பேரூர்ப்புராணத்தில் கரிகாற்சோழன் வழிபட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அவன் பெயரால் நொய்யலாற்றங்கரையில் கரிகாற் சோழன் துறை என்ற ஒரு படிக்கட்டுத்துறை இன்றைக்குமிருக்கின்றது. சோழன் பூர்வ பட்டயம் என்ற நூலின்படி கரிகாற் சோழன் பேரூர் பட்டீசுவரர் ஆலயத்தைக்கட்டுவித்தான். கொங்குநாட்டில் 36 பெருங் கோயில்களை இவனே கட்டுவித்தான். மேலும் வெள்ளலூரில் ராஜராஜ தேவன் கல்வெட்டும் (144/1910) முட்டம் நாகேசுவரர் கோயிலில் அவனது இரண்டு கல்வெட்டுகளும் (151, 152/1910) இருக்கின்றன. இவைகளில் கண்ட ராஜராஜன் கரிகாற் சோழனாக இருக்கலாம்.

2. **கோனேரின்மை கொண்டான்:-** இந்தப் பெயர் கொண்ட கல்வெட்டுக்கள் கோவை வட்டம் முழுவதுமுண்டு. அடியிற்கண்ட 55 இடங்களில் அகப்பட்டிருக்கின்றன. ஆனால்

தேதிகள் இல்லை. அவையாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1. அவிநாசி | 4 | 10. திங்களூர் | 1 |
| 2. கரவலூர் | 1 | 11. எலந்தூர் | 1 |
| 3. குன்னத்தூர் | 3 | 12. பாரியூர் | 3 |
| 4. பேரூர் | 3 | 13. பெரியபாளையம் | 2 |
| 5. கொழிஞ்சிவாடி | 2 | 14. குமரலிங்கம் | 8 |
| 6. முத்தூர் | 1 | 15. சங்கராமநல்லூர் | 6 |
| 7. ஈரோடு | 1 | 16. சோழமாதேவி | 1 |
| 8. குடிமங்கலம் | 1 | 17. திருமுருகன் பூண்டி | 9 |
| 9. பெரியபாளையம் | 2 | 18. அண்ணூர் | |

பல அரசர்கள் கோனேரின்மைகொண்டான் என்ற பட்டம் வகித்திருப்பதினால் இந்த அரசன் எவன் என்று நிச்சயமாய் கூற இயலாது. இப்பட்டப்பெயரை இராஜகேசரியும்,பரகேசரியும் வகித்திருக்கிறார்கள்.

**சில செய்திகள்:-** 1. இவ்வரசனின் 15-வது ஆண்டில் கம்மாளர்களுக்கு சில உரிமைகள் தரப்பட்டன. அவைகள் கொங்கு நாட்டில் ஐந்துகோயில்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அக்கோயில்கள் ஆவன:— பேரூர், கரூர், பாரியூர், மொடக்கூர், குடிமங்கலம் என்பன. இவைகளில் தென் கொங்குநாடு, வெங்கால நாடு, காஞ்சிக்கோவில் நாடு, தலையூர்நாடு முதலிய 7 நாடுகளில் வாழும் கம்மாளர்களுக்கு அவ்வுரிமைகள் அளிக்கப்பட்டன. அவ்வுரிமைகளாவன:— நன்மை, தின்மைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதுதல், பேரிகை அடித்தல். போகும்போது பாதரக்ஷை அணிதல், வீட்டுக்குச் சாந்து பூசுதல், இரட்டை நிலை எடுத்தல் முதலியன.

இவ்வரசன் காலத்துக் கல்வெட்டுக்களினால்தான் கோயமுத்தூர் என்ற ஊரின் பெயர்க் காரணமும் காண்கிறோம்.

அதன் பண்டைப் பெயர் கோவன்புத்தூர் என்ற வீரகேரள நல்லூர் என்று குறிக்கப்பட்டுள்ளது. மற்ரெரு கல்வெட்டி ஞல் இராஜ துரோகிகள் எவ்வாறு தண்டிக்கப்பட்டார்கள் என்று அறிகிறேம். வேரெரு கல்வெட்டு கோயில்கள் எவ் வாறு பரிபாலிக்கப்பட்டன என்று தெரிவிக்கின்றது. கோயில் பரிபாலனத்திற்கும் அரசனுக்கும் என்ன தொடர்பு இருந்த தென்று தெளிவாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

## 42. கொங்குசோழர் காலத்து நாட்டு நிலைமை.

கொங்கு சோழர்கள் கொங்குநாட்டை ஏறத்தாழ மூன்று நூற்ருண்டுகள்வரை ஆண்டார்கள். அந்தக்காலத்தில் தான் கொங்குநாடு ஒற்றுமைப்பட்டு செழித்திருந்தது. அதற்குமுன் அநேக நூற்ருண்டுகள் பிறநாட்டு மன்னர்களின் ஆதிக்கத்தில் வருந்திக்கொண்டிருந்தது. சங்ககாலத்தில் வேளிர்களின் ஆட்சியில் தன்னரசு பெற்று விளங்கிய கொங்கு நாடு மீண்டும் ஆயிரம் (1000) கி. பி. யில் தன்னரசு பெற்று விளங்கிற்று. கொங்கு சோழர்கள் கொங்குநாட்டுச் சுய மன்னர்களாகவே விளங்கினர்கள். அவர்களுடைய அரச பரம்பரையும் கொங்கு நாட்டுப்பரம்பரையே ஆகிவிட்டது. சோழர் என்ற பெயர்மட்டும் சோழநாட்டு வாசனை தோற்று விக்கிறதே யன்றி உண்மையில் அவர்கள் கொங்கு மன்னர்கள் ஆகிவிட்டார்கள். ஒரு எடுத்துக்காட்டால் விளக்குவோம். இங்கிலாந்திற்கு வந்த முதல் ஜார்ஜ் மன்னன் ஜெர்மானிய ஹனேவர் அரசன். இங்கிலாந்து அரசனுன பிறகு அவன் மகன், பேரன் முதலியோர்கள் ஆங்கிலரே ஆகிவிட்டார்கள். அது போலவே கொங்கு நாட்டிற்கு முதல் அரசனுகத்தோன் றிய கொங்குசோழன் முதலாம் விக்கிரமன். ஒருவேளை சோழ நாட்டு இளவரசனுக இருந்திருக்கலாம். அதனுலேதான் சோழன் என்ற பெயரை வைத்துக்கொண்டு மிருக்கலாம். ஆனுல் அவன் வம்சத்தில் தோன்றியவர்கள் எல்லாரும் கொங்

களாகவே ஆகிவிட்டார்கள். கொங்குநாடு தனி நாடாகவும், தன்னுரிமை பெற்ற நாடாகவும் விளங்கிற்று.

**அக்காலத்து நாட்டுப் பிரிவுகள்:—**

கொங்கு நாடு வடகொங்கு, தென் கொங்கு என்ற இரண்டு பிரிவுகளாக முதலில் இருந்தது. அவ்விரண்டையும் இணைத்து ஒன்றாக்கியது கொங்கு சோழர் ஆட்சிதான். அவ்விதம் ஒற்றுமையாக்கிவிட்ட செய்தி புகழத்தக்க செய்தியென்று அக்காலத்து மக்கள் நினைத்தார்கள். அவ்வித எண்ணத்திற்குக் காரணம் அச்செய்தியின் பெருமையேயாகும். ஒரு அரசன் இருகொங்கும் ஆண்டவன் என்ற பட்டம் எப்பொழுது வைத்துக்கொண்டானே அச்செய்தி ஒரு புகழ் பெற்ற செய்தியென்று எண்ணவேண்டாமா? அப்படிப் பட்ட பட்டத்தை வகித்துக்கொண்டவர்கள் வீர சோழனும் அவன் மகன் வீர ராஜேந்திரனும் ஆவார்கள். (1183–1252)

மேலே கூறிய இரண்டு பெரும் பிரிவுகளேயன்றிக் கொங்குமண்டலம் 24-நாடுகளைக்கொண்டதென்று முன்னமே கூறினோம். அவ்விதம் ஏற்பட்ட 24-நாடுகளின் பெயர்களும் கொங்குசோழர் காலத்துக் கல்வெட்டுகளில் காணலாம். அவைகளில் வைகாவி நாடு, பொங்களூர்க்கா நாடு, காவடிக்கா நாடு, வாயிரக்கா நாடு, கரைவழி நாடு, கீட்பா நாடு, காங்கேயநாடு, குருப்பு நாடு, நல்லூர்க்கா நாடு, கீழ்க்கரை நாடு, ஓடுவங்க நாடு, நரையனூர் நாடு, பூந்துறை நாடு, காஞ்சிகூவல் நாடு முதலியவை வந்திருக்கின்றன. மேலும் மற்ற நாடுகளைக்காட்டிலும் கரைவழி நாடு, வடபரிசார நாடு என்ற இரண்டும் அதிகமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. கரைவழி நாடு ஆம்ராவதி என்று இப்போது வழங்குகிற ஆன்பொருனை ஆற்றின் இருபுறங்களிலுமுள்ள நாடு. இந்நாட்டில் கொங்கு மன்னர்களுடைய ஆட்சி விளங்கியிருந்தது. ஏனெனில் இங்கே இருந்த ஊர்களின் பேர்களும், ஆலயங்களின் பேர்களும் நிரம்பக்காண்கின்றோம். பல ஆலயங்கள் கொங்கு சோழர்

களாலே கட்டப்பட்டவைகள். ஆற்றங்கரைமேலே இருந்த திருவாளன்துறை,கொழுமம்,குமரலிங்கம்,கண்ணடிப்புத்தூர், கல்லாபுரம், அகரப்புத்தூர், சோழமாதேவி நல்லூர், கடற்றார் முதலிய ஊர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. கொங்கு சோழர் ஊர்களைக் கட்டினசெய்தி விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலம், வீரசோழீசுவரமுடையார், விக்கிரம சோழநல்லூர், ராஜராஜீசுவரமுடையார், முதலிய பெயர்களால் விளங்குகின்றது.

மற்றொரு பிரசித்திபெற்ற நாடு வடபரிசார நாடு என்பது. இதில் அண்ணூர், திருமுருகன்பூண்டி, கவயன்புத்தூர், (கோவில்பாளையம்), இடிகரை, கல்லைமடை, சேவூர், கங்கைப்பள்ளி, வெள்ளைப்பாடி, கொற்றமங்கலம், கருவலூர், முதுகரை, கஞ்சப்பள்ளி, நம்பிபேரூர், தென்கரை கொடுவேலி, தென்கரை நியமம், முதலிய பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த நாடு நொய்யலாற்றிற்கு வடக்கே வாணிக்கரைமட்டும் எட்டிற்று என்று அறியவேண்டும்.

இனி மூன்றாவதாக படிநாடு என்ற ஒரு பிரிவு மிக வாகக் கூறப்பட்டுள்ளது. படிநாடு என்பது கொள்ளேகாலம் தாலூகாவில் காவேரிக்கு இருபுறமுள்ள நாடு. அது கங்கர் காலத்தில் புகழ்பெற்றிருந்தது. பிறகு அவர்கள் தலைநகர் ஆன தலைக்காடு பிடிபடவே படிநாடு என்ற அப்பகுதி கொங்கு நாட்டுக்குச் சேர்ந்து விட்டது. அதிலிருந்த சிறந்த ஊர்கள் முடிகொண்ட சோழபுரம், (முடிகொண்டம்), தலைக்காடு (ராஜராஜபுரம்) கொள்ளகரம் (திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலம்-கொள்ளேகாலம்) முதலிய ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளன:—

குடிவகைகள்

அந்தக்காலத்தில் கொங்குநாட்டு மக்கள் பல வகுப்புக் களாகப் பிரிந்திருந்தார்கள். பெரும் வகுப்புக்களில் வேளா

ளர், பூலுவர், முதலிய பெயர்களைக் காண்கிறோம். இப்பிரிவு களில் பலவகைக் குடிப்பெயர்களும் இருந்திருக்கின்றன. வேளாளர்களில் புல்லி (622/1922), மலையர் (642/1922), மாடை (641/1922), பையர் (7, 11, 15, 23/22), கருந் தோழி (14/23), சேவாயர் (33/23), கொற்றந்தை (647/22), சேட்டார் (27/23), என்ற குடிப்பெயர்களும், பூலுவரில் மயிலார் (654/22), முட்டை (650/22), ஊர வர் (611/22), முதலிய குடிப்பெயர்களும் காண்கிறோம். இந்த நாளிலும் பையர், கொற்றந்தை முதலிய குடிப்பெயர் கள் வழக்கத்திலிருக்கின்றன. வேட்கோவர் என்ற பெயர் (திருத்தொண்டர் புராணம்–நீலகண்டக் குயவனூர்) 640/1922 -ல் வந்திருக்கின்றது. இந்த பெயர்கள் கொண்ட கல்வெட்டுக் கள் அண்ணூர், கோவில்பாளையம், இடிகரை முதலிய கோயில் களில் இருக்கின்றன.

**அரசனும் அவனது அரசியலும்**

கொங்கு நாட்டை ஆண்டுவந்த அரசவம்சத்தைக் கொங்கு சோழர் என்று சௌகரியார்த்தமாக வரலாற்று நூலாசிரி யர்கள் குறித்தார்கள். அந்த வகைப் பெயர் கல்வெட்டுகளி லாவது, நூல்களிலாவது ஆளப்படவில்லை. கொங்குவம்சம் பரம்பரை முறையில் கொடிவழியாக வந்திருக்கின்றது. அரசன் அமைச்சர்கள் உதவிபுரிய நாட்டை ஆண்டு வந்தான். அரசனுக்குக் கீழ் அமைச்சர்களேயன்றிப் பல அலுவலாளர் களும் குறுநில மன்னர்களும் இருந்தார்கள். இராஜாதிராஜ உத்தமன் காலத்தில் அபிமானன் என்ற உரிமையாளன் சாமந்தனாக இருந்தான். கேரள கேசரி அமரபயங்கரன் கோட்புலியார் என்ற ஒருவன் அரசனுடைய அலுவலில் இருந்தான். குற்றங்களை விசாரித்துத் தண்டிப்பதற்காக அரசன் சில அலுவலாளர்களையும் நியமித்தது உண்டு. அவ் வாறு நியமிக்கப்பட்ட அலுவலாளன் குற்றத்தை விசாரித்துத் தண்டனை புரிந்திருக்கின்றான். சோழமாதேவிநல்லூரில்

காடவராயன் என்ற ஒருவன் துரோகம் செய்ததினுல் அவனுக்கிருந்த "மன்ருடு" என்ற உரிமை நீக்கப்பட்டது (232/1910). அரசன் பலவித வரிகளை விதித்து அவைகளைப் பெற்று அரசாட்சிபுரிந்து வந்தான். இந்த முறைகள் விவரமாகக் கல்வெட்டுக்களால் அறிகின்ருேம்.

## இறை முறைகள்

அரசியல் நடத்துவதற்குப் பலவகை இறைகள் அல்லது வரிகள் விதிக்கப்பட்டன. அவைகளை ஒவ்வொரு ஊராரும் தரும் பொருட்டு ஊர்த்தலைவன் ஊர்ச்சபை மூலமாக நிச்சயம் செய்து அவைகளை வசூலித்து அரசனுக்கு அனுப்பிவைப்பான். இந்த முறைக்கு இறை புரவு என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அடியிற்கண்ட இறை வகைகள் பெறப்பட்டன, சிற்ருயம், இலவை, ஓகவை, மன்றுப்பாடு, தண்ட குற்றம், வேண்டுகோள், எடுத்திறை, சுமைசுங்கம், சாரிகை, என்பன (99-B/22).

இப்பெயர்களே எவை யெவைகளுக்கு வரிகள் விதிக்கப்பட்டன என்பதை விளக்குகின்றன. இவைகளிலே ஆயம், இலவை, ஓகவை, மன்றுப்பாடு, முதலிய வரிகள் கள்ளழகர் அம்மானை என்ற நாட்டுப்பாடலிலும் கூறப்பட்டுள்ளன மேற்சொன்ன வரிகளில் சில வேறுநாடுகளில் உள்ள கல்வெட்டுக்களில் காணப்படுவதில்லை. கொங்குநாட்டிற்கே சிறப்பாக உள்ளன போலும். இவையே யன்றித் தமிழ்நாட்டில் பொதுவாகவுள்ள தறிவரி, குயவரி, மீன்பாட்டம், நிலவரி முதலிய வரிகள் கொங்கு நாட்டிலும் இருந்தன. இவ்வரிகளை அரசன் வசூலித்து நாட்டின் பரிபாலனத்தை நடத்திவந்தான்.

## படைகள்

அரசன் தன் நாட்டைப் பாதுகாக்கவேண்டிப் படைகளைத் திரட்டி வைத்திருந்தான். அப்படைகளும் வேண்டியபோது திரட்டிக்கொண்டிருக்கலாம் அல்லது நிரந்தரமாகவே வைத்

திருக்கலாம். கொங்குச் சோழர்கள் நிரந்தரமாகவே படைகளை வைத்திருந்தார்கள் என்பதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கின்றன. ஏனெனில் சில படைகளுக்குத் தனிப்பெயர்களும் வைத்திருந்ததாகத் தெரிகின்றது—

அண்ணூர்க் கல்வெட்டில் அம்மட்டம் கண்டம் தெரிந்த கைக்கோளர், மூத்த சமக்கட்டு, இளைய சமக்கட்டு, வீரராஜேந்திரன் தெரிந்த கைக்கோளர் முதலிய பெயர்கள் வருகின்றன. (590, 614,615/1922)–(610/1922).

இப்பெயர்களை ஆராய்ந்து பார்த்தால் தஞ்சாவூர் முதல் ராஜராஜனுடைய கல்வெட்டுக்களில் கண்ட வேளைக்காரர் என்ற பெயரால் வைத்திருந்த படைகளை நினைவுபடுத்தும். அரசன் இவ்வித படைகளை வைத்துக்கொண்டு குற்றஞ் செய்தோர்களைத் தண்டனை செய்யவும், பிறநாடுகளைக் கவரவும் அவைகளை உபயோகித்தான். இவ்வாறு பிறநாடுகளின்மீது தண்டெடுத்துச் செல்லும்போது நாடுகள் அழிவதோடு ஆலயங்களும் அழிக்கப்பட்டனவாம். அவ்வாறு அழிவுறுவது அரசனுக்குத் தெரியாமலே நடைபெற்றிருக்கவேண்டும். ஏனெனில் கரைவழிநாட்டில் ஒரு முறை நடந்த படையெடுப்பில் பல ஆலயங்கள் அழிக்கப்பட்டனவாம். (143/1909). அப்போது அதையறிந்த அரசன் அந்தப்பாவத்தைப் போக்கிக்கொள்வதற்காக ஒரு கிராமத்தைத் தானம் செய்து அதன் வருவாயைக்கொண்டு கோயில்களைத் திருப்பணி செய்யும்படி கட்டளையிட்டானும். ஆகவே அந்நாளில் அரசன் படைகளை வைத்துக்கொண்டும், படையெடுப்புக்களை நடத்திக்கொண்டும் நாட்டைக் காத்து வந்தான் என்று காணக்கிடக்கின்றது.

நாணயங்கள்.

கொங்கு நாட்டில் நாணயங்கள் பண்டைக்கால முதல் கொண்டே வழங்கி வந்திருக்கின்றன. உரோமானிய காலத்தில் உரோமானிய நாணயங்கள் இந்நாட்டில் வழங்கி வந்ததைப்

பற்றி முன்னமே கூறியிருக்கின்றோம். கொங்கு சோழர் காலத்தில் பலவகை நாணயங்கள் நாட்டில் வழங்கின. அவைகளில் சிறப்பாக வராகன், அச்சு, கழஞ்சு, என்பவைகளைக் காண்கின்றோம். இவைகள் பொன் முதலிய உலோகங்களால் ஆக்கப்பட்டன. அவைகளில் சில உருவங்கள் பொறிக்கப் படுவது வழக்கம். யானை, காட்டுப்பன்றி, இயக்கி முதலிய வைகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டன. அவைகள் உருவத் தைப் பொருத்துப் பெயரும்பெற்றன.

அவைகள் ஆனையச்சு, வராகன், சீயக்கி முதலிய பெயர் களால் முறையே வழங்கின. சீயக்கி என்பது ஸ்ரீ யக்ஷி என்பதனுடைய மருவு. வராகன் என்பது வராகன் பணம், வராகன் புள்ளிக்குளிகை என்றபெயர்களாலும் வழங்கும். கழஞ்சும், அச்சும் சமமதிப்புள்ளவை. வராகன் எட்டுகொண் டது ஒருகழஞ்சு ஆகும். ஒருநுந்தா விளக்கு எரிக்க 10வராகன் பிடித்ததென்று ஒருகல்வெட்டுகூறுகிறது. (5/1923).மற்றொரு கல்வெட்டு 10½ பணம் பிடித்ததென்றுகூறுகிறது (583/1922). மேலும் வேறொரு கல்வெட்டில் ஒரு சந்திவிளக்குக்கு 1¼ கழஞ்சு என்றும் 2 விளக்குகளுக்கு 2½ அச்சு என்றும் கூறு கின்றது (581/1922). இதைக்கொண்டு கழஞ்சும் அச்சும் சமம் என்று கூறலாம். மற்றொரு கல்வெட்டில் ஒரு விளக்கு எரிக்க ஒரு பழஞ்சலாகை அச்சு பிடித்தது என்று காண்கின் றோம் (655/1922). ஆகவே அக்காலத்தில் பண்ட மாற்றுதல் முறைபோய் நாணய முறை வந்துவிட்டது என அறியவேண் டும். நாணயங்களின் மதிப்பும் செலாவணி முறையும் எளிதில் அறியலாம்.

வாணிபம் :—

கொங்கு நாட்டில் சங்கத்தார் காலம் முதல் வாணிபம் நன்கு நடைபெற்றது. கொங்கு சோழர் காலத்திலும் வாணி பத்திற்குக் குறைவில்லை. உள் நாட்டு வாணிபமேயன்றி வெளி நாட்டிலும் கடற்கு அப்பாலும் வாணிபம் நடைபெற்றது.

வர்த்தகர்கள் சங்கங்கள் கூடி தங்கள் தொழிலுக்கு வேண்டிய முறைகளை ஆராய்ந்து அதன்படி ஒழுகினார்கள். அய்ய பொழில் என்பது அப்படிப்பட்ட சங்கங்களில் ஒன்று. அப் பெயர்கொண்ட சங்கம் அக்காலத்தில் நடைபெற்றதாக ஒரு கல்வெட்டுகூறுகிறது (121/1916). அந்தச் சங்கத்தில் 500 அங் கத்தினர்கள் சேர்ந்திருந்ததாகத் தெரிகிறது. ஆகவே அக்காலத் தில் வியாபார முறை சிறந்து இருந்ததென்று அறிகின்றோம். வியாபாரிகள் பொதி மாடுகளின் மீது சரக்குகளை ஏற்றிக் கொண்டு நெடுந்தொலைவு சென்று வருவார்கள். வியாபாரிகள் கோயில் வழிபாடு, கோயில்களுக்குத்தானம், கோவில் திருப் பணி முதலியவைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

**கோயிலும் பரிபாலனமும்.**

கொங்கு சோழர் காலத்தில் அநேக கோயில்கள் கட்டப் பட்டன. பழைய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. மூர்த்திகள் தாபிக்கப்பட்டன. வீரசோழன் காலத்தில் சங்கிராமநல்லூரில் கொழுமம் வீரசோழீசுவரமுடையார் கோயில் எழுப்பப்பட்ட விபரங்கள் மிகத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அரசனுடைய ஜென்ம நட்சத்திரத்தில் சூரிய கிரஹணம் ஏற்பட அதினால் உண்டான தோஷங்களை நிவர்த்திக்கும் பொருட்டு அரசனு டைய பிராமண ஆலோசகர்கள் சிவலிங்கம் ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்று கூறியபடி ஒரு கோயில்கட்டி உபானம் முதல் ஸ்தூபி வரைக்கும் அழகுபெறச்செய்து மூலஸ்தானத்தில் சிவ லிங்கப் பிரதிஷ்டையும் செய்தான் (137 & 138/1910). பிறகு அக்கோயிலுக்கு வேண்டிய மாணியங்களைக்கொடுத்துக் கண்ண பட்டன் என்பவனை அக்கோயிலுக்குப் பரிபாலகனாக நியமித் தான். இவ்வாறு கட்டிய கோயில்களுக்குத் தமது பெயரா லேயே மூர்த்தியின் பெயரும் இட்டு வந்திருக்கின்றார்கள். சிறு களந்தை ஆதித்தீசுவரம் ஆதித்தன் பெயராலும், விக்கிரம சோழீசுவரம் விக்கிரம சோழனாலும், வீரசோழீசுவரம் வீர சோழனாலும், அதிராஜராஜேஸ்வரம் அதிராஜராஜனாலும்,

வீரராஜேந்தீஸ்வரம் வீரராஜேந்திரனுலும், ராஜராஜேஸ்வரம் ராஜராஜனுலும் கட்டப்பட்டன என்று அறியலாம். மேலும் அரசிகளும் அரசிளங்குமாரிகளும் கோயில்களைக் கட்டியும் கோயில்களுக்குத் தானங்களைச்செய்தும் இருக்கிருர்கள். அவர் களும் தங்கள் பெயர்களால் கோயில்களுக்குப் பெயரிட்டு இருக் கிருர்கள். உதாரணமாக நடுவாச்சேரியில் கோதைபிராட்டீசு வரர் என்ற பெயரைக் காண்க (113/1926). மேலும் அரசிகள் பெயரால் ஊர்களும் கட்டப்பட்டன. உதாரணமாக உலகு டைபிராட்டி சதுர்வேதிமங்கலம் வீரராஜேந்திர சோழன் அர சியின் பெயரால் கட்டப்பட்டது (192/1909). சோழமாதேவி நல்லூர் என்பது வீரசோழனுடைய அரசியால் கட்டப்பட்டது (232/1909). தற்போது இவ்வூர் சோழமாதேவி என்றுமட்டும் வழங்குகிறது. மற்றும் சில அரசிகளுடைய பெயர்கள் தானங் கள் செய்த வகையில் வெளியிடப்பட்டுள்ளன. அழகியநாச்சி ஆழ்வி, விக்கிர சோழதேவி, ஜயங்கொண்டசோழி, உலகுடை முக்கோக்கிழானடி, ஆண்டக்கண் ஜெயங்கொண்டசோழி ஆழ்வி முதலிய பெயர்களைக் காண்க.

இனி ஆலய பரிபாலனத்தைக் குறித்து அரசர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள். கோயில்களுக்குத் தகுந்த மக்களை அறக்காப்பாளராக நியமித்தார்கள். கோயில் சொத் துக்களைச் சரியானபடி ஆட்சி செய்யும் முறைகளைக் கைக் கொண்டார்கள். பரிபாலனத்தில் துரோகம் செய்த தர்மகர்த் தர்களைத் தண்டித்தார்கள். ஒருமுறை காமக்கண்ணிசோமாசி என்ற பிராமணன் துரோகம் செய்ததற்காக, அவனுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து, பிரயைம் ஆலயத்திற்குக் கொடுக்கப்பட்டதாம். வீரசோழன் காலத்துக் கல்வெட்டு ஒன் றில் திருமடை விளாகத்தின் எல்லைகளைக் கூறி அரசனுடைய உத்திரவும் எழுதப்பட்டுள்ளது. அதின்படி தண்டக் குற்றமும் மன்றுப்பாடும் கொடாதவர்களைக் கோயில் அதிகாரிகளே விசா ரிக்கவேண்டும் என்றும், அவைகளை வசூலித்துக் கோயிலுக்குக்

கொடுக்கவேண்டும் என்றும், அரசனுடைய ஆட்கள் அதில் பிரவேசிக்கக் கூடாதென்றும் வார்சு இல்லாமல் யாராவது இறந்தால் அச்சொத்துக்கள் கோயிலுக்குச் சேரவேண்டும் என்றும் அவ்வுத்தரவு கூறுகிறது (154B/1909). மேலும் கோயில்களை நன்கு பரிபாலித்தவர்களுக்கு விருதுக்களும் அளிக்கப்பட்டன. அபிமான சோழபட்டன் முதலிய கோயில் ஆட்களுக்குப் பலவரிசைகள் தரப்பட்டன (96/1915).

அவ்வரிசைகளாவன:— கொடிபிடித்தல், குதிரை ஏறிச் செல்லுதல், பேரியும், சேகண்டியும் அடித்தல், இருநிலைமாடம் கட்டுதல், இரு கதவு வைத்தல், சுவர்களுக்கு வெள்ளை பூசுதல் முதலிய வரிசைகள் கொடுக்கப்பட்டனவாம்.

சமயச் செய்திகள் :—

ராஜாதிராஜன் வீரசோழன் காலத்தில் பெருமியம் கோயிலில் திருப்பதிகம் பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது (192/1920). கரைவழி நாட்டில் திருவாலந்துறை விக்கிரம சதுர்வேதி மங்கலத்து ஆலயத்தில் மகாபாரதம் ஓதுவதற்காக நிலதானம் செய்யப்பட்டது (163/1909).

மேலே கூறிய செய்திகளாலே கொங்குசோழர் ஆட்சி பல வகைகளிலும் சிறந்து விளங்கிற்று என்று அறியலாம் அல்லவா?



விஜயமங்கலம் — நெட்டைக் கோபுரம்
ஜெயின ஆலயம்



விஜயமங்கலம் — உட்புறப்பார்வை
சந்திரப்பிரபா தீர்த்தங்கரர்



திங்களூர் — புஷ்பநாதர் ஆலயம்



திருமூர்த்திமலை — தீர்த்தங்கரர் – பாறை

## சேர்க்கை I

## "கோவை" (கோயமுத்தூர்) என்ற பெயர்க்குக்காரணம்

கோவைநகரின் பெயரைக்கோயமுத்தூர்என்றுஉள்ளூரார் களும் கோயம்புத்தூர் என்று அதிகார வர்க்கத்தினரும் வெளி யூராரும் வழங்கி வருகின்றார்கள். ஆங்கிலத்தில் கோயிம்பத் தூர் (Colmbatore) என்று எழுதுகின்றனர். ஆங்கிலத்தில் சிறப்புப் பெயர்களுக்கு ஏற்படும் திரிபுகளுக்கு நாம் காரணம் கண்டுபிடிப்பது அரிது. அவ்வீதம் செய்வதில் பயனுமில்லை. வாய்திரும்பாத வகையில் ஒருபெயர் எந்த உருவத்தையும் அடைந்துவிடும். ஆனால் இவ்விதத் திரிபுகளில் ஒருவிதத்தில் ஆச்சரியமான மாறுபாடுகளும் ஏற்படுவதை அறிவோம். ஒரு தமிழ்ப்பதம் ஆங்கிலத்திற்குச் சென்ற பிறகு அதை ஆங்கிலம் கற்ற தமிழர் ஆங்கிலத்திலிருந்து மறுபடியும் தமிழுக்குக் கொண்டுவரும்போது ஒரு புதுப்பெயராய்த் திரித்து விடுகின் றனர். உதாரணமாக சோழமண்டலக்கரை ஆங்கிலத்தில் கொரொமேண்டல் கோஸ்ட் (Coromandal Coast) ஆகிப்பிறகு தமிழில் கருமணல்தரை என்று திருத்திச் சொல்ல முயலுகின் றனர். அதைப்போலவே நமது நகரின் பெயர் மாறிவந்ததோ என்று சிலர் ஐயுறுகின்றனர். கோயமுத்தூர் என்ற பெயர் கோயம்பத்தூர் (Coimbatore) என்று ஆங்கிலத்தில் திரிந்து பிறகு கோயம்புத்தூர் என்று தமிழில் வந்ததோ என்று பல பண்டிதர்கள் நினைப்பதுண்டு. இதன் உண்மை வரலாற்றினை அறியவேண்டியது நமது கடமை அல்லவா?

கோயமுத்தூரைப்பற்றி பழைய புராணங்கள் இல்லை. இவ்வூருக்கு அடுத்த பெரியதலமாகிய பேரூரைப்பற்றிய பேரூர்ப் புராணத்திலும் கோவையைப்பற்றிய வரலாறு இல்லை. வேறு பண்டைய நூல்களும் கிடைக்கவில்லை.பழைய ஆலயங் கள் இல்லாததினால் கல்வெட்டுகளும் இவ்வூரில் கிடையா. ஆகவே மக்கள் இவ்வூரைப்பற்றி வழங்கிவரும் கர்ண பரம்

பரைக் கதைகளைக்கொண்டு இவ்வூரின் பெயருக்குக் காரணம் கூறத்தொடங்கினர். கோயன் என்ற ஒரு அரசன் இங்கே ஆண்டதாகவும், இவ்வூர்ப் பெரியகுளத்தில் முத்து விளைந்த தாவும் அதனுல் கோயமுத்தூர் என்று பேர் ஏற்பட்டதாகவும் ஒருவாய்வரலாறு உண்டு. இவ்வூர் கிராமதேவதையாகிய கோனியம்மன் என்ற பெயரால் கோனியம்மன் ஊர் என்ற பெயர் மருவி கோயமுத்தூர் என்று ஆனதாக மற்ருெரு வரலாறு கூறும். இனி ஒரு சரித்திரக்காரர் ஒரு புதிய காரணத்தைக் கண்டுபிடித்தனர். கொங்கு நாட்டில் சிலப்பதிகார காலத்தில் கொங்கு இளங்கோசர் என்ற அரசன் ஆண்டிருந்ததால், அவன் பெயரான கோசர் என்பது கோயன் என்று திரிந்துப் பிறகு அவனது ஊர் கோயமுத்தூர் என்று ஆயிருக்கலாம் என்று ஊகித்தனர். கொங்கு நாட்டிற்குக் கோவை தலைமை நகராக இருந்தது கிடையாது. கோசர் என்பது கோயர் என்று மாறின தற்கு வேறு ஆதாரம் கிடைக்கவில்லை. ஆகவே இக்காரணம் சரியாகாது.

சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் பிரதிச்சாலையில் சோழன் பூர்வ பட்டயம் என்ற ஒரு கையெழுத்துப் பிரதி இருக்கின்றது. அதில் கொங்கு நாட்டில் சோழர் குடியேற்றின வரலாறு கூறப்பெற்றுள்ளது. ஆதிகாலத்தில் இந்தப்பிராந்தியம் ஒரு மரமடர்ந்த காடாக இருந்ததென்றும், ஒரு காலத்தில் அக்காட்டில் கோவன் என்ற ஒரு இருளர் தலைவன், இருளர் பதி ஒன்று கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தான் என்றும், அவன் கோணியம்மன் என்ற ஒரு வன தேவதையை வணங்கி வந்தான் என்றும், அதற்குக் கோவன்பதி என்ற பேர் வந்ததென்றும், பின்னுல் கரிகால் சோழன் சமயமுதலி சேரமான் பெருமாள் முதலியோர் வந்து காடுவெட்டி ஊர் கட்டினதாகவும், அவ்வூருக்குக் கோவன் பெயரால் கோவன்புத்தூர் என்று பெயர் ஏற்பட்டதென்றும் அந்நூல் இந்நகரின் ஆதி விருத்தாந்தத்தைக் கூறுகின்றது. ஆகவே கோவன் என்ற இருளர்

தலைவனால் உண்டான ஊரானதினால் கோவன்புத்தூர் என்று பெயர் ஏற்பட்டதாகும். இவ்விருத்தாந்தத்தை உறுதிப் படுத்தும் கல்வெட்டுகள் சில அகப்பட்டிருக்கின்றன. அவை களில் இரண்டு பேரூரிலும் ஒன்று உடுமலைப்பேட்டை தாலூக்கா குமரலிங்கத்திலும் இருக்கின்றன. அவைகளில் பேரூர்ச் சாசனங்கள் வருமாறு.

## S. I. I. V. No. 241

## (A. R. No. 565 of 1893).

1. ஸ ஸ்தி ஸ்ரீ கொனெரிமை கொண்டாந் திருவாங்-
வ த
2. பட்டி உடையார் சிகாரிஞ் செய்வார்களுக்கு
3. நஞ்செறு பதிகளில் கண்டராதித்தன் செட்டி-
4. யாந ராஜராஜப் பங்கள நாடுடையானுக்கு
5. நம் செறுதிபதிக் காணியாக இட்டநில மாவது
பேரூர் நா
6. ட்டு கோவந்புத்து ராந வீரகெரள நல்லூர்ப்பால்
7. பெருமாட்கள் நாச்சி நல்லூரில் சிவபாத செகர மன்ன
8. றையில் அதிராச ராச வாய்க்காலுக்கு வடக்கு கொங்
9. குலவல்லி வதிக்குக் கிழக்குப் புறதுண்டத்து நெல்
10. விதை முக்கலத்தில் இத்தெவர் பங்குனித் திருநாள் விண்
11. ணுளனுக்கு இவன் வீட்ட நெல்விதை இருகலத்தினு
12. ல் மெல் வாரத்தால் நெல் இருபத்து நாற்கலத்துக்குச்
சிலவா
13. கத் திரு அமுதரிசி தூணிப் பதக்கு நால் விஞ்சன முட்
பட நெல்
14. (க்) கலனெ தூணிப் பதக்கும் மடத்துக்கு அரிசி
நாற்கலத்திநால்
15. வி (ஞ்)சனம் உட்பட நெல் (ப்) பதினைங்கலநெ தூணி
16. அறுநாழியும் பூ(சி)க்கும் நம்பியர்க்கு திருப்பள்ளித்
தாமம் ப

17. றிப் பாநுக்கும் தொடுப்பா(ங்) நுக்கும் திருக்குழல் பணி செவாற்க்கும்
18. (நெ) ல் கல நெ தூணி (தி)ருவிதி ஆண்டார்களுக்கு நெல்
19. இருதூணி பதக்கு திருவிளக்கெண்ணை குறிநாநா
20. ழிக்கு நெல் நாக்கலம் திருப்பதியம் பாடு வொற்கும்
21. நட்டு வற்கும் நெல்தூணி பத(ற்)கும் இருகல நெல்(வி)
22. தையால் பாட்ட நெல் இரு (ப)த்து நாற் கலநெ
23. தூணிப்பதற்கும் கொண்டு இத்தன் ம (ம்) செலுத்துக இது
24. பந்மாகேசுவர் ரெக்ஷை

## S. I. I. V. No. 243.

## (A. R No. 567 of 1893.)

1. உ ஸ ஸ்தி ஸ்ரீ தண்டீ ஸ ரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்துக்
வ த
2. கண்டீ ஸ் ரங் கரும மாரா (ய்) க பண்டெ அறஞ செ (ய்) தான் செ (ய்) தாங்
வ
3. அறங்காத்தார் பாதந் திறம்பாமல் சென்னிமெல் வைத்து அருளால்
4. ஆதிசண்டெஸ்ரன் ஆதெசம் நங்குடியான் தென்னவாரு மனுக்குந(ம்) மொ-
வ
5. லை குடுத்த படியாவது உடையார் திருவாங் பட்டி யாளுடை-
6. யார் தெவதாநம் கோவங்புத்தூர் கார்மறு இராச இராசன் ம (ன்னறை)
7. தடிகளு (ல்) நிலம் அரைக்காணி கார் ஒருபூ புத்தூர் பெருமாக்கள் ந-
8. ச்சி மன்னறை பலதடியினுல் நிலம் மு (ன்) றுமா முக்காணியும் ஆக நில-
9. ம் மூன்றுமா முக்காணி அரைக்காணியும் நம்தொழனூர் விரபா

10. ண்டிய தெவற்க்கு யாண்டு பதினூருவதுமுதல் கைக்
கொண்டுவமூ-
11. து அச்சுவற்கம் இறுத்தும் மாத்தால் பதி (ன்) னறு
கலனெ தூணியாக
12. வங் பாட்டம் அளக்கவும் இப்படி இவன் மக்கள் மக்கள்
குடி ஙிங்கா-
13. தெவதானமாக அனுபொவித்து வருவாஞகவும்
அருளால் ஆதிசண்-
14. டெஸ்ர ஸ்ரீகரணத்தான் எழுத்து உ.
வ

இவைகளில் முதல் கல்வெட்டு கோனேரின்மை கொண்டான் என்ற பட்டப்பெயர் கொண்ட கொங்கு சோழன் காலத்தி ஏற்பட்டது. இப்பட்டம் கொண்ட அரசர்கள் கி. பி. 1183-1206-ம் 1207-1258-ம் ஆண்டார்கள். அக்காலத்திய திருப் பேரூர்ப் பட்டீசுவர சுவாமியின் பெயர் திருவான் பட்டியுடையார் என்ற ஒரு சிறந்த பெயரால் வழங்கிவந்தது. பேரூர் ஆலயக் காரியம் செய்தவர்களில் முக்கிய சேனதிபதிகளில் ஒருவர் பெயர் கண்டராதித்தன் செட்டி என்ற ராஜ ராஜ பங்கள நாடுடையான் என்பது. அவருக்குச் சேனதிபதித் தொழில் செய்வதற்காகப் பேரூர் நாட்டில் இருந்த கோவன்புத்தூர் ஆன வீரகேரள நல்லூர் என்ற ஊரில் இருந்த ஒரு நிலத்தைத் தானமாகக் கொடுத்திருந்தார்கள். ஆகவே அக்காலத்தில் இவ் வூர் கோவன் புத்தூர் என்ற பெயரால் வழங்கிவந்ததென்றும் இதற்கு வீரகேரள நல்லூர் என்ற மற்ெருரு பெயர் இருந்த தென்றும் அறிகிறோம். கோவன்புத்தூர் என்றால் கோவனுல் அரசாளப்பெற்ற ஒரு புதிய ஊர் என்று பொருள்படும். அவ் வூரை வீரகேரளன் என்ற ஒரு கேரளநாட்டு மன்னன் பிடித் துத் தன்பெயரால் இவ்வூருக்கு ஒரு புதுப்பெயர் கொடுத்தான் என அறியலாம். இவ்விதம் அரசர்கள் தாம் பிடித்த ஊர் களுக்குத் தம் பெயரால் புதுப்பெயர் இடுவது சோழர் காலத்து வழக்கம். கேரள மன்னர் கொங்கு நாட்டின்மீது 9-10

நூற்றாண்டுகளில் படையெடுத்ததற்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. அக்காலத்தில் கோவையும் அவர்கள் வசத்தில் சிறிதுகாலம் இருந்தது. கேரளர்கள் துரத்தப்பட இப்பெயர் பின்னால் மறைந்துபோய்விட்டது. ஆனால் கோவைக்கு 3-கல் மேற்கில் வீரகேரளம் என்ற பெயர் கொண்ட ஒக்கிலிபாளையம் என்ற ஊர் இன்னமும் இப்பெய ரால் வழங்கப்பெற்று இருப்பதை இங்கு கவனிக்கலாம்.

மேலே சொன்னபடி தானம் செய்யப்பட்ட நிலமானது பெருமாள் நாச்சிநல்லூர் என்ற மஜராவில் சிவபாத சேகர மன்னரையில் அதிராச ராசவாய்க்காலுக்கும் வடக்கு, கொங்கு குலவல்லிவதிக்கும் கிழக்கு, என்ற எல்லையில் இருந்ததெனக் கண்டிருக்கிறது. இப்போதும் இராஜ வாய்க்கால் இருப்பது காணலாம். கொங்கு குலவல்லிவதி என்பது கொங்கு குல அரச பரம்புரையில் ஒரு இளவரசியின் பெயரால் ஏற்பட்ட ஒருபாதை என்று பொருள்படும். இப்பெயர்கள் கொண்ட வாய்க்காலும் பாதையும் அக்காலத்தில் கோவையில் இருந்தன என்று தெரிகிறது. மற்றும் அக்கல்வெட்டினால் பேரூரில் பங்குனித்திருவிழா ஒன்று நடந்துவந்ததைப் பற்றியும், அப்போது வேலை செய்த நம்பியர், பூக்கட்டுவோர், குழல் ஊது வோர், திருப்பதிகம் பாடுவோர், நட்டுவர் முதலிய திருப்பணி வாளர்களுக்கு நெல் அளந்து கொடுப்பதைப்பற்றியும் அறிகிறோம்.

இரண்டாவது கல்வெட்டு வீரபாண்டியதேவனது 16-ம் ஆண்டில் ஏற்பட்டது. இதனிலும் கோவன் புத்தூர் என்ற பெயர் காணப்பெறுகிறது. இவ்வூரில் இராஜராஜன் மன்னரை, பெருமாக்கன் நாச்சி மன்னரை என்பவை திருவான்பட்டி யுடைய தேவர்க்கு தேவதானமாக இருந்தன என அறிகிறோம். இப்போது இத்தேவதான பூமிகள் என்ன ஆயிற்றோ விளங்க வில்லை. இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1281 ஆகும். இக் கல்வெட்டின் முதல் பாகத்தில்,

"தண்டீஸ் வரன் ஒலை சாகரம்சூழ் வையகத்துக்
கண்டீஸ் வரன்கரும மாராய்க—பண்டே
அறம் செய்தான் செய்தான் அறங்காத்தார் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து"

என்ற ஒரு அழகிய வெண்பா எழுதியிருத்தல் நோக்கத்தக்கது. கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளிலேயே இந்த வெண்பா ஒன்று தான் செய்யுள் வடிவில் உள்ளது. வேறு செய்யுள்கள் நாளது வரை காணப்பெறவில்லை.

இனி கோவன் புத்தூர் என்ற பெயர் உடுமலைப்பேட்டை தாலூக்கா குமரலிங்கத்தில் உள்ள கரிவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் தென் அஸ்திவாரச் சுவரில் கோனேரின்மை கொண்டான் என்ற அரசன் காலத்துக் கல்வெட்டில் காண் கிறோம். அக்கல்வெட்டும் பேரூர்க் கல்வெட்டைச் செதுக்கின அரசனாலேயே ஏற்பட்டிருக்கிறது. இக் கல்வெட்டில் பேரூர் நாட்டு கோவன் புத்தூரில் இருந்த ஒரு நிலத்தைத் திருவரங்கக் கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுத்ததாகக் கண்டிருக் கிறது.

மேலும் கோவைக்குத் தென்கிழக்கே 6 கல்லில் உள்ள வெள்ளலூர் என்ற ஊரில் பழமைச் சிவாலயமான தேனீசு வரமுடையார் ஆலயத்தில் கண்ட ஒரு கல்வெட்டில் கோவன் அரசன் என்ற ஒரு பெயரைக் காண்கிறோம். இக்கல்வெட்டு கொங்குச் சோழனான வீரசோழன் (1183-1206) காலத்தில் ஏற்பட்டது. ஆகவே அக்காலத்தில் கோவன் என்ற பெயரை அரசர்கள் இட்டுக்கொண்டுவந்தார்கள் என்றறிய இடம் இருக் கிறது.

ஆகவே மேலே காட்டிய நான்கு கல்வெட்டுகளிலிருந்தும் கோவையின் உற்பத்தியைப்பற்றி ஒருவாறு தெரிந்துகொள்ள முடியும் அல்லவா? 11-ம் நூற்றாண்டுக்கு முந்தியே கோவன் என்ற பெயர் படைத்த ஒரு சிற்றரசன் அல்லது ஒரு தலைவன் இங்கே இருந்திருத்தல் வேண்டும். அவன் ஒரு புது ஊரைத் தன் பெயரால் கட்டியிருத்தல் வேண்டும். அதனால் இவ்வூருக் குக் கோவன்புத்தூர் என்ற பெயர் ஏற்பட்டிருத்தல்வேண்டும் என்றும் நாம் ஊகிக்கலாம்.

## சேர்க்கை. II.

### மருதமலையைப்பற்றிய கல்வெட்டுகள்.

மருதமலை என்ற திருத்தலம் கோவைக்கு வடமேற்கில் குன்று தோருடல்களில் ஒன்றாய் முருகக்கடவுளின் ஒரு புனி தத்தலமாகும். இது மேற்குமலைத் தொடரில் சமநிலத்திற்குச் சுமார் 500 அடி உயர்ந்த ஒரு அழகிய சிறு சமநிலத்தில் ஏற் பட்டுள்ளது. அங்கே மருத தீர்த்தம் என்ற திவ்விய தீர்த்தம் ஒன்று மருத மரத்தடியில் உள்ளது. அருகில் உள்ள முருகக் கடவுளின் ஆலயம் மிகச்சிறந்து விளங்குகிறது. இதில் எழுந் தருளியிருக்கும் தண்டபாணியாகிய முருகக் கடவுளை வழிபாடு செய்யாதவர் அநேகமாய் இந்நாட்டில் இரார். அடிவாரத்தில் உள்ள தான்றோன்றிப் பிள்ளையாரது அழகிய இயற்கை அமைப்பு வேறெங்கும் காண்பதரிது. மிகத் திவ்விய தலமாகிய இம்மலையின் பெயரை இந்நாட்டு மக்கள் இட்டுக்கொள்வது ஒரு வியப்பல்ல. கொங்கு நாட்டில் மருதமலைக் கவுண்டன், மருதாசலம்பிள்ளை முதலிய பெயர்கள் எங்கும் பரவி இருக்கக் காணலாம். பழனியப்பன் பழனிமலை என்ற பேர்கள் எவ்வளவு அதிகமாக வழங்குகின்றதோ அவ்விதம் மருதமலைப் பெயரும் வழங்குகிறது.

இத்திவ்வியதலம் மிகப் பழமை வாய்ந்தது எனலாம். ஆனால் அதன்சரித்திரம் கிடையாதது மிகவும் வருந்தத்தக்கது. மலைமீதுள்ள அழகிய ஆலயத்தில் கல்வெட்டுகள் கிடையா. இத்தலத்துக்கு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியிருக்கிறார். இத்தலத்தைப்பற்றிய தனிப்புராணம் இல்லை. ஆனால் கச்சி யப்ப முனிவர் அருளின திருப்பேரூர்ப் புராணத்தில் இம்மலை யைப்பற்றி இரண்டு படலங்கள் இருக்கின்றன. இதன் வட மொழி மூலநூல் இதற்குச் சில நூற்றாண்டுகள் முந்தியதாக லாம். இவற்றின் விரிவை அறியவேண்டுமானால் மருதமலை மான்மியம் என்ற நூலில் காணலாம். பேரூர் புராணமோ 150

ஆண்டுகளுக்கு முன் தான் எழுதப்பெற்றது. ஆகவே சுமார் 300 வருடங்களுக்கு முந்திய சரிதம் கிடைக்காமல் இருக்கிறோம். பேரூர்ப் புராணத்தில் இத்தலம் மிகப் பழமையானதாயும் இதில் தேவர்கள் தவம் செய்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் இம்மலையின் பெயரை மக்கள் வெகு காலத்தில் இருந்து தமக்கு இட்டுவந்தனர் என்பதற்கு இந்நாட்டு வழக்கமே அத்தாட்சியாகும். மக்கள் இம்மலையின்பெயரைத் தமக்கு இட்டுக்கொண்ட ஒரு வழக்கம் 12-ம் நூற்றாண்டிலும் இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே அந்த நூற்றாண்டிலேயே இம்மலையில் எழுந்தருளியிருந்த முருகக் கடவுளின் ஆலயம் சிறந்து விளங்கி இருக்கவேண்டும் என்று தெரிகிறது. இந்தக்கூற்றுக்கு இப்போது கிடைத்துள்ள ஆதாரங்கள் எவையெனில் இம்மலைக்குக் கிழக்கே 32 நாழிகை அளவில் உள்ள பாடல்பெற்ற தலமாகிய திருமுருகன் பூண்டி ஆலயத்தில் உள்ள இரண்டு கல்வெட்டுகளே ஆகும். இக்கல்வெட்டுகள் அடியில் கண்டபடி உள்ளன.

## No. 249

## (A. R. No. 573 of 1893)

1. ஸ ஸ்ரி ஸ்ரீ [: 11] திரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீ குலொத்
   வ த

துங்க சொழதெவர்க்கு யாண்டு எட்டாவது பெருமாள் சாமந்தரில் மருதன்மலையாநாக குலொத்துங்க சொழ விக்கிரமாதித்த தெவனென் ஆழுடையார் திருமுருகன் பூண்டியாண்டாற்கு சந்தியா திபம் ஒன்றுக்கு ஒடுக்

2. கின பழஞ்சலாகை அச்சு ஒன்றின் உபயங்கொண்டு சன்தியாதிப(ம்) மொன்றும் சன்திராதித்தவற் செல்வதாக இது

பன்மா ஹெஸவரைரக்ஷ.
வ

## No. 250.

## (A. R. No. 574 of 1893)

1. ஸ ஸ்வி ஸ்ரீ திரிபுவனச் சக்ரவத்திகள் சிரிகுலொத்துங்க
வ த

சோழதெவற்க்கு யாண்டு எட்டாவது பெருமாள் சாமந்தரில் மருதன் மலையனை குலொத்துங்க சொழ விக்கிரமாதித்த தெவ நெங் ஆளுடையார் திருக்குரக்குத் தளியாண்டாற்கு சந்தியாதிபமொன்றுக்கு ஒடுக்கின பழஞ்ச.

2. லாகை ஒன்றி நுபையங்கொண்டு சந்தியாதிப மொன்றும் சந்திராதித்தவற் செல்வதாக இது பங்மா கெசுர ரக்ஷெ.

இக் கல்வெட்டுகளினால் குலோத்துங்க சோழ தேவனது 8-ம் ஆண்டில் அம்மன்னனுடைய சாமந்தரில் (சிற்றரசன்) மருதன் மலையான் என்ற ஒரு பிரபு இருந்தான் என்றும் அவன் அரசர்களுக்குச் செய்த உதவியின் பொருட்டு குலோத்துங்கச் சோழ விக்கிரமாதித்ய தேவன் என்ற பட்டம் பெற்றிருந்தான் என்றும் அவன் திருமுருகன் பூண்டியில் எழுந்தருளியிருக்கிற மகா தேவர்க்கும் திருக்குரக்குத்தளி என்ற வைப்புத்தலமாகிய பெரிய பாளையத்துச் சுக்ரீசுவர சுவாமிக்கும் சந்தியா தீபம் வைப்பதற்காகப் பழஞ்சலாகை அச்சு என்ற பொன் நாணயம் ஒன்று தருமம் செய்ததாகவும் இன்னும் இவை முதலிய செய்திகளும் காண்கிறோம். குலோத்துங்கச் சோழன் என்பான் கொங்குநாட்டை ஆண்ட கொங்குச் சோழனாக இருக்கலாம். அப்படியாயின் அவனே கி. பி. 1149-1183 வரை ஆண்ட மன்னன் ஆவான். ஒரு வேளை சோழ மன்னனாக இருக்கும் பட்சத்தில் அப்பெயர்கொண்ட மூன்று மன்னர்களில் ஒருவனாக இருக்கவேண்டும். அவர்கள் முறையே கி. பி. 1073, 1123, 1178 என்ற ஆண்டுகளில் ஆண்டவர்கள். இக்கல்வெட்டில் குறித்த அரசன் அவர்களில் ஒருவன் ஆனபோதிலும் 12-ம்

நூற்றூண்டுக் கல்வெட்டு என்று அறியலாகும். அக்காலத்தில் அவ்வரசனுடைய பிரபுக்களில் ஒருவன் மருதன் மலையான் என்ற சிறப்புப் பெயர் பெற்றிருக்க வேண்டும். இவ்வழக்கம் எத்தனைப் பழையது என்று பாருங்கள்! இரண்டாவது சாசனத்தால் பெரிய பாளையத்திற்கு குரக்குத்தளி என்று வழங்கி வந்ததும் அறிகிறோம். இத்தலம் திருப்பூருக்கு 6 நாழிகையில் உள்ள ஒரு ஊர். கூளிப்பாளையத்திலிருந்து கால்நடையாக 2 மைலில் இதனை அடையலாம். இதனை ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் "கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்" என்று தமது ஊர் தொகைப் பதிகத்தில் பாடியிருக்கின்றனர். அக்காலத்தில் பழஞ்சலாகை அச்சு என்ற ஒரு பொன் நாணயம் வழங்கி வந்ததாகத் தெரிகிறது. அந்நாணயத்திலிருந்துவரும் வட்டியிலிருந்து சந்தியா தீபம் ஒன்றை சதாகாலம் எரிக்க முடியும் என்று தெரிகிறதினால் அந்நாணயம் மிகவும் விலை உயர்ந்ததாக இருந்திருத்தல் வேண்டும்.

இந்த இரண்டு கல்வெட்டுகளினால் மருத மலையின் பெருமை 800 ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு மக்களிடையில் வழங்கி இருந்தது என்று சரித பூர்வமாக அறிகின்றோம்.

# II. பாகம்

## 1. இழை நாட்டு நிலை (1000—1200)

இதுகாறும் கொங்குநாட்டை ஆண்ட கொங்குசோழர் வம்சத்தின் வரலாற்றைக் கூறினோம். அவர்கள் ஆண்ட கால மாகிய கி. பி. 1000 முதல் 1250 வரை ஏறத்தாழ 2½ நூற்றாண்டுகள் வரை கொங்குநாட்டில் ஏற்பட்ட செய்திகளைக் கூறினோம். அதற்குப்பின் கொங்குநாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கு முன் கொங்குநாட்டைச் சுற்றிலும் உள்ள மற்ற நாடுகளில் அந்தக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறினாலன்றி நாட்டின் வரலாறு செவ்வையாக அறியமுடியாது. ஆகவே கொங்குநாட்டைச் சுற்றியுள்ள சோழ, பாண்டிய, கேரள, கங்க நாடுகளின் நிகழ்ச்சிகளை இங்கே ஓரளவு குறித்து விரிப்போம்.

கிழக்கே சோழநாட்டில் சோழப் பேரரசு 9-வது நூற்றாண்டு முதல் 13-வது நூற்றாண்டு வரை மிகச்சிறப்போடு ஆண்டு வந்தது. அவர்களின் பிரதிநிதியாகக் கொங்குநாட்டை ஆளவந்த முதல் மன்னன்தான் கொங்கு சோழ வம்சத்தைத் தொடங்கி வைத்தவனென்று முதற்பகுதியில் கூறியிருக்கின்றோம். சோழர்களின் பேரரசு சிறப்புடன் விளங்கிய நாள் முழுதும், கொங்குச்சோழர் வம்சமும் சிறப்புடன் விளங்கியது. சோழர்களின் பெருமை 13-வது நூற்றாண்டில் குறையத் தொடங்கினதும், கொங்கு சோழர்களுடைய செழிப்பும் குறையத்தொடங்கிற்று. ஆகவே இந்த இரண்டுவம்சங்களுக்கும் உட்புறமான தொடர்பு எப்பொழுதும் இருந்திருக்கக்கூடும். சோழர் பேரரசின் வல்லமையைப் பின்பற்றியே கொங்கு வம்சமும் சிறப்புடன் ஆட்சிசெய்திருக்கவேண்டும். எப்போது சோழப் பேரரசின் வலிமை குறையத் தொடங்கிற்றோ, அது முதலே கொங்கர்களின் வல்லமையும் தளர்ச்சியடைந்தது. இந்த நிகழ்ச்சியை விளக்கவே சோழப் பேரரசின் ஆட்சியைச் சிறிதளவு இங்கே விவரிக்க வேண்டும் அல்லவா?

தஞ்சையில் விஜயாலயச் சோழதேவன் 9-ம் நூற்றுண்டில் தாபித்த சோழ அரசவம்சம் அவனுடைய பரம்பரையினரால் வெகு புகழுடன் பெருக்கப்பட்டது. ஆதித்யன் I, பராந்தகன், அரிஞ்சயன், சுந்தரன், மதுராந்தகன், ஆதித்யன் II, இவர்கள் வீரச்செயல்களால் சோழவம்சம் மிகுந்த கீர்த்தி அடைந்தது. 10-ம்நூற்றுண்டின் பிற்பகுதியில் (985–1013), முதல் ராஜ ராஜன் தோன்றினன். 33 ஆண்டுகள் வரை ஒப்புயர்வற்ற வகையில் அவன் ஆட்சியை பெரிதும் தொடர்ந்து நடத்தினன். சோழர்களுடைய பெருமையை நாற்பக்கங்களிலும் செலுத்தினன். வடக்கே சாளுக்கியர்களும், மேற்கே கங்கர்களும், தெற்கே பாண்டியர்களும் நிலேகுலேந்து இருந்தார்கள். கங்கவாடி, நுளம்பவாடி, குடகுசீமை, வேங்கி நாடு முதலிய பிரதேசங்களே வென்று அவைகளேச் சோழநாட்டுடன் சேர்த்துக் கொண்டான். பிறகு ஈழநாடு, மலேநாடு, கலிங்கநாடு முதலியவைகளிலும் படையெடுத்து வாகை சூடினன். தமிழர்களுடைய பண்பாடு கடல் கடந்தும் சென்றது. தமிழ்வழங்கும் நாடுகள் எல்லாவற்றையும் தன் வெண் கொற்றக் குடையின்கீழ் கொண்டு வந்ததும், தெலுங்கு, கன்னட கேரள நாடுகளேயும் தன் ஆட்சிக்குள் கொண்டு வந்ததுமான பெருமை முதல் ராஜராஜனுக்குத்தான் இருந்தது என்றல் மிகையல்ல. அவன் தன் வெற்றிக்கு அறிகுறியாகத் தஞ்சையில் இராஜராஜேசுவரம் என்ற மிகப் பெரிய ஆலயத்தை வகுத்தான். அழியாத சிற்பப் பெருமையை அவ்வாலயத்தில் நிகழ்த்தி வைத்தான். தமிழ்நாட்டுப் பண்பாட்டின் உன்னத நிலே அந்தச் சின்னத்தில்தான் இருக்கின்றது. தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் மிகுந்த ஊக்கம் தந்தவன் அவனே. நாட்டினுடைய ஆட்சிமுறையைச் சீர்திருத்தித் தான் வென்ற பிரதேசங்களே ஆறு மண்டலங்களாகப்பிரித்து அவைகளே ஆட்சி செய்யத் தன் வம்சத்து அரசிளங் குமாரர்களேயே பிரதிநிதி இளவரசர்களாக வைத்து ஆட்சிபுரிந்தான்.

அப்படி அமைத்த காலத்திலே தான் வென்ற கொங்குநாட்டை அதிராஜராஜமண்டலம் (பின்னர் அது சோழ கேரள மண்டலம் ஆயிற்று) என்ற புதுப் பெயரால் வழங்கினான். அவ்விதமாகச் சோழருடைய மாகாணமாக மாறிய கொங்குநாடுதான் பின்னால் சுய ஆட்சி பெற்றுக் கொங்கு சோழரால் ஆளப் பெற்று வந்தது.

அவ்வாறு பெருமை பெற்ற முதல் இராஜராஜன் ஆட்சிக்குப் பின் அவன் மகன் இராஜேந்திரன் (1013-1045) பட்டத்திற்கு வந்து தன் தகப்பனைக்காட்டிலும் சிறப்பாக வெற்றிகள் அடைந்து வங்கக் கடலையும் கடந்து, கடாரம், சாவகம், ஈழம் முதலிய நாடுகளையும் பிடித்து செங்கோல் செலுத்தினான். அப்பொழுது தமிழ்நாட்டின் பெருமை கடல் கடந்து வெகு தொலைவிலும் படர்ந்தது. தமிழ்மொழியும், சைவசமயமும் பெருகின. தன்னுடைய வெற்றியின் சின்னமாக கொள்ளிடத்திற்கு வடக்கே ஒரு பெரிய ஏரியும், நகரமும் கட்டி அங்கே மகத்தான ஆலயம் ஒன்று எழுப்பினான். அவ்வாலயந்தான் கங்கைகொண்ட சோழேச்சரம் என்றது. அம்மன்னன் காலத்தில் தமிழரின் பெருமை தலைசிறந்து உச்சநிலை அடைந்தது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி ஈழநாட்டில் பொலனருவை முதலிய பண்டைய நகரங்களிலும், சாவகம், கம்போடியா, கடாரம், முதலிய கீழை நாடுகளிலும், சிவாலயங்களை எழுப்பி வழிபாட்டிற்கு வேண்டிய நிபந்தங்களையும் ஏற்படுத்தி வைத்தவன் அவனே.

கங்கைகொண்டசோழன் என்ற பெருமைபெற்ற இராஜேந்திரனுக்குப் பின் அவன் மகன் ராஜாதிராஜன் (1018-1050), ஆண்டான். அவன் தன் தகப்பன் நாளிலேயே இளவரசு பூண்டு கணக்கற்ற போர்கள் புரிந்து பல நாடுகளையும் வென்று, சிறப்புடன் திகழ்ந்தான். போர்புரிவதே தொழிலாகக்கொண்ட அவன் ஈழம் முதலிய நாடுகளில் வாகை சூடிவிட்டுக் கொப்பத்துப்போரில் உயிர்விட்டான். அவன் தம்பி

இராஜேந்திரன் (1052—1062) 10 ஆண்டுகள் வரை ஆண்ட பின் இறந்தான். அவன் மகனும் பின் அவன் தம்பி வீர ராஜேந்திரனும் (1062—1070) 8 ஆண்டுகள் வரை ஆண்டு அதிக புகழ் இன்றி உயிர் துறந்தார்கள். பின்னரும் ஒரு இள வரசன் ஆட்சிக்கு வந்து வல்லமையின்றி உயிர் துறந்தான். அத்துடன் விஜயாலயச் சோழனின் ஆண் சந்ததிகள் முடிவு பெற்றார்கள். அப்போது சோழ அரசு முதல் இராஜராஜனின் பெண் வயிற்றுப் பேரனை முதல் குலோத்துங்கன் கைக்கு வந்தது.

முதல் குலோத்துங்கன் (1073—1118) வேங்கிநாட்டு இளவரசனாயிருந்து, தாயைப் பெற்றபாட்டன் வழியில் சோழ நாட்டுக்குத் தலைமை வகித்தான். அவன் காலத்தில் தான் அவனுடைய படைத்தலைவன் கலிங்கத்தின்பேரில் படையெடுத்துப் போர்தொடுத்து வெற்றியடைந்தது. அப்போரின் பெருமையைத்தான் செயங்கொண்டார் என்ற பெரும் புலவர் கலிங்கத்துப்பரணி என்ற பிரபந்தத்தில் புகழ்ந்திருக்கின்றார். குலோத்துங்கனுக்குப் பிறகு விக்கிரமசோழனும் (1118—1135), அவனுக்குப் பிறகு அவன் மகன் 2-ம் குலோத்துங்கனும் (1123—1146) பட்டத்திற்கு வந்தார்கள். இவ்வரசன் காலத்தில்தான் சேக்கிழார் பெரியபுராணம் இயற்றியது. அப்போது தமிழுக்கும், சைவத்திற்கும் மிகுந்த ஆதரவு கிடைத்தது. நாடு முழுவதும் கோயில்களில் கருங்கல் திருப்பணிகள் செய்யப்பட்டன. மன்னர்களும், செல்வர்களும் ஆலயங்களுக்குத் தானதருமங்கள் நடத்தினார்கள். பயனில்லாத போர்கள் நிறுத்தப்பட்டன. நாட்டில் எங்கும் அமைதி நிலவியது. மக்கள் செழிப்புடன் வாழ்ந்தார்கள்.

சைவப் பேரரசன் II-ம் குலோத்துங்கனுக்குப் பின் II-ம் இராஜராஜன்பட்டத்திற்கு வந்தான். (1146—1178). அவன் காலத்திலும் நாட்டில் அமைதியும், சமயமுன்னேற்றமும், இலக்கிய முன்னேற்றமும், நிலவின. அவன் காலம் வரை

மூன்று பட்டத்தலைமுறைகளாக ஒட்டக்கூத்தர் என்ற பெரும் புலவர் இளவரசர்களுக்கு ஆசிரியராகவும், ஆஸ்தான வித்வானாகவும் இருந்து தமிழ் இலக்கியத்தை வளர்த்து வந்தார். அவர் உலா பரணிபோன்ற பல நூல்களை இயற்றினார். இராஜராஜனுக்குப்பின் II-ம் இராஜாதிராஜனும் (1171—1186). அவனுக்குப்பின் III-ம் குலோத்துங்கனும் (1178—1216) பட்டத்திற்கு வந்தார்கள். III-ம் குலோத்துங்கன் காலத்தில் அரசியல் அமைதி குறையத் தொடங்கிற்று. ஆனால் தமிழும் சைவமும் ஓங்கிக்கொண்டே வந்தன. நாட்டில் எங்குப் பார்த்தாலும் ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டன. தான தர்மங்கள் செய்யப்பட்டன. கணக்கற்ற கல்வெட்டுக்கள் ஆலயங்களில் தீட்டப்பட்டன. ஆனால் சுற்று நாடுகளிலோ பிற அரசர்கள் முன்னேறத் தொடங்கினார்கள். அவர்கள் சோழநாட்டின் பகுதிகளைச் சேர்த்துக்கொள்ளத் தொடங்கினார்கள். கொங்கு நாட்டின் வடபகுதியாகிய தகடூரில் (தற்காலத்தர்மபுரி) அதிகமான்கள் தலை நிமிரத்தொடங்கினார்கள். நடுநாட்டில் சம்பவராயர் என்கிற சிற்றரசர்கள் குழப்பம் செய்தார்கள். தெற்கே பாண்டியநாட்டில் பாண்டியர்கள் சுதந்திரம்பெறமுயன்றார்கள்

இந்த நிலைமையில் 1216-ல் குலோத்துங்கன் III இறந்தான். அவனுக்குப்பின் III-ம் இராஜராஜன் பட்டத்திற்குவந்து 1248 வரை ஆண்டான். சோழ அரசு தலைகுலுங்கத் தொடங்கிற்று. தெற்கே பாண்டியர்கள் வெற்றிக்குமேல் வெற்றி அடைந்து சோழர்களின் பெரும்பகுதிகளைக் கைக்கொண்டார்கள். வடக்கே கன்னட நாட்டு ஹொய்சளர்கள் சோழநாட்டின் பெரும்பகுதிகளைக் கவர்ந்துகொண்டார்கள். அவர்கள் கொங்கு நாட்டுப்பகுதிகளையும் பிடித்ததன்றிச் சோழநாட்டில் சீரங்கத்திற்கு 5-கல் வடக்கே இருக்கும் கண்ணனூரைப் பிடித்து அங்கே போசலேசுவரம் என்ற ஆலயத்தைக் கட்டினார்கள். போதாக்குறைக்கு அதுவரை குறுநில மன்னராயிருந்த கோப்பெருஞ்சிங்கன் என்ற பல்லவ இளவரசன் இராஜராஜனையே

பிடித்துச் சிறையிலும் அடைத்தான். அப்போது ஹொய்சள மன்னன் அவனைச் சிறையினின்றும் மீட்டிருன். இராஜராஜனுக்குப் பின் III-ம் இராஜேந்திரன் (1245—67) பட்டத்திற்கு வந்து பெயருக்குமட்டும் அரசனுயிருந்தான். இந்த வகையில் விஜயாலய வம்சம் 9-ம் நூற்ருண்டில் இடையில் தோன்றி நன்கு வளர்ந்து 13-ம் நூற்ருண்டின் நடுப்பகுதிவரையில் ஆட்சிபுரிந்தது. இவர்கள் இரண்டு சந்ததி வம்சத்தவர்களாகி ஆண்டார்கள். மொத்தம் 24 அரசர்கள் இவ்வம்சத்தில் ஆட்சி புரிந்தார்கள். 13-ம் நூற்ருண்டின் இடைப்பகுதியோடு இவ்வம்சம் சீர்குலைந்தது. என்ருலும், தென்ஞட்டிலேயே இச்சோழ வம்சத்தைப்போல் புகழ்பெற்ற வம்சம் வேருென்றும் தோன்றவில்லை. இவர்களுடைய புகழ் இன்றைக்கும் கோயில்களிலும், விமானங்களிலும், மண்டபங்களிலும், சிற்பங்களிலும், ஓவியங்களிலும், கல்வெட்டுகளிலும், காவியங்களிலும், சமயநூல்களிலும், அறப்பணிகளிலும் விளங்கிக்கொண்டு நிற்கின்றது. அவர்களுடைய மெய்க்கீர்த்திகள் அழிவுபெருத கவிதைகளில் நிலைத்து நிற்கின்றன. கொங்கு நாட்டிற்கு நேரில் அவர்கள் யாதொரு சிறப்பும் செய்யாவிட்டாலும் அவர்கள் தம் சாமந்தர்களால் மறைமுகமாக நன்மைகளைப் புரிந்திருக்கின்ருர்கள்.

## 2. தென்பால் நாட்டு நிலை (1000—1200.)

கொங்கு நாட்டுக்குத் தெற்கேயுள்ளது பாண்டிய நாடு. அதனைப் பாண்டியர்கள் பண்டைக்காலம் முதற்கொண்டு ஆண்டுவந்திருக்கின்ருர்கள். மாறன் சடையன் காலத்தில், அதாவது 9-ம் நூற்ருண்டில் பாண்டியசேனை கொங்குநாட்டில் புகுந்து திருப்பேரூரில் திருமாலுக்குக் குன்றம் அன்னதோர் கோயில்கட்டின செய்தி முன்னமே கூறப்பட்டது. சோழநாட்டில் வீசயாலயச் சோழன் வம்சம் தலைநிமிர்ந்ததும், பாண்டியர்கள் பின்வாங்கத் தொடங்கிஞர்கள். சோழ வம்சத்தரசர்களில்

முதல் பராந்தகன் (906—952) கி. பி. 920-ல் மதுரையைப் பிடித்து அங்கு ஆண்டுகொண்டிருந்த 2-வது இராஜசிம்ம பாண்டியனைத் துறத்திவிட்டான். அதுமுதல் பாண்டிய நாடு சோழர் கைக்குச் சென்றுவிட்டது. ஏறக்குறைய 3-நூற்றாண்டு கள்வரை பாண்டியநாடு முழுவதும் சோழர்களுடைய மாகாண மாகவே இருந்தது. இராஜசிம்மனை வென்று மதுரையைப் பிடித்த பராந்தகன் அவ்வெற்றியின் சின்னமாக மதுரை கொண்ட சோழன் என்ற பட்டம் வகித்துக்கொண்டான். இந் தச்செய்தி ஈழநாட்டு மகாவம்சம் என்ற காவியமும் கூறுகிறது.

அந்தக்காலத்தில் பாண்டியனுதவிக்காக வந்த சிங்களச் சேனையானது நோயினால் வருத்தமுற்றதினாலும், சிங்கள தள கர்த்தனும் நோய்கண்டு மரணமடைந்ததினாலும் ஈழநாட்டிற் கே திரும்பிப் போய்விட்டது. சிங்களர்கள் பாண்டியனுக்கு உதவியாக வந்த செய்தியைக் கண்டு பராந்தகன் கோபித்து மீண்டும் மதுரையின் மீது படையெடுத்தும், அதைத் தொடர்ந்து ஈழ நாட்டுக்கும் சென்று சிங்களர்களையும் தண்டித் தான். அவ்வெற்றிக்கு அறிகுறியாக பராந்தகன் "மதுரையும் ஈழமும் கொண்டவன்" என்ற பட்டம் வகித்துக் கொண்டான். தோற்றுப்போன பாண்டியன் சிங்களத்துக்கும், பிறகுகேரளத் துக்கும் ஓடிவிட்டான். பராந்தகன் காலத்தில் சோழ பாண்டிய போர்கள் மும்முறை நடந்திருக்கின்றன. மும்முறையிலும் பாண்டியர்கள் தோற்றுப்போய் பராந்தகனே வென்றிருக் கின்றான்.

பராந்தகனுடைய இறுதிக் காலத்தில் இராஷ்டிரகூட மன்னன் கிருஷ்ணன் III சோழ நாட்டின்மீது படையெடுத்து தக்கோலச் சண்டையில் வெற்றியடைந்தான். அதில் (949) பராந்தகன் மகன் இராஜாதித்தியன் உயிர் துறந்தான். பராந்த கனுக்குப்பின் வந்த ஐந்து சோழர்களும் சாதாரண மன்னர் களாக இருந்தார்கள். அவர்கள் வலிமை குன்றியிருந்தும் அத னால் மதுரைப் பாண்டியர்கள் பெரும் பயன் அடையவில்லை.

பாண்டியர்களில் வீரபாண்டியன் என்ற ஒருவன் மட்டும் தலை நிமிரத் தொடங்கினுன். அவனைப்பற்றிக் கல்வெட்டுச் சான்று கள் இல்லாமற் போனபோதிலும், செப்பேடுகளின் மூலமாக ஒரு சிறிது அறியக்கூடும். அவன் சுந்தரச்சோழனேடு சேவூர் என்ற ஒரு இடத்தில் போர்புரிந்து வெற்றியடைந்தானும். அதைக்கொண்டு அவன் "சோழன் தலை கொண்டவன்" என்ற பட்டம் வகித்துக் கொண்டானும். இந்த வெற்றி பயனில்லாமற் போய்விட்டது. சுந்தரனுடைய மகன் கரிகால ஆதித்தியன் வீரசோழனைத் தோற்கடித்து அவன் தலையைவாங்கிவிட்டான். அவ்வீரசோழன் வெற்றியடைந்திருந்த காலத்தில் நாட்டைச் சீர்படுத்த வேண்டி எடுத்தல் அளவை, முகத்தல் அளவை இவ் விரண்டையும் நேர்படுத்தினுனென்று சாசனங்கள் கூறுகின் றன. (970—கி. பி.)

சோழ நாட்டில் ஆதித்தியனுக்குப்பின் மதுராந்தகனும், அவனுக்குப்பின் முதலாம் இராஜராஜனும் (985—1013) பட் டத்துக்கு வந்தார்கள். இவர்களில் மதுராந்தகன் என்ற பெய ரே பாண்டிய நாட்டின் வீழ்ச்சியைத் தெரிவிக்கின்றது.

முதல் இராஜராஜன் 985-ல் பட்டத்திற்குவந்ததும் சோழ வம்சம் பெரும் புகழுடன் தலைநிமிர்ந்து நின்றது என்று முந்தி யே கூறியிருக்கின்றேம். "திருமகள்போல இருநிலச் செல்வி யும்" என்று தொடங்கும் இராஜராஜனின்மெய்க்கீர்த்தி பாண் டியர்களுடைய தோல்வியையும், சோழர்களுடைய வெற்றியை யும் நன்ருக தெரிவிக்கின்றது. இராஜராஜன் பாண்டியர்களை வென்றது மட்டுமன்றி, அப்பாண்டிய நாட்டைக் கடந்து மலை நாட்டிலிருந்த காந்தளூர்ச் சாலையில் கலம் அறுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது. மற்றும் அவன் அமரபுஜங்கனை வென்று விழிஞம் என்ற துறைமுகத்தைப் பிடித்ததாகவும் கூறுகிறது. ஆகவே பாண்டியர்களுக்கு உதவியாகக் கேரளர்கள் வந்திருக்க வேண்டுமென்று இதனல் தெரிகின்றது. அதுமுதல் பாண்டிய

நாடு உரிமை இழந்து இராஜராஜமண்டலம் என்ற பெயரோடு ஒரு மாகாணமாகிவிட்டது.

இராஜராஜனுக்குப்பின் புகழ்பெற்ற இராஜேந்திரன் பட்டத்திற்கு வரவே பாண்டியர்கள் ஒரு சிறிதேனும் தலைநிமிர முடியாமல் போய்விட்டது.

இராஜேந்திரன் I பாண்டிய மண்டலமட்டுமன்றி ஈழமண்டலத்தையும் வென்றான். ஈழ நாட்டில் பாண்டியன் வைத்திருந்த திருமுடியையும் இந்திர மாலையையும் மீட்டுவந்தான். தன் மகனை பாண்டிய நாட்டின் அதிபதியாக்கி அவனுக்குச் சோழபாண்டியன் என்ற பட்டப்பெயரையும் தந்தான். மதுரையில் ஒரு அரச மாளிகையும் கட்டினான். அதுமுதல் பாண்டியநாட்டில் சோழ இளவரசர்களே அதிபர்களாகிச் சோழ பாண்டியர் என்றபட்டத்துடன் ஆட்சிபுரிந்தார்கள். இவ்வாறு சோழ பாண்டியர் என்ற பெயரோடு இளவரசர்களை அனுப்பி ஆண்டது குலோத்துங்கன் பட்டத்திற்குவந்தகாலம் அதாவது 1070-ஆண்டு வரையில் மட்டும் என்க.

சோழர்களுடைய ஆட்சி தென்பாண்டி நாட்டிலும் உறுதியாய் இருந்தது என்பதற்கு ஒரு சான்று அம்பாசமுத்திரத்திற்கருகில் உள்ள மன்னார் கோயிலில் இருக்கிறது. இராஜேந்திரனுடைய 24-வது ஆண்டில் அவ்வூரில் கட்டப்பட்டபெருமாள் கோவிலுக்கு இராஜேந்திர சோழ விண்ணகரம் என்ற பெயர் இடப்பட்டதே அச்சான்று ஆகும்.

பாண்டிய நாட்டில் சோழர்கள் நியமித்த சோழபாண்டிய சாமந்தர்களின் ஆட்சிக்காலத்தில் சோழ மன்னர்களுடைய அதிகாரம் வேரூன்றியிருந்தது. அக்காலத்துக் கல்வெட்டுக்கள், சோழ மன்னர்களுடைய பெயராலேயே எழுதப்பட்டன. என்றாலும் பழைய பாண்டிய வம்சத்துச் சிற்றரசர்கள் அடிக்கடி தொந்தரவு கொடுத்துக்கொண்டுதான் இருந்தார்கள். அவர்கள் ஈழநாட்டு மன்னர்களோடு நட்புப்பூண்டு சில்லறைக்கலகங்களை

உண்டுபண்ணிக்கொண்டே இருந்தார்கள். இராஜாதிராஜச் சோழன் மூன்று பாண்டியச் சிற்றரசர்களை 1046-ல் தலைவாங்கி விட்டான். அவ்வாறு தோல்வியுற்றவர்களின் பெயர்கள் மாறு பரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் என்று கூறப்பட்டுள்ளன. இராஜாதிராஜன் ஈழத்தின்மீது படையெடுத்த போது அங்கு நான்கு மன்னர்களை முறியடித்தான். அவர்களில் ஒருவன் தமிழ் நாட்டிலிருந்து ஓடிப்போன விக்கிரம பாண்டியன் என்பவன்.

இராஜாதிராஜச் சோழனுக்குப் பின் வந்தவர்கள் வல்லமையின்றியும், சந்ததியின்றியும் மறைந்து போனார்கள் என்று அறிவோம். அப்போது சோழ நாட்டிற்கு உரிமை மன்னனாய் வந்தவன் பெண் வயிற்றுப் பேரனான குலோத்துங்கன். 1073ல் தெலுங்கு நாட்டிலிருந்துவந்து அரியாசனம் ஏறிய குலோத்துங்கன், விஜயாலய வம்சத்தார் கொண்டிருந்த உறுதிப்பாட்டோடு ஆளமுடியவில்லை. குலோத்துங்கனும், அவன் சந்ததியாரும் சோழ பாண்டிய பட்டத்துடன் பிரதிநிதிகளை நியமிக்கவும் இல்லை. ஆகவே பாண்டியர்கள் மீண்டும் தலைகாட்ட இடம் ஏற்பட்டது.

சோழர்களுடைய ஆட்சியில் பாண்டியநாடு சீர்திருத்தமடைந்தது. நிலத்துவரிகள் ஒழுங்காக்கப்பட்டன. ஊர்சபைகள் செவ்வையாக நிர்வாகம் நடத்தின. சமய நிலையங்களும் மற்ற அற நிலையங்களும் சரியாக நடத்தத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. திருவாலீசுவரம், சேரன்மாதேவி என்ற இடத்துச்சாசனங்கள் நில திட்டத்து ஏற்பாடுகளை எடுத்துரைக்கின்றன. வரித்திட்டங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன. ஆலயங்களேயன்றி மடங்களும் ஏற்பட்டு அறநிலையப்பாதுகாப்பிற்கு வேலை செய்தன.

மேலே கூறியபடி குலோத்துங்கனுப்பின் பாண்டியர்கள் மீது சோழர் அதிகாரம் சீர்குலையத் தொடங்கிற்று. அவ்வாறு சோழர்கள் ஆதிக்கம் சீர்குலையத் தொடங்கினபோது ஜடாவர்

மன் ஸ்ரீவல்லபன் என்ற ஒரு பாண்டியன் பாண்டிய நாட்டை ஆளத்தொடங்கி 23 ஆண்டுகள் வரை ஆட்சிபுரியத் தொடங்கினான். அவ்வாட்சியைப் பற்றிய சான்றுகள் குருவித்துறை, திருப்புத்தூர் முதலிய இடங்களிலுள்ளன. சோழர்களைப்போல தனக்கென ஒரு மெய்க்கீர்த்தியையும் இயற்றி வைத்துக்கொண்டான். "திருமடந்தையும், ஜெயமடந்தையும்" என்ற தொடக்கம் கொண்ட அந்த மெய்க்கீர்த்தியை ஆலயங்களில் வரைந்து வைத்தான். ஆகவே தங்கள் பண்டைய உரிமைகளை அரசன் மீண்டும் கைப்பற்றிக் கொண்டான் என்று இச்செயல்களால் அறியலாம். இவன் ஆண்டது குலோத்துங்கன் முதலாவன் காலம் என்று கூறலாம். ஆனால் குலோத்துங்கனுடைய அதிகாரம் முழுவதும் போகவில்லை என்பதற்குச் சான்றுகளாக அவனுடைய கல்வெட்டுகள் பல தென்பாண்டி நாட்டில் இருக்கின்றன என அறியலாம்.

ஜடாவர்மன் ஸ்ரீவல்லபனுக்குப் பின் மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய மெய்க்கீர்த்தி "திருமகள் புணர" என்று தொடங்குகிறது. அவனுக்குப்பின் ஜடாவர்மன் பராந்தகன் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய மெய்க்கீர்த்தி "திருவளர, செயம்வளர தென்னவர் தம் குலம்வளர" என்று தொடங்குகிறது. இவன் சேரனை வென்று கப்பம் பெற்றதாகக் கண்டிருக்கின்றது.

அவைகளைச் சீர்படுத்தி அவைகளில் தன் இலச்சனையாகிய கயலைப்பொறித்ததாக அது கூறுகிறது. இவ்வரசன் குமரிதெய்வத்திற்குத் தானம் செய்ததாகவும், சேரநாட்டில், காந்தளூர், விழிஞம் முதலியவைகளை வென்று கோட்டாற்றில் அரண் கட்டியதாகவும் தெரிகின்றோம். அவனுக்கடுத்தவன் மாறவர்மன், ஸ்ரீ வல்லபன் 1160 ஆண்டில் பட்டத்திற்கு வந்தான். இவனைப் பற்றிப் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. திருநெல்வேலி, சுசீந்திரம் முதலிய கோயில்களுக்குத் தானங்கள் செய்திருக்கின்றான்.

இவனுடைய மெய்க்கீர்த்தி "பூமகள் ஜெயமகள்" என்று தொடங்கும்.

இப்படியிருக்கையில் மதுரையில் ஒரு பராக்கிரம பாண்டியன் ஆண்டுகொண்டிருக்கவே குலசேகர பாண்டியன் என்ற மற்றொரு பாண்டியன் அவன்மீது போரிட்டு மதுரையை முற்றுகை இட்டான். அதனால் பராக்கிரம பாண்டியன் ஈழநாட்டு அரசனை பராக்கிரம பாகுவை உதவி கோரினான். அவன் இலங்காபுர தண்ட நாயகன் என்ற படைத்தலைவனோடு சிங்களச்சேனைகளை அனுப்பினான். அச்சேனைகள் வருவதற்குமுன் குலசேகரன் மதுரையைப் பிடித்து, பராக்கிரம பாண்டியனை மனைவி மக்களோடு கொன்றுவிட்டான். உதவிக்கு வந்த தண்ட நாயகன் பல போர்களைப்புரிந்து குலசேகரனைத் துரத்திவிட்டு பராக்கிரமனுடைய மகன் வீரபாண்டியனுக்கு முடிசூட்டினான். குலசேகரனோ சோழமன்னர்களிடம் உதவி கோரினான். சோழ மன்னர்கள் அனுப்பிய சேனைத்தலைவர்கள் ஈழநாட்டுச் சேனைகளை முறியடித்துத் துரத்திவிட்டார்கள். அவ்விதம் பாண்டியர்களில் நடந்த தாயாதிச்சண்டை வெகுகாலம் நீடித்து இருந்தது. ஈழநாட்டுச் சரித்திர நூலாகிய மகாவம்சத்திற்கும், தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களுக்கும் பல வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. குலசேகரன் பட்டத்திற்கு வந்த பிறகும்கூட, அவன் மகன் காலத்தில் வீரபாண்டியன் மறுபடியும் ஈழத்தரசனுடைய உதவிபெற்றுப் போருக்குவந்தான். சோழர்கள் சிங்களர்களுக்கு எதிராகப் போர்புரியவேண்டி வந்தது. இது நடந்தது குலோத்துங்கன் III-வது காலத்தில் சோழர்கள் மதுரையைப் பிடித்து அங்கே ஜயத்தம்பம் நாட்டினார்கள். அப்போது ஒரு விக்கிரம பாண்டியனுக்குச் சோழர்களால் பட்டங்கட்டப்பட்டது. 3-ம் குலோத்துங்கன் "பாண்டியாரி" என்ற பட்டமும் வைத்துக் கொண்டான் (1188). பாண்டியனை முடித்தலை கொண்டருளிய குலோத்துங்கன் என்ற விருது வைத்துக்கொண்டான். பின் வந்த 3-ம் இராஜராஜன் சக்தியற்றவனாய்ப்போக மதுரைப் பாண்டியர்கள் சுதந்திரம் பெற்று முன்னேறி வந்தார்கள்.

## 3. மேலை நாட்டு நிலை. (1000-1200)

கொங்கு நாட்டிற்கு மேற்கே உள்ளது மலை நாடு என்ற சேரநாடு. அச்சேரநாடே பிற்காலத்தில் கேரளநாடு என்ற பெயரால் வழங்கிவந்தது. சேரநாட்டைத்தமிழ்ச் சங்கத்தார் காலத்தில் சேரலிரும்பொறை, சேரலாதன், செங்குட்டுவன் முதலியோர்கள் ஆண்டு வந்தார்கள். பிறகு பல நூற்றாண்டுகள் வரைச் சேரமான்பெருமாள்கள் என்ற அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மன்னர்கள். அவர்களில் இறுதி மன்னன் மாகோதையார் என்ற சேரமான் பெருமாள். அவர் சுந்தரமூர்த்திகளுக்கு நண்பராகிக் கைலைசென்ற வரலாற்றை முன்னே கண்டோம். ஆனால் கேரளநாட்டில் வழங்கிவரும் ஒரு கர்ண பரம்பரைக்கதையின்படி இறுதியில் ஆண்ட சேரமான் தன்னுடைய நாட்டை 12 பிரிவுகளாகப் பிரித்து 12 சாமந்தர்களுக்குத் (குறுநிலமன்னர்கள்) தந்து விட்டு முகமதியனாகி மெக்கா சென்று விட்டான் என்று கூறுவர். இக்கதையின் உண்மை எவ்வாறான போதிலும் இறுதிச் சேரமான் தனது நாட்டை 12. பிரிவுகளாகப் பிரித்து விட்டுச் சென்றது உண்மையெனக் கொள்ளப்படுகின்றது. இப்பிரிவினை நடந்தது கொல்லம் ஆண்டின் தொடக்கமாகிய 825 கி. பி. யில் என்பர்.

சேரமான் பெருமான்கள் திருவஞ்சைக்களத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டகாலத்திலேயே அவர்களுக்குக் கீழ் 12 சாமந்த மன்னர்கள் இருந்தார்கள். அப்பன்னிருவருக்கும் நாட்டைப் பகிர்ந்து கொடுத்தபிறகு அவர்கள் ஒவ்வொருவரும் ஸ்வரூபிகள் அல்லது சுதந்திர அரசர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களுடைய நாட்டிற்கு ஸ்வரூபம் (அல்லது சுதந்திரநாடு) என்ற பெயர் ஏற்பட்டது. அவ்வாறு பிரிந்த 12 ஸ்வரூபங்களாவன.

1. நெடியிருப்பு கோழிக்கோடு

| | | |
|---|---|---|
| 2. | ஆரங்கோடு | வளளுவநாடு |
| 3. | பெரும்படப்பு | கொச்சி |
| 4. | திருப்பாப்பூர் | திருவிதாங்கூர் |
| 5. | குறும்பியாதிரி | குறும்பரநாடு |
| 6. | புறநாட்டுக்கரை | கோட்டையம் |
| 7. | கோளத்திரி | சிரக்கல் |
| 8. | போர்ளாத்திரி | கடத்தநாடு |
| 9. | தரூர் | பாலைக்காடு |
| 10. | பாப்புக்கோயில் | பெய்ப்பூர் |
| 11. | பரப்புக்கோயில் | பரப்ப நாடு |
| 12. | ஒன்றில் ஒருபகுதி | |

மேலே கண்ட 12 ஸ்வரூபங்களேயன்றி, 8 மகா சாமந்தர் களும் இருந்தார்கள். ஏரநாடு, வேணுடு, ஓனுடு, கோனுடு, கொடுக்குன்னிநாடு, கோலத்துநாடு, போலநாடு, தெக்கன், வடக்கன் கூறு என்ற 8 நாட்டுத்தலைவர்களும் மகாசாமந்தர் களாயிருந்தார்கள். இவர்களில் ஏரநாட்டுத்தலைவன் ஏராடி என்ற பட்டப்பேர் கொண்டவன். அவனே நெடியிருப்பு, ஸ்வரூபத்திற்குத் தலைவனுய் இருந்தான். அத்தலைவனுக்கு சாமூரி மன்னன் என்று பெயர். அவன் பிற்காலத்தில் கோழிக் கோடு என்ற ஊரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டான். கோழிக்கோடு என்ற பெயர் கோயில் + கோட்டை என்பதன் மருவு என்பர். கோயில்கோட்டை என்றால் அரண்மனைக் கோட்டை என்று பொருள். அப்பெயர்தான் பின்னாலே ஆங் கிலத்தில் காலிகட் (Calicut) என்றும் தமிழில் கள்ளிக் கோட்டை என்றும் வழங்கிவந்தது.

நெடியிருப்பு ஸ்வரூப மன்னனுக்கு இரண்டு பட்டப்பெயர் கள் உண்டு. ஒன்று சாமூதிரி திருமலபாடு என்பது. மற் றொன்று குன்னல கோனுத்திரி என்பது. சாமூதிரி, திருமலபாடு என்பது சுவாமி, திரி (ஸ்ரீ) என்பதின் மருவு என்பர். சாமூ திரி என்ற சொல் சாமூரி என்று மருவிற்றும். நம்பூதிரி என்ற

சொல் நம்பூரி என்று மாறினாற்போல. சாமூரி என்பதை வெள்ளையர்கள் (Zamorin) ஜாமொரின் என்று மாற்றிவிட்டார்கள். இனி குன்னல கோணதிரி என்ற சொல் குன்னு (குன்று) + அலை + கோன் + திரி என்று பிரிக்கப்படுமாம். அதற்குப்பொருள் மலைக்கும், அலைக்கும் அரசன் என்பதே. அச்சொல் பட்டப்பெயரில் மட்டும் குறிக்கப்படுகிறது.

தமிழ் இலக்கணங்களின்படி கொடுந்தமிழ்நாடுகள் (நன்னூல்) 12-ல் வேணாடு என்பது ஒன்று. வேணாடுதான் திருப்பாப்பூர் ஸ்வரூபம் என்பது. அது பிற்காலத்தில் திருவிதாங்கோடு ஆகி, தற்போது திருவாங்கூர் என்று வழங்குகிறது. பெரும்படப்பு ஸ்வரூபம் என்பது தற்போதைய கொச்சிராச்சியம். தரூர் ஸ்வரூபம் என்பது தற்போதைய பாலைக்காட்டுப் பிரதேசம். இவைகளுக்கெல்லாம் தனித்தனி மன்னர்கள் இருந்தார்கள்.

மேலே கூறிய 12 ஸ்வரூபங்களிலே கொங்குநாட்டிற்கு அணித்தாற்போல உள்ள ஸ்வரூபங்கள் பாலைக்காடும் கோழிக்கோடும் ஆகும். இந்த இரண்டுநாட்டுத் தலைவர்களும் கொங்கு நாட்டோடு அடிக்கடி சச்சரவுகள் செய்துகொண்டிருந்தார்கள் மேலும் கொங்குநாட்டிற்கும், மலைநாட்டிற்கும் அடிக்கடி போக்குவரவும் நடந்துகொண்டிருக்கக்கூடும். இவ்விரண்டு செயல்களுக்கும் ஏற்றதாக இருந்தது பாலைக்காட்டுக் கணவாய் என்று அறியவேண்டும்.

முதல் முதலாக கொங்கு நாட்டிற்கும் மலைநாட்டிற்கும் ஏற்பட்ட தொடர்பு கோவைக்கு அடுத்த வெள்ளலூர், தேனீசுவரர் கோயிலில் தீட்டப்பட்டிருக்கும் கல்வெட்டினால் அறியப்படுகிறது (147 & 148/1910). கோக்கண்டன் வீர நாராயணன் என்ற சேரமன்னனின் 11-ம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும், கோக்கண்டன் ரவி என்பவனுடைய 24-வது ஆண்டு கல்வெட்டு ஒன்றும் அங்கே இருக்கின்றன. இவ்விரு அரசர்களும்

சந்திராதித்திய குலத்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளார்கள். அக்கல்வெட்டுகளின்படி அவ்வூர் வேளிலூர் தென்னூர் என்றும், சுவாமியின் பெயர் நக்கனூர் என்றும் கூறப்பட்டுள்ளன. கல்வெட்டின் எழுத்துக்கள் 9-வது நூற்றாண்டு எழுத்துக்கள் என்றும், அவை வீர நாராயணன் என்ற பெயர் கொண்டு உள்ளதினால் பராந்தகன் I (905—947) காலத்தவை என்றும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஆகவே 9-வது நூற்றாண்டிலேயே சேரநாட்டு அரசர்கள் கோயமுத்தூருக்குத் தென்கிழக்கேயுள்ள வெள்ளலூர் வரை வந்திருக்கின்றார்கள் என்று இக்கல்வெட்டுக்களால் அறிகிறோம். அவ்வாறு வந்த அரசர்கள் இன்னார்தாமென்று உறுதியாகக் கூறுவதற்கு வகையில்லை.

வெள்ளலூர் கல்வெட்டில் நக்கனூர் மண்டபத்தை கட்டின இரண்டு அரசர்களும் தகப்பனும், மகனும் ஆக இருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அவர்களில் கோகண்டனுடைய மகன் ரவி என்று இருக்கும்பட்சத்தில் இவர்கள் இருவர்காலத்தில் சேர்ந்து ஒரு மண்டபம் கட்ட வேண்டிய அவசியம் என்ன என்று ஐயப்பாடு நேருகிறது. இந்த இரண்டு கல்வெட்டுகளும் வெவ்வேறு தூண்களில் பொறிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே முன்னிருந்த நக்கனூர் மண்டபம் அழிந்துபோக அதிலிருந்த தூண்களை வேறொரு மண்டபத்திற்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கலாமென்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் நினைக்கின்றார். மேலும் தஞ்சைக்கு அருகிலுள்ள திரு நெய்த்தானம் நெய்யாடி அப்பர் கோயிலில் சேரமான் கோக்கண்டன் என்ற பெயர் காணப்படுகின்றது. அக்கல்வெட்டின்மேல் வேறு ஒன்றில் வரகுணப் பெருமானார் என்ற ஒருவர் தானம் செய்ததாக எழுதப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டையும் இணைத்து மேல்கண்ட கோக்கண்டன் வரகுண வர்மன் காலத்தில் அதாவது 9-வது நூற்றாண்டின் இடையில் இருந்திருக்கவேண்டுமென்று கல்வெட்டு ஆராய்ச்சி

யாளர் கூறுகின்றார். ஆகவே 9-ம் நூற்றாண்டிலேயே மலை நாட்டு அரசர்கள் கொங்குநாட்டிற்கு வந்திருக்கிறார்கள் என்பது ஒருவாறு தெரிகின்றது.

கோவைக்குத் தென்மேற்கே 25 கல்லில் உள்ள சித்தூர் என்ற ஊர் கொச்சி ராச்சியத்திற்குச் சேர்ந்தது. அங்கே தமிழும், மலையாளமும் பேசப்படுகின்றது. அவ்வூர் கிராம தேவதையின் பெயர் சித்தூரியம்மன் என்பது. அக்கோயில் ஊர்மத்தியில் வெட்டவெளியில் கட்டப்பட்டிருக்கிறது. அதற்குப் பின் புறத்தில் பழையனூர் பகவதியம்மன் கோயில் இருக்கிறது. இவ்விரண்டும் மேற்குப்பார்த்த சன்னிதிகள். சித்தூரியம்மன் கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை மாசித்திங்கள் அமாவாசையில் கொங்கப்படை என்ற ஒரு உற்சவம் நடக்கின்றது. அன்றையதினம் இரவில் அம்மனை எழுந்தருளப்பண்ணி உயிர்ப்பலிகள் கொடுத்து வாலிபர்கள் போர்புரிகிறதைப்போல் விளையாடி நடித்துப் பிறகு பூசாரி, கொங்கப்படை ஓலையை வாசித்து பூஜை நடத்தின பிறகு திருவிழா முடிவுபெறும்.

இத்திருவிழா இன்றைக்கும் நடைபெறுகிறது. இதைப் பற்றி பல ஆராய்ச்சி நூல்களும் மலையாளத்தில் எழுதப்பட்டுமுள்ளன. கொல்லமாண்டு 71ல் அதாவது சுமார் 1000-ஆண்டுகளுக்கு முன் கொங்குநாட்டரசன் மலையாள நாட்டின்மீது படையெடுத்துச் சென்றதாகவும், அந்நாட்டுப் பெரிய தரைவாட்டுக் குடும்பங்கள் எதிர்த்ததாகவும் அவ்வெதிர்ப்பினால் கொங்கரை நிறுத்தமுடியாமல் போக கிராமதேவதையாகிய சித்தூரியம்மனைத் துதித்ததாகவும், அவ்வம்மன் தோன்றி கொங்கநாட்டரசன் மேல் சென்று அவனை வெட்டி, வாளை ஆற்றில் கழுவினதாகவும், அதனால் அவ்வாற்றின் பெயர், வாளையாறு என்று ஏற்பட்டதாகவும், அந்த அம்மன் அந்த வகையில் மலையாளக்குடும்பங்களைப் பாதுகாத்ததாகவும், கொங்கப்படை வரலாறு வழங்குகின்றது. கொங்கப்படைமூலமுரி என்ற ஓலைச் சுவடி இந்நாளிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அதுதான்

உற்சவத்தில் படிக்கப்படுகின்றது. இக்காலத்திலும் சித்தூரில் பள்ளிப் பெண்கள் இந்தக் கதையைக் கூறும் பாடலை கை கொட்டிக் களியாகப் பாடுகிறார்கள். அது

" முத்தொடு தாமர குணமுள்ளகொங்கு
மாராஜனே கேள்
முந்தின நாடு வாழாதே மந்தன்னு
சங்கீத கர்ப்பாசன ணுய்
எத்திதர நான் கொழிச்சங் கிருந்து
தங்களை வன்னு காண்பான்
ஏகேள் உதவி குடியே நாளில்
இங்ஙனே வண்ணு கண்டு "

இவ்வாறு தொடங்குகின்றது. இந்த செய்யுளின்படி போருக்கு வந்த கொங்குநாட்டு அரசன் பெயர் இராஜாதி ராஜன் என்பது. போரில் எதிர்த்த நாயர் குடும்பங்கள் இக் காலத்திலும் கொங்கப்படை உற்சவத்தில் கலந்துகொள்ளு கிறார்கள். கொங்கப்படைப்போர் நிகழ்ந்த காலத்தில் கொங்கு நாட்டரசன் போரில் இறக்க அவனோடு சென்ற சில தமிழ்ப் போர்த்தலைவர்கள் சித்தூரிலேயே தங்கிவிட்டதாக கர்ணபரம் பரைக் கதையுண்டு. அவர்கள் தங்கள் தமிழ்மொழியை மறந்துவிட்டு மலையாளமொழியை ஏற்றுக்கொண்டு அந்நாட்டு மக்களாகவே ஆகிவிட்டார்களாம். இதற்குச் சான்றாக கொங்குநாட்டு பட்டப்பெயர்களில் மன்றாடியார், என்ற சொல் மலையாள எல்லைப்புறத்திலும் சில குடும்பங்களில் வழங்குவ தாகக் காட்டுவார்கள். (அங்கராத்து, வடசேரிக்குடும்பங்கள்).

கொங்கப்படைப் போர் 1000-ஆண்டுகளுக்குமுன் நடந் திருப்பின் அப்போது கொங்கு நாட்டில் விக்கிரம சோழன்' முதலாவதன் முதலாகக் கொங்கு சோழ வம்சம் தொடங்கிய காலமாக இருக்கவேண்டும். சில ஆராய்ச்சியாளர்கள் சோழ நாட்டு இராஜாதிராஜன் கொங்குநாட்டின் வழியாக வந்து சித்தூரின் பேரில் படையெடுத்திருக்கலாமென்று கூறுகிறார் கள். ஆனால் அவ்விதமான படையெடுப்பு நிகழ்ந்ததாக சோழ

சரித்திரத்தில் இல்லை. ஆகவே இப்படையெடுப்பு கொங்கு நாட்டு அரசர்களுக்கும் மலேயாளநாட்டுச் சிற்றரசர்களுக்குமே நடந்திருக்க வேண்டுமென்று கூறலாம்.

## 4. வடபால் நாட்டின் நிலை (1000—1200).

கொங்கு நாட்டிற்கு வடபுறத்தில் உள்ளநாடு கங்கவாடி என்ற கங்கர் ஆண்ட பிரதேசம். அதற்கும் வடக்கே உள்ளது ஹொய்சளர்கள் ஆண்ட துவாரசமுத்திரப்பிரதேசம். இந்த இரண்டு நாடுகளும் கன்னடம் பேசுகிற நாடுகள். கொங்கு சோழர்கள் ஆண்ட காலத்தில் அதாவது 10 முதல் 13 ஆம் நூற்றாண்டுகள் வரை இந்தக்கன்னட நாடுகள் என்ன செய்து கொண்டிருந்தன என்று அறியவேண்டியது அவசியமல்லவா? ஏனெனில் அவ்விரு கன்னட நாடுகளும் கொங்கு நாட்டைப் பல வீதங்களிலும் அலைக்கழித்திருக்கின்றன என்று அறியவேண்டும்.

முன் பகுதியில் தலைக்காட்டில் ஆண்டுவந்த கங்கவம்சத்து மன்னர்கள் எந்த வகையில் கொங்கு நாட்டின் வடபகுதியைத் தம்ஆட்சிக்குள் சேர்த்துக்கொண்டு ஆண்டுகொண்டிருந்தார்கள் என்று கூறியிருக்கிறோம். அப்போது கொங்கு நாட்டில் அவர்களுடைய சமயக்கொள்கைகளைப் புகுத்தி அதனால் சமண சமய இலக்கியங்களும் ஏற்பட்டன என்றும் அறிவோம்.

கொங்கு நாட்டின் ஆட்சி முறையும், கங்கர்கள் தங்கள் நாட்டில் கொண்டிருந்த முறை வழியே அனுசரிக்கப்பட்டது கன்னட மொழியும், அதனைப் பேசும் மக்களும் தெற்கே குடியேறவும் தொடங்கினார்கள்.

இப்படியிருக்க, கங்க வம்சம் 9-வது நூற்றாண்டில் க்ஷீண நிலையை அடைந்தது. சோழ அரசன் தலைக்காட்டைப் பிடித்து கங்க வம்சத்தைத் தொலைத்தான். அதுமுதல் கொங்கு நாடு சோழர்கள் கைக்கு வந்ததென்று முன்னமே கூறினேன். அந்தச் சமயத்தில் மைசூர் சீமையில் ஹாசனவட்டத்தில் உள்ள

பேலூர் என்ற இடத்தில் ஹொய்சள வள்ளாளர்கள் தோன்றினார்கள். சளன் என்ற வீரனுடைய சந்ததியார்களாகத்தோன்றின் ஹொய்சளர் வம்சம் நாளுக்குநாள் வல்லமை பெற்று முன்னேறத்தொடங்கிற்று. அவ்வம்சத்து அரசர்கள் 11-ஆம் நூற்றாண்டுமுதல் 14-ஆம் நூற்றாண்டுவரை மிக்க புகழோடு ஆண்டார்கள். தமிழ் நாட்டிலும் புகுந்து, அதனிலும் பெருங்குழப்பம் செய்யத் தொடங்கினார்கள். அந்த வம்சத்திலும் முதலில் தோன்றியவர்கள் சமணர்களே.

அவர்களில் மூலபுருஷன் சளன் என்பவன் ஒரு துறவியைக்கொல்ல வந்த ஒரு புலியைத் தன்னந்தனியாகச் சண்டையிட்டுக்கொன்றவனும். அதனால் அவ்வம்சத்தார் பிருதும், அந்த சித்திரத்தைக் குறியாகக் கொண்டிருந்தது. அவ்வரசர்கள் வினயாதித்தியன் (1047—1100), வள்ளாளன் I, (1101—1104). பிட்டிதேவன் (1104—1141), நரசிம்மன் (1136—1171), வள்ளாளன் II (1172—1219) என்றவர்கள் முதல் அரசர்கள். வினயாதித்தியன் காலத்தில் தலைநகரம் துவாரசமுத்திரத்திற்கு மாற்றப்பட்டது. அது இப்போது ஹளேபீடு(=பழைய வீடு) என்றபெயரால் வழங்குகிறது. வினயாதித்தியன் தலைநகருக்குச் சுற்றியுள்ள பிரதேசங்களையெல்லாம் பிடித்ததன்றிக் கங்க நாட்டுத் தலைக்காட்டையும் பிடிக்க முயன்றான். ஆகவே அவனுடைய அரசு கொங்குநாடு வரை எட்டிவிட்டது. வினயாதித்தியனுக்குப் பின் அவனுடைய பேரன் வள்ளாளன் I சிலநாள் ஆண்டான். அவனுக்குப் பிறகு 2-வது மகன் பிட்டிதேவன், 1104-ல் பட்டத்திற்கு வந்தான். பிட்டிதேவன் மிக வல்லவன். அவனுடைய படைத்தலைவன் தலைக்காட்டைப் பிடித்து மேல் கொங்கு நாட்டைத் தன் வசப்படுத்திக்கொண்டான்.

கன்னட நாட்டில் தமிழ்ச்சோழர்களுடைய ஆட்சி மக்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே வெகுஎளிதில் கங்கைவாடி ஹொய்சளர் வசம் சேர்ந்துவிட்டது. முதலில் சாளுக்கியரின் சிற்றரசனாக இருந்த பிட்டிதேவன் சுதந்திரம் பெற்றுத் தன்

னிச்சைப்படி ஆட்சி செய்யத் தொடங்கினன். அவன் காலத்தில் முற்பகுதியில் சமணசமயம் மிகுதியாகப்போற்றப்பட்டு வந்தது. அவனுடைய முதல் மனைவி சாந்தலா தேவி சமண சமயத்தைச் சேர்ந்தவள். அவள் 1130-ல் இறந்துபோக 2-வது மனைவியாக இலட்சுமி தேவி என்பவளை மணந்துகொண்டான். அந்தக் காலத்தில் சோழநாட்டிலிருந்த இராமானுஜர் அந்நாட்டு அரசனுடையகொடுமை பொறுக்க முடியாமற்போய்க் கன்னட நாட்டிற்கு வந்து சேர்ந்தார். நாளாவட்டத்தில் பிட்டிதேவனைத் தம் வசப்படுத்திக்கொண்டு வைணவமாக்கிவிட்டார். அவன் பெயரும் விஷ்ணுவர்த்தனன் என்று மாற்றப்பட்டது. அதுமுதல் அந்நாட்டில் சமணசமயம் குலைந்துபோய் வைணவ சமயம் பெருகிற்று. பின்வந்த ஹொய்சள வம்சத்தார்கள் வைணவத்தையும் சைவத்தையும் பின்பற்றினர்கள். ஆனால் சமண மதத்தை முற்றும் வெறுக்கவில்லை. அந்த மூன்று விதமான சமய நிலையங்களுக்கும் தானங்கள் கொடுத்து வந்திருக்கிறார்கள். பிட்டிதேவன் காலத்தில் ஹொய்சளர்களுடைய இராஜ்யம் மிகவும் பெருகினதன்றி அமைதியும் வல்லமையும் பெற்று விளங்கியது.

பிட்டிதேவனுக்குப் பின் அவன் மகன் நரசிம்மன் பட்டத்திற்கு வந்தான். அவன் மிகவும் குணசாலி. நாட்டைச் செம்மையாக ஆளவேண்டும் என்ற கருத்தைக்கொண்டவன். ஆகையால் போர்களில் இறங்கவில்லை. அவன் 1171-ல் நல்ல பெயர்பெற்று இறந்துபோகவே அவன் மகன் வீர வள்ளாளத் தேவன் பட்டத்திற்கு வந்தான். அவன் ஒரு பெரிய வீரன். வடக்கேயிருந்த கால சூரியர்கள், யாதவர்கள் என்ற மன்னர்களோடு போர் தொடுத்துக் கிருஷ்ணா நதி வரையில் தன்னுடைய ராச்சியத்தை நீட்டிக்கொண்டான். அவனுடைய காலத்தில் ஹொய்சள ராச்சியம் மிக உறுதியோடு நிலைத்திருந்தது. வடக்கே கிருஷ்ணா மட்டும் எட்டியிருந்த அவனுடைய ராச்சியம் தெற்கே தமிழ் நாடு வரைக்கும் சென்றிருந்தது.

வீரவள்ளாளனுக்கு II-ம் நரசிம்மன் என்ற மகன் தோன்றினன். அவன் 1183-ல்பிறந்து 1220-ல் பட்டத்திற்குவந்தான்.

இவனும் ஒரு பெரிய வீரன். இவன் பட்டத்திற்கு வந்த காலத்தில் சோழர்களுடைய ஆட்சி நிலைகுலுங்கத் தொடங்கிற்று. மதுரைப் பாண்டியர்கள் முன்னேறத் தொடங்கினார்கள். சோழ நாட்டில் 1215-ல் 3-ம் குலோத்துங்கன் இறக்க 3-ம் இராஜராஜன் (1216–1248) பட்டத்திற்கு வந்திருந்தான். இவன் சக்தியற்றவனென்றும் கோப்பெருஞ்சிங்கன் என்ற சிற்றரசனால் தோல்வியடைந்து சிறையடைந்தான் என்றும் முன்னமே கூறியிருக்கிறோம். அவன் பட்டத்திற்கு வந்த ஆண்டாகிய 1216-லேயே பாண்டிய நாட்டிற்கு மாறவர்மன் சுந்தரபாண்டியன் 1 பட்டத்திற்கு வந்தான். அச்சுந்தரபாண்டியன் சோழர்களைத் துரத்திக்கொண்டு ஹொய்சளர்நாடுவரைக்கும்வந்துசேர்ந்தான். ஹொய்சளர் நாட்டிற்கு முடிசூடின நரசிம்மனோ பேராசையுற்று சோழ நாடுகளின்மீது படையெடுத்து வந்தான். 1224-ல் கொங்கு நாட்டிற்குள் புகுந்து தென்கிழக்கே படையெடுத்துச் சென்றான். அதே ஆண்டில் சீரங்கத்திற்கு வடக்கேயிருக்கும் கண்ணனூரைப் பிடித்து அங்கே நன்கு அமர்ந்துகொண்டான். தன் வெற்றிக்கு அறிகுறியாக கண்ணனூரில் போசலேசுவரம் என்ற கோயிலையும் கட்டினான். இவ்வாறு வெற்றியடைந்த 3-ம் இராஜராஜனை வீடுவித்து பெரும்புகழும் பெற்றான். அதனைக்கூறும் ஒரு பட்டமும் வகித்துக்கொண்டான்.

மேலே கூறியபடி சோழர்களுடைய இராச்சியத்தை வடக்கேயிருந்த ஹொய்சளர்களும் தெற்கேயிருந்த பாண்டியர்களும் பாகம் செய்துகொள்ளத் தொடங்கினர். இதன் விளைவாகச் சோழராச்சியம் ஒன்றுமில்லாமற் போய்விட்டது. ஹொய்சளர்களுக்கும் பாண்டியர்களுக்கும் பகை மூளவும் தொடங்கிற்று. இந்தப் பகைமை கொங்கு நாட்டையும் ஒருவாறு பீடித்தது. 1233-ல் 2-ம் ஹொய்சள நரசிம்மன் இறந்தான். அவனுக்குப் பின் அவனுடைய மகன் வீரசோமேசுவரன் பட்டத்திற்கு வந்தான். இவன் அதிகமாகப் போர்புரியவில்லை. மாறவர்மன் சுந்

திரபாண்டியன் II (1238—1251) என்ற பாண்டியனேடு சமா தான முறையில் ஆட்சி புரிந்து வந்தான்.

மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப் பின் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251—61) பட்டத்திற்கு வந்தான். அவ னுக்கோ ஹொய்சளர்கள் தமிழ் நாட்டில் இருப்பது பிடிக்க வில்லே. ஆகவே வீர சோமேசுவரனேத் தமிழ் நாட்டிலிருந்து துரத்த முயன்முன். வீர சோமேசுவரன் 1254-ல் இறந்தான். அவனுக்கு இரண்டு மக்கள் இருந்தார்கள். அவர்களுக்குள் ஒற் றுமையின்றித் தங்கள் நாட்டை இரண்டாகப் பகிர்ந்து கொண் டார்கள். அவர்கள் 3-ம் நரசிம்மனுக்கு மைசூர் பகுதி முழுவ தும் கிடைத்தது. 2-ம் மகனுன வீர ராமநாதனுக்கு மற்றபகுதி யாகிய தமிழ்நாடு கிடைத்தது. நரசிம்மன் 1293 வரைக்கும், வீரராமநாதன் 1295 வரைக்கும், ஆண்டார்கள். பாகப்பிரிவினே யின் பிறகு இருவருக்கும் சண்டைத் தொல்லேயில்லாமலிருந் தது. வீரராமநாதனுடைய நாடுகளில் கொங்கு நாடு முழுவது மன்றித் திருச்சி, பெல்லாரி இவைகளும் இருந்தன. இராமநாத னுக்குப் பிறகு அவன் மகன் விசுவநாதன், 4, 5 ஆண்டுகள் மட்டும் ஆண்டான். பிறகு அவனுடைய பகுதி மற்ற பகுதிக ளோடு சேர்ந்து கொண்டது. அவ்வாறு சேர்ந்த முழு இராச்சி யத்திற்கும் நரசிம்மனின்மகன் 3-ம் வள்ளாளன் தலேவனுனன்.

ஆனல் தெற்கே மதுரையில் ஆண்டுகொண்டிருந்த பாண் டியர்கள் சும்மா இருக்கவில்லே. ஹொய்சளர்களேச் சிறிது சிறி தாக வடக்கே துரத்தத் தொடங்கினர்கள். இந்தச் சமயத்தில் அதாவது 14-வது நூற்றுண்டுத் தொடக்கத்தில் தென் இந்தி யாவிற்கே எதிர்பாராத ஒரு விபத்து ஏற்பட்டது. அந்த விபத் துதான் டெல்லியிலிருந்த முகம்மதிய சுல்தானின் படை யெடுப்பு. அந்தப்படையெடுப்பினுல் தேவகிரி யாதவர்களும் ஒருகல்லுக் காகதீயர்களும் (Warangal), துவார சமுத்திரம் ஹொய்சளர்களும், மதுரைப் பாண்டியர்களும் ஒருமிக்க அழிந்து போனர்கள். அதைப்பற்றி பின்னல் விவரிப்போம்.

## 5. பாண்டியர் பெருக்கம். (1190-1238).

இதுவரை கொங்கு சோழர்கள், ஆண்ட மூன்று நூற்றுண்டுக்களில் கொங்கு நாட்டைச் சுற்றியும் இருந்த சோழ, பாண்டிய, கேரள, ஹொய்சள, நாடுகளில் நடந்த வரலாறுகளைச் சுருக்கமாகக் கூறினேம். அவ்வாறு கூறுகையில் அந்தந்த நாடுகள் கொங்கு நாட்டை எந்த முறையில் நடத்தி வந்தார்கள் என்ற விவரங்களையும் கூறியிருக்கின்றேம். தமிழ் நாடு முழுவதையும் ஒன்று சேர்த்து ஒரு குடையின் கீழ் ஆண்டுவந்த சோழவம்சம் 13-வது நூற்றுண்டின் முதலில் குடைசாயத் தொடங்கவே, அந்த சந்தர்ப்பத்தைப் பின்பற்றிக் கொண்டு மதுரைப் பாண்டியர்கள் முன்னேறத் தொடங்கினர்கள் என்று மேலே குறிப்பிட்டோம். அவர்களுடைய முன்னேற்றமானது கொங்கு நாட்டையும் பாதித்தது. ஆகவே எந்த முறையில் பாண்டியர்களுடைய முன்னேற்றம் வலுவடைந்தது என்று ஓரளவாவது இந்த இடத்தில் விரித்துரைக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

முதன் முதலில் பாண்டியர்களுடைய முன்னேற்றத்திற்கு அடிகோலினவன் ஜடாவர்மன் குலசேகரன் I (1190-1216). 12வது நூற்றுண்டில் மதுரைப்பாண்டியர்களுக்குள் ஏற்பட்ட தாயாதிச்சண்டையில் வெற்றியடைந்த விக்கிரமபாண்டியனுக்குப்பின் இந்தஜடாவர்மன் குலசேகரன்தான்பட்டத்திற்கு வந்தவன். இவனே பாண்டிய மறுமலர்ச்சிக்குக் காரணமானவன். அதாவது பாண்டியர்களின் 2ம் பேரரசுக்கு மூல புருஷனாய் விளங்கினவன். இவன் பெரும் புகழோடு 1216 வரை ஆண்டு வந்தான். இவனுடைய மெய்க்கீர்த்திகள் "பூதலமடந்தை, பூவின்கிழத்தி, பூதலவணிதை", என்ற தொடக்கங்களோடு வரையப்பட்டிருக்கின்றன. இம் மெய்க்கீர்த்திகளை அழகிய கவிதைகள் என்று கூறலாம். அவற்றுள் வரலாற்றுப்பகுதிகள் இல்லை. ஆனால் "பூதலவனிதை" என்ற மெய்க்கீர்த்தியில் மட்டும்,

" வஞ்சினம் கூறும் மதகளிறு இவர்ந்த
வெஞ்சின வேங்கை வில்லுடன் ஒளிப்ப "

என்று இருக்கிற அடிகளைக்கொண்டு பாண்டிய அரசு தலைசிமீ ரத்தொடங்கிற்று என்பதைமட்டும் யூகிக்கலாம். அச்செய்யுளில் வேங்கை என்னும் சொல் சோழனையும், வில் என்ற சொல் சேரனையும் குறிக்கின்றன. இவ்வரசனுடைய கல்வெட்டுக்கள் சேரன் மாதேவி, களவழி நாடு, முதலிய இடங்களில் இருக்கின்றன.

கல்வெட்டுக்களின் பரப்பைக்கொண்டு இவ்வரசனுடைய ஆட்சி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்ற வட்டங்களில் பரந்து இருந்தன என அறியலாம். மேலும் இவனுடைய சிங்காதனங்களுக்குத் தனித்தனிப் பெயர்கள் கொடுத்திருந்ததும் வியக்கத்தக்கது. மதுரையில் "புகழாபரணன்" என்ற மண்டபத்தில் "மழவராயன்" என்ற பெயரோடு ஒரு ஆசனமும், வேறு இடங்களில் "காளிங்கராயன் முனையதரையன்" என்ற பெயர்களோடு வேறு சில ஆசனங்களும் இருந்தனவாம். மற்றும் "இராஜ கம்பீரன் என்ற பட்டப் பெயரையும் இவன் வகித்திருந்தான்.

குலசேகரனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தவன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (1216—37), இவனுடைய மெய்க்கீர்த்தி 'பூமருவிய திருமடந்தையும்' என்பது. இவன்பட்டத்திற்கு வந்த பிறகு சோழ நாட்டின்மீது படையெடுத்துத் தஞ்சையையும், உறையூரையும், பாழ்படுத்திச் சோழர்களுடைய திருவோலக்க மண்டபத்திலே வீராபிஷேகம் செய்துகொண்டு வடக்கே சென்று தில்லை நடராசனை வழிபட்டு அங்கே சிறிது காலம் தங்கியிருந்தான். அங்கிருந்துகொண்டு தோற்றுப்போன சோழனை அழைத்து அவனுடைய நாட்டை அவனுக்கே அளித்துவிட்டுத் தானே 'சோழபதி', சோணாடு கொண்டருளிய' 'சோணாடு வழங்கியருளிய' என்ற விருதுக்களை வைத்துக் கொண்டான். இவ்வாறு தான் வென்ற நாட்டை தோல்வியுற்ற

வனுக்கே கொடுத்த செய்கை மிகுந்த பெருமையையும், புகழும் தந்தது. சுந்தர பாண்டியனின் 20-வது ஆண்டில் வடகொங்கு நாட்டரசன், அவனிடம் வந்து தனக்குத் தன்உறவினர் செய்த தீங்குகளைப்பற்றி விண்ணப்பித்துக் கொண்டான். பிறகு தென் கொங்கு நாட்டரசனும் அதே வகையில் பாண்டியன் அடிபணிந் தான். அவ்விருவரையும் சிறிது காலம் தன்னிடம் வைத்துக் கொண்டிருந்து அவர்களுடைய நாடுகளில் சில பகுதிகளைப் பெற்றுக்கொண்டு அனுப்பிவிட்டான். இவ்வாறு சுந்தர பாண் டியன் கொங்கு நாட்டு விஷயங்களில் தலையிட்ட விவரங்கள் செவ்வையாகத் தெரியவில்லை. அவ்வரசர்களின் பெயர்களும் நன்கு அறியமுடியவில்லை.

சுந்தரபாண்டியனின் கடைசி நாட்களில் சோழன் நன்றி மறந்தவனுய்க் கப்பம் கட்டுவதை நிறுத்திக் கலகம் செய்தான். பாண்டியன் மீண்டும் சோழ நாட்டின்மீது சென்று சோழனைத் தோற்கடித்தான் (1235).

பாண்டியரும், சோழரும், ஹொய்சளரும் அடிக்கடி போர் களில் ஈடுபட்டிருந்த போதிலும் ஒருவருக்கொருவர் திருமணக் கலப்பு செய்துகொண்டிருந்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. கல்வெட்டுக்களில் அரச குடும்பங்களுக்குள் ஏற்பட்டிருந்த உறவு முறைகளும் கூறப்பட்டுள்ளன. அந்தக்காலத்தில் ஒரு வியப்புக்கிடமான செய்தி என்னவென்றால் ஒருவருக்கொருவர் போர்புரிந்து தோற்கடித்த காலையிலும், தோல்வியுற்றவனைப் பட்டத்திலிருந்து நீக்காமல் கப்பம் மாத்திரம் பெற்றுக்கொண்டு ஆட்சி செய்ய விட்டுவிடுவது வழக்கம் என்று அறிகிறோம்.

தோல்வியுற்ற சோழனை மீண்டும் ஆட்சி செய்ய விட்டது போலக் கொங்கு நாட்டிலும் கொங்கு அரசர்களே ஆட்சிபுரிய விடப்பட்டார்கள் என்று அறியவேண்டும்.

## 6. பாண்டியப் பேரரசு (1238—1303).

மதுரைப் பாண்டியர் சரிதத்தில் ஒரு விசித்திரமான ஆட்சி முறையைக் காண்கின்றோம். ஒரே காலத்தில் சேர்ந்தாற்போல

இரண்டு இரண்டு அரசர்கள் ஆட்சி புரிவதைக் காண்கிறோம். ஒரே ஆண்டில் இரண்டு அரசர்களுடைய பெயர்களைக்கண்டால் அவர்கள் எவ்வாறு ஆட்சி புரிந்தார்கள் என்று நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அரசர்களுடைய பெயர்களும் மாறி மாறி வந்து கொண்டிருக்கும். அவர்களுடைய அடைமொழிகளால் தான் ஒருவரை யொருவர் வேறுபடுத்த வேண்டியிருக்கும். அவ்வடைமொழிகள் ஜடாவர்மன், மாறவர்மன் என்பன. சோழர்கள் இராஜகேசரி, பரகேசரி, என்று மாற்றி மாற்றி வைத்துக் கொண்டதுபோலப் பாண்டியர்களும் மாறவர்மன், ஜடாவர்மன் என்று மாற்றி மாற்றி புனைந்திருக்கலாம். ஸ்பார்டா (Sparta) நகரத்தில் இரண்டு அரசர்களும் ரோம் நகரத்தில் இரண்டு கான்சல்களும் (Consul) ஆட்சிபுரிந்தாற்போல பாண்டியர்களும் இவ்விருவேராக ஆண்டிருக்கக் கூடுமென்று ஊகிக்கலாம்.

(1) மாறவர்மன், சுந்தரபாண்டியன் I க்குப் பிறகு ஜடாவர்மன், குலசேகரன் II, (1237—1260), மாறவர்மன் சுந்தர பாண்டியன் II (1238—1255) என்றவர்கள் பட்டம்வகித்தார்கள். மாறவர்மன் சுந்தரனுடைய மெய்க்கீர்த்தி 'பூமலர் திருவும் பொரு ஜெயமடந்தையும்' என்று தொடங்குகிறது. இவன் அநேக தர்மதானங்கள் செய்திருக்கிறான். கோயில்களில் திருப்பதிகங்களைப்பாட ஒழுங்கு செய்திருக்கின்றான். இவன் காலத்தில் அரசியல் உறவுகள் வெகுவாக மாறவில்லை. ஹொய்சளர்கள் உறவு முறையில் அடிக்கடி வந்துகொண்டிருந்தார்கள். தென்பாண்டி நாட்டில் ஒரு ஊருக்கு வீரசோமேசுவரனுடைய பெயரை இட்டதும், ஒருமுறையில் திருநெல்வேலியில் ஹொய்சள தண்ட நாயக்கன் வந்திருந்ததும் குறிக்கத்தக்கவை. புதுக்கோட்டைத் திருமெய்யத்தில் ஹொய்சளப் படைத்தலைவன் அப்பண்ண தண்ட நாயக்கன், வைஷ்ணவர்களுக்கும், சைவர்களுக்கும் ஏற்பட்டிருந்த ஒரு வழக்கைத் தீர்த்தானும். ஆகவே அக்காலத்தில் பாண்டியர்களுக்கும் ஹொய்சளர்களுக்கும் பகை

குறைந்துபோய், அன்யோன்யமாக வாழ்ந்திருக்க வேண்டுமல்லவா?

(2) மாறவர்மன் சுந்தரன் II-க்குப் பிறகு ஜடாவர்மன் சுந்தரன் I (1251—1271), ஜடாவர்மன் வீரபாண்டியன் (1254—1271) ஆட்சிக்கு வந்தார்கள். இவர்கள் காலத்தில் தான் பாண்டியப் பேரரசு உன்னத நிலை அடைந்தது. அவ்வரசு தென்னிந்தியா முழுவதையும் தன்னுட்கொண்டு, வடக்கே கடப்பை, நெல்லூர் வரைக்கும் எட்டியிருந்தது. சோழநாடும், கொங்கு நாடும் பாண்டியர் கைக்குள் சென்றுவிட்டன. ஹொய்சளர் ஆட்சி மைசூர் அளவில் நின்றுவிட்டது. ஈழ நாடும், கேரளமும் திரைகொடுக்கச் சம்மதித்தன. இந்த வெற்றிகள் எல்லாம் பாண்டியர்களுடைய இளவரசர்களாலேயே கொண்டு வரப்பட்டன. அவ்வெற்றிகளுக்கு முக்கிய காரணமாயிருந்தவன் ஜடாவர்மன் வீரபாண்டியன் என்ற துணை அரசனே.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் 1251-ல் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய மெய்க்கீர்த்தி 'எம்மண்டலமும் கொண்டு அருளிய' என்று தொடங்கும். மற்றொரு மெய்க்கீர்த்தி 'பூமலர் வளர் திகழ்' என்று தொடங்கும். மேலும் சீரங்கக் கோயிலில் உள்ள, ஒரு நீண்ட வடமொழிக் கல்வெட்டில் இம்மன்னனுடைய வெற்றிச் செயல்களையும், அரசியல் பெருமைகளையும், கூறியிருப்பதோடு, திருநெல்வேலி, திருப்புட்குழி, காஞ்சீபுரம், சிதம்பரம் முதலிய கோயில்களுக்கு அவன் செய்த தானதர்மங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வரசன் சேரநாட்டின் மீது படையெடுத்து, சேரன் படைகளை அழித்து, அவனிடமிருந்து திறைகளைப் பெற்றுக்கொண்டான். அதன் பிறகு ஹொய்சளரோடு போர்புரிந்து சிங்கணன் என்ற படைத்தலைவனைக் கொன்று திரும்பினான்.

கண்ணனூர் கொப்பம் என்ற இடத்தில் சேமன் என்ற படைத்தலைவனைக் கொன்று, யானைகளைத் திறையாகக் கொண்டுவந்தான். பல்லவனோடு சண்டையிட்டுச்சேந்தமங்கலத்

தைப் பிடித்து, மீண்டும் அவனுக்கே அக்கோட்டையைத் தந் தான். பிறகு தில்லைக்குச் சென்று நடராசப் பெருமானை வணங் கித் துலாபாரச் சடங்கை நடத்தி ஆலயத்திற்குப் பொன் வேய்ந் தான். இவ்வாறு செய்த போர்களின் வெற்றியால் திருச்சி, தஞ்சை, தென்னார்க்காடு என்ற வட்டங்கள் சுந்தரபாண்டியன் வசத்திற்கு வந்தன. அக்காலத்தில் கொங்கு நாடு அவன் ஆட் சிக்குள் சென்றிருக்கலாம். மேலும் அவன் காஞ்சீபுரத்தைப் பிடித்துக் கண்டகோபாலனைக் கொன்று காகதீய அரசன் கண பதியைத் தோற்கடித்து நெல்லூரில் வீர அபிஷேகம் செய்து கொண்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவன் வெற்றி களைக் குறித்த அநேக தமிழ்ப் பாடல்கள் சிதம்பரக் கோயிலில் காணப்படுகின்றன. கண்டகோபாலன் என்றவன் தெலுங்கு சோட அரசன். அவனுக்கு உதவியாகப் பாணரும், காகதீயரும் வந்தார்கள். கண்டகோபாலனை வென்ற பிறகு சுந்தரபாண்டி யன் தெற்கே திரும்பியிருக்கவேண்டும். சீரங்கத்தில் திருப்பணி களைச்செய்து விமானத்திற்குப் பொன் வேய்ந்தான். கணக்கற்ற அணி ஆபரணங்கள், வாகனுதிகள் முதலியவற்றையும் கொடுத் தான். இம்மன்னன் மிகவும் தற்பெருமை கொண்டவன். தன் பெருமைகளை நாடெங்கும் பரப்பினதன்றி நாணயங்களிலும் "எல்லாம் தலையானன்" என்று பொறித்து வைத்தான். இவன் 1270-வாக்கில் உயிர் துறந்திருக்க வேண்டும்.

ஜடாவர்மன் சுந்தரனோடு உடனிருந்த அரசன் ஜடாவர்மன் வீர பாண்டியன் என்போம் (1254—1271). இவனுடைய கல் வெட்டுக்கள் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், புதுக் கோட்டை முதலிய இடங்களில் காணப்படுகின்றன. கொங்கு நாட்டிலும் சில கிடைத்திருக்கின்றன. 'திருமகள் வளர' என் பது இவனுடைய மெய்க்கீர்த்தி. அம்மெய்க்கீர்த்தியில்

"கொங்கீழம் கொண்டு கொடுவடுகு கோடழித்து
கங்கை இருகரையும் காவிரியும் கைக்கொண்டு"

என்ற அடிகள் கவனிக்கத்தக்கவை.

கொங்கு நாடும், ஈழநாடும் பிடித்த செய்தி அதில் கண்டுள்ளது. ஈழநாட்டை வென்றபோது கோணமலையிலும், திரிக்கூடகிரியிலும், கயல் பொறித்ததாக இவன் சாசனம் கூறுகின்றது. இச்செய்தி மகாவம்சத்தில் கூறப்படவில்லை. கொங்குநாட்டு வெற்றி சில கல்வெட்டுகளால் நிரூபிக்கப்படுகின்றது. வீரபாண்டியனுடைய கல்வெட்டுக்களில் நாட்டு அரசியல் முறைகளும் கூறப்பட்டுள்ளன. நீதிமன்றங்களில் எவ்வாறு நீதி செலுத்தப்பட்டதென்றும் அறிகின்றோம். நிலவரி, நாணயங்கள் வாணிபம், முதலிய செய்திகளும் கிடைக்கின்றன. பொதுவாக நாட்டினுடைய ஆட்சிமுறை அறிவதற்கு அக்கல்வெட்டுக்கள் மிகவும் உதவுகின்றன.

அடுத்தபடி அரசாண்டவர்கள் மாறவர்மன் குலசேகரன் (1268—1310), ஜடாவர்மன் சுந்தரன் (1270—1310) என்ற இரண்டு மன்னர்கள். மேலும் இந்த இரட்டை அரசர்கள் காலத்தில் மற்றும் சில மன்னர்களும் ஆண்டிருக்கிறார்கள். அவர்களிலே ஜடாவர்மன் சுந்தரன் II (1276—1292), மாறவர்மன் விக்கிரமன் (1283—1291) என்ற மன்னர்களின் பெயர்களைக் காண்கின்றோம். இவர்கள் எந்த முறையில் ஆண்டார்கள் என்று தெரியவில்லை. பாண்டியர் பஞ்சவர் என்ற ஒரு வழக்குச் சொல்லை ஆராய்ந்து பார்த்தால் ஐந்து உடன் பிறந்த அரசர்கள் ஆண்டிருக்கலாமென்று தோன்றுகிறது. அந்தக்காலத்தைப்பற்றி எழுதிய சீனநாட்டு நூல்களும் முகம்மதிய யாத்திரி (வாசாப்) களும் இச்செய்தியையும் கூறுகிறார்கள்.

இந்த மன்னர்களுடைய கல்வெட்டுக்கள் எல்லா நாடுகளையும் வென்றதாகக் கூறுகின்றன. அக்கூற்று முந்திய வெற்றிகளைக் கூறுவதாகும். சேரமாதேவியில் கிடைத்த குலசேகரன் கல்வெட்டில் மலைநாடு, சோணாடு, இரு கொங்கு, ஈழம், தொண்டைநாடு இவையெல்லாம் வென்றதாகக் கண்டிருக்கின்றது.

இந்நாடுகளை முந்திய அரசர்களே வென்றிருக்க மீண்டும் இவர்கள் போர்புரிய வேண்டிய அவசியமில்லை. ஒரு வேளை திறைகளைப் பெருக்குவதற்கு இவர்கள் படைகளை அனுப்பி யிருக்கலாம். உதாரணமாக, குலசேகரன் கொங்குநாட்டை வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒரு செய்தி யைக் கூறும் கல்வெட்டுக்கள் கொங்கு நாட்டில் கிடைக்க வில்லை. என்றாலும் கொங்குநாடு முழுவதும் அக்காலத்தில் பாண்டியன் வசம் இருந்ததென்பதற்கு ஐயமில்லை. ஆகவே இக்கூற்று பழைய செய்தியை மீண்டும் கூறுகிறதென்றே சொல்ல வேண்டும். குலசேகரன் "புவனேகவீரன்" என்ற பட்டத்தை வகித்துக்கொண்டான். இந்த ஆட்சிக்காலத்தில் தான் மார்க்கோபோலோ (Marco Polo) என்ற இத்தாலிய யாத்திரியும் வாசாப் (Wassaf) என்ற இஸ்லாமிய யாத்திரியும் தென்னாட்டைத் தரிசித்தார்கள். இவர்கள் 'சுந்தர்பண்டி' என்று குறித்துள்ள அரசனே மேலே கண்ட ஜடாவர்மன் சுந் தரபாண்டியன் ஆவான். இவன் துணைவேந்தனான மாறவர் மன் விக்கிரமன் (1283), 'திருமகள் ஜெயமகள்' 'திருமலர் மாது' என்ற மெய்க்கீர்த்திகளைப் பொறித்துக்கொண்டான். சிதம்பரத்தில் இவன் தமிழ்ப்பாடல்கள் சில உண்டு. ஒரு பாடல் காகதீய ருத்திரம்மனைக் குறிக்கிறது.

## 6. பாண்டியர் தளர்ச்சியும், வீழ்ச்சியும் (1239—1300)

மேலே சொன்ன மாறவர்மன் குலசேகரன் I ஜடாவர்மன் சுந்தரன் I, ஆட்சிகளிலேயே ஜடாவர்மன் சுந்தரன் II மாறவர் மன் விக்கிரமன் என்ற அரசர்களும் துணைவேந்தர்களாக இருந் தார்கள் என்று கூறினோம். இவ்விருவரும் முதற் பகுதி யிலேமட்டும் ஆட்சிபுரிந்தார்கள். பிற்பகுதியில் வேறு இரண்டு மன்னர்கள் துணைவேந்தர்களாக இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் 1. ஜடாவர்மன் ஸ்ரீ வல்லபன் (1291—1316),

ஜடாவர்மன் வீரபாண்டியன், (1296—1342) என்பன. இவர்களுக்குச் சில ஆண்டுகளுக்குப்பின் ஜடாவர்மன் சுந்தரன் (1303—13), என்ற மற்றொரு பாண்டியனும் ஆட்சியில் சேர்ந்துகொண்டான். இவர்களோடு பாண்டிய அரசு முழுதும் தளர்ச்சி பெற்றது.

பாண்டியப்பேரரசு வெற்றிகரமாக ஆட்சிபுரிந்த காலத்தில் இரண்டிரண்டு மன்னர்கள் ஒரே பீடத்தில் அமர்ந்திருந்த போதிலும் ஒருவருக்கொருவர் துணையாக இருந்தார்களே யன்றிப்பகையைப்பூணவோ, துரோகம்செய்யவோ முயலவில்லை. ஆகவே அரசு செவ்வையாக நடைபெற்றது. ஆனால் 13-ம் நூற்றாண்டில் இறுதியில் நிலைமை மாறிவிட்டது. துணை வேந்தர்களுக்குள் மனஸ்தாபங்களும், விரோதங்களும் புகுந்தன. ஆகவே தாயாதிச் சண்டை நேரத்தொடங்கிற்று. குலசேகர னின் இறுதிக்காலம் துயரத்தில் முழுகியது. அவன் மக்கள் சுந்தரனும், வீரனும் பட்டத்திற்காகச் சண்டை இட்டார் களென்றும், சுந்தரன் நேர்மகன் என்றும், வீரன் வைப்பு மகனென்றும், தகப்பன் வைப்பு மகனைத் தெரிந்தெடுத்ததற் காகக் கோபித்து சுந்தரன் தன் தகப்பனைக் கொன்றுவிட்டுப் பட்டத்தை ஆக்கிரமித்துக்கொண்டதாகவும், அதனால் இரு வருக்கும் தாயாதிச் சண்டை ஏற்பட்டதாகவும் வாசாப் என்ற யாத்திரி கூறுகிறான். இந்த தாயாதிச் சண்டை முற்றிப் போகச் சுந்தரன் டெல்லி மன்னன் அலாவுத்தீன் இடம் சரணமடைந்து அவன் மூலம் மாலிக்காபூரைப் படையுடன் கூட்டிவந்து மதுரையைப் பிடிக்கச் செய்தான் என்றும் ஒரு வரலாறு கூறுகிறது.

தந்தையைக் கொன்ற செய்தியோ, ஒரு பாண்டியன் டெல்லி சென்று முகம்மதியனை அழைத்து வந்த செய்தியோ நிரூபிக்க ஆதாரங்கள் இல்லை. ஆனால் நாட்டில் தாயாதிச் சண்டையிருந்தது. அதனால் நாடு பலவீனம் அடைந்து இருந் தது என்பது நம்பத்தக்கது. மாலிக்காபூர் நாட்டை வென்று

சேர்த்துக்கொள்ள வரவில்லை. அவன் சொத்தைக் கொள்ளை அடிக்கவே வந்தான். கொள்ளை அடித்தவுடன் திரும்பிப் போய்விட்டான். 14-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அதாவது 1310-ல் நடந்த படையெடுப்பின் பின்னும் மதுரையில் சில ஆண்டுகள் பாண்டியர்களே ஆண்டு வந்தார்கள் என்று அறியவேண்டும். பின்னர் 20-ஆண்டுகளுக்குப் பின்னரே முகம்மது துக்லக் காலத்தில் தான் மீண்டும் ஒரு படையெடுப்பு வந்து மதுரையிலிருந்த பாண்டியர்களைத் துறத்திவிட்டு முகம்மதிய அரசு தாபிக்கப்பெற்றது. அதனோடு பாண்டிய வம்சம் தொலைந்தது.

பாண்டியர் காலத்தில் நாட்டுநிலை :- பாண்டியப் பேரரசு ஒன்றறை நூற்றுண்டு வரையில் உறுதிபெற்றிருந்தது. பதின் மூன்றும் நூற்றுண்டு முழுதும் வெகு நன்றாகச் செழிப்புற்றிருந்தது. பல போர்களில் பாண்டியர்கள் ஈடுபட்டிருந்தாலும் உள்நாட்டில் அமைதியே நிலை நின்றது. அதற்கு அவர்கள் வெற்றிகளே காரணம். இவ்வமைதியின் காரணமாக நாட்டு ஆட்சியும், பொருள் ஆதாரமும் சமய நிலையங்களின் செழிப்பும் சீர்பெற்று விளங்கின. இவைகளை நிரூபிப்பதற்கு நாட்டுக் கல்வெட்டுக்களே அன்றிப் பிறநாட்டார் எழுதி வைத்த குறிப்புக்களும் சான்றுகளாக இருக்கின்றன. அக்காலத்தில் பாண்டிய நாட்டைத் தெரிசித்து இங்கு இருந்த நிலைமையைப்பற்றி விரிவாக எழுதிவைத்தவர்கள் மார்க்கோ போலோ என்ற இத்தாலியனும், வாசாப் என்ற முகம்மதிய யாத்திரியுமே ஆவார்கள். மேலும் வடநாட்டிலிருந்து வந்த வேறு முகம்மதிய எழுத்தாளர்களும் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். அவைகளிலிருந்து சில குறிப்புகளை இங்கு எழுதுவோம்.

பாண்டியநாட்டிற்கு மதுரை தலைநகராகவும் காயல் துறைமுகமாகவும் இருந்தன. பாண்டியநாட்டு வாணிபம் மிகவும் சிறந்து இருந்தது. தினந்தோறும் கணக்கற்ற பெரிய நாவாய்

கள் வெகு தொலைவிலிருந்த மேல்நாடுகளிலிருந்து பாண்டித் துறைமுகத்திற்குச் சரக்குகளைக் கொண்டு வந்தும், எடுத்துக் கொண்டு போயும் இருந்தன. முக்கிய வாணிபச் சரக்குகள் குதிரைகள். ஆண்டு ஒன்றுக்கு 10,000 குதிரைகள் இறக்கு மதி ஆகுமாம். குதிரை ஒன்று 600 பொன் வீதம் அரசன் வாங்குவானும். பாண்டியநாட்டு மக்களுக்குக் குதிரைகளை வளர்க்கவாவது நன்கு வைத்துக்கொள்ளவாவது தெரியாதாம். ஆகவே எப்படிப்பட்ட குதிரையானாலும் வெகு விரைவில் எலும்பும் தோலுமாகிவிடுமாம். அதனால் ஒவ்வொரு வருடமும் அரசன் கணக்கில்லாமல் குதிரைகளை வாங்குவானும். குதிரைகள் போருக்கு வேண்டியிருந்தன. மற்றொரு வாணி பச் சரக்கு முத்து. இது மன்னார்குடாவில் எடுக்கப்படும் கடல் படுபொருள். இந்த முத்து எடுக்கத் தேர்ந்த செம்படவர்கள் நியமிக்கப்படுவார்கள். எடுக்கும் முத்துக்களில் பெரிதானவை அரசனுக்குச் சேர்ந்தவை. மற்றவைகளிலும் அரசனுக்கு ஒரு பங்கு உண்டு. இந்த வகையில் அரசனுடைய பொக்கிஷம் மிகச் செழிப்பானது. அரசன் அணிந்திருக்கும் நகைகளே கணக்கற்ற மதிப்பு பெற்றவை. அவனுடைய மோகனமாலை 108 மணிகளைக் கொண்டது. அதனை செபமாலையாக அவன் பயன்படுத்திக்கொள்வான். அரசனுக்குத் தென்னவன் ஆபத் துதவிகள் என்ற ஒரு அணுக்கப்படை உண்டு. அப்படையினர் அரசன் இறந்தால் தாமும் உயிர்விடுவர். இந்நாட்டில் உடன்கட்டை ஏறும் வழக்கம் இருந்தது. வீட்டுச் சுவர்களுக்குச் சுண்ணும்புக்கு மாருகச் சாணி பூசுவார்கள். மக்கள் பொதுவாக நிலத்தில் உட்காருவார்கள். தைத்த துணிகளைக் கட்டுவதில்லை. பெரும்பாலானபேர் மிகச் சொற்பத்துணியே கட்டுவார்கள். அரசனும் அவ்வாறே உடை அணிவான். மக்கள் நாள்தோறும் குளிப்பார்கள். குடிக்கும்போது உதடு தொட்டுக் குடிக்காமல் செம்பைத் தூக்கிவைத்துக்கொண்டு குடிப்பார்கள். குற்றவாளிகளுக்குக் கடினமான தண்டனை

தருவார்கள். சோதிடம், சாமுத்திரிகா சாத்திரம் தெரிந்தவர்கள் பலபேர் இருக்கிறார்கள். பிறக்கும் குழந்தைகளுக்கெல்லாம் சாதகம் எழுதி வைப்பதுண்டு. கோயில்களை ஒட்டி தேவதாசிகள் உண்டு. எல்லாரும் தாம்பூலம் போடுவார்கள். அத்துடன் வாசனைப்பொடிகளும் சேர்த்து மெல்லுவதுண்டு. மக்கள் தூங்குவதற்குப் பிரம்புக்கட்டில்கள் உபயோகிப்பார்கள். கணக்கற்ற மக்கள் கோடைக்காலங்களில் தெருக்களிலே கட்டில் போட்டுப் படுத்துக்கொள்ளுவார்கள்.

இவ்விதமான பழக்கவழக்கங்களை வெகு நுட்பமாகப் பார்த்து அந்த யாத்திரிகர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள். இவைகளில் பெரும்பான்மையானவை இப்போதும் நடவடிக்கையில் இருப்பதை அறிவோம். நாள்தோறும் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் எழுதமாட்டார்கள். ஆனால் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுக்குப் புதிதாகத் தோன்றும். ஆதலால் மிக விவரமாக எழுதிவைத்திருக்கிறார்கள்.

13-ம் நூற்றாண்டில் பாண்டியநாட்டின் அரசியல் நிலைமை பற்றிக் கணக்கற்ற கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. நிலப்பராதீனங்களைப்பற்றி சரியான சாசனங்கள் பதிவு செய்யப்பட்டன. மன்னன் முதலில் வாய்மொழியால் உத்திரவு இடுவான். கேள்வி அல்லது திருமுகம் என்று அது கூறப்படும். பிறகு அலுவலாளர்கள் ஓலையில் எழுதுவார்கள். அது ஓலை என்று கூறப்படும். அதன் பிரதி கட்சிக்காரர்களுக்குத் தரப்படும். அது உள்வரி எனப்படும். இறுதியில் அது கல்லிலும் செம்பிலும் பொறிக்கப்படும். அப்போது அது கல்வெட்டு என்று கூறப்படும். இந்த நான்கு வகைகளாகச் சாசனங்கள் பிறப்பிக்கப்படும்.

நிலங்களின் பேரிலும் குடிகளின் பேரிலும் பல வகையான வரிகள் சுமத்தப்பட்டு வாங்கப்பட்டன. அவைகள் கடமை அந்தராயம், விநியோகம், அச்சுவரி, வெட்டில்பாட்டம், பாடி காவல், பொன்வரி, கறிவரி, செக்கிறை, தட்டாரப்பாட்டம்,

இடைவரி முதலியன. வரிகள் காசுகளாகவும், தானியங்களாகவும் பெறப்பட்டன. அவற்றின் விவரங்கள் எழுதப்பட்டுள்ளன. விளைவின்பேரில் எத்தனைவிதம் வரிவிதிக்கப்பட்டதென்றும் அறியலாம். வழக்குகளில் ஊர்ச்சபைகள் தீர்மானம் செய்வார்கள். மேல்வாரம், குடிவாரம் முதலிய பிரிவினைகளும் நன்கு மதிப்பிடப்பட்டன.

நீதிமன்றங்களில் எவ்வாறு தீர்ப்புகள் செய்யப்பட்டன என்றும் அறிவிக்கின்றன. கோயில் நிர்வாகம், அது கிராம அமைப்பில் கொண்டிருந்த சிறப்பு, இடம், முதலியவைகள் எழுதப்பட்டுள்ளன. நாடு அமைதி அடைந்த முறையில் அரசியல் விவகாரங்கள் வெகு ஒழுங்காக நடத்தப்பட்டன. கொங்கு நாட்டிலும் அதே முறையில் நடத்தப்பட்டன என்பதற்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

## 7. கொங்குநாட்டில் பாண்டியர் ஆதிக்கம் (1250-1265)

சோழர்களின் வீழ்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு, பாண்டியர்கள், தங்கள் நாட்டின் பரப்பைப் பெருக்கிக்கொண்டு ஒரு பேரரசைத்தாபித்தார்கள் என்று இதுவரை கண்டோம். பாண்டியர்கள் சோழநாட்டைப் பிடித்ததுமன்றி அவர்கள் வசத்திலிருந்த எல்லா நாடுகளையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அவ்வாறு கைப்பற்றிக்கொண்ட வகையில் கொங்கு நாட்டையும் அவர்கள் பிடித்து ஆண்டார்கள். அவ்வாறு கொங்குநாட்டைப் பிடித்தவகையில் கொங்குநாடு முழுவதும் அவர்கள் கைக்குள் சென்றது என்று சொல்லுவதற்கிடமில்லை. கொங்குநாட்டில் தெற்குப்பகுதியாகிய தென் கொங்கு நாடு பாண்டியர்கள் வசத்தில் முழுவதுமாக வந்து இருந்தது. ஆனால் கொங்கு நாட்டின் வடபகுதி அவர்கள் ஆட்சிக்காலம் முழுவதிலும் இருந்ததோ என்பது ஐயம். வடக்கேயிருந்து வந்த ஹொய்சளர்கள் கொங்குநாட்டின் வடபகுதியைத் தம்

வசப்படுத்திக்கொண்டார்கள். அந்தப்பகுதி அடிக்கடி கை மாறுவதாக இருந்தது. ஒரு சமயம் ஹொய்சளர் கையிலும், மற்றொரு சமயம் பாண்டியர் கையிலும் மாறிக்கொண்டேயிருந்தது. பாண்டியப் பேரரசர்கள் தங்கள் மெய்க்கீர்த்திகளில் ஒவ்வொருவரும் கொங்குநாட்டைப் பிடித்ததாகக்கூறிக் கொள்ளுகிறார்கள். ஒருமுறை ஒரு நாட்டைப் பிடித்த பிறகு அது தங்கள் வசமே வந்துவிடும் பட்சத்தில் மீண்டும் அதனைப் பிடிக்கவேண்டிய அவசியம் இல்லையல்லவா? இதனால் என்ன ஊகிக்கவேண்டியிருக்கிறதென்றால் கொங்குநாடு முழுவதும் நிரந்தரமாகப் பாண்டியர் கைக்குள்வந்து இருக்கவில்லை என்பதாகும். கொங்குநாட்டின் வடபகுதியாவது பாண்டியர்களிடம் நிரந்தரமாக இருக்கவில்லை யென்பது இதன் பொருள். இதற்குக் காரணம் ஹொய்சளர்கள் கொங்குநாட்டில் செய்த வற்புறுத்தல்களேயாகும்.

இந்தக் கூற்றுக்களுக்கு மற்றொரு காரணம் கூறலாம். கொங்குநாடு பாண்டியநாட்டுக்குத் தொலைவில் இருப்பதால், ஒரு முறை அந்நாட்டைப் பிடித்தபிறகு சிறிது காலம்செல்ல, அங்கிருந்த குறுநில மன்னர்கள் திறைகள் சரிவர செலுத்தாத காரணங்களினால் தங்கள் படைகளை அனுப்பித் திறைகளை மீட்டியிருக்கலாம். இந்தக் காரணத்தைக்கொண்டு அரசர்கள் தங்கள் மெய்க்கீர்த்திகளில் கொங்கர்களை வென்றதாகக்கூறியிருக்கக்கூடும். இந்த வகையில் மெய்க்கீர்த்திகளின் சொற்களை பொருள்படுத்திக்கொள்ளலாம்.

13-ம் நூற்றாண்டு முற்றும் பாண்டியப் பேரரசு கொங்குநாட்டின்மீது ஆணை செலுத்திவந்ததில் முதல் அரை நூற்றாண்டில் அது நேரடியான ஆட்சி செய்ததாகத் தெரியவில்லை. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (1216-37) வடகொங்குநாட்டரசன் பாண்டியனிடம் சென்று உறவினரால் தனக்கு நேரிட்ட தீங்குகளைப்பற்றிக் குறை கூறினானென்று முன்னமே கூறியுள்ளோம். அவனுக்குப் பிறகு தென்கொங்கு

நாட்டரசனும் அவ்வாறே பாண்டியனின் அடிபணிந்தான் என்றும் கூறியிருக்கின்றோம். பாண்டியனோ அவர்கள் வீண்ணப்பத்தை உடனே தீர்க்காமலும், உதவி அனுப்பாமலும் சிறிதுகாலம் தன் தலைநகரிலேயே அவர்களை விருந்தினராக வைத்துக்கொண்டு அவர்களைச் சாந்தப்படுத்தி, அவர்களுடைய நாடுகளில் சிலவற்றைத் தான் பெற்றுக்கொண்டு அவரவர்கள் நாட்டிற்கு அனுப்பிவிட்டான். இச்செய்தியால் சில விவரங்கள் தெளிவாகின்றன. வடகொங்கும், தென்கொங்கும் பாண்டியனுக்கு அடிபணிந்தது; பாண்டியன் சில பகுதிகளை நேரில்கைக்கொண்டது; மற்றபகுதிகளைக் கொங்கு அரசர்களே ஆளவிட்டுவிட்டது, என்ற விவரங்கள் தெளிவாகின்றன. ஆகவே 13-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டியர்கள் கொங்குநாட்டை நேரில் ஆளவில்லை யென்றும், கொங்கு அரசர்கள் மூலமாகவே ஆண்டுவந்தார்கள் என்றும் அறிகிறோம். இவ்விதமான இரட்டை ஆட்சி வெகுகாலம் நடைபெறுதல்லவா? வரவரத் திறைகள் வருவது நின்றுவிடும். கலகங்கள் ஏற்படும். நிலையான ஆட்சியாக அது இருக்காது. இந்த முறையில் முதல் ஐம்பது ஆண்டுகள் கழிந்தன.

பாண்டியப் பேரரசு வலுக்கத் தொடங்கியது ஜடாவர்மன் சுந்தரன் (1251—71) காலத்திலே என்க. அப்போது பாண்டியப் பேரரசு உன்னத நிலை அடைந்துத் தமிழ்நாடு முழுவதையும் தன்கைக்குள் அடக்கிக்கொண்டிருந்தது. அப்போதுதான் கொங்குநாடு முழுவதும் பாண்டியர்வசம் நேரடியில் வந்துவிட்டது. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியின் தன்மையை முழுவதும் அறிந்தவன். கைப்பற்றின நாடுகளைத் தோல்வியுற்றவர் வசமே ஒப்புவித்துவிட்டு, வெறும் கப்பத்தை மட்டும் வாங்குதல் சரியான ஆட்சி அல்ல என்று நன்கு உணர்ந்தான். அப்படிப்பட்ட நாட்டை நேரடியாக ஆள்வதே நல்லதென்று அறிந்தான். அந்தக்கருத்தை மேலிட்டுக் கொங்கு நாட்டை ஆள்வதற்குத் தம் வம்சத்து இளவரசர்களையே பிரதி

நிதிகளாக நியமித்தான். அது முதல் கொங்கு நாடு பாண்டியரின் நேரடிப் பார்வைக்கு வந்தது.

சோழர்கள் கொங்குநாட்டை ஆண்டமுறையையே சுந்தர பாண்டியனும் பின்பற்றினான். முதலில் வீரபாண்டியன் என்ற ஒரு இளவரசனைப் பாண்டியநாட்டிற்குப் பிரதிநிதியாக அனுப்பினான். அவன் 1265 முதல் 1285 வரை கொங்கு நாட்டில் ஆட்சிபுரிந்தான். அவனுக்குப் பின்னால் வேறு சில பாண்டியர்களும் பிரதிநிதிகளாக ஆட்சி செய்திருக்கிறார்கள். இவ்விளவரசர்கள் வேறு, மதுரைப் பேரரசர்கள் வேறு. இளவரசர்கள், பேரரசர்களின் பிரதிநிதிகளாக வந்தவர்கள். ஆனால் கொங்கு சோழர்களைப்போல இவ்விளவரசர்களும் சில உரிமைகள் கைக்கொண்டார்கள். தம் பெயர்களாலே கல் வெட்டுக்களையும் பதிக்கத்தொடங்கினார்கள். இவ்விதக் காரணங்களினால் கொங்குநாட்டை ஆண்ட இளவரசர்களுக்குக் கொங்கு பாண்டியர் என்ற பெயரை ஆராய்ச்சியாளர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே பாண்டியர்கள் ஆட்சிக்காலத்தில் கொங்குநாட்டின் சரிதத்தைச் சொல்லும்போது கொங்கு பாண்டியர்களுடைய வரலாற்றைத்தான் சொல்லமுடியும். இவர்களும் 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் விளங்கினார்கள். முற்பகுதியோ, முன்னமே கூறியபடி நேரடியான ஆட்சியைப் பாண்டியர்கள் ஏற்படுத்தவில்லை. நாட்டில் எங்கும் குழப்பமயமாக இருந்தது. கொங்கு சோழர்கள் தளர்ச்சிபெற்று அழிந்தார்கள். வடக்கேயிருந்து ஹொய்சளர்கள் கொங்கு நாட்டில் புகுந்து சில பகுதிகளைக் கைக்கொண்டார்கள். அவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் நடந்த சச்சரவுகளில் கொங்கு நாட்டவர்கள் மிகவும் துன்பமுற்றார்கள். உள்நாட்டுக் குறுநில மன்னர்களாகிய தர்மபுரி அதியமான்கள் முதலானவர்கள் சுயேச்சையோடு திரிந்தார்கள். இந்தப் பரிதாபமான நிலையில் 50 ஆண்டுகள் சென்றன.

13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட நேரடி ஆட்யில் கொங்கு பாண்டியர்கள் என்ற இளவரசுப் பிரதிநிதிகளாலே கொங்குநாடு சற்று அமைதியடைந்தது. கொங்கு பாண்டியர்கள் கொங்கு சோழர்களைப்போல ஒரு அரசவம்சத்தைத் தாபித்ததாகத் தெரியவில்லை. பல மன்னர்கள் பாண்டியன் என்ற பெயரோடு ஆட்சிபுரிந்திருக்கின்றார்கள். ஒருவர், இருவர் அல்லாமல் மற்றவர்களின் காலவரையறையும் தெரியவில்லை. ஒருவருக்கொருவர் உறவினரோ அல்லவோ என்பதும் தெரியவில்லை. ஆகவே தனித்தவகையில் ஒவ்வொருவரும் பிரதிநிதிகளாக ஆட்சிசெய்ய நியமிக்கப்பட்டார்கள் என்றே கூறவேண்டும். இந்த முறையில் கொங்கு பாண்டியர்கள் ஆட்சிபுரிந்ததினால் பாண்டியப் பேரரசு அழிவுற்ற காலத்தில் கொங்கு பாண்டியரின் ஆட்சியும் அழிந்தது என்றே சொல்லவேண்டும்.

## 8. கொங்குபாண்டியர் (1265—1300)

### 1. வீரபாண்டியன் (1265—85)

வீரபாண்டியனை முதல் கொங்கு பாண்டியனாகக் கூறலாம். ஏனெனில் அவன் ஆட்சி செய்த ஆண்டுகளுக்கு முன் வேறொரு கொங்கு பாண்டியனின் பெயரும் அகப்படவில்லை. பாண்டியப் பேரரசின் பிரதிநிதியாக வந்த இம்மன்னன் இருபது ஆண்டுகள் வரை ஆண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவனைப்பற்றி 63 கல்வெட்டுக்களின் பிரதிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஈரோடு தாலூகா, விஜயமங்கலத்துக் கரிய மாணிக்கப் பெருமாள் ஆலயத்தில் உள்ள இவனுடைய கல்வெட்டு ஒன்று சகம் 1202-ல் இவன் ஆட்சியின் 15-வது ஆண்டு என்று கூறுகிறது. இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் இவன் கி. பி. 1265-ல் பட்டத்திற்கு வந்திருக்கவேண்டுமென்று அறிகிறோம். மேலும் ஈரோட்டிலுள்ள தொண்டீசுவரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டு ஒன்று இவனுடைய 20-வது ஆண்

டில் பொறிக்கப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. ஆகவே இவன் 1285-வரைக்குமாவது அரசு செலுத்தியிருக்க வேண்டுமென்று கூறலாம்.

இவனுடைய ஆட்சி கொங்குநாட்டில் எத்தனைத் தொலைவு, எட்டியிருந்ததென்பதற்கு அடியில் கண்ட கல்வெட்டுக்கள் சான்றுகளாக இருக்கின்றன.

| எண் | ஊர் | தாலூகா | ஆண்டு | கல்வெட்டு எண் |
|---|---|---|---|---|
| 1. | அவிநாசி | அவிநாசி | 2-19 | 8 |
| 2. | பெருமாநல்லூர் | பல்லடம் | 1- 15 | 4 |
| 3. | திருமுருகன்பூண்டி | ,, | 3. | 1 |
| 4. | பேரூர் | கோவை | 4- 14 | 2 |
| 5. | பாரியூர் | கோபி | 11. | 2 |
| 6. | நம்பியூர் | ,, | 11- 14 | 4 |
| 7. | அந்தியூர் | பவானி | | 1 |
| 8. | ஈரோடு | ஈரோடு | 10, 12,20 | 3 |
| 9. | திங்களூர் | ,, | 3, 18 | 4 |
| 10. | விஜயமங்கலம் | ,, | 3- 19 | 11 |
| 11. | தாராபுரம் | தாராபுரம் | | 10 |
| 12. | கொளிஞ்சிவாடி | ,, | | 1 |
| 13. | சங்கராமநல்லூர் | உடுமலைபேட்டை | 15 | 1 |

மேற்கண்ட பட்டியலை ஆராயும்போது கொங்கு நாட்டில் பெரும்பான்மையான நிலம் எல்லாம் வீரபாண்டியனின் ஆட்சி படர்ந்திருந்தது என்று அறியலாம். அவன் ஆட்சியில் நடந்த செயல்களும் நன்கு குறிக்கப்பட்டன. அவற்றில் சிலவற்றைக் கூறுவோம்.

வீரபாண்டியன் அடியிற்கண்ட சில விருதுக்களை வகித்துக் கொண்டான். அவைகள் 'திரிபுவன சக்ரவர்த்தி' 'கோனே

ரின்மைகொண்டான்' 'கோராஜகேசரிவர்மன்' 'கோமாறவர் மன்' என்பன. இவைகளிலே ஒரு மன்னனே இராஜகேசரி வர்மன் என்ற சோழர்களுடைய பட்டத்தையும், மாறவர்மன் என்ற பாண்டியர்களுடைய பட்டத்தையும் வகித்துக்கொண்டது குறிப்பிடத்தக்க ஒரு செய்தி. சமாதானமுறையில் ஆட்சி புரிவதற்காக இரண்டு பட்டங்களேயும் வைத்துக்கொண்டான் போலிருக்கிறது.

அவிநாசியிலுள்ள ஒரு கல்வெட்டினுல் அவ்வூரில் வீக்கிரம சோழன் திருவீதி என்ற ஒரு தெரு இருந்ததாகத் தெரிகின்றது. மற்ருெரு கல்வெட்டினுல் வடபாரிசார நாட்டில் வெள்ளாநாடு, பூலுவநாடு என்ற நாடுகளின் குடிகள் தேவ தான கிராமமான சேவூர் என்கிற செம்பியன் கிழானடிநல்லூர் என்ற ஊரில் நான்கு குடும்பங்களேக் குடியேற்றி அவர்கள் செலுத்தவேண்டிய சில கடமைகளே நீக்கிவிட்டதாகக் கூறுகிறது (184-1909). மற்றும் கோயிற்குடிகள் கொடுக்க வேண்டிய வரிகள் இன்னவை யென்றும் கூறுகின்றது. இச் சேவூர் கொங்குநாட்டில் ஒரு வைப்புத்தலம்.

மற்ருெரு கல்வெட்டில் மன்னனின் அபிஷேக காலத்தில் பெருங்கருணேச்செல்வியார் (அம்மையின் பெயர்) கோயிலுக்கு வனவாசி என்கிற வீரசோழநல்லூரை (கீட்பாநாடு) தானம் செய்ததாகக் கண்டிருக்கின்றது. மேலும் தென்பள்ளியிலுள்ள சுந்தரநாயனுர் கோயிலுக்குப் பார்ப்பார் பூண்டி என்ற வீரராஜேந்திரநல்லூர் குடிகள் நிலதானம் செய்தது குறிக்கின்றது. இந்தச் சுந்தரநாயனுர் கோயில் அவிநாசிக்குத் தென் புறத்தில் குளத்தங்கரையில் இன்றைக்கும் இருக்கின்ற ஒரு கோயில். சுந்தரமூர்த்திகள் இந்த அவிநாசியில்தான் முதலே வாயிலிருந்து அது விழுங்கின பிள்ளேயை வரவழைக்கப் பதிகம் பாடின அற்புதம் நடந்தது.

அவிநாசிக்கடுத்த சேவூரில் பெருமாள் கோயிலில் ஒரு கல்வெட்டின்படி கரியம்பாடி என்ற கிராமத்தைப் பெருமாளுக்

கும், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் அளிக்கப்பட்டதாம். கோவைக் கடுத்த பேரூரில் உள்ள ஒரு கல்வெட்டின்படி பந்தரங்கையில் பார்வதீசுவரமுடையாருக்கு 200-பணம் கொண்டு ஒரு நிலத் தைத்தந்து 22 கலம் நெல் கொடுப்பதாக சம்மதித்த கல்வெட்டு ஒன்று இருக்கின்றது.

ஈரோட்டிலும், வெஞ்சமாங்கூடலூரிலும், இக்கொங்கு பாண்டியன் சோழர் பட்டத்தை வைத்துக்கொண்டான் என்று காண்கிறோம். பெரியபாளையத்துக் குரக்குத்தளிக் கோயிலில் அவ்வூர்க் கடவுளுக்குத்திருவிழா நடத்த ஒரு பூதானம் செய்தது குறிக்கப்பட்டுள்ளது. அவ்வூருக்கு முகுந்தனூர் என்ற பெயரும் உண்டு. விஜயமங்கலத்துப் பெருமாள் கோயிலின் அக்காலத் துப்பெயர் 'திருமேற்கோயில்' சித்திரமேழி விண்ணகர், நாய னூர் 'கருமாணிக்காழ்வார்' என்று கூறப்பட்டுள்ளது. அவன் காலத்தில் அக்கோயிலுக்கு நந்தா விளக்கு முதலிய பல தானங் கள் செய்யப்பட்டன. மற்றும் வாகைப்புத்தூரில் ஒரு பாழ டைந்த ஏரியைச் சீர்படுத்தி அதற்குத் தன் பெயரால், வீர பாண்டியப் பேரேரி என்ற பெயர்தந்து அவ்வேரியிலிருந்து பாயும் நிலங்களுக்கு வரியில்லாமல் செய்து அதற்காக நாகேசு வரர் ஆலயத்து அம்மனுக்கு வழிபாடு செய்வதற்கு நெல் கொடுக்கவேண்டுமென்று அரசன் உத்திரவிட்டான். அம்மனின் பெயர் 'திருக்காமக் கோட்டத்து ஆவடி நாச்சியார்' என்று கூறப்பட்டுள்ளது. கொங்கு நாட்டில் சில ஊர்களும் அவ்வர சன் பெயர்கொண்டிருந்தன. கோவைக்கடுத்த தடாகத்தின் மேற்கிலும், பெரியநாயக்கன் பாளையத்திற்கு வடக்கிலும், வீர பாண்டி என்ற ஊர்ப் பெயர்கள் இருக்கின்றன. நம்பியூர் என்ற நம்பிபேரூர், தான்தோன்றீசுவரமுடையார் கோயிலில் வீரபாண்டியனின் 6 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றில் ஐந்து 11-ம் ஆண்டுக் கல்வெட்டுக்கள். ஆதலால் அந்நாளில் அதாவது 1276-ல் அக்கோயில் திருப்பணி நடந்திருக்கவேண்டு

மென்று கூறலாம். அப்போது அக்கோயிலுக்கு நந்தா விளக்கு முதலியவைகள் தானம் செய்யப்பட்டன.

உடுமலைப்பேட்டை சங்கராமநல்லூர் சோமேசுவரமுடையார் கோயிலில் இவ்வரசனுடைய 15-வது ஆண்டில் இரண்டு கிராமத்தார்கள் கோயிலுக்குத் தானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. அவர்கள் உறையூருக்குச் சேர்ந்தவர்களென்று கூறப்பட்டுள்ளது.

மேலும் அண்ணூர், கோயில்பாளையம், இடிகரை என்ற ஊர்களில் வீரபாண்டியனுடைய கல்வெட்டுக்கள் பன்னிரண்டு இருக்கின்றன. அவைகளில், ஒன்றில் (32/23) இவனுடைய பட்டங்கள் மிகப்பிரமாதமாகக்கூறப்பட்டுள்ளன. சந்திர குல புனிதன், மதுராபுரி இறைவன், கருநாடக துயர் தீர்ப்பவன், கண்டகோபால யானைக்குச் சிங்கம், காஞ்சிநகரத் தலைவன், கணபதி சர்ப்பத்திற்குக் கருடன் முதலியவியப்புக்குரியவிருதுக்களை வைத்திருக்கிறான். இதனால் அவன் காலத்து அரசர்கள், கண்டகோபாலன் என்ற தெலுங்கு சோழனும், காகதீய கணபதியும் ஆவார்கள் என்பதைத் தவிர வேறொரு பொருளும் இல்லை. அக்கல்வெட்டின்படி இடிகரைக் கோயிலில் 'தென்னவன் மாதேவி' என்ற பெயரினால் அம்மன்னனுடைய திருஉருவத்தைப் பிரதிட்டை செய்தான் என அறிகிறோம்.

## 9. சுந்தர பாண்டியன் (1285-1300.)

கொங்கு பாண்டியர்களுள் இரண்டாவதாகக் கூறப்படக் கூடியவன் சுந்தர பாண்டியன். இவனைப்பற்றி சுமார் 40-கல்வெட்டுக்கள் படி யெடுக்கப்பட்டுள்ளன. அவைகள் அவனுடைய 2-வது ஆண்டு முதல் 31-ம் ஆண்டுவரை எட்டுகின்றன. ஒரே ஒரு கல்வெட்டு 37-ஆண்டையும் குறிக்கின்றது. ஆனால் அது இந்த அரசனுடைய கல்வெட்டோ என்பது ஐயம். மதுரையில் 1216-முதல், 1236 வரை ஆண்ட மாறவர்மன் சுந்தரன்

I என்பவனோடு இச்சுந்தர பாண்டியன் பெயரைமயங்க விடுவதற்கில்லை. இவனுடைய கல்வெட்டுக்களில் கண்ட செய்திகளைக் கொண்டு இவன் ஒரு கொங்கு பாண்டியனுகத்தான் இருக்க வேண்டுமென்று எளிதில் கூறலாம். இவன் முன் கூறிய வீர பாண்டியனின் உறவினனுக இருக்க வேண்டும். இவனும் 'திரி புவனச் சக்கரவர்த்தி', 'கோனேரின்மை கொண்டான்' 'ராஜ கேசரி வர்மன்' என்ற விருதுக்களை வகித்துக்கொண்டிருந்தான். இவன் எந்த ஆண்டில் பட்டத்திற்கு வந்தான் என்பதற்கு யாதொரு சான்றும் கிடைக்கவில்லை. ஆகவே இவனுடைய இறுதிக்காலமும் அறிய வகையில்லை.

இவ்வரசனும் முன் சொன்ன வீர பாண்டியனைப் போல் கொங்குநாடு முழுவதும் ஆணை செலுத்திவந்திருக்கிறுன். அவனுடைய கல்வெட்டுக்கள் காணும் இடங்களை அடியில்கண்ட பட்டியலில் காணலாம்.

| எண் | ஊர் | தாலூகா |
|---|---|---|
| 1. | அவிநாசி | அவிநாசி |
| 2. | சேவூர் | ,, |
| 3. | அந்தியூர் | பவானி |
| 4. | பெரியபாளையம் | ஈரோடு |
| 5. | விஜயமங்கலம் | ,, |
| 6. | தாராபுரம் | தாராபுரம் |
| 7. | கொளிஞ்சிவாடி | ,, |
| 8. | பெருமாநல்லூர் | பல்லடம் |
| 9. | கூகலூர் | கோபி |
| 10. | கோயில்பாளையம் | கோவை |
| 11. | இடிகரை | ,, |

மேலே கண்டபடி காவேரிக்கு மேற்கேயுள்ள கொங்கு நாட்டுத்தாலூகாக்களிலெல்லாம் இப்பாண்டியனுடைய ஆணை படர்ந்திருந்தது என்று அறியலாம்.

இனி சுந்தர பாண்டியனுடைய கல்வெட்டுக்களில் கண்ட செய்திகளைச்சில கூறுவோம். இவ்வரசனுடைய 2-வது ஆண்டில் இடிகரையில் வேளான் செட்டியார் குலத்து ஆள் ஒருவன் ஒரு சந்தியாவிளக்கு வைக்கப் பத்துவராகன் கோயிலுக்குத் தானம் செய்தான். 3-வது ஆண்டில் குரக்குத்தளி உடையார் கோயிலில் இருந்த வடுகப் பிள்ளையார் சந்நிதியில் ஒரு விளக்கு வைக்கப் பாழிநல்லூர் சேரமான் தோழன் என்ற ஒரு செட்டி பண உதவி செய்தான். சேரமான் தோழன் என்ற பெயர் சுந்தரமூர்த்திகளை நினைவுபடுத்துகிறது. 4-வது ஆண்டிலும் அதே கோயிலில் ஒரு நிலதானம் செய்யப்பட்டது. 8-வது ஆண்டில் பெருமாநல்லூர் உத்தம சோளீசுவரர் கோயிலில் ஒரு சதுர்வேதிமங்கலத்துக் கிராமத்தார்கள் ஆராதனைக்காக ஆண்டு ஒன்றுக்கு 50-கலம் நெல் கொடுத்தார்கள். 10-வது ஆண்டில் அதே கோயிலில் ஒரு நந்தவனம் வைப்பதற்காகப் பிறைசூடும் பெருமான் என்ற ஒருவன் ஒரு நிலத்தைத் தந்தான். அந்த தானம் நடவாமற்போக 19-வது ஆண்டில் அது மீண்டும் தரப்பட்டது. 20-வது ஆண்டில் சேவூர்ப்பெருமாள் கோயில் திருப்பணி செய்யப்பட்டது. அப்போது வடபரிசார நாட்டு மக்கள் ஒரு நிலம்தானம் செய்தார்கள்.பாரியூர் குடிகள் அமரபணீசுவரருக்கும் விளக்குவைப்பதற்காகபணம் தந்தார்கள். 21-வதுஆண்டில் வடபரிசார நாட்டு முதுக்கரை வணிகன் பாம்பூரமுடையான் செல்வன் பொன்னம்பலக்கூத்தன், இடிகரை வில்லீசுவரருக்குப் பத்து வராகன் தந்தான். 22-வது ஆண்டில் குரக்குத்தளி சுக்கிரீசுவரர் கோயிலில் பொறித்த கல்வெட்டில் சுந்தர பாண்டியன் சூரலூர் என்ற சுந்தர பாண்டியநல்லூரைக் குரக்குத்தளி நயினாருக்குத் தானம் செய்தான். இதனால் சுந்தர பாண்டியன் தன் பெயரினால் ஒரு ஊரைக் கட்டினான் என்று தெரிகிறது. 22-ம் ஆண்டில் அதே சூரலூரில் இருந்த ஏரிப்பாசனம் சரிவர நடத்திவர ஆணையிடப்பட்டது. இந்த ஊர் வாயிரக்கா நாட்டில் உள்ளது, இக்கல்வெட்டு மிக முக்கியமானது.

அக்காலத்தில் பாய்ச்சல் வசதிகள் எவ்வாறு செய்யப்பட்டன என்று அது கூறுகிறது. ஊர் கோயிலுக்குச் சேர்ந்திருந்தது. அவ்வூரில் ஒரு அணைக்கட்டிலிருந்து கால்வாய் வழியாகத் தண்ணீர்கொண்டுவந்து ஒரு பெரிய ஏரி நிரப்பப்பட்டது. அணை, கால்வாய், ஏரி இவைகளை மேல்பார்வை பார்ப்பதற்காக ஒரு ஆள் நியமிக்கப்பட்டிருந்தான். அவன் செய்யவேண்டிய கடமைகள் இன்னவையென்று அரசன் ஆணையிட்டிருந்தான். அவன் பிள்ளையான்என்றஒருசெம்படவன். ஊராரும்கோயில்அதிகாரிகளும் அவனோடு ஒப்பந்தம் செய்து அவனுக்கு ஊதியமும் சில உரிமைகளும் தந்து அவைகளுக்காக அணையையும், கால்வாயையும் கவனித்துக்கொள்ளவேண்டும் என்றும், தண்ணீர் அணையிலிருந்து சிதறிப்போகாமல் ஏரிக்கே விடவேண்டும் என்றும் ஏதாவது குற்றங்குறைவுகள் நேரிட்டால் கிராமத்தார்களுக்கும், கோயில் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றும், அவ்வாறு தெரியப்படுத்தினால், கிராம வெட்டியான் அணையைச் செப்பனிடவேண்டும் என்றும், அதற்காக அவனுக்கு இறையிலியாக ஒரு நிலமும், தானியமும் கொடுக்கப்படவேண்டும் என்றும் திட்டம் செய்யப்பட்டது. மேலும் சூரலூர் கோயில் குடிகளிடமிருந்து வாய்க்கால் பாட்டம் (வாய்க்கால் வரி), பாசிப் பாட்டம் (மீன்வரி) இவைகளைப் பிள்ளையான் வசூலிக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.

23-வது ஆண்டுக்கல்வெட்டு பெருந்தலையூரிலும், 24-வது ஆண்டுக் கல்வெட்டு குரக்குத்தளியிலும் இருக்கின்றன. இதன் படி தென்கரைச்சூரலூரில் ஒரு நிலம் குரக்குத்தளி ஈசுரருக்குத் தானம் செய்யப்பட்டது. 25-வது ஆண்டில் கொளிஞ்சிவாடி சொக்கநாதர் கோயிலில் இரண்டு தூண்கள் வைக்கப்பட்டன. 26-வது ஆண்டில் கவையன்புத்தூர் (கோயில்பாளையம்) குடிகள் காலகாலீசுவரம் உடையாருக்கு வானவன்மாதேவி நல்லூரைத் தேவதானமாகத் தந்தார்கள். 27 வது ஆண்டில் விஜய மங்கலம் நாகேசுவரர் கோயிலில் ஒரு விளக்குத் தானம் செய்

யப்பட்டது. அதற்குத் தொகைதிருக் காமக்கோட்டத்து நாச்சியார் ஆலயத்து நெல் விற்பனையால் வைக்கப்பட்டது. 27-ம் ஆண்டில் அத்தாணீசுவரருக்கு ஒரு விளக்குத்தானம் செய்யப்பட்டது. 30-வது ஆண்டில் வில்லீசுவரமுடையாருக்கு (இடிகரை) மிழலைக் கூற்றத்து இரா்ஜராஜ நல்லூர் குடி ஒருவன் ஆராதனைக்காக 15 (பதினைந்து) வராகன் தந்தான். 31-ம் ஆண்டில் அரணையூர் வியாபாரி ஒருவன் சுந்தர நாயனூர் கோயிலுக்கு நெல்லுக்காகப் பணம் தானம் செய்தான். சுந்தர நாயனூர் கோயிலை அவிநாசிக்கடுத்த புக்கொளியூரில் ஏரிக்கரையில் அம்மன்னன் கட்டினுனென்றும் அக்கல்வெட்டு கூறுகிறது. 32-ம் ஆண்டில் பெருங்கருணை நாச்சியாருக்கு பணம் தானம் செய்யப்பட்டது. 37-ம் ஆண்டில் சங்கிராமநல்லூர் கோயிலுக்கு நெல் தானம் செய்யப்பட்டது. இவைகளைத்தவிர ஆண்டுகள் குறிக்காத கல்வெட்டுக்கள் ஐந்து இருக்கின்றன. சுந்தர பாண்டியபுரம் என்ற ஒரு ஊரும் இவ்வரசன் தன் பெயரால் பெங்காளூர்க்கா நாட்டில் ஏற்படுத்தியிருக்கின்றுன் (137/27).

## 10. கொங்கு பாண்டியர் தளர்ச்சி (1300—1335.)

கொங்கு பாண்டியர்களில் சுந்தரபாண்டியனுக்குப் பிறகு ஆட்சிபுரிய வந்தவர்கள் வெகு சாதாரண மக்கள். ஆகவே அவர்களைப்பற்றிச் சரியான சான்றுகளோ கல்வெட்டு ஆதரவுகளோ கிடைக்கவில்லை. மேலும் ஆட்சி செய்தவர்களின் ஆண்டுகளாவது மற்ற விவரங்களாவது விவரமாய்த் தெரியவில்லை. ஆகவே ஓர் அளவு மட்டும் சில செய்திகளைக் கூறமுடியும். இதற்குக் காரணம் என்னவெனில், மதுரையில் பேரரசாக ஆண்டுவந்த தலைவம்சமே தளர்ச்சியடையத் தொடங்கிற்று. ஆகவே அவர்களுக்குப் பிரதிநிதிகளாகக் கொங்கு நாட்டில் ஆண்ட கொங்கு பாண்டியர்களும் அதே கதியில் இருப்பார்கள் அல்லவா? அவர்களைப்பற்றிக் கொங்குநாட்டில் கிடைத்த அளவு இங்கே எழுதுவோம்.

## 1. குலசேகர பாண்டியன்.

இவனைப் பற்றி 3 கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. அவிநாசியில் ஒன்றும், தாராபுரத்தில் இரண்டுமே படியெடுக்கப் பட்டிருக்கின்றன. அவிநாசிக் கல்வெட்டு இவ்வரசனுடைய 5-வது ஆண்டில் பொறிக்கப்பட்டது. அவிநாசியப்பர் கோயி லுக்கு ஒரு விளக்கு வைக்கப் பணம் கொடுத்தது மட்டும் அது தெரிவிக்கிறது. அவன் திரிபுவன சக்கரவர்த்தியென்று பட்டம் வைத்துக்கொண்டிருக்கிறான்.

## 2. திரிபுவன வீரபாண்டியன்.

இவ்வரசனைப் பற்றிப் பாரியூர் அமரபணீசுவரர் கோயிலில் 4 கல்வெட்டுக்களும் கூகலூரில் 1 கல்வெட்டும் கிடைத்திருக் கின்றன- இவனுடைய 3-வது ஆண்டு கல்வெட்டு ஒன்றில் இவ னைப்பற்றிய விருதுக்கள் கூறப்பட்டுள்ளன. அதின்படிகுலோத் துங்கன் III-வதனுடைய வீருதுக்கள் முற்றும், இவன் வைத் துக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. வடகொங்கு நாட்டுச் சிவாலயங்கள் பலவற்றுள்ளும் 'ஒட்டச்சு' என்றவரியை அரசன் தளர்த்திவிட்டதாக அக்கல்வெட்டு கூறுகின்றது. மேலும் வட கொங்கு நாட்டின் உட்பிரிவுகளான இருபது நாடுகளின் பெயர் களும் இக்கல்வெட்டு கூறிக் கோயில் வருமானத்திற்கும் அரசுக் கும் உள்ள சம்பந்தங்களையும் அது கூறுகின்றது (185/1910). அது அமரவிடங்கப் பெருமாள் சந்நிதியில் முன் மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் அடியிற்கண்ட உள்நாடுகள் கூறப்பட்டுள்ளன.

1. நறையனூர்நாடு, 2. பொங்கலூர்க்கா நாடு, 3. தென்கரை நாடு, 4. அண்ட நாடு, 5. தலையூர் நாடு, 6. வடகரை மணலூர் நாடு, 7. அரைய நாடு, 8. கீழங்க நாடு, 9. வெங்காலநாடு, 10. தட்டையூர் நாடு, 11. சடைப்புமுதி நாடு, 12. காங்கய நாடு, 13. வீரசோழவள நாடு, 14. வலுப்புக்கா நாடு, 15. குறுப்புநாடு, 16. வடபரிசார நாடு, 17. காஞ்சிக்கூவல் நாடு, 18. பூந்துறை

நாடு, 19. கீழ்ப்பா நாடு, 20. வடகரை நாடு. இந்த நாடுகளின் பெயர்களை ஆராய்ந்தால் வடகொங்கு மட்டுமேயன்றி கீழ்க் கொங்கும் அவற்றுள் அடங்கியுள்ளதென அறியலாம். இப் பெயர்கள் கருவூருக்குத் தென்கிழக்கு வரையில் செல்கின்றன. அரசனுடைய ஆணையானது பாண்டிக் கொடுமுடி, கருவூர், திருப்புக்கூடல், வெஞ்சமாக்கூடல், திருமுருகன் பூண்டி, அவி நாசி, அன்னியூர் முதலிய தலங்களின் கோயில் சிவபிராமணர் களுக்கும் அதிகாரிகளுக்கும் இடப்பட்டுள்ளது. இக்கோயில்கள் அரசாங்கத்திற்குக் கொடுத்து வந்த ஒட்டச்சு என்ற வரியானது தினப்படி ஆராதனைக்குச் செலவானது போக மீதி இல்லாமற் போனபடியால் நீக்கிவிடப்பட்டது. மேலும் அடியில்கண்ட திட்டங்களும் அதிலே வகுக்கப்பட்டன.

1. அரசனது ஓலை காட்டினாலும் கோயில் அதிகாரிகள் வேறு வரிகள் கொடுக்க வேண்டியதில்லை. 2. அவ்வரிகள் கேட்டால் நாட்டுத்தலைவர்களுக்கு கொடுக்க வேண்டியதில்லை. 3. அரசனுடைய கை முத்திரையுள்ள உத்திரவுகளுக்கு ஒரு பணமும், அரசன் சம்மதத்தின் பேரில் வெளியிட்ட உத்திரவு களுக்கு ஒரு பணமும் மட்டும் கொடுக்கலாம். 4. அரசனுடைய சிப்பந்திகளுக்கு வழிச்செலவோ, உணவோ, ஒரு பிடி அரிசி கூடக் கொடுக்கக் கூடாது. 5. மேலே சொன்ன இரண்டு பணங் களும் முன் பெற்றுக்கொண்டிருந்தவர்களுக்கே கொடுக்க வேண்டும். 6. அரசன் உத்திரவுபடி அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய 600-அச்சும், தொண்டைமானுருக்குக் கொடுக்க வேண்டிய 100-அச்சும் கட்டின பிறகு வேறு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை. 7. இத்திட்டங்களைக் கல்லிலும், செம்பிலும் பொறிக்கவேண்டியது. அக்கல்வெட்டில் கண்டபடி அரசனால் ஏன் இந்தக் கடுமையான திட்டம் வகுக்கப்பட்டதென்று தெரிய வில்லை. நாட்டில் மாமூல் வாங்குவது அதிகமாகிவிட்டபடியால் இவ்வாறான உத்திரவுகள் ஏற்படுத்தியிருக்கலாம். இக்கல்வெட் டில்கண்ட கூத்தாடும் நாயனார், தொண்டைமானார் என்பவர்கள் யார் என்றும் தெரியவில்லை.

இவ்வரசனுடைய 3-வது ஆண்டில் போசல நாட்டு மாம் பள்ளி மல்லையசாஹணி உறவினனான முடிகொண்ட சாஹணி ஒரு கதவு நிலையையும், பாரியூர் பனைய வேட்டுவர்களில் பொன்னப்பனையன் ஒரு கதவு நிலையையும் தந்திருக்கின்றார்கள். ஆகவே அவன் காலத்தில் பாரியூர் கோயில் திருப்பணி செய்யப் பட்டது என்று அறியலாம். மேலும், கூகலூர் மத்தியபுரீசுவரர் கோயிலில் (469/13), அரசனுடைய பெயரால் ஏற்பட்ட ஒரு வீமாவீற்குக் குளக்கீழ்ப் பாசனத்தில் உழவில் மூன்றில் ஒரு பங்கு கொடுப்பதாகக் குடிகள் ஒத்துக்கொண்டதின் பேரில் தேவதானக் குளம் அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது. (188/1910).

## 4. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்.

இவ்வரசனைப் பற்றி 13 கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. திங்களூரில் ஒன்றும், விஜயமங்கலத்தில் 5-ம், திருமுருகன் பூண்டியில் 2-ம், பருத்திப் பள்ளியில் 5-ம் ஆக 13 கல்வெட்டுகள் அவனுடைய 2-வது ஆண்டுமுதல், 27-வது ஆண்டுவரை கிடைத்திருக்கின்றன. இவன் ஒரு கொங்கு பாண்டியனோ அல்லது (1251—1264) வரை ஆண்ட மதுரைப் பேரரசனோ கூற இயலாதென்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். இவன் 28 ஆண்டுகள் வரை ஆட்சி செலுத்தியிருக்கிறபடியால் மதுரைப் பேரரசனாக இருக்க முடியாது. கொங்கு பாண்டியனாகவே இருக்கக்கூடும் என்று கூறலாம். இவனுடைய விஜயமங்கலத்துக் கல்வெட்டுக்களில் 2 முதல், 28 ஆண்டுகள் வரை பொறிக்கப்பட்ட எல்லாவற்றிலும் கோயிலுக்கு விளக்குத் தானம் செய்ததே கண்டிருக்கின்றது. மேலும் பெருகளந்தை ஆதிபுரீசுவரர் கோயிலில் இவ்வரசனுடைய கல்வெட்டுகள் 4 கிடைத்திருக்கின்றன. அக்கல்வெட்டுகளின்படி நாடு வாயிரக்கா நாடு எனவும், ஊர் களந்தை எனவும், கோயில் ஆதிபுராணீசுவரம் என்றும் காண்கிறோம். ஆனால் வேறொரு கல்வெட்டில் இக்கோயில் ஆதித்தேச்சுரம் என்று கண்டிருக்கிறது. (அதைக் கொண்டுக்

கரூர்த் தேவர் பாடிய களந்தை ஆதித்தேச்சுரம் இது என்பர்.) அரசனுடைய 3-வது ஆண்டில் பொறித்த ஒரு கல்வெட்டில் (173/27) பொங்கலூர்க்காநாட்டில் சிறுநாவலூராளி என்றசுந் தரபாண்டியபுரத்து நகரத்தார்கள், வாயிரக்காநாட்டுக்களந்தை ஊராளிக்கு 20 பணம் கொடுத்து அதற்காகச் சுந்தர பாண்டிய புரத்துக் குடிகளுக்கும், அவர்களுடைய கால்நடை சொத்துக் களுக்கும் பாடிகாவல் தருவதாக ஒப்பந்தம் செய்தார்களாம். பாண்டிய நாட்டிலும் ஒரு சுந்தரபாண்டியபுரம் இருந்தது (612-1905) என அறிக.

## 11. ஹொய்சளர்கள் (1200—1335.)

13-ம் நூற்றுண்டு வரலாற்றைக் கூறிவருகையில் கொங்கு நாட்டின் நான்கு எல்லைகளுக்கும் அப்பால் இருந்த நாடுகளின் நிலைமைகளைப்பற்றி முன்னர் எழுதியிருக்கின்றோம். அவற்றில் வடபால் இருந்த கன்னட நாட்டு அரசியல் வரலாற்றைப் பற்றி எழுதியிருக்கின்றோம். அதிலே ஹளேபீடு, தலைநகராகக் கொண்டு ஆண்ட ஹொய்சளர்களின் வரலாற்றை ஓரளவு கூறி யிருக்கின்றோம். அந்த ஹொய்சளர்கள் கொங்கு நாட்டில் அடிக்கடி புகுந்து, பல முறைகளில் நாட்டின் பகுதிகளைக்கைப் பற்ற முயன்றதையும் குறித்துள்ளோம். அவ்வாறு ஹொய் சளர்கள் கொங்கு நாட்டில் ஆக்கிரமித்த காலம் 13-ம் நூற் ருண்டும், 14-ம் நூற்ருண்டின் முதற்பகுதியும் ஆகும் (1189—1340). இதே காலத்தில் மதுரைப் பாண்டியர்கள் தென் திசையிலிருந்து வந்து கொங்கு நாட்டைக் கைப்பற்றினுர்கள். அதைப்பற்றிக் கொங்கு பாண்டியர்களைக் குறித்துக் கூறிய பகுதிகளில் சொல்லியிருக்கிறோம். ஹொய்சளர்கள் அநேகமாக அதே காலத்தில் வடக்கேயிருந்துவந்து விளைத்த செயல்களை இங்கே கூறுவோம்.

பாண்டியர்களைப் போல் நாட்டைக்கவர்ந்து கொண்டு தங்கள் பிரதிநிதிகள் மூலமாக ஹொய்சள மன்னர்கள் கொங்கு

நாட்டை ஆளவில்லை. படையெடுத்துத் தோல்வியுற்ற மன்னர்களிடம் திறைவாங்கிக்கொண்டு பெயருக்கு மாத்திரம் அதிபர்கள் என்று கூறிக்கொண்டு சென்று வீட்டார்களென்றே கூற வேண்டும். அந்தக் காரணத்தினால்தான் ஹொய்சளர்களுடைய கல்வெட்டுக்கள் கொங்கு நாட்டில் மிகக்குறைவாக இருக்கின்றன. ஹொய்சள வம்சத்தில் முதல் நான்கு அரசர்கள் கொங்கு நாட்டைப் பற்றி அவ்வளவாக எண்ணவேயில்லையென்று தோன்றுகின்றது. முதல் முதலில் அவர்கள் செய்த காரியம் கங்கவாடியைப் பிடித்ததுதான். அதுவும், அதன் தலைநகரும் சோழர்கள் வசம் இருந்தது. சோழர்களுக்காக தகடூர் அதிகமான் கங்கவாடியை ஆண்டுவந்தான். சோழர்கள் காலத்தில் சமணர்களுடைய கோயில்கள் அழிக்கப்பட்டன. அதையொட்டி சமணனான பிட்டிதேவன், அதிகமானை விரட்டியோட்டிவிட்டு தலைக்காட்டைப் பிடித்துக்கொண்டான். பிறகு கோலார் முதலிய இடங்களும் அவன் வசம் வந்தன. இப்போரில் தோல்வியுற்ற அதிகமான் பெயர் விடுகாதழகிய பெருமாள் என்பது. இவ்வாறு தலைக்காட்டைப் பிடித்த பிட்டிதேவனுடைய கல்வெட்டுக்கள் இரண்டு கொள்ளேகாலத்துக்கடுத்த முடிகொண்டத்திலிருக்கின்றன. அங்கே இலட்சுமிநாராயண சுவாமிகோயிலில் உள்ள கல்வெட்டில் (2-1910) அவனுடைய விருதுக்கள் வரிசையாகக் கூறப்பட்டுள்ளன. (1115-1141). மேலும் சிவாலயத்திலுள்ள ஒரு கல்வெட்டில் (12-1910), அவ்வரசன் படையெடுப்பும் வெற்றியும் கூறப்பட்டுள்ளன. அரசனுடைய பெயர் விஷ்ணுவர்த்தனனென்று, அவன் பின்னாளில் வைத்துக்கொண்ட பெயரால் குறிக்கப்பட்டுள்ளன.

விஷ்ணு வர்த்தனனுக்குப் பிறகு வீர வள்ளாள தேவன் II (1173—1220) என்ற ஹொய்சளனுடைய கல்வெட்டுக்கள் அதே முடிகொண்டத்தில் மூன்று இருக்கின்றன. அவைகளில் 1189-ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இந்த நாடு முடிகொண்ட சோழ மண்டலத்தில் கங்கைகொண்ட சோழவள

நாட்டில் படிநாடு என்ற பெயருடையதென்றும் ஊரின்பெயர் முடிகொண்ட சோழபுரம் அல்லது தேசி உய்யக்கொண்ட பட்டணம் என்றும், கோயில்பெயர் தேசிப்பெருமாள்கோயில் என்றும் கூறுகிறது. 1203 தேதியிட்ட மற்றொரு கல்வெட்டின்படி காவிரிக்கு வடபுறத்தில் தலைக்காடு என்ற இராஜராஜபுரம் உள்பட 18 ஊர் வியாபாரிகளும், காவிரிக்குத் தென்புறம் முடிகொண்ட சோழபுரம் உள்பட 18 ஊர் வியாபாரிகளும் நாராயணப்பெருமாள் என்ற தேசிப்பெருமாள் கோயிலுக்குத்தானங்கள் செய்தார்கள். முள்ளாச்சம்மன் கோயில் கல்வெட்டில் வீர வல்லாளன் பெயர் புஜபல வீரகங்கன் என்றும் அவ்வூர் வலங்கைச் சேனையின் சேனாதிபதி அகத்தியாண்டி நாயக்கன் மகன் தாசைய நாயக்கன், அக்கோயிலுக்கு ஒரு நிலதானம் செய்தான் (9-1910) என்றும் காண்கிறோம். இவ்வூர்க் கல்வெட்டுக்களில் 11 கல்வெட்டுக்கள் தமிழும், 1 கன்னடமுமாக இருக்கின்றது. தற்போது அங்கே பேசும் மொழி கன்னடம்தான். இது முன்னாளில் ஜைன நகரமாக இருந்தது. இந்த வல்லாளன் காலத்தில் அதாவது 1191-ல் ஹொய்சளர்கள் சுயேச்சைப்பதவி பெற்றார்கள்.

பின்வந்த வீரசோமேசன் (1235—1253) காலத்தில் ஒரே ஒரு கல்வெட்டு திங்களூரில் கிடைத்திருக்கிறது. அது பொறிக்கப்பட்டவருடம் 1224. அதுவரைக்கும் கொள்ளேகாலம் தாலூகாவோடு நின்றுகொண்டிருந்த ஹொய்சளர்கள் சோமேசன் காலத்தில் அதாவது 1224-ல் ஈரோடு தாலூகா திங்களூர்வரை வந்துவிட்டார்கள் என்று இதனால் அறியலாம். மேலும் இவனுடைய கல்வெட்டுக்கள் மூன்று முடிகொண்டத்தில் இருக்கின்றன. ஹேவிளம்பி (1237), விளம்பி (1238) சாதாரண (1250), ஆண்டுகளில் செய்த தானங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இனி நரசிங்கதேவன் III (1254—1292) காலத்துக் கல்வெட்டுக்கள் இரண்டு கிடைத்திருக்கின்றன. அவற்றில் ஒன்று

கொள்ளேகாலத்து இலட்சுமி நாராயணசுவாமி கோயிலிலும், மற்றொன்று முடிகொண்டம் இலட்சுமிநாராயண சுவாமி கோயிலிலும் இருக்கின்றன. அவற்றின்படி கொள்ளேகாலத்தின் பழைய பெயர் கொள்ளகரம் என்ற திரிபுவன மகாதேவீ சதுர்வேதிமங்கலம் என்பது. இவன் காலத்திலும் ஹொய்சளர்கள் ஆட்சி கொள்ளேகாலத்தளவில் நின்றுவிட்டது.

ஹொய்சளரின் இறுதி மன்னன் வீரவள்ளாள தேவன் II (1292—1341). இவன் நாடுபிடிக்க வேண்டுமென்ற பேராசை கொண்டவன். மதுரைப்பாண்டியர்களைத் துரத்தி தான் கொங்கு நாட்டுக்குள் தன் ஆணை செலுத்தவேண்டுமென்றுமுயன்றவன். அதற்கு அனுகூலமாகச் சில செய்திகளும் நடந்தன.

வடக்கே டெல்லியில் ஜலால்உத்தீன் என்ற ஆப்கானீயன் 13-ம் நூற்றுண்டின் இறுதியில் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய சகோதரன் மகன் அலாவுத்தீன் என்பவன் சில சேனைகளைத் திரட்டிக்கொண்டு தெற்கே புறப்பட்டான். விந்தியகிரியைத்தாண்டித் தக்ஷிண பீடபூமிக்கு வந்தான். தேவகிரி யாதவர்கள் முகம்மதியர்களைப் பார்த்ததேயில்லை. பெருத்த தொகை கொடுத்து அவனைத்திருப்பி அனுப்பிவிட்டார்கள். அவ்வாறு கொள்ளையடித்த பணத்தை எடுத்துக்கொண்டு டெல்லிக்குப் போன அல்லாவுத்தீன் சித்தப்பனைக் கொன்றுவிட்டு சிம்மாசனம் ஏறினான். அரசுப் பட்டம் தனக்குத் திரமானதும் தன் படைத்தலைவனாக நியமித்த மாலிக்காபூர் என்ற ஒரு கீழ்மகனை தென்னாடுகளுக்கு படையெடுத்துச் செல்லும்படி அனுப்பினான்.

மாலிக்காபூர் தென்னாடு முழுவதையும் கொள்ளையடித்து விட்டு வடக்கே திரும்பினான். அவ்வாறு அடிபட்டவர்களிலே ஹொய்சளரும், மதுரைப் பாண்டியரும் அகப்பட்டுக்கொண்டார்கள்.

அந்தக்காலத்தில் முன்னமே சொன்னபடி மதுரைப்பாண்டியர்கள் தாயாதிச் சண்டைகளிலே சிக்கிக்கொண்டுப் பலனற்

றவர்களாக இருந்தார்கள். முகம்மதியர்கள் வெகு எளிதில் மதுரையைக் கொள்ளையடித்துவிட்டு, புனித இடங்களை நாசப்படுத்திவிட்டுத் திரும்பிவிட்டார்கள். அந்த சமயத்தைப்பார்த்து ஹொய்சள வீர வள்ளாளதேவன் கொங்கு நாட்டை ஆக்கிரமிக்கத்தொடங்கினான். அங்கங்கே தன் பெயரால் கல்வெட்டுக்களையும் பதிப்பித்தான். அவ்வாறு பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 15 கிடைத்துள்ளன. அவைகளை ஆராய்ந்தால் கொங்கு நாட்டு வடப்பகுதி முழுதும் அவன் வசத்தில் சேர்ந்துவிட்டது எனக்கூறலாம். அடியில்கண்ட பட்டியலை ஆராய்ந்துகொள்க.

| எண் | ஊர் | தாலூகா | கல்வெட்டு எண் | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | அவிநாசி | அவிநாசி | 2 | 1311 |
| 2. | சேவூர் | ,, | 2 | 1322 |
| 3. | அந்தியூர் | பவானி | 1 | |
| 4. | பேரூர் | கோவை | 3 | 1323 |
| 5. | வெள்ளலூர் | ,, | 1 | |
| 6. | டணாய்க்கன்கோட்டை | கோபி | 2 | 1323 |
| 7. | விஜயமங்கலம் | ஈரோடு | 2 | 1325 |
| 8. | ஈரோடு | ,, | 2 | 1340 |

மேலே கண்ட கல்வெட்டுக்களின்படி நொய்யல் நதிக்கு வடபுறத்தில் இருந்த நாடு முழுவதும் வீரவள்ளாளதேவனுடைய ஆணைக்கு உட்பட்டுவிட்டது என்று அறியலாம்.

இனி வீரவள்ளாளதேவன் காலத்தில் கொங்குநாட்டில் நடந்த செய்திகளைக் கூறுவோம்.

அவிநாசியில் கிடைத்து உள்ள ஒரு கல்வெட்டின்படி (189-1909) திருப்புக்கொளியூர் அவிநாசியாளுடையநாயனார் கோயிலிலே இராகுத்தராயன் சந்தி என்ற விழாவை நடத்துவதற்காக மாதப்பதண்ணாயகன் தென்பள்ளிநத்தம் என்ற சிதகரகண்டநல்லூரைத் தானம் செய்தான். அந்த மாதப்ப

தண்ணுயகன் தணுய்க்கன்கோட்டையைக் கட்டிய பெருமாள் தணுய்க்கனுடைய மகன். இவன் வீரவள்ளாளதேவனுடைய படைத்தலைவன். முதிகொலைய குலத்தில் பிறந்தவன். வீர வள்ளாளன் 1292 ஜனவரி 31உ வியாழக்கிழமை சிம்மாசனம் ஏறினவன். திருப்பத்தூரிலும் இந்த வள்ளாளனுடைய கல்வெட்டு ஒன்று இருக்கின்றது (249-1909). மேலே சொன்ன சீதரகண்டன் இம்மடிராகுத்தராயன் என்ற பெயர்கள் தணுய்க்கன்கோட்டைத் தலைவர்கள் வைத்துக்கொண்ட பட்டப்பிருதுக்கள் ஆகும். இந்த மாதப்பதண்ணுயக்கனுக்கு கேதையன், சிங்கையன் என்ற இரண்டுமக்கள் இருந்தனர் (158-1909). அவர்களிலே கேதையன் தன்னுடைய தம்பியாகிய சிங்கையன் நலத்தின் பொருட்டு மாதவச் சதுர்வேதிமங்கலம், தென்னவத ரயசதுர்வேதிமங்கலம் என்ற ஊர்களின் மகாஜனங்களுக்கு கரைவழிநாட்டு ஒத்தைக்குமிண்டான் என்ற ஊரை தானம் செய்தானும். முந்திய இரண்டு ஊர்களும் செலவிற்குப் போதாமற் போக ஒத்தைக்குமிண்டானையும் மேற்கொண்டு தானம் செய்தானும். கரைவழிநாட்டு அகரம்புத்தூர் என்ற ஊர் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி தென்னூர் ஒத்தைக்குமிண்டான் என்றும், மற்ருெரு பகுதி மாதவசதுர்வேதிமங்கலம் என்றும் பெயரிடப்பட்டன. இப்பெயர்களிலே மாதவ என்பது பெருமாளின் தகப்பன் பெயர். ஒத்தைக்குமிண்டான் என்பது அவனுடைய பட்டப்பெயர். அவன் நீலகிரிசாதாரணன் என்று பிருதும் வைத்துக்கொண்டவன். அதாவது நீலகிரியை வென்றவன் என்பது அதன் பொருள். நீலகிரியை வென்று ஒத்தையைப் பிடித்ததனுல் ஒத்தைக்குமிண்டான் என்ற பட்டம் வகித்தான் போலும். தணுய்க்கன் கட்டிய கோட்டை தணுய்க்கன் கோட்டை என்னப்பட்டது. இத்தணுய்க்கன் கோட்டைக்கு மற்ருெரு பெயர் நீலகிரி சாதாரணன் கோட்டை என்பது. மிண்டான் என்ருல் தலைவன். ஆலக்கமிண்டான் என்ற பெயரும் அவ்வாறே ஏற்பட்டிருக்கின்றது (9-1910). சேலம் ஜில்லா திருப்பத்தூருக்கும் மாதவ சதுர்வேதிமங்கலம் என்ற

பெயர் சிங்கையன் காலத்தில் கொடுக்கப்பட்டது (253-1909) சிங்கையன் தகப்பன் மாதய்யன் என்று அறியவேண்டும். மேலும் தணுய்க்கன் கோட்டையில் இதே வள்ளாளனுடைய கல்வெட்டுக்கள் இருக்கின்றன. தணுய்க்கன் கோட்டை பவானிக்கரையின் மேல் உள்ளதொரு பாழடைந்த கோட்டை. அது பண்டைக்காலத்தில் ஒடுவங்க நாட்டில் துறவலூர் என்ற இடத்தில் கட்டப்பட்டது. அதில் தான்தோன்றி ஈசுவரர் கோயிலொன்றும், மாதவப் பெருமாள் கோயில் ஒன்றும், வீர பத்திர சுவாமிகோயில் ஒன்றும் இருக்கின்றன. இக்கோயில் களில் 11 கல்வெட்டுக்கள்படி யெடுக்கப்பட்டன (436 - 446-1906).

ஒரு கல்வெட்டு (கி. பி. 1323), உண்ணுமலைப் பட்டணத்தை, தலைநகராகக்கொண்ட வீரவள்ளாளன் காலத்தது என்று கண்டிருக்கின்றது. (திருவண்ணுமலை அருணசல புராணத்தில் வள்ளாள மகாராஜன் சரித்திரமுள்ளதை அறிக). அந்தக் கல்வெட்டில் மாதவன் மகன் வீரசிக்க கேதையனின் விருதுக்கள் நிரம்பக்கூறப்பட்டுள்ளன. அவை சீதரகண்ட இம்முடிராவுத்தராய, கொங்கரமாரி, கொங்கரதிசாபட்ட, நீல கிரிசாதார, அல்லால நாத, திவ்ய ஸ்ரீ பாதபத்மாராதக, ஏகா தசிவிரத நிராத, ஸ்வஸ்திபுர வாரதீஸ்வர என்பன. இந்த மாதவ நாய்க்கன் பெருமாள் தேவனுடைய மகன் மாதவனும், கேதையனும் தெற்கணும்பியைத் தலைநகராகக்கொண்ட 14 நாடுகளுக்கு அதிகாரியாய் இருந்தவர்கள். பெருமாள் தேவன் வீரவள்ளாளனின் தகப்பன், நரசிம்மன் III இடம் மந்திரியாக இருந்தவன்: அந்தப் பெருமாள் தேவன் நீலகிரியை வென்று நீலகிரிசாதாரண என்ற பெயர் வைத்துக்கொண்டு அங்கிருந்த மலைச்சாதியரை வெருட்டிவிட்டுத் தணுய்க்கன் கோட்டையைத் தன்பெயரால் கட்டி ஆணைசெலுத்தி வந்தான். தணுய்க் கோட்டை நரசிம்மன் காலத்திலேயே அதாவது 13-ம் நூற்றுண்டின் இடையிலேயே கட்டப்பட்டது. தணுய்க்கன் என்ற

சொல் தண்டநாய்க்கன் என்றதின் மரூஉவாகும். இந்தக் கோட்டையின் கோயில்களில்தான் வீரவள்ளாளன் காலத்தில் மாதப்பனும், அவன் மக்களும் கோயில்களுக்குத் தானம் செய்திருக்கின்றார்கள். அத்தானங்களில் ஊர்கள் மட்டுமேயன்றி, கறிவரி, படகுவரி, முதலியவைகளும் தரப்பட்டன. மேலும் வைசிய, வாணிய நகரத்தார்கள், புடவை, மிளகு, பாக்கு, நூல், உப்பு, தானியம், குதிரை இவைகளின்மீது சுமத்தப்படும் வரிகளைப்பற்றிக் கோயிலுக்குக் கொடுக்க ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இந்தக்கோட்டை அக்காலத்தில் தலைநகராக இருந்ததுமன்றி மைசூர் பீடபூமிக்கும், கொங்குநாட்டுச் சமநிலத்திற்கும் போக்குவரவுக்காக ஏற்பட்டிருந்த பெரும்பாதையில் ஒரு வியாபாரத்தலமாக இருந்தது என அறியலாம். இக் கோட்டை தற்போது ஆள்நடமாட்டமில்லாத மலைச்சுரத்தலமாக இருக்கிறது. கோயில்களும், கோட்டையும் கவனிப்பாரின்றிப் பாழாக இருக்கின்றன.

மேலும் அவிநாசிக்கடுத்த சேவூர்ப்பெருமாள் ஆலயத்தில் உள்ள கல்வெட்டுக்களின்படி வீரவள்ளாளன் காலத்தில் அக் கோயிலுக்குச் சில தானங்கள் செய்யப்பட்டன. அந்தியூரிலும் (பவானி), பேரூரிலும் (கோவை) அவனுடைய கல்வெட்டுக்கள் சில கிடைத்திருக்கின்றன. வெள்ளலூரில் உள்ள பெருமாள்கோயில் அவன் காலத்தில் திருஉலகளந்த பெருமாள் என்று பெயர் கொண்டிருந்தது. விஜயமங்கலத்தில் நாகேசுவர சுவாமி கோயிலுக்கு இராகுத்தராய நல்லூர் என்ற ஆறூர் அவன் காலத்தில் தானம் செய்யப்பட்டது (சகம் 1245). இராகுத்தராயன் என்ற பெயரினால் அந்த ஊர் தண்ணாய்க்கரோடு சம்பந்தப்பட்டு இருக்கவேண்டுமென்று தெரிகிறது. மேலும் ஈரோடு தொண்டீசுவரமுடையார் கோயிலில் ஒரு கல்வெட்டின்படி சகம் 1262-ல் பூந்துறை நாட்டவர்கள் பெந்தலூர் என்ற ஊரை அக்கோயிலுக்குத் தானம் செய்திருக்கிறார்கள்.

மேலேகண்ட கல்வெட்டுக்களையும் அதிலுள்ள செய்திகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது வீரவள்ளாளன் வெகு பெருமையோடு கொங்கு நாட்டின் வடபகுதியில் ஆணை செலுத்தினுனென்று அறிகிறோம். இவன் முகம்மதியர்களுக்குக் கொள்ளை கொடுத்துவிட்டு மீண்டும் சிறிது காலத்தில் தலைநிமிர்த்திக் கொண்டு தன்னுடைய படைத்தலைவர்கள் மூலமாக கொங்கு நாட்டின் வடபகுதியை ஆண்டுவந்தான் என்க. புயல் காற்று அடிக்கும்போது தலை சாய்ந்து அது அடங்கினவுடன் தலை நிமிர்ந்து நிற்கும் நெற்பயிர்போல வள்ளாளனும் முகம்மதிய படையெடுப்புக்குத் தலைகுனிந்துவிட்டுப் பின்னுல் தலைநிமிர்ந்து கொண்டான். ஆனுல் இந்த வெற்றி அவன் ஆட்சியோடு தொலைந்தது. 1341- ஓடு அவன் கல்வெட்டுக்கள் இறுதியடைந்தன. மீண்டும் டெல்லி சுல்த்தான் முகம்மது துக்லாக் அனுப்பிய படை யெடுப்பில் மற்ற அரசர்களோடு ஹொய்சள வம்சமும் தொலைந்தது. ஹொய்சளர்கள் கொங்கு நாட்டில் ஏற்படுத்திய சிலமாறுதல்கள் அழியாமல் தங்கிவிட்டன. அவைகளைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

## 12. கேரள ஆர்ப்பாட்டம். (1250-1350).

பதின்மூன்றும் நூற்றுண்டில் கொங்கு நாட்டின் நிலைமையைப்பற்றிக் கூறுவதற்காக அதனைச் சுற்றிலும் இருந்த நான்கு எல்லை நாடுகளின் வரலாறுகளை முன்னமே குறித்தோம். அவ்வாறு குறிக்கையில் கொங்கு நாட்டிற்கு மேற்புறத்திலிருந்த மலையாள நாட்டின் வரலாற்றின் ஒரு பகுதியையும் எடுத்துச் சொன்னேம். அதில் வெள்ளலூரில்காணும் இரண்டு கேரள அரசர்கள் கோக்கண்டன் வீரநாராயணன், கோக்கண்டன் இரவி என்ற அரசர்கள் அங்கே கல்வெட்டைப் பொறித்த செய்தியையும், பின்னர் கொங்கர்கள் சிற்றூரின் மீது படையெடுத்துத் தெய்வவசத்தால் தோல்வியுற்ற கொங்குப்படை வரலாற்றையும் கூறினேம். இவ்வாறு கொங்கு நாட்டரசன் தோல்வியுற்றதைக்கண்ட கேரளநாட்டு மன்னர்

களுக்குக் கொங்கர்கள்மீது ஏளனமும், தமக்குள் பெருமிதமும் அடைவது இயல்பல்லவா ? அதைக்கொண்டு செருக்கடைந்த கேரள மன்னர்கள் கொங்குநாட்டின்மீது படை எடுக்க நினைத்தார்கள். கொங்குநாட்டார் அப்போது தளர்ச்சி அடைந்திருந்தார்கள். ஆகவே மலைநாட்டுப் படையெடுப்பு வெகுசுலபமாக முன்னேறியது.

மலைநாட்டுச் சிற்றரசர்களில் ஒருவன் பெயர் வீரகேரளன். அவன் மலையாளரைத் திரட்டிக்கொண்டு தன் எல்லையாகிய வாளையாற்றைத்தாண்டிப் பேரூர்நாடு புகுந்தான். அப்போது எதிர்ப்பு இல்லாத வகையில் விரைவிலே பேரூர்நாடு முழுவதும் பிடித்துக் கோயமுத்தூரையும் தன் வசப்படுத்திக் கொண்டான். அக்காலத்தில் நாட்டின் தலைநகர் பேரூராகவும், அந்நாட்டில் இருந்த பல ஊர்களில் கோயமுத்தூர் ஒன்றாகவும் இருந்தது. கோயமுத்தூரின் பழைய பெயர் கோவன் புத்தூர் என்று அமைந்து இருந்தது. கோவன் என்ற இருளர் தலைவனால் ஆளப்பட்டிருந்த ஒரு ஊராதலின் கோவன்புத்தூர் என்று அதன் பெயர் ஏற்பட்டிருந்தது. கோவன் அரசன் முதலான சொற்களும் அக்காலக் கல்வெட்டுக்களில் கிடைக்கின்றன. வீரகேரளன் கோயமுத்தூரைத் தன் வசப்படுத்திக்கொண்டதும் அதற்கு வீரகேரளநல்லூர் என்று புதுப் பெயர் இட்டான். அப்பெயரையே கல்வெட்டுக்களிலும் தீட்டும்படி கட்டளையிட்டான். அவ்வாறு தீட்டினகல்வெட்டுக்கள் பேரூரிலும், குமரலிங்கத்திலும் இருக்கின்றன. பேரூர்க்கல்வெட்டில் (565-1893) பேரூர் நாட்டு கோவன்புத்தூர் ஆன வீரகேரளநல்லூர் என்று கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின்படி கோவன்புத்தூரில் இருந்த நிலத்தைக் கோனேரின்மை கொண்டான் காலத்தில் திரு ஆன்பட்டி உடையார் (பட்டீசுவரர்) ஆராதனைக்கும், திருப்பதிகம் பாடுதற்கும் தரப்பட்ட செய்தி கண்டிருக்கிறது. மற்றொரு கல்வெட்டில் கோவன் புத்தூர் என்பது திரு ஆன்பட்டி உடையாருக்குத் தேவதான

ஊராகியிருந்த செய்தியும் கூறப்பட்டுள்ளது. மேலும் பேரூர்க்கோயிலுக்கு கரைவழி நாட்டுக் கண்ணுடிப் புத்தூரில் இருந்த நிலங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அக் கண்ணுடிப் புத்தூருக்கு அருகிலுள்ள குமரலிங்கத்துக் கல்வெட்டின்படி (129-1909) பேரூர் நாட்டுக்கோவன்புத்தூரான வீரகேரள நல்லூரில் இருந்த ஒரு நிலத்தைத் திருவரங்கம் அழகியமணவாளர் சந்நிதிக்கு கொடுக்கப்பட்டதாக அறிகிறோம். இந்தக் கல்வெட்டுக்களினால் கோவன்புத்தூரை வீரகேரளன் என்ற கேரளநாட்டு மன்னன் பிடித்த செய்தி தெரிகின்றது. (முன்னர் சேர்க்கையில் விவரம் காண்க.)

மேலும்பேரூரிலேயே மற்றொரு கல்வெட்டில் (54-1893) கோகண்டன் ரவிக்கு இளையகுமாரனை இரவிகண்டன் என்ற பெயர் காணப்படுகின்றது. கோக்கண்டன் ரவி, இரவி கண்டன் என்ற பெயர்கள் மலைநாட்டுப் பெயர்களே. ஈரோடு தொண்டீசுவரமுடையார் கோயிலிலும் இரவிகோதை என்ற கோக்கலி மூக்கனுடைய நான்காவது ஆண்டு கல்வெட்டும் (12-91), கோ ரவி கோதையினுடைய 22-வது ஆண்டு கல்வெட்டும் இருக்கின்றன. இவை கேரளர்களுடைய ஆதிக்கத்தைக் காட்டுகின்றன.

மேலும் கேரள அரசர்கள் கோயமுத்தூரோடு திருப்தி அடையாமல், மேற்கே வெள்ளிமலை ஓரத்திலுள்ள ஊர்களையும் ஆக்கிரமப்படுத்தியிருக்கிறதாகத் தெரியவருகிறது. அங்கே நாகேசுவரர்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் அதிராஜராஜன் திருமடைவிளாகம், முட்டம் என்கிற அமரபுஜங்கர நல்லூர், ரவிவர்ம சதுர்வேதி மங்ககலம், முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இப்பெயர்கள் சேரநாட்டுத் தொடர்பை எடுத்துக்கூறுகின்றன என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். (150-1910). குமரலிங்கத்துக் கல்வெட்டில் (133-1909) அமரபுஜங்கநல்லூர் என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. அவ்வூரை வீரகேரள அமரபுஜங்கவர்மன் என்ற

கேரள அரசன் தாபித்ததாக கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கூறுகின்றூர் (133/1909).

இனிப் பழனியிலே பெரியாவுடையார் கோயிலிலே 11 வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் 5 தமிழ் கல்வெட்டுக்களும் உள்ளன. அவைகளிலே இரண்டு தவிர மற்றவை யெல்லாம் கேரள அரசர்களுடைய கல்வெட்டுக்களே. இத்தனைக் கல்வெட்டுக்களும் கேரள மன்னர்கள் தீட்டியிருக்கிறதினுல் பழனி வரைக்கும் கேரளர்களுடைய படையெடுப்பு ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டுமென்பது திண்ணம். பழனி கொங்கு நாட்டுக்குச்சேர்ந்தது. அவ்வூரிலிருக்கும் உள்நாட்டின் பெயர் வைகாவி நாடு என்பது. பழனித் திருப்புகழில் "சேரர் கொங்கு வைகாவூர் நந்நாடு" என்று அருணகிரிநாதர் பழனியைக் குறிப்பிட்டிருக்கிறூர். ஆகவே ஒரு காலத்தில் பழனி சேரர் அல்லது கேரளத்தாரின் ஆதிக்கத்தில் இருந்தது என்னலாம்.

வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றில் 'வீரநாரண வீர கேரளன்' என்ற மன்னனுடைய 11-வது ஆண்டில் இரவிமங்கலம் என்ற ஊர் குறிக்கப்பட்டுள்ளது (706/1905). அதே மன்னனுடைய 8-வது ஆண்டில் கோதைமங்கலம், அமரபுஜங்கம் என்ற் பெயர்கள் வந்துள்ளன. அவனுடைய 6-வது ஆண்டில் "வேசாதப்பாடி" என்ற ஊர் கூறப்பட்டுள்ளது. 29-வது ஆண்டில் ஒரு தங்க நகை அக்கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது.

வீரகேரள அமரபுஜங்கவர்மனுடைய 23-வது ஆண்டில் நறையனூர் நாடும், 28-வது ஆண்டில் ஒரு நில விற்பனையும் கூறப்பட்டுள்ளன. மற்றும் ஆண்டு அழிந்த மற்றொரு கல்வெட்டும் அவன் பெயரால் கிடைத்திருக்கின்றது. இவைகளைக் கொண்டு வீரகேரள வீரநாரணனும், அமரபுஜங்கனும் ஒரே ஆளாக இருக்கக்கூடுமோ என்று ஐயுறக்கூடும்.

மேலும் வீரநாராயண அதிசயச்சோழன் என்ற பெயரில் நான்கு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவன் பெயரில் சோழன் என்ற பட்டமிருந்தாலும் இவனைக் கேரள அரசனென்றே கருதுகின்றனர்.

அதிராஜராஜதேவன் பெயரில் 40-ம் ஆண்டுக் கற்கள் இருக்கின்றன. அதிராஜராஜனுக்கு அதிசயச் சோழன் என்ற பெயரும் ஒன்று உண்டு. ஆகவே இந்தப் பெயர்கள் எல்லாம் கேரள மன்னர்களின் பெயர்கள் ஆனாலும் ஒருவருக்கொருவர் எவ்வாறு உறவினர் என்று கண்டுகொள்ள வழியில்லை. இக் கல்வெட்டுக்களின்படி கோதைமங்கலம் என்ற ஊர் 'எல்லா சோழ சதுர்வேதிமங்கலம்' என்ற பெயரோடு வைகாவூர் நாட்டில் இருந்ததென அறிகிறோம் (721/1905).

பெரியாவுடையார் கோயில் சுவாமிக்கு இருவிரால் பரமேசுவரமுடைய நாயனார் என்ற பெயர் என்றும், அக்கோயில் அம்மையை விக்கிரமபாண்டிய கங்காநாராயண சக்கரவர்த்தி என்பவன் தாபித்தான் என்றும் அறிகிறோம்.

மேலேகண்ட கல்வெட்டுக்களைக் கொண்டுமுட்டம் பேரூர், வெள்ளலூர், பழனி, முதலிய இடங்களில் கண்ட கேரள அரசர்கள் ஒவ்வொருவருக்கும் சம்பந்தம் இருக்கக்கூடுமென்று ஊகிக்கலாம். பொதுவாக 13-ம் நூற்றாண்டில் கேரள மன்னர்கள் கொங்குநாட்டின்மீது படையெடுத்துப், பேரூர்நாடு, கரைவழிநாடு, வைகாவூர்நாடு என்ற நாடுகள் வரைக்கும் சென்றிருக்கவேண்டுமென்று அறிந்துகொள்ள சான்றுகள் இருக்கின்றன.

மேலேகண்ட இரவிகோதை முதலிய பெயர்கள் கொச்சியில் காணும் கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளன. கொச்சி அரசர்களுக்கு பெரும்படப்பு சொரூபம் என்ற பெயர் உண்டென்பது முன்னமே கூறியிருக்கின்றோம். அப்பெயர்கொண்ட அரசனுடைய 6-ஆம் ஆண்டில் பொள்ளாச்சி சுப்பிரமணிய

சுவாமி கோயிலில் கல்வெட்டுத் தீட்டப்பட்டுள்ளது. அதன் படி அந்நாடு காவடிக்காநாடு என்றும், அவ்வூரின் பழைய பெயர் இறைச்சில் பொழில் வாய்ச்சி என்றும், அதனுடைய மற்றொரு பெயர் முடித்தலைகொண்ட சோழநல்லூர் என்றும் கோயில் பெயர் திருவகத்தீசுவரமுடையார் கோயில் என்றும், அறிகிறோம். பொள்ளாச்சிக்கடுத்துள்ள ஆனைமலை சோமேசு வரர் கோயிலிலும் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற் றின்படி, அந்நாட்டின் பெயர் "வீரகேரளவளநாடு", ஊரின் பெயர் "நன்னனூர்" சுவாமியின் பெயர் "நக்காண்டார் ஆனக் கீசுவரர்" அம்மன் பெயர் "பெற்றநாச்சியார்" முதலிய செய்திகள் அறிகிறோம். நன்னன் மலைநாட்டில் பூழிநாட்டை ஆண்டவன் என்று அகநானூறு கூறுகின்றது. ஆகவே அந்தச் சிற்றரசனுடைய எல்லை ஆனைமலைமட்டும் எட்டியிருக்கலாம் இந்தக் கல்வெட்டுக்களில் வடச்சேரி வீக்கிரமன் என்ற மலை நாட்டுச் சிற்றரசன் பெயரும் காண்கிறோம். இந்தச் செய்தி களும் அக்காலத்தில் கேரளத்தார் கொங்குநாட்டில் வந்திருந்த செய்திகளை நிரூபிக்கின்றன.

கேரளர்களைப்பற்றி இறுதியாக ஒரு செய்தி கூறவேண் டும். பாண்டிய வம்சத்தைச் சீர்குலைத்ததில் கேரளர்களும் ஒரு பங்கு எடுத்துக்கொண்டனர். 13-வது நூற்றாண்டு இறுதி யிலும் 14-வது நூற்றாண்டு முதலிலும் பாண்டிய நாட்டில் பாண்டியர்களுள் தாயாதிச்சண்டை ஒருபுறம் ஏற்பட்டிருக்க, மாலிக்காபூர் மற்றொருபுறம் கொள்ளையடித்து மதுரையை அலைக்கழிக்க, அவன் சென்ற பிறகு வடக்கேயிருந்து ஹொய் சளரும் காகதீயர்களும் வடபுறத்து மாகாணங்களைப் பாண்டிய ரிடமிருந்து கவர்ந்து கொண்டனர். இந்தச் சமயத்தை நன்கு அறிந்த இரவிவர்மன் குலசேகரன் என்ற கேரளநாட்டு அரசன் பாண்டிய நாட்டின்மீது தண்டெடுத்தான். கேரளநாடு ஒன்றே மாலிக்காபூரினுல் கொள்ளை அடிக்கப்படாதநாடு. இரவிவர் மன் சங்கிராமதீரன் (போரில்தீரன்) என்ற பட்டம் வகித்துக்

கொண்டு (திருவிதாங்கோடு) வேணாட்டிற்கு அரசனாகி, கொல்லத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான். அவன் 1311-1312ல் மிகச்சிறப்போடு விளங்கினான். முதலிலேயே மாலிக்காபூரினால் தோல்விடைந்து பலமற்றுக்கிடந்த வீரபாண்டியன் சுந்தரபாண்டியன் இருவர்களையும் தோற்கடித்து, பாண்டியநாட்டின் சில பகுதிகளை தன் நாட்டோடு சேர்த்துக்கொண்டான். இவனுடைய ஆட்சி தென்பாண்டிநாட்டில் மலையோரமாகக்களக்காடு வரைக்கும் சென்றிருக்கின்றது. பாண்டியர்களுக்கு இருந்த நாஞ்சில்நாடு கேரளர்கைக்குள் சென்றுவிட்டது. கோயில்களிலும் கேரளத்தாரின் செல்வாக்கும், ஆராதனையும் புகுந்துவிட்டன. அதனுடைய சின்னங்கள் இப்போதும் திருச்செந்தூர் வரைக்கும் எட்டியுள்ளதை அறியலாம்.

பாண்டியர்களுடன் வெற்றிபெற்றதை எண்ணிச் செருக்குற்ற இரவிவர்மன் குலசேகரன் தமிழ்நாட்டில் சோழநாடு, தொண்டைநாடு மட்டும் சென்றான். ஆனால் அங்கே முப்பிடி நாய்க்கன் என்ற விக்கிரமசிங்க பட்டணத்துத் தலைவன் எதிர்த்துக் கேரளனைத் தெற்கே துரத்திவிட்டான். கேரளனும் தன் நாட்டிற்கே ஓடிவிட்டான். இந்தப்படி கேரளனுடைய வெற்றி மிகவும் சுருங்கிவிட்டது. கேரளர்கள் அது முதல் தமிழ்நாட்டின் பக்கம் எட்டிப்பார்க்கவில்லை.

## 13. முகம்மதியத் தொல்லைகள் (1300—65)

இதுகாறும் எந்த முறையில் கொங்குநாட்டை அதன் நாற்புறங்களிலும் இருந்த வல்லரசுகள் பகிர்ந்துகொள்ள முயன்று, அதனையும் பாழாக்கித் தாங்களும் பாழானார்கள் என்று உரைத்தோம். சோழர்கள் காலத்தில் ஒருவாறாக நிம்மதியடைந்த கொங்குநாடு, அந்தப்பேரரசு தொலைந்து போகப் பாண்டியர்களும், ஹொய்சளர்களும், இரண்டு நாய்கள் ஒரு எலும்புத்துண்டுக்குச் சண்டை பிடித்தாற்போலப் போர்கள் புரிந்து, இருவரும் வேறொரு கொள்ளைக்காரன்பால் அகப்பட்

டுக்கொண்டார்கள். இடையில் மலைநாட்டு அரசர்களும் ஒரு சிறிது கவ்வத்தொடங்கினார்கள். இறந்த யானையின் களேபரத்திற்காக இரண்டு ஓநாய்கள் சண்டையிட ஒரு நரி அதில் ஒரு பங்கை இழுத்துக்கொண்ட கதையாயிற்று. இந்தச் செயல்களை யெல்லாம் கண்டிக்க வடநாட்டிலிருந்து எதிர்பாராத முறையில் முகம்மதிய படையெடுப்பு வந்தது. அதைப்பற்றிச் சிறிதாக முன்னர் கூறியதை இனி விவரிப்போம்.

14-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்இந்தியா நான்கு அரசுகளால் ஆளப்பட்டு வந்தது. அந்நான்கு அரசுகளும் சமமான சக்திபொருந்தியவர்களாக இருந்தார்கள். அவர்களிலே வடமேற்கிலே தேவகிரி யாதவர்கள் நருமதைத் தீரத்தைக் காத்து வந்தனர். வடகிழக்கு ஓருகல் காகத்தீயர்கள் வங்கத்திலிருந்து வரக்கூடிய எதிரிகளைக் கண்காணித்து வந்தார்கள். இரண்டாந்தரமாகத் துவாரசமுத்திரம் ஹொய்சளர்கள் மேற்கிலும், மதுரைப்பாண்டியர்கள் தெற்கிலும் இருந்து தென்னாட்டை ஆண்டுவந்தனர். 1293ல் முதன் முதலில் அல்லாவுதீன் தெற்கே தோன்றி பெரும் தனக்குவியல்களை வாரிக்கொண்டு போனான். பிறகு அவன் படைத்தலைவனான மாலிக்காபூர் தென்னாட்டு அரசர்களுடன் போர்செய்து 1310-க்குள் அவர்களைத் தோற்கடித்தான்.

அப்போது காபூர் தேவகிரிக்கு வந்ததும், யாதவராமதேவன் போரில் வெல்லமுடியாது எனக்கண்டு அவனுக்குக் கீழ்ப்படிந்துவிட்டான். அதனால் மீண்டும் அரசனாக அனுமதிக்கப்பட்டான். இராமதேவனுக்குப் பின் சங்கரதேவன் பட்டத்திற்கு வந்தான். அவன் கப்பம் கட்டாததினால் காபூர் அவன் மீது சென்று அவனைக்கொன்றுவிட்டான். 1316-ல் ஹரிபாலன் கலகம் செய்தான். அலாவுதீனுக்குப்பின், சுல்தானான முபாரக் ஹரிபாலனைத்தோற்கடித்து அவனை உயிருடன்எரித்துக்கொன்றான். 1309-ல் காபூர் தேவகிரி வழியாக ஓருகல்லுக்குச் சென்று காகதிய மன்னனைத் தோற்கடித்தான். 1310-ல் தெற்கே ஹளே

பீடு ஹொய்சளர் மீது படையெடுத்து ஒரு சண்டையிலே அவனைத் தோற்கடித்துச் சிறை பிடித்தான். கொள்ளையடித்த பொன்குவியலோடு காபூர் டெல்லிக்குத் திரும்பினான். ஹொய்சளன் தன் தலைநகரை மீண்டும் கட்டி அங்கே ஆண்டான். 1326-ல் முகம்மது துக்லக் என்ற கொடிய அரசன் ஹளேபீடு மீது மீண்டும் படையெடுத்து அந்நகரை அழித்தான். ஹொய்சளன் தொண்டனூருக்கு ஓடிப்போய்ப் பின்னர் திருவண்ணாமலையில் வசிக்கத் தொடங்கினான். அவனோடு ஹொய்சள வம்சம் அழிந்தது.

1310-ல் மாலிக் காபூர் துவார சமுத்திரத்தை முற்றுகையிட்ட காலத்தில் மதுரையில் பாண்டியரில் சுந்தர பாண்டியனுக்கும் வீர பாண்டியனுக்கும் தாயாதிச்சண்டை ஏற்பட்டுச் சிம்மாசனத்திற்காகப் போராடிக்கொண்டிருந்தார்கள். அச்சண்டையிலே சுந்தர பாண்டியன் தோல்வியுற்று முகம்மதியத் தலைவனிடம் சரணம் அடைந்தான்.

மாலிக் காபூரோ, கொள்ளையடிக்க வந்தானேயொழிய தாயாதிச் சண்டை தீர்க்க வரவில்லை. காபூர் சென்ற வழியிலெல்லாம் ஊர்களையும் கோயில்களையும் கொள்ளையடித்துக் கொண்டு மதுரைக்கு வந்தான். வீரபாண்டியனோ முகம்மதியத் தலைவன் வருவதைக் கேட்டு மதுரையைவிட்டு ஓடிவிட்டான். காபூர் ஊருடன் கோயிலையும் கொள்ளையடித்துக்கொண்டு பெருத்த பொருளோடு திரும்பினான். முந்தியே கெட்டிருந்த மதுரை இந்தக் கொள்ளையடியால் பாழடைந்தது. காபூர் திரும்பினதும் பாண்டியர் மீண்டும் ஆளத்தொடங்கினர். பத்து ஆண்டுகளுக்குப்பின் குசுருகான் என்ற மற்றொரு படைத்தலைவன் மறுபடியும் படையெடுத்துவந்தான். பிறகு முகம்மது துக்ளக் காலத்தில் 1327-ல் அவன் அனுப்பிய சேனை மதுரையை இறுதியாகப் பிடித்து ஜலாலுதீன் ஆசான்சா என்பவனைப் பிரதிநிதியாக நியமித்தது. அது நடந்தது 1329—30-ம் ஆண்டில் அவன் மதுரையில் சுல்தான் பெயரை வகித்து, ஒரு முகம்மதிய

வம்சத்தையும் ஏற்படுத்திக்கொண்டு ஆண்டான். அந்த வம்சத்தரசர்களில் எட்டுபேர் முப்பது, நாற்பது ஆண்டுகள் ஆண்டார்கள். நாட்டு மக்களை மிகக் கொடுமைக்கு உட்படுத்தினுர்கள். எழுத்தால் எழுத முடியாத கொடுங்கோன்மை நடந்தது; மக்களைக் கொல்வதும் கோயில்களைச் சூறையாடுவதுமே அவர்களுடைய தொழில். அப்படிப்பட்ட ஆட்சி வெகுகாலம் இருக்க முடியுமா? 1378-ம் ஆண்டில் அது தொலைந்தது. அதற்கு மூல காரணமாயிருந்தது விஜயநகர சாம்ராச்சியமே ஆகும்.

முதலில் டெல்லி சுல்தானின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஜலாலுத்தீன் 1335-ல் சுயேச்சையாக ஆள ஆரம்பித்து விட்டான். அவன் மிகக்கொடியவன். அவனுடைய மைத்துனன் இபின்பதூதா என்பவன் அக்காலத்துச் சரிதத்தை எழுதியிருக்கிருன். அதைக்கொண்டு அந்நாட்டுச் சரிதத்தை ஒருவாறு அறியமுடியும்.

மதுரையில் சுல்தான் அரசு ஏற்பட்ட பிறகு அதனைக் கூடியமட்டில் தொலைக்க இந்து அரசர்கள் முயன்றுர்கள். ஹொய்சளர்கள் அதில் அக்கறை காட்டினுர்கள். வீர வல்லாளதேவன் III தெற்கே வந்து கண்ணனூர் என்ற இடத்தில் முகம்மதியர்களோடு போர் புரிந்தான் (1340 A D). பாண்டிய சிற்றரசர்கள் ஒரு வேளை தங்கள் அரசை மீண்டும் அடைய முயற்சி செய்திருப்பார்கள். ஏனெனில் இந்தக்காலத்தில் மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை முதலிய இடங்களில் பாண்டியக்கல்வெட்டுக்கள் இருந்ததே ஒருவகைச் சான்றுகள் ஆகும் (342/34, 527/26). பாண்டியர்கள் முயற்சி பலித்திருக்காது. ஏனெனில் கண்ணனூர் கொப்பத்தில் சண்டை பிடித்த வீரவல்லாளன் III அதில் தோல்வியடைந்தான். அந்தத் தோல்வி மதுரைச் சுல்தானியர்களுக்கு மேலும் இருபது ஆண்டுவரை ஆட்சி செய்ய இடம் தந்தது. புதுக்கோட்டை இராமநாதபுரம் சீமைகளில் இந்துத் தலைவர்கள் முகம்மதியர்களை எதிர்த்துத் துரத்திவிட்டுத் தங்கள் கோயில்களைப் புதுப்

பித்துக்கொண்டார்கள். திருப்புத்தூர்க் கல்வெட்டு ஒன்றின் படி (1340) துலுக்கர் இடித்துத் தள்ளிய கோயில்களை அந் நாட்டுச்சூரைக்குடித்தலைவன் விசயாலயத் தேவன் அத்துலுக் கர்களைத் துரத்திவிட்டுக் கோயிலைப் புனருத்தாரணம் செய்த தாகக் கூறுகிறது. அதற்கு அடுத்துள்ள குன்றக்குடி, திருக் கோளக்குடி, சூரைக்குடி முதலிய கோயில்களிலும் அழிந்த வைகள் புதுப்பிக்கப்பட்டன என அறிகிறோம். ஆனால் மதுரை யிலோ முகம்மதிய ஆட்சி சிறிதுகாலம் நீண்டுகொண்டிருந்தது. என்றாலும் மிகக்கொடுமைகள் செய்துகொண்டுவந்த ஜலாலுத் தீன் 1340-ல் கொலை செய்யப்பட்டான். அவனுக்குப்பின் அலா வுதீன் உதௌஜி என்ற அன்னியன் ஒரு வருடம் ஆண்டான். அவனும் கொலையுண்டான். பிறகு ஜலாலுத்தீன் சகோதரன் மகன் குதுப்புதீன் 40 நாள்கள் மட்டும் ஆண்ட பிறகு கொலை யுண்டான். பிறகு கியாசுதீன் ஒரே ஆண்டு அரசாண்டான். அவன் சொல்ல முடியாத கொடூரன். அவனே வீரவள்ளாள னைக்கொன்றவன். பிறகு நாசிருதீன் அதில்ஷா, பகிருதீன் என் பவர்கள் 1368 வரை ஆண்டார்கள். பிறகு அலாவுதீன் சிக்கந் தர் என்ற இறுதி அரசன் பெயருக்கு மட்டும் அரசனாக இருந் தான் (1368—1378) அவனோடு மதுரை சுல்தானிய ஆட்சி முடிவு அடைந்து தொலைந்தது. இந்த அரசர்களைப் போல் கொடியவர்கள் உலகத்தில் இருக்கமாட்டார்கள். ஆகவே ஒரு வனாவது சுயமரணம் அடைந்ததில்லை. இவர்கள் ஆட்சியிலே மதுரையிலும், பாண்டிய நாட்டிலும் இருந்த சைவ வைணவா லயங்கள் இடிக்கப்பட்டும் கொள்ளையிடப்பட்டும் அழிந்தன. பொதுமக்கள் வெறுக்கப்பட்டார்கள். அவர்கள் தந்த கொடிய தண்டனைகள் மிக பயங்கரமானவைகள். பண்டைய நூல்கள் எல்லாம் பொசுக்கப்பட்டன. இவர்கள் இட்ட தீயிற்குத் தப் பின நாட்டுப் புறத்துத் தமிழ் நூல்கள்தான் சிலமட்டும் நமக் குக்கிடைத்திருக்கின்றன. பண்டைத் தமிழ் இலக்கியப் பொக் கிஷத்தை அழித்த அரக்கர்கள் பூண்டோடே மறைந்தார்கள். முகம்மதிய ஆட்சிக் காலத்தில் மிகக்கொடுமைகள் நடந்தன

என்று முகம்மதிய சரித்திரக்காரர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். தவிர மற்றொரு வடமொழிக்காவியம் இதனை வெகு உருக்கமாக கவிநயங்களோடு கூறுகின்றது. அதன் பெயர் மதுரா விஜயம் என்பது. அதனைக் குமாரகம்பணனுடைய இராணியான கங்காதேவி பாடியிருக்கிறாள். அந்தப் பெண்மணி வடமொழியில் சிறந்த கவி. அதில் அடியிற்கண்ட விரிவுரைகள் அக்காலத்து நாட்டுச் செய்திகளை நிரூபிக்கின்றன.

"இராஜ கம்பீர நாட்டில் சம்புவராயனைக் கம்பண உடையார் ஜெயித்துவிட்டுத் தொண்டை நாட்டைத் தன்பாதத்தின் கீழ் கொணர்ந்து மரகட நகரியில் (காஞ்சி) வீற்றிருக்கையில் ஒரு சுந்தரி தோன்றி தென்னாட்டில் யவனர்கள் இயற்றிவந்த துற்செயல்களைக் கூறினாள்.

"கோயில்கள் ஆராதனையின்றி புறக்கணிக்கப்பட்டன. நகரத்துள் மதில்களுக்கு உட்புறம் மிருதங்க ஒலிகளுக்கு மாறாக நரிகளின் ஊளைகள் தான் கேட்கப்படுகின்றன.

"துருஷ்கர்களின் எல்லையற்ற கொடுமைகள் போலவே காவிரி நதியும் தான் செல்லும் எல்லையில் நிற்காது அதிகவெள்ளத்தால் நாடுகளைச் சேதம் செய்கின்றது. யாகங்களின் நறும் புகையும் வேதங்களின் இனிய தொனியும் கிராமங்களைவிட்டு விலகி மாமிசம் வேவிக்கும் புலை நாற்றமும் துருஷ்கர்கள் செய்யும் துஷ்டப்பேச்சுகளே நிரம்பியிருக்கின்றன. மதுரைப் புறநகர்களில் தென்னந் தோப்புகள் வெட்டப்பட்டுச் சகிக்க முடியாத கொடுங்காட்சி அளிக்கின்றன. தெருக்களின் இருபுறங்களிலும் மானுட மண்டை ஓடுகள் தோரணங்களாகத் தொங்குகின்றன. தாம்பிரபரணி பசுக்களின் இரத்தத்தால் சிவந்து ஓடுகின்றது. வேதங்களும் நீதிநெறியும் மறைந்தன. நாட்டில் தருமமும், காருண்யமும் சிறிதும் இல்லை. அபாக்கியர்களான திராவிடர்களின் நெற்றிகளில் ஏக்கமே எழுதப்பட்டுள்ளது." இவ்வாறு சொல்லிவிட்டு அச்சுந்தரி ஒரு மந்திரவாளை அரசன் கை

யில் கொடுத்து "அரசனே, இதோ அற்புதவாள், இதனை விசுவ கர்மன் சிவபெருமானுக்காக அசுரர்களை வதைக்கும் பொருட்டு எல்லா அஸ்திர சஸ்திரங்களைக்கொண்டு செய்தான். அவன் பாண்டியனிடம் தந்தான். தற்போது பாண்டியர்கள் ஆண்மை இழந்து சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். அகத்திய முனி வர் இதனை உம்மிடம் சேர்க்கும்படி அனுப்பினார். பெற்றுக் கொண்டு யவனர்களை வேரோடு அழிப்பாயாக" என்று சொல்லி வாளைக்கொடுத்தாளாம். இந்தவரலாறு ஒரு புராண காவியமாக வருணித்திருந்தாலும் இதில் காணும் செய்திகள் சரித்திர உண் மைகளே ஆகும். இந்தக் காவியம் கம்பண உடையார் மதுரை யை வென்றபிறகு அவனுடைய இராணியால் எழுதப்பட்டது. ஆகவே இதில் காட்டியிருக்கும் நாட்டுநிலை உண்மையானது. கம்பணன் மதுரையை வென்று முகம்மதிய ஆட்சியைத் தொலைத்தவுடன் நாடு நிம்மதி அடைந்தது. மீண்டும் பாண்டி யர்கள் தென்னாட்டை ஆளத்தொடங்கினார்கள்.

கொங்கு நாட்டில் முகம்மதியர்கள் செய்த தொல்லைகள் இரண்டு கல்வெட்டுக்களால் அறிகிறோம். அதனைப் பின்னால் குறிப்போம்.

## 14. விஜயநகர உற்பத்தி 1336.

துவார சமுத்திரமும் ஒருகல்லும் அழிக்கப்படவே ஹொய் சள வம்சமும், காகதீயர் வம்சமும் மறைந்தன. நாட்டில் எங் கும் குழப்பம் ஏற்பட்டது. வடக்கேயிருந்து வந்த முகம்மதியர் களும் கொள்ளையடிக்க வந்தார்களே ஒழிய நாட்டை அரசாள வரவில்லை. முகம்மதுபின் துக்ளாக் என்பவன் டெல்லியில் அர சாளத் தொடங்கினதும் அவனுடைய கொடிய செய்கைகளால் மக்களிடம் பகைமை சம்பாதித்துக்கொண்டான். டெல்லியிலி ருந்து தலைநகரத்தானத்தைத் தேவகிரிக்கு ஆயிரம் கல்லுக்கப் பால் மாற்றி மக்கள் எல்லாம் அதில் குடியேறச்செய்த கொடிய உத்திரவினால் அவன் மீது எல்லாக்குடிகளும் அருவருப்பு

அடைந்தார்கள். உலகம் முழுவதையும் பிடித்து ஆளவேண்டு மென்ற பேராசையினுல் நூருயிரக்கணக்கில் போர்வீரர்களைச் சீனுவிற்கு அனுப்பினுன். பனிமலைகளில் குளிர் தாங்காமல் எல் லாரும் மடிந்தனர். திறைகொடாத மன்னர்களைச் சித்திரவதை செய்தான். இந்துக்களையும் அவர்களுடைய கோயில்களையும் அழித்தான். இவ்விதக் கொடிய செயல்களின் விளைவாக நாட் டில் எங்கும் கலகங்கள் ஏற்பட்டன. தூரதேசத்து மாகாணங் களில் சுயேச்சை அரசுகள் தோன்றி முளைத்தன. இந்தக் கலவ ரங்களின் இடையில் விஜயநகரம் என்ற இந்துப் பேரரசு முளை கிளம்பித்தோன்றியது. ஹொய்சளவம்சம் தழைத்த காலத்தில் அவர்களின் கீழ் பல குறுநிலத்தலைவர்கள் இருந்தார்கள். அவர் களில் ஒருவன் சங்கமன் என்ற யாதவ குலத்தான். அவனுக்கு ஹக்க, புக்க என்ற இரண்டு மக்களிருந்தார்கள். அவர்கள் ஒரு நாள் துங்கபத்திரைக் கரையில் வேட்டையாடிக் கொண்டிருக் கையில் வித்தியாரண்யர் என்ற ஒரு யதியைக் கண்டார்கள். அந்த யதி அவ்விரு சகோதரர்களின் வீரக்குணங்களைக் கண்டு பழைய கிஷ்கிந்தை இருந்த இடமாகிய பம்பா நதிக்கரையில் ஒரு தலைநகரைத் தாபித்து இந்து சாம்ராச்சியத்தை நிறுவி முகம்மதியர்கள் தெற்கேவரவொட்டாமல் தடுத்து, அரசுபுரியும் படி உபதேசித்து, ஆசியும் கூறினுர். மாதவர் என்ற அந்த வித்தியாரண்யர் சிருங்கேரி பீடாதிபதியாய் தமது 36-வது ஆண்டில் அதாவது 1331-ல் சங்கர குருபீடம் அமர்ந்து, 1386-வரை அப்பீடத்தை அலங்கரித்தார். அவருடைய சகோதரர் சாயனர் என்பவர் வேதங்களுக்குப் பேருரை எழுதினவர். வித் தியாரண்யர் உபதேசத்தால் தோற்றுவிக்கப்பட்ட நகரம் வித் தியாரண்ய நகரம் எனப்பெயர் பெற்றுப் பின்னுல் விஜயநகரம் என்று அது குறுகி வெற்றி பெறும் தலைநகர் என்ற பொருள் படப் பெரும்புகழ் எய்தியது. அந்தப்புனித இடத்திலே கி. பி. 1336-ல் விஜயநகர இராச்சியம் தாபிக்கப்பட்டது. ஹக்க என்ப வன் ஹரிஹரன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டான். ஹரிஹரபுக்கர்கள் தாபித்தவிஜயநகர இராச்சியம் மூன்றுநூற்

ருண்டுவரை வெகு செழிப்பாக வளர்ந்து ஓங்கிற்று. இவ்வம்சம் கர்நாடக சாம்ராச்சியம் என்ற பெயரால் விளங்கிற்று. அரசர்கள் பல கன்னட பிருதுக்களை வைத்துக்கொண்டிருந்த போதிலும், பொதுவாக நரபதிகள் என்று கூறப்பட்டார்கள்.

தலைநகர் கட்டப்பட்ட இடமோ மிகவும் வலிமை பொருந்திய இடம். துங்கபத்திரா நதிக்கரையில் இருபுறமும் இயற்கையாய் அமைந்த மதிற்சுவர் போன்ற கற்பாறைகளுக்கிடையே அந்தப்பெரும் நகரம் கட்டப்பட்டது. அவ்வியற்கைக் கோட்டைக்கிடையில் ஹேமகூட பர்வதம் என்ற மலையருகே விருபாக்ஷர் என்ற பெயரோடு பம்பாபதிக்கடவுள் கோயில்கொண்டிருக்கின்றார். பம்பாபதியைக் குலதெய்வமாகக்கொண்ட விஜயநகரத்தார்கள் வராகத்தையும், கட்கத்தையும் தங்கள் அரசசின்னமாக வைத்துக்கொண்டார்கள். என்றும் வற்றாத பம்பா நதி அருமையான நீர் வசதியை அத்தலைநகருக்குத் தந்தது. அந்நீரைக் கால்வாய்களின் வழியாகக் கொண்டு செலுத்தி, ஊருக்கும் நிலங்களுக்கும் வற்றாத பாய்ச்சல் வசதி செய்துவைத்தார்கள். இந்த இடத்திலே 24 மைல் சுற்றளவு கொண்ட ஒரு பலமான கோட்டைக்குள்ளே பிரமிக்கும்படியான ஆலயங்களும், அரண்மனைகளும், மாளிகைகளும் கட்டப்பட்டன. லட்சக்கணக்கான மக்கள் குடியிருக்கவும், நால்வகைப் படைகள் வசிக்கவும் வசதிகள் செய்யப்பட்டன. இந்த விஜயநகர சாம்ராச்சியமே அந்தக்காலத்தில் உலகிலேயே சிறந்த, செழிப்பான, புகழ்பெற்ற இராச்சியமாக விளங்கிற்று.

விஜய நகரத்தில் ஆண்ட முதல் வம்சம் சங்கம வம்சம் ஆகும். அதில் 8 அரசர்கள் ஹரிஹரன் முதல் விருபாக்ஷன் வரை 1336 முதல் 1479 வரை ஆண்டார்கள். சங்கமனுக்கு ஐந்து மக்கள் பிறந்தனர். அவர்கள் ஹரிஹர, கம்ப, புக்க, மாரப்ப, முத்தப்ப என்ற சகோதரர்கள். அவர்களில் ஹரிஹரன் முதல் அரசனாகவும், புக்கன் 2-வது அரசனாகவும் ஆண்டார்கள். கம்பன் நெல்லூர், கடப்பைகளையும், மாரப்பன்

கதம்பநாடு முதலியவைகளையும், ஹரிஹரன் ஒருகல்லு (வாரங்கல்) முகம்மதியர்களையும் வென்றார்கள். அதன் பிறகு அந்த வம்சம் பெருகிக்கொண்டே போய் வடக்கே கிருஷ்ணை முதல் தெற்கே கன்னியாகுமரி மட்டும் ஒருகுடைக்கீழ் ஆளத்தொடங்கிற்று.

சங்கம வம்சத்து முதல் அரசர்களான ஹரிஹர புக்கராயர்கள் தாங்கள் தாபித்த அரசாங்கத்தை வலிவுபடுத்தும் பொருட்டு வடநாட்டு முகம்மதியர்களோடு முதன் முதலில் போர்புரிந்தார்கள். அவ்வாறு புரிந்த போரில் ஒருகல்லில் இருந்த முகம்மதியப் பிரதிநிதியைத் துரத்திவிட்டார்கள். இப்படியிருக்க, 1347-ல் தக்ஷிண பீடபூமியில் கல்புருகி (குல்பர்கா) என்ற இடத்தில் ஒரு புது முகம்மதிய அரசுதோன்றிற்று. அது பாமினி சுல்தான்களின் அரசுஆகும். விஜய நகரத்தார்கள் குல்புருகி பாமினி சுல்தான்களோடு சண்டையிட்டுத் தம்பதவியைத் திரப்படுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு தம்முடைய அரசாங்கத்தின் வடக்கெல்லையை உறுதிப்படுத்திக்கொண்டு 1365-ல் புக்கராயன் தெற்கு எல்லையை நோக்கினான். தன் குமாரன் கம்பண்ண உடையாரைப் பெருஞ் சேனையுடன் தெற்கே அனுப்பினான். அவ்விளவரசன் தெற்கே சென்ற போது அவனுக்கு வலது கைபோல இருந்து உதவிபுரிந்தவன் சாளுவமங்கு என்ற ஒரு தலைவன். பெருஞ்சேனையோடு சென்ற கம்பண்ணன் மதுரையைப் பிடித்து முகம்மதியரைத் துரத்திவிட்டான். இது நடந்தது 1364—65. அதற்குப்பிறகு மதுரை முகம்மதியர்கள் பெயருக்காக மட்டும் சில நாள்கள் தங்கள் நாணயங்களை அச்சடித்துக்கொண்டிருந்து, கடைசியில் தொலைந்தார்கள்.

1384-ல் ஹரிஹரன் II தன்மகன் விருபாக்ஷனைத் தெற்கே அனுப்பினான். இவ்வாறு சென்ற வீருபாக்ஷன் தொண்டை நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு முதலிய தமிழ் நாடுகள் எல்லாவற்றையும் வென்று வசப்படுத்திக்கொண்டு தலைநகரம்

திரும்பினான். இவ்வாறு ஏற்பட்ட படையெடுப்புக்களில்கொங்கு நாடு முழுவதும், அதாவது கோயமுத்தூர், சேலம் என்ற வட்டங்கள் எல்லாம் விஜயநகர ஆட்சிக்குள் சேர்ந்துவிட்டன. அதுமுதல் இரண்டு நூற்றாண்டுகள்வரை கொங்குநாடு விஜய நகரத்து மன்னர்களின் ஆட்சிக்குள்ளேயே இருந்தது.

## 15. 14-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டு நிலை (1300—1400.)

இதுவரை 14-ம் நூற்றாண்டில் தமிழ்நாடு எவ்வாறு மாறுபாடுகள் அடைந்தது என்று கூறினோம். அந்நூற்றாண்டு முழுவதும் தென்னிந்தியா எல்லாம் கலவரங்களும் குழப்பங்களும் நிறைந்திருந்தன. அதேகதிதான் கொங்குநாட்டிலும் இருந்தது. இக்குழப்பங்களுக்கு அடிப்படையாக இருந்த காரணங்களையும் கண்டு எழுதியிருக்கின்றோம். தமிழ்நாடு முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவந்து ஆளவேண்டும் என்பது எல்லா அரசர்களுக்கும் பேரவாவாக இருந்தது. 10-வது நூற்றாண்டில் அந்த நோக்கத்தைக் கொண்டிருந்த சோழர்கள் அதை நிறைவேற்றிக்கொண்டார்கள். ஆனால் அந்த வம்சத்தில் பின்னாளில் வந்த அரசர்கள் ஆற்றல் குறைவினால் முன்னர் கடைப்பிடித்த நோக்கத்தையும் இழந்தார்கள். சோழர்கள் தளர்ச்சியடையவே பாண்டியர்களும் ஹொய்சளர்களும் அதே நோக்கத்தில் இறங்கினார்கள். அவர்களில் பாண்டியர்கள் தங்கள் நோக்கத்தை ஒருவாறு நிறைவேற்றிக் கொண்டார்கள்.

பாண்டியர்களிலே ஓரிரண்டு அரசர்கள் தமிழ்நாட்டை ஒன்றுபடுத்தும் நோக்கத்தில் ஓரளவு வெற்றியடைந்து முன்னேறத்தொடங்கினார்கள். ஆனால் அம்முயற்சி வெகுநாள் நிற்கவில்லை. ஏனெனில் வடக்கேயிருந்து தெற்கே வந்த ஹொய்சளர்கள் அதே முயற்சியில் போராடினார்கள். கைவலுத்த இரண்டு பேர் ஒரேயிடத்தில் சமாளித்துப் பிழைக்க முடியுமா? இறுதியில் இருவராலும் அந்நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லை.

போதாக்குறைக்கு மதுரையில் பாண்டியருக்குள் தாயாதிச் சண்டை தொடங்கிற்று. தாயாதிச் சண்டையே குலத்திற்குக் கோடாலியல்லவா? இந்தப் போராட்டத்தை முன்னிட்டு எதிர் பாராத வகையில் வடக்கேயிருந்து முகம்மதியப் படையெடுப்பு வந்தது. அதில் ஹொய்சளரும் பாண்டியரும் ஒருமிக்கத் தொலைந்தார்கள். ஒரு மகம்மதியச் சிற்றரசு மதுரையில் ஆளத் தொடங்கிற்று. அதன்கீழ் தமிழ்நாடு முழுவதும் செல்லவில்லை. சின்னஞ்சிறு தலைவர்கள் தோன்றி தன்னிச்சைப்படி நாட்டில் ஆணை செலுத்தினர்கள். மதுரையிலே அளவற்றக் கொடுமைகள் முகம்மதியச் சிற்றரசர்களால் நடத்தப்பட அதனைச்சகிக்க மாட்டாமல் இறைவனே பரிகாரம் தருவதற்காக விஜயநகரத்தில் சங்க வம்சத்தைத் தோற்றுவித்தான் போலும். அவ்வம்சத்து இளவரசர்கள் தெற்கே படையெடுத்துத் தமிழ் மண்டலங்கள் எல்லாவற்றையும் பிடித்து இந்து ராச்சியத்தை மீண்டும் அமைத்தார்கள். ஒரு நூற்றாண்டாக அராஜகக் குழப்பத்தால் வருந்திக்கொண்டிருந்த தமிழ்நாட்டிற்கு ஓரளவு அமைதி ஏற்பட்டது. இதுதான் 14-ம் நூற்றாண்டு நாட்டுநிலைமையின் பொது வரலாறு.

இவ்விதம் பொதுவாகத் தமிழ்நாட்டு நிலை இருக்க, குறிப்பாகக் கொங்குநாடு அதே நூற்றாண்டில் என்ன நிலையில் இருந்ததென்று ஒரு சிறிது கூறுவோம்.

சோழர் பேரரசுக் காலத்தில் நேரடியான ஆட்சியால் கொங்கு நாட்டில் அமைதி நிலை உற்றிருந்தது. பிறகு வந்த பாண்டியர் ஆட்சியில் முதற்பகுதியில் நேரடிஆட்சி இல்லாமற் போக நாடு சீர்குலைந்துபோயிற்று. பிற்பகுதியில் நேரடி ஆட்சி ஒரு சிறிதுதான் வந்தது. அதுவும் வலிமையற்று இருந்தது. கொங்கு நாட்டுத் தென்பகுதியில் பாண்டியப் பிரதிநிதிகளும், வட பகுதியில் ஹொய்சள மன்னர்களும் ஆணை செலுத்திவரக் கொங்குநாடு இரண்டு துண்டாகிவிட்டது. அப்படியிருக்க நாடு அமைதியும், செழிப்பும் கொள்ள முடியாதல்லவா?

இப்படியிருக்க 14-ம் நூற்றாண்டின் இடையிலே முகம் மதிய சிற்றரசு மதுரையில் கொடுங்கோல் செலுத்தத் தொடங் கியபிறகு கொங்குநாடு தலைவன் இல்லாமல் தவித்தது.

மதுரை முகம்மதிய அரசு கொங்குநாடு வரைக்கும் ஆணை செலுத்த முடியவில்லை. செலுத்தியிருந்தால் அவர்களுடைய அடையாளம் ஏதாவது கிடைத்திருக்கும் அல்லவா? கொங்கு நாட்டில் அப்படிப்பட்ட அடையாளங்கள் ஒன்றைத் தவிர வேறெதுவும் கிடைக்கவில்லை. ஆகவே கொங்கு நாட்டில் 14-ம் நூற்றாண்டில் அந்நாட்டுக் குறுநில மன்னர்களின் ஆட்சியே இருந்திருக்க வேண்டும்.

கொங்கு நாட்டின் அரசியல் நிலைமையிலே ஒரு சிறந்த போக்கு எப்போதும் இருந்தது. அது என்னவெனில் வெளி நாட்டார் கொங்கு நாட்டில் எப்படிப்பட்ட அதிகாரத்தைச் செலுத்த முயன்ற போதிலும் உள்நாட்டு ஆட்சி ஓரே நிலை யான வாய்ப்பைக் கொண்டிருந்தது என்பதே. வெளிநாட்டு அரசர்களும் இந்த வாய்ப்பை மாற்ற முயலவேயில்லை. உள் நாட்டிலிருந்து கப்பம் சரியாய் வந்தால் போதும், நாட்டு விவகா ரங்களில் தலையிடமாட்டார்கள். அந்த நிலைமையே 14-ம் நூற் றாண்டிலும் இருந்தது எனலாம். வெளியே அரசியல் போராட் டங்கள் பயங்கரமாக இருக்கலாம். ஆனால் கொங்கு நாட்டின் உட்பக்கங்களிலே அவைகள் நுழையவில்லை. போர்களில் ஈடு படச்செல்லும் சேனைகள் நடக்கும் பாதைகளில் மட்டும் சங்க டங்கள் ஏற்படலாம். அவைகள் சென்ற பிறகு அப்பாதை களும் நிம்மதி கொண்டிருக்கும். இந்த முறையில் கொங்கு நாட்டு நிலை இருந்ததென்று கூறலாம்.

நாட்டின் அடிப்படையில் இருந்தது ஊர் அல்லது கிரா மம். அதனை ஊர்த்தலைவன் கண்காணித்து வருவான். அவ னுக்கு உதவியாக ஊர்ச்சபை ஆலோசனை கூறும். வரிவசூல் நீர்ப்பாய்ச்சல் அமைப்பு, ஆலய நிர்வாகம், வழக்குத் தீர்ப்பு,

பாடிகாவல், முதலிய விவகாரங்கள் எல்லாம் ஊர்ச்சபைகள் தீர்மானிக்க ஊர்த்தலைவன் நிறைவேற்றுவான். இவ்வாறே பல ஊர்கள்கொண்ட ஒரு நாட்டிற்கு நாட்டாண்மைக்காரன் முதன்மையாக இருந்து நடத்துவான். அவன் ஒழுங்காக அரசனுக்குத் திறைகளைச் செலுத்திவிட்டால் பின்னர் யாதொரு கெடுதியும் நாட்டில் நேரிடாது. பெரிய குற்றங்கள் கலவரங்கள், ஆலய மோசடிகள் முதலியவற்றை மட்டும் அரசன் கண்காணிப்புக்குப் போகும். அப்போது அரசன் ஒரு அமைச்சனை அனுப்பியோ அல்லது தானே வந்தோ நடவடிக்கைகளை நடத்தி முடிவு செய்வான்.

சமூகவிவகாரங்களில் வகுப்புத்தலைவர், நாட்டுப்பட்டக்காரர் முதலியோர்களே கண்காணிப்பார்கள். கொங்குநாட்டு 24 நாடுகளுக்கும் 24 பட்டக்காரர்கள் இருந்தார்கள். அவர்களுடைய கண்காணிப்பில் வகுப்பு விவகாரங்கள் எளிதில் தீர்க்கப்பட்டன. இந்த வகையில் கொங்குநாட்டு உள்நாட்டு ஆட்சி நடைபெற்றது.

நாட்டுக் குடியேற்றம், நாட்டுமொழி முதலியவைகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பு கூறவேண்டியிருக்கின்றது. கொங்கு நாட்டின் பண்டைய மொழி தமிழ்மொழி என்று அறிவோம். சோழர்கள், பாண்டியர்கள் ஆணை செலுத்தின காலத்தில் நாட்டு மொழி தமிழாகவே யிருந்தது. அவர்கள் காலத்துக் கல்வெட்டுகள் எல்லாம் தமிழ்மொழியிலேயே பொறிக்கப்பட்டன. கொங்கு சோழர், கொங்கு பாண்டியர் சாசனங்களும் தமிழே. ஆனால், 13, 14 நூற்றாண்டுகளில் ஹொய்சளர்கள் தெற்கேவரக் கொங்குநாட்டின் வடபகுதியில் கன்னடியர்கள் குடியேறினர்கள். கன்னட மொழியும் வழங்கத்தொடங்கிற்று. கன்னடம் பேசுகிற ஒக்கிலியர், துறையர், கெம்பட்டியர் முதலிய வகுப்பார்கள் தெற்கே வரத் தொடங்கினார்கள்.

அவர்கள் நிலங்களைச் சீர்படுத்தி வேளாண்மை செய்யவும் தொடங்கினார்கள்.

சில ஊர்களில் கணக்கு வேலையிலும் அமர்ந்தார்கள். மலை ஓரமாக உள்ள ஊர்களில் ஊர்த்தலைமையும் வகிக்கத் தொடங்கினார்கள். இந்த வகையில் மெதுவாக மொழிக் கலப்பும், வகுப்புக் கலப்பும் ஏற்படத் தொடங்கின. சமய நிலையிலும் ஒரு சிறு மாறுபாடு தோன்றிற்று. பண்டைக்கால முதல் கொங்குநாட்டில் வழங்கி வந்தது சைவசமயமே. சைவ சமயாசாரியார்கள் மூவரும் இந்நாட்டில் விஜயம் செய்து பாடல்பெற்ற தலங்களிலும் வைப்புத்தலங்களிலும் கோயில்களைச் சிறப்பித்துச் சைவசமயத்தை நிலைநாட்டினார்கள். ஆழ்வார்கள் இங்கே வரவுமில்லை, வைணவ ஆசாரியர்களும் வரவில்லை. ஆகவே கொங்குநாட்டில் வைணவக்கோயில்கள் குறைவு. கங்கர்காலத்திலும், ஹொய்சளர்களில் முதன் மன்னர்கள் காலத்திலும் சமணசமயம் போற்றப்பட்ட வகையில் சில சமணக்குடும்பங்கள் கொங்குநாட்டில் குடியேறினார்கள். ஆகவே சமணநிலையங்களும் ஏற்பட்டன. சில இலக்கிய இலக்கணங்களும் எழுதப்பட்டன. ஆனால் ஹொய்சளர்களில் விஷ்ணுவர்த்தனன் வைணவனானபின் வைணவசமயம் போற்றப்பட்டது. அது முதற்கொண்டு கொங்கில் திருமால் கோயில்கள் சிறிது சிறிதாகத் தோன்றின. அவைகளும் பெரும்பான்மையாகக் கன்னடம் பேசுகிற வகுப்பார்களே நடத்திவருகிறார்கள். இந்த முறையில் 14-ம் நூற்றாண்டில் நாட்டில் ஒரு கலப்பு நிலை நேரிடத்தொடங்கியது.

## 16. சங்கம அல்லது முதல் வம்சம் (1336—1485)

விஜயநகரத்தாரின் முதல் கல்வெட்டு கோவை ஜில்லாவில் கொள்ளேகாலம் தாலூகாவில் உள்ள மொதல்லியில் 1368-ல் பொறிக்கப்பட்டது. அது கம்பண்ண உடையார் II

காலத்துக் கல்வெட்டு. ஆகவே, விஜயநகர ஆட்சி கொங்கு நாட்டில் 1368-ல் தொடங்கிற்று எனலாம். இனி விஜயநகரத்தாரின் இறுதிக் கல்வெட்டு 1667-ல் பொறிக்கப்பட்டது. அது சீரங்கராயனுடைய கல்வெட்டு. ஆகவே இந்த இரண்டு கல்வெட்டுக்களும் கொங்குநாட்டின் மீது விஜயநகர ஆட்சி படர்ந்திருந்த கால எல்லையைக் குறிக்கும். அதாவது 1368-முதல் 1667-வரையில் மூன்று நூற்றாண்டுகள் முழுவதுமாக விஜய நகரத்து அரசு கொங்குநாட்டின்மீது ஆணை செலுத்திற்று என அறியவேண்டும்.

இனிக் கொங்கு நாட்டில் விஜய நகரத்தார்கள் பொறித்து வைத்துள்ள கல்வெட்டுகளை யெல்லாம் ஒன்று சேர்த்து முறையாக ஆராய்ச்சி செய்தால் கொங்கு நாட்டிற்குள் விஜய நகர ஆட்சி எந்த முறையில் மெல்ல மெல்ல புகுந்தது என்றும் நாடுமுழுவதும் அவர்கள் கைக்குச் செல்ல எத்தனைக்காலம் பிடித்தது என்றும், அவர்கள் அனுப்பிய பிரதிநிதிகள் துரோகம் செய்து சுயேட்சையாக நாட்டை ஆளத்தொடங்கியதில் விஜயநகர அரசு எவ்வாறு தளர்ச்சி யடைந்ததென்றும், கிருஷ்ணதேவராயன் முன் கூடப்போன அதிகாரத்தை மீட்டின தெவ்வாறென்றும், பின்னர் ஒரு நூற்றாண்டு அளவு, விஜய நகரம் ஆண்டுவந்ததில் மைசூராரும், மதுரையாரும் அவ்வாட்சியைப் போக்கடித்ததெப்படி யென்றும் விவரமாக அறிய முடியும். இதனை விரித்துக்கூறும் வகையில் விஜயநகரத்து முதல் வம்சமாகிய சங்கம வம்சத்தின் செயல்களை முதலில் கூறுவோம்.

### 1. கம்பண்ண உடையார் II (புக்கராயனுடைய மகன்)

### கி. பி. 1368.

இந்த அரசனுடைய மூன்று கல்வெட்டுக்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் அகப்பட்டுள்ளன. மொதள்ளியில் ஒன்

றும் (246/1913), சடையாம்பாளையத்தில் இரண்டும் (133, 136/1920) அவனுடைய கல்வெட்டுக்கள். மொதள்ளிக் கல்வெட்டுத்தான் (1368) விஜயநகர ஆட்சியின் தொடக்கத்தை நிரூபிக்கிறதென்று முன்னமே கூறியிருக்கின்றோம். சடையாம்பாளையத்துச் சாசனங்கள் ஒரு முக்கிய செய்தியை நிரூபிக்கின்றன. அச்செய்தி என்னவெனில் கூறையூர் கோயில்களை முகம்மதியர்கள் (துலுக்கர்கள்) நாசப்படுத்தியிருக்க, அவைகளை ஆளுடைய ராஜன் திருப்பணி செய்து புதுப்பித்தான் என்பதாகும். அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட கோயில்களின் பெயர்கள், நாகேசுவரமுடையார், வடுகுபிள்ளையார் என்பன. துலுக்கர்கள் இக்கோயில்களை அழித்தது மாலிக்காபூர் படையெடுப்பிலோ, அதற்குப் பிந்திய படையெடுப்பிலோ, அல்லது மதுரை சுல்தான்கள் காலத்திலோ ஏற்பட்டிருக்கலாம். அழித்த முகம்மதியர்கள் தாமாகவே திரும்பிப் போயிருக்கலாம் அல்லது அரசர்களால் துரத்தப்பட்டிருக்கலாம். அப்போதுதான் திருப்பணி ஏற்பட்டிருக்கவேண்டும். இந்த நற்காரியம் கொங்குநாட்டிற்கு வந்த முதல் அரசன் காலத்திலேயே செய்யப்பட்டது. இது விஜயநகரத்தாரின் ஒப்பற்ற உண்மை நோக்கத்தைக் காட்டுகிறது. இது முதல் கொங்குநாடு விஜயநகரத்தாரின் செங்கோன்மையை உணரத் தொடங்கிற்று எனலாம்.

## 2. வீரஅரியப்ப தேவர் (ஹரிஹர II) (கி. பி. 1386—1397)

கொள்ளேகால வட்டத்தில் ஏகண்டஹல்லி (179/1910). சிங்காநல்லூர் (18, 19/1910) என்ற இரண்டு இடங்களில் 1386, 1390 & 1397, என்ற ஆண்டுகள் கொண்ட இவ்வரசனுடைய கல்வெட்டுக்கள் கிடைத்தன. 1386-ம் ஆண்டுக் கல்வெட்டு ஒரு வீரக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆறலைக்க வந்த கள்வர்களோடு போர்புரிந்து தன் ஈட்டியால் சிலரைக் கொன்று மேற்கொண்டும் சண்டைபிடித்ததில் உயிர் துறந்த ஒரு கௌடனின் நினைவார்த்தமாக அவ்வீரக்கல் நிறுத்தப்

பட்டது. கன்னடநாட்டைப்போலக் கொங்கு நாட்டிலும் வீரக்கற்கள் தென்படுகின்றன. ஆனால் பெரும்பாலும் அரசன் பெயர், ஆண்டின் பெயர் முதலிய விவரங்கள் கிடைப்பதில்லை. சிங்காநல்லூர்க் கல்வெட்டு (18/1910) ஐயவளைக்குச் சேர்ந்த 500-வணிகர்களைப்பற்றிக் கூறுகின்றது. மற்றொரு கல்வெட்டு (19/1910) மகாப்பிரதான நாகம நாய்க்கனின் பெயரைக் குறிக்கின்றது.

### 3. வீரதேவராயன் I (ஹரிஹர II-ன் மகன்) 1408 கி. பி.

இவ்வரசனைப்பற்றிய கல்வெட்டு ஒன்று சிங்காநல்லூரில் கிடைத்திருக்கிறது. இவ்வரசன் காலம் வரைக்கும் விஜய நகரத்தார் ஆட்சி கொங்குநாட்டில் நன்றாக ஊன்றவில்லை யென்று அறியலாம். ஏனெனில் இவன் காலம் வரையில் கிடைத்த கல்வெட்டுக்கள் கொங்கு நாட்டின் எல்லையாகிய கொள்ளேகாலம் தாலூகாவிலேயே நின்றுவிட்டன.

### 4. வீரஹரிஹரராயர் III (தேவராயன் I-ன் மகன்) 1400–1412

இவ்வரசனுடைய கல்வெட்டுக்கள் குமரலிங்கத்தில் ஒன்றும் (132/1909) விஜயமங்கலத்தில் ஒன்றும் (596/1905), 1400, 1412 ஆண்டுகளில் முறையே கிடைத்திருக்கின்றன. விஜயமங்கலத்துக் கல்வெட்டு கொங்குநாட்டின் மத்தியில் உள்ள புகழ்பெற்ற ஜைன ஆலயமாகிய சந்திரநாத தீர்த்தங்கரரின் ஆலயத்தில் உள்ளது. குமரலிங்கக் கல்வெட்டோ தென் கொங்கில் ஆம்ராவதி நதிதீரத்தில் உள்ளது. இந்த இரண்டு கல்வெட்டுக்களினால் விஜயநகரத்து அரசு கொங்குநாடு முழுவதிலும் படர்ந்துவிட்டதென அறியலாம்.

### 5. தேவராயர் II (வீரவிஜயராயன் மகன்) 1419—1451

இவ்வரசனைப்பற்றிய கல்வெட்டுக்கள் இரண்டு தாராபுரத்துக் கொளிஞ்சிவாடியில் அகப்பட்டன. 1440, 1411-கி. பி. கொளிஞ்சிவாடி என்பது தென் கொங்கில்

அமராவதிக்கரையில் முன்சொன்ன குமரலிங்கத்திற்குத் தென் கிழக்கே வெகு தொலைவில் இருக்கின்றது. அவற்றில் ஒரு கல்வெட்டு (580/1893). அவ்வூர் சொக்கநாதர்கோயிலை முகம்மதிய கலாபத்தின்போது அவர்கள் அழித்துவிட்ட பின்னர் தரங்கைய மன்ருடியார் என்ற தலைவர் புதுப்பித்தார் என்று கூறுகிறது. மேலும் பழனி, திருச்சி, சேலம் வட்டங்களில் (610/1894, 740/1909, 193/1910, 196/1910) நான்கு கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. ஆகவே இந்த அரசனுகிய தேவராயன் II காலத்தில் தென் கொங்கில் பழனி வரைக்கும், கீழ்க்கொங்கில் வெகு தொலைவுமட்டும் விஜயநகர ஆட்சி சென்றிருக்கிறதென அறியலாம்.

மேலே சொன்ன அரசர்கள் சங்கம வம்சத்தவர்கள். தேவராயனுக்குப் பிறகு சக்தியற்ற அரசர்கள் சிலபேர் ஆண்டார்கள். அவர்கள் காலத்தில் விஜயநகர ஆட்சியின் வலிமை குறைந்துகொண்டு வந்தது. ஆகவே அவர்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் கொங்குநாட்டில் யாதொன்றும் இல்லாமல் போய்விட்டன.

## 17. சாளுவ அல்லது 2-வது வம்சம் (1485—1505)

சங்கம வம்சம் மேலே கண்ட 2-ம் தேவராயனுடைய மகன் விரூபாக்ஷன் III-ஓடு முடிவடைகிறது. முன்பு சொன்ன சாளுவமங்கு என்ற படைத்தலைவனுடைய பேரன் சாளுவ நரசிம்மன் விரூபாக்ஷனைத் துறத்திவிட்டு 1485-ல் விஜயநகரச் சிம்மாசனம் ஏறினுன். அவன் 1483 முதல் 1492 வரை அரசாண்டான். அவனுக்குப் பிறகு அவன் மகன் இம்மடி நரசிம்மன் 1505 வரை அரசாண்டான். அந்த ஆண்டில் மந்திரியாயிருந்த நரசநாயக்கன் அவனைக் கொன்றுவிட்டுத் தான் சிம்மாசனம் ஏறினுன். ஆகவே 2-வது வம்சமாகிய சாளுவம் இருபது ஆண்டுகள் மட்டும் ஆணை செலுத்திற்று.

இந்த வம்சத்தார் காலத்தில் கொங்குநாட்டில் முக்கியமான கல்வெட்டுச் சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை. நாட்டின் எல்லைகளில் சில கல்வெட்டுக்கள் மட்டும் புஜபலராயன் இம்முடிநரசராயன் (1492) வீரநரசராயன் (1506), என்ற பெயர்களைக்கொண்ட கல்வெட்டுக்கள் சிலமட்டும் கிடைத்திருக்கின்றன.

பொதுவாகப் பார்க்கும்போது தேவராயன் II காலத்திலிருந்து, பின்னாலே பிரசித்திபெற்று விளங்கிய கிருஷ்ணதேவராயன் காலம் வரையில் சுமார் முக்கால் நூற்றாண்டு வரையில் கொங்குநாட்டில் விஜயநகரத்து ஆட்சி மங்கியிருந்ததென்றே அறியவேண்டும். ஆனால் சிறந்த கல்வெட்டுச் சான்றுகள் இல்லாமற் போனபோதிலும் அவர்கள் ஆட்சியைப்பற்றி இலக்கியச்சான்று ஒன்று கிடைத்திருக்கின்றது. தெலுங்கு இலக்கியத்தில் 'பில்லலமர்ரி பின வீரபத்ர' என்ற கவி ஜெமினி பாரதம் என்ற காவியத்தை இயற்றிச் சாளுவ வம்சத்தைத் தாபித்த சாளுவநரசிம்மராயனுக்கு அதனை அர்ப்பணம் செய்திருக்கின்றான். அதில் நரசிம்மராயனைப்பற்றிக் கூறும்போது,

> "ஜினயோ பாய விஹார போனகிரி செஞ்சி கொங்கு தாராபுரி
> பெனு கொண்டாய கிலக துர்க்க ஹாரண ப்ரேங்கடப்ரதா
> [போதயா"

என்று புகழ்ந்திருக்கிறான். இந்தச் செய்யுளில் போனகிரி (புவனகிரி), செஞ்சி, கொங்கு தாராபுரி, பெனுகொண்டா என்ற இடங்களிலிருந்த துர்க்கங்களாகிய மலையரண்களைச் சாளுவ நரசிம்மன் வென்றான், என்று கவி கூறுகிறான். இக்கோட்டைகளில் கொங்கு தாராபுரி என்பது ஆம்ராவதிநதி தீரத்திலுள்ள தாராபுரமே யாகும். இந்த தாராபுரம் கொங்கு சோழர்கள் காலத்தில் தலைநகரமாக இருந்தது. தற்போதும் இவ்வூரில் ஒரு பாழடைந்த கோட்டை யிருக்கின்றது. அதில் கல்வெட்டுக்கள்கொண்ட கோயில்களும் இருக்கின்றன.

தாராபுர நகரத்தின் புறநகராகவும் ஆம்ராவதி நதிக்கு தென் கரையில் உள்ளதுமான ஊர் கொழிஞ்சிவாடி என்பது. இக் கொழிஞ்சிவாடிச் சொக்கநாதர் கோயிலில் தேவராயன் II காலத்துக் கல்வெட்டுக்கள் இரண்டு (581&583/1893) 1440 லும் 1441 லும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கல் வெட்டுக்களினால் தேவராயன் காலத்திலேயே அக்காலத்துக் கொங்குநாட்டுத் தலைநகர் விஜயநகரத்தார் கைக்கு வந்துவிட்ட தென்று அறியலாம். ஆகவே பின்வந்த சாளுவநரசிம்மன் காலத்திலும், கொங்குநாடு விஜயநகரத்தார் வசத்திலேயே இருந்தது என புலப்படும். இருந்தாலும் கவிஞர்கள் அரசர் களைப் புகழும் காலத்தில் உயர்வு நவிற்சியாக ஒவ்வொரு அரசனையும் வெற்றியடைந்தவன் என்று கூறுவது கவி வழக்கு. அந்த முறையில் ஆராயும்போதும் கொங்குநாடு சாளுவ மன்னர்களின் ஆட்சியில் இருந்ததெனக் கூறலாம். ஆனால் அவர்களுடைய செல்வாக்கு பெயருக்குமாத்திரம் இருந்த தென்பதற்குப் பின்னால் கூறப்படும் வரலாறு தெரிவிக்கும்.

## 18. உம்மத்தூர் தலைவர்கள் (1489—1517)

எவ்வெப்போது மத்திய அரசு தளர்ச்சியடைகின்றதோ அவ்வப்போது ராஜப்பிரதிநிதிகளும், குறுநிலமன்னர்களும் வலிமைபெற்றுத் தாங்களே சுயேச்சை மன்னர்களென்று அறைகூவித் தலைநிமிர்ந்து ஆடுவதுண்டு. இவ்வழக்கம் உலகப் பொதுவில் சில இடங்களில் நேரிட்டாலும் இந்திய வரலாற் றில் அடிக்கடி நிகழ்ந்திருக்கிறது. தென்னிந்தியாவிலும் இதே செய்தி அடிக்கடி நடந்து வந்தது. இந்தச் சீர்கேட்டினால் தமிழ்நாடும், தென்னாடும் முன்னேறவேயில்லை. அதே சீர்கேடு விஜயநகரத்தையும் பிடித்துக்கொண்டது.

தேவராயன் II மிகப் புகழோடு ஆண்டான். அவனுக்குப் பின் வந்தவர்கள் சக்தியற்றுப்போய் அரசுப்பட்டத்திற்காக

அடிக்கடி சச்சரவு செய்துகொண்டிருந்தார்கள். அப்படிப் பட்ட நெருக்கடியான காலத்தில் தொலைவிலிருந்த நாடுகளைக் கட்டி ஆளுவது கஷ்டம். கொங்குநாடோ வெகு தொலைவில் இருந்தது. அதனை ஆளுவதற்குத் திறமைவேண்டும். அது இல்லாத காலத்தில் கண்காணிப்புக் குறையுமல்லவா?

இப்படியிருக்க மைசூர் சீமையில் தெற்குப்பகுதியில் உம்மத்தூர் என்ற ஊர் உண்டு. தன் நாடுகளில் தெற்குப் பிராந்தியங்களுக்கு உம்மத்தூரைத் தலைநகராக்கி அங்கே ஒரு பிரதிநிதியை தேவராயன் நியமித்திருந்தான். அந்தப்பிரதிநிதி முதலில் செவ்வையாகத்தான் ஆண்டு கொண்டிருந்தான். ஆனால் தேவராயனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியார்கள் பலமற்றுப்போயிருந்ததனால் உம்மத்தூர்ப் பிரதிநிதிகள் சுயேச்சைச் செயல்களை கையாளத் தொடங்கினார்கள். அவர் கள் தங்களைத் தலைவர்கள் என்று கூறிக்கொண்டும் தங்கள் பெயராலேயே உத்திரவுகளைப் பிறப்பித்துக்கொண்டும் கல் வெட்டுக்களைப் பொறித்துக்கொண்டும் ஆட்சி செய்யத்தொடங் கினார்கள். மத்திய அரசின் உத்திரவில்லாமலும் அக்கம்பக்கத் தாரோடு போர்புரியவும் சென்றார்கள். இந்தவகையிலே அரசப்பிரதிநிதிகளாயிருந்தவர்கள் குறுநில மன்னர்களும் ஆய் விட்டார்கள். அக்காலத்தில் வரிவசூலும் இராணுவ அதிகார மும் குறுநிலமன்னர்களிடம் இருந்தன.

இந்த இரண்டு செயல்களிலும் பிரதிநிதிகள் மத்திய அரசுக்கு உதவிபுரிவார்களே ஒழிய, மத்திய அரசு பிரதிநிதி களைக் கண்காணிப்பதில்லை. இந்தச் சீர்கெட்ட நிலைமைக்கு உதவியாக இருந்தது பரம்பரைக் கொள்கையே. அக்காலங் களில் ஒரு ஆளை மந்திரியாகவோ, படைத்தலைவனாகவோ, அல்லது உத்தியோகத்தனாகவோ நியமனம் செய்துவிட்டால் அவனுடைய மக்கள் மக்கள் முறையில் அந்நியமனம் சென்று கொண்டே யிருக்கும். இந்த 20-வது நூற்றாண்டிலும் ஜன நாயகம் பழுத்திருக்கும்போது கிராமாதிகாரங்களில் பரம்பரை

உத்தியோகங்கள் இருப்பதை அறிவோம். அதே முறை விஜயநகரத்துக் கர்நாடக இராச்சியத்திலும் இருந்தது.

மேலே சொன்ன சீர்கேட்டு நிலைமை கொங்குநாட்டு அரசியலிலும் புகுந்தது. தேவராயன் உம்மத்தூர்த் தலைவனைக் கொங்குநாட்டின் கண்காணிப்புக்கு நியமித்தான். தேவராயனுக்குப் பிறகு சங்கம வம்சத்திலும், சாளுவ வம்சத்திலும் உம்மத்தூர் தலைவர்களே கொங்குநாட்டில் ஆட்சிபுரிந்தார்கள். பெயருக்குமட்டும் விஜயநகரத்தார் அரசர்களாயிருக்க உண்மையில் உம்மத்தூர் உடையார்களே ஆட்சிபுரிந்தார்கள். அவர்கள் ஆட்சிகளை இனி விவரிப்போம்.

## 1. வீரநஞ்சராய உடையார் (1489—1500)

இத்தலைவன் விஜயநகரத்துப் பேரரசன் தேவராயனால் கொங்குநாட்டை ஆள அனுப்பப்பட்டவன். நாளாவட்டத்தில் விஜயநகரத்தில் கண்காணிப்பு குறைந்துபோகவே தன்னிச்சைப்படி ஆணைசெலுத்தத் தொடங்கிவிட்டான். தன் சொந்தப் பெயராலே சாசனங்கள் வெளியிடவும் தொடங்கினான். அவ்வாறு வெளியிட்ட சாசனங்கள் சுமார் 15 மட்டும் கிடைத்திருக்கின்றன. அவைகள் பெரும்பான்மையாக கோவை ஜில்லா முழுவதிலுமே பரவியிருக்கின்றன. ஒன்று பழனியிலும் கிடைத்திருக்கின்றது. 1489 முதல் 1499 வரை இவை செல்லுகின்றன. அதாவது தேவராயன் II-க்குப் பிறகு விஜயநகரத்தில் ஏற்பட்டக் குழப்பக் காலத்திலும், பின்னர் வந்த சாளுவ வம்சத்தார் காலத்திலும் இக்கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆதலால் வீரநஞ்சராயன் அப்போது சுயேச்சை அதிகாரம் வகித்துக்கொண்டான் என்று அறிய வேண்டும். இவ்வரசனுடைய ஆட்சியின் எல்லையை விளக்குவதற்கு அடியில்கண்ட கல்வெட்டுப்பட்டியல் உதவிபுரியும். அதனை நன்கு ஆராய்ந்துகொள்க.

| எண் | ஊர் | தாலூகா | ஆண்டு | கல்வெட்டு எண் |
|---|---|---|---|---|
| 1. | அவிநாசி | அவிநாசி | | 2 |
| 2. | சேவூர் | ,, | | 1 |
| 3. | பெரியபாளையம் | ஈரோடு | | 1 |
| 4. | தணுய்க்கன்கோட்டை | கோபி | | 1 |
| 5. | திருமுருகன்பூண்டி | பல்லடம் | | 1 |
| 6. | கொடுவாய் | ,, | | 1 |
| 7. | மரப்பாளையம் | ,, | | 1 |
| 8. | ஆரத்தொழு | தாராபுரம் | | 1 |
| 9. | தாராபுரம் | ,, | | 4 |
| 10. | பழனி | பழனி | | 1 |

மேலே சொன்ன கல்வெட்டுக்களில் பெரியபாளையக் கல்வெட்டு முக்கியமானது. அதில் வீரநஞ்சராயன் மகாமண்டலேசுவரன் என்ற பட்டம் வகித்திருக்கின்றான். சகம் 1421 சித்தார்த்தி அதாவது கி. பி. 1499ல் ஒரு செட்டி குரக்குத்தளி தம்பிரானுருக்கு நிலதானம் செய்ததாக அது கூறுகிறது. குரக்குத்தளிக்கோயில் கைலாசநிவாச சதுர்வேதிமங்கலத்தில் முகந்தனூரில் இருந்ததென்று அது கூறுகின்றது. அக்கிரகாரப் பெரியபாளையத்திற்கு அக்காலத்தில் கைலாசநிவாச சதுர்வேதிமங்கலம் என்ற பெயரும், அதில் ஒரு பகுதிக்கு முகுந்தனூர் என்ற பெயரும் இருந்ததாக அறிகிறோம். இவ்வூர் தற்போது திருப்பூருக்குக் கிழக்கே 6 கல்லில் இருக்கின்றது. சுந்தரமூர்த்தி நாயனுரால் 9-ம் நூற்றுண்டில்

" கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய் "

என்று பாடப்பட்டுள்ளது. திருக்கோயிலே அடுத்து வடமேற்கில் நல்லாறு வாய்க்கப்பெற்ற ஒரு பெரிய குளம் இருக்கிறது. நஞ்சராய உடையார் பெயரால் அக்குளம் என்று இன்றைக்கும் வழங்கிவருகின்றது. நஞ்சராயன் நாட்டின் நன்மையைக் கருதி பல நீர்ப்பாய்ச்சல் திட்டங்களைச் செய்திருக்கின்றான். அவிநாசி



குரக்குத்தளி — மூலத்தானம்



பெரியபாளையம் வடபால் தோற்றம் குரக்குத்தளி

யில் இவனுடைய கல்வெட்டுக்கள் இரண்டும், இவன் மகன் கல்வெட்டு ஒன்றும் கிடைத்திருக்கின்றன. அவைகளின்படி நஞ்சராயனுக்கு அமைச்சனாகத் தெற்கணும்பிநாட்டு எம்மர்கால் ஒன்னக்கன் செட்டி என்பவன் இருந்ததாக அறிகிறோம். தெற்கணும்பி என்ற ஊர் உம்மத்தூருக்கருகில் இருக்கின்றது. அதன் பெயர் "தென்கடம்பை" "திணைக்கணும்பை" என்று பலவாறாக இருக்கின்றது. வீரநஞ்சராயன் கொடுவாயில் உள்ள பெருமாள் கோயிலைப் புதிப்பித்துக் கட்டினான் (108/1920). இக்கோயில் முகம்மதியக்கலாபத்தில் இடிக்கப்பட்டிருந்தது. புதுப்பிக்கும்போது பழைய கல்வெட்டுக்களை திருப்பி எழுதி வைத்தானாம். ஆனால் அவைகள் இப்போதில்லை. அடுத்த கல்வெட்டின்படி கொடுவாய் மக்கள் அங்கு வரும் பிராமண தேசாந்திரிகளுக்கு கம்பு உணவு தருவதற்காக தான திட்டம் செய்திருந்தார்கள்.

## 2. வீரசிக்கராயன் (1500—1512)

இவன் வீரநஞ்சராயனுடைய மகன். இவனுடைய கல்வெட்டுக்கள், அவிநாசி, குன்னத்தூர், குந்தூர் என்ற இடங்களில் கிடைத்துள்ளன. அவைகள் 1508 லும், 1512 லும் பொறிக்கப்பட்டவைகள். அவிநாசிக் கல்வெட்டில் (1508) திருக்கணும்பிச் செட்டி தந்த தானமும், குன்னத்தூரில் அவ்வூர் குன்றமுடையாருக்குக் குறிச்சிக்குளம், ஏரியோடு நிலம் தானம் செய்ததும், குந்தூரில் ஹடிநாட்டுச் சாந்ததேவர் சிம்மாசனத்துச் சிவாசாரியர்கள் 50 உடையார்களுக்கு உணவு, துணி, கொடுப்பதற்குத் தானம் செய்ததும் கண்டிருக்கின்றன. இந்த இரண்டு தலைவர்களோடு உம்மத்தூர் பரம்பரை முடிவடைந்ததெனக் கூறலாம்.

## 3. வீரநஞ்சன்ன உடையார் (1507—1517)

இந்தத்தலைவன் தேப்பண உடையாரின் மகன். இவனுக்கும் வீரநஞ்சராயனுக்கும் எப்படி உறவு என்று தெரிய

வில்லை. இவனைப்பற்றியக் கல்வெட்டுக்கள் 1507 முதல் 1517 வரை கிடைத்திருக்கின்றன. அவைகள் நம்பியூர் (கோபி), பட்டணம் (பல்லடம்), பழனி, தாராபுரம் என்ற இடங்களில் சிதறிக்கிடக்கின்றன. இவனும் மகாமண்டலேசுவரன் என்ற பட்டம் வகித்திருக்கிறான். இவன் 1512 முதல் 1540 வரை உம்மத்தூரில் ஆண்டதாக மைசூர் ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். இவனுடைய நம்பியூர் கல்வெட்டு 1517 லும், பட்டணம் கல்வெட்டு 1509 லும் பொறிக்கப்பட்டுள்ளன. அதின்படி பட்டணம் வாயிரக்கா நாட்டுக்குச் சேர்ந்ததென்றும், அது மதுக்கோடு என்ற பழைய பெயர் பெற்றிருந்ததென்றும், முன் பாழ் அடைந்திருந்ததை ஆறு நாட்டுதேசிகள் புதுப்பித்துக்கட்டிச் சினநாதபட்டணம் என்ற பெயர் தந்திருந்தார்கள் என்றும் கூறுகின்றது. இந்த அரசனோடு உம்மத்தூர் அரசு முடிந்தது. ஆனால் காத்தங்காணி என்ற இடத்தில் (278/1920) நஞ்சம்ம உடையார் என்ற ஒருவன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இவனுடைய தகப்பன் பெயர் பிரதாபஹரிஹர ராயன் என்று கூறப்பட்டுள்ளதால், அவன் வேறொருவனாக இருக்கலாம். 1509-ல் விஜயநகரச் சிம்மாசனம் ஏறிய கிருஷ்ணதேவராயன் உம்மத்தூர் வம்சத்தை தொலைத்து விட்டான். 1511, 12-ல், கிருஷ்ணராயன் உம்மத்தூர் உடையான் மீது படையெடுத்து அவனைத் தொலைத்து, அவன் ஊரைத் தன் அரசோடு சேர்த்துக்கொண்டான்.

## 19. துளுவ அல்லது மூன்றாம் வம்சம் (1505—1570.)

விஜயநகரத்தில் சாளுவ வம்சத்திற்குப் பிறகு துளுவ வம்சம் பட்டத்திற்கு வந்தது. சாளுவ வம்சம் தனக்கு உரிமையில்லாத சிம்மாசனத்தைப் பலவந்தமாகக் கைப்பற்றி அரசாளத்தொடங்கியும் இருபது வருஷங்களுக்குமேல் அதை வகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. அதன் 2-வது அரசனான இம்

மடி நரசிம்மன் 1505-ல் கொல்லப்பட அப்போது அமைச்சனாக இருந்த துளுவ வம்சத்து நரச நாய்க்கன் சிம்மாசனத்தைக் கவர்ந்துகொண்டான். அவன் சிம்மாசனம் ஏறும்போதே முதிர்ந்த வயதுடையவன். ஒரு ஆண்டுதான் பட்டத்திலிருந்தான். அவனுக்கு மூன்று மனைவிமார்கள் இருந்தார்கள். அவர்களில், பிப்பாஜி அரசிக்கு வீரநரசிம்மனும், நாகலாதேவிக்கு கிருஷ்ணதேவராயனும், ஓமாம்பிகா தேவிக்கு அச்சுதராயன், இரங்கராயன் என்ற இரு மக்களும் ஆக நான்கு குமாரர்கள் இருந்தார்கள். நரச நாயக்கன் இறந்ததும் வீரநரசிம்ம புஜபல ராயன் பட்டத்திற்கு வந்தான். அவன் மூன்று வருஷம்தான் ஆட்சிபுரிந்தான். அவனுக்குப் பின் கிருஷ்ணதேவராயன் பட்டத்திற்கு வந்தான். இவனே விஜயநகர அரசர்கள் எல்லாரிலும் மிகப்புகழ்பெற்று விளங்கினவன்.

### 1. கிருஷ்ணதேவராயன் (1509—1529).

கிருஷ்ண தேவராயன் மிகுந்த பராக்கிரமசாலி. சுருசுருப்பும் ஆண்மையும் படைத்தவன். இவன் பட்டத்திற்கு வந்தவுடனே இராச்சியத்திலிருந்த குறுநிலமன்னர்கள், சாமந்தர்கள் பிரதிநிதிகள் முதலிய எல்லாரையும் தன்னை வணங்கித் தன் ஆணைப்படி நடக்கவேண்டுமென்று கட்டளையிட்டான். அடங்காதவர்களை வற்புறுத்தியும், தண்டித்தும் ஒழுங்குக்குக் கொண்டுவந்தான். அதனால் விஜயநகரப் பேரரசு என்றும் இல்லாத உன்னத நிலைமைக்கு வந்தது. வடக்கே முகம்மதிய சுல்தான்களுடன் போருக்குச்சென்று இராயச்சூர் சண்டையில் அவர்களை முறியடித்து கிருஷ்ணா நதிக்கு அப்பால் அவர்களைத் துரத்தியடித்து அந்நதியைத் தனது நாட்டுக்கு எல்லையாக அமைத்துக்கொண்டான். பிறகு தெற்குத் திக்கில் திக்விஜயம் செய்து இராமேசுவரம் வரையில் வெற்றிக்கு மேல் வெற்றியடைந்து தென் கோடியாகிய குமரி முனை மட்டும் தன் ஆட்சியைப் பரப்பினான். இவ்வாறு தென் திசையில் திக்விஜயம் செய்த வரலாறு "ராயவாசகமு", "கிருஷ்ணராஜ விஜயமு"

என்ற நூல்களில் அழகாக வருணிக்கப்பட்டிருக்கின்றது. "கிருஷ்ணராஜ விஜயமு" என்ற காவியம் குமார தூர்ஜ்ஜடி என்ற ஒரு தெலுங்கு கவியால் எழுதப்பட்டது. மேலும் கிழக்கு திக்கில் சென்று ஓருகல்லைப் (Warangal) பிடித்துக் கீழ்க்கரையோரமாக இருந்த ஆந்தர நாடுகளையெல்லாம் தன் வசப்படுத்திக்கொண்டு கலிங்க நாட்டின்மீது படையெடுத்து கடகத்தையும் பிடித்து அந்நாட்டு அரசகுமாரியைத் திருமணம் செய்துகொண்டு திரும்பினான். பிறகு மேற்கிலும் படையெடுத்து அரபிக்கடல் எல்லையில் இருந்த எல்லா நாடுகளையும் தன் வசப்படுத்திக் கொண்டான். இந்த வகையில் நாற்புறங்களிலும் சென்று வெற்றிக்குமேல் வெற்றியடைந்து உண்மையான திக்விஜயம் செய்தவன் கிருஷ்ணராய தேவன் ஒருவனே. அவன் திக்விஜயம் செய்தது மட்டுமன்றி நாட்டில் அமைதியை எப்பொழுதும் நிலைநிறுத்தவேண்டி நட்புரிமையாலும் திருமணத்தாலும் மன்னர்களையெல்லாம் கட்டுப்படுத்திக் கலவரம் வராமல் பாதுகாத்தான்.

கிருஷ்ண தேவராயன் வெறும் வெற்றிவீரன் மட்டுமல்ல. சிறந்த கல்விமானும் ஆவான். அழகிய காவியங்களைத் தானே இயற்றக்கூடியவன். கவிகளை ஆதரிப்பவன். கன்னடம், தெலுங்கு, வடமொழி இவைகளில் வல்லாரைத் தாராளமாக ஆதரித்து வந்தான். அவனுடைய ஆஸ்தான மண்டபத்தில் அஷ்டதிக் கஜங்கள் என்ற புகழ்பெற்ற எட்டு கவிராஜர்கள் அலங்கரித்து வந்தார்கள். அவனுடைய புகழ்பெற்ற அமைச்சன் திப்பரசு என்ற அப்பாஜிக் கதைகளும், தென்னாலி இராமன் கதைகளும், தெலுங்கிலும், தமிழிலும் நாட்டுக் கதைகளாக வழங்குவதை அறிவோம். அக்கதைகளில் காணும் இராயர் கிருஷ்ண தேவராயர்தான். இது தவிர தானுமே "ஆமுக்த மால்யத" என்ற தெலுங்கு காவியத்தை ஆண்டாள் சரிதமாக எழுதியிருக்கிறான்.

இப்படிப்பட்ட அரசன் இந்து சமயத்தை நிலை நிறுத்தும் பொருட்டுக் கணக்கற்ற திருப்பணிகள் செய்தான். தென்னிந்தியாவில் காளஹஸ்தி முதல் மதுரை வரைக்கும் உள்ள எல்லா பெரிய கோயில்களிலும் திருப்பணி செய்வித்தான். கோயில்களில் ஆராதனைக்காகக்கணக்கற்ற தானதர்மங்கள் செய்தான். பெரிய மதில்கள், வானளாவிய கோபுரங்கள், பிரமாண்டமான மண்டபங்கள் இவைகளையெல்லாம் தொடங்கினவன் கிருஷ்ண தேவராயனே. மதில்களிலும், கோபுரங்களிலும் இவனுடைய உருவங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இனிக் கொங்கு நாட்டில் இவன் செய்த செயல்களைப்பற்றி எழுதுவோம். கிருஷ்ணதேவராயன் பட்டத்திற்கு வந்தவுடனே சில குறுநில மன்னர்கள் முந்திய பலவீனத்தைக் கருதிக் கீழ்ப்படியாது தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் கொங்கு நாட்டின் ஆட்சியைக் கண்காணித்து வந்த உம்மத்தூர் உடையான். அதுகண்டு கிருஷ்ணதேவராயன் படையெடுத்துப்போய் ஒரே நாளில் சிவசமுத்திரக் கோட்டையைப் பிடித்தான். உடனே உம்மத்தூர் உடையானை ஆட்சியிலிருந்து நீக்கி, பர்வதராகுத்தன் என்ற ஒருவனை ஆட்சித் தலைவனாக நியமித்தான். கிருஷ்ணதேவராயன் பட்டத்திற்கு வந்த அடுத்த வருஷமே அதாவது 1510-ல் இந்த் தண்டெடுப்பு நடந்தது. இந்தச் செய்தி ஈரோடு, தொண்டீசுவரமுடையார் கோயிலில் 1510, 11-ல் பொறிக்கப்பட்டிருக்கிறது (169/1910). அக்கல்வெட்டில் பர்வதராகுத்தன் கிருஷ்ணதேவ ராயனுடைய பிரதிநிதி என்றே, கூறப்பட்டுள்ளது. இந்தப்புது உத்தியோகத்தன் தன் பேரரசனுக்கு நன்றி காட்டும் சேவகனாகவே இறுதிவரை இருந்திருக்கிறான். ஏனெனில் அதுமுதல் கொங்கு நாட்டின் ஆட்சி கிருஷ்ணதேவராயனை விட்டு விலகவேயில்லை என்று அறியலாம்.

கொங்கு நாட்டில் அதாவது கோவை, மதுரைப் பகுதிகளில் கிருஷ்ணதேவராயனுக்குச் சம்பந்தப்பட்ட சாசனங்கள்

ஏழு கிடைத்திருக்கின்றன. அவைகள் 1518-முதல் 1528-வரை செல்லுகின்றன. 1518-ல் சேலம் கொக்கராயப் பேட்டையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் அவ்வரசன் "ராஜாக்கள் தம்பிரான்" (மன்னாதி மன்னன்) என்று புகழப்பட்டிருக்கின்றான். தருமபுரி தாலூகா இந்தூரிலும் (651/1905) இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. திருச்செங்கோட்டுக் கல்வெட்டு 1528-ல் சில விழாக்கள் நடத்துவதற்காகச் சந்தைச் சுங்க வரிகளைத்தானம் செய்த செய்தியை அறிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டில் (பக்கம் 142—1916) அரசனுடைய சாமந்தன் திரியம்பக உடையார் என்பவனின் காரியஸ்தன் சாமநாயனர் (மாணிக்க நாயகனர் மகன்) திருச்செங்கோட்டில் சாம சமுத்திரம் என்ற ஒரு பாகத்தைக் கட்டினனும். அதில் திருச்செங்கோடு முருகக்கடவுளின் படைவீடாக இருந்ததெனக் கூறப்பட்டுள்ளது. மேலும் உழவக்குடிகள், ஐந்து பணமும், காசாவர்க்கத்தார் 2 வருஷம் இறையிலியராக இருந்தும், பின்னர் மூன்று பணமும், கொடுக்கவேண்டுமென்று வரிவிகிதங்கள் நிச்சயப்படுத்தப்பட்டன.

மேலும் சேலூரில் 1545-லும், பழனியில் 1520-லும் கல்வெட்டுக்கள் கிடைத்து இருக்கின்றன. திண்டுக்கல்லில் அகரத்திலும், தாடிக்கொம்பிலும் இரண்டு கல்வெட்டுகள் இருக்கின்றன. 1522-ல் தாடிக்கொம்பில் 24 மனைகள் கட்டிக் குடிகளுக்குக்கொடுக்கப்பட்டன. ஆகவேமக்களின் நன்மையின்பொருட்டு குடியேற்ற வசதிகளையும் கிருஷ்ணராயதேவன் செய்தான் என்று அறியலாம். மேலும் சேலூருக்கடுத்த மொக்கணீச்சரம் என்ற திருவாசக வைப்புத்தலத்தில் 1525-ல் பார்த்திப ஆண்டில் மொக்கணீசுவரருக்கு இரண்டு தலைவர்கள் ஒரு நந்தவனத்தையும் சில நிலங்களையும் கிருஷ்ணதேவன் காலத்தில் தானம் செய்திருக்கிறார்கள். இவ்வகையில் கிருஷ்ண தேவராயன் காலத்தில் கொங்கு நாட்டில் பல அரசியல் ஏற்பாடுகளும், தான தருமங்களும், கோயில் கண்காணிப்புக்களும் நடைபெற்றிருக்கின்

றன என அறியவேண்டும். நாடும் மிகச்செழிப்போடு விளங்கிக் கொண்டிருக்கவேண்டும்.

## 2. அச்சுதராயன் (1530—1542).

கிருஷ்ணதேவராயனுக்கு ஆண் சந்ததியில்லை. இரண்டு பெண்களை அளியராமராயனும், அவன் தம்பி திருமலைராயனும் மணந்து கொண்டார்கள். இரண்டு இளைய தம்பிகள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் அச்சுதராயன். 1529-ல் பட்டம் வகித்து 1542வரை ஆண்டான். அவன் சக்தியற்றவன். ஆகவே முகம்மதியர்கள் இராயச்சூரை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

இவ்வரசனுடைய கல்வெட்டுக்கள் 11 கொங்குநாட்டில் உள்ளன. அவைகள் 1530-முதல் 40-வரை ஆண்டுகளில் பொறிக்கப்பட்டவை. கோவை, சேலம், மதுரை பகுதிகளில் அதாவது அவிநாசி, எரசளஹல்லி, குந்தூர், மொதள்ளி, திண்டுக்கல், அதமன்கோட்டை, தாரமங்கலம், கொக்கராயன் பேட்டை என்ற இடங்களில் அவைகள் காணப்படுகின்றன. ஆகவே அச்சுதராயன் ஆட்சி கொங்கு நாட்டில் முழுவதுமே படர்ந்து இருந்தது எனலாம். அவிநாசிக் கல்வெட்டின்படி 1538-ல் சிங்கள உடையார் அரைவேலி நிலம் கொடுத்து சமுத்திரம் என்ற குளத்தை வெட்டினார். 1532-ல் நஞ்சனஹள்ளிக் கல்வெட்டின்படி நஞ்சன்குடியில் ஜங்கமர்களுக்கும், பிராமணர்களுக்கும் நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

இந்தக் கல்வெட்டுக்களைக் காணும்போது அச்சுதராயன் காலத்தில் கொங்குநாடு மிகவும் அமைதியோடும் செழிப்பாகவும் இருந்தது என்றுகூறலாம். அச்சுதராயன் பலம் இல்லாதவனாய் இருந்தும் கிருஷ்ணதேவராயன் காலத்தில் ஏற்பட்ட ஒழுங்கு பின்னும் பல வருடங்கள் நடைமுறையில் இருந்தது எனக் கொள்ளவேண்டும்.

## 3. சதாசிவராயன் (1542—1570).

அச்சுதனுக்குப் பிறகு அவன் மகன் வெங்கிடாதிரி பட்டத்

திற்கு வந்ததும் கொல்லப்பட்டான். பிறகு அச்சுதன் தம்பி சிரங்கராயன் மகன் சதாசிவன் பட்டம் வகித்தான். அவன் சிறுவன். சக்தியற்றவன். பெரும்பாலும் அரண்மனையிலேயே அடைபட்டிருந்தான். கிருஷ்ணதேவ ராயனுடைய மருமகன் அளியராமராயன் 1565 வரைக்கும், மற்ற மருமகன் திருமலை ராயன் அதன் பின்னரும், அமைச்சர்களாக இருந்து அரசு புரிந்து வந்தார்கள்.

சதாசிவராயன் பெயருக்குமட்டும் அரசனாக இருந்தபோதிலும் மரியாதைக்காக இவன் பெயரிலேயே ஆட்சி நடந்தது. கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டன. கொங்கு நாட்டில் இவனுடைய கல்வெட்டுக்கள் 8 கிடைத்திருக்கின்றன (கொள்ளேகாலம், சிங்காநல்லூர், இரத்தினகிரி, காரிமங்கலம், தாரமங்கலம்). 1545-ல் திம்மராசன் என்ற படைத்தலைவன் தெற்கே படையெடுத்துச் சென்றான். அச்செய்தி திருச்சி வட்டம் இரத்தினகிரியில் தொனிக்கிறது. அக்கோயிலுக்குத் திம்மையன் தானம் செய்தானும். காரிமங்கலம் கல்வெட்டில் (1556) அளிய ராமயராயன் பெயர் கூறப்பட்டுள்ளது (சேலம்).

மேலும் இவ்வரசன் காலத்தில்தான் 1565-ல் தலைக்கோட்டை (இராக்ஷசதகடி) யுத்தம் நடந்து அளியராமராயன் கொலையுண்டான். விஜயநகரம் முகம்மதியரால் அழிக்கப்பட்டது. அரசன் பெனுகொண்டைக்கு ஓடிவிட்டான். திருமலை ராயன் அவனை அழைத்துச் சென்றான். 1570-ல் சதாசிவன் இறந்துபோக திருமலையே அரசனானன். துளுவவம்சமும் முடிவடைந்தது. ஆறவீடு வம்சம் ஆளத்தொடங்கிற்று.

## 20. ஆறவீடு அல்லது 4-ம் வம்சம் (1570—1600)

துளுவ வம்சத்து அரசர்களுக்கு ஆண்சந்ததி இல்லாமற் போய்விட்டது. அவ்வம்சத்தில் சிறந்த மன்னர்மன்னனாக விளங்கிய கிருஷ்ணதேவராயனுக்குத் திருமலாம்பா, வெங்கலாம்ப, என்ற இரண்டு பெண் மக்கள் இருந்தார்கள். திரும



கருவூர் - ஆனிலை — முன்கோபுரம்



திருச்செங்கோடு மலைமீது உள்ள கோயில்

லாம்பாளை அளியராமராயனும், வெங்கலாம்பாளை, அவன் தம்பி திருமலைராயனும் மணம் செய்துகொண்டார்கள். அளிய ராமராயன் சதாசிவராயனுக்கு மந்திரியாக இருந்து, முழு அதிகாரத்தையும் தானே வகித்துக்கொண்டிருந்துத் தலைக் கோட்டைப் போரில் 1565-ல் உயிர் இழந்தான். பிறகு அவன் தம்பி திருமலைராயன் சதாசிவனுக்கு மந்திரியாகி முழு அதிகாரமும் செலுத்திவந்தான். 1570-ல் சதாசிவன் இறந்துபோக திருமலைராயன் பட்டத்தைக் கவர்ந்துகொண்டான். அவன் 1578-ல் இறந்துபோக அவன் மகன் சீரங்கன் 1 அரியாசனம் ஏறினான். அவன் 1586-ல் இறக்க, அவன் தம்பி வெங்கடபதி ராயன் 1586 முதல் 1614 வரை ஆண்டான். இவன் காலத்தில் மங்கியிருந்த அரசு சிறிது பெருமை அடைந்தது. திருமலை ராயன், பெனுகொண்டாவிலும், வெங்கடபதிராயன்சந்திரகிரி யிலும் அரசாண்டார்கள். வெங்கடபதிக்குப் பிறகு விஜயநகர அரசு மிகவும் கேவலம் அடைந்தது. அப்போது பெயரளவில் 4, 5 அரசர்கள் ஆண்டார்கள்.

திருமலைராயன் அரியாசனத்தைக் கவர்ந்த பிறகு தன்னுடைய சந்ததியாரை விஜயநகர அரசுக்கு உரிமையர்கள் ஆக்கிக்கொண்டான். அவனுடைய வம்சத்திற்கு ஆறவீடு வம்சம் என்று பெயர் வந்தது. முந்திய துளுவ வம்சத்தாரின் பெண் சந்ததிமூலம் ஆறவீடு வம்சத்தார்கள் உரிமை கொண்டாடினார்கள். திருமலைராயனுடைய முப்பாட்டன் புக்கராயன் என்பவன் 1485-ல் பட்டத்தைக் கவர்ந்த சாளுவ நரசிம்மனின் மந்திரியாக இருந்தவன். அந்த புக்கராயனுடைய சந்ததியார்கள் விஜயநகரசாம்ராச்சியத்தில் பல முக்கிய ஸ்தானங்களை வகித்து வந்தார்கள். ஆகவே ஆறவீடுவம்சத்தார் வெகு எளிதில் அரியாசனத்தைக் கவரமுடிந்தது. ஆனாலும் அவர்கள் பலவீனர்களாயும் பெயருக்குமாத்திரம் அரசர்களாயும் இருந்தார்கள். நாளாவட்டத்தில் அவர்களிடம் சாமந்தர்களாயிருந்த நாயக்கர்கள் அங்கங்கே சுயேச்சையாக ஆளத்தொடங்கி

ஞர்கள். பெயருக்குமாத்திரம் பேரரசனுயிருந்த இராயர்கள் வரவரச் சக்தியற்றவர்களாகி 17-ம் நூற்றண்டுக்குள் பெயர் சொல்லவும் வகையில்லாமல் அழிந்துபோனுர்கள்.

இந்த வகையில் ஆறவீட்டு வம்சத்தார் நிலைமையிருக்க, அவர்கள் கொங்குநாட்டின் மீது கொண்டிருந்த பிடிப்பு நாள் செல்லச் செல்ல தளர்வடைந்தது. முன்னமே கூறியபடி ஆற வீட்டு வம்சத்தில் வீரவெங்கடபதிராயன் (1586—1614) சிறிது செல்வாக்குடன் இருந்தான். அவன் காலத்தில் கொங்கு நாடு அவன் கையிலேயே இருந்தது. அதனை நிரூபிக்கும் கல்வெட்டுக்கள் ஈரோட்டில் இரண்டும், (1588) சிவன் சமுத்திரத்தில் ஒன்றும் இருக்கின்றன. ஈரோட்டுக் கல்வெட்டின்படி (13/1891) மேல்கரை பூந்துறைநாட்டுக் காஞ்சித்துண்டத்து ஈரோட்டில், தொண்டீசுவரமுடைய தம்பிரானுர்க்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும், வீரப்பநாயக்கர் ஐயன் தர்மமாக அவிசு, பலி, அர்ச்சனைக்கும் திருநாள் திருப்பணிக்கும் நடப்பதாக, அணைக்கீழ் நீர்ப்பாய்ச்சல், கமலபுஷ்கரணியான, சொக்குரோணியின் கீழ்நிலங்கள், தானமாக கொடுக்கப் பட்டனவாம். அதைப்போலவே காவேரியின் இடையில் உள்ள சிவன்சமுத்திரக் கல்வெட்டிலும் 1604-ல் ஒரு திருமலராஜ நாய்க்கன் நிலதானம் செய்திருக்கின்றுன் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

பின்னுல் பெயருக்கு மாத்திரம் அரசனுகவந்த அளியராமராயனுடைய பேரன் மகனுன சீரங்கராயன் III (1642—1670) காலத்தில் கொங்குநாட்டில் சில கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. சிங்காநல்லூர், கண்ணுடிப்புத்தூர், குமரலிங்கம் முதலியவைகளில் அவைகள் காணப்படுகின்றன. அவைகள் 1655 முதல் 1667 வரை ஆண்டுகளைக் கொண்டிருக்கின்றன. அந்த நாள்களிலே மதுரையிலே விசுவநாத நாய்க்கன், சொக்கநாத நாய்க்கன், திருமலை நாய்க்கன் என்ற நாய்க்க அரசர்கள் சுயேச்சையாக ஆளத்தொடங்கிவிட்டார்கள்.

அவர்களுக்குக் கீழ் மதுரையும், கொங்குநாடும் சென்று விட்டன. ஆகவே அந்தக்காலத்தில் சீரங்க நாய்க்கன் பெயரால் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டனவென்றால் பழைய மரியாதையை உணர்த்தவேண்டி அவைகள் பொறிக்கப் பட்டனவேயன்றி உண்மையான ஆட்சியைக் காட்டுவதற்கல்ல. ஏனென்றால் ஏற்கனவே சீரங்கராயன் இருக்க இடமின்றி மைசூர் சீமையில் அகதியாகத் தவித்துக் கொண்டிருந்தான் என்று அறிகிறோம். அவனோடு ஆறவீட்டு வம்சமும் தொலைந்தது எனக் கூறலாம்.

## 21. விஜயநகர ஆட்சியில் கொங்குநாட்டுநிலை (1350—1600)

கொங்குநாட்டில் விஜயநகர ஆட்சி இரண்டு நூற்றாண்டுகளுக்குக் குறையாமல் இருந்தது. பிற அரசர்களுடைய படையெடுப்புக்கள் இல்லாமற்போயின. நாட்டில் அமைதி எங்கும் நிலவிற்று. சுயஅரசு என்பது ஒன்று இல்லை என்பதைத்தவிர மற்றவகைகளில் நாடு அமைதியாகவே இருந்தது. அதற்கு விஜயநகரத்தாரின் வெற்றியும் அரசியல் நிபுணத்துவமே காரணம் என்க.

### 1. அரசியல்.

விஜயநகரத்தார்கள் பாளையப்பட்டு முறையில் (Feudal) நாட்டில் அரசுபுரிந்தார்கள். தங்கள் பேரரசு கிருஷ்ணாநதிமுதல் குமரிமுனைமட்டும் எட்டியிருந்தது. அந்தப்பெரும் பிரதேசத்தை ஆறு மாகாணங்களாக பிரிவினை செய்தார்கள். அவைகள்:— 1. ஆந்திரம், 2. கர்நாடகம், 3. சந்திரகிரி, 4. செஞ்சி, 5. தஞ்சாவூர், 6. மதுரை என்பன. இந்த மாகாணம் ஒவ்வொன்றிற்கும் ஒரு நாய்க்கனைத் தங்கள் பிரதிநிதியாக நியமித்தார்கள். அந்த நாய்க்கர்கள், தாங்களிட்ட ஆணையின்படி அரசு செலுத்த வேண்டும். ஆணையை மீறினால், அவர்கள் விலக்கப்பட்டு வேறொருவர் நியமிக்கப்படுவார். இந்தப்படி மதுரையில் ஒரு

முறை நடந்தது. சுயேச்சையாய் ஆளத்தொடங்கின நாகம நாய்க்கன் நீக்கப்பட்டு விசுவநாத நாய்க்கன் நியமிக்கப்பட்டான். ஒழுங்காக நடந்தமட்டும் நாய்க்கர்களைப் பேரரசர்கள் கண்டிப்ப தில்லை. மாகாண நாய்க்கர்கள் வரி வசூலுக்கும், நாட்டு அமை திக்கும் உத்திரவாதிகள். அதற்காக அவர்கள் படைகளும்வைத் திருந்தார்கள். மாகாண நாய்க்கர்களுக்குக் கீழ் சிறிய பாளையப் பட்டுக்கள் இருந்தன. பாளையப்பட்டுக் கீழ் கிராமத்தலைவர்கள் இருந்தார்கள். இவ்வாறுகப் படிப்படியாக ஆட்சிமுறையிருந் தது. கிராமம், பாளயப்பட்டு, மாகாணம், பேரரசு என்ற முறையில் படி வரிசையில் ஆட்சிமுறை ஏற்பட்டிருந்தது.

மேலேகண்ட மாகாணங்களில், கொங்கு நாடு மதுரை மாகாணத்துநாயக்கன் கீழ் இருந்தது. மதுரை நாய்க்கன் தனக் குக்கீழ் பாளையப்பட்டுக்களை ஏற்படுத்தியதில் கொங்கு நாட்டி லும் பல பாளையப்பட்டுக்கள் ஏற்பட்டன. பாளையப்பட்டுக் களின் தலைவர்கள் பாளையக்காரர்கள் என்று அழைக்கப்பட் டார்கள் அப்பாளையக்காரர்களின் போக்குகளைக்குறித்து பின் னல் எழுதுவோம். மதுரை நாய்க்கன் செல்வாக்கோடு இருந்த மட்டும் பாளையக்காரர்கள் அடங்கி, ஒடுங்கி நடந்தார்கள். நாட் டுக்குடிகள் நலத்துடன் வாழ்ந்தார்கள். இந்த அரசியல் முறை யே கொங்குநாட்டில் இருந்தது.

## 2. சமூகநிலை.

13-ஆம் நூற்றுண்டின் கொங்குநாட்டின் நிலையைப்பற்றிக் கூறியபோது, ஹொய்சளர்களுடைய ஆட்சியின் காரணமாக கொங்கு நாட்டில் கன்னடக் குடியேற்றமும், கன்னட மொழிக் கலப்பும் சிறிது ஏற்பட்டனவென்று கூறியிருக்கின்றோம். பிறகு விஜயநகர ஆட்சியின்போது வடக்கேயிருந்துவந்த குடி யேற்றங்கள் பெருகின. விஜயநகர ஆட்சி சமாதான நிலையை நாட்டுக்குள் வளர்த்திருந்தபடியால் குடியேற்ற வசதிகளுக்கு மிகவாக நலங்கள் ஏற்பட்டன. விஜயநகரத்து அரசர்களில், சங்க வம்சமும், சாளுவ வம்சமும் கன்னடத்தைப் போற்றி

வந்தன. துளுவ வம்சமும், ஆறவீடு வம்சமும் தெலுங்கைப் போற்றி வந்தன. இந்த முறையில் கன்னடமேயன்றி, தெலுங்கும் தமிழ் நாட்டில் புகுந்தது. கன்னடியக் குடிகள் நீலகிரி மலைகள் வழியாகவும், ஹாசனூர், திம்பம், கணவாய்களின் வழியாகவும் தெற்கே வந்தார்கள். தெலுங்குக் குடிகளோ சித்தூர், ஆர்க்காடு வழியாக, வடகிழக்கிலிருந்து தென்மேற்கில் கொங்கு நாட்டிற்குள் புகுந்தார்கள். கொள்ளேகாலம் தாலூகாவானது மலைத்தொடர்களுக்கு வடக்கேயிருப்பதனாலும், மைசூர் பீடபூமியோடு சமமாய் இருப்பதினாலும் அது முழுவதிலும் முதலிலிருந்தே கன்னடமயமாயிருந்தது. சோழர்கள் தலைக்காட்டைப்பிடித்த காலத்தில் தமிழர்கள் அந்தத்தாலூகாவில் புகுந்தார்கள். சில கிராமங்களில் தமிழும் பேசப்பட்டது. விஜயநகர அரசு கொங்குநாட்டில் நிலையாக ஏற்பட்ட பிறகு, பலவித காரணங்களைக்கொண்டு கொங்கு நாட்டுச் சமநிலத்தில், கன்னடமும், தெலுங்கும் முன்னேற்றமடைந்தன. கன்னடியரும், தெலுங்கரும் தங்கள் பழக்க வழக்கங்களுக்கேற்றபடி வெவ்வேறு பகுதிகளில் குடியேறினார்கள். கன்னடியக் குடிகள் பெரும்பாலும் மலையோரங்களில் புன்செய் நிலங்களையே விரும்பிச் சென்றார்கள்.

இன்றைக்கும் கன்னடியக் குடிகள் கோபி, அவிநாசி, கோவை தாலூகாக்களில் மலைத்தொடர்களின் அடிவாரங்களில் செம்மண் சூழ்ந்த கிராமங்களிலே வசிக்கிறார்கள். இராகி, கம்பு, சோளம், துவரை என்பன அவர்கள் விளைக்கும் தானியங்கள். அவர்கள் பெரும்பாலும் ஒக்கிலியக் குடிகளாக இருக்கிறார்கள்.

ஆனால் தெலுங்கு பேசும் குடிகளோ வடகிழக்கிலிருந்து குடியேறிக் கரிசல் நிலத்தையும், நன்செய் நிலத்தையும் கைப்பற்றிக்கொண்டார்கள். தெலுங்குக் குடிகள் கர்நூல், கடப்பை வட்டங்களில் கரிசல் நிலங்களில் வாழ்ந்துவந்த வழக்கத்தினால் கொங்கு நாட்டிலும் அப்படிப்பட்ட நிலத்தையே விரும்பினார்கள். அவர்களில் சிறப்பாகக் கம்மவார் குடிகள் பருத்தி விளை

வையே ஆதாரமாகக்கொண்டு, கோவை, பல்லடம், உடுமலைப் பேட்டை தாலூகாக்களில் பருத்தி வெள்ளாமையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த வேறுபாட்டு மனப்பான்மை கன்னடிய தெலுங்குக் குடிகளில் தெளிவாக அமைந்திருப்பதை இன்றைக்கும் நன்கு அறியலாம்.

இனி உழவுத் தொழிலில் ஈடுபட்ட குடியானவர்களேயன்றிக் கைத்தொழிலில் ஈடுபட்ட மக்களும் குடியேறி வந்தார்கள். துறையர், கெம்பட்டியர், பேடர், தேவாங்கர் முதலிய கன்னடக் குடிகள் நாட்டுப்புறங்களில் குடியேறித் தங்கள் தங்கள் தொழில்களை நடத்திவந்தார்கள். அதுபோலவே வடகிழக்கேயிருந்து கைத்தொழில் செய்யும் தெலுங்கு வகுப்பார்களாகிய பலிஜர், ரெட்டியர், தேவாங்கர் முதலியவர்களும் பல பகுதிகளில் குடியேறி அமர்ந்தார்கள். நெசவுத் தொழில் செய்யும் தேவாங்கர்களில் கன்னடமும், தெலுங்கும் பேசப்பட்டு வருகின்றன. அவர்களில் கன்னடியர் நாட்டுப் புறங்களிலும், தெலுங்கர் நகரங்களிலும் வசிப்பதைக் காணலாம். இவர்கள் இருகுலத்தார்களுக்கும் பொதுவான மடம் விஜயநகரத் தலைநகரில் (ஹம்பி) பம்பாபதிக் கோயிலுக்கு அருகில் ஹேமகூட பர்வதத்தின் மீது அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம். ஆகவே இந்த வகுப்பார்கள் விஜயநகரத் தலைநகரிலிருந்து கொங்கு நாட்டுக்கு வந்திருக்க வேண்டுமென்பது திண்ணம். அதற்கு ஏற்றபடி கர்ண பரம்பரை வரலாறுகளும் தற்போதும் வழங்கி வருகின்றன.

## 3. மொழி வளர்ச்சி நிலை.

கன்னடிய வகுப்புக்களும், தெலுங்கு வகுப்புக்களும் எந்த வகையில் கொங்கு நாட்டிற்குள் குடியேறி வந்தன என்பதைப் பற்றி ஓரளவு கூறியிருக்கின்றோம். அவர்களோடு அவர்கள் பேசும் மொழிகளும் வருவது இயல்பு அல்லவா? எந்த மொழியாளர்களும் தங்கள் தங்கள் தாய் மொழிகளை மறப்பது எளிதல்ல. வேறு நாடுகளுக்குக் குடியேறின போதிலும், பழகின

வழக்கங்களையும், தாய் மொழியையும் எவரும் கைவிடமாட்டார்கள். அந்தக் காரணங்களால் கொங்கு நாட்டிற்கு வந்த கன்னடியார்களும் தெலுங்கர்களும் தங்கள் தாய்மொழிகளை விடவேயில்லை. குடிவந்த மக்கள் நாட்டுமொழியாகிய தமிழைப் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டார்கள். தொடக்கத்தில் தாய் மொழியையும் கற்றுக்கொள்ளத் திண்ணைப் பாடசாலைகள் இருந்தன. ஆனால் நாளாவட்டத்தில் அவைகள் மறைந்தன. அவ்வாறு மறைந்து போனாலும் பேசும் மொழியை மட்டும் ஒருவரும் மறக்கவில்லை.

இதற்குக் காரணம் என்னவெனில் வகுப்புப் பற்றும் பழக்க வழக்கங்களின் பிடிப்புமே ஆகும். குடும்பங்களில் வழங்கிவரும் நாட்டுப் பாடல்கள், நாட்டுக் கதைகள், விளையாட்டுப் பாடல்கள், கடவுள் வணக்கச் செய்யுட்கள் முதலியவைகள் எல்லாம் அவரவர்களின் தாய் மொழிகளிலேயே இருப்பது இயல்பு. அவைகள் சின்னஞ்சிறுவயதிலேயே மனப்பாடம் செய்யப்படுகின்றன. தாய் மடியில் பால் அருந்தும்போதே வீட்டுப்பாடல்கள் கேட்கப்படுகின்றன. தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற பழமொழிப்படி தாய்மொழிப்பாடல்கள் மறைந்து போவதில்லை. அவ்வாறிருக்கையில் எழுத்து வாசனை விட்டபோதிலும் மொழியின் ஆர்வம் விட்டுப்போகாது. இந்த முறையில் தெலுங்கும், கன்னடமும் கொங்கு நாட்டில் நிலை பெற்றுவிட்டன.

ஹொய்சளர் காலத்தில் கன்னட மொழி வந்தது. விஜயநகர் காலத்தில் அது சிறிது ஏற்றமடைந்தது. விஜயநகர் ஆட்சியில், துளுவ வம்சத்தார் காலத்தார் காலத்தில் தெலுங்குமொழி அதிகமாகப் புகுந்தது. துளுவ, ஆறவீடு வம்சத்தார்கள் தெலுங்கு மொழியை மிகவும் ஆதரித்தார்கள். அதைக்கண்டு மாகாணத்தலைவர்களான நாயக்கர்களும் தெலுங்கையே போற்றினார்கள். தெலுங்குக் கவிகளையும் ஆதரித்தார்கள். அந்தக் காரணத்தினால் தெலுங்கு மொழி கொங்கு நாட்டில், அதிகமா

கப்புகுந்தது. கன்னட மொழியைக் காட்டிலும் தெலுங்கு மொழி பரவத் தொடங்கிற்று. இன்றைக்கும் கணக்கிட்டுப் பார்த்தால், நாட்டு மொழிகளில் கொங்கு நாட்டில் தெலுங்கு மொழி கால்பங்கும், கன்னட மொழி அரைக்கால் பங்கும் இருப்பதை அறியலாம். இதற்குக் காரணம் அரசியல்போக்கின் வற்புறுத்தல்களாக இருக்கலாம்.

## 4. சமய நிலே.

விஜய நகரத்தின் பெரும் நோக்கமே இந்து சமயத்தைப் பாதுகாத்து முன்னேறச் செய்வதேயாகும். அதற்கு அடிகோலி னவர் வீத்தியாரண்யர் என்ற துறவியல்லவா? அவர் போட்ட விதை முன்னூறு ஆண்டுகள் வளர்ந்து செழிப்போடு விளங்கு கிறது. இன்றைக்கும், தென்னுட்டில் சைவமும், வைணவமும் மேலோங்கியிருக்கின்றனவென்ருல் விஜயநகரத்து அரசர்களின் பாதுகாப்பும், ஒப்பற்ற ஆதரவுமேயாகும். விஜய நகரத்தரசர் கள் தாமாக ஆலயங்களேக்கட்டிப் பெருத்த தானதருமங்களேச் செய்ததுமட்டுமேயன்றி, தமது சாமந்தர்களான நாயக்கர்களே யும், மகத்தான கோயில்களேக் கட்டச் செய்தார்கள் அல்லவா? கோயில்களில் ஆராதனேகள் சரியாக நடைபெறுவதற்காக அள வற்ற தானதர்மங்களேச் செய்தார்கள். சமய நூல்களே வாசிக்க வும் ஏற்பாடுகள் செய்தார்கள். இப்படிச் செய்த வகையில் தமிழ் நாடெங்கும் நாட்டுச் சமயங்கள் வளர்ந்து ஓங்கின.

கொங்குநாட்டிலும் சமயநிலே செழித்தது. பல ஆலயங்கள் சீர்திருத்தப்பட்டன. தானதர்மங்கள் தரப்பட்டன. உம்மத் தூர்த் தலேவர்கள் அரசனுடைய பிரதிநிதிகளாயிருந்து குரக் குத்தளி போன்ற கோயில்களேச் சீர்படுத்தினுர்கள். மதுரை நாயக்க மன்னர்களும் பல கோயில்களேத் திருத்தினுர்கள். பெரிய மண்டபங்கள் கட்டப்பட்டன. பேரூர்,பெரியபாளேயம், தாரமங்கலம், தாடிக்கொம்பு என்ற பெயர்கள் பழமொழிகளா கவும் வழங்கத் தொடங்கின. அக்கோயில்களில் காணும் சிற்ப

வேலைகள் முதிர்ச்சியடைந்த காரணத்தினுல் அப்பழமொழியும் சிற்ப உலகத்தில் வழங்கி வருகிறது.

இனி மற்ெறுரு இயக்கமும் சமய நிலையில் புகத்தொடங்கியது. கொங்கு நாட்டில் வீடுகளில் சமயச் சடங்குகளைச்செய்து வைக்கும் புரோகிதர்கள் பெரும்பாலும் தெலுங்கு பேசும் பிராமணர்களும் சாத்தாதார்களுமே ஆவார்கள். தமிழர் குடும்பங்களிலும், தெலுங்குப் புரோகிதர்களே திருமணச் சடங்கு, ஈமச் சடங்கு முதலியவைகளை நடத்துகிறுர்கள். இதற்குக் காரணம் விஜய நகரத்தார் காலத்தில் ஏற்பட்ட குடியேற்ற மாறுதலே யாகும் என்க.

## 5. பொருள் ஆதார நிலை.

ஒரு நாட்டினுடைய பொருளாதார நிலை அந்நாட்டின் செல்வ நிலையென்று நன்கு கொள்ளப்படும். செல்வம்என்பதில் நிலத்திலிருந்து உண்டாகும் பொருள்கள், கைத்தொழிலால் ஏற்படும் பொருள்கள், வாணிபத்தால் கிடைக்கும் பொருள்கள் முதலியவைகள் எல்லாம்அடங்கும். விஜயநகரத்தார் காலத்தில் கொங்கு நாட்டில் செல்வநிலை எவ்வாறு இருந்ததென்று ஒரு சிறிது ஆராய்வோம். நாட்டு நிலங்களிலிருந்து விளைபொருள்கள் எழுப்பப்பட்டன. அவைகள் புன்செய் தான்யங்களும், நன்செய் தான்யங்களும், உணவு பொருள்களுக்கும், வியாபாரங்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. கரிசல் நிலத்தில் விளைந்த பருத்தி, நூல் நூற்கப்பட்டும், துணி நெய்யப்பட்டும் சரக்குகள் ஆக்கப்பட்டன. அந்த வகையில் கம்மவார்களும், தேவாங்கர்களும் தொழில் செய்தார்கள். புன்செய்களில் உழவர்கள் நிலக்கடலை விளைத்து எண்ணெயும், எள்ளை விதைத்து நல்லெண்ணெய்யும் எடுத்தார்கள். எண்ணெய் ஆட்டுவதில் ஒத்தச் செக்கார் வேலை செய்தார்கள். உள்நாட்டு வெளிநாட்டு வியாபாரங்களில் தாச பலிஜர்கள் பொதி மாடுகளைக்கொண்டு வாணிபம் நடத்திஞர்கள். கால்நடை வியாபாரம் மைசூருக்கும், கொங்கு நாட்டுக்கும் நிரம்ப இருந்தது. தோல் பதனிடுதல்,

செருப்புத் தைத்தல், பரி உண்டாக்குதல், முதலிய தொழில் களில் சக்கிலியர்கள் ஈடுபட்டார்கள். கூரை மேய்தல், கீற்று பின்னுதல் முதலியவைகளில் ஹொலையர்கள் ஈடுபட்டார்கள். மீன்பிடித்தல், கூடை மேய்தல், தொழில்களில் துறையர்களும் வேடர்களும்,வேலை செய்தார்கள். நகைகள் செய்வதில் கம்மா ளர்கள் பொருள் சம்பாதித்தார்கள். வண்ணாரத்தொழில், மண் பாண்டத்தொழில், மண் வேலை, முதலிய பல தொழில்களிலும், வண்ணார், குயவர், ஓட்டர் முதலிய வகுப்பார்கள் ஈடுபட்டிருந் தார்கள். இந்த வகுப்பார்கள் எல்லாம் கொங்கு நாட்டிற்குப் பொருள் வருவாய் தேடிக்கொடுத்தார்கள். இவர்கள் பேசும் மொழி எது என்று ஆராய்ந்தால் கன்னடமும், தெலுங்குமாக இருக்கும். இவர்கள் எல்லாரும் விஜயநகர காலத்தில் குடியேற் றம் செய்யப்பட்டவர்களே. முந்தி எவ்வாறு இருந்தபோதிலும் விஜயநகரத்தார்கள் தங்கள் செல்வாக்கை உறுதி செய்வதற்காக வடக்கேயிருந்து இவ்வகுப்பார்களைக்கொண்டு வந்தார்கள் என்று கூறலாம்.

இவ்வகையில் குடியேற்றம் செய்து அதில் வெற்றிபெறும் பொருட்டு பல நன்மைச் செயல்களையும் அவர்களுக்குச் செய்து கொடுத்தார்கள். பேரூர், பெரியபாளையம் முதலிய இடங்களில் நீர்ப்பாய்ச்சல் வசதிகளைச்செய்து கொடுத்தார்கள். கிராமங்களில் வீடுகள் கட்டிக்கொள்ளக் கோயில் நிலங்களை எளிதான வரி களுக்குக் கொடுத்தார்கள். ஆலயங்களைச்சுற்றியிருந்த திருமடை விளாகங்களில் நெசவாளிகளைக் குடியேற்றி எளிதான தறிவரி ஏற்படுத்தித் தொழில் அபிவிருத்தியடையும்படி செய்தார்கள். கோட்டை கொத்தளங்களைச் சீர்படுத்தவும் புதிய ஊர்களைக் கட்டவும், ஆலயங்களில் திருப்பணி செய்யவும் திட்டங்களை ஏற்படுத்தி அந்தந்த தொழிலாளிகளுக்கு வேலை தந்தார்கள். ஆலயங்களில் சிறந்த கல்வேலை மட்டுமன்றி ஓவியங்கள், செப் புத்திருவுருவங்கள், ஆராதனைச் சாமான்கள் முதலியவைகள் எல்லாம் செய்விப்பதில் உயர்ந்த பணியாளர்களுக்கு வேலையும்

அதனுல்ஊதியமும் தந்தார்கள். இந்த முறைகளில் நாட்டின் தொழில் ஆதார நிலை மேம்பாடு அடைவிக்கப்பட்டது.

6. கல்வி நிலை.

நாட்டின் கல்வி நிலையிலும் விஜயநகரத்தார் காலத்தில் செழிப்பு ஏற்பட்டதென்று அறியவேண்டும். மத்தியத் தலைநகர மாகிய விஜயநகரத்தில் இலக்கியம் நன்ருகப் போற்றப்பட்ட தென்று முன்னமே கூறியிருக்கிரேரும். தெலுங்கு, கன்னடம், வடமொழி இம்மூன்றிலும் கணக்கற்ற காவியங்கள் எழுதப் பட்டன. தமிழ் மொழி அவர்களுக்கு அன்னிய மொழியாக இருந்தபடியால் அதற்கு நேரடியாக அவர்கள் ஆதரவு காட்ட வில்லை. அதுபோலவே அவர்களின் மாகாணத் தலைவர்களான நாயக்கர்களும் தெலுங்குக்கும், வடமொழிக்கும் மிகுந்த ஆதரவு காட்டினுர்கள். தஞ்சையிலும், மதுரையிலும் வடமொழிக் காவியங்களும் தெலுங்கு நூல்களும் புதிதாக எழுதப்பட்டன. தஞ்சையில் சங்கீதத்திற்கு நிரம்ப ஆதரவு கொடுக்கப்பட்டது. தஞ்சை நாயக்கனின் அமைச்சராயிருந்த கோவிந்த தீக்ஷிதர் சங்கீத நிபுணராகிப்புகழ்பெற்ற நூல்களையும் எழுதியிருக்கிருர். சங்கீதத்திற்குக் கர்நாடக சங்கீதம் என்றே பெயர் வந்து விட்டது.

விஜயநகரத்தார் காலத்தில் தமிழ் மொழி முழுதும் புறக் கணிக்கப்பட்டதென்று சொல்லலாகாது. விஜய நகரத்தரசர்கள் கல்வெட்டுக்களில் தங்கள் மெய்க்கீர்த்திகளை எழுதினகாலத்தில் தெலுங்கு கன்னடத்திற்கேற்ப தமிழ் முறையையும் எழுதி வைத்தார்கள். அந்த முறையில் தமிழ் போற்றப்பட்டது. மதுரை நாயக்கர்களோ ஒரு சிறிது அதிகமாக உழைத்தார்கள். அவர்களுடைய ஆஸ்தான மண்டபங்களில் குமரகுருபர சுவாமி கள் போன்ற தமிழ்ப்பெரும் புலவர்கள் அருமையான நூல்களை எழுதினுர்கள். மேலும் விஜய நகரத்தார் காலத்தில்தான் அதா வது 15-ம் நூற்ருண்டில் அருணகிரிநாத சுவாமிகள் "திருப் புகழ்" என்னும் சிறந்த நூலைப்பாடினுர்கள். அப்பெரியார்திருப்

புகழில் ஓரிடத்தில்"பிரபுடதேவமாராயன்" என்று சுவாமிகள் கூறியிருப்பது விஜயநகரத்துத் தேவராயனைப் பற்றித்தான். அருணகிரிநாத சுவாமிகள் கொங்குநாட்டில் விஜயம்செய்து 95 திருப்புகழ்கள் அருளிச் செய்திருக்கின்றார்கள். அவைகளைக் கொண்டு விஜய நகரத்தார் காலத்தில் தமிழ் இலக்கியம் எவ்வாறு இருந்ததென அறியலாம்.

## 22. நாயக்கர் உற்பத்தி (1529)

விஜயநகரத்துச் சதாசிவராயன் காலத்தில் தக்ஷிண முகம்மதிய சுல்தான்கள் ஒன்று சேர்ந்து விஜயநகரத்தோடு சண்டையிட வந்தார்கள். இராயனுக்காக அவனுடைய அமைச்சன் அளியராமராயன் மிகமுதிர்ந்த வயதில் போருக்குச் சென்றான். 1565-ல் தலைக்கோட்டை என்ற இராக்ஷசதகடியில் பெரும்போர் நடந்தது. அதில் இராமராயன் கொல்லப்பட்டான். விஜயநகரத்தார் தோல்வியுற்றார்கள். விஜயநகரம் அழிக்கப்பட்டது. ஐந்து மாதங்கள்வரை, கொலை, கொள்ளை, அழிவு முதலியவைகள் நடத்தப்பட்டன. இராமராயன் தம்பி திருமலைநாய்க்கன் சதாசிவனோடு பெனுகொண்டாவுக்கு ஓடினான். 1570-ல் திருமலைராயன் அரசனானான். உடனே தன் நாட்டை 6 பிரிவுகளாக்கினான். ஆந்திரப்பிரதேசத்தை அதாவது பெனுகொண்டாவுக்குச் சுற்றிலுமிருந்த நாட்டைத் தன் வசம் வைத்துக்கொண்டான். 1575-ல் திருமலைராயன் இறந்து போக அவன் மகன் சீரங்கராயன் பட்டத்திற்கு வந்தான். 2-வது மகன் இராமராயன், கர்நாடகத்திற்குப் பிரதிநிதியானான். அதற்குத் தலைநகர் சீரங்கப்பட்டணம். 3-வது மகன் வேங்கடராயன் மதுரைக்குப் பிரதிநிதியானான். மற்றப்பிரிவுகளாகிய சந்திரகிரி, செஞ்சி, தஞ்சை இவைகளில் வேறு பிரதிநிதிகள் ஏற்படுத்தப்பட்டார்கள்.

இந்த முறையானது சரியாக நடைபெறவில்லை. பெனுகொண்டாவில் ஆண்ட இராயன் பலமில்லாதவனாய்ப் போக

மற்ற பிரதிநிதிகள் சுயேச்சையோடு ஆளத்தொடங்கினார்கள். இதன் மத்தியில் பல பாளையக்காரர்கள் கலகம் செய்து கொண்டு தங்கள் இஷ்டப்படி நடக்கத்தொடங்கினார்கள். சீரங்கப்பட்டணத்திலிருந்த இராமராயன் யாதும் செய்யமுடியவில்லை. அருகில் இருந்த யாதவ வம்சத்து இராஜாஉடையார் சுயேச்சை அடைந்து சீரங்கப்பட்டணத்தைப் பிடித்துக் கொண்டு அதற்குத்தானே அரசனாகிவிட்டான். அவன் 1578 முதல் 1617 வரை அரசாண்டான். தனக்குச் சுற்றிலுமிருந்த பாளையக்காரர்களை வென்று மைசூர் இராச்சியத்தை உண்டு பண்ணினான். அவனுடைய சந்ததியார்கள்தான் மைசூர் இராஜ வம்சத்தினர்கள் ஆனார்கள்.

இது நிற்க மதுரையில் நாகம நாய்க்கனை நாயகன் அல்லது பிரதிநிதியாக கிருஷ்ணதேவராயன் நியமித்திருந்தான். அவன் சுயேச்சாதிகாரம் பூணத்தலைப்பட்டதினால், அவன் மகனான விசுவநாத நாய்க்கனே தந்தையின்மீது தண்டெடுத்து வென்று வரும்படி அனுப்பப்பட்டான். இராயனின் சொற்படியே விசுவநாதநாய்க்கன் படையெடுத்து நாகம நாய்க்கனை வென்று, அவனுக்குக் கருணை காட்டும்படி இராயனை வேண்டிக்கொண்டான். நாகம நாய்க்கனும் மன்னிக்கப்பட்டான். விசுவநாத நாய்க்கன் பிரதிநிதியானான். அவன் 1529-முதல், 1564 வரை ஆண்டான். அவனுடைய சந்ததியார் மதுரை நாயக்க வம்சத்தினர் ஆனார்கள். அவர்களும் மெல்லமெல்ல சுயேச்சாதிகாரம் கொள்ளத்தலைப்பட்டார்கள். மேலே சொன்ன மைசூர் உடையார் வம்சமும், மதுரை நாயக்க வம்சமும் கொங்கு நாட்டைப் பொருத்தமட்டில் முதலிலிருந்தே சம்பந்தப்பட்டிருக்கின்றன. அவ்விரண்டு வம்சங்களும் சுயேச்சாதிகாரம் பூண்டபிறகு ஒருவரோடொருவர் நெருங்கிப் போராடத் தொடங்கினார்கள். அவர்களுக்கிடையிலே கொங்குநாடு சிக்கிக் கொண்டு உழைந்தது.

மற்ற இரண்டு தென்னாட்டு மாகாணங்களைப்பற்றி ஒரு சிறிது கூறினாலன்றி வரலாறு சுவைபடாது. ஒரு சிறிது கூறுவோம். தஞ்சையும், வேலூரும் கொங்குநாட்டோடு சம்பந்தப்படவில்லை. ஆனால் அவைகள் தமிழ்நாட்டு மாகாணங்களாய் இருந்தன. அவ்விரண்டிலும் இரண்டு நாய்க்கர்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். தஞ்சையில் செவ்வப்ப நாய்க்கனும் இராயவேலூரில் பொம்மநாய்க்கனும் பிரதிநிதிகள் ஆனார்கள். தஞ்சை செவ்வப்ப நாய்க்கன் 1549ல் அச்சுதராயனால் நியமிக்கப்பட்டான். 1565-ல் சுயேச்சையடைந்தான். 1572-வரை ஆட்சிபுரிந்தான். அவனுக்குப் பின் அச்சுதப்பன் (1572–1614), இரகுநாதன் (1614–1640), விஜயராகவன் (1640-1674) முதலியோர்கள் முறையே ஆண்டார்கள். அவனோடு அவ்வம்சம் தொலைந்தது. மராட்டிய ஏகோஜி தஞ்சையைப் பிடித்துக்கொண்டு அதன் அரசனானன். தஞ்சையில் நாய்க்கருடைய கொலுமண்டபம் இன்றைக்கும் இருக்கின்றது. இனி வேலூரில் பொம்மநாய்க்கன் 1594-ல் நியமிக்கப்பட்டான். அவன் மகன் லிங்கம நாய்க்கனோடு அதுவும் தொலைந்தது. செஞ்சியை நாய்க்கர்கள் பின்னால் ஆளத் தொடங்கினார்கள்.

மேலேகண்டபடி நாயக்கப் பிரதிநிதிகள் நியமனம் பெற்றதும், பின்னர் அவர்கள் சுயேச்சை அடைந்ததும் விவரமாகக் கூறப்பட்டன. அவ்வாறு அந்தத் தலைவர்கள் சுயேச்சை பெற்ற விவரத்தைத் தெளிவாக அறியவேண்டியதற்காக அடியில் கண்ட பட்டியலை இங்குக் குறிப்பிட்டு எழுதுவோம்.

| மாகாணம் | அரசர்பிரதிநிதிகள் | காலம் |
|---|---|---|
| மதுரை | விசுவநாத நாய்க்கன் | 1529-1564 |
| | கிருஷ்ணப்ப | 1564–1572 |
| | வீரப்ப | 1572–1595 |
| | குமாரகிருஷ்ணப்ப | 1595–1601 |

| | | |
|---|---|---|
| மைசூர் | இராஜ உடையார் | 1578-1617 |
| | சாமராஜ | 1617-1637 |
| | இம்மடி ராஜ | 1637-1638 |
| | கண்டீரவநரசராஜ | 1638-1659 |
| தஞ்சை | செவ்வப்ப நாய்க்கன் | 1549-1572 |
| | அச்சுதப்ப | 1572-1614 |
| | இரகுநாத | 1614-1640 |
| | விஜயராகவ | 1640-1674 |
| வேலூர் | பொம்மநாய்க்கன் | 1549-1566 |
| | லிங்கமநாய்க்கன் | 1601- |

## 23. மதுரை நாயக்கர் முன்னேற்றம் (1529—1659)

மதுரை நாயக்கர் வம்சம் எவ்வாறு தோன்றிற்று என்று முன்னர் கூறியிருக்கின்றோம். கிருஷ்ணதேவராயன் காலத்தில் மதுரையை ஆளுவதற்கு நியமிக்கப்பட்ட நாகம நாய்க்கன் கீழ்ப்படியாமல் போக அவன் மகன் விசுவநாத நாய்க்கனே அவன்மீது சென்று அவனை அடக்கும்படி அனுப்பப்பட்டானென்றும், விசுவநாத நாய்க்கன் தன் தகப்பனை வென்று அவனை இராயனிடம் அனுப்பி மன்னித்து விடும்படி விண்ணப்பித்து அதனைப் பெற்றதையும் முன்னமே கூறியிருக்கின்றோம். பிறகு விசுவநாத நாய்க்கனே மதுரையின் காவலனாக நியமிக்கப்பட்டான். அவனுடைய வம்சத்தாரைப்பற்றியும் அவர்கள் கொங்குநாட்டில் செய்த செயல்களைப்பற்றியும் ஒரு சிறிது இனிக் கூறுவோம்.

### 1. விசுவநாத நாய்க்கன் (1529—1564)

இவன் தைரியசாலி. பெரும் போர்வீரன். அரசியலிலும் நிபுணன். அரியநாத முதலியாரைத் தனது அமைச்சனாக வைத்துக்கொண்டு இராச்சியத்தைத் திறம்பட நடத்தினான். இவனுடைய வம்சத்தில் பாண்டியநாடு (மதுரை), தென் பாண்டியநாடு (நெல்லை), மேல்சோழநாடு(திருச்சி), கொங்கு

நாடு (கோவை, சேலம்) முதலியவைகள் வந்துவிட்டன. இத்தனை பெரிய இராச்சியத்தை ஒழுங்கு பெற நடத்திவர வேண்டி ஒரு சிறந்த அரசியல் திட்டத்தை வகுத்தான். அதற்குரிய ஆலோசனை கூறி நடத்தி வைத்தவன் அரியநாதன். அந்த முறைதான் பாளையப்பட்டுமுறை (Feudal System) என்ற பெயர் பெற்றதாகும். இந்த முறையே ஐரோப்பாவில் அதற்குமுன் 2, 3 நூற்றாண்டுகளாகவே இருந்து வந்தது. ஒரு நாட்டின் வளர்ச்சியில் பாளையப்பட்டுமுறை ஒரு அம்ச மாகத்தான் இருக்கும். ஆனால் அதை ஒழுங்காக நடத்து வதற்கு மிகுந்த திறமைவேண்டும். நாடுமுழுவதும் நாய்க்க னால் 72 பாளையங்களாக வகுக்கப்பட்டது. ஒவ்வொரு பாளை யத்திற்கும் ஒவ்வொரு தலைவன் நியமிக்கப்பட்டான். அவனும் அவனுடைய சந்ததியாரும் மதுரை நாய்க்கனுக்கு அடங்கி நடப்பதற்கு உத்தரவாதமாயிருக்கவேண்டும். ஒவ்வொரு நாய்க்கனுக்கும் மதுரைக் கோட்டையில் ஒரு தலைவாசல் சின்னமாகக் கொடுக்கப்பட்டது. அவன் வருடம் ஒரு முறை கப்பம் கட்டவேண்டும். குறிப்பிட்ட சைன்யங்களைக் கேட்ட போது தரவேண்டும். அதற்காக அவன் ஆட்சிபுரியும்படி கொடுக்கப்பட்ட பிரதேசத்தில் வரிவசூலும், பாடிகாவலும், நீதி விசாரணையும் மற்றுமுள்ள உரிமைகளும் அவனுக்கே கொடுக்கப்பட்டன. பொதுவாக நாட்டு வரி வசூலில் நாய்க்க னுக்கு மூன்றில் ஒரு பங்கும், சேனைக்கு மூன்றில் ஒரு பங்கும், பாளையக்காரனுக்கு மூன்றில் ஒரு பங்கும் பகிர்ந்துவிடப் பட்டன. விசுவாசமுள்ள பாளையக்காரர்களுக்குச் சற்று அதிகமாகவே வருமானம் கொடுக்கப்பட்டது.

இவ்வாறு பாளையக்காரர்களை ஏற்படுத்தியதில் தமக்குப் போர்களில் உதவி செய்த படைத்தலைவர்களுக்கும் நாட்டில் விசுவாசமாக இருந்த பழைய குடும்பத் தலைவர்களுக்கும் அப் பாளையப்பட்டுக்களை ஆட்சி செய்ய நியமித்தான். நாயக்கனோடு உடன்வந்த படைத்தலைவர்கள் தெலுங்கர்கள். ஏற்கனவே

நாட்டில் இருந்த தலைவர்கள் தமிழர்கள். இவ்விரு திறத்தாரையும் ஒன்று சேர்த்துப் பாளையப்பட்டு முறையினை அனுசரிக்க முயன்றது ஒரு அரசியல் நிபுணத்துவமே ஆகும். இரு திறத்தாரையும் சமரசப்படுத்தி ஊக்கம் அளிக்கும்முறை அதிலுண்டு.

விசுவநாத நாய்க்கன் அதிகாரத்துக்கு வந்தவுடனே நாட்டில் எங்கும் குழப்பமாக இருந்தது. அதை ஒருவாறு சமாளித்து அமைதியை நிலைநிறுத்தினான். தெற்கே தென் பாண்டி நாட்டில் பண்டைய பாண்டியருடைய உறவினர் சிலர் தலைகாட்டினார்கள். அவர்களை அடக்கி அந்நாட்டில் சமாதானம் நிறுவினான்.

தலைநகரில் இருந்த பழைய கோட்டை அரண்களை இடித்துப்புதிய அரண்களை எழுப்பி அம்மன் கோயிலில் ஆயிரக்கால் மண்டபம் கட்டிப் பல மான்யங்களையும் தந்தான். இந்தச் சிறந்த காரியங்களுக்காகச் சாசனங்கள் நாயக்கரை "கர்த்தர்" என்று கூறியிருக்கின்றன.

விசுவநாதன் காலத்தில் கொங்குநாட்டுப் பாளையப்பட்டுக்களில் அடியில் கண்ட பெயர்களைக் காண்கிறோம். தென் கொங்குநாட்டில் பழனி, விருப்பாட்சி, ஆய்க்குடி, இடையகோட்டை, தளி, ஊற்றுக்குழி முதலிய ஊர்களில் பாளையக்காரர்கள் இருந்தார்கள்.

கீழ்க்கொங்கு நாட்டில் சேந்தமங்கலம் இராமச்சந்திர நாய்க்கனும், தாரமங்கலம் கெட்டி முதலியாரும் வலிமை மிகுந்த பாளையக்காரர்களாக இருந்தார்கள். மற்ற நாட்டுப் பாளையக்காரர்களை இங்கு கூறவேண்டியதில்லை அல்லவா?

## 2. கிருஷ்ணப்ப நாய்க்கன் (1564—1572)

இவன் பட்டத்துக்கு வந்தவுடன் வடக்கே முகம்மதியர்களுக்கும், விஜயநகரத்தார்களுக்கும் சண்டைமுற்றியது. 1565-ல் தலைக்கோட்டை யுத்தத்தில் விஜயநகரம் தோற்றுப்போய்

விட்டது. தளவாய் அரியநாதன் வடக்கே சென்றிருந்தான். அந்த சமயம் பார்த்துத் தும்பிச்சி நாய்க்கன் என்ற ஒரு பாளையக்காரன் கலகம் செய்தான். அப்போது நாய்க்கன் சேவப்பன் என்ற படைத்தலைவனை அனுப்ப, அவனே கொல்லப்பட்டுப்போக, சேவப்பனின் மகன் தும்பிச்சியைக் கொன்றுக் கலகத்தை அடக்கினான். தும்பிச்சிக்கு உதவிக்கு வந்த கண்டி மன்னரோடு போர்புரிந்து வெற்றியும் பெற்றான். இந்த நாய்க்கன் பல தர்மங்களைச் செய்தான். நெல்லைக்கு அருகே கிருஷ்ணாபுரக்கோயில் இவன் பெயரால் கட்டப்பட்டது. அக் கோயில் அருமையான வேலைப்பாடு கொண்டது. கல்லும் பேசுகிறது என்றால் அங்கேதான் சென்று அது கதை சொல்லுவதைக் கேட்கவேண்டும்.

### 3. வீரப்ப நாய்க்கன் (1573—1595)

கிருஷ்ணப்ப நாய்க்கன் மகன் வீரப்ப நாய்க்கன் காலத்திலும் அரியநாதனே மந்திரியாக இருந்தான். அப்போது நாடு முற்றும் சமாதானமே நிலவியது.

### 4. கிருஷ்ணப்பன் II (1595—1601.)

1600-ல் அரியநாதமுதலியார் காலமானார். அவருக்குப்பின் ஆட்சியின் திறமை குன்றத்தொடங்கிற்று. நாட்டில் சிறப்பாக எந்தச் செயலும் நடைபெறவில்லை.

### 5. முத்துகிருஷ்ணப்ப நாய்க்கன் (1602—1609).

இவன் காலத்தில் ஒன்றும் விசேஷமாக நடைபெறவில்லை.

### 6. முத்துவீரப்ப நாய்க்கன் (1609—1623).

இவன் காலத்தில் முகம்மதியர், மைசூரார், தஞ்சையார், கலகங்கள் செய்தார்கள். ஆனால் அவர்கள் அடக்கப்பட்டார்கள். அதற்காகத் தலைநகரமும் மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்டது. மேலேகண்ட 5 அரசர்கள் காலங்களிலும் கொங்கு நாடு பாதிக்கப்படவில்லை. எங்கும் அமைதியே குடிகொண்டு இருந்தது.

## 7. திருமலை நாய்க்கன் (1623—1659).

இவன்தான் நாய்க்கர் வம்சத்திலேயே மிகச்சிறந்த மன்னன். இவனுடைய உருவச்சிலைகள் மதுரைப் புது மண்டபத்திலும், மீனாட்சியம்மன் கோயிலிலும், திருப்பரங்குன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர் கோயில் என்ற கோயில்களிலும் இருக்கின்றன. வீரமும் அரசியல் தந்திரமும் ஒருமிக்கப் பெற்றவன். 12-ஆண்டுவரை திருச்சியிலிருந்துவிட்டுப்பிறகு மதுரையில் வசிக்கத் தொடங்கினான். நாட்டைப் பாதுகாப்பதற்காக 30,000 கொண்டசேனையை அமைத்தான். தனக்குத்தளவாயாக இராமப்பையனை நியமித்து எதிரிகளை அடக்கி வைத்தான். அந்தக் காலத்தில் வடக்கேயிருந்து படையெடுத்துவந்த முகம்மதியர்களை எதிர்த்துப் போர்செய்யத் தன் தளவாயை அனுப்பினான். அதன் பிறகு கிழக்கே மறவ நாட்டில் கலகம்செய்த சேதுபதி சடையக்கத்தேவன் மீது இராமப்பையனை அனுப்பி அவனோடு போர்புரிந்து அவனை அடக்கினான். இந்தச்சரிதத்தை இராமப்பையன் அம்மானை என்ற நூல் கூறுகிறது. மீண்டும் மதுரைக்கும் மைசூருக்கும் சண்டை நடந்தது. மைசூர் சாமராஜன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்தான். இராமப்பையன் மைசூர் துருப்புக்களை முறியடித்து, மலைக்கணவாய்களுக்கு மேலே அவர்களைச்சிதறடித்துவிட்டுத் திரும்பினான். ஆனால் இதன் விளைவாக வடநாட்டு முகம்மதியர்கள் தெற்கே வரத் தொடங்கினார்கள். அதில் திருமலை நாய்க்கன் தோற்றுப்போக செஞ்சிக்கோட்டை முகம்மதியரிடம் சென்றுவிட்டது. இந்தச் சண்டை 1644-ல் முடிந்தது.

மேலே கூறியபடி மைசூர் சேனை திருமலை நாய்க்கனுக்குத் தோற்றுப்போன பிறகு மைசூரில் புதிதாகப்பட்டத்திற்கு வந்த கண்டீரவ நரசராஜன் அந்த அவமானத்தைக்கண்டு சகிக்காமல் மதுரையின்மீது போர்தொடுத்தான். 1656-ல் சத்தியமங்கலத்தின் மீது படையெடுத்து அதன் சுற்றுமிருந்த நாட்டை அழிக்கத்தொடங்கினான். மைசூர் தளவாய் ஹம்பையன் படையெடுத்

துச்சென்றதில் தான் பிடித்த போர்வீரர்களின் மூக்குகளை அறுத்து மூட்டைகட்டி மைசூருக்கு அனுப்பிவைத்தான். அப்போது திருமலை நாய்க்கன் நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்தான். சேதுபதி இரகுநாத தேவனை அழைத்து 25,000 சேனைகளை உடன் சேர்த்தனுப்பினான். திண்டுக்கல்லில் போர் நடந்தது. மைசூரார் தோல்வியுற்றார்கள். பிறகு மதுரைச்சேனை குமார முத்தின் தலைமையில் மைசூர் சென்று வெற்றியடைந்தது. இந்த சமயத்தில் மதுரையில் திருமலை நாய்க்கன் இறந்தான். மைசூரிலும் கண்டீரவ நரசராஜனும் இறந்தான். அவன் இறப்பதற்கு முந்தி சேலத்தில் பல கோட்டைகளையும் கவர்ந்து கொண்டான். 1659-க்குப்பின் மதுரை தளர்ச்சியடைந்தது. மைசூர் முன்னேறத் தொடங்கிற்று.

திருமலை நாய்க்கன் அடிக்கடி சண்டையில் ஈடுபட்டிருந்தாலும் நாட்டிற்குப் பல நன்மைகள் செய்திருந்தான். அதற்காகப் பாளையப்பட்டுக்களை முறையாக அடக்கிவைத்திருந்தான். அவன் காலத்திலிருந்த கொங்கு நாட்டுப் பாளையப்பட்டுக்கள் பழனி, ஆய்க்குடி, இரட்டையம்பாடி, இடையகோட்டை, தளி, ஊற்றுக்குழி, புரவிபாளையம், இராமப்பட்டணம், மைவாடி, நெகமம், நாமக்கல், தாரமங்கலம், மண்ணிமை, முதலியன. மற்றவர்களிலே சேந்தமங்கலம் இராமச்சந்திர நாய்க்கனும், தாரமங்கலம் கட்டிமுதலியார்களும் செல்வாக்குப்படைத்தவர்கள். அவர்கள் நாமக்கல்லிலும், தாரமங்கலத்திலும் சிறந்த திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள்.

திருமலை நாய்க்கன் காலத்தில் அடியிற்கண்ட கோட்டைகள் பழுதுபார்க்கப்பட்டு இராணுவத்தலங்களாக மாற்றப்பட்டன.

திண்டுக்கல், தாராபுரம், கோயமுத்தூர், டணாய்க்கன் கோட்டை, சத்தியமங்கலம், அந்தியூர், ஈரோடு, காங்கயம், விஜயமங்கலம், கரூர், நாமக்கல், சேந்தமங்கலம், சேலம், ஓமலூர், சங்ககிரி, சாம்பள்ளி, ஆற்றூர், பரமத்தி, அரவக்



திருப்பேரூர் — முருகக்கடவுள்
மயில் - வாகனம்
கனகசபை



திருப்பேரூர் — வீரபத்திரமூர்த்தி
கனகசபை



திருப்பேரூர்ச்சிற்பம் — யாளியேற்றம்



திருப்பேரூர் — புலிவேட்டை
கனகசபை

குறிச்சி; மோகனூர் என்பன. இக்கோட்டைகள் எல்லாம், கொங்கு நாட்டில் உள்ளவையே.

மற்றும், அரசியலுக்காக அமைச்சன், தளவாய், பிரதானி, இராயசம், கணக்கு, தளுதிபதி முதலிய உத்தியோகங்களை ஏற்படுத்தியிருந்தான். நியாய விசாரணை கல்வித்திட்டம் இவைகளை ஒழுங்குபடுத்தினான். அரசசபையில் குமரகுருபர சுவாமிகள் முதலிய பல பெரும்புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தார்கள்.

மேலும் அவன் கணக்கற்ற திருப்பணி வேலைகளையும், மண்டபங்களையும் கட்டி வைத்தான். புது மண்டபம், மஹால், முதலியவைகள் இன்றைக்கும் அதிசயிக்கத்தக்க முறையிலிருக்கின்றன. அவனுடைய தளவாய் இராமப்பையன் திருச்செங்கோட்டில் திருப்பணிகளைச் செய்வித்தான். கொங்குநாட்டில் சம்பந்தச்சக்கரையைச் சிறையில் அடைத்துப் பிறகு விடுதலை செய்தான். பழனியில் ஆண்டவர் கோவிலில் அதுவரை வழிபாடுசெய்துவந்த சித்தர் பரம்பரைப்பண்டாரத்திடம் பிரசாதம் வாங்க மறுத்து ஆதி சைவர்களைப் பூசைக்கு ஏற்படுத்தினான். திருமலை நாய்க்கன் கல்வெட்டுக்கள் திருமுருகன் பூண்டி (1642), ஈரோடு (1655), கண்ணுடிப்புத்தூர் (1655), திருச்செங்கோடு (1659) முதலிய இடங்களில் இருக்கின்றன.

## 24. மைசூர் வளர்ச்சி (1578—1704).

தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பிறகு இராஜ உடையார் இராயனுக்குக் கப்பம் கட்டுதலை நிறுத்திவிட்டான். சீரங்கப்பட்டணத்தில் பிரதிநிதியாக இருந்த திருமலை இராயன் தலைக்காட்டுக்குச் சென்றபோது அங்கே இறந்தான். சமயம்பார்த்து இராஜ உடையார் சீரங்கப்பட்டணத்துச் சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டான். உடனே சுற்றுப் பக்கத்திலிருந்த தலைவர்களை எல்லாரையும் அடக்கித் தன்னுடைய இராச்சியத்தைப் பெருக்கிக்கொண்டான். 1617-ல் இராஜ உடையார்

இறந்துபோக அவனுடைய பேரன் பட்டத்திற்குவந்து அடுத்த குறுநில மன்னனான ஜெகதேவ ராயனுடைய பிரதேசங்களைச் சேர்த்துக்கொண்டான். 1637-ல் அவன் சந்ததியின்றி இறக்க அவன் தாயாதியான கண்டீரவநரச ராஜன் பட்டத்திற்கு வந்தான். கண்டீரவநரசராஜன் மிகுந்த திறமைசாலி. முகம்மதியர்கள் தன் நாட்டின்பேரில் படையெடுத்துவர அவர்களை விரட்டிஅடித்துவிட்டான். பிறகு மதுரையின்மீது படையெடுத்துத் தணாய்க்கன்கோட்டை, சத்தியமங்கலம், ஹொசூர், முதலியவைகளைப் பிடித்துக்கொண்டான். தான் வெற்றியடைந்ததனால் வந்த வருவாயிலிருந்து சீரங்கப்பட்டணக் கோட்டையைப் பலப்படுத்தியும், கோயில்களுக்குத் தானங்கள் செய்தும் செலவழித்தான். ஒரு தங்கசாலையும் வைத்துத் தன் பெயரால் பணங்களை வார்ப்படம் செய்தான். அவன் வார்த்த பணங்கள் தான் அந்த நாட்டில் செலாவணியாயிற்று. இவ்வாறு கண்டீரவன் பிடித்த இடங்கள் 1641-ல் கெட்டி முதலியாரின் பிரதேசங்களும், 1652-ல் பெண்ணாகரம், தருமபுரி, தெங்கணிக் கோட்டை முதலியவைகளும், 1653-ல் சத்தியமங்கலம், ஹொசூர் முதலியவைகளுமாம். அவன் 1659-ல் குழந்தையின்றி இறந்தான். அவனுக்குப்பின் கெம்பதேவன் (1659—1672) என்கிற தொட்ட தேவனும், பிறகு சிக்கதேவனும் (1672—1704) பட்டத்திற்கு வந்தார்கள். இவர்கள் இருவரும் திறமை வாய்ந்தவர்கள். இவர்கள்காலத்தில் மைசூர் மிகவும் முன்னேற்றம் அடைந்தது.

தொட்ட தேவராசன் பட்டத்திற்கு வந்ததும் மீண்டும் மதுரைக்கும், மைசூருக்கும் யுத்தம் நடந்தது. மதுரையில் திருமலை நாய்க்கன் மகன் சொக்கநாத நாய்க்கன் பட்டத்திற்கு வந்திருந்தான். அதற்குள்ளாக தஞ்சை நாய்க்கனைச்சிவாஜியின் தமையன் ஏகோஜி விரட்டியடித்துத் தானே சிம்மாசனம் ஏறியிருந்தான். அப்போது சொக்கநாத நாய்க்கனும், ஏகோஜியும், செஞ்சிக்கோட்டை நாய்க்கனும் ஒன்றுகூடி மைசூர்



சத்தியமங்கலம் கோட்டை — வானி ஆறு



பாரியூர் சிவாலயம் — கோபி

தொட்ட தேவராயனுடன் யுத்தத்திற்குச் சென்றார்கள். அந்த யுத்தம் 1672-ல் ஈரோட்டில் நடந்தது. ஈரோட்டுப் போர் மிகக் கடூரமாக நடைபெற்று இறுதியில் மைசூர் தொட்டதேவ ராயன் வெற்றியடைந்தான். மதுரை நாயக்கன் ஓடிவிட்டான். இந்த யுத்தத்தை நடத்தும்படி தூண்டிவிட்ட சீரங்கன் இக் கேரிக்கு ஓடிவிட்டான். கொங்கு நாட்டில் ஈரோடும், தாரா புரமும், நாயக்கனிடமிருந்தும், ஓமலூர் கெட்டி முதலியாரிட மிருந்தும் பிடுங்கிக்கொள்ளப்பட்டன. தொட்டதேவராயன் 1672-ல் இறந்தான்.

அவனுக்குப் பின்வந்த சிக்கதேவராசனும், திறமைசாலி தான். அவன் 1672-ல் பட்டத்திற்கு வந்து 1704 வரையிலும் ஆண்டான். அந்தக்காலத்திலிருந்த அரசர்களில் சிவாஜியைத் தவிர மற்ற எல்லா அரசர்களிலும் சிக்கதேவராசனே சிறந்த வன். நாட்டில் வருமானங்களை ஒழுங்குபடுத்திப் பொக்கிஷங் களைப் பெருக்கினான். கூடிய மட்டும் முகலாயரிடம் முட்டிக் கொள்ளாமல் தனித்தேயிருந்தான். மராட்டியரிடமும் அவன் செல்லவில்லை. தன்னுடைய நாட்டைப் பெருக்குவதற்காக பெங்களூரை விலைக்கு வாங்கினான். 1658-ல் கொங்கு நாட்டில் தருமபுரி, ஓமலூர், பரமத்தி முதலிய ஊர்களைப் பிடித்துக் கொண்டான். அவன் 1704-ல் இறக்கும்போது, சேலம், கோய முத்தூர் இரண்டுமே அவன் கைக்கு வந்துவிட்டன. பொக்கி ஷத்தில் நவகோடி நாராயணன் என்று சொல்லும்படி நிரம்பப் பணமும் சேர்த்து வைத்திருந்தான்.

அவனுக்குப் பிறகு கண்டீரவன் என்ற ஒரு ஊமை 1713 வரைக்கும், பிறகு அவன் மகன் தொட்ட கிருஷ்ணன், 1731 வரைக்கும் ஆண்டார்கள். அப்போது நேர் சந்ததி அழிந்து விட்டது. தளவாய்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களை சிம்மா சனத்தில் ஏற்றினார்கள்.

நாயக்கர்கள் வசத்தில் சுமார் ஒன்றரை நூற்றாண்டு வரை யில் (1529—1678) இருந்த கொங்குநாடு ஈரோட்டுபோருக்குப்

பிறகு மைசூரார் வசம் சேர்ந்துவிட்டது. அந்தக்காலத்திலிருந்த கொங்கு நாட்டின் நிலைமையைப் பின்னுல் விவரமாகக் கூறுவோம். 1678-முதல் 1704-வரையில் மைசூர் முன்னேற்ற நாளில், கொங்கு நாடு மைசூர் வசத்திற்குச் சென்ற பிறகு அதன் ஆட்சி முறையும் மாறிவிட்டது. பாளையப்பட்டு முறை தளர்ச்சியடைந்து நேரடி ஆட்சி புகுத்தப்பட்டது. நாட்டை மைசூரார் அனுப்பிய காவல் தலைவர்களே பரிபாலித்தார்கள். தொட்டதேவராசன் சிக்கதேவராசன் காலங்களில் கல்வெட்டுக்கள் நிரம்ப இல்லை. ஆனுல் கன்னடிய அதிகாரிகள், சிறப்பாகக் கிராமாதிகாரிகளும் படைத்தலைவர்களுமே கொங்கு நாட்டைக் காக்க நியமிக்கப்பட்டார்கள். கன்னடமொழியும், குடியேற்றமும் பெருகிற்று. ஆலய பரிபாலனம் முன்னிருந்தபடியே இருந்தது. தானதருமங்கள் மிகவாகச் செய்யப்படவில்லை.

## 25. மதுரையின் வீழ்ச்சி (1659—1736)

திருமலை நாய்க்கனுக்குப் பிறகு மதுரையில் ஆண்ட நாய்க்கர்கள் பலமற்றவர்களாயிருந்தார்கள். திருமலை நாய்க்கன் 1659- பிப்ரவரியில் இறந்தான். அவனுடைய மகன் முத்து அளகாத்திரி நாய்க்கன் பட்டத்திற்கு வந்தான். அவன் 1659 முதல் 1662 வரையில்தான் அரசாண்டான். உடனே தன்னுடைய கோட்டைகளை யெல்லாம் பழுதுபார்த்து எந்தப் படையெடுப்பையும் தடுப்பதற்குத் தயாராயிருந்தான். ஆனுல் மூன்று ஆண்டுகளுக்குள் இறந்துவிட்டான்.

### சோக்கநாத நாய்க்கன் (1662—1682)

இவன் 16-வது வயதிலேயே பட்டம் பெற்ருன். திருச்சியிலே ஒரு அரண்மனை கட்டினுன். அப்போது முகம்மதியர்களை வெல்லுவதற்குச் செஞ்சிக்கு ஒரு சேனையை அனுப்பினுன். அது பயன்படவில்லை. பிறகு தானுகவே சென்று வெற்றியடைந்தான். ஆனுல் முகம்மதியர்கள் அடிக்கடி படையெடுத்துக்கொண்டே யிருந்தார்கள். தஞ்சை நாய்க்கர்கள்



ஈரோடு சிவன் கோயில்



மருதமலை — முருகர் ஆலயம்

பெண்கொடுக்க மறுத்ததைக் காரணமாகக்கொண்டு அவர்கள் மேல் போர்புரிந்து தஞ்சையைப் பிடித்தான். தஞ்சை வம்சத்தார்கள் சிறைப்படுவதற்கஞ்சி மாதர் உள்பட அக்கினியில் பிரவேசித்தார்கள். ஆகையினால் படையெடுப்பு பயனில்லாமல் போய்விட்டது. அப்போது மராட்டிய ஏகோஜி தஞ்சையைப் பிடித்துக்கொண்டான். பின்னர் மைசூர்ச் சிக்கதேவராசன் கொங்குநாட்டின்மீது படையெடுத்து வந்தான். அப்போது ஈரோட்டில் பெரும் போர்நடந்து சொக்கநாத நாய்க்கன் தோற்றுப்போனான். இது முன்னமே கூறப்பட்டது. ஆகவே சொக்கநாத நாய்க்கனுடைய ஆட்சி நாட்டிற்கு யாதொரு நன்மையும் செய்யவில்லை.

### ரங்கவீரப்ப நாய்க்கன் *(1682—1689)*

இவன் 15-வது வயதில் பட்டத்திற்கு வந்தான். நாடெங்கும் கலகங்கள் ஏற்பட்டன. அவைகளை அடக்கமுடியவில்லை. நாடும் சுருங்கிவிட்டது. அவனும் பெரியம்மை வந்து இறந்துவிட்டான்.

### இராணி மங்கம்மாள் *(1689—1704)*

இந்தராணி மிகச்சிறந்தவள். பெரும் புகழ் பெற்றவள். சொக்கநாதனுடைய மனைவியாகவும், வீரப்பனுக்குத் தாயுமாக இருந்தவள். வீரப்பனுடைய மகன் விஜயரங்க சொக்கநாதன் குழந்தையாக இருந்தபடியால் அவனுக்காகத்தான் ஆண்டு வந்தாள். குழந்தைக்குப் பதினாறு ஆண்டு வரும் வரையில் தானே அரசாண்டாள். மங்கம்மாள் கணக்கற்ற தரும தானங்களைச் செய்து மக்களுக்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தாள். அவளுடைய இறுதிக்காலத்தில் பல துன்பங்கள் நேரிட்டன.

### விஜயரங்க நாய்க்கன் *(1704—1731)*

இந்த நாய்க்கனும் தானதருமங்களில் ஈடுபட்டவன். ஆனால் நாடு மிகவும் குறுகிவிட்டது. 1731-ல் அவன் சந்ததியின்றி இறந்துபோனான்.

### இராணி மீனாட்சியம்மாள் *(1731—1736)*

இவள் ஒரு குழந்தையை சுவீகாரம் எடுத்துக்கொண்டு அவனுக்குப் பதிலாக நாட்டை ஆண்டாள். இதற்குள் கர்நாடக நவாபின் படைத்தலைவன் திருச்சியைப் பிடித்து மீனாட்சியம்மாளைச் சிறைப்படுத்தினான். அவள் மானம் பொறுக்கமாட்டாமல் தற்கொலை புரிந்துகொண்டாள். அவளுடன் மதுரை நாய்க்கர் வம்சம் அழிவுற்றது.

மதுரையின்வீழ்ச்சிக்காலத்திலே, திருமலை நாய்க்கன்காலத்தில் பரிபாலனம் செய்யப்பட்டுவந்த கொங்குநாடு நாய்க்கர் கையிலிருந்து பிடுங்கப்பட்டு மைசூர் வசத்திற்குச் சென்று விட்டது. ஆற்றல் குறைந்த மன்னனான சொக்கநாத நாய்க்கன் காலத்தில் அது போய்விட்டது. அதாவது ஈரோட்டுச் சண்டைக்குப் பிறகு கொங்குநாடு முழுதும் மைசூர் வசம் போய்விட்டது.

## 26. நாய்க்கர் ஆட்சியில் அரசாங்கம் (1530—1780)

மதுரை நாய்க்கர்களுடைய ஆட்சியிலே கொங்குநாடு ஒன்றரை நூற்றாண்டுகளுக்குக் குறையாமல் இருந்ததென்று அறிவோம். பலதடவைகளில் அந்நாட்டின் வழியாகச் சேனைகள் செல்லுவதும், வருவதும், போர்கள் புரிந்து நாட்டின் பகுதிகளை நாசம் செய்து வந்ததும் அறிந்தோம். இருந்தாலும் பொதுவாக நாடு செழிப்பாகத்தான் இருந்தது. அதற்குக் காரணம் என்னவென்றால் விசுவநாத நாய்க்கனுடைய அமைச்சர் அரியநாத முதலியார் அமைத்து வைத்த அரசியல்முறை தான். அந்த முறையையே பின்னால் வந்தவர்கள் பின்பற்றினார்கள். அந்த முறை நாட்டின் குடிகளுக்கு ஓரளவு பாதுகாப்பைத்தந்து கொண்டிருந்தது. ஆகவே அந்த முறையை ஓரளவு விவரமாக எழுதுவோம்.

## 1. நாயக்கனும் அமைச்சர்களும்

மதுரைக்குக் காவலனாக நியமிக்கப்பட்ட நாயக்கன் கர்த்தன் என்றும் அழைக்கப்பட்டான். அவன் பேரரசனாகிய இராயனுக்குப் பிரதிநிதியாக ஆண்டகாலத்திலும், பின்னர் சுயேச்சையாக ஆண்டகாலத்திலும், அதே பட்டப் பிருதுக்களைத் தான் வைத்திருந்தான். அவனுக்குதவிபுரிய அமைச்சர்கள் இருந்தார்கள். அரசியலில் துணை புரிவதற்காக ஐந்து உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். அவர்களில் தளவாய் என்பவன் போர்க்காலங்களில் சேனாதிபதியாகவும், மற்றக்காலங்களில் இராணுவப்பயிற்சித் தலைவனாகவும், வெளி விவகாரங்களைக் குறித்து மதிகூறுபவனாகவும் அலுவல் செய்து வந்தான். 2-வது உத்தியோகஸ்தனான பிரதானி என்பவன் அரசாங்கத்தினுடைய நிதிகளை கவனித்து வந்தான். வரவு செலவுகளைப் பொறுத்து அவனே திட்டங்கள் வகுப்பான். 3-வது இராயசம் என்பவன் இராஜாங்கத்தின் ஆட்சிமுறைகளைப்பற்றி கவனிப்பவன். 4-வது கணக்கன் அரசாங்கத்தின் வரவு செலவு கணக்குகளெல்லாம் ஒழுங்குடன் எழுதிவைப்பவன். 5-வது தானாபதி வெளிநாட்டு விவகாரங்களை நன்கு அறிந்து அரசனுக்குத் தெரிவிப்பவன். இந்த ஐந்துபேர் கொண்ட குழுதான் அரசாங்கத்திற்கு அடிப்படையான ஆட்சி ஆலோசனைக்குழு ஆகும். இவர்கள் அரசனால் நியமிக்கப் படுவார்கள். தகுந்த ஆட்களைத் தெரிந்த பிறகுதான் அந்த நியமனம் செய்யப்படும். சாதாரணமாக இவர்கள் கூறும் ஆலோசனையையே அரசன் ஏற்றுக்கொண்டு ஆணைகள் பிறப்பிப்பான்.

## 2. ஆட்சியின் தன்மை

நாயக்கர்களின் ஆட்சி வெளிப்பார்வைக்கு யதேச்சாதிகாரம்போலத் தோன்றும். உண்மையில் அது யதேச்சாதிகாரம் அல்ல. நாயக்கன் தன் மனம் போனபடி எதையும் செய்ய மாட்டான். எந்தக் காரியத்தைத் தொடங்கினபோதிலும்

அமைச்சர்களை அழைத்து வைத்துக்கொண்டு அவருடைய ஆலோசனையின் பேரில்தான் முடிவு செய்வான். அமைச்சர்களும் தங்கள் இஷ்டப்படி ஆலோசனை சொல்லமாட்டார்கள். பொதுமக்களுடைய நோக்கத்தை அறிந்தே ஆலோசனை கூறுவார்கள். ஆகவே அரசனை எதேச்சாதிகாரி யென்று கூறமுடியாது. தற்காலத்தில் இருக்கும் தேர்தல் முறை ஒன்று இல்லையென்பதைத் தவிர அரசியலானது பொதுவாக மக்கள் நோக்கத்தையும், நன்மையைய்மே கருதி செய்யப்பட்டது.

அரசன் வருமானம், இராணுவம் இந்த இரண்டை மட்டும் கவனித்து வந்தான் என்று சொல்லுவது சரியல்ல. நாட்டில் அமைதி,ஒழுக்கம்,வாணிபத்துறையில்நேர்மை, கைத்தொழிலில் நேர்மை முதலியவைகளையும் கவனித்து வந்தான். இந்த வகையில் முகத்தல் அளவை, எடுத்தல் அளவை, நாணய ஒழுங்கு முதலியவைகளையும் கவனித்து அளவைகளை அவ்வப்போது தணிக்கை செய்தும் வந்தான்.

### 3. நாட்டுப்பிரிவுகளும் ஆட்சியும்

நாடுமுழுமையும் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டது. ஒன்று நேரடிப்பார்வை. இரண்டு பாளையப்பட்டுத்திட்டம். நேரடிப்பார்வை மிக்க குறைவு. மதுரை, திருச்சி முதலிய பெரிய பட்டணங்களும், அவற்றைச் சுற்றியிருந்த ஓரளவு வட்டங்களுமே நேரடிப்பார்வையில் இருந்தன. இவைகளை ஆள்வதற்குக் காவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பாளையப்பட்டுக்கள்தான் பெரும்பான்மையான பிரதேசங்கள். முன்னமே சொன்னபடி நாய்க்கனுக்கு இராணுவத்தில் உதவி புரிந்த படைத்தலைவர்களும், விசுவாசம் காட்டின தமிழ் நாட்டுத் தலைவர்களுமே பாளையக்காரர்கள் ஆக்கப்பட்டார்கள். இவர்கள் உள்நாட்டு உரிமைகள் முழுதும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அரசனுக்குச் செலுத்தும் உதவியானது கப்பமும், இராணுவமுமேயாகும். இப்படிப்பட்ட பாளையக்காரர்கள் ஆதியில் 72-பேர் இருந்தார்கள். வரவர இந்த எண்

குறுகியும் ஏறியும் வந்தன. இவ்விரண்டைத் தவிர சேதுபதி, தொண்டைமான் முதலிய குறுநில மன்னர்களும் இருந்தார்கள். திருமலை நாய்க்கன், சொக்கநாத நாய்க்கன் இவர்களுக்குப் பிறகு இந்த ஆட்சிமுறை குறுகிக்கொண்டே வந்தது.

### 4. நீதிநெறி

பெரிய நகரங்களுள் நீதிமன்றங்கள் இருந்தன. அவைகளுக்கு நீதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் குற்ற விசாரணைசெய்துத் தண்டனைவிதிப்பார்கள். நாட்டுப்புறங்களிலே கிராம அதிகாரிகளே நீதிபதிகள். அவர்கள் ஓரளவுமட்டும் விசாரணை செய்வார்கள். பெரியக்குற்றங்களைப் பாளையக்காரனோ அல்லது காவலனோ விசாரித்துத் தீர்ப்பு சொல்லுவான். குற்றங்கள் நேரிடாமல் இருக்கும் வண்ணம் காவல்காரர்கள் நியமிக்கப்பட்டார்கள். கடன் வழக்குகளில் சிறைதண்டனையும் இருந்தது. குற்றங்களில் சிறைவாசம், உறுப்புக்குறைவு, மரணதண்டனை முதலியவைகள் விதிக்கப்பட்டன. சிறைவாசம் கோட்டைகளுக்குள் கட்டப்பட்டிருந்த அறைகளுக்குள் பூட்டிவைத்தல் ஆகும். உறுப்புக் குறைப்பு அங்கசேதங்களாகும். சாதாரணமாக திருட்டு, கொள்ளை இவைகளுக்கு மாறுகை, மாறுகால் வாங்கிவிடுவதுண்டு. பெரும் குற்றங்களுக்கு தலைவாங்குதல் வழக்கம். வாளினால் தலையை வெட்டிவிடுதல் அக்காலத்து மரணதண்டனை.

### 5. பொருள்வருவாய்

கிராமங்களிலே வரிவசூலிப்பவன் மணியக்காரன் என்ற கிராமத்தலைவன். அவன் வசூலித்ததை மாகாணத்தலைவனுக்குக்கொண்டுபோய்ச் செலுத்துவான். பாளையப்பட்டுக்களில் பாளையக்காரனுக்கு அவ்வரி செலுத்தப்படும். நேரடி வசூல் நிலங்களில் வசூலாகும் தொகை நேராக அரசனுடைய பொக்கிஷத்துக்குப் போய்ச்சேரும். பாளையப்பட்டுக்களில் வசூலாகும் தொகையில் அரசனுக்குரிய பங்குதான் பொக்கிஷத்துக்குப் போய்ச்சேரும். நிலத்தில் ஏற்படும் வரிவிகிதம் அதில் கிடைக்

கும் விளைவில் செலவு போகப் பாக்கி நிற்கும் தானியத்தில் சரி பகுதியாகும். சாதாரணமாகத் தானியமே வரியாகக் கொடுக்கப்படும். இதுதான் சுலபமானதும் நியாயமானதுமாக இருந்தது. நேரடி நிலங்களில் பாதிதானியம் அரசாங்கத்திற்குச் சேரும். பாளையப்பட்டுக்களிலோ ஆறில் ஒருபங்குதான் சேரும். நிலத்தீர்வைகள்போக மற்றத்தீர்வைகளும் உண்டு. முத்துச்சலாபம், சங்குவரி, பாசிவரி என்ற மீன்வரி இவைகளிலிருந்து பாண்டிநாட்டிற்கு மிகுந்த வருமானம் உண்டு. இவைகளைத்தவிர நெசவுவரி, உணவுவரி, ஏற்றுமதி, இறக்குமதி வரிகள், சுங்கவரிகள் முதலியன உண்டு. கோயில் சொத்துக்களுக்கு வரிகள் இல்லை.

## 6. செலவு திட்டம்

அரசாங்கத்திற்கு வரும் வருவாய்கள் சில குறிப்பிட்ட செலவுகளுக்குப் பயன்படுத்தப்படும். அரசனுடைய அரண்மனைச்செலவு, அலுவலாளர்களுடைய ஊதியச் செலவு, இவ்விரண்டிற்கும் முதலில் செலவழிக்கப்படும். பிறகு அரண்மனை, கோட்டை, கொத்தளங்கள், அணைகள், வாய்க்கால்கள், பாதைகள், குளங்கள் முதலிய பொது ஆக்கவேலைகளுக்குச் செலவு செய்யப்படும். இவைகளிலே கோட்டை கொத்தளங்கள் நாட்டின் பாதுகாப்பிற்காக அடிக்கடி பழுதுபார்க்கப்படும். அணைகள், வாய்க்கால்கள், ஊருணிகள், கண்மாய்கள், நீர்ப்பாய்ச்சல் வசதிகளுக்காக செப்பனிடப்படும். ஊர்களிலே கேணிகள், கிணறுகள் முதலியவைகளும் தோண்டப்படும். பெரும் பாதைகள் போடுவதோடு சாலைமரங்களும் வைக்கப்படும். உதாரணமாக "மங்கம்மாள் சாலை" என்பது மிகப் புகழ்பெற்ற ஒரு பெரும்பாதை. அது மதுரையிலிருந்து திருச்சிவரையில் போடப்பட்டிருந்தது. நாயக்கர் காலங்களில் போடப்பட்ட மற்றொருசாலை மதுரையிலிருந்து சிவில்லிபுத்தூருக்குச் செல்வது. அதில் 8 மைலுக்கு ஒவ்வொரு மண்டபம் கட்டப்பட்டிருந்தது. பிரயாணிகளுக்குத் தங்க

வசதிகள் அவைகளில் செய்யப்பட்டிருந்தன. அம்மண்டபங்களுக்கு மானியங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இவ்விரு வகைகளில் செலவழிக்கப்பட்டது போகப் பொது அறங்களுக்கு மீதியிருக்கும் வருவாய்ப் பயன்படுத்தப்பட்டது. பொது அறங்களிலே சமயநிலையங்களும், சமயங்கள் அல்லாத நிலையங்களும் இருந்தன. சமயநிலையங்களிலே, கோயில்கள், மடங்கள் முதலியன அடங்கும். பழைய கோயில்களைக்கட்டுவதும், புதிய கோயில்களை நிர்மாணிப்பதும் சிறந்த செயல்களாகக் கொள்ளப்பட்டன. மதுரை, அழகர்கோயில், சீவில்லிபுத்தூர், கிருஷ்ணபுரம், திருநெல்வேலி முதலிய கோயில்களில் கணக்கற்ற திருப்பணிகள் நாயக்கர் காலங்களில் செய்யப்பட்டன. கொங்குநாட்டில் திருப்பேரூரில் பேர்போன கனகசபையானது நாயக்கன் பிரதிநிதியான அழகாத்திரி நாயக்கனால் கட்டப்பட்டது. அதனுடைய சிற்பப்பெருமைகளை மெச்சாதவர்கள் இல்லை. அதுபோலவே தாடிக்கொம்பில் அம்மன் சந்நிதியில் சிறந்த வேலைப்பாடுகள் கொண்ட சிற்பத்தூண்கள் நாயக்கர்களால் இயற்றப்பட்டன. கோபுரங்களும், மண்டபங்களும் வேண்டிய இடங்களிலெல்லாம் கட்டப்பட்டன. மேலும் ஆலயங்களிலே நித்திய நைமித்தியங்களுக்கு அவசியமான மானியங்கள் விடப்பட்டன.

இவ்வாறு சமய நிலையங்களுக்கே அன்றிக் கணக்கற்ற பொது அறங்களுக்கும் உதவிகள் செய்யப்பட்டன. அவசியமான இடங்களில் க்ஷேத்திர யாத்திரை செய்யும் மக்களுக்கும் தங்கு வசதிகளான சத்திரங்கள் கட்டப்பட்டன. அவைகளில் ஒன்று மதுரையில்உள்ள மங்கம்மாள் சத்திரம் ஆகும். மேலும் புனித க்ஷேத்திரங்களாகிய இராமேசுரம், திருப்பரங்குன்றம் முதலிய 14 பாடல்பெற்ற தலங்களுக்கும், 18 மங்களா சாசனம் பெற்ற தலங்களுக்கும் செல்லும் வழிகளிலே சத்திரங்களும், தேசாந்திரிகளுக்கு உணவுப்பொருள்கள் தருவதற்கு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இந்த வகையில் அரசியல்

வருமானம் தாராளமாகச் செலவழிக்கப்பட்டது. மீதி வருவாய் அரசாங்கச் சரக்கறைகளில் சேமித்து வைக்கப்படும். வரிகளாக வரும் தானியங்களைச் சேமிக்க கோயில்களில் பெரிய களஞ்சியங்களும், அரண்மனைகளில் உயர்ந்தகளஞ்சியங்களும் கட்டப்பட்டன. சாதாரணமாகச் செலவுகளுக்கும் தானியங்களே தரப்பட்டன.

## 7. சமூக வாழ்க்கை

பொதுவாக போர்க்காலங்களில் துன்பமும், சமாதானக் காலங்களில் அமைதியும், ஒழுங்கும் நிலைபெறுவது இயல்பு. நாயக்கர்களின் அரசாங்கத்திலும் அவ்வாருகவே இருந்தது. ஆனால் போர்க்காலங்களில் சேனைகள் செல்லும் பாதைகள் போர் நடக்கும் இடங்கள், இவைகளைத்தவிர மற்ற இடங்களில் அமைதியே நிலைபெற்று இருக்கும். சண்டைபிடிக்கும் போது உழவர்களையும், கைத்தொழிலாளர்களையும் சேனைகள் துன்புறுத்துகிறதில்லை. துலுக்கர் கலாபங்களில்மட்டும் அவர்களும் துன்புறுத்தப்பட்டார்கள். வரி சரியாய்க் கொடுத்துவிட்டால் பாளையக்காரர்களுடைய தொந்தரவும் இருக்காது.

வியாபாரமும், கைத்தொழிலும், எப்போதும்போல் நடந்தன. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வியாபாரச் சரக்குகள் பொதி மாடுகளின் மீது கொண்டுபோகப்பட்டன. பஞ்சநிலை ஏற்பட்ட பிரதேசங்களுக்கு வியாபாரிகளே ஆறுதல் அளித்தார்கள். மழைக் குறைவினால் பஞ்சங்கள் ஏற்பட்ட போது நாட்டுப்புறத்தார் மிகவும் துன்பப்படுவார்கள். அரசியலார் அவர்களுக்கு உதவிகள் புரிந்ததாகத் தெரியவில்லை. அக்காலத்தில் கைத்தொழில் வேலைகள் மிகக்குறைவு. அவைகளுக்கு அரசாங்கத்தார் உதவி பெரிதும் இல்லை. கட்டட வேலை, சிற்ப வேலை, விக்கிரக வார்ப்படம் முதலியவைகளுக்கு மட்டும் அரசாங்க ஆதரவு இருந்தது. நாயக்கர்கள் காலத்தில் நெசவுத் தொழிலுக்கு ஆதரவு சுமாராக இருந்தது. அக்காலத்தில் வடநாட்டிலிருந்து பட்டுநூல்காரர் என்கிற செளராஷ்டிரர்களைக்

குடியேற்றி வைத்தார்கள். நெசவுத் தொழிலுக்குக் காட்டிய சலுகையினால்தான் மதுரை, பரமக்குடி, திண்டுக்கல், திருச்சி முதலிய இடங்களில் சௌராஷ்டிரர்கள் விருத்தியடைந்திருக்கிறார்கள். தொழில்கள் எல்லாம் குடிசைத் தொழில்களாகவே இருந்தன. சோழர்கள் காலத்தில் இருந்தாற்போல வியாபாரக் குழுக்களும், கைத்தொழில் குழுக்களும் நாயக்கர் காலங்களில் மறைந்துவிட்டன.

சமய வாழ்க்கையில் அரசாங்கத்தார் அதிகமான ஈடுபாடு வைத்துக்கொள்ளவில்லை. சமய நிலையங்களைப் பாதுகாப்பதும் தங்களைப்பொருத்தமட்டில் ஆசார சீலர்களாகவும் நாயக்கர்கள் இருந்தார்கள். நாயக்க மன்னர்கள் பொதுவாக வைணவக் குடும்பத்தினராய் இருந்தாலும், சைவத்தையும் மிகுதியாகப் பரிபாலித்தார்கள். இரு சமயக் கோயில்களுக்கும் நிரம்ப திருப்பணிசெய்திருக்கிறார்கள். முகம்மதிய, கிறிஸ்தவ சமயங்களையும் நாயக்கர்கள் வெறுக்கவேயில்லை. அவர்கள் காலங்களில், பள்ளி வாசல்களும், மாதாக்கோயில்களும் கட்டப்பட்டன. நாட்டு மக்களும் பொதுவாகப் பண்டைக்கொள்கைகளையே அனுசரித்துவந்தார்கள். எளிதில் மதமாற்றம் செய்யார்கள். தாழ்ந்த மக்களைத்தவிர ஏனையோர்கள் கூடியமட்டிலும் வைதீகமாகவே இருந்தார்கள். அரசாங்கத் தலைவர்களும் செல்வவான்களுமே யன்றிப் பொதுமக்களும், சாதாரண குடிகளும் அடிக்கடி யாத்திரைகள் செய்து நல்ல நாள்களில் கோயில்களுக்குத் தான தருமங்களைச்செய்து வந்தார்கள். புனித நாள்களையும் சமயாச்சாரியார்களின் திருநாள்களையும் கொண்டாடிச் சமய சின்னங்களையும் அணிந்துவந்தார்கள்.

சமயச்சீர்திருத்தங்கள் சாதாரணமாக நடைபெற்றதில்லை. அரசர்களும் கூடியமட்டில் பழைய முறைகளையே அனுசரித்து வந்தார்கள். ஆனால் ஒவ்வொரு காலத்தில் சமூகச் சண்டைகள் ஏற்பட்டால் அவைகளைத் தீர்ப்பதற்கு சட்ட திட்டங்களை மாற்றிச் சில தீர்ப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு

கொடுத்த தீர்ப்புகளுக்குக் கல்வெட்டுக்களில் உதாரணங்கள் இருக்கின்றன. (விவரம் வேண்டுமாயின் Mythic Society Journal V. 21, 22 காண்க.)

அக்காலத்துக் கல்வி நிலைமை சிறிது உயர்ந்ததாகவே இருந்தது. மதுரையில் மட்டும், 10,000 மாணவர்கள் பள்ளிகளில் படித்தார்களாம். நாட்டுப்புறங்களில் படிப்பு குறைவுதான். திண்ணைப் பள்ளிக்கூடங்கள்தான் அங்கே இருந்தன. அவர்களுக்கு அரசியல் உதவியில்லை. சமயப்படிப்பு வாசிப்பதற்குப் பிராமணர்களுக்கு மானியங்கள் தரப்பட்டன. தமிழும், வடமொழியுமேயன்றி, தெலுங்கு கவிகளும் ஆதரவு அளிக்கப்பட்டார்கள். மடாலயங்களும் அடிக்கடி உதவப்பட்டன. பொதுவாகக் கட்டடங்கள், பாய்ச்சல் வசதிகள், இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் முதலியவைகளின் செழிப்பான நிலைகளை ஆராயும் போது நாயக்கர் காலங்களில் மக்கள் பொதுவாகப்பண்பாட்டில் ஓரளவு சிறந்தவர்களாவும் கல்வி அறிவு உள்ளவர்களாகவும் இருந்தார்கள் என்று கூறலாம்.

## 27. வெளிநாட்டுச் செய்திகள் (1650—1757)

நாயக்க மன்னர்களுடைய ஆட்சி நாளுக்குநாள் குறைவுபட்டதைப்பற்றி மேலே கூறினோம். இதற்குக் காரணம் மைசூர் உடையார்களின் ஆக்கிரமிப்பு என்று அறிந்தோம். சிக்கதேவராசனும், தொட்டதேவராசனும் மைசூரை மிகுதியாக முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்ததற்கு முயன்றதையும் கூறினோம். இந்த அரசர்கள் தெற்கே கொங்குநாட்டை ஆக்கிரமித்துக்கொண்டதன்றி, வடக்கிலும் கிழக்கிலும் தங்கள் எல்லைகளைப் பெருக்குவதற்கு முயன்றார்கள். அந்த முறையில் அவர்கள் மராட்டியர், முகம்மதியர், முதலானவர்களோடு முட்டிக்கொள்ளவேண்டிவந்தது. இந்த விவகாரங்கள் கொங்கு நாட்டைப் பொறுத்தமட்டில் விரிக்கவேண்டிய அவசியமில்லாதவைகள். மராட்டியரும், முகம்மதியரும், கொங்கு

நாட்டை எட்டிப் பார்க்கவேயில்லை. ஆகவே, அவர்களைப்பற்றி எழுதவேண்டிய அவசியம் இல்லையல்லவா? இருந்தாலும் நாட்டு வரலாற்றை ஒழுங்குபட அறியவேண்டுமாயின் வெளி விவகாரங்களைக் குறித்து ஒரு சிறிது கூறவும் வேண்டும்.

டெல்லியில் அவுரங்கசீப் (1653–1707) சுல்தானாக வந்த பிறகு தென்னாடுகள் முழுவதையும் பிடித்துத் தன் கொற்றக் குடையின் கீழ் ஆளவேண்டுமென்ற பேராசைகொண்டு தக்ஷிணத்தின்மீது படையெடுத்தான். தக்ஷிணத்தில் பீஜப்பூர் கோல்கொண்டா என்ற இரண்டு முகம்மதிய இராச்சியங்கள் சுயேச்சையாயிருந்தன. அவுரங்கசீப் முதலில் பீஜப்பூரை 1687-ல் பிடித்தான். பிறகு கோல்கொண்டாவை 1688-ல் பிடித்தான். அந்த இரண்டு இராச்சியங்களில் தமிழ் வட்டங்களும் சேர்ந்திருந்தன. அவைகளை ஆள்வதற்காக 1690-ல் காசிம்கான் என்ற ஒரு படைத்தலைவனை நியமித்தான். அவன் மராட்டியர்களோடு போராடினபோது 1698-ல் கொல்லப்பட்டான். அவனுக்குப்பிறகு ஜுல்பிகர்கான் என்றவன் படைத்தலைவன் ஆனான். அவுரங்கசீப் 1707-ல் இறந்தான். அவன்தான் இறுதிப்பெரு முகலாயன். அவனுக்குப்பின் அவன் மக்களுள் பட்டத்திற்காகச் சண்டை தொடங்கியது. அது முதல் கொண்டு மொகலாயப் பேரரசு சீர்குலையத் தொடங்கிற்று. தென்னாடுகளை ஆண்டுவந்த ஜுல்பிகர் வடக்கே செல்ல சாதத்துல்லாகான் ஆர்க்காட்டையும், சிராவையும் ஆட்சிபுரிந்து வந்தான். வடக்கே டெல்லியில் பட்டத்தைப் பற்றிக் கலவரங்கள் ஏற்பட்டிருந்த காலத்தில் அங்கே அமைச்சனாக இருந்த நிஜாம்உல்முல்க் என்ற தலைவன் தெற்கே வந்து தக்ஷிணத்துப் பிரதேசங்களுக்கெல்லாம் தலைவனாகிப் பின்னால் சுயேச்சை மன்னனானான். அவன் ஐதராபாத்தைத் தலைநகராக்கித் தனக்குக்கீழ் ஆர்க்காட்டு நவாப்பைப் பிரதிநிதியாக்கிக் கொண்டு அரசாண்டான். நிஜாம் தனக்கு என ஒரு வம்சத்தைத்தொடக்கியும், ஆர்க்காட்டு நவாப்பு வேறொரு வம்சத்

தைத்தொடக்கியும் ஆண்டார்கள். இந்த முகம்மதியத் தலைவர்கள் சுற்றிலுமிருந்த நாடுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். அந்தச் சமயத்தில் மைசூரில் மிகப்பெருமையோடு ஆண்டுகொண்டிருந்த சிக்கதேவராசன் இறந்தான். அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த கண்டீரவன் ஒரு செவிட்டு ஊமை. அவனுடைய தளவாய் பசுவராசன் வடக்கேயிருந்த சில நாடுகளைப் பிடித்தான். அவனுக்குப்பின் வந்த தொட்டகிருஷ்ண ராசன் காலத்தில் முகம்மதியர்களுடைய அக்கிரமங்கள் அதிகமாயின. நான்கு நவாப்புகள் சேர்ந்து மைசூர்மீது படையெடுத்தார்கள். மைசூர் தளவாயினால் போராடமுடியவில்லை. ஒரு கோடிரூபாய் கொடுத்து அப்பகைவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டான். மீண்டும் வந்த படை எடுப்புகளில் ஏற்பட்ட செலவுகளினால் தாங்கமுடியாமற்போய் மைசூர் தளவாய் மகதிகெம்பே கவுடனை செயித்து அவன் சேர்த்து வைத்திருந்த பொக்கிஷம் முழுவதையும் மைசூரோடு சேர்த்துக்கொண்டான். ஆனால் நிஜாம் அரசன் மீண்டும் படையெடுத்துக் காவேரிக்கரைமட்டும் உள்ள நாடுகளைத் தன் ஆட்சிக்குள் உட்படுத்திக்கொண்டான். அப்போது அதாவது 1714-ல் பாராமஹால் என்ற சேலத்துப்பகுதி முகம்மதியர் வசம் ஆய்விட்டது. அதன் பிறகு தொட்டகிருஷ்ண ராஜன் சந்ததியின்றி இறந்தான். இராச்சியத்தின் மேல்பார்வை முற்றும் தளவாய்களின் கையிலிருந்தது. தொட்டகிருஷ்ணன் வலியற்றவனாக யிருந்தபோதிலும் கொடுமைகள் செய்வதில் குறைந்தவனல்ல. விலங்குகளுக்காக ஒரு தர்மசாலை ஏற்படுத்திக் கணக்கில்லாமல் செலவழித்தான். மனிதர்கள் என்றால் அவனுக்குப்பிடிக்காது. தன்னைப்போல் சந்தோஷமான அரசன் உலகில் இல்லையென்று நினைத்தான் என்றாலும் வெளி விவகாரம் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. அப்படிப்பட்டவன் இறந்ததே நாட்டுக்கு க்ஷேமம் அல்லவா?

## 28. தளவாய்கள் ஆட்சி (1704—1761)

மைசூர் இராச்சியத்தின் சரித்திரம் விசித்திரமானது. அரசர்கள் பலவந்தர்களாய் இருந்தகாலம் எல்லாம் அரசாட்சி செழிப்பாக இருக்கும். அரசர்கள் பலவீனமாய்ப் போகும் போது அமைச்சர்கள் தலைநிமிர்ந்திருப்பார்கள். அரசர் களுடைய பெயர்களை வைத்துக்கொண்டு உண்மையில் தாங்களே ஆட்சி செய்வார்கள். அரசனுடைய போக்கு தங்களுக்குப் பிடிக்காமல் போனால் அவ்வரசனை நீக்கிவிட்டு வேறொருவனை நியமிப்பார்கள். சில வேளைகளில் தளவாய்க் களுக்குள்ளேயே போராட்டம் வந்துவிடும். கை வலுத்தவன் ஆட்சிபுரியத் தொடங்குவான். இந்த வகையில் மைசூர் ஆட்சி நடந்துவந்தது. அரசன் செல்வாக்கில்லாமல் போன போதிலும் அமைச்சர்கள் நாட்டைப் பாதுகாத்து வந்தது வியப்பே ஆகும். இந்தப் பொறுப்பில்லாத நிலையில் மைசூர் ராச்சியம் அழியாமல் தொடர்ந்து வந்தது இறைவன் செயலே என்று கூறலாம். இந்த முறையில் 18-வது நூற்றாண்டின் முற்பகுதியில் மைசூர் அரசு தளவாய் இராச்சியமாக இருந்தது.

சிக்கதேவராசன் இறந்த காலமாகிய 1704-முதல் கொண்டே தளவாய் இராச்சியம் தொடங்கிற்று என கூற வேண்டும். அது முதல் 60-ஆண்டுகள்வரை அந்த ஆட்சி நடைபெற்று வந்தது. முன்னமே சொன்னபடி ஊமை அரசனும் (கண்டீரவன்) வெறிபிடித்த அரசனும் (தொட்ட கிருஷ்ணன்) ஆட்சிசெய்த காலத்தில் தளவாய்களாக கண்டீர வன், பசவராஜன் என்பவர்கள் ஆட்சியிலிருந்தார்கள். மற்ற அமைச்சர்கள் சர்வாதிகாரியும், பிரதானியுமாவார்கள். இவர் களே அரசனையும் சிம்மாசனம் ஏற்றிவைப்பவர்கள். தொட்ட கிருஷ்ணன் இறந்த காலத்தில் தேவராஜன், தளவாய் ஆகவும், நஞ்சராஜன் பிரதானியாகவும் இருந்தார்கள். இவர்கள் சேர்ந்து, இறந்த அரசனுக்குத் தாயாதியான சாமராஜன் என்ற ஒரு இளவரசனைச் சிம்மாசனம் ஏற்றினார்கள். அவ்வர

சன் சிறிது சக்தி காட்டத்தொடங்கினதே அவனைச் சிறைப் பிடித்து மற்றொரு ஐந்து ஆண்டுக்குழந்தையைச் சிம்மாசனத்தில் ஏற்றினார்கள்.

இந்தச்சமயம் பார்த்து ஆர்க்காட்டு நவாபு சீரங்கப் பட்டணத்தின்மீது படையெடுத்து வந்தான். தளவாய் தேவ ராஜன் வெகு தந்திரத்துடன் போர்புரிந்து நவாப்பை தோற்கடித்துத் துரத்திவிட்டான்.

1746-ல் அமைச்சன் நஞ்சராஜன் கொங்கு நாட்டில் புகுந்து தாராபுரத்துப் பாளையக்காரன் மீது படையெடுத்துச் சென்றான். அந்தச் சமயம்பார்த்து நிஜாம் தன் மகனை மைசூர் மீது அனுப்பினான். அங்கே மைசூர் சேனைகள் இல்லாததினால் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றன.

தெற்கே படையெடுத்துச் சென்ற நஞ்சராஜன் தாராபுரத்தைப்பிடித்துப் பாளையக்காரனை அடக்கிவிட்டு மைசூருக்கு வந்தவுடன் தன்னுடைய நிலைமையைப் பெருக்கிக்கொள்ள நினைத்துத் தன்மகளை பொம்மை அரசனுக்கு மணம் செய்து வைத்தான்.

பிறகு 1749-ல் தேவனஹல்லி என்ற கோட்டையை முற்றுகை இடச் சென்றான். அம்முற்றுகை ஒன்பது மாத காலம் நடைபெற்றது. அந்த முற்றுகையின்போது ஹைதர் என்ற ஒரு முசுலிம் வாலிபன் வெகு சாமர்த்தியமாகப் போர் புரிந்தான். அதைக்கண்ட நஞ்சராஜன் அவ்வாலிபனுக்கு ஒரு உத்தியோகம் கொடுத்து 200 காலாட்களுக்கும், 50 குதிரைகளுக்கும் தலைவனாக்கினான். இவனே பிற்காலத்தில் படிப்படியாய் உயர்ந்து மைசூர் இராச்சியத்திற்கே தலைமை வகிக்கும் பெருமை அடைந்தான்.

இதற்குள் 1748-ல் நிஜாம் இறந்தான். அவனுடைய குடும்பத்தாருக்குள் பட்டத்திற்காகத் தாயாதிச்சண்டை ஏற்பட்டது. அந்தச் சண்டையின் விளைவாக ஆர்க்காட்டிலும்

சச்சரவுகள் ஏற்பட்டன. அந்தக் காலத்தில் சென்னையில் ஆங்கிலர்களும், புதுச்சேரியில் பிரஞ்சுக்காரர்களும் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வியாபாரம் செய்துகொண்டிருந்தார்கள். ஆங்கிலர்களிலும், பிரஞ்சுக்காரர்களிலும், சில பேராசை பிடித்த ஆட்கள் இருந்தார்கள். இவர்கள் உள்நாட்டுச் சச்சரவுகளில் தலையிட்டுத் தங்கள் நிலைமைகளை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்ற பேராசைகொண்டார்கள். ஐதராபாத்திலும், ஆர்க்காட்டிலும் நடந்த சண்டைகளிலே ஆங்கிலேயர்கள் ஒருபக்கமும், பிரஞ்சுக்காரர்கள் ஒரு பக்கமும் சேர்ந்துகொண்டு போராடினார்கள். ஆர்க்காட்டு விவாதத்தில் ஆங்கிலர்கள் முகம்மதுஅலிக்காகவும், பிரஞ்சுக்காரர்கள் சந்தாசாயபுக்காகவும் உதவிபுரிந்து கொண்டிருந்தார்கள். 1751-ல் முகம்மதுஅலி மைசூர் தளவாயிடம் உதவி கோரினான். தளவாய் தேவராஜனுக்கு அதில் சம்மதமில்லை. ஆனால் அவனுடைய தம்பி நஞ்சராஜனுக்கு உதவி செய்யவேண்டுமென்ற விருப்பமிருந்தது. அதன் மூலமாகப் பெருத்த லாபம் கிடைக்குமென்று அவன் நம்பினான். அந்தக்காலத்தில் கிளைவ் என்ற ஆங்கிலன் ஆர்க்காட்டு முற்றுகையில் வெற்றியடைந்தான். சீரங்கப்பட்டணத்திலிருந்து நஞ்சராஜன் தலைமையில் ஒரு சேனை அனுப்பப்பட்டது. அதனுடன் ஐதரும் சென்றான். சந்தாசாகிப் கொலைசெய்யப்பட்டான். ஒப்பந்தப்படி நஞ்சராஜன் திருச்சிராப்பள்ளியைத் தரும்படி கேட்டான். முகம்மதுஅலியால் அதைக்கொடுக்க முடியவில்லை. நஞ்சராஜன் திருச்சியிலிருந்தபோது மைசூருக்கு வரும்படி அழைக்கப்பட்டான். ஏனெனில் நைஜாமுக்குத் தரவேண்டியக் கப்பத்தொகை தேவராஜன் கொடுக்காமற் போனதினால் ஐதராபாத்திலிருந்து ஒரு சேனை புறப்பட்டு வந்து சீரங்கப்பட்டணத்தை முற்றுகையிடத் தொடங்கிற்று. நஞ்சராஜன் விரைவில் வர முடியாமற்போக, கோயிற் சொத்துக்களை யெல்லாம் எடுத்து விற்பனை செய்து நிஜாமுக்குக் கொடுக்கவேண்டி வந்தது.

இந்தச் சமயத்தில் ஐதர் திண்டுக்கல்லில் பவுஜதாரனாக நியமிக்கப்பட்டான். அவன் கண்டேராவ் என்பவனோடு சேர்ந்துகொண்டு தென்னாடுகளையெல்லாம் கொள்ளையடித்தான். 1756-ல் மைசூர் அரசனுக்கு 27 வயது ஆயிற்று. அப்போது அவன் சிலருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு அமைச்சர்களை நீக்கித் தானே ஆள நினைத்தான். இந்தச் சதி ஆலோசனை தெரிந்துவிட்டது. நஞ்சராஜன் உடனே அரண்மனையைச் சூழ்ந்துகொண்டு அரசனுடைய சிம்மாசனத்துக்கு முன்னர் சதி செய்தவர்களின் மூக்குகளையும், காதுகளையும் வெட்டிவிட்டான். இந்தக் கொடிய செயல்களைக்கண்ட தேவராஜன் சத்தியமங்கலத்திற்குச் சென்று அங்கே வசிக்கத் தொடங்கினான். இந்த சமயத்தைப் பார்த்து மராட்டியர்கள் மைசூரின்மீது படையெடுத்தார்கள். கையிலிருந்த தொகையைக்கொடுத்து அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இதற்குள் ஐதர் மதுரையைத் தாக்க முயன்றான். ஆனால் அது ஜெயிக்க முடியவில்லை. தலைநகரில் படைகளுக்குச் சம்பளம் பாக்கிநின்ற வகையில் கலவரங்கள் ஏற்பட்டன. இந்தச்செய்தியைக்கேட்ட ஐதர் சத்தியமங்கலத்திற்குச்சென்று தேவராஜனை சீரங்கப்பட்டணத்துக்கு அனுப்பினான். வயது முதிர்ந்த தேவராஜன் சீரங்கப்பட்டணம் சென்றதில் இறந்துபோனான். ஆகவே நஞ்சராஜனால் யாதொன்றும் செய்ய முடியாமற்போயிற்று. அப்போது அவன் ஐதரையும், கண்டேராவையும் அழைத்து நெருக்கடியைச் சமாளிக்கும்படி வேண்டிக்கொண்டான். அப்போது ஐதர் அரண்மனையிலிருந்த யானை உள்பட எல்லாப்பொருள்களையும் விற்றுச் சேனைகளுக்குக்கொடுக்க வேண்டிய பாக்கியைக் கொடுத்தான். ஆனால் கலகம் செய்த தலைவர்களைச் சிறைபிடித்து அவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். ஹரிசிங்கு என்ற மற்றொரு தலைவன் அவிநாசியில் பாளையம் இறங்கியிருந்த செய்தியைக் கேட்டு அவனைச் சூழ்ந்துகொண்டு அடித்துக் கொன்றுவிட்டான். தான் கொள்ளையடித்த சொத்துக்களில், 3 பீரங்கிகளையும், 15 குதிரைகளை மட்டும் அரசனுக்குக் கொடுத்து

விட்டு பாக்கியைத் தானே வைத்துக்கொண்டான். கோயமுத்தூர் வட்டத்து வரிகளையும் தானே வசூலித்துக்கொண்டான். இந்த வகையில் ஐதர் தன்னுடைய நிலைமையைத்திரப்படுத்திக் கொண்டான்.

1759-ல் மராட்டியர்கள் மறுபடியும் படையெடுத்து வந்தார்கள். மூன்று மாத காலம் அவர்களோடு சச்சரவுகள் நடந்ததில் இறுதியில் சமாதானம் ஏற்பட்டது. அதன்படி 32 லட்சம் ரூபாய் மராட்டியருக்கு மைசூர் கொடுக்கவேண்டி வந்தது. கண்டேராவும் ஐதரும் உத்தியோகஸ்தர்களையும், பணக்காரர்களையும் வற்புறுத்தி வசூலித்து 16 லட்சம் கொடுத்தார்கள். மற்றதை செலுத்துவதற்கு ஐதர் உத்திரவாதம் கொடுத்தான். ஐதர் தலைநகருக்குத் திரும்பிவரும்போது பத்தே ஐதர் பகதூர் என்ற பட்டம் பெற்றான். நஞ்சராஜன் அவனுக்கு வரவேற்பும் தந்தான்.

ஐதர் மைசூர் வந்ததும் 20 ஆண்டுகளாக அமைச்சராய் பாடுபட்ட நஞ்சராஜனை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு, மூன்று லட்சம் பெறுமான ஜாகீர் ஒன்றை அவனுக்குத் தந்துவிட்டு அவனுக்குப் பதிலாகத் தன் நண்பன் கண்டேராவைப் பிரதானி ஆக்கிக்கொண்டான். நஞ்சராஜன் குடும்பத்தோடு தன் ஜாகீருக்குச்சென்று ஓய்வு எடுத்துக்கொண்டான்.

பிறகு புதுச்சேரி பிரஞ்சுக்காரர்கள் ஐதரோடு ஒப்பந்தம் செய்து ஆங்கிலரை ஆர்க்காட்டிலிருந்து துரத்திவிடுவதற்காக முயற்சித்தார்கள்.

1760-ல் செய்த ஒப்பந்தப்படி ஐதர் பிரஞ்சுக்காரருக்கு உதவியாக பெருஞ்சேனை கொண்டுவர வேண்டுமென்றும், ஆங்கிலேயரைத் துரத்தினதும் திருச்சி, மதுரை, திருநெல்வேலி வட்டங்களை மைசூருக்கு விட்டுவிடவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அதன்படி ஐதர் ஆர்க்காட்டுக்குச் செல்லும் வழியிலிருந்த பாராமஹால் என்ற 12 கோட்டைப் பிரதேசங்களையும் (சேல

வட்டம்) ஆனைக்கல் கோட்டையையும் வசப்படுத்திக்கொண்டு திருவாதியில் ஒரு வெற்றியும் அடைந்தான். அதற்குள் ஐதருக்கு எதிராக தலைநகரில் ஒரு சதி நடந்தது. சீரங்கப்பட்டணத்திலிருந்த அரசனும் அரச வம்சமும் முந்தி நஞ்சராசனிடம் அடிமைகளாய் இருந்தது போலவே ஐதரிடம் அடிமைகளாய் இருப்பதுகண்டு தங்களை விடுவித்துக்கொள்ள கண்டேராவோடு சதி செய்தார்கள். ஐதருடைய சேனைகள் ஆர்க்காட்டுக்குச் சென்றிருக்கும் சமயம்பார்த்துத் தலைநகரில் வேட்டு எழுப்பினார்கள். அரசனுக்கு அனுகூலமாய் எதிர்பார்த்த மராட்டியர் வரவில்லை.

ஐதர் இரவிலே ஆற்றில் நீந்தி மறுகரையடைந்து ஆனைக்கல்லுக்கு ஓடினான். ஒரே நாளில் 75 மைல் சவாரிசெய்து பெங்களூர் அடைந்தான். உடனே பிரஞ்சுக்காரர்களுக்காகச் சென்றிருந்தசேனைகளுக்குத் தகவல் கொடுத்தான். அரசனுக்காகவந்து கொண்டிருந்த மராட்டியருக்கு லஞ்சம் கொடுத்துத் திருப்பி அனுப்பிவிட்டான். இதற்குள் வடக்கேபானிப்பட்டுயுத்தத்தில் மராட்டியர் தோற்றுவிட்டார்கள் (1761). நஞ்சன்குடியில் நடந்த போரில் ஐதர் தோற்றுவிட்டான். அரசன் நஞ்சராஜனிடம் ஓடி மன்னிப்புக் கேட்டு தனக்கு உதவி புரியும்படி வேண்டினான். தான் தளவாயாகவும், நஞ்சராஜன் சர்வாதிகாரியாகவும் இருக்கும்படி கேட்டுக்கொண்டான். சூது அறியாத நஞ்சராஜன் அதற்கு ஒப்புக்கொண்டான். உடனே பொய்க்கடிதங்கள் தயார் செய்து கண்டேராவ் வசத்தில் அவை சிக்கும்படி செய்தான். கண்டேராவ் அதுகண்டு பயந்துகொண்டிருக்கையில், ஐதர் காவிரியைத்தாண்டி சீரங்கப்பட்டணத்தில் புகுந்து கண்டேராவின் சேனைகளைத் தோற்கடித்தான். உடனே கண்டேராவைப் பிடித்து ஒரு இரும்புக்கூட்டில் அடைத்துவைத்தான். கண்டேராவ் அதிலேயே இறந்து போனான்.

1761 ஜூன் மாதம் முதல் ஐதர் மைசூருடைய முழு அதிகாரமும் வகிக்கத் தொடங்கினான். மைசூர் அரசன் பேருக்கு மாத்திரம் அரசனாயிருந்தான். பல வகைகளிலும் தன்னுடைய

நிலைமையை உறுதிப்படுத்திக்கொண்டு ஐதர் மைசூர் ராச்சியத்தையும் பெருக்கி வைத்துக்கொண்டான். ஆகவே 1761 முதல் தளவாய்கள் ஆட்சிதொலைந்தது. ஐதரே மைசூருக்கு உண்மைத் தலைவன் ஆனான்.

இவ்வாறு தளவாய்களின் ஆட்சி அரை நூற்றாண்டு வரையில் மைசூரில் ஏற்பட்டிருக்க அந்தக்காலம் முழுவதும் கொங்கு நாடு அவ்வாட்சியின் கீழேயே இருந்ததுஎன்றுஅறியவேண்டும். தளவாய்கள் மிகவும் பேராசை உற்றவர்கள். அரசன் வெறும் பொம்மையாக வைக்கப்பட்டிருந்தான். அரசனை வைப்பதும் நீக்குவதும்கூட தளவாய்களின் அதிகாரத்தில் இருந்தது. இருந்தாலும் அந்த பொம்மை அரசர்களை முழுவதுமாக நீக்கிவிடவுமில்லை. இவ்விதமான இராஜ தந்திரம் சில இடங்களில் சில காலங்களில் நடைபெறுவதுண்டு. மராட்டிய ராச்சியத்தில் அதே மாதிரியாக சிவாஜியின் சந்ததியார்கள் பெயருக்கு அரசர்களாகவும் பேஷ்வாக்கள் முழு அதிகாரம் செலுத்திக் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். சமீப காலத்தில் நேபாளத்தில் அரசன் சக்தியற்றவனாகவும் ராணாக்கள் முழு அதிகாரிகளாகவும் இருந்தார்கள். ஜப்பானிலும் பல நூற்றாண்டுகள் இந்த நிலைமையே இருந்ததென அறிவோம். அதுபோலவே மைசூரிலும் தளவாய்கள் ஆட்சியிருந்தது.

மைசூர் தளவாய்கள் அநேகமாக அரசவம்சத்திற்கு உறவினர்கள் ஆகவே இருந்தார்கள். பசுவராஜன், தேவராஜன், நஞ்சராஜன் இவர்களே மிகுந்த அதிகாரம்செலுத்திவந்தவர்கள். இவர்கள் ஆட்சியில் சமாதானம் என்பது இருக்கவில்லை. சண்டை சச்சரவு, குழப்பம், படையெடுப்பு முதலியவைகளே நிரம்பியிருந்தன. பேராசையினால் அக்கம்பக்கத்து நாடுகளைப் பிடிப்பதும் கொள்ளையடிப்பதுமே சிறந்த தொழிலாக அவர்கள் கைக்கொண்டிருந்தார்கள். அந்தக்காலம் மிகக்கொடிய காலம். தக்ஷிணத்தில் சுற்றுப்பக்கங்களிலும் அமைதி என்பது இல்லாத காலம். வடமேற்கே மராட்டியர்கள் நெருங்கிக்கொண்டே

இருந்தார்கள். கொள்ளையடித்து பணம் சேர்ப்பதே அவர்கள் தொழில். வடகிழக்கே நிஜாம் இராச்சியத்தில் ஏற்பட்ட பட்டத்துச்சண்டைகள் மக்களை அலைக்கழித்தன. கிழக்கே ஆர்க்காட்டு பிரதேசங்களில் முகம்மதியர்களில் ஆதிக்கச் சண்டை நடந்து கொண்டிருந்தது. இந்த சந்தர்ப்பங்களை ஒட்டி ஆங்கிலர்களும் பிரஞ்சுக்காரர்களும் எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபமென்று நாட்டின் பகுதிகளை ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். இந்த நிலைமையில் தளவாய்களின் நிலைமை கடினமாகத்தான் இருந்தது. ஆகவே அந்தக்காலத்தை அசுர காலமென்றே சொல்ல வேண்டும்.

அப்படிப்பட்ட காலத்தில் தளவாய்களின் கீழே கொங்கு நாடு இருந்தால் அதன் பரிதாபமான நிலையைப்பற்றிக் கூறவும் வேண்டுமா? நாட்டில் அடிக்கடி பகைவர்களுடைய சேனைகள் வருவதும் போவதுமாகவே இருந்தன. படைகள் வருகின்றன என்றால் நாட்டு மக்கள் வீடுகளுக்குள் ஒளிந்துகொள்வார்கள். கிராமத்தில் கொள்ளைகள் அடிக்கடி நேரிடும். அப்போது குடிகள் காடுகளுக்கு ஓடிவிடுவார்கள். நிலங்களில் விதை விதைத்தால் அதன் விளைவு வீட்டிற்கு வரும்மட்டும் அது தம்முடையதென்று உழவன் சொல்லமாட்டான். பயிராகவிளையும் போது சேனையில் வரும் குதிரைகளுக்கு அறுத்துச் செல்லப் படும். தானியமாக விளைந்துவிட்டால் படை வீரர்களுக்கு உணவுக்காகக் கொண்டுசெல்லப்படும்.

இவ்வாறு இருக்கையில் நாட்டில் எவ்வாறு அமைதியும், அபிவிருத்தியும் ஏற்படும்? மேலும் படையெடுப்புக்காலங்களில் எல்லாம் கொடுமையான வரி வசூல் விதிக்கப்படும். வரிக்குத் தகுந்த சகாயம் எதுவும் நாட்டுமக்களுக்கு ஏற்படாது. பாண்டியர், சோழர் காலத்தில் ஏற்பட்டிருந்த நீர்ப்பாய்ச்சல் வசதிகளோ ஆலயத்திருப்பணிகளோ தளவாய்கள் காலத்தில் ஏற்பட்டிருக்கவில்லை. இந்த நிலைமை, அரை நூற்றாண்டாக, இருந்

திருக்கப் பின்னர் ஐதர் வந்த பிறகும் அது செவ்வைப்பட்டதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி இனி எழுதுவோம்.

## 29. ஐதர் ஆதிக்கம் (1761—1766)

1761-ஜூன்மாதத்தில் ஐதருடைய அதிகார ஆக்கிரமிப்பு பூர்த்தியாயிற்று. அரசனை ஒரு பொம்மைபோல் வைத்து அவனுக்குக் கீழ்ப்படிவதாகப் போலிப்பேச்சை எப்போதாவது ஒரு தடவை பேசிவிட்டு முழு அதிகாரத்தையும் தானே நடத்தி வந்தான். அவனுக்கு உள்நாட்டில் எதிரிகள் ஒருவருமில்லை. வெளியே புதுச்சேரிப் பிரன்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டு அடங்கிவிட்டார்கள். சென்னை ஆங்கிலரும் அவர்களுக்குக் கீழ் இருந்த பொம்மை ஆர்க்காட்டு நவாப்புமட்டுமே இருந்தார்கள். வடகிழக்கே நிஜாம் ஆலி பட்டத்திற்கு வந்திருந்தான். மராட்டியர்கள் சிறிது அடங்கியிருந்தார்கள். மைசூரைச் சுற்றிச் சில சில்லறைப் பாளையக்காரர்கள்மட்டுமே தலைநீட்டிக்கொண்டிருந்தார்கள். ஐதர் அவர்களை அடக்கி அவர்களுடைய நாடுகளைத் தன் நாட்டோடு சேர்க்க முயன்றான்.

முதலில் நிஜாமிடம் மூன்று லட்சம் ரூபாய் கொடுத்து "சிரா" நவாப் என்ற பட்டம் வகித்துக்கொண்டான். வடக்கே சென்று முராரிராவினுடைய நாடுகளைக் கைப்பற்றினான். வடமேற்கே பெத்தனூரில் (Bednore) ஒரு ராணி அரசாண்டு கொண்டிருந்தாள். அவள்மேல் தண்டெடுத்து அவளுடைய தலைநகரைக் கொள்ளையடித்துக் கோடிக்கணக்கான பணங்களைச் சேர்த்துக்கொண்டான். இராணியின் குடும்ப முழுவதையும் சிறைபிடித்து அவர்களை மதுகிரியில் அடைத்து வைத்தான். மேலும் அவ்வூரைத் தலைநகராக்கக் கருதி அதற்கு ஐதர் நகர் என்று பெயரும் வைத்தான். தன் பெயரால் நாணயங்களும் அடித்து மேற்குக்கரையில் ஒரு துறைமுகமும் கட்ட எண்ணினான்.

அவ்வூரில் அவன் ஒரு நாள் மலைச்சுரம் வந்து படுத்துக் கொண்டிருக்கையில், சில உத்தியோகத்தர்கள் இவனைக் கொலை செய்யச் சதிசெய்திருந்தார்கள். அது தெரிந்துவிட்டது. அந்த நாளே 300 உத்தியோகத்தர்களைத் தன் எதிரிலேயே தூக்கிலிட்டான். எதிர்ப்பு அடங்கியது.

இந்தச் சமயத்தில் சந்தாசாகிப் மகன் ராஜாசாகிப் இலங்கையிலிருந்து வந்து ஐதரிடம் சரணமடைந்தான். அவன் மூலமாகச் சைன்யச் சீர்த்திருத்தம் நடத்தப் பெற்றது. காலாட்களுக்கு ஒரேவிதமான உடுப்பும், பயிற்சியும் தரப் பட்டன. கொலுவு மண்டபத்தில் பலவித ஜோடனைகளும், சடங்குகளும் ஏற்படுத்தப்பட்டன. இந்த அரச கோலாகலங் களை எல்லாம் செய்து மிகவும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தான்.

அதன் பிறகு ஐதர் மராட்டியரோடு போருக்குச் சென்றதில் தோல்வியடைந்து திரும்பினான். அது கண்டு கிழக்கே கலகம் ஏற்பட அதை அடக்கிச் சிக்குபல்லாப்புரப் பாளையக் காரனைப்பிடித்து கோயமுத்தூர் சிறையில் அடைத்து வைத்தான்.

கண்ணனூர் அலிராஜாவின் தூண்டுதலின்பேரில் ஐதர் மலையாளத்தின்மீது படையெடுத்தான். வடபாகங்கள் எளிதில் கைப்பற்றப்பட்டன. கோழிக்கோட்டு சாமூரிராஜாவின் அரண் மனையை முற்றுகையிட்டான். மந்திரிகள் பிடிபட்டுச் சித்திர வதை செய்யப்பட்டார்கள். அது கண்டு தன் அரண்மனைக்குத் தீப்பற்றவைத்து, அரசன் தன் குடும்பத்தோடு மடிந்தான். பிறகு ஐதர் கொச்சி, பாலக்காடு முதலியவைகளைச் சேர்த்துக் கொண்டு கோயமுத்தூர் சென்றான். அவனில்லாதபோது கலகம் செய்த நாயகர்களில் 15000 பேரை மைசூருக்குக் கொண்டுபோனதில் 200 பேர் தவிர மற்றவர்கள் எல்லோருமே இறந்தார்கள்.

இதற்குள் மைசூர் பொம்மை அரசன் சிக்க கிருஷ்ணன் இறக்க அவன் மகன் நஞ்சராஜனை சிம்மாசனத்தில் அமர்த்தினுன் (1767). அவன் வயது 18. அப்புது மன்னன் அரசுக்கு வந்த சில நாளில் தனக்குக் கீழ்ப்படியாதது கண்டு அவனுக்குக் கொடுத்து வந்த மூன்று லக்ஷம் மான்யத்தொகையையும் நிறுத்தி அரண்மனைச் சொத்துக்களை யெல்லாம் ஐதர் எடுத்துக் கொண்டான். இந்தமுறையில் ஐதரின் யதேச்சாதிகாரப் பெருமை நாடுகள் எங்கும் பரவிற்று.

## 30. முதல் மைசூர் போர் (1767—1769)

பேராசை உள்ள இருவர் ஒரு இடத்தில் சேர்ந்தால் அவர்களுக்குள் சண்டை ஏற்படுவது உறுதி. அவர்களில் நாடு பிடிக்கவேண்டுமென்ற பேரவா உள்ளவர்கள் நெருங்கி விட்டால் ஒருவரையொருவர் அடித்துக்கொள்வது நிச்சயம். இன்னும் இரண்டுபேர் சேர்ந்துவிட்டால் பெருஞ் சண்டை ஏற்படுவது மிகவும் உறுதி. அதுபோல் தென்னுட்டு நிலைமை ஆகிவிட்டது. மைசூரைப் பெருக்க வேண்டுமென்று ஐதர் மார்தட்டிக்கொண்டு நின்ருன். புதிதாய் நாடுபிடிக்க வேண்டுமென்று எண்ணிவந்த ஆங்கிலர் தொடைதட்டிக் கொண்டு நின்ருர்கள். வடக்கே நின்றுகொண்டிருந்த மராட்டியர் தென்னுடுகளைப் பார்த்து நாக்கில் நீர் சுரந்தார்கள். மற்ருெரு திக்கில் சமயம் பார்த்துக்கொண்டிருந்த நிஜாமும் கூடியமட்டிலும் நாடுகவர எண்ணினுன். 1767-ல் இந்தக் குரோதக் கொள்கை கொண்ட நால்வர்கள் தென்னுட்டிலே யிருந்தால் போர் நடைபெருதா? அப்போது நடந்த போர்தான் முதல் மைசூர் போர் என்பது.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியும், நிஜாமலியும் 1766 செப்டம்பர் 12-ல் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதின்படி நிஜாம் கம்பெனிக்கு வடசர்க்கார் ஜில்லாக்களைக் கொடுப்பதென்றும் நிஜாமுக்கு வேண்டியபோது கம்பெனி

உதவிபுரியவேண்டும் என்றும், ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பலனாக மராட்டியர், நிஜாம், கம்பெனி என்ற மூவரும் சேர்ந்து ஐதர் பிரதேசங்களின் மீது தண்டெடுப்ப தென்று முடிவுகட்டினார்கள்.

1767-ல் மராட்டியர்கள் முதலில் படையெடுத்தார்கள். பல ஊர்களையும் பிடித்துக்கொண்டு அவர்கள் சேனை பாரா மகால் வரைக்கும் வந்துவிட்டது. ஐதரால் அதைத் தடுக்க முடியாமற்போக உடனே ஒப்பந்தம் செய்துகொண்டு 17½ (பதினேழரை) லட்சம் ரொக்கமாய்க் கொடுத்து மற்றொரு 17½ லட்சத்திற்கு கோலாரை அடகும் கொடுக்க மராட்டியர்கள் திரும்பி விட்டார்கள்.

பிறகு நிஜாம் புறப்பட்டான். கம்பெனித் துருப்புக்களும் கர்னல் ஸ்மித் தலைமையில் வந்துசேர்ந்தன. அந்த சந்தர்ப்பத் தில் ஐதர் நிஜாமுக்குப் பணம் கொடுத்து அவனைச் சரிபடுத்த முயன்றான். நிஜாம் தயங்குகிறதைப் பார்த்து சந்தேகப்பட்டு ஆங்கிலர்கள் ஒரு படையை அவனுக்குக் காவல் வைத்திருந் தார்கள்.

அதற்குள் சென்னையிலிருந்து 3000 துருப்புக்கள் பாரா மகாலை நோக்கி வந்தன. வாணியம்பாடி, திருப்பத்தூர், காவேரிப்பட்டணம் பிடிபட்டன. ஜூன்மீ 3உ கிருஷ்ணகிரி கோட்டை முற்றுகை இடப்பட்டது. அதற்குள் ஸ்மித் என்ற வன் பெங்களூரிலிருந்து வந்து தலைமை ஏற்றுக்கொண்டான். ஆகஸ்டு மாதத்தில் ஐதரும் நிஜாமும் சேர்ந்து கிருஷ்ணகிரி வழியாய் வந்தார்கள். 25உ காகங்கரையில் பாளையம் இறங்கி யிருந்த ஆங்கிலரை சூழ்ந்துகொண்டார்கள். திடீரென்று தாக்கி ஆங்கிலப் படைகளில் மூன்றில் ஒருபங்கை கொன்று விட்டு கால்நடைகளைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அன்று மாலையே ஐதர் காவிரிப்பட்டணம் வந்து மாக்கெயின் (Mckain) வசத்திலிருந்த சேனையைத் தாக்கினான். அது சரணம் அடைந்தது (ஆகஸ்டு 27).

அதற்குள் கர்னல் உட் என்றவன் திருச்சியிலிருந்து திருவண்ணாமலை வந்து கொண்டிருந்தான். கர்னல் ஸ்மித் சிங்காரப்பேட்டை செங்கம் வழியாகத் திருவண்ணாமலை சென்று கொண்டிருந்தான். ஐதர் அச்சேனையைத் தொடர்ந்து கொண்டே வந்தான். செங்கத்தில் நடந்தபோரில் ஐதர் தோல்வி யுற்றான். பிறகு ஸ்மித் திருவண்ணாமலைக்குச் (செப்டம்பர் 2) சென்றுபார்க்கையில் அங்கே உணவுப் பொருள்கள் கிடைக்கா மல் போகக் கிழக்கே திரும்பினான்.

அதற்குள் கர்னல் உட்டும் வந்து சேர்ந்துகொள்ள 26-ம்உ இரு படைகளுக்கும் சண்டை நடந்தது. ஐதர் தோற்றுப் போனான். நிஜாம் ஓடிப்போனான். தன்னுடைய படைகளுக்கு வேண்டிய உணவு கிடைக்காமற்போக சேனைகளை அடுத்துள்ள வேலூர், திருச்சி முதலிய இடங்களில் தங்கும்படி விட்டு ஸ்மித் சென்னை சென்றான்.

ஆங்கிலர் சும்மாயிருப்பதைப் பார்த்த ஐதர் நவம்பர் மாதத்தில் மீண்டும் புறப்பட்டான். 5-ம் தேதி திருப்பத்தூரை யும், 7-ம் தேதி வாணியம்பாடியையும் பிடித்துக்கொண்டு, 10-ம் தேதி ஆம்பூருக்கு வந்தான். ஆம்பூரில் காப்டன் கல்வெர்ட் வெகு வீரத்துடன் சண்டை பிடித்தான். மறுநாள் வாணியம்பாடியில் ஸமித் வந்து எதிர்த்தான். ஐதர் வாணி யம்பாடியை விட்டுச்செல்ல வேண்டி வந்தது.

இந்த சமயத்தில் பம்பாயிலிருந்து ஒரு ஆங்கிலப்படை மலபார்கரைக்கு வந்தது. நாயர்களும் கலகம் செய்தார்கள். ஆகவே ஐதர் தன் மகன் திப்புவின் மூலமாக பெருஞ்சேனையை மேற்கே அனுப்பிவிட்டான். நான்கு நாள்களுக்குள் நிஜாம் ஒரு சேனையை அனுப்பினான். திருவண்ணாமலையில் சண்டை நடந்தது. ஐதர் தோற்றுப்போய்ப் பின்வாங்கினான். பின்னர் 7-மாதங்கள் வரை ஐதர் வடக்கேயும், மேற்கேயும் சென்று அங்கே போர்புரிந்து கொண்டிருந்தான். ஆனால் ஆங்கிலரோ அந்த சமயத்தில் யாதொன்றும் செய்யாமல் வெறுமனே

இருந்துவிட்டார்கள். பிறகு கர்னல் ஸ்மித் காவிரிப்பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு நிஜாமை எதிர்க்கச்சென்ருன். அவன் ஒப்பந்தம் செய்துகொண்டு தன் நாட்டிற்குப் போய்விட்டான். 1768-ஜூன் மாதத்தில் ஆங்கிலப்படைகள், கிருஷ்ணகிரி முதலிய ஊர்களைப் பிடித்துக்கொண்டு ஹோசூர் வரைக்கும் சென்றன. அங்கே ஆங்கிலர்களுடன் முராரிராவ் சேர்ந்து கொண்டான். இதற்குள் கர்னல் உட், சேலத்தில் தெற்குப் பகுதிகளுக்குச் சென்று தர்மபுரி, சேலம், ஆத்தூர், சேந்தமங்கலம், நாமக்கல் கோட்டைகளைப் பிடித்தான். பிறகு நேராக ஈரோட்டு வழியாக கோயமுத்தூர் சென்று பாலக்காட்டில் புகுந்தான். ஆகஸ்டு 3-ம் தேதியில் திண்டுக்கல்லைப் பிடித்தான். பிறகு தோப்பூர் வழியாகக் கிருஷ்ணகிரிக்கு செப்டம்பர் 1-ம் தேதி போய் சேர்ந்தான். கர்னல் உட்டும், ஸ்மித்தும் மாலூரில் சந்தித்து ஐதரைத் தோற்கடிக்க நினைத்தார்கள். அப்பொழுதே போரிட்டிருந்தால் ஐதர் நசுக்கப்பட்டிருப்பான். ஆனால் ஐதர் அதை அறிந்து கொண்டு விலகிப்போய் சமாதானத்திற்கு வந்தான். ஆங்கிலர்கள் அதனைப் புறக்கணித்தார்கள். அதனால் வருத்தப்படவேண்டி வந்தது.

மீண்டும் யுத்தம் தொடங்கியது. உட்டும், ஸ்மித்தும் மீண்டும் போருக்குச் சென்றார்கள். ஹோசூர், பாகலூர் முதலிய இடங்களில் ஒருவருக்கொருவர் சமயம்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஐதருடைய சேனையும் தொந்தரவு செய்துகொண்டே யிருந்தது. நவம்பர் 20-ம் தேதி அறலேரி என்ற இடத்தில் தனியாக உட் (Wood) அகப்பட்டுக்கொண்டான். ஆங்கிலப்படை நசுக்கப்பட்டது. அதற்குள் ஒரு துணைப்படை வர ஐதர் விலகிக்கொண்டான்.

இந்த சமயம் பார்த்து ஐதர் பெரும் சேனையைத் திரட்டிக் கொண்டு கஜ்ஜலஅட்டிக் கணவாய் வழியாகத் தானே நேராகக் கிழக்கே சென்ருன். சேலவட்டத்தில் இருந்த எல்லா ஊர்களும் ஒன்றின் பின் ஒன்ருகப் பிடிபட்டன. பிறகு ஈரோடு,

கரூர், திண்டுக்கல், இவ்வூர்களை டிசம்பர் இறுதிக்குள் ஐதர் பிடித்துக்கொண்டான். பிறகு ஐதர் செய்த சாகசச் செயல் சரித்திரத்திலேயே புகழ்பெற்றது. தன்னுடைய சேனைகள் முழுதும் திரட்டிப் பாராமஹாலுக்கு அனுப்பினான்.

தனக்கென்று 6000 குதிரைகளும், 200 காலாட்களும், மாத்திரம் வைத்துக்கொண்டு 3 நாளில் 130 மைல் ஓடிச் சென்றான். மார்ச்சு 29-ம் தேதியன்று சென்னைக் கோட்டை வாயிலில் எதிர்த்து நின்றான்.

ஆங்கிலர் திண்டாடிப் போய்விட்டார்கள். ஐதர் விரும்பிய படி உடன்படிக்கை எழுதப்பட்டது. சிறைப்பட்டவர்களும் பிடிபட்ட இடங்களும், அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஐதர் வெற்றியுடன், தன் நகரம் திரும்பினான். அவனுடைய இராச்சியம் வடக்கே துங்கபத்திரையிலிருந்து தெற்கே திண்டுக்கல் வரைக்கும் எட்டிற்று.

இந்த யுத்தத்தில் கொங்கு நாடு இரண்டு பக்கத்துப் படைகளாலும் பல முறை தாக்கப்பட்டது. நாட்டு மக்கள் அடைந்த பீதியையும், நஷ்டத்தையும் பற்றிக் கூறவேண்டியதேயில்லை. இதனால் கொங்கு நாட்டிற்கு அமைதியோ நன்மையோ யாதொன்றும் ஏற்படவில்லை.

## 31. ஐதரின் இடைக்கால ஆட்சி (1769-1780.)

ஐதரின் முதல் போர் 1769-ல் முடிவடைய அடுத்த பதினொரு ஆண்டுகள் அவன் ஆங்கிலரிடம் சமாதானமாகவே இருந்தான். ஐதர் நிஜாமோடு ஒப்பந்தம் பேசுகையில் துங்கபத்திரை வரைக்கும் இருந்தநாடுகளை ஐதரே ஆளவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அதனை இப்பொழுது செயல்முறைக்குக்கொண்டுவர வேண்டுமென்று கேட்டான். மராட்டியரோடு நேரில் போர் செய்யவழியின்றி நாட்டுப் புறங்களை அழிக்கத் தொடங்கினான். மராட்டியர்கள் படையெடுத்து வந்து 1771-ல்

மேலேக்கோட்டைக்கருகில் ஐதரை முறியடித்துவிட்டார்கள். ஐதரும் திப்புவும் தலைநகருக்கு ஓடிவந்துவிட்டார்கள்.

1772 ஜூன் மாதத்தில் உடன்படிக்கைப்படி ஐதர் மராட்டியருக்கு 30 லட்சம் ரூபாய் கொடுத்தான்.

ஊர் திரும்பினதும் தன் அரசன் மீது சந்தேகப்பட்டு அவன் கழுத்தைப் பிசைந்து கொன்றுவிட்டு அவன் தம்பி சாமராஜனைப் பட்டத்தில் வைத்தான். உடனே செல்வவான்கள் எல்லாரிடமிருந்தும் கசக்கிப் பணத்தைக் கறந்தான்.

1772-ல் மாதவ ராவ் பேஷ்வா இறந்தான். அவன் மகன் கொல்லப்பட்டான். இந்த சமயம் பார்த்து ஐதர் தன் மகனை மராட்டியர் மீது போர்புரிய அனுப்பினன். தானே குடகின் மீது படையெடுத்துக் குடகர்களை வதைக்கத் தொடங்கினன். 700 தலைகள் வெட்டப்பட்ட பிறகு பரிதாபப்பட்டுக் கொலையை நிறுத்தினன். குடகு அரசனைப் பிடித்து சீரங்கப்பட்டணத்தில் சிறையிலிட்டான். உடனே மலைநாடுபுகுந்து, கோழிக்கோட்டைத்தன்வசப்படுத்தினன். வடக்கே சென்ற திப்பு வெற்றியுடன் திரும்பினன். 1774-ல் தன்னுடைய பழைய நாடு முழுவதையும் தன்வசப்படுத்திக் கொண்டான்.

இதற்குள் சாமராஜன் சந்ததியின்றி இறந்தான். அடுத்த வார்சு யாரென்று நியமிக்க ஒரு விளையாட்டுத் தந்திரம் செய்தான். எல்லா ஆண் குழந்தைகளையும் கொண்டுவரச்சொல்லி, பழம், தின்பண்டம், கருவிகள் எல்லாவற்றையும் பரப்பி, அக்குழந்தைகளை எடுக்கச் சொன்னன். ஒரு குழந்தை ஈட்டியையும் எலுமிச்சம்பழத்தையும் எடுத்தது. அதுதான் சரியான ராஜா என்று சொல்லி அவனுக்குப் பட்டம் கட்டினன்.

பிறகு பக்கத்துப் பாளையக்காரர்கள் மீது படையெடுத்து அவர்களைப் பணியச்செய்து குத்திமுராரி ராவைப்பிடித்து சிறையிலடைத்தான். அதுமுதல் மராட்டியர்களுக்கும் ஐதருக்கும் அடிக்கடி போர்கள் நடந்துகொண்டேயிருந்தன.

அதிமோசத்தாலும், லஞ்சம் கொடுப்பதாலும் வஞ்சகச் செயலாலும் கணக்கற்ற நாடுகளை அவன் வசப்படுத்திக்கொண்டான். சித்திர துர்க்கக் கோட்டையை நயவஞ்சகத்தால் பிடித்து, அங்கிருந்து 20,000 பேர்களை சீரங்கப்பட்டணத்துக்குக்குடியேற்றி அவர்களை முகம்மதியர்கள் ஆக்கினான்.

ஐதர் தலைநகர் திரும்பியதும் அமில்தாரர்களை அழைத்து வரிகளை அதிகப்படுத்தினான். சாமையன் என்பவனைப் போலீசு தலைவனாக நியமித்தான். அவன் மிகக்கொடுமையுடன் வேண்டாத ஆட்களை மறு உலகத்திற்கு அனுப்பிவந்தான்.

இந்தச் சமயத்தில் ஸ்வார்ட்ஜ் பாதிரியும், கரே என்ற ஆங்கிலனும், ஐதரைக்கண்டு சமாதானம் செய்துகொள்ள விரும்பினார்கள். ஐதர் ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டாவது மைசூர் போர் தொடங்கிற்று.

## 32. 2-வது மைசூர் சண்டை (1780-1784.)

1780 ஜூலையில் 90,000 துருப்புகளை இட்டுக்கொண்டு பள்ளிவாசல்களிலும், கோயில்களிலும் தன் வெற்றிக்காக பிரார்த்தனை செய்துவிட்டுத் தலைநகரைவிட்டு ஐதர் கிழக்கே புறப்பட்டான். தேர்ந்த பிரஞ்சு தலைவர்கள் போரை நடத்தினார்கள். பொக்கிஷ மந்திரி பூர்ணையன் சேனைகளின் உணவு வசதியைக் கவனித்து வந்தான். இரண்டாம் மகன் கரீம் பரங்கிப்பேட்டையைக் கொள்ளையடிக்கச் சென்றான். தன் பெரிய சேனையை தானே நடத்திக்கொண்டு சென்னை நோக்கிப் புறப்பட்டான். புழலேரியிலிருந்து புதுச்சேரி வரைக்கும் 30 முதல் 50 மைல் அளவுக்கு நாடு முழுவதையும் பாழ்படுத்திக்கொண்டு சென்றான். பரங்கி மலையிலிருந்து பார்த்த அளவில் எங்கு பார்த்தாலும் சுற்றிலும் கிராமங்களும் ஊர்களும் தீப்பற்றி எரிந்த புகையே தெரிந்தது. கணக்கற்ற மக்கள் இரத்தம் கொட்டிக்கொண்டு சென்னைக்கு ஓடிவந்தார்கள்.

ஆங்கிலச் சேனைகள் மன்றோ தலைமையில் காஞ்சிபுரத்தில் இருந்தது. கர்னல் பெயிலிமற்றொரு சேனையைநடத்திவந்தான். ஆர்க்காடும் போய்விட்டது. சேனாதிபதி கூட் (Coote) அப்போது வந்து சேர்ந்தான். செங்கல்பட்டும், வந்தவாசியும், வேலூரும் தப்பின.

ஐதர் தஞ்சாவூரைக் கொள்ளையிட்டுக் கணக்கற்ற குடும்பங்களைச் சீரங்கப்பட்டணத்திற்குக் குடியேற்றி வைக்க அனுப்பினான். பரங்கிப் பேட்டையில் நடந்த போரில் கூட் ஐதரைத் தோற்கடித்தான். ஆகஸ்டு 27-ம்தேதியில் போலிலூரில் நடந்த சண்டையில் மைசூரார் மறுபடியும் தோற்கடிக்கப்பட்டார்கள். செப்டம்பர் 27-ல் சோளிங்கபுரச் சண்டையில் ஆங்கிலரே ஜெயித்தார்கள். வேலூர் தப்புவிக்கப்பட்டது. உடனே அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து ஐதர் சேனை துரத்தப்பட்டது.

அப்போது வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டான். அவன் மராட்டியரைத் தன் வசப்படுத்திக் கொண்டான். பிரஞ்சுக்காரர்களின் உதவி வெகு குறைவாக இருந்தது. மலையாளமும், குடகும் கலகம் செய்தன. அந்தச் சமயத்தில் திப்பு பெயிலியையும் (Baillie), பிரெய்த்து வெயிட்டையும் (Braithwaite) தோற்கடித்து அவர்களைச் சிறைபிடித்தான். அதனால் பயனில்லை. ஜூன் 2-ம்தேதியில் 1782, ஆரணியில் சண்டை நடந்தது. ஆங்கிலரே வெற்றியடைந்தார்கள். மலையாளத்திலும், ஐதர் சேனை தோல்வியடைந்தது. இந்தச் சமயத்தில் ஐதர் முதுகில் ராஜ பிளவை தோன்றிற்று. எந்த விதமான வைத்தியம் செய்தும் பயனில்லாமல்போய் 1782 டிசம்பர் 7-ல் தனது 60-வது ஆண்டில் இறந்து போனான்.

ஐதர் மிகத்திறமை வாய்ந்த மனிதன். சண்டை என்பதே அவன்தொழில். ஒரு சண்டையில் முன்னுக்கு வந்தான். மற்றொருசண்டையில் இறந்தான். அவனுக்கு ஒரு நாளாவது நிம்மதி என்பதேகிடையாது. ஆனால் எழுதப்படிக்கத்தெரியாத ஒருவன்

இத்தனை சாமர்த்தியத்தோடு போர்களைப்புரிந்து நாட்டை ஆண்டான் என்றால் அது ஒருஅற்புதம்தான். குதிரையேற்றம், வாட்போர், துப்பாக்கி சுடுதல் இவைகளில் மிகச் சிறந்தவன். அவனுடைய அந்தப்புறத்தில் 600 பெண்கள் இருந்தார்கள். சிற்றின்பப்பிரியனாயிருந்தாலும் அரசியல் கடமைகளை மறக்கவே மாட்டான். காமலீலை, மதுபானம் அவனுக்குச் சாதாரணம்.

அவனுக்குப் படிக்கத் தெரியாது. 'ஹ' என்ற குறி மட்டும் போடுவான். ஆனால் இந்துஸ்தானி, கன்னடம், மராட்டி, தெலுங்கு, தமிழ் இவைகளைத் தெளிவாகப் பேசுவான்.

உத்தியோகஸ்தர்கள் அரண்மனையில் இருபுறமும் வேலை செய்துகொண்டிருக்கையில் தான் மாடியின் மீதிருந்து கவனிப்பான். எப்போதும் 200 ஆட்கள் கையில் கொரடா வைத்துக் கொண்டு நிற்பார்கள். எப்படிப்பட்டவனுக்கும் கொரடா அடி கிடைக்கும். ஒருவனையும் வேலையிலிருந்து நீக்கவேமாட்டான். உத்திரவுகளை ஒருவன் எழுத வேண்டும். மற்றொருவன் படிக்க வேண்டும். பிசகு ஏற்பட்டால் எழுதினவன் தலை போய்விடும்.

ஐதர் இறந்ததும் அந்தச் செய்தியைப் பூர்ணையன் திப்பு வருமட்டும் வெளியில் சொல்லாமல் மர்மமாகவே வைத்திருந்தான். ஐதரின் உடல் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டு கோலாருக்கு இரகசியமாக அனுப்பப்பட்டது. அப்போது திப்பு பொன்னானியிலிருந்தான். 100 மைல் வரையில் செய்தி அனுப்பப்பட்டது. ஐதர் உடலை இரகசியமாக அடக்கம் செய்த உடனே திப்பு பட்டம்வகித்தான். அப்போது படையில் 88,000 துருப்புகளும், கஜானாவில் மூன்று கோடி ரூபாயும், கணக்கற்ற நகைகளும் இருந்தன. திப்பு ஆங்கிலருடன் செய்துவந்த போரைத் தொடர்ந்து நடத்தினான்.

இதற்குள் பம்பாய்ப் பக்கத்திலிருந்து ஆங்கிலச் சேனை ஜெனரல் மாத்யூஸ் தலைமையில் தெற்கே வந்தது. 1783-பிப்ரவரியில் பெத்தனூர் பிடிபட்டது. பிறகு ஹொன்னாவரும், மங்க

ளூரும் ஆங்கிலர் வசம் வந்தன. ஆங்கில ஜெனரல் கையில் 81 லட்சம் ரூபாய் அகப்பட்டது. ஏப்பிரல் 9-ம் தேதி திப்பு அங்கு வந்து சேர்ந்தான். முதலில் பெத்தனூரை முற்றுகையிட்டு அங்கிருந்த சேனைகளுக்கு விலங்கிட்டு சீரங்கப்பட்டணம் அனுப்பி விட்டான். பிறகு திப்பு மங்களூரை முற்றுகையிட்டான். இதற்குள் ஐரோப்பாவில் ஆங்கிலருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் சமாதானம் ஏற்படவே பிரஞ்சுக்காரர்கள் போரை விட்டுவிட்டுச் சென்றார்கள். மங்களூர்முற்றுகை 1784 ஜனவரிமட்டும்நடந்தது.

ஆங்கிலர் தஞ்சையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கோயமுத்தூர் வட்டத்தை வசப்படுத்திக் கொண்டார்கள். சீரங்கப்பட்டணத்திலோ சாமையன் என்ற மந்திரி அரசனை மீண்டும் முன்னுக்குக் கொண்டுவர சதிசெய்தான். அது கண்டுபிடிக்கப்பட சாமையன் இரும்புக்கூண்டில் அடைக்கப்பட்டான்.

1785 மார்ச்சு 11-ம் தேதியில் சமாதான உடன்படிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டது. போருக்கு முன்னிருந்த நாடுகள் அவரவர்கள் வசம் சேர்க்கப்பட்டன. கைதிகளும் திருப்பி விடப்பட்டனர். ஆனால் அதற்குள் பல ஆங்கிலக் கைதிகள் விஷமிடப்பட்டு இறந்து போயிருந்தார்கள்.

திப்பு உடனே மங்களூர் போய் அங்கு சேர்ந்ததும் ஆயிரக்கணக்கான மக்கள் சுன்னத்து செய்யப்பட்டு சீரங்கப்பட்டணத்திற்கு அனுப்பப்பட்டார்கள். அடுத்த ஆண்டில் குடகில் கலகம் ஏற்பட அந்நாட்டு மக்களும், ஆயிரக்கணக்கில் சுன்னத் செய்யப்பட்டார்கள். அந்த சமயத்தில் திப்பு 'பாக்ஷா' என்ற பட்டம் வகித்துக் கொண்டான். பிராமணர்களுக்குக் கொடுத்திருந்த இனம்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனோடு இரண்டாம் போர் முடிந்தது.

## 33. 3-வது மைசூர் யுத்தம் (1785—1792.)

திப்பு சுல்தான் அவனுடைய தகப்பனைப் போலவே போர் புரிதலையே விளையாட்டாக உடையவன். அவன் போரின் இடை

யிலே பட்டத்திற்கு வந்தான். போரிலேயே உயிரும் விட்டான். அவனுல் போரின்றி இருக்க முடியாது. 1785-ல் மங்களூர் உடன்படிக்கை ஏற்பட்டு ஆங்கிலர்களுடன் சமாதானமாய்ப் போயும் தன் தலைநகரை அடைந்தவுடனே நிஜாமிடத்தில் பீஜப்பூர் ஜில்லாவைத் தரும்படிக் கேட்டான். நிஜாம் மராட்டியரிடம் உதவி நாடினுன். மராட்டியரோ திப்புவை 9-வருஷப் பாக்கிக் கப்பம் கேட்டார்கள். திப்பு வடக்கேபடையெடுத்துச்சென்ருன். மராட்டியரும், நிஜாமும் சேர்ந்து திப்புவை எதிர்த்தார்கள். துங்கபத்திரைக்கு இருபுறமும் போர் நடந்தது. 1787-ல் சமாதானம் ஏற்பட்டுத் திப்பு 45 லட்சம் ரூபாய் கொடுப்பதாகவும், வடக்கே 4 ஜில்லாக்களை எதிரிகளுக்குக் கொடுத்துவிடுவதாகவும் வாக்குக்கொடுத்துவிட்டு ஊர்திரும்பினுன். இந்தத்தோல்வி அவனுடைய பேராசையை அணைக்கவில்லை. மீண்டும் போர் புரிய எழுந்தான்.

அடுத்த ஆண்டு 1788-ல் திப்பு கோழிக்கோட்டுக்குச் சென்ருன். பிறகு கோயமுத்தூரில் மழைக்காலம் முழுவதும் தங்கியிருந்தான். அங்கே தன்னை பைகம்பர் அல்லது தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொண்டு சமயப்பரப்பு செய்யத்தொடங்கினுன். பிறகு திண்டுக்கல் வரைக்கும் சென்றுவிட்டுத் தலைநகர் திரும்பினுன். பிறகு சிரக்கல் ராஜாவைப் பிடித்துத் தூக்கிலிட்டுவிட்டு கண்ணனூர் பிபீயினுடைய மகளைத் தன் மகனுக்கு நிச்சயதார்த்தம் செய்துவைத்தான். அதன் பிறகு தன் நாட்டைப் பல ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் மும்மூன்று உத்தியோகத்தர்களை நியமித்தான்.

திருவாங்கூரைப் பிடிக்கவேண்டுமென்று எண்ணி 1789 டிசம்பரில் ஒரு பெரும்படை திரட்டிக்கொண்டு சென்ருன். திருவாங்கூருக்கு ஆங்கிலர்கள் உதவி செய்வதாக ஒப்பந்தம் செய்திருந்தார்கள். ஆகவேஆங்கிலர்கள் திப்புவின்மீது செல்லவேண்டிவந்தது. திப்பு படையெடுத்து வருவானென்று எதிர்பார்த்துத் திருவாங்கூருக்கு வடக்கே மலையிலிருந்து கடல் வரைக்கும்

கோட்டை மதில் கட்டியிருந்தார்கள். முதல்முறை அங்கே சென்ற திப்பு துரத்திவிடப்பட்டான். மீண்டும் சலிக்காமல் 1790 ஏப்பிரலில் அம்மதிலைத் தகர்க்கச் சென்றான். அதுகண்டு தம் ஒப்பந்தத்தின்படிக்குச் சென்னை ஆங்கிலர்கள் போருக்குச் சென்றார்கள். மே-மீ 26-உயில், ஜெனரல் மெடோஸ் என்ற சேனைத்தலைவன் திருச்சியைவிட்டுப் புறப்பட்டுக் கரூரைப் பிடித்துக்கொண்டு, ஜூலை 21-ல் கோயமுத்தூரைக் கவர்ந்து கொண்டான். ஆகஸ்டு 6-ல் ஈரோடும் 23-ல் திண்டுக்கல்லும் பிடிபட்டன. பிறகு பாலக்காட்டுக்கு ஒரு சேனையும், சத்திய மங் கலத்திற்கு மற்றொரு சேனையும் அனுப்பப்பட்டன. கோயமுத் தூர் ஜில்லா முழுவதும் மெடோஸ் கைக்கு வந்துவிட்டது. செப்டம்பர் 2-ல் 40,000 துருப்புக்களை இட்டுக்கொண்டு கஜ்ஜல் ஹட்டிக்கணவாய் வழியாகத் திப்பு பவானிக்கு வந்தான். மெடோஸ் கோயமுத்தூரில் இருக்கையில் திப்பு ஈரோட்டைப் பிடித்துக்கொண்டான்.

இரண்டாவது ஆங்கிலச் சேனை கர்னல் மாக்ஸ்வெல் தலை மையில் காவிரிப்பட்டணம் சேர்ந்தது. அதைக்கண்டு திப்பு பாராமகாலுக்குச் சென்றான். அங்கே மெடோஸ் போய் சேருவ தைக்கண்ட திப்பு அதைவிட்டுத் தென்கிழக்கே திரும்பி திருச் சிக்குச்செல்லச் சென்றான்.

இதற்குள் கல்கத்தாவிலிருந்து கவர்னர் ஜெனரல் லார்டு காரின்வாலிஸ் யுத்தத்தைத் தானே நடத்துவதற்காக வேலூர் வந்தான். அதைக் கண்டு திப்பு செங்கம் சென்றான். ஆனால் லார்டு காரின்வாலிஸ் சித்தூர் வழியாகக் கோலார் அடைந்தான். சுற்றிலிருந்த துர்க்கங்கள் பிடிபட்டன. 1791-ல் கிருஷ்ணகிரி முற்றுகை இடப்பட்டு பிடிபட்டது.

அதற்குள் காரின்வாலிஸ் தலைமை தாங்கிய சேனை நேராக மேற்கே சென்று வழியிலிருந்த கோட்டைகளையெல்லாம் பிடித் துக்கொண்டு சென்றது. திப்புவுக்கு நம்பிக்கை அற்றுப்போய்

தன்னுடைய இந்து அமைச்சர்கள் சிலரைக் கொன்றுவிட்டான். இதற்குள்ளாக வடக்கே மராட்டியர்கள் துங்கபத்திரையைப் பிடித்துக்கொண்டார்கள். நிஜாமும், ராயல் சீமையில் பலபகுதிகளைக் கவர்ந்துகொண்டான். இதற்குள்ளாகத் திப்புவின் ஒரு சேனை கோயமுத்தூரை வளைத்துக்கொண்டு அதனைப்பிடித்தது. சிறைபட்டவர்கள் சீரங்கப்பட்டணத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

லார்ட் காரின்வாலிஸ் ஒவ்வொன்ருய்ப் பிடித்துக்கொண்டு சீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டான். திப்புவினல் ஒன்றும் செய்யமுடியவில்லை. மார்ச்சு மாதத்தில் சமாதானம் செய்துகொள்வதற்கு உடன்பட்டான். பேச்சு வார்த்தைகள் நடந்தன. அதன்படி மார்ச்சு-மீ 19-உயில் ஏற்பட்ட சமாதானத்தின்படி மலையாளம், குடகு, திண்டுக்கல், சேலம் இவைகள் ஆங்கிலருக்கும், துங்கபத்திரை வரையில் மராட்டியருக்கும், நிஜாமுக்குக் கடப்பையும் கிடைத்தன. செலவு தொகைக்காக மூன்று கோடி ரூபாயும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டான். திப்புவுக்குப் பாதி ராச்சியம் போய்விட்டது. உத்திரவாதமாக தன் மக்களையும் கொடுக்க நேர்ந்தது.

இந்த அவமானம் பொறுக்கமாட்டாமல் பலநாள்கள் அரண்மனைவிட்டுத் திப்பு வெளியே வரவேயில்லை. தன் இரு குழந்தைகளையும் ஆங்கிலரிடம் உத்திரவாதமாகக்கொடுத்திருந்தபடியால், தான் கொடுக்கவேண்டிய கடனைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். குடிகளிடம் கட்டாயப்படுத்தி வரிகள் வாங்கினுன். நாட்டில் பல மாறுதல்களையும் கொண்டுவந்தான். தேதி, அளவை, உத்தியோகங்கள் முதலியவைகளுக்கெல்லாம் பாரசீகப் பெயர்களைக் கொடுத்தான். கப்பற்படை ஏற்படுத்தத் தொடங்கினுன். சீரங்கப்பட்டணத்துக் கோட்டையைப் பலப்படுத்தினுன். இந்துக் கோயில்களுக்கும் மணியகாரர்களுக்கும் கொடுத்திருந்த மானியங்களைப் பறிமுதல் செய்துவிட்டான்.

இவ்வாறு பலவிதங்களில் பணத்தைவசூலித்து 1794க்குள் ஆங்கிலருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டுத்தன் மக்களைத்திருப்பி மீட்டுக்கொண்டான். 1796-ல் மைசூர் பொம்மை ராஜாவாயிருந்த சாமராஜன் அம்மைவந்து இறந்தான். அவனுக்குப் பதிலாக வேறொருவரையும் நியமிக்காமல் அரச வம்சத்தாரை ஒரு எளிய வீட்டில் குடிவைத்துவிட்டு, அரண்மனையிலிருந்த சொத்துக்களையெல்லாம் தானே எடுத்துக் கொண்டான்.

அதுமுதல் ஆங்கிலரை இந்தியாவிலிருந்து துரத்திவிட வேண்டுமென்று சொல்லி வெளிநாட்டு அரசர்கள் எல்லாருக்கும் கடிதங்களையும், தூதர்களையும் அனுப்பினான்.

1797-ல் திப்பு பிரன்சுக்காரரிடம் தூது அனுப்பி ஆங்கிலரைத் துரத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தான். இந்தச்செய்தி முழுவதும் கவர்னர் ஜெனரலுக்குத் தெரிந்துவிட்டது. இந்தக் காரணங்களுக்காக மீண்டும் போர் தொடங்க வேண்டி வந்தது. அதுவே நான்காவது மைசூர் யுத்தம்.

இந்த இரண்டு யுத்தங்களுக்கிடையே ஏழு வருஷங்கள் சென்றன. திப்புவோ கூடியமட்டும் தன்னுடைய கோட்டைகளைப் பலப்படுத்திக்கொண்டுவந்தான். ஆனால் அவனுடைய சேனை மிகவும் குறைந்துவிட்டது. 33,000, காலாளும், 15,000 குதிரைகளும்தான் அவனிடம் இருந்தன. இருந்தாலும் பிரன்சுக்காரர்களை நம்பி யுத்தத்திற்கு இறங்கினான். ஆங்கிலர்களோ இந்த ஏழு ஆண்டுகளுக்குள் தங்கள் ராணுவ பலத்தை அதிகப்படுத்திக்கொண்டிருந்தார்கள். சேலப்பகுதியில் காப்டன் ரீட் முதல் கலெக்டராக நியமிக்கப்பட்டான். அவனுக்குக் கீழ் 15-வது பட்டாளம் இருந்தது. பெண்ணாகரத்தில் காப்டன் டூரிங் வசம் 4-வது பட்டாளம் இருந்தது. சங்கரதுர்க்கத்தில் காப்டன் ஓராங் வசம் 22-வது பட்டாளம் இருந்தது. சேலத்தில் மாக்டொனல்டு வசம் ஒரு பட்டாளமும், ஆற்றூரில் காம்பெல் வசம்

ஒன்றும், நாமக்கல்லில் லாங்க் வசம் ஒன்றும் வைக்கப்பட்டிருந் தன. இத்தனை ஏற்பாடுகள் செய்த வகையில், கொங்கு நாட்டில் ஒரு பகுதியாகிய மேற்சொல்லிய பிரதேசத்தில் எல்லாக் கோட் டைகளும் பாதுகாக்கப்பட்டன.

## 34. 4-வது மைசூர் யுத்தம். 1799. கி. பி.

இந்தத்தடவை திப்பு போருக்கு தயார்படுத்திக்கொள்ள ஆங்கிலர்கள் சாவகாசம் கொடுக்கவில்லை. நாற்புறங்களிலும் ஆங்கிலச்சேனைகள் தொடர்ந்து சென்றன. குடகிலிருந்து ஜென ரல் ஸ்டுவார்ட் 6,400 காலாட்களோடும், பாராமஹாலிலிருந்து ஜெனரல் ஹாரிஸ் 30,000 படைகளோடும் திப்புவின் இராச் சியத்திற்குள் நுழைந்தார்கள். சேலம்கலெக்டர் ரீட் சண்டைக்கு வேண்டிய பொருள்களைத் தயார்படுத்தி வைத்திருந்தான். 1799 பிப்ரவரி 11-ல் ஹாரிஸ் வேலூர் விட்டு மேற்கே சென்றான். ஆம்பூரில் நிஜாம்துருப்புகள் வந்தன. துருப்புக்கள் காரிமங்கலம் வழியாகக் கேலமங்கலம் போய்ச்சேர்ந்தார்கள்.

திப்பு முதலில் மத்தூரில் பாளையம் இறங்கிக் கிழக்கே யிருந்து வரும் சேனையை எதிர்க்கச்சென்றான். ஆனால் உடனே தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு மேற்கே பெரிய பட்டணம் சென்று பம்பாயிலிருந்து வரும் சேனையைச் சந்திக்கச்சென்றான். பெரிய பட்டணத்தில் திப்புவின் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந் ததைப்பார்த்த குடகு மன்னன் இந்தச் செய்தியை உடனே ஆங்கிலத் தலைவனுக்குச் சொல்லியனுப்பினான். ஆனால் காலைப் பனியில் முகம் தெரியாத வகையில் திப்புச் சேனைகள் குடகில் புகத்தொடங்கின. அங்கே சிறிதாகத்தான் ஆங்கிலப்படை இருந்தது. அதனைத் திப்பு வளைத்துக்கொண்டான். அதற்குள் ஜெனரல் ஸ்டுவார்டு முழுச்சேனைகளுடன் வந்துவிட்டான். போர் நடந்தது. திப்பு முதுகு காட்டி ஓடிவிட்டான்.

கிழக்கே ஜெனரல் ஹாரிஸ் ராயக்கோட்டை வழியாக மைசூர் புகுந்து கங்கனஹள்ளி மார்க்கமாக மளவள்ளியில்

மார்ச்சு 27 தேதியில் வந்து சேர்ந்தான். மைசூர் துருப்புகள் அங்கே வந்து ஆங்கிலருடன் போர்புரிந்தன. சிறிது நேரத்தில் பெரும் சேதத்துடன் திப்பு பின் வாங்கினான். 1792-ல் ஆங்கில சேனை சென்ற வழியிலேயே இப்போதும் வரக்கூடும் என்று எண்ணி திப்பு வழி முழுதும் அழித்திருந்தான். ஆனால் ஜெனரல் ஹாரிஸ் அந்த வழியில் செல்லாது செஞ்சிலே என்ற இடத்தில் காவிரி நதியைத்தாண்டி வேறு வழியில் சென்றான். தன் எண்ணம் பாழானதை அறிந்துத் தன் படைத்தலைவர்களை அழைத்து ஆலோசனை கேட்டான். அவர்கள் இறுதி வந்து விட்டது என்று எண்ணிக் கண்ணீர்விட்டு, உயிர்விடத் தயாராக இருக்கிறோம் என்றார்கள். உடனே திப்பு காவிரியின் தென் புறத்தில் எதிர்த்து நின்றான். ஹாரிசோ மறுபுறத்தில் போய்ப் பாளையம் இறங்கினான். 17-ம்தேதி முதல் முற்றுகை தொடங்கிற்று.

திப்பு சமாதானத்திற்கு முயன்றான். ஹாரிசோ பாதி நாட்டையும் 2 கோடி ரூபாயும், ஜாமீனாக அவனுடைய 4 மக்களையும், 4 உத்தியோகத்தர்களையும்தரவேண்டும் என்றுகேட்டான். அதற்குத் திப்பு சம்மதிக்கவில்லை. முற்றுகை வலுத்தப்பட்டது.

ஆங்கிலர்கள் கோட்டை மதில்களைத் தகர்க்கத் தொடங்கினார்கள். மே மாதம் 2-ம் தேதி மதிலில் ஒரு பகுதி இடிக்கப்பட்டது. 4- தேதி, 2400 வெள்ளையரும், 1800 இந்தியர்களும், நூலேணிகளும், ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு மதிற்சுவர்களைப்புடைத்தார்கள்.

முன் சிறையில் துன்பப்பட்ட ஜெனரல் ப்ரெய்ட் தன் ஆட்களை அழைத்துக்கொண்டு நதியை நீந்தி அக்கரை சென்று கோட்டை மதில் ஏறி ஆங்கிலக் கொடியை நாட்டினான். இது பகலில் நடந்தது. ஆனால் திப்புவோ பகலில் தகர்க்க வரமாட்டார்கள் என்று எண்ணியிருந்தான். அவன் உணவு அருந்திக் கொண்டிருக்க இச்செய்தி வந்தது. உடனே வாள் எடுத்துக் கொண்டு சண்டைக்குச் சென்றான். இரண்டு மூன்று காயங்கள்

பட்டும் சலிக்காமல் சண்டையிட்டான். அப்போது ஒரு போர் வீரன் அவனைச் சுட்டுக்கொன்ருன். பிணக்குவியலில் திப்பு வீழ்ந்தான். அப்போது அவனுக்கு வயது 47 தான்.

அவன் இறந்ததை அறியாத ஆங்கிலப்படைத்தலைவன் அவனை அரண்மனையில் தேடினன். இறுதியில் பிணக்குவியலில் அவன் உடம்பைக் கண்டுபிடித்துப் பல்லக்கில் வைத்து அரண்மனைக்குக் கொண்டு சென்ருர்கள். மறுநாள் லால்பாக்கில் ஹைதர் சமாதியருகில் அவனைப் புதைத்தார்கள். ஐதர் இராச்சியத்தைத் தாபிக்கப் பிறந்தான், திப்பு அதனைத் தொலைக்கத் தோன்றினன் என்று மக்கள் பேசிக்கொண்டார்கள்.

ஐதர் தைரியசாலி, திடகாத்திரமுள்ளவன். திப்புவோ பலவீனன். மதிகுறைந்தவன். ஆனல் சுறுசுறுப்புள்ளவன். குதிரையேற்றத்தில் வல்லவன். எழுதுவதில் சலியாதவன் எப்போதும் கையில் பேஞ வைத்திருப்பான். தானே உத்திரவுகளை எழுதுவான். அகம்பாவம் அவனை வெறியனாக்கி விட்டது.

மைசூர் முகம்மதிய ஆட்சி இதனேடு முடிந்தது. பழைய அரச குடும்பம் சிம்மாசனம் ஏற்றப்பட்டது. ஆங்கிலர் கன்னடம், கோயமுத்தூர் எடுத்துக் கொண்டார்கள். குத்திர்குரம் கொண்டா நிஜாமுக்குக் கொடுக்கப்பட்டன. மராட்டியர் தங்களுக்குக் கொடுத்ததை ஏற்காததினல் அவைகளையும், ஆங்கிலரும், நிஜாமும் பகிர்ந்துகொண்டனர். திப்புவின் மக்கள் வேலூரில் கோட்டையில் வைக்கப்பட்டார்கள். பூர்ணயாவுக்குப் புதியஅரசனின் திவான் பதவி தரப்பட்டது. 1803-ல் சில மாறுதல்கள் ஏற்பட்டன. ஜுன் 30-தேதியில் புது அரசன் பட்டம் கட்டப்பட்டான். புது அரண்மனை கட்டப்பட்டது.

பூர்ணயா திவானகவும் குலோஸ் ரெசிடெண்டாகவும், வெல்லெஸ்லி படைத்தலைவனகவும் நியமிக்கப்பட்டார்கள். மைசூர் நான்காம்போர் முடிந்தது. நாட்டில் சமாதானம்

நிலவீற்று. கொங்குநாடு மைசூரிலிருந்து பிரிக்கப்பட்டது. 1799-முதல் கொங்கு நாடு ஆங்கிலர் வசம் வந்து சேர்ந்தது.

## 35. ஐதர் திப்பு நாளில் கொங்குநாட்டில் நடந்த சில செய்திகள் 1768—1799

தென்னிந்தியாவிற்கு வந்து கிறிஸ்து சமயத்தைப் பரப்ப வந்த பல பாதிரிமார்கள் தென்னிந்திய நாட்டு நிலைமையைக் குறித்து எழுதியிருக்கிறார்கள். அவர்களில் ஸ்வார்ட்ஸ் (1726–1798) என்றவர் அரசியல் செய்திகளையும் நன்கு குறித்திருக்கின்றார். அப்பேதுபாய் (Abbe Dubois) என்றவர் மக்கள் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் முதலியவைகளைப்பற்றி எழுதியிருக்கின்றார். டாக்டர் புக்கானன் என்ற ஒருவர் ஒவ்வொரு ஊராய்ச் சென்று மக்களின் நிலைமைகளைப் பற்றிக் குறித்திருக்கின்றார். இன்னும் அரசியல் குறிப்புக்களும் பல இருக்கின்றன. இவைகளில் சிறந்த சிலவற்றைப்பற்றி மட்டும் இங்கே எழுதுவோம்.

ஸ்வார்ட்ஸ் 1779-ல் ஈரோடு (7–8–79) பவானி, சத்தியமங்கலம் (14–8–79), கஜல்ஹட்டி (17–8–79), வழியாக மைசூருக்கு (24–8–79) ச்சென்றான். ஈரோடு, சத்தியமங்கலம் கோட்டைகள் ஆங்கிலர்களால் தகர்க்கப்பட்டதைக் கண்டான். மைசூரில் சிறைப்பட்டவர்களின் மூக்குகளை அறுத்து தேவதைக்கு அர்ப்பணம் செய்ததைக் கண்டானும்.

மீண்டும் ஸ்வார்ட்ஸ் 26–12–83-ல் தாராபுரம் சென்றான். அங்கே கோட்டையும், பேட்டையும் இடிக்கப்பட்டிருந்ததைக் கண்டான். ரோஷன்கான் என்ற தலைவன் வெகுவிரைவில் ஊரையே அழித்திருக்கக் கண்டான். 30–12–83-ல் கோவைக் கருகில் செல்ல கர்னல் புல்லர்டன் (Fullerton) கோவை, பாலக்காடு கோட்டைகளைப் பிடித்திருந்தான். காட்டில் விளைவுசெழித்திருந்தது. சேனைகள் அதனை அறுத்து எடுத்துக் கொண்டன.

ஐதர் தன் ஆட்சிக்காலத்தில் அங்கங்கே கோட்டைகளைப் பழுதுபார்த்துத் துருப்புக்களை வைத்திருந்தான். நாட்டின் பாதுகாப்புக்காகவே அவ்வாறு செய்துவைத்தான். அது மட்டுமன்றிப் படையும் கோட்டையுமிருந்ததால் வெகு எளிதில் தீர்வையும் வசூலாகும். இந்த இரண்டைத்தவிர மக்களின் க்ஷேமம், வேளாண்மை, வியாபாரம் இவைகளை அவன் கவனித்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு பல கோட்டைகளைப் புதுப்பித்ததில் கோயமுத்தூர்க் கோட்டையுமொன்று. அதைப் புதுப்பித்துப் பலமாகக் கட்டிவைத்தான். கோவையில் ஒரு அரண்மனையையும் கட்டி அதை நல்ல நிலைமையிலும் வைத்திருந்தான். ஐதர் காலத்தில் 40-ஆண்டுகள் வரை குறிக்காரமாதையன் என்ற ஒருவன் அதிகாரியாய் இருந்து வந்தான். அவன் பெயராலேயே அந்த அரண்மனை மாதேராஜா மஹால் என்று பெயர் பெற்றது என்பர். உண்மை தெரியவில்லை. தற்போதும் அம்மஹால் இருந்த தெருவுக்கு மாதேராஜா தெரு என்றுதான் பெயர்.

ஐதர் கொங்கு நாட்டில் படையெடுத்துச் சென்ற காலமெல்லாம் கோவையில் தங்கிச் செல்வதுண்டு. அரசியல் நிர்வாகத்திற்காக அடிக்கடி தங்கியிருந்தான். தான் போர் செய்யும்போது தன் கைக்குள் அகப்படும் தலைவர்களைப் பெரிய கோட்டைகளுக்குள் அடைத்து வைப்பது அவன் வழக்கம். அப்படிப்பட்ட கோட்டைகளுக்குள் கோவைக்கோட்டையுமொன்று.

ஒருமுறை பெங்களூருக்கு வடக்கே யிருக்கும் சிக்கு பெல்லாபுரத்தை முற்றுகையிட்டு வெடிகள் வைத்ததில் அதன் பாளையக்காரன் சிக்கப்ப கவுடன் 6 லட்சம் ரூபாய் தருவதாக ஒத்துக்கொண்டான். ஆனால் அவன் தரவில்லை. ஐதர் மீண்டும் அக்கோட்டையை முற்றுகையிட்டான். பிறகு அதனைப்பிடித்தபோது பலபேர்களைச் சித்திரவதை செய்து விட்டு, பாளையக்காரன் குடும்பத்தைச் சிறையில் வைத்தான்.

சிக்கப்பன் இறந்துபோக மற்றவர்களைக் கோயமுத்தூர் கோட்டைக்குள் காவலில் வைத்திருந்தான். ஒரு முறை ஐதர் கோயமுத்தூருக்கு வந்து காவலில் இருந்தவர்களைக் கொண்டு வரச் சொன்னான். ஒருவனைத்தவிர மற்றவர்கள் எல்லாம் வந்தார்கள். வராதவன் பைச்சே கவுடன் என்ற கிழவன். அவ்வீரனே ஐதர் எதிரில் வரமுடியாதென்றும் வந்தாலும் அவனை வணங்க முடியாதென்றும் சொல்லி அனுப்பினான். அவன் துணிச்சலைக்கேட்டு எப்படியாவது அவனை வணங்கச் செய்ய வேண்டுமென்று எண்ணி ஐதர் ஒரு சூழ்ச்சி செய்தான். தான் விற்றிருந்த மண்டபத்துப் பக்கத்துச் சுவரில் ஒரு குறுகிய வழி செய்து அவ்வழியாய் அவ்வீரனை அழைத்துவரச் சொன்னான். அதில் நுழைவதற்குத் தலைகுனிய வேண்டியிருந்ததால் அவ்வாறு அவன் செய்யும் தலைகுனிதலையே அவன் தனக்குச் செய்யும் வணக்கமாக ஏற்றுக் கொள்ளலாமென்றிருந்தான்.

ஆனால் காவலாளிகளால் செலுத்தப்பட்டுப் போகும் போது அவ்வணங்கா வீரன் ஐதர் செய்த சூழ்ச்சியை உணர்ந்து கொண்டு அஞ்சா நெஞ்சனாய் அந்தக் குறுகிய வழியில் முதல் முதலில் தன் காலை நீட்டினான். அவ்வடாத செய்கையைக் கண்ட ஐதருக்கு அடங்காக் கோபம் வந்தது. அவ்வாறு நீட்டிய காலுக்கு தாங்கமுடியாத இரும்பு விலங்குகளையிட்டான். அதையும் பொறுத்துக்கொண்டு அவ்வீரன் சிறையிலேயே உயிர் நீத்து வீரசுவர்க்கம் சென்றான். இவ்வாறு கொங்கு நாட்டுப் பல கோட்டைகளிலும் பல வீரர்கள் சிறைபடுத்தப் பட்டிருந்தார்கள்.

கோயமுத்தூர்க் கோட்டை மூன்று முறை முற்றுகை யிடப்பட்டது. முதல் முற்றுகை 1768-ல் நடந்தது. முதல் மைசூர் யுத்தத்தின்போது ஆங்கிலர்கள் சேலத்தின் ஒரு பகுதியாகிய பாராமஹாலைக் கைப்பற்றினார்கள். ஐதரோ ஒரு பெருஞ்சேனையைத் திரட்டி வந்து அப்பகுதியைக் கைப்பற்றி

ளுன். இவ்விதம் வெற்றியும் தோல்வியும் அடிக்கடி நடை பெற்றன. ஆங்கிலத் தலைவனுன கர்னல் உட் என்பவன் கரூர் மார்க்கமாகச் சென்று தாராபுரத்தைப் பிடித்துக்கொண்டு கோயமுத்தூருக்கு வந்தான். அந்தக் கோட்டையை முற்றுகை யிட்டுச் சுலபத்தில் பிடித்துக்கொண்டான். அக்கோட்டை சிறிதுகாலம் ஆங்கிலர் வசம் இருந்தது.

ஆனுல் பேட்டையிலும் அக்கம் பக்கங்களிலும் ஐதர் சேனைகள் திரிந்து கொண்டிருந்தன. அவன் படைத்தலைவன் பாஸில்உல்லாக்கான் வடக்கேயிருந்து படைகளைத் திரட்டிக் கொண்டு கோயமுத்தூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். கோட்டையிலிருந்த ஆங்கிலப்படை நிர்மூலமாக்கப்பட்டது. அதில் ஹாமில்டன் என்ற ஒரு உத்தியோகஸ்தனும் உயிர் இழந்தான். தான் பிடித்த கோட்டையை மீண்டும் பலப் படுத்திக்கட்டினுன்.

கோயமுத்தூர் கோட்டை இரண்டாம் முறையாக 1783ல் முற்றுகை யிடப்பட்டது. 1782-ல் கர்னல் புல்லர்டன் (Fullerton) என்றவன் கொங்குநாட்டின்மீது படையெடுத்துக் கோயமுத்தூர்க் கோட்டையைப் பிடித்தான். அதைக்கேட்ட திப்பு தானே நேராக வந்து கோயமுத்தூர்க் கோட்டையை முற்றுகையிட்டு அதனைப்பிடித்தான். அதில் ரோஷன்கான் என்ற தன்னுடைய சேனைத்தலைவனை நிறுத்திவிட்டுச் சென் ருன். அப்போது ஸ்வார்ட்ஜ் என்ற கிறிஸ்திவப் பாதிரி தஞ்சையிலிருந்து புறப்பட்டு மைசூர் போகும் வழியில் கோய முத்தூரைக்கண்டான். ஊர் சுற்றிலும் பயிர்கள் நன்ருக விளைந்திருந்தன. அதனைப் புல்லர்டன் பார்த்துவிட்டுத் தன் சேனைக்கு ஒரு ஆண்டுத் தீனி கிடைத்தது என்று எண்ணி மகிழ்ந்தான். அவன் உத்தரவுப்படி சேனைகள் கதிர்களை அறுக்கும்போது முகம்மதியர்கள் வந்தார்கள். இருவருக்கும் சண்டை சச்சரவுகள் நடந்தன. அதில் காப்டன் டெம்பில்

(Temple) கொல்லப்பட்டான். இச்செய்தி ரோஷன்கானுக்குத் தெரிந்தும் அவன் ஒன்றும் செய்யவில்லை.

கோயமுத்தூரின் 3-ம் முற்றுகை 1790-ல் நடந்தது. ஆங்கில தளகர்த்தன் ஜெனரல் மெடோஸ் (Medows) என்றவன் 1790-மே 26-ல் திருச்சியை விட்டுக்கிளம்பி கரூரைப் பிடித்துக்கொண்டு ஜூலை 21-ல் கோவையைக்கைப்பற்றினான். பிறகு ஈரோடு முதலிய பல இடங்களையும் பிடித்தான். அதையறிந்த திப்பு, 40,000 ஆட்கள் சேர்த்துக்கொண்டுக் கஜ்ஜலட்டிக் கணவாயின் வழியாகப் புறப்பட்டான். ஆங்கிலச் சேனை முழுவதும் கோயமுத்தூரில் திரட்டி வைக்கப்பட்டிருந்தது. அதையறிந்த திப்பு, வேறு வழியாகக் கிழக்கே சென்று விட்டான். இதன் மத்தியில் கமுருத்தீன் என்ற ஒரு முசுலிம் சேனைத்தலைவன் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு கோயமுத்தூருக்குச் சென்றான். அப்போது அக்கோட்டை மேஜர் சாமர்ஸ் (Chamers) என்ற ஆங்கிலத்தலைவன் பாதுகாப்பில் இருந்தது. கமுருதீன் கோட்டையை முற்றுகையிட்டான். அம்முற்றுகை ஐந்து மாதம் இழுத்துக்கொண்டிருந்தது. மேஜர் சாமர்ஸ் கூடியமட்டும் எதிர்த்தும் தாங்கமுடியாமற் போய்விடவே 23–10–1791-ல் சரணமடைந்தான். அவனையும் அவனுக்குக் கீழிருந்த அதிகாரிகளையும் சிறை செய்து தன் பேச்சுக்கு மாறாகச் சீரங்கப்பட்டணச் சிறைக்கு அனுப்பி வைத்தான் இந்த முற்றுகை வெகு உக்கிரமாக நடந்தது. 11-7-1891-ல், வெகு பலமாக சண்டையும் நடந்தது. 1000 பேர் வரை பலியாகிக் கோட்டை அகழியில் கிடந்தார்கள். இறுதியில் மைசூர் சேனை ஒன்று வந்து சேர்ந்துகொண்டதினால் ஆங்கிலன் சரணமடைந்தான். இந்தப்போரில் முடிவில் நடந்த சமாதானப்படி கோவை திப்புவுக்கே கொடுக்கப்பட்டது. அவனே தனக்குத்துரோகம் செய்தவர்களையும் தோற்றவர்களையும் கத்திக்கு இரையாக்கினான். கோவைக் கோட்டையையும் அழித்துவிட்டான். அநேக வீடுகளும் அழிக்கப்பட்டன.

ஐதர் காலத்தில் கோயமுத்தூரில் 3,200 வீடுகள் இருந்தன. திப்புவின் காலத்திலோ அதில் 2000 வீடுகளே இருந்தன.

திப்பு, மக்களையோ அல்லது நாட்டின் செழிப்பையோ கவனித்ததாகத் தெரியவில்லை. போர்புரிவதும், பணத்தை வசூல் பண்ணுவதிலுமே காலம் கழித்தான். ஐதர் இந்துக்களையாவது, இந்துக்களின் கோயில்களையாவது தொடவே யில்லை. ஆனால் திப்புவோ, மதப்பித்துப் பிடித்தவனாய் இந்துக்களையும், இந்துக் கோயில்களையும் இம்சைப்படுத்தினான். உதாரணமாகப் பேரூர் பட்டீசுவரர் கோவிலுக்குச் சேர்ந்திருந்த இனும் கிராமத்தை 1784-ல் ஐப்தி செய்து அதன் வருமானத்தில் பாதியை தான் எடுத்துக்கொண்டான்.

## 36. அக்காலத்தில் கொங்குநாட்டின் நாட்டு நகர நிலையங்கள் 1799

மைசூர் அரசர்கள் காலத்தில் அவர்களின் பிரதிநிதியாகக் கோயமுத்தூரில் குறிக்காரமாதையன் என்ற ஒரு அதிகாரி 40-ஆண்டுகள் வரை ஆட்சிபுரிந்து வந்தான் என்று முன்னமே கூறியிருக்கின்றோம். அவன் ஐதர் அரசாண்டதற்கு முந்தியிருந்தே ஆட்சியில் இருந்திருக்கின்றான். ஐதர் ஆளத் தொடங்கிய பின்பும் அவனே ஆட்சிபுரிந்திருக்கிறான். ஒருவனே 40-ஆண்டுகள் வரை ஒரு அரசியலுக்குட்பட்டு ஆட்சிபுரிந்திருந்தால் அவனுடைய ஆட்சி மேலதிகாரிகளுக்குப் பிடித்தமாக இருந்திருக்குமல்லவா? மேலும் அவன் காலத்தில் குடிகள் யாதொரு கலகமும் செய்யவில்லை யென்று அறிகிறோம். ஆகவே அவன் ஆட்சி நல்ல ஆட்சியாக இருந்திருக்கவேண்டும்.

இந்த அதிகாரியைப்பற்றி 1800-ல் கோயமுத்தூருக்கு வந்திருந்த டாக்டர் புக்கானன் என்ற ஆங்கில ஆசிரியனும் கூறியிருக்கிறான். தவிர சில செப்பேட்டுச் சாசனங்களிலும் இவன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. 1763-ல் பொறிக்கப்பட்ட ஒரு செப்பேடு கிருஷ்ணராஜ உடையார் காலத்தில்

அதிகாரம் செலுத்திவந்த ஐதராலியின் கீழ் குறிக்காரமாதை யன் கோவையில் அதிகாரம் செலுத்தி வந்தானென்று கூறு கிறது. மேலும் அச்சாசனம், அக்குறிக்காரமாதையன் ஐதர் அலி நாவாபு பாதர் சாயபுக்கு காரியத்துக்குக் கர்த்தர் என்றும் அட்டவணை, கந்தாசாரம், சுங்கம், பொம்முதேவஸ்தானம் முதலாகிய அதிகாரங்களும் செய்கிறவனென்றும் கூறுகிறது. ஆகவே அந்த மாதையன் கோயமுத்தூரில் சகல அதிகாரங் களும் செலுத்தி வந்தான் என்று அறியலாம். அந்த சாசனத் திற்குச் சாவடி அதிகாரம், சேனபோகு, கணக்குப்பிள்ளை, குடியானவர்கள் முதலியவர்கள் எல்லாம் ஒப்பமிட்டிருக்கிறார் கள்.' அதின்படி அதில் குறித்த ஒரு நிலம் காசிமையதீன் அவர்களுக்குத் தர்மசாசனம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதே முறையில் பல ஊர்களிலும் அதிகாரிகள் நியமிக் கப்பட்டு ஆட்சி செலுத்தி வந்திருக்கிறார்கள். ஐதர் காலத்தி லிருந்த நாட்டு அமைதி திப்பு காலத்தில் இல்லை. இந்து ஆலயங்கள் சூறையாடப்பட்டும், இனும்கள் பறிமுதல் செய் யப்பட்டும் மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். ஆங்கிலர்கள் தலையிட்டதும் 1799-ல் சீரங்கப்பட்டணத்தைப் பிடித்ததும், திப்புவின் வம்சத்தை நீக்கிப் பழைய வம்சத்தைப் பட்டத்தில் வைத்ததும் முன்னமே கூறியிருக்கிறோம்.

1799-ல் திப்பு வீழ்ந்ததும் கோயமுத்தூர் ஆங்கிலர் வச மாயிற்று. 10-ஆண்டுகளுக்கு முந்தி சேலம் ஆங்கிலர் வசம் வந்ததை ஏற்கனவே கூறியிருக்கின்றோம். ஆகவே 1799 முதல் கொங்குநாடு முழுவதும் ஆங்கிலர் வசம் வந்துவிட்டது.

மைசூரில் பட்டத்திற்கு வந்த புது அரசன் இளைஞனாக இருந்தபடியால் அவனுக்கு உதவியாக பூர்ணையா திவானாக நியமிக்கப்பட்டான். அந்தப் பூர்ணையா, ஐதர், திப்பு காலங் களிலேயே அமைச்சனாக யிருந்ததை முன்னமே கூறியிருக் கின்றோம். பூர்ணையா கோயமுத்தூர் சரகத்துக்குச் சேர்ந்த ஒரு மாத்துவ பிராமணன். அரசியல் துறையில் மிகுந்த

நிபுணன். இல்லாவிடில் ஐதரிடமும், திப்புவிடமும் உயிரோடு பிழைத்திருக்க முடியாது. பூர்ணையாவின் குடும்பம் ஆதியில் தாராபுரத்திற்குச் சேர்ந்தது. அதில் ஆஞ்சநேயர் கோயிலும் மாத்துவக்குடிகளும் சிறப்பாக இருக்கின்றனர். தாராபுரம் கொங்கு சோழர்காலத்தில் இராஜராஜபுரம் என்ற பெயரோடு தலை நகராகயிருந்தது. ஆகவே அந்தஊரில் புகழ்பெற்ற குடும்பங்கள் பண்டைக்காலம் முதற்கொண்டு இருந்திருக்கவேண்டும்.

சீரங்கப்பட்டணம் பிடிக்கப்பட்டதும் சென்னை அரசாங்கத்தார்கள், டாக்டர் புக்கானன் என்ற ஒரு ஆங்கிலச் சரித ஆசிரியனைக் கருநாடக நாடுகளுக்கு அனுப்பி எல்லாவற்றையும் சோதித்து ஒரு அறிக்கை எழுதும்படி நியமித்தார்கள். அவனும் கோயமுத்தூர், மைசூர் முதலிய நாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஒரு அருமையான நூல் எழுதியிருக்கின்றான். அந்நூல் அச்சாகியிருக்கிறது. டாக்டர் புக்கானன் 1800 அக்டோபர் மாதத்தில் யாத்திரை செய்யத் தொடங்கினான். சீரங்கப்பட்டணத்திலும், மைசூரிலும் அவன் பார்த்து எழுதின செய்திகளை நாம் இங்கு குறிக்கவேண்டியதில்லை. கொங்கு நாட்டைப்பற்றி எழுதின சில குறிப்புகளை மட்டும் இங்கே எழுதுவோம்:—

'கொள்ளேகாலம் தாலூகாவிலிருந்து கிழக்கே செல்லும் கணவாய்ப்பாதை காவேரிக் கரையிலுள்ள காவேரிப்புரத்திற்குச் செல்லுகிறது. இப்பாதையின் இடையில் நாடுகாவல் என்ற ஒரு கெடிஸ்தலமிருக்கின்றது. அதில் மக்கள் தங்குவதற்கு ஒரு சத்திரமும், உணவு சமைப்பதற்கு ஒரு பிராமணக்குடியுமுண்டு. இதுதான் கருநாடகத்திற்கும், சேரநாட்டிற்கும் எல்லை. இந்த வழியாகத்தான் மைசூர் சேனைகள் வந்து போய்க்கொண்டிருந்தன. காவேரிப்புரத்தில்வியாபாரம் அதிகம். ஒரு சுங்கமும் கோட்டையுமுண்டு.

காவேரிப்புரத்திலிருந்து தெற்கே போகையில் சாம்பள்ளி, நெரிஞ்சிப்பேட்டை, பவானிக்கூடல் என்ற இடங்

களில் கோட்டைகள் உண்டு. ஒவ்வொரு கிராமத்திலும் பரம்பரை மணியகாரன், கணக்கன், தோட்டி என்ற கிராம அதிகாரிகள் உண்டு. அவர்களுக்கு வரியிலிருந்து 100-க்கு, 2,2½, 1¼ வீதம் வருவாயுண்டு. திப்பு கோயில் மான்யங்களை நிறுத்திவிட்டான்.

பவானியிலிருந்து மேற்கே போகையில் ஆப்புக்கூடல், அணைகொடுவேரி, சத்தியமங்கலம், முடுக்கன்துறை, தணுய்க் கன்கோட்டை, சிறுமுகை என்ற ஊர்கள் இருக்கின்றன. கொடுவேரியில் நஞ்சராஜன் கட்டிய அணையும், சத்தியமங்கலத் தில் திருமலை நாய்க்கன் கட்டிய கோட்டையுமிருக்கின்றன. இது கைத்தொழிலுக்குச் சிறந்தது. 800 தறிகள் நெய்கின்றன. முடுக்கந்துறையில் கன்னட தேவாங்கர்கள் நெய்கிறார்கள். தணுய்க்கன்கோட்டையில் கன்னடியர் அதிகம். சுற்றிலு முள்ள நாடு திப்புவினால் அழிக்கப்பட்டது. அங்கே லிங்கை யன் கட்டின அணை வெள்ளத்தால் அடிபட்டுப் போய்விட்டது.

கோயமுத்தூரைச்சுற்றி வறட்சியே காணப்பட்டது. தணுய்க்கன்கோட்டையிலிருந்து கோயமுத்தூர்வரையில் சாலை மரங்கள் காணப்படவில்லை. பரம்பரைத்தலைவனாகக் கோய முத்தூரில் ஒரு வேளாளன் இருக்கிறான். அவன் மூதாதையர் கள் மலைகளுக்கருகில் ஒரு கிராமத்திலிருந்தார்களாம். ஊர் கட்டப்பட்டிருக்கும் இடம் முன் காலத்தில் ஒரு வனமாக இருந்தது. அதில் மலசர்கள், 4, 5 குடிசைகள் கட்டிக் கோணி யம்மனைத் தேவதையாக வழிபட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தலைவன் கோயன் என்பவன் என்றும், ஊர் கோயன் பதி யென்றும், வழங்கி வந்தனர்களாம். தற்காலத்தலைவனின் மூதாதையர்கள் மலசரிடம் சம்மதம் பெற்றுக் கோட்டையைக் கட்டினார்கள். ஊர்ப்பெயர் கோயமுத்தூர் என்றும், தலைவன் பெயர் கொத்துக்காரக் காளியப்பனென்றும் வைக்கப்பட்டன வாம். இப்போதைய தலைவன் இருபதாவது தலைமுறையினனாம். ஐதர்காலத்தில் மாதன்னன் என்ற லிங்காயதன் 40 ஆண்டுகள்

ஆட்சியாளனுக இருந்தான். அவன் ஒரு அரண்மனே கட்டினுன். அது பெரிதாக உள்ளது. இராணுவத் தலேவன் வாசஸ் தலமாகவும் இருக்கின்றது.

மாதன்னன் காலத்தில் ஊர் செழிப்பாக இருந்தது. மைசூர் சண்டைகளில் கெட்டுவிட்டது. எட்டு வருஷங்களுக்கு முன் திப்பு கோட்டையை அழித்துவிட்டான். தற்போது 2000 வீடுகள் உள்ளன. ஐதர்காலத்தில் இருந்ததில் 8-ல் 5 பங்கு தான் உள்ளது. திப்பு ஒரு பள்ளிவாசல் கட்டினுன். ஊரில் பெரிய கோயில் இல்லே.

பேரூர் மேலேச்சிதம்பரம் என்று சொல்லப்படும். பெரிய கோயில், 4 ரதங்கள், ஒரு அழகிய குளம் இருக்கின்றன. மதுரை அரசர்களால் அருமையான சிற்பவேலே செய்யப்பட்டிருக்கிறது. ஆனுல் அது பூர்த்தியாகவில்லே. ஐதர் காலத்தில் கொடுத்த மான்யங்கள் திப்புவினுல் பறிமுதல் செய்யப்பட்டன. ஆனுல் கோயிலே அவன் இடிக்கவில்லே.

அவிநாசியில் பனந்தோப்புகள் உண்டு. முன் இருந்த 200 வீடுகள் சண்டையினுல் 50 ஆய்விட்டன. திருப்பூருக்கருகே நொய்யலுக்கு 32 அணேகள் உண்டு என்பர். ஆறு ஆண்டுளாக மழையில்லே. நாட்டு மக்கள் மைசூராரைவிட அறிவில் குறைந்தவர்கள். பெருந்துறையில் ஒரு கோட்டையுண்டு. அதனேச் சுற்றியுள்ள ஊர்களில் 800 தறிகள் நெய்கின்றன. அவ்வூர்க் கோயிலுக்கு மான்யம் உண்டு. சென்னிமலேயில் 125 வீடுகள் இருக்கின்றன. கோயிலேச்சுற்றி 17 பிராமணர்களும், 18 தேவதாசிகளும் இருக்கிருர்கள்.

ஈரோட்டில் ஒரு பெரிய மண்கோட்டையிருக்கிறது. அதில் ஒரு சிப்பாய்படையும் இருக்கிறது. ஐதர் காலத்தில் இவ்வூரில் 3000 வீடுகள் இருந்தன. திப்பு அவைகளில் ⅔ அழித்துவிட்டான். போர்களில் இன்னும் அதிகம் அழிக்கப்பட்டன. தற்போது 400 விடுகள் மட்டும் இருக்கின்றன.

அந்த வட்டத்தில் 2050 நெசவாளிகள் இருக்கின்றனர். காளிங்கராயன் என்ற வேளாளன் ஒரு கால்வாயைத் தோண்டி அதில் நீர் கொண்டுபோக ஒரு பள்ளத்தின் மீது ஒரு வாராவதி யும் கட்டியிருக்கிருன். நொய்யல்மீது ஒன்று கட்டியிருக் கிருன். அவை 400 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டன. அவன் குடும்பம் இப்போது இல்லே.

கொடுமுடி ஒரு புனித ஸ்தலம். அங்கே கோயிலில் 11 பிராமணர்களும் 21 தேவதாசிகளும் இருக்கின்றனர். கலெக் டர் மேக்லியட் வலங்கை, இடங்கைச் சண்டைகளே எளிதில் தீர்த்துவிட்டான். கரூரில் ஒரு கோயிலும், ஒரு பட்டாளமும் 1000 வீடுகளும் இருக்கின்றன. அரவக்குறிச்சியில் ஒரு கோட்டை இருக்கிறது. அதனே மைசூர் அரசன் கட்டினுன்.

தாராபுரத்தில் ஒரு மண்கோட்டை இருக்கிறது. அது ஜில்லாவின் தலேநகரம். கோயமுத்தூர் ஜில்லா முழுவதும் உவர் மண்ணிலிருந்து வெடியுப்பு காய்ச்சுகிருர்கள். பொன்னு புரத்தில் ஒரு சிறு கோட்டை இருக்கிறது. அதன் தலேவன் ஒரு பையன்.

பொள்ளாச்சியில் ஒரு சிறு கோட்டை இருக்கிறது. அங்கிருந்த காட்டை அழித்துக்கொத்துக்காடாக்கி ஒரு ஊரும் கட்டின ஒரு வேளாளனுடைய இரண்டாம் மனேவியின் பெயரால் இவ்வூரின் பெயர் ஏற்பட்டதாம். இவ்வூருக்கருகே அகஸ்தஸ், டைபீரியஸ் என்ற உரோமன் சக்கரவர்த்திகளின் நாணயங்கள் பூமியில் அகப்பட்டன.

ஆனமலேப் பாளேயக்காரர்கள் பன்னிருவர். அவர்கள் பாளேயப்பட்டு முறையில் இராணுவ உதவிபுரிபவர்கள். திப்பு பட்டத்திற்கு வந்ததும் அவனுடைய சேனேத்தலேவர்களில் ஒருவஞன காதர் அலிகான் அப்பாளேயக்காரர்களே வெருட்டிக் கப்பம் தரும்படி கட்டாயப்படுத்தினுன். ஆனுல் அவர்களே முகம்மது மதத்தைத் தழுவும்படி கேட்டபோது அவர்கள்

கொச்சிக்கு ஓடிவிட்டார்கள். பல ஊர்கள் அழிக்கப்பட்டன. ஆனமலையில் ஒரு கோட்டை இருக்கிறது.'

இதுவரை புக்கானன் எழுதிவைத்த நூலிலிருந்து கொங்கு நாட்டைப்பற்றிய குறிப்புக்களை எடுத்து சுருக்கிச் சொன்னோம். இவைகளிலிருந்து அக்காலத்தில் கொங்குநாடு இருந்த நிலைமையை ஒருவாறு அறியலாம்.

## 37. ஆங்கில ஆட்சித் தொடக்கம் (1799—1804)

மூன்றும் மைசூர் யுத்தத்தின் இறுதியில் (1792) சேலம் ஜில்லா ஆங்கிலருக்குச் சேர்ந்துவிட்டது. காப்டன் ரீட் முதல் கலெக்டராக நியமிக்கப்பட்டான். அவன் கிருஷ்ணகிரியில் முதலில் இருந்தான். 4-வது மைசூர் யுத்தத்தில் (1799), கோயமுத்தூர் ஆங்கிலர் வசத்தில் வந்தது. அதனை இரண்டு பிரிவாகப் பிரித்து வடபிரிவுக்குப் பவானி தலைநகராகவும், தென்பிரிவுக்குத் தாராபுரத்தைத் தலைநகராகவும் ஆக்கினார்கள். வடபிரிவோடு சேலத்தின் ஒருபகுதியும், தென்பிரிவோடு மதுரையின் ஒரு பகுதியும் சேர்க்கப்பட்டிருந்தன. பவானியும், தாராபுரமும் தலைநகராக ஆவதற்குத் தகுதியில்லாமற் போன போதிலும், இடங்களின் அமைதியைப் பொறுத்து அமைத்தார்கள்போலும். பவானி ஒரு புனிதத்தலம். இரண்டு நதிகள் சேரும் இடத்தில் இருந்தது. பாதுகாப்பிற்கு வசதியாக இருந்தது. தாராபுரம் பண்டையநாளில் கொங்குநாட்டின் தலைநகராக இருந்தது. ஆம்ராவதி நதியின் கரையிலிருந்தது.

இந்த வசதிகளைக்கண்டு அவ்விரண்டு ஊர்களையும் தலைநகர்கள் ஆக்கினார்போலும். மேலும் பண்டைநாள் முதற்கொண்டே கொங்குநாடு இருபிரிவுகளாயிருந்து இரண்டிற்கும் எல்லையாக நொய்யலாறு ஓடிற்று என்று அறியலாம். அந்தக் காரணங்களாலே ஜில்லாவை இரண்டு பிரிவுகளாக ஆக்கினார்கள் போலும். இவ்வாறு பிரிவினை செய்யப்பட்ட ஜில்லாக்

களுக்கு கலெக்டர்கள் என்ற அதிகாரிகளை 6-7-1799-ல் நியமனம் செய்ததில் வடபிரிவுக்கு காப்டன் மாக்ளியாட் என்பவரையும், தென்பிரிவுக்கு ஹார்டிஸ் (Hurdis) என்பவரையும் நியமித்தார்கள்.

அதன் பிறகு 1802 மே 22 முதல் வடபிரிவுக்கு (Garrow) காரோ என்பவர் கலெக்டர் ஆனார். அவர் சிறந்த பக்திமான். பவானி சங்கமேஸ்வரர் ஆலயத்திற்கு ஒரு தந்தப் பல்லக்கைத் தானம் செய்தார். அவருடைய பெயர் அந்தப் பல்லக்கில் தீட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறு இரண்டு வருடங்கள் ஆட்சி நடந்தன. இதன் மத்தியில் கிழக்குக் கருநாடகப் பகுதியாகிய தொண்டை நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு முழுவதும் ஆங்கிலேயர்கள் அதிகாரத்திற்கு வந்துவிட்டன. அவைகளை எல்லாம் பாகுபாடு செய்து ஜில்லாக்களாகபிரிவினை செய்யவேண்டி வந்தது. அவ்வாறு பிரிவினை செய்ததில் வடபகுதியும், தென் பகுதியும் ஒன்ருய்ச் சேர்த்து கோயமுத்தூர் ஜில்லா என்ற ஒரு பகுதியும் பழைய கிருஷ்ணகிரியும் காவேரிக்குக் கீழ் பக்கம் இருந்த தாலூகாக்களையும் சேர்த்து சேலம் என்ற ஒரு பகுதியும் ஆக்கப்பட்டன. தாராபுரமும், பவானியும் தலைநகர்கள் ஆவதற்குத் தகுதியற்று இருந்தபடியால் கோயமுத்தூர் தலைநகர் ஆக்கப்பட்டு, மற்ற இரண்டும் தாலூகாக்களாக மாற்றப்பட்டன. சேலம்-ஜில்லாவிற்கு சேலம் தலைநகர் ஆக்கப்பட்டு, கிருஷ்ணகிரி தாலூகாவாக அமைக்கப்பட்டது. இப்பிரிவினைகளே சிற்சில மாறுதல்களோடு தற்காலம் வரையில் அமைந்திருக்கின்றன. புதிதாய் அமைந்த கோயமுத்தூர் ஜில்லாவிற்குப் பவானியிலிருந்த காரோ என்பவர், 1804-முதல் கலெக்டர் ஆனார். அவர் 1815 ஜனவரி 20 வரையில் அதிகாரம் செலுத்தினார். அவர் காலத்தில் நாட்டில் நில அளவை, வரி விகிதம் முதலியவைகள் எல்லாம் ஒழுங்காக ஏற்படுத்தப்பட்டன.

ஆட்சி திட்டத்தைப் பொறுத்தமட்டில் ஆங்கிலர்கள் பழைய முறையையே பெரும்பாலும் பற்றினார்கள். கூடிய

மட்டில் உத்தியோகஸ்தர்களின் பெயர்களும் பழைய சொற்க ளாலேயே வழங்கப்பட்டன. ஆட்சி முறையிலும் அதிகமாக பேதமில்லை. பொதுவாக கருநாடக நவாபுகள் அனுசரித்துவந்த முறைகளையும், பெயர்களையும் வைத்துக்கொண்டார்கள். கோவையும், சேலமும், ஐதர் திப்பு வசத்தில் இருந்திருந்த போதிலும் அவர்களின் முயற்சிகளையோ, பெயர்களையோ எடுத்து ஆளவில்லை. ஜில்லா, தாலூகாக்களாகவும், பிர்க்காக் களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன. ஜில்லாவுக்குக் கலெக்டரும், தாலூகாவுக்குத் தாசீல்தாரும், பிர்க்காவுக்கு ரெவிஸியூ இன்ஸ்பெக்டரும், கிராமத்திற்கு மணியகாரரும் அதிகாரிகள் ஆனார்கள். இப்பெயர்களைத் தவிர சிரஸ்ததார், டபேதார் முதலிய இந்துஸ்தானி பெயர்களும் வழங்கப்பட்டன. நீதி மன்றங்களில் முன்சீப், சிரஸ்ததார், நாஜர், அமீன் முதலிய பெயர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த வகையில் பழைய முறைகளையும், பெயர்களையும் உள்ளது உள்ளபடி வைத்துக் கொண்டு ஜில்லா நிர்வாகம் நடத்தப்பட்டது. இந்த வகையில் கூடிய மட்டில் சுலபமாக செயல் முறை நடத்தப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்பங்களை அடக்கி அமைதியை நிலை நிறுத்தின காலம் மட்டும் ராணுவங்களைக் கோட்டைகளில் நிறுத்தியிருந்தார்கள். குழப்பமும், எதிர்ப்பும் குறைந்து அமைதி ஏற்படத் தொடங்கியவுடன் ராணுவங்களை ஒவ்வொன்ருக நிறுத்திவிட்டார்கள். உதாரணமாக சேலம் வட்டத்தில் முதலில் கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை, சங்கிரி, நாமக்கல், ஆத்தூர் முதலிய இடங்களில் பட்டாளங்கள் இருந்தன. 1814-ல் நான்கு பட்டாளங்களுக்குக்குறைக்கப்பட்டன. 1823-ல்சங்கிரியிலிருந்து சேலத்திற்குத் தலைமை ராணுவஸ்தலம் மாற்றப்பட்டது. 1824-ல் ஆத்தூரும், 1832-ல் நாமக்கல்லும், பிறகுசங்கிரியும், கிருஷ்ணகிரியும், ராணுவஸ்தலங்களிலிருந்து நீக்கப்பட்டன. 1850-ல் சேலத்திலிருந்த ராணுவம்திருச்சிக்குக் கொண்டுபோகப் பட்டது. 1860-ல் ராணுவத்திற்குப் பதிலாகப் போலீஸ்திட்டம்

ஏற்படுத்தப்பட்டது. சேலத்தில் நடந்தது போலவே கோயமுத்தூர் ஜில்லாவிலும் ராணுவங்கள் எடுபட்டன. இராணுவங்கள் எடுபட்ட பிறகு ஜில்லாவிற்கு ஒரு போலீஸ் தலைமையும் (காவல் திட்டம்) அதற்குக்கீழ் படிப்படியாக உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

நாட்டில் நிலவரி முதலியவைகளை வசூல் செய்ய மணியகாரன் முதல்கொண்டு கலெக்டர் வரையில் உத்தியோகஸ்தர்களைப் படிப்படியாக ஏற்படுத்திய வகையில், வரிகள் ஒழுங்காக வசூல் செய்யப்பட்டன. மணியகாரன் முதலிய கிராமாதிகாரிகளைத் தவிர மற்ற உத்தியோகஸ்தர்களுக்கு இருந்த பரம்பரை பாத்தியம் எடுக்கப்பட்டது. மணியகாரனும், கணக்கனுமே பரம்பரைத் தொழில் செய்து வந்தார்கள். இவர்களுக்குக் கிராமத்திலிருந்த செல்வாக்கைக் கருதி பரம்பரை பாத்தியம் உறுதி செய்யப்பட்டது. நாட்டில் மண்ணின் சத்தை ஆராய்ந்து வீளைவைப்பாகுபடுத்தி வரித்திட்டமும் போடப்பட்டது. ஆற்றுப் பாசனம், குளத்துப் பாசனம் உள்ள பாய்ச்சல் நன்செய்களுக்கு அதிக தீர்வையும், கிணற்றுப்பாசனங்களுக்கு நடுத்தீர்வையும், வானவாரிபுன்செய்களுக்குக்குறைச்சல்தீர்வையும் இடப்பட்டன. நாட்டை அளந்து தீர்வையிட்டபடியால் வசூலில் திருட்டோ, மோசமோ நடைபெறுவதற்கு வழியில்லை. மேலும் தானியத்தீர்வையை நீக்கிவிட்டுப் பணத்தீர்வை வைத்துவிட்டபடியால் திருட்டும், புரட்டும் குறைந்துவிட்டன. பழைய காலத்துக் களஞ்சியங்கள் எடுபட்டுப் போயின. இந்தவகையில் வருமானச் சீர்திருத்தம் செயல் முறையில் கொண்டுவரப்பட்டது.

ஆங்கிலர் அரசாளத் தொடங்கியபோது, ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு விதமான தீர்வைத் திட்டமிருந்தது. அதைக் கூடியமட்டிலும் ஒன்றுபடுத்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. கொங்கு நாட்டில் பெரும்பான்மையாக இருந்த திட்டம் ரயத்வாரி (Ryotwari) என்ற நேரிடைத் தீர்வையாகும். நிலத்திற்கு இட்ட தீர்வையை நேராக அரசாங்கத்

திற்கே செலுத்துவது அந்த முறையாகும். ஆனாலும் கிராமங்களிலே பண்டைய அரசர்கள் பரிசாகக் கொடுத்திருந்த தேவதாயம், பிரமதாயம், சர்வமான்யம், ஊழிய மான்யம் என்ற பலவகை இனாம் தீர்வை திட்டங்கள் இருந்தன. அவைகளை நீக்க முடியவில்லை. ஆகவே அவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. அவைகளில் மேல் வாரம், குடிவாரம் என்ற இரண்டு பிரிவுகள் உறுதிப்படுத்தப்பட்டன. மேலும் தென் கோயமுத்தூரில் பாளையப்பட்டுக்களும், சேலத்தில் மிட்டாக்களும் சிலஇருந்தன. அரசாங்கத்தாருக்குக் கீழ்ப்படியாதவர்களை நீக்கிவிட்டுக் கீழ்ப்படிந்தவர்களின் உரிமைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. இந்த வகையில் நிலத்திட்டம் செயல் முறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இனி நீதி முறையிலும், சில மாறுதல்களும், ஒழுங்குகளும் செய்யப்பட்டன. முகம்மதியர் காலத்தில் குற்றங்களும், வழக்குகளும், ஒரு நீதிபதியே பழைய முறைப்படி செலுத்திவந்தான். ஆனால் இப்போது அவையிரண்டும் பிரிக்கப்பட்டன. குற்றங்களுக்கு ஆங்கில முறையையொட்டி தனிச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. வழக்குகளுக்கு அவரவர்களுடைய சமயத்தை ஒட்டிய முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழக்குகளை நடத்தும் முறை ஆங்கில முறையைத் தழுவிச் செய்யப்பட்டது. இந்த வகையில் மாறுதல் ஏற்பட்டபடியால் குற்றம் விசாரிக்கும் நீதிபதிகளுக்கு ஆங்கிலப்பெயர்களும்,வழக்குவிசாரிக்கும்நீதிபதிகளுக்கு முன்சீப் முதலிய இந்துஸ்தானிப்பெயர்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நீதிமன்றங்களுக்கும் அலுவல் அகங்களுக்கும் தனித்தனியான கட்டட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. அந்தந்த உத்தியோகங்களுக்குத் தகுந்த ஊதியம் அல்லது சம்பளம் ஏற்படுத்தப்பட்டு லஞ்சம் முதலிய அக்கிரம வசூல்கள் நிறுத்தப்பட்டன.

மேலும் நாட்டில் குற்றம் களைவதற்கும், குற்றம் தவிர்ப்பதற்கும், போலீஸ் என்ற காவல் திட்டமும், குற்றங்களைத் தண்டிப்பதற்குச் சிறைக்கூடம் என்ற தண்டனை இடமும் ஏற்

படுத்தப்பப்பட்டன. முன்னே நடந்துவந்த சித்திரவதைகள் அடியோடு நிறுத்தப்பட்டன. விசாரணையின்றி எந்த தண்டனை யும் தரக்கூடாது. தண்டனை முறையும் சீர்திருத்தம் செய்யப் பட்டது. வெறுங்காவல், கடுங்காவல், ஆயுள் தண்டனை, தீவுக்கு நாடுகடத்தல், தூக்கு, கசையடி என்பவைகளைத் தவிர மற்ற வைகள் நீக்கப்பட்டன. இத்தண்டனைகளும் பொது மக்களுக்குத் தெரியாமல் சிறைச்சாலைகளுக்குள்ளேயே இடப்பட்டன. கடன் காரர்களுக்குத் தனிச்சிறையும், வெறுங்காவல் மட்டுமே உண்டு. தண்டனையில் வகுப்புவாரியாகவும், சமயவாரியாகவும், வேறு பாடு நடத்திவந்த முறையை அடியோடு தொலைத்து எல்லாருக் கும் ஒரே விதமான நீதி வழங்கப்பட்டது. கோவையில் பெரிய சிறைச்சாலையும், சேலத்தில் ஜில்லா சிறைச்சாலையும் ஏற்படுத் தப்பட்டன.

நீர்ப்பாய்ச்சல், ஏரி, குளம், குட்டை, ஆறு, கால்வாய், அணை முதலியவைகளை ஒழுங்குபடுத்தித் தண்ணீர்ப்பாய்ச்சலுக் குத்திட்டம் வகுத்து எல்லாருக்கும் நீர் உரிமைகளை வழங்குவ தற்காக ஒரு இலாகா (பகுதி) ஏற்படுத்தப்பட்டது. அந்த உத்தி யோகத்தர்களே பாதை போடுதல், சாலை மரங்களை நடுதல், அரசியல் விடுதிகளைக் கட்டுதல் முதலிய வேலைகளையும் செய்து வந்தார்கள். மலைகள், வனந்திரங்கள் முதலியன அரசாங்கத்தாருக் குச்சேர்க்கப்பட்டன. அவைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு இலா காவும், லாகிரி வஸ்துக்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு இலாகா வும், பாடசாலைகளை வைத்து இளைஞர்களுக்குக் கல்வி போதிப்ப தற்கு ஒரு இலாகாவும் ஏற்படுத்தப்பட்டன. இந்த வகையில் மக்களுடைய நன்மையைக்கருதிப் பல வகைகளிலும் சீர்திருத் தங்கள் செய்த வகையில் நாட்டில் அமைதி ஏற்பட்டு மக்கள் குழப்பம் இல்லாது வாழத்தொடங்கினுர்கள்.

## 38. 19-வது நூற்றுண்டின் முதற்பகுதி (1800—1850)

ஆங்கிலர்கள் கொங்குநாட்டின் ஆட்சியை ஏற்றுக்

கொண்ட பிறகு நாட்டில் அமைதியை நிலைநிறுத்துவதற்குச் செய்த அரசியல் திட்டங்களை இதுவரை எடுத்துச் சொன்ளும். அத்திட்டங்களால் நாட்டில் அமைதி ஏற்பட்ட தோடு மக்கள் செழிக்கத் தொடங்கினர்கள். ஜில்லா, தாலூக்காத் தலைநகர்கள் பெருக்கமடைந்தன. சிறப்பாக ஜில்லாத்தலைநகர்கள் வெகு விரைவில் முன்னேற்றமடைந்தன. உதாரணமாகக் கோவை நகரைப்பற்றிச் சிறிது விவரிப்போம். 1799-ல் ஆங்கிலர்கள் கோவைக்குள் புகுந்தபோது கோவை நகர்க்கோட்டை மிகவும் அலங்கோலமாக இருந்தது. முந்தி மூன்று முறை முற்றுகை இடப்பட்டிருந்ததனுல் அது சில மாக யிருந்தது. 1792-ல் யாதோ ஒரு காரணத்தினுல் திப்பு அதை இடித்துவிட்டான். கோட்டைக்குத் தென்புறத்தில் ஏரியை அகழியாகக்கொண்டு மற்ற மூன்று புறங்களில் செயற்கை அகழிகள் தோண்டப்பட்டு இருந்தன. மதில்கள் அழிந்து அகழிகள் மூடப்பட்டன. கோட்டைக்குள் ஏரி ஓர மாக மலையாள முசுலிம்களைத் திப்பு குடியேற்றி யிருந்தான்.

தாழ்ந்தநிலமாகையால் இப்பகுதி எப்போதும் ஈரமா யிருக்கும். தொத்து வியாதிகள் முதல் முதலில் இங்கேதான் உதிக்கும். கோட்டைக்குள் இருந்த அரண்மனையும், சிறைக் குகைகளும் அழிக்கப்பட்டன.

இனி பேட்டையிலிருந்த நிலைமையைப்பற்றிக் கூறு வோம். அக்காலத்தில் நகரமுழுவதும் கிழமேல் 4 தெருக் களும், தென்வடல் 4 தெருக்கள் மட்டும் இருந்தன. இவைகள் பழைய மஹாலையும் கோயிலையும் சுற்றி யிருந்தவைகளே. இவ்வூரானது பெரும்பாலும் ஓட்டுவில்லைக் கட்டடங்களே கொண்டிருந்தது. இத்தனைச் சிறிதாக இருந்த ஊர் ஆங்கிலர் வந்த பிறகு சுற்றிலும் பெருக்கமடைந்து கிழக்குப்பக்கங்களி லிருந்த கிராமங்களுக்கும் பழைய ஊருக்கும் இடையில் இருந்த தோட்டங்கள், வாங்கப்பட்டு அங்கே கச்சேரிகள் கட்டப் பட்டன. புகழ்பெற்ற மன்ரோ என்ற சென்னை கவர்னர் இவ்

லூரில் ஒரு அருமையான பழத்தோட்டத்தை வளர்த்திருந்தான். அவனிடம் கோவிந்த ராவ் என்ற ஒரு மராட்டிய பிராமணன் சிரஸ்ததாராயிருந்தான். அவனுடைய வேலைத் திறத்தை மெச்சி அதிகாரிகள் 1829-ல் ஒரு ஜாகீர் தந்தார்கள். மன்ரோவும் அந்தப்பழத்தோட்டத்தைக் கோவிந்தராவுக்குக் கொடுத்தான்.

இந்தவகையில் அக்காலத்து அதிகாரிகள் நன்றியுள்ளவர்களுக்கு உதவி செய்தார்கள்.

ஜில்லா கலெக்டராய் வந்தவர்களிலே தாமஸ், சல்லிவன், வெட்டர்பர்ன் முதலியவர்கள் நகரத்தின் சுகாதாரத்தைக்கருதி அகலமான தெருக்களை அமைத்தார்கள். அவர்கள் பெயர்கள் அத்தெருக்களுக்கு இடப்பட்டன.

நகரத்தைப் பெருக்கினதுமட்டுமன்றி நாட்டுப்புறத்தில் விவசாயத்தையும் பெருக்குவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. கோவை ஜில்லா பருத்திச்சாகுபடிக்கு ஏற்றதான கரிசல் நிலம் கொண்டதாகும். முன்னாளில் நாட்டுப்பருத்தியாகிய கருங்கண்ணியும் உக்கனுமே பயிரிட்டு வந்தார்கள். அவைகளில் வருமானம் குறைவு. வெளிநாட்டுப் பருத்தியைக் கொண்டுவந்து இங்கே விளைவிக்கவேண்டுமென்று அதிகாரிகள் எண்ணினார்கள். 1819-ல் சேலத்தில் வியாபார அதிகாரியாயிருந்த ராபர்ட் ஹீத் (Heath) என்பவன் போர்போன் பருத்தியை (Bourbone cotton), கோயமுத்தூருக்குச் சுற்றிக் காடுகளில் நடச்சொன்னான். அதன்படி பிசர் (Fisher & Co) கம்பெனியார் ஈரோடு, தாராபுரம் தாலூக்காக்களில் போர்போன் பருத்தியை விதைத்து அவைகளுக்காகக் கிடங்குகளையும் கட்டினார்கள். அந்தக் கம்பெனி மூடப்பட்டது. ஆனால் பருத்தி விளைவு நடந்துவந்தது.

1840-ல் அமெரிக்கா ரகத்தை இங்கே விளைக்க எண்ணி டாக்டர் வைட் (Wight) என்பவனை நியமித்தார்கள். அவன்

கோட்டைக்கு வடக்கே ஒரு பெரிய பருத்திக் கிடங்கைக் கட்டி வெகுவாகப் பருத்திவிளைச்சலில் முயற்சி செய்தான். ஆனால் அது பலன் அளிக்கவில்லை. 1841-முதல் 1849 வரை பருத்திக் கிடங்காயிருந்த கட்டிடம்தான் இப்போது மராமத்து இலாகா ஆபீசாக இருக்கின்றது.

இந்தவகையில் ஆங்கிலர்கள் ஆட்சி ஏற்றுக்கொண்ட நாளில் அதாவது 1800-ல் 2000 வீடுகளும், 10,000 மக்களும், இருந்த ஊர் 1850-ல் 3000 வீடுகளும், 20,000 மக்களும் கொண்ட பெரிய ஊராகப் பெருகிற்று. இவ்வூரைப்போலவே ஈரோடு முதலிய மற்றைய தாலூகா நகர்களும் பெரிதாகி விருத்தியாயின.

இனி கொங்கு நாட்டில் உள்ள மற்றொரு தலைநகர் சேலம் ஆகும். இவ்வூரைச் சுற்றிலும் சிறு மலைத்தொடர்கள் அமைந்திருக்க நடுவில் ஒரு பள்ளமான நிலத்தில் கட்டப்பட்டுள்ளது. ஊர்ப்பகுதி மிகநெருக்கடியாகவும், சந்துபொந்துகள் கொண்டதாகவும் கட்டப்பட்டிருந்தது. ஊர்மத்தியிலே மணிமுத்தாறு என்ற காட்டாறு ஓடுகின்றது. இவ்வாற்றினால் ஊருக்கு சுகாதாரக்கேடே தவிர நன்மையில்லை. ஆற்றுக்கு ஒரு புறம் கோட்டையும் மறுபுறம் பேட்டையுமிருக்கின்றன. கோட்டையில் பெருமாள் கோயிலும், பேட்டையில் ஈசுவரன் கோயிலும் இருக்கின்றன. சுகவனேசுவரர் என்ற அந்த ஈசுவரன் கோயில் மிகப்பழமையானது. அது பண்டைக்காலக் கல்வெட்டுக்கள் கொண்டது. சேலமானது சுற்றிலும் மலைகள் இருக்க அவைகள் நடுவே பள்ளத்தில் கட்டப்பட்ட ஊர் ஆகையினால் குடி நீர் வசதி மிகக்குறைவு ஆனது. பண்டைக்கால முதல் நெசவுத் தொழில் ஒன்றே இவ்வூரில் சிறப்பாக இருந்தது. ஆங்கிலர்கள் வந்த பிறகு ஊரைச் சீர்திருத்த முயன்று கட்டிட வசதிகளைத் தொடங்கினார்கள். இந்த வகையில் ஊர் பெருகி வந்தது. ஹீத் (Heath) என்றவனும், பிசக் என்பவனும் இவ்வூரில் புதுரகப் பருத்தியை விளைவிக்க முயன்றார்கள்.

ஆனால் அது பயன்படவில்லை. மறுபடியும் பிசக் என்பன் (1820–1829) அரசாங்கத்தினிடமிருந்து சேர்வராயமலையில் இடம்பெற்றுக் காப்பியையும், தேயிலையையும் விளைவித்தான். அதற்குப் பிறகு பல காப்பித்தோட்டங்கள் அம்மலைகளில் ஏற்பட்டன. மேலும் சேலத்தைச் சுற்றி அருமையான மாந் தோப்புகள் ஏற்பட்டு நல்ல மாங்கனிகள் விளைகின்றன. இந்த வகைகளில் சேலத்தைச் சுற்றிலும் அபிவிருத்திகள் தோன்றின.

ஆங்கிலர்கள் சேலம் ஜில்லாவைச் சேர்த்துக்கொண்ட போது, அதிலிருந்த ஊர்களைக்காட்டிலும் கோட்டைகளே சிறந்திருந்தன. அந்தக் கோட்டைகளிலும் துர்க்கங்கள் என்ற மலைக்கோட்டைகளே மிகச்சிறந்து இருந்தன. இயற்கை யாகவே சேலம் ஜில்லாவில் கணக்கற்ற பாறைகளும், குன்று களும் இருக்கின்றன. முன்னிருந்த அரசர்கள் அக்குன்றுகளை அரண்களாகக் கட்டி அவைகளில் படைகளை வைத்து நாட் டைப் பாதுகாத்து வந்தார்கள். ஆங்கிலர்களும் அக்கோட்டை களைச் சில ஆண்டுகள் பாதுகாத்து வந்தார்கள். தற்காலத்தில் அக்கோட்டைகளால் யாதொரு பயனும் இல்லாமற்போன போதிலும் சரித்திரச் சிறப்புக்களுக்கும், அழகுக்கும் அக் கோட்டைகள் இக்காலத்திலும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் சில கோட்டைகளைப்பற்றியாவது இங்கே எடுத்துக் கூறுவதினால் பயன் இருக்கக்கூடும். முதலில் சில மலைக் கோட்டைகளைப்பற்றிக் கூறுவோம்.

சங்ககிரி துர்க்கம் ஒரு உயர்ந்ததும், வட்டவடிவமான மலை யின்பேரில் கட்டப்பட்ட அரண் ஆகும். இம்மலை நிலமட்டத் தின்மேல் 1500 அடி எழும்பியிருக்கிற ஒரு கற்பாறை. மூன்று புறங்களில் செங்குத்தாகவும், கிழக்குமட்டில் ஏறுவதற்குச் சாத்தியமானதாகவும் இருக்கின்றது. ஆனால் அத்திசையில் ஒன்றன்பின் ஒன்றாக 10 அரண்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ் வொன்றிலும் ஒரு வாயில் உண்டு. மேலே தண்ணீர்க் குளங்

களும் ஆலயங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு மதிலிலும் ஒவ்வொரு தலைவாயில் பலமாகக் கட்டப்பட்டுள்ளன. மதில்களில் பீரங்கித்துளைகளுமுண்டு. 9-வது தலைவாயில் ஆங்கிலர்களால் 1799-ல் கட்டப்பட்டது. இதிலுள்ள பத்துவாயில்களையும் தாண்டி இக்கோட்டையைப்பிடிப்பது மிகவும் கடினம். உச்சியில் கோயிலும், கொடித்திட்டும், களஞ்சியங்களும் இருக்கின்றன. இம்மலை அடிவாரத்தில் உள்ள 30 அடிப்பாறையை முதலியார் குண்டு என்று கூறுவார்கள். இங்கே குறுநில மன்னனாக இருந்த கெட்டி முதலியாரைத் திப்பு சுல்தான் இக்குன்றின் பேரில் நிறுத்தி அன்ன ஆகாரம் இல்லாமல், தண்டித்துக் கொன்றுவிட்டானாம். விஜயநகரத்தார் காலத்தில் 1522-வது ஆண்டில் இந்த துர்க்கத்திற்கு குன்றத்தூர் துர்க்கம் என்று பெயர் இருந்தது.

1792-ல் இந்த துர்க்கத்தில் வைத்திருந்த ஆங்கிலப்பட்டாளமானது ரத்து செய்யப்பட்டது. அதன் பிறகு துர்க்கத்தின் மதிப்புக் குறைந்துவிட்டது. ஆனால் பல அரசியல் அலுவலகங்கள் ஏற்பட்டதின் நிமித்தம் ஊர் மீண்டும் சிறப்பு வாய்ந்து இருக்கின்றது.

நாமக்கல் தாலூகாவின் தலைநகராகிய நாமக்கல்லும் ஒரு மலைக்கோட்டைதான். இது உருண்டை வடிவமான வெள்ளைக் கற்பாறை. அப்பாறையைச் சுற்றிலும் ஊர் கட்டப்பட்டிருக்கிறது. பாறை 200 அடி உயரமும், ½ மைல் சுற்றளவும் கொண்டது. அதில் பல சுனைகள் இருக்கின்றன. மதில்களில் பீரங்கித் துளைகள் உண்டு. உச்சியில் 9 ஏக்கரா நிலம் இருக்கிறது. அதில் ஒரு கோயிலும் வெடிமருந்துச் சாலையும் இருக்கின்றன. இக்கோட்டை சேந்தமங்கலத்து நாய்க்கன் கையிலிருந்தது. மலையின் அடியில் குகைக் கோயில்கள் இருக்கின்றன. இவைகளில் கல்வெட்டுக்கள் உண்டு.

மற்றொரு பெரிய மலைக்கோட்டை கிருஷ்ணகிரிக் கோட்டையாகும். ஒரு உயர்ந்த கற்பாறையின்மீது அக்

கோட்டை கட்டப்பட்டுள்ளது. ஏறுவதற்குப் படிகள் உண்டு. மலைமேல் கோட்டைக்குள் அழிந்த கட்டடங்களும், குளங்களும், சமாதிகளும் இருக்கின்றன. ஐதர்காலத்தில் இக்கோட்டை பலதடவை முற்றுகை போடப்பட்டது. ஆங்கிலர் பிடித்த பிறகும் இக்கோட்டை ஒரு ராணுவஸ்தலமாக இருந்தது. சில நாள் இவ்வூர் ஜில்லாத் தலைமையும் பெற்றிருந்தது. 1832-ல் இங்கிருந்த சேனையை நீக்கிவிட்ட பிறகு கோட்டையின் பெருமை குறைந்துவிட்டது. ஊரில் ஒருபகுதியாகிய புதுப்பேட்டையை 1794-ல் கிரஹாம் கட்டினான். சென்னை கவர்னர் வந்தபோது அதற்கு தௌலதாபாத் என்று பெயரிட்டான்.

மற்ற துர்க்கங்களில் ககனகிரி என்பது 3433 அடி உயரமுள்ள ஒரு கோட்டை. அது சக்கரைக்கட்டிபோலத் தோன்றும். அங்கு சகிரி என்பது 3038 அடி உயரமுள்ளது. அது ஏழுமதில் கொண்ட ஒரு கோட்டையாகும்.

இராயக்கோட்டை என்பது ஜெகதேவராயனுடைய கோட்டையாக இருந்தது. மற்றக் கோட்டைகள் ஹடேதுர்க்கம் (3185), இரத்தினகிரி (2805), சூலகிரி (2982), கியாரண துர்க்கம் (2930), அஞ்செட்டி துர்க்கம் (3192), மகராஜகடை (3383), தட்டைக்கல் துர்க்கம் (2029), வீரபத்திர துர்க்கம் (3088) முதலியன.

இவைகளைத்தவிர சம நிலத்துக் கோட்டைகள் உண்டு. அவைகள் தர்மபுரி, (தகடூர்), அதமன் கோட்டை (அதிகமான் கோட்டை), சேலம் கோட்டை, ஓமலூர் கோட்டை, காவிரிப்பட்டணம், தெங்கனிக் கோட்டை, பெண்ணுகரம், பெரும்பாலை, சோழப்பாடி, தோப்பூர், ஹரூர், தென்கரைக் கோட்டை ஆத்தூர் முதலியன. இவைகள் பெரும்பான்மையாக ஆங்கிலர்களால் பயன்படாதவை யென்று அழிக்கப்பட்டன. இருந்தாலும் 19-ம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இக்கோட்டைகளால் கொங்குநாடு சிறப்பும் பெற்றிருந்தது என அறியலாம்.

## 39. 19-வது நூற்றாண்டின் பிற்பகுதி (1850-1900)

19-வது நூற்றாண்டின் முற்பகுதி முழுவதும் நாட்டில் அமைதியை நிலைநிறுத்துவதற்கே ஆங்கிலர்கள் பாடுபட்டார்கள். பொது நலங்கள் செய்வதற்கு வசதிகள் ஏற்பட்டிருக்கவில்லை. உள்நாட்டில் போக்குவரவு மிகக் கடுமையாயிருந்தது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆங்கில உத்தியோகஸ்தன் 2, 3, பேர்களே இருந்தார்கள். அவர்கள் பழைய நாட்டு உத்தியோகஸ்தர்களை வைத்துக்கொண்டே அதிகாரம் செலுத்த வேண்டியிருந்தது. ஆகவே சீர்திருத்தங்கள் மெதுவாக போய்க்கொண்டிருந்தன. ஆனாலும் அக்காலத்து உத்தியோகஸ்தர்கள் திறமை பெற்றவர்கள். மிக்க ஊக்கத்தோடு வேலை செய்தார்கள். வேலூர்க் கலகம் போன்ற சில்லரைக் கலகங்கள் தெற்கே நடந்தன. வடக்கே 1857 ல் பெரிய சிப்பாய்க் கலகம் நடந்தது. அதில் ஆங்கிலர்கள் வெற்றி பெற்றார்கள். ஆங்கில முடியரசு இந்தியாவை நேராக ஆளத் தொடங்கிற்று. நாட்டில் அமைதி ஏற்பட்டது. ஆங்கில அரசும் உறுதியாக நிலைநின்றது. ஆகவே 19-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் சீர்திருத்தங்கள் நடைபெறுவதற்கு ஏற்ற வாய்ப்புகள் இருந்தன.

தென்னாட்டில் இருப்புப்பாதை போடப்பட்டது. தந்திக் கம்பங்கள் நாட்டப்பெற்றன. 1856-ல்-தொடங்கிய சென்னை இருப்புப்பாதை போத்தனூர் வழியாக மேற்குக்கரைக்குச் சென்றது. பிறகு போத்தனூரிலிருந்து மேட்டுப்பாளையம் வரையில் ஒரு குறுக்குப்பாதை போடப்பட்டது. ஈரோட்டிலிருந்து திருச்சிவரையில் மற்றொரு கிளை போடப்பட்டது. இந்தவகையில் கொங்குநாட்டின் இடையிலே, இருப்புப்பாதையும் நிலையங்களும் ஏற்பட்டபடியால், போக்குவரவு எளிதாய்விட்டது. ஜில்லா அதிகாரிகளும் விரைவாக முன்னேற்ற வேலைகளில் ஈடுபட்டார்கள்.

கோயமுத்தூர் நகரத்தில் ஊர்ப்பெருக்கம் தொடங்கப்பட்டது. பந்தய வட்டம் ஒன்றும் (Race Course) அதனைச்சுற்றி பங்களாக்களும் கட்டப்பட்டன. முந்தியசிறைச்சாலை போதாமற் போக, ஊருக்கு வடபுறத்திலே 160 ஏக்கரா அளவில் ஒரு பெரிய சிறைச்சாலையானது 1862-ல் தொடங்கி 1868-ல் முடிக்கப்பட்டது. அதில் 2000 கைதிகள் இருக்க வசதி செய்யப்பட்டது. அதற்குள் கோவை நகரம் பெருகிவர, அதன் சௌகரியங்களை உத்தேசித்து 1865-ல் ஒரு நகர சபை ஏற்படுத்தப்பட்டது. 1884-ல் அது பெருக்கப்பட்டது. இச்சபை பொதுமக்களின் பிரதிநிதிகளோடு ஊரின் சுகாதாரம், கல்வி இவைகளைக் கண்காணித்தது.

இப்படியிருக்கையில் பண்டைக்கால மன்னர்கள் முடவாண்டிகளின் ஆதரவுக்காக முடவாண்டி சத்தியமங்கலம் என்ற ஒரு கிராமத்தை ஈரோடு தாலூகாவில் தந்திருந்தார்கள். அந்த வருவாயிலிருந்து 32 முடவாண்டிகளும், 42 காலாடிகளும் ஆதரித்து வரப்பட்டார்கள். அந்த தர்மம் சரியாக நடந்துவரவில்லை. 1850-ல் அந்த இனும் கிராமத்தைப் பறிமுதல் செய்து, அதன் வரும்படியிலிருந்து, செலவுபோகபாக்கி 1200 ரூபாயைக் கோவை நகரசபைக்கு அளித்தார்கள். நகரசபையார் இலங்கர்கானு என்ற பெயரில் ஒரு நொண்டிகள் விடுதி கட்டி அதில் ஏழைகளைப் பரிபாலித்து வருகிறார்கள்.

பண்டைய அரசர்கள் யாத்திரீகர்களின் சௌகரியங்களின் பொருட்டுப் பெரிய பாதைகளில் சத்திரங்களைக் கட்டி, அவைகளுக்காக மானியங்கள் கொடுத்திருந்தார்கள். ஆங்கிலர் வந்த பிறகு அம்மான்யங்களை விருத்தி செய்து அச்சத்திரங்களை நடத்திவந்தார்கள். நாளாவட்டத்தில் சில சத்திரங்கள் போய்விட்டன.

1850-ல் முதல் வைத்தியசாலை கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டது. அது நாளுக்குநாள் பெரிதாகி இப்போது பெரிய

துரைத்தன வைத்தியசாலையாக ஏற்பட்டிருக்கிறது. இதைப் போலவே நாட்டுப்புறத்து பெரிய ஊர்களில் ஊருக்குத்தகுந்த படி வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன.

பண்டைய நாளில் அரசியலார் கல்வியைப்பற்றிக் கவனித்த தில்லை. கிராம வாத்தியார்கள் தங்கள் சொந்த நிலைமையில், திண்ணைப்பள்ளிக்கூடங்களை வைத்து நடத்திவந்தார்கள். பிறகு படிப்பு இலாகா ஏற்பட்ட பிறகு, சில பாடசாலைகளுக்கு உதவி கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவப் பாதிரிகள் பெரிய பாடசாலை களைத் தொடங்கினார்கள். வீராசாமி முதலியார் என்பவர் கோவையில் தாபித்த பாடசாலை 1852-ல் நடுத்தர பாடசாலை யாகி, 1876-ல் கல்லூரி ஆயிற்று. தாமஸ் (1849—1862), என்ற கலெக்டர் அதில் மிகுந்த அக்கரை எடுத்துக்கொண்ட தினுல் அவர் பெயரால் ஒரு மண்டபம் கட்டப்பட்டது. அதற் குப்பிறகு மற்றும் மூன்று உயர்தரப் பள்ளிக்கூடங்கள் ஏற் பட்டன. இந்த வகையில் நாட்டுப் புறங்களிலும் பல கல்விச் சாலைகள் தாபிக்கப்பட்டன.

பண்டைய காலத்தில் வியாபாரத்தின் பொருட்டுப் பெரிய ஊர்களிலெல்லாம் சந்தைகள் ஏற்பட்டிருந்தன. மக்கள் வேண் டிய பொருள்களை விற்கவோ வாங்கவோ சௌகரியமாக இருந் தது. அச்சந்தைகளின் சுங்கவரி அரசியலுக்குச் சேர்ந்திருந்தது. சில இடங்களில் கோயில்களுக்கு அவைகள் தரப்பட்டன. டணுய்க்கன் கோயிலுக்கும் கிணத்துக்கடவுக்கோயிலுக்கும் சந்தைகளின் வரிகள் தரப்பட்டதாகச்சாசனங்கள் கூறுகின்றன. ஆங்கிலர்கள் வந்த பிறகு அச்சந்தைகள் போற்றப்பட்டன. அவைகளில் கிடைக்கும் வருமானங்களைக்கொண்டு நாட்டுப் புறங்கள் விருத்தி செய்யப்பட்டன. தாலூகா போர்டு, ஜில்லா போர்டு என்ற சபைகள் ஏற்படுத்தி, சந்தை, சுங்கம், படகுத் துறை, சாலை மரங்கள் முதலியவைகளிலிருந்து வரும் வருமா னங்கள் அச்சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டன. சுகாதாரம், வைத்தியசாலை, பாடசாலை, பாதை மராமத்து முதலியவைகள்

அச்சபையாரால் நடத்தப்பட்டன. இச்சபைகளை முதலில் உத்தியோகஸ்தர்கள் ஏற்றுக்கொண்ட போதிலும், பின்னால் பொது மக்களின் பிரதிநிதிகளால் அவைகள் நடத்தப்படும் பொறுப்பு தரப்பட்டது.

வெகு காலமாகக் கொங்கு நாட்டில் கைத்தொழில்கள் குடிசைத் தொழிலாகவே நடத்திவரப்பட்டது. அவைகளில் முக்கியமான தொழில் கைநெசவு ஒன்றுதான். இத்தொழில் கோவை, ஒண்டிப்புதூர், சிறுமுகை, சத்தியமங்கலம், பவானி, கௌந்தப்பாடி, சித்தோடு, தாராபுரம், திருப்பூர், சிவகிரி, நெகமம், வாளவாடி முதலிய இடங்களில் நடைபெற்றன. மற்றும் சேலம், ராசிபுரம், திருச்செங்கோடு, ஜலகண்டபுரம் முதலிய இடங்களில் நடைபெற்றன. இக்குடிசைத் தொழிலுக்கு நூல் அதிகமாக வேண்டியிருந்தது. கோவை வட்டங்களில் பருத்தி மிகுதியாக விளைந்து வந்தபடியால் நூல் நூற்கும் நூல் ஆலை ஒன்று தாபிப்பதற்கு ஏற்பாடுகள் நடந்தன. முதல் நூல் ஆலை கோவையில் 1888-ல் சுக்கிரவாரப் பேட்டைக்கீழ்ப்பகுதியில் தாபிக்கப் பெற்றது. இதையொட்டி மற்ற நூல் ஆலைகள் பிற்காலத்தில் ஏற்பட்டன. மற்ற குடிசைத் தொழில்களில் பாத்திரம் செய்தல், சிற்ப வேலைகள் முதலியவைகள் உண்டு. திருப்பூருக்கு அடுத்தாற்போல் இவ்விரண்டு தொழில்களும் செய்யப்படுகின்றன.

மேலே கண்ட வசதிகளின் காரணமாக கோவை, சேலம் என்ற நகர்கள் எளிதில் பெருகின. மற்ற நாட்டுப் புறத்து ஊர்களும் பெருக்கம் அடைந்தன என்று கூற வேண்டும். உதாரணமாக 50 வருடங்களில் கோவை நகரம் அடைந்த பெருக்கத்தை கூறுவோம்.

| வருடம் | வீடுகள் | மக்கள் |
|---|---|---|
| 1850 | — | 20,000 |
| 1866 | — | 24,241 |
| 1871 | 5,000 | 35,310 |

| | | |
|---|---|---|
| 1881 | 6,874 | 38,967 |
| 1891 | 7,081 | 46,383 |
| 1901 | — | 53,080 |

ஆகவே கோயமுத்தூரின் ஜனத்தொகை 2½ மடங்கு அதிகரித்திருக்கின்றது. இதைப் போலவே சேலம் நகரம் பெருகியிருக்கின்றது. சேலத்திலே சிறப்பாக கைநெசவுத் தொழில் பல வகைகளிலும் ஏற்றமடைந்தது. நெசவுத் தொழிலோடு சாயம், துணி அச்சு முதலியவைகள் குடிசைத் தொழிலாக செய்யப் படுகின்றன. கொங்கு நாட்டிலிருந்து வடநாடுகளுக்கும் துணி ஏற்றுமதி பெருகிற்று.

தமிழ் நாட்டில் மற்ற ஜில்லாக்களைப்போல அல்லாமல் சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் மழை மிகக்குறைவு. காவேரி நதி இவ்விரண்டுக்கும் நடுவே ஓடினுலும் அதினுல் நாட்டிற்குப் பெரும் பயன் இல்லை. அதனுடைய உபநதிகளாகிய பவானி, நொய்யல், அமராவதி இவைகளால்மட்டும் ஒரு சிறிது பயன் உண்டு. ஆகவே பெரும்பான்மையான நிலங்கள் வானத்தைப்பார்த்துத்தான் விளைகின்றன. ஆகவே குறித்த பருவத்தில் மழை பெய்யாமற்போனுல் பஞ்சம் ஏற்படுவது சகசமாய் விட்டது. அநேகமாக, 10, 12 ஆண்டுகளுக்கொருமுறை பஞ்சம் ஏற்பட்டுக்கொண்டே வந்திருக்கின்றன. அப்பேர்ப்பட்ட பஞ்ச காலங்கள் 1833, 1845, 1857, 1866, 1877, 1878, 1891—92. இந்த ஆண்டுகளில் கொடிய பஞ்சங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1866-ல் மழை பெய்யாமற்போக தொத்து நோய்கள் ஏற்பட்டு மக்களோடு கால்நடைகளும் இறந்தன. ஏழைகள் புளியங் கொட்டை, வேர்கள், கத்தாழைப் பழங்கள் இவைகளைச் சாப் பிட்டார்கள். கஞ்சித்தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. 1½ லட் சம் கால்நடைகள் இறந்தன.

1877—78-ல் நிகழ்ந்த பஞ்சம் மிகவும் கொடியது. ஈஸ்வர வருடத்துப் பஞ்சம் என்ருல் அது ஒரு பழமொழியே ஆய் விட்டது.

இரண்டு பருவ மழைகளும் தவறிவிட்டபடியால் தானிய விலைகள் உயர்ந்தன. ஏழை மக்களுக்குக் குடிக்கக் கூழும் இல்லாமல் போய்விட்டது. 1,37,000 மக்கள் இறந்துவிட்டார்கள். மூன்று லட்சம் பேர்களுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது. வியாதிகளுக்கு அளவில்லை. 24-பிணங்கள் ஒரே ஈமத்தில் சுடப்பட்டன என்றால் காலக்கொடுமையைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? நாட்டில் கொலையும், குற்றங்களும் 5-மடங்கு அதிகமாயின. அப்படிப்பட்ட பஞ்சம் எப்பொழுதும் வந்ததில்லை. சர்க்காருக்கு தீர்வை நஷ்டமும் அதிகரித்தது.

1891—92 ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் அவ்வளவு கேடு விளைவிக்கவில்லை. சில தாலூக்காக்கள் மட்டும் கஞ்சித்தொட்டிகள் வைக்கப்பட்டன. இவ்வகையேற்பட்ட பஞ்சங்களை வராமல் காப்பதற்கு நீர்ப்பாசன வசதிகளே மருந்தாகும். அவைகளை அரசாங்கத்தார் அந்தக்காலங்களில் கைக்கொள்ளவில்லை. பஞ்சத்திற்கு நிவாரணமாக பாதைகளைப் போடுவதைக் காட்டிலும் ஆறுகளுக்கு அணைகள் போடுவதே உத்தமம்.

இந்த எண்ணத்தை ஒரு சிறிது அளவில் சேலவட்டத்தில் கைக்கொண்டார்கள். பாரூர் திட்டம் என்ற பாய்ச்சல் வசதியை 1877-ல் தொடங்கி, 4½லட்சம் செலவில் 1888-ல் முடித்தார்கள்.

அதற்கிட்ட அணை 912 அடி நீளம். இந்தத் திட்டத்தின்படி 3200 ஏக்கர்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதியும், சர்க்காருக்கு 24,700 ரூபாய் அதிக வருமானமும் கிடைத்தன. இதைப்போல வேறு திட்டங்களும் வகுக்கப்பட்டன. ஆனால் செயல்முறையில் வரவில்லை. அவ்வாறு வந்திருந்தால் பஞ்சங்கள் வராமல் நிறுத்தியிருக்கலாம்.

1911-ம் வருஷத்து கணக்குப்படி 100-க்கு 73 வீதம் விவசாயத்தையே நம்பிப் பிழைக்கிறவர்கள் இருந்தார்கள். இதனை நன்கு ஆராய்ந்து ஆலைக் கைத்தொழில்கள் பெருக்கியிருக்கும் பட்சத்தில் பஞ்சம் வராமல் காத்திருக்கலாம்.

## 40. 20-வது நூற்றூண்டு (1900—1950)

இருபதாவது நூற்றூண்டில் கொங்குநாட்டின் வரலாறு எந்தமுறையில் சென்று கொண்டு இருக்கிறதென்று நாம் நேரில் அறிந்து வருகிறேம். ஆகவே அதனைப்பற்றி அதிகம் வளர்க்கவேண்டியதில்லையல்லவா? பத்தொன்பதாவது நூற்றூண்டு முழுதும் ஆங்கிலருடைய நிம்மதியான ஆட்சியில் அது பலவகைகளிலும் வளர்ச்சி பெற்றிருந்தது. அவ்வளர்ச்சி இருபதாவது நூற்றூண்டில் அந்தவகைகளிலும், மற்றும்பல வகைகளிலும் முதிர்ச்சி பெற்றது. அதனுடைய எல்லைகளும், பிரிவினைகளும் முன்னிருந்தபடியே இன்றைக்கும் இருக்கின்றன. கோவை, நீலகிரி, சேலத்தில் பெரும்பகுதி, திருச்சி,மதுரைப்பகுதிகள் இவைகளைக் கொண்டிருந்த கொங்குநாடு முன்னிருந்த அதிகாரிகளையே தற்போதும் கொண்டிருந்து பலவகைகளிலும் தேர்ச்சியடைந்து வந்திருக்கின்றது. மற்ற தமிழ்ப் பகுதிகளைப்போலவே அரசியல், பொருளாதாரம், தலபரிபாலனம், கல்வி, கைத்தொழில், வாணிபம், முதலியவைகளில் பன்மடங்கு சிறந்துகொண்டு வந்திருக்கிறது. இருபதாவது நூற்றூண்டின் தொடக்கத்திலேயே மக்களுக்குள் தேசீயம், நாட்டுப்பற்று, ஒற்றுமை, தன்னுரிமை (சுதந்திரம்) முதலிய உணர்ச்சிகள் தோன்றின. மகாநாடுகள் அடிக்கடி கூட்டி உரிமைகளைப்பெற விரும்பினூர்கள். காந்தியடிகள் தோன்றி சாத்வீகப்போர் புரிந்து மக்களின் ஊக்கத்தை எழுப்பினூர்கள். அந்தப் பேருணர்ச்சியின் காரணமாக 1948-ல் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தது. தற்போது மக்களே ஆளத்தொடங்கியுள்ளார்கள். இது 20-வது நூற்றூண்டில் தோன்றி வெற்றி பெற்ற ஒரு அற்புத இயக்கமாகும்.

இந்த சாத்வீக வெற்றி இயக்கத்தைத் தவிர நாட்டில் எவ்விதப்பொது சச்சரவும் நடைபெறவில்லை. அரசியல் மாற்றமாவது, வேறு பிரிவினைகளாவது ஏற்படவில்லை. கொங்கு நாட்டில் ஆங்கிலர் காலத்தில் இருந்த ஆட்சியே இப்போதும்

தொடர்ந்து வரப்படுகிறது. ஆனால் நாட்டில் பலவித சீர்திருத்தங்களும் அபிவிருத்திகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலவற்றைமட்டும் இங்கு கூறுவோம்.

### 1. பரிபாலனம்

ஜில்லா, தாலூகா, பிர்க்கா, ஊர் என்ற பாகுபாடுகளும் அவைகளை ஆட்சிபுரிந்த அதிகாரிகளும் முன்னிருந்தபடியே இருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகளின் வேலை அதிகமாக ஆக ஒருவர் வேலையைப் பலபேர் செய்யும்படி நேரிட்டது. ஆகவே அதிகாரிகளின் தொகை பெருகிக்கொண்டே செல்லுகிறது. வரி விகிதங்கள், வரிவசூல்கள், நீதி, காவல், சிறை, சுகாதாரம், கல்வி, மராமத்து, பாய்ச்சல், மின்சாரம், கூட்டுறவு, விவசாயம், காடு, தொழில், வாணிபம் முதலிய பலபகுதிகளும் விரிவு அடைந்து வேலை தொடங்கியிருக்கின்றன. மக்களுக்கு உரிமை பெருகப்பெருக, தேர்தல் முறைகள், தலத்தாபனங்கள், சேவா நிலையங்கள் முதலிய பல புது இயக்கங்கள் தோன்றி வளருகின்றன. சுகாதாரம், கல்வி, பாதைகள் முதலியவைகளை மக்களே கவனித்து ஒழுங்குபடுத்திக்கொள்ளும் வகைகளில் கிராமங்களில் பஞ்சாயத்துக்கள், பெரிய ஊர்களில் நகரசபைகள், ஜில்லாக்களில் ஜில்லாச் சபைகள் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மன்றங்களால் சேவை செய்யப்படுகின்றது. பஞ்சாயத்து சபைகள் கணக்கின்றி வளர்ந்துகொண்டிருக்கின்றன. நகரசபைகள் கோவையில் எட்டும், நீலகிரியில் இரண்டும், சேலத்தில் இரண்டும், திருச்சியில் ஒன்றும், மதுரையில் ஒன்றும் ஆகக் கொங்கு நாட்டில் 14 இருக்கின்றன. இவைகள் பலவகைகளிலும் நகரங்களுக்குச் சேவைகள் புரிந்து வருகின்றன. சென்னை சட்டசபைக்கும், மேல்சபைக்கும், மத்திய சட்டசபைக்கும் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

### 2. உழவியல்

கொங்குநாடு பற்றுக்குறைநாடு. இங்கே விளையும் உண

வுப்பொருள்கள் இந்நாட்டிற்குப் போதுவதில்லை. மற்ற ஜில்லாக்களிலிருந்து உணவுப்பொருள்கள் வரவேண்டியிருக்கின்றன. என்றாலும் மக்கள் வெகு நன்றாகப் பாடுபடக் கூடியவர்கள். மற்றப்பகுதிகளைக்காட்டிலும் கொங்குநாட்டில் கிணறுகள் மிகுதி, தோட்ட விவசாயமும் மிகுதி. விவசாயத்திற்கு உதவாத நிலங்கள் பெருவாரியாக உள்ளபடியாலும், பருவமழை அடிக்கடி கெட்டுவிடுவதாலும் உணவுப்பொருள்கள் வேண்டிய அளவு விளைவதில்லை. ஆனாலும் மற்ற விளைவுகளாகிய பருத்தி, புகையிலை, நிலக்கடலை முதலிய கைத்தொழில் சரக்குகள் இந்த நூற்றாண்டில் அதிகமாக விளைகின்றன. இவைகளால் நாட்டின் செல்வாக்கு ஏற்றம் அடைந்திருக்கிறது. நாட்டின் விவசாயத்தைப் பெருக்கும்பொருட்டு இங்கே ஒரு விவசாயக்கல்லூரி ஏற்பட்டிருக்கிறது. விவசாயப் பண்ணைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத்திற்கு சகாயமாக இருக்கும் கால்நடைப் பண்ணைகளும் சிறப்பு அடைந்திருக்கின்றன. காங்கயம், பருகூர், ஹோசூர் முதலிய இடங்களில் கால்நடைகள் விருத்தி செய்யப்படுகின்றன. கால்நடைப் பாதுகாப்பிற்காக மருத்துவ நிலையங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

### 3. பாய்ச்சல் வசதிகள்

கொங்குநாட்டில் இரண்டு மிகப்பெரிய பாய்ச்சல் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேட்டூர்த்திட்டம் உலகத்திலேயே பெரியதிட்டங்களில் ஒன்று. காவிரிக்கு அணைகட்டி பெரிய நீர்த்தேக்கத்தை உண்டுபண்ணித் தஞ்சையில் ஆயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு நீர் தருகிறார்கள். அதில் மின்சார வசதியும் செய்யப்படுகிறது.மேலும் மற்றொன்று கீழ்ப்பவானித் திட்டம். இதிலும் ஒரு பெரிய அணைகட்டப்பட்டு கொங்கு நாட்டில் வறண்ட மூன்று தாலூக்காக்களுக்கு நீர்வசதி தரப்படுகிறது. இவைகளேயன்றி கணக்கற்ற சில்லறை நீர்த்திட்டங்கள் அங்கங்கே சீர்ப்படுத்தப்படுகின்றன. ஆறுகளுக்குப் பாலங்களும் சில கட்டப்பட்டிருக்கின்றன.

காவிரிக்கு மூன்று பாலங்கள், பவானிக்கு இரண்டு பாலங்கள், நொய்யலுக்கு மூன்று பாலங்கள், அமராவதிக்கு மூன்று பாலங்கள், மற்றக் கணக்கற்ற காட்டாறுகளுக்குப் பலபாலங்கள் கட்டப்பட்டன. இவைகளால் மிகுந்த அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

4. வனங்கள்

கொங்குநாட்டைச் சுற்றி மலைகளும், அம்மலைகளில் வனங்களும் நிரம்ப இருக்கின்றன. அவ்வனங்களில் பலன் தரக் கூடிய மரங்கள், செடி கொடிகள், வரவு கொடுக்ககூடிய விலங்குகள் முதலியன உண்டு. வனங்களும், அவற்றின் பலன்களும் அரசாங்கத்திற்கே சேர்ந்தன. அவைகளை நன்றாகப் பரிபாலிப்பதினால் அரசாங்கத்திற்கு மிகுந்த பலன் உண்டு. ஆகவே வனங்களை அழித்து விளைநிலங்கள் ஆக்காமல் விருத்தி செய்வதில் அரசாங்கத்தார் ஊக்கங்கொண்டு அலுவலாளர்களை நியமித்தும், அவர்களுக்குத் தகுந்த பயிற்சிதர ஒரு கல்லூரியைக் கோவையில் வைத்துப் பரிபாலிக்கிறார்கள். சென்ற போரில் வனங்களில் வந்த பொருள்களால் மிகுந்த நன்மை கிடைத்தது. தேக்கு முதலிய கட்டடமரங்களும், சந்தனம் முதலிய வாசனைத் தயில மரங்களும், பிசின் தரக்கூடிய பால் மரங்களும், விறகு ஆகக்கூடிய வளர்ச்சிமரங்களும், சாயம் இடக்கூடிய நிற மரங்களும் மிகப்பலன்களை அளிக்கின்றன. கொட்டை, இலை, மெழுகு, தேன், மான் கொம்பு, விலங்குத் தோல்கள், யானைத்தந்தம் முதலிய விலை உயர்ந்த பொருள்களும் கிடைக்கின்றன. ஆனைமலைக் காடுகளில் பலவகை மான்களும் கிடைக்கின்றன. சென்ற 50 ஆண்டுகளில் வன அபிவிருத்தி மிகவும் ஏற்பட்டிருக்கிறது. மலைகளில் காபி, தேயிலை, கோகோ, கொயினா, மலைத்தர்க்காரிகள் முதலியன மிகப்பயனுள்ளனவாகப் பயிரிடப்பட்டன.

5. தாதுகனிவர்க்கங்கள்

கொங்குநாட்டில் இரும்பு காய்ச்சுவதும், வெடியுப்பு எடுப்பதுவும், குருந்தக்கல் தோண்டுவதுமே பண்டைநாளில்

மிகுதியாகச் செய்யப்பட்டன. ஆனால் இந்நாளிலோ பல புதிய உலோகங்களும், சாயஉப்புக்களும், தோண்டப்படுகின்றன. வயநாட்டில் பொன்விளையும் சிவமலையில் குருந்தக்கல்லும் கிடைத்தன. கோபியில் அபரகம் என்ற காக்காய்ப்பொன் கிடைக்கிறது. எல்லாவற்றிலும் சிறப்பாக சேலம் சடாயு மலைகளில் மாங்கனீசு, மாக்னடீசியம், கல்நார் முதலிய கனி அல்லது சுரங்கப்பொருள்கள் எடுக்கப்படுகின்றன. மாங்கனீசு உப்புக்கள் வெள்ளைவெளேர் என்ற சீமைச் சுண்ணாம்புச் சாக்குப்போல இருக்கும். அவைகளைத் தோண்டி இரும்பு காய்ச்சும் செங்கற்களாகவும், பொன் காய்ச்சும் சட்டிகளாகவும் செய்கிறார்கள். மற்ற உப்புக்கள் எத்தனையோ இரசாயனவேலைகளுக்குப் பயன்படுகின்றன. சென்ற போரில் இக்கனிப் பொருள்கள் இராணுவ ஆயுதங்கள் செய்யப் பயன்பட்டன. சேலத்திலே இக்கனிப்பொருள்களை எடுக்கப்பெரிய கம்பெனிகளை ஏற்படுத்தி வேலை செய்கிறார்கள்.

## 6. தொழிற்சாலைகள்

வெகுகாலம்வரைக்கும் நெசவுத்தொழில் போன்ற குடிசைத் தொழில்களே கொங்குநாட்டில் இருந்தன. முதல் முதலாகக் கோவையில் ஒரு நூல் நூற்கும்சாலை ஏற்பட்டதை அறிந்தோம். பிறகு சென்ற 50 ஆண்டுகளுக்குள் கோவையிலே 29 நூலாலைகளும், திருப்பூர், உடுமலைப்பேட்டை, மேட்டூர், சேலம் முதலியவைகளில் 15-ம் ஆகமொத்தம் 43 ஆலைகள் 860891 கதிர்களைக் கொண்டனவாய் ஏற்படுத்தப்பட்டன. நூற்றல், நெசவு, தையல், பின்னல் முதலியன செய்யப்பட்டன. பட்டுச்சாலைகள் கொள்ளேகாலத்தில் ஏற்பட்டன. விவசாயச் சாமான்கள், இரும்பு யந்திரங்கள் முதலிய செய்யப்படும் இயந்திரசாலைகள் தோன்றின. சிமெண்ட் செய்யும் ஆலை மதுக்கரையில் ஏற்பட்டிருக்கிறது. கருவிகள், நீர் ஏற்ற வசதிகள், கரும்பு ஆலைகள் முதலியன செய்யப்படுகின்றன.

வில்லைச்சாலை, பென்சில்சாலை, புத்தான்சாலை, எண்ணெய், நெய் ஆட்டும் கருவிகள் முதலியனவும் தோன்றியிருக்கின்றன.

## 7. மின்சாரம்

ஊர்களிலே விளக்குகள் போடுவதற்கும், ஆலைகளை நடத்துவதற்கும், கிணறுகளிலிருந்து நீர் எடுப்பதற்கும் இன்னும் பல வேலைகளுக்கும் மின்சாரம் உபயோகிக்கப்படுகின்றது. அதற்காக நீலகிரியில் பாய்கரை ஆற்றை (Pykara) அணை இட்டுத்தடுத்து, அங்கே குழாய்வழியாக நீர்வீழ்ச்சி உண்டாக்கி அதன் விசையால் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அத்திட்டத்திஞல் மக்களுக்கு அனுகூலமும், அரசியலுக்குப் பெருத்த இலாபமும் ஏற்படுகின்றன. இந்த மின்சார விசையிஞல் கொங்குநாடு முழுமையும் கணக்கற்ற ஊர்களில் விளக்குகள் எரிகின்றன. இயந்திரங்கள் ஓடுகின்றன. ஆலைகள் நடக்கின்றன. கிணறுகளிலிருந்து நீர் இறைக்கப்படுகின்றன. நீலகிரியில் மின்சார வசதி ஏற்படுமுன்னரே காவிரிக்குச் சிவசமுத்திரத்தில் அணை நீர்தேக்கி அங்கே மின்சாரத்தைத் தற்கால மைசூர் அரசியலார் ஏற்படுத்தி மைசூர் நாடு முழுவதும் உபயோகிக்கிருர்கள். இவைகளுக்குப் பிறகு மேட்டூர் அணையிலும் ஒரு மின்சாரத் திட்டம் கட்டப்பட்டுள்ளது. இந்த வகைகள் விஞ்ஞானக் கலையின் முன்னேற்ற வேலைகள் ஆகும்.

## 8. போக்குவரவுச் சாலைகள்

நாட்டின் முன்னேற்றத்திற்கு எளிதான போக்குவரவுகளே சிறந்த பயன்களைத்தருவன. கொங்குநாடு முழுவதும் வழவழப்பான பாதைகள் இப்போது போட்டுக்கொண்டு வருகிருர்கள். ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் இவைகளை இணைக்கவேண்டும் என்பது அரசியலார்கருத்து. தூசி எழும் பாத பாதைகள் போட்டுப்போக்குவரத்தைத்துரிதப்படுத்துவது அதன் நோக்கம். இடையிடையில் ஆறுகள், பள்ளங்கள்

முதலியவைகளுக்குப் பாலங்கள் கட்டி பாதைகளைக் கெடுக்காதபடி திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். வழிநடப்போர்க்கு ஆயாசம் உண்டாகாதபடி, சாலை மரங்களும் வைக்கப்படுகின்றன. மேலும், எளிதில் பாதைகளில் நடமாட்டம் ஏற்பட (Bus) வண்டிகள் ஓடுகின்றன. முந்தி ஏற்பட்ட இருப்புப் பாதைகளை அதிகரித்து நீலகிரிப்பாதை, பழனிப்பாதை முதலிய பாதைகள் இந்த நூற்றாண்டில் போட்டதன்றி மைசூருக்கும் ஒரு பாதை போடத்திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

## 9. வியாபாரம்

கைத்தொழில் பொருள்கள், விளைவுப் பொருள்கள் முதலியவைகளின் உற்பத்தி பெருகுவதோடு நில்லாமல் அவைகளை விற்பனை செய்யப் பிறநாடுகளுடன் வியாபாரம் வைத்துக்கொள்வதும், பிறநாடுகளிலிருந்து உள்நாட்டிற்குத் தேவையான பொருள்களைக் கொண்டுவருவதற்கும், விற்பனை செய்வதற்கும் ஒழுங்கு செய்வது ஒரு நாட்டிற்குள்ள முன்னேற்றவழிகளில் ஒன்று. முன்னாளில் அச்செயல்களுக்கும் அரசியலார் சலுகைகாட்டவில்லை. வரிகள்மட்டும் போட்டு அரசியலுக்கு வருவாய் தேடிக்கொண்டார்கள். தற்காலத்திலோ வியாபார ஒழுங்குகளுக்கு அரசியல் உதவியும் தேவை என்று அறிந்துகொள்ளப்பட்டது. ஆகவே வியாபாரச் சங்கங்கள், நிதிச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு பண்டகசாலைகள், கூட்டுறவுப் பால் பண்ணைகள் முதலியன அரசியல் அனுமதியின் பேரிலும் அரசியல் மேற்பார்வையில் பெரிதும் ஏற்படுத்தப்படுகின்றன. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே கொள்கைபேதங்கள் ஏற்படாவண்ணம் சமரசநிலைகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

## 10. சுகாதாரம்

நாட்டில் சுகாதாரமே மக்களின் வாழ்க்கையை நன்மைப்படுத்தும். நோய்கள் வராமல் தடுப்பதும், வந்த நோய்களுக்கு

மருந்துகளை வழங்குவதும் ஒரு அவசியமான செயல். நாடு முழுவதும் வைத்தியசாலைகள் வைத்து நடத்துவது அரசியலின் கடமை. நாட்டுப்புறங்களிலும் சிறு வைத்தியசாலைகள் வேண்டும். தற்போது பலசாலைகள் இருக்கின்றன. மருந்துகளும் செலவாகின்றன. மேலும் தனியாகப் பல வைத்தியர்களும் மக்களைக் கவனித்துக்கொள்ளுகிறார்கள். தீரா நோய்களான கழித்தல் நோய்கள், தொத்து நோய்கள், தொழு நோய்கள் முதலியவைகளுக்கு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. பெருந்துறை நிலையம் மிகப்பேர்போனது. மக்களுக்கேயன்றி மிருகங்களுக்கும் வைத்திய நிலையங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உயிர்களுக்குத் தீங்குகள் உண்டாகாமல் தடுப்பதற்கு விதிகளும், அவைகளைக் கண்காணிக்கச் சங்கங்களும் தோன்றியிருக்கின்றன. குழந்தைகளுக்குப் பால் உணவு தந்து போஷணைகள் நிறுவவும், குற்றவாளிகளுக்குக்குற்றநோய் நீங்கவும் வசதிகளும், ஆறுதல்களும் தரப்படுகின்றன.

### 11. கல்விப் பரப்பு.

மக்களுக்கு உண்மையான பண்பாட்டைத் தருவதற்குக் கல்வி நிலையங்களேசாதனங்களாக இருக்கின்றன. கோவையிலும்,சேலத்திலும் முதல்தரக் கல்லூரிகளுண்டு. உயர்தரப்பள்ளிகள் நூற்றுக்கணக்கிலும், தொடக்கப் பாடசாலைகள் ஆயிரக்கணக்கிலும் ஏற்பட்டிருக்கின்றன. படித்தபடிப்பு மறந்துபோகாமல் நிறுத்துவதற்காக முதியோர் கல்வித்திட்டங்களும், நூற்சாலைகளும் அங்கங்கே ஏற்பட்டிருக்கின்றன. கொங்கு நாட்டில் தமிழ் நூல்களும், காவியங்களும் இயற்றப் பெற்றிருக்கின்றன. ஏறத்தாழ சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் செய்யுட்புராணங்கள், பிரபந்தங்கள், செய்யுள் தலபுராணங்கள், முதலிய நூல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. புலவர்களில் வாசுதேவ முதலியார், இளையான்கவிராயர், கச்சியப்ப முனிவர், சாந்தலிங்க சுவாமிகள், பாலசுப்பிரமணியக் கவிராயர், அரங்கநாதக் கவிராயர், மாம்பழக் கவிராயர், பத்தர்பாடி எம்பெருமான் முதலியோர் சிறந்த பேர்கள். பல தமிழ்ச் சங்கங்கள் தோன்றி, ஆராய்ச்சி நூல்கள், சரித

நூல்கள் எழுதப்படுகின்றன. உரை நூல்களும் பல எழுதப் பட்டு வருகின்றன. தமிழ் முன்னேற்றத்திற்கு மற்ற நாடுகளைப் போலவே கொங்கு நாடும் உழைத்துவருகின்றது.

## 12. ஜனப்பெருக்கம்.

மற்ற நாடுகளைப்போல கொங்கு நாட்டிலும் ஜனப்பெருக் கம் அதிகமாக ஆகியிருக்கிறது. நாட்டின் ஜனத்தொகை சென்ற 50 ஆண்டுகளுக்குள் 100-க்கு 50 வீதம் பெருகியிருக்கிறது. நாட்டுப்புறங்களைக் காட்டிலும் நகரங்களில் ஜனப்பெருக்கம் அதிகம். கைத்தொழில், ஆலைத்தொழில், முதலியவைகளால் நாட்டு மக்கள் நகரங்களில் குடியேறியிருக்கிறார்கள். மேலும் உணவுச் சௌகரியம், உல்லாச வாழ்க்கை இவைகளுக்காகவும், மக்கள் நகரத்துக்குச் செல்லுகிறார்கள். கோவை நகரத்துப் பெருக்கம் அடியிற்கண்ட புள்ளிகள் காட்டும்.

| வருஷம் | வீடுகள் | மக்கள் | |
|---|---|---|---|
| 1901 | | 53,080 | |
| 1911 | | 47,007 | கொள்ளை நோயினால் குறைவு |
| 1912 | 9,243 | 60,195 | கொள்ளை நோய் நின்ற பிறகு |
| 1921 | | 65,788 | |
| 1931 | 13,742 | 95,077 | 7.5 சதுர மைல் நகர அளவு |
| 1941 | 17,000 | 130,354 | 12 சதுர மைல் ,, |
| 1951 | 17583 | 1,94,963 | |

கோவையைப் போலவே சேலத்திலும் மற்ற ஊர்களிலும் மக்கள் தொகை ஏறியிருக்கின்றது.

இனி மக்கள் பேசும் மொழிகளைப்பற்றி ஒரு குறிப்பு கூற வேண்டும். கீழே உள்ள பட்டியலில் 1931-ம்ஆண்டுக்கணக்குப் புள்ளிகளைத் தருவோம்.

| கொங்குநாட்டுப் பிரிவுகள் | தெலுங்கு | கன்னடம் | தமிழ் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் கிழக்கு | 14.6 | | 85.4 |
| ஷை மேற்கு | 27.0 | 11.9 | 61.1 |

| | | | |
|---|---|---|---|
| சேலம் வடக்கு | 16.9 | 8.8 | 74.3 |
| ஷை தெற்கு | 15.6 | | 84.4 |
| மதுரை வடக்கு | 22.7 | 9.8 | 67.5 |
| திருச்சி மேற்கு | 16.3 | | 83.7 |
| மொத்தம் | 18.8 | 10.2 | 76.0 |

இந்தக் கணக்குகள் 1931-ம் ஆண்டுக் கணக்குகளாயிருந்த போதிலும் தற்போது அதிக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கா தென்று அறியவேண்டும்.

### 13. நீர் வசதிகள்.

நாட்டினுடைய சுகாதாரம் குடி தண்ணீர் வசதியைப் பொருத்தும், கழிவு நீர் இறைத்தலைப் பொருத்துமிருக்கின்றது. கொங்குநாட்டில் பெரிய ஊர்களுக்கு மட்டும் குடிநீர் வசதி ஏற் பட்டிருக்கின்றது. கோவை நகர்க்குச் சிறுவாணி நீர்த்திட்டம், 50 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்திய பிறகு, குடிநீர்ச் சங்க டம் தொலைந்தது. பொள்ளாச்சியில், அம்பராம்பாளையத்து ஆற்று நீர்த்திட்டமும், ஈரோட்டில் காவேரிப் பேச்சிப்பாறைத் திட்டமும் நன்றாய் வேலைசெய்கின்றன. திருப்பூர் கோயில்வழித் திட்டம் செவ்வையாக இல்லை. சேலத்துப் பனைமரத்துப்பட்டி ஏரித்திட்டம் அதுபோலத்தான் இருக்கிறது. ஆனால் மேட்டூர் தேக்கத்திலிருந்து குடிநீர் கொண்டுவர வேலை நடந்துகொண்டு இருக்கிறது. மற்ற ஊர்களில் குடிநீர் வசதிகளை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. பொதுவாகக் கொங்குநாட்டில் குடிநீர் வசதி மிக்க குறைவுதான்.

குடிநீரைக் காட்டிலும், கழிவு நீரை வெளியேற்றுதலே சுகாதாரத்திற்கு இன்றியமையாத செயலாகும். கோயமுத்தூர் ஒன்றில்மட்டும் ஒரு பகுதிக்குக் கழிவு நீர்த்திட்டம் ஆறுலட்சத் தில் ஏற்பாடாயிருக்கிறது. சேலத்தில் இந்த வசதி மிகக்குறைவு. ஊர் நடுவில் ஓடும் மணிமுத்தாறே இந்த வகைக்குப் பயன்படு கிறது. அது பெரும் தவறு ஆகும். கழிவு நீரை ஒழுங்குபடுத்தி

ஞல் வேளாண்மைக்கு நல்ல வண்டல் எருவு கிடைக்கும். கெடுதலிலிருந்தும் நன்மை பிறப்பிக்கச் செய்யலாம் அல்லவா?

### 14. உல்லாச இடங்கள்.

ஒவ்வொரு நகரத்திலும், சிற்றூரிலும் உல்லாச இடங்கள், அல்லது பூங்காக்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியம். கோவை, சேலம் போன்ற பெரிய ஊர்களில் பல பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது சிறிய ஊர்களிலும் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மக்கள் பொழுது போக்குக்கும், உடற்பயிற்சிக்கும், விளையாடல்களுக்கும், பூங்காக்கள் இன்றியமையாதன. பூங்காவை ஒட்டி விளையாட்டிடமும், வாசகசாலையும், வானொலியும் அமைக்கப்படவேண்டும். நகர மன்றங்களேயன்றி பஞ்சாயத்துச் சபைகளும், இந்த வசதிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு பெரியஊரிலும் அரிய பொருள்களின் கண்காட்சி அவசியமாக இருக்கவேண்டும். நாட்டினுடைய விளைபொருள்கள், சிற்பங்கள், ஓவியங்கள் முதலிய காட்சிப் பொருள்களெல்லாம் அச்சாலைகளில் வைக்கப்படவேண்டும். கோவையிலும் சேலத்திலும் சிறிய கைத்தொழில் காட்சிச்சாலைகள் இருக்கின்றன.

### 15. அற நிலையங்கள்.

அற நிலையங்கள் இருவகைப்படும். சமய நிலையங்கள், சமயமல்லாத நிலையங்கள் என்பன. சமய நிலையங்களில் ஏழு பாடல் பெற்ற தலங்களும், 10 வைப்புத் தலங்களும் இருக்கின்றன. இவைகளேயன்றி திருவாசகம், திருப்புகழ், புராணம் முதலியவைகளைப்பெற்றத் தலங்களும் ஏராளமாயிருக்கின்றன. ஆனால் இவைகளில் திருப்பணி செய்யப்பட்ட தலங்கள் மிகக்குறைவே. பேரூர், கொடுமுடி, கரூர், சேலம், பழனி என்ற ஊர்க்கோயில்கள், புதுத்திருப்பணிகள் கொண்டவை. தாரமங்கலம், அயோத்தியா பட்டணம், நாமக்கல், தாடிக்கொம்பு, குமரலிங்கம், பெருமாநல்லூர் முதலிய கோயில்கள் பழைய திருப்பணி கொண்டவைகள். சோழன் திருப்பணி பெற்றுக் கல்வெட்டுக்களைக் கொண்ட பழைய கோயில்கள் 36 இருக்கின்றன. இவைகளின்

விவரங்கள் சோழன் பூர்வ பட்டயம் என்ற நூலில் அறியலாம்.

சமய நிலையங்கள் அல்லாத அறநிலையங்களில் சத்திரங்கள் வந்துசேரும். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சத்திரமோ சாவடியோ இருக்கும். தேசாந்திரிகள் அங்கே வந்து தங்கிச்செல்ல வசதியுண்டு. பழைய காலத்து மன்னர்களும், சீமான்களும் கட்டிவைத்த சத்திரங்களுக்கு மான்யங்கள் உண்டு. அவைகளில் பெரும்பான்மையானவை பாழடைந்தும், பராதீனப்பட்டும், அழிந்துபோயின. மான்யங்களும் பல கைமாறி அறங்களுக்குப் பயன்படுவதில்லை. இவைகளை ஒன்றுசேர்த்து மீட்டி வைப்பது நலம். இந்தக்கடமை செய்வதற்கு அரசியல்சட்டமும் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

மேலும் பேரூர், மருதமலை, வெள்ளிமலை, பழனி முதலிய புனிதத்தலங்களிலே பொதுவிடுதிகள் மட்டுமேயன்றி வகுப்பு வாரிச் சத்திரங்களும், மடங்களும் இருக்கின்றன. இவைகளில் பெரும்பான்மையானவை, சென்ற ஒரு நூற்றாண்டுக்குள் ஏற்பட்டவைகளாகும். இவைகளையும் ஒன்றுபடுத்தி நடைபெறாத அறநிலையங்களின் வருவாய்களைக் கல்விப் பெருக்கத்திற்குப் பயன்படுத்தலே நன்றாகும்.

## 16. வினையவை.

கொங்குநாட்டில் அடிக்கடி பஞ்சம் வந்திருக்கின்றது என்று கூறியிருக்கிறோம். அவ்வாறு பஞ்சம் வந்த காலங்களில் அரசியலாரும், செல்வர்களும் நிரம்ப உதவிபுரிந்திருக்கின்றனர். சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளாகக்கொங்குநாட்டில் பஞ்சநிலை ஏற்பட்ட செய்தியை ஏற்றுக்கொண்டு அரசியலார்கள் பேருதவி செய்து வந்திருக்கிறார்கள். சில வறட்சித் தாலூக்காக்களில் இந்த உதவி புரியப்பட்டு வருகின்றது. புதிய நீர்த்திட்டங்கள் பூர்த்தியான பிறகு இந்தக் கொடிய நிலை மாறிவிடக்கூடும். இந்த முறையில் நாடு முழுதும் சென்ற ஐம்பது ஆண்டுகளாக முன்னேற்றம் அடைந்து வருகின்றது.

# அகரவரிசை - பொருள் அட்டவணை


| | பக்கம் |
|---|---|
| அச்சுதராயன் | 335 |
| அதிகமான் ... | 74 |
| அபிமான சோழராஜாதிராஜன் | 180 |
| அருணகிரிநாத சுவாமிகள் | 17,23 |
| ஆங்கிலர் ஆட்சி — தொடக்கம் | 411 |
| முதல் பகுதி | 416 |
| பிற்பகுதி | 423 |
| 20-வது நூற்றாண்டு | 429 |
| ஆட்சிக் கலவரங்கள் | 144 |
| ஆறவீடு வம்சம் | 336 |
| இரத்தினக் கற்கள் | 64 |
| இராஜராஜ உத்தமன் | 184 |
| இராஜாதிராஜ வீரசோழன் | 185 |
| இராஷ்டிரகூட கிருஷ்ணன் | 153 |
| இராஷ்டிரகூடர்கள் | 132 |
| ஈரோட்டுச் சண்டை | 361 |
| உத்தமசோழவீரநாராயணன் | 189 |
| உம்மத்தூர் தலைவர்கள் | 325 |
| உரோமானிய உறவு | 59 |
| ஐதர் ஆதிக்கம் | 381 |
| ஐதர் - திப்பு நாள்களில் கொங்குநாடு | 400 |
| ஐதர் வருகை | 374 |
| கங்கர்கள் | 93 |
| ,, அவர்கள் அரசர்கள் | 94 |
| ,, அரசியல் | 109 |
| ,, நாட்டின் நிலைமை | 117 |

| | |
|---|---|
| கச்சியப்பமுனிவர் | 171 |
| கலிமூர்க்கவிக்கிரமன் | 176 |
| களந்தை ஆதித்தேச்சரம் | 147 |
| கள்ளழகர் அம்மானை (அண்ணன்மார்கதை) | 52 |
| கார்மேகக் கவிஞர் | 23 |
| கிருஷ்ணதேவராயன் | 331 |
| கீழை நாட்டு நிலை | 240 |
| குலோத்துங்கச்சோழன் | 191 |
| குறுநில மன்னர்கள் | 129 |
| கேரளர் | 299 |
| கொங்கப்படை (சித்தூர்) | 257 |
| கொங்கு சோழர்கள் | 22 |
| ,, நாட்டின் நிலைமை | 219 |
| ,, வம்சம் | 171 |
| கொங்குதேச அரசர்கள் | 82 |
| ,, முதல் வம்சம் | 84 |
| ,, 2-ம் வம்சம் | 91 |
| ,, ஒரு நூல் | 10 |
| கொங்குநாடு அமைப்பு | 36 |
| ,, பரப்பு | 19 |
| ,, பிரிவுகள் | 24 |
| ,, மீ கொங்கு | 25 |
| ,, தென் கொங்கு | 25 |
| ,, வட கொங்கு | 25 |
| ,, மழ கொங்கு | 27 |
| ,, பிரிவுகளின் அட்டவணை | 31 |
| கொங்கு நாட்டின் நிலை 14 - வது நூற்றாண்டு | 315 |
| ,, 1799 | 405 |
| ,, விஜயநகரம் | 339 |
| கொங்கு நாட்டு எல்லைகள் | 1 |

கொங்கு நாட்டு மலைகள் 38
,, புராணங்கள் 17
,, தனி நாடு 8
கொங்கு பாண்டியர் 279
வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் 283
கொங்கு பாண்டிய தளர்ச்சி 287
கொங்குமண்டல சதகம் 2,7
கொங்கு வேளாளர் முதலியோர் 53,54
கொங்கு வேளிர், மாக்கதை ஆசிரியர், 100
கோயமுத்தூர் முற்றுகைகள் — மூன்று 402
கோவை பெயருக்குக் காரணம் 229
சங்கப் புலவர்கள் 75,80
சங்கமவம்சம் 319
சதாசிவராயன் 335
சமணர் படுக்கைகள், சமண ஆதிக்கம் 57
சம்பந்தர், அப்பர் விஜயங்கள் 122,128
சாளுவ வம்சம் 323
சுந்தரமூர்த்திகள் விஜயம் 136,144
சேரர்கள் ஆதிக்கம் 156
சைவ ஆசாரியர்கள் 20
சோழர் ஆட்சி 159
தலைக்காட்டில் புரட்சி 152
தணாய்க்கன் கோட்டை 296
தளவாய்கள் ஆட்சி 373
தாரமங்கலம் (சிற்பங்கள்) முதலிய கோயில்கள் 439
திப்பு வருகை 391
திருத்தொண்டர் புராணம் 11,14
திருப்புறம்பியச் சண்டை 145
திருமலைநாயக்கன் 355
துளுவ வம்சம் 330

தென்பால் நாட்டு நிலை 245
நாணயப் புதையல்கள் 65,68
நாய்க்கர் ஆட்சியில் அரசாங்கம் 362,370
உற்பத்தி 348
முன்னேற்றம் 351
வம்சம் 550
பட்டப் பெயர்கள் 217
1. கரிகாற்சோழன் ,,
2. கோனேரின்மை கொண்டான் ,,
பண்டைய குடிகள் 47
,, சரிதம் 55
,, நிலை 39
,, சிலா காலம் 4
,, இரும்புக்காலம் 420
பல்லவர்கள் 120
பழைய குடிமக்கள் 51
பாண்டியர் ஆதிக்கம் 275
,, பெருக்கம் 263
,, பேரரசு 265
,, வீழ்ச்சி 270
புக்கானன் வருணனை 407
புரட்சிக்காலம் 149,152
பேரூர்ச்சிற்பங்கள் 367
பைச்சே கவுடன் 402
மதுரா விஜயம் — வடமொழி நூல் 310
மதுரை வீழ்ச்சி 360
மந்திரி பூர்ணையன் 391
மருதமலைக் கல்வெட்டுக்கள் 236
முகம்மதியர் வருகை 305
,, ஆட்சி 307

| | |
|---|---|
| முதுமக்கள் தாழி | 45 |
| மேலைநாட்டு நிலை | 252 |
| மைசூர்ப் போர்கள் — முதல் போர் | 383 |
| 2- போர் | 389 |
| 3- போர் | 392 |
| 4- போர் | 397 |
| மைசூர் வளர்ச்சி | 357 |
| மௌரியரும் கோசரும் | 76-80 |
| ,, பாடல் | 77-80 |
| வடபால் நாட்டுநிலை | 258 |
| விக்கிரம சோழன் II. | 213 |
| ,, III. | 216 |
| விசுவநாத நாயக்கன் | 351 |
| விஜயநகர உற்பத்தி | 311 |
| விஜயமங்கலம் – சமணர்கள் கோயில்கள் | 116 |
| வீரசிக்கராயன் | 329 |
| வீரசோழன் | 197 |
| வீரநஞ்சராயன் | 327 |
| வீரராஜேந்திரன் | 203 |
| வெளிநாடுகள் நிலை | 370 |
| ஸ்வார்ட்ஜ் பாதிரி | 400 |
| ஹொய்சளர்கள் | 291 |

# ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

*Note*: A discount of 25% on listed prices allowed on all purchases from the Registrar. Titles in Tamil indicate Tamil publications.

## The Department of History.

| *Series No.* | | *Year of Publication.* | *Price.* Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|
| 1. | Bhoja Raja by Prof. P. T. Srinivasa Ayyangar | 1931 | 1 | 8 | 0 |
| 2. | A History of Gingee and its rulers by Rao Bahadur C. S. Srinivasachariar | 1943 | 4 | 0 | 0 |
| **3. | The Nayaks of Tanjore by Rao Bahadur C. S. Srinivasachariar and Mr. Vriddhagirisan | 1942 | 10 | 0 | 0 |
| *4. | Indian History–இந்தியர் வரலாறு by Rao Bahadur C. S. Srinivasachariar and Mr. S. K. Govindaswami | 1943 | 2 | 0 | 0 |
| 5 | Maratha Rule in the Carnatic by Mr. C. K. Srinivasan | 1945 | 3 | 0 | 0 |
| 6. | The Dutch in Malabar by Dr. P. C. Alexander | 1946 | 3 | 8 | 0 |
| 7. | Hoysalas in the Tamil Country by Mr. K. R. Venkataraman | 1950 | 2 | 8 | 0 |
| 8. | Buddhism in Kerala by Dr. P. C. Alexander M. A; D. Litt. | 1949 | 6 | 0 | 0 |
| 9. | Selections from the Orme Manuscripts Ed. by Prof. C. S. Srinivasacharya | 1952 | 15 | 0 | 0 |
| 10. | The History of the Pearl Fishery of the Tamil Coast by Mr. S. Arunachalam M. Litt. | 1952 | 3 | 8 | 0 |
| 11. | Mediaeval Kerala by Mr. P. K. S. Srivirarayan Raja | 1953 | 6 | 4 | 0 |
| 12. | A History of the Kongunadu–கொங்கு நாட்டு வரலாறு by Rao Bahadur C. M. Ramachandran Chettiar, B. A.; B. L.; F. R. G. S.. | 1954 | | | |
| 13. | Madurai Vijayam, by Mr. S Tiruvenkatachariar | | In Press | | |
| 14. | The oldest Chidambaram Inscriptions by Mr. S. R. Balasubramaniyam (Off-print) | 1944 | 2 | 0 | 0 |

* Out of Stock;

** Journal Parts Containing these works will be supplied.

ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

## The Department of Economics.

| *Series No.* | | *Year of Publication.* | *Price.* Rs. A. P. |
|---|---|---|---|
| 1. | Factory Labour in India by Prof. A. Mukhtar | 1930 | 3 0 0 |
| 2. | The Madras Agriculturists Relief Act—A Study by Dr. B. V. Narayanaswami Naidu and Mr. P. Vaidyanathan M. A. | 1939 | |
| 3. | The Distributive Co-operation in India by Mr. V. G. Ramakrishna Ayyar | 1938 | 1 0 0 |
| **4. | The Madras General Sales Tax Act by Dr. B. V. Narayanaswami Naidu and Mr. Thiruvengadathan | 1940 | 2 8 0 |
| 5. | Report on the working of Prohibition in Salem by Mr. C. Jaganathachari, M. A; M. Litt. | 1939 | |
| *6. | Road and Rail Transport by Dr. B. V. Narayanaswami Naidu and Mr. S. R. N. Badri Rao | | 5 0 0 |
| **7. | Ground Nut by Dr. B. V. Narayanaswami Naidu and Mr. P. S. Hariharan | 1940 | 2 8 0 |
| 8. | Text-book on Economics—பொருளாதார நூல் by Prof. V. G. Ramakrishna Ayyar | 1942 | 2 0 0 |
| 9. | The Economy of the South Indian Temple by Prof. V. G. Ramakrishna Ayyar | 1946 | 2 0 0 |
| *10. | The Indian Trade by Dr. B. V. Narayana swami Naidu | | 2 0 0 |
| 11. | The Sample Surveys on working of Prohibition in South Arcot District by Prof. V. G. Ramakrishna Iyer | 1949 | 0 8 0 |
| **12. | The Problem of Rural Credit in the Madras-Presidency by Mr. P. Vaidyanathan | 1949 | 10 0 0 |

** Journal Parts Containing this work will be supplied

ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

## The Department of Philosophy.

| *Series No.* | | *Year of Publication.* | *Price.* Rs | A. | P. |
|---|---|---|---|---|---|
| *1. | Nyaya kulisa by Atreya Ramanuja Ed: Prof. R. Ramanujachari and Mr. K. Srinivasacharya | 1938 | 2 | 8 | 0 |
| *2. | Nitimaḷa by Narayanarya | 1940 | 2 | 0 | 0 |
| *3. | Naveena Tarkam–நவீன தர்க்கம் by Mr. K. R. Appalachariar | 1934 | 2 | 0 | 0 |
| *4. | Educational Psychology– உள நூலும் கல்வி பயிற்றலும் by Prof. K. R. Appalachariar and Prof. R. Ramanujachari | 1940 | 1 | 0 | 0 |
| 5. | Theory of Knowledge of Saiva Siddhanta by Dr. V. Ponniah Ph. D. | 1952 | 8 | 0 | 0 |
| 6. | Deductive and Inductive Logic–அளவை நூல் by Mr. S. Sivapadasundaram | 1953 | 4 | 0 | 0 |

## Tirupanandal Endowment Lectures:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Introduction and History of Saiva Siddhanta–1947 by Mr. G. Subramania Pillai, M.A.; B. L. | 1948 | 3 | 0 | 0 |
| 2. | Lectures on Saiva Siddhanta–1950 by Mr. M. Balasubramanya Mudaliyar. B. A; B. L. | 1951 | 1 | 6 | 0 |
| 3. | Lectures on Saiva Siddhanta–1948 by Prof. R. Ramanujachariar M. A. | 1952 | 1 | 4 | 0 |
| 4. | Lectures on Saiva Siddhanta–1951 by Mr. K. Vajravelu Mudaliar B. A; L. T. | 1953 | 5 | 6 | 0 |
| 5. | Lectures on Saiva Siddhanta–1952 by Mr. S. Sachithanandam Pillai B. A., L. T., | | In Press | | |

ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

## The Department of Mathematics.

| *Series No.* | | *Year of Publication.* | *Price.* Rs. | A | P. |
|---|---|---|---|---|---|
| 1. | Text book on Algebra for Intermediate –இயற்கை கணிதம் by Mr. T. Govindarajan, M. A. | 1949 | 5 | 0 | 0 |
| 2. | Trigonometry–கோண கணிதம் by Mr. T. K. Manikavasagam, M. A; L. T., | 1949 | 7 | 0 | 0 |
| 3. | Intermediate Geometry–வடிவு கணிதம் by Dr. K. Rangaswami Aiyar M. A; M. Sc., Ph. D. | 1950 | 2 | 8 | 0 |

## The Department of Physics.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | A Text-book on Physics–பௌதிக நூல் by Mr. R. K. Visvanathan Vol I. | 1941 | 3 | 0 | 0 |
| 2. | Do Vol. II. | 1941 | 2 | 0 | 0 |
| 3. | Acoustics-சங்கீத ஒலி நூல்-Revised second edition, by Mr. R. K. Visvanathan | 1954 | 6 | 10 | 0 |
| 4. | Physics of Music by Mr. R. K. Visvanathan | 1948 | 2 | 0 | 0 |
| 5. | Vignana Sirunool–விஞ்ஞான சிறு நூல் by Prof. T. P. Navaneethakrishna M. A. | 1946 | 0 | 12 | 0 |
| 6. | Instructions for Experiments in Practical Physics for Intermediate | 1947 | 1 | 8 | 0 |
| 7. | Do B. Sc. | 1947 | 3 | 0 | 0 |
| 8. | Manual of Science–தெரியற் செய்கை நூல் by Prof. T. P. Navaneetha krishna M. A. Vol I. | 1951 | 10 | 0 | 0 |
| 9. | Do Vol. II. | 1952 | 10 | 0 | 0 |
| 10. | Text Book of Practical Physics–செய்முறை பௌதிக நூல். by Mr. S Sriraman, M. A; M. Sc. | 1952 | 6 | 0 | 0 |

## The Department of Chemistry

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | A Text-book on Chemistry –நவீன அசேதன ரசாயனம் by Mr. N. Ananthavaidyanathan Vol. I. | 1938 | 3 | 0 | 0 |
| 2. | Do Vol. II. | 1941 | 2 | 8 | 0 |
| 3. | Practical Chemistry for Intermediate Course–செய்முறை வேதி நூல் by Mr. P. L. Ramaswamy M. A. | 1949 | 4 | 8 | 0 |

ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

## The Department of Botany.

| *Series No.* | | *Year of Publication.* | *Price.* Rs. As. P. |
|---|---|---|---|
| *1. | A Text-book on Botany–தாவர நூல் by Dr. T. S. Raghavan | 1942 | 3 0 0 |
| 2. | Cytological Studies in Bignoniaccae by Dr. K. R. Venkatasubban, M. Sc. | 1944 | 5 0 0 |

## The Department of Tamil.

| | | | |
|---|---|---|---|
| *1. | Pari Kathai – பாரி காதை by Bhasha Kavi-segara Vidvan R. Raghava Ayyangar | 1937 | 2 0 0 |
| 2. | Kurunthokai Vilakkam–குறுந்தொகை விளக்கம் Do | 1947 | 1 8 0 |
| *3. | Advanced Studies in Tamil Prosody by Dr. A. Chidambaranathan Chettiar | 1943 | 2 0 0 |
| 4. | Studies in History of Tamil Literature–தமிழ் வரலாறு by Vidwan R. Raghava Ayyangar Do | 1952 | 4 0 0 |
| 5. | (a) Tholkappiam-Porulathikaram Vol. I. Part I by Mr. E. S. Varadharaja Iyer | 1948 | 3 8 0 |
| 5. | (b) Do Part II | 1948 | 4 8 0 |
| 6. | Tholkappiam-Collathikaram by Dr. P S. Subramanya Sastri Do | 1945 | 5 0 0 |
| 7. | Historical Tamil Reader by Dr. P. S. Subramanya Sastri | 1945 | 2 8 0 |
| 8. | Tree worship and Ophiolatory by Mr. G. Subramania Pillai, M. A., B L., | 1948 | 1 8 0 |
| 9. | A New Approach to Tiruvasakam by Mrs. Ratna Navarathnam, M. A., M. Litt., | | 4 0 0 |

* Out of Stock ; Note : Titles in Tamil indicate Tamil publications.

## ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

| Series No. | | Year of Publication. | Price. Rs. A. P. |
|---|---|---|---|
| 10. | Elephant in Tamil Land by Mr. E. S. Varadaraja Iyer B A. | 1945 | 1 4 0 |
| 11. | Thiththan–தித்தன் by Basha Kavisegara Vidwan R. Raghava Ayyangar | 1949 | 1 0 0 |
| 12. | Kosar–கோசர்-ஒரு சிற்றுராய்ச்சி Do | 1951 | 0 12 0 |
| 13. | Perumpanarttuppadai–பெரும்பாணாற்றுப் படை by Basha Kavisegara Vidwan R Raghava Iyengar | 1949 | 2 0 0 |
| 14. | Pattinappalai–பட்டினப்பாலையும்-ஆராய்ச்சி உரையும் Do | 1951 | 1 4 0 |
| *15. | History of the later Cholas–பிற்காலச் சோழர் சரித்திரம் by Mr. T. V. Sadasiva Pandarathar Vol. I. | 1949 | அச்சில் |
| *16. | Do Vol. II. | 1951 | அச்சில் |
| 17. | Aiyinkurunooru–ஐங்குறு நூறு Ed. by Mr. A. S. Doraiswami Pillai | | அச்சில் |
| 18. | Kautaleyyam–கௌடலீயம்–பொருள் நூல் by மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் | | அச்சில் |

## Isai Tamil Series–இசைத் தமிழ் வெளியீடுகள்.

பரிசுபெற்ற தமிழ் பாடல்கள்

| | | | |
|---|---|---|---|
| *1. | [Vol. I. T. லக்ஷ்மணப் பிள்ளை, பாபநாசம் சிவன் முதலிய ஐவர் கீர்த்தனங்கள் 46] | 1943 | 2 0 0 |
| 2. | ,, II கீதவர்ணங்கள் முதலியன 104 (இரண்டாம் பதிப்பு) | 1954 | 4 0 0 |
| *3. | ,, III நீலகண்ட சிவன் முதலிய அறுவரது கீர்த்தனங்கள் 75 | 1943 | 2 0 0 |
| *4. | IV முத்துத்தாண்டவர் கீர்த்தனங்கள் 60 | 1943 | 2 0 0 |
| 5. | ,, V Part 1 இசையியல் by திரு. க. பொன்னையா பிள்ளை | 1948 | 1 8 0 |
| *6. | ,, Part 2 தமிழிசைக் கருவிகள் by திரு. பி. கோதண்டராமன் எம். ஏ. | 1945 | 1 4 0 |
| 7. | ,, Part 3 சுரமேள கலாநிதி-மொழிபெயர்ப்பு | 1947 | 1 0 0 |
| *8. | ,, VI கோபாலகிருஷ்ண பாரதியார் கீர்த்தனங்கள் 90 | 1944 | அச்சில் |
| *9. | ,, VII ம.ப. பெரியசாமித்தூரன்பாடல்கள் 70 | 1943 | 2 0 0 |
| 10. | ,, VIII ஸ்ரீகாழி அருணசலக் கவிராயர் | 1945 | 3 0 0 |

## ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

| Series No. | | Year of Publication. | Price. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|
| 11. Vol. IX | தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை செவற்குளம் கந்தசாமிப் புலவர் நகரம், முத்துவீரப்பக் கவிராயர் | 1945 | 3 | 0 | 0 |
| 12. „ X | நகரம் முத்துசாமிக் கவிராயர் | 1946 | 3 | 0 | 0 |
| 13. „ XI | சுத்தானந்த பாரதியார் | 1945 | 3 | 0 | 0 |
| *14. „ XII | மிருதங்க பாடமுறை மைலாட்டூர் V. சாமி ஐயர் | 1946 | 3 | 8 | 0 |
| 15. „ XII | Part II மத்தளங்கற்கும் முறை | 1948 | 1 | 6 | 0 |
| 16. „ XIII | பாலகவி வயி. இராமநாதஞ் செட்டியார் | 1946 | 3 | 0 | 0 |
| *17. „ XIV | சுத்தானந்த பாரதியார் — மாணிக்கப் பாட்டு | 1946 | 3 | 8 | 0 |
| 18. „ XV | ம. ப. பெரியசாமித்தூரன் | 1947 | 3 | 0 | 0 |
| 19. „ XVI | வையைச்சேரி இராமசாமி ஐயர் | 1948 | 3 | 0 | 0 |
| 20. „ XVII | கவிகுஞ்சர பாரதியார் முதலிய பதின்மர் பாடல்கள் 50 | 1948 | 3 | 0 | 0 |
| 21. „ XVIII | ராஜா அண்ணாமலை தமிழிசைக் கருவூலம் — க. பொன்னையா பிள்ளை | 1949 | 4 | 0 | 0 |
| 22. „ XIX | திருப்புகழ் — சுரதாளக் குறிப்புடன் திரு. சித்தூர், சுப்பிரமணிய பிள்ளை | 1953 | 3 | 0 | 0 |
| 23. „ XX | பரத சங்கிரகம்-Ed. திரு. க. வெள்ளைவாரணம் | 1954 | | | |
| 24. | Swaramela Kalanithi by Mr. M. S. Ramaswami Ayyer | 1932 | 2 | 0 | 0 |

## Tirupanandal Mutt Endowment Publications.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Kambar Memorial Prize Selections- கம்பர் பரிசுத் தொகுதி | 1944 | 0 | 8 | 0 |
| 2. | Adi Kumaraguruparar — ஆதி குமரகுருபரர் | 1945 | 0 | 12 | 0 |
| 3. | Sekkizhar Selections — சேக்கிழார் ,, | 1944 | 0 | 8 | 0 |
| 4. | Thevara Thirumurai-Preliminary—தேவாரத் ,, திருமுறை முதற்பாகம் | 1944 | 0 | 2 | 0 |
| 5. | Do இரண்டாம்பாகம் | 1953 | 1 | 4 | 0 |
| 6. | Sivagnanabodham—சிவஞான போதம் Edited by Avvai S. Duraiswami Pillai | 1954 | 3 | 5 | 0 |
| 7. | Gnanamirtham-ஞானமிர்தம்-வாகீச முனிவர் Ed. by Thiru. A. S. Duraiswami Pillai. | 1954 | | | |

## The Department of Sanskrit.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *1. | Srimukundamala, Ed. by Mr. K. Rama Pisharoti | 1933 | 3 | 0 | 0 |
| 2. | Tattvavibhavana by Parameswaran, a commentary on Vacaspati Misra's Tattvabindu by Mr. V. A. Ramaswami Sastri | 1936 | 3 | 0 | 0 |

## ANNAMALAI UNIVERSITY PUBLICATIONS

| Series No. | | Year of Publication. | Price. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|
| 3. | Svarasiddhanta Candrika by Srinivasayajvan Edited by Mr. K. A. Sivaramakrishna Sastri | 1936 | 5 | 0 | 0 |
| 4. | Trimsacchloki Edited by Mr. N. Subramania Sastri | 1937 | 0 | 8 | 0 |
| 5. | The Philosophy of Gesthetic Pleasure by Mr. Panchapagesa Sastri | 1940 | 3 | 0 | 0 |
| 6. | Jagannatha Panditha by Mr. A. Ramaswami Sastri | 1942 | 2 | 0 | 0 |
| 7. | (a) Lectures on Patanjali's Mahabhasya, by Dr. P. S. Subramanya Sastri Vol. I | 1944 | 3 | 0 | 0 |
| | (b) Do Vol II | 1951 | 10 | 0 | 0 |
| 8. | Vivarana with Vyutpattivada–Lakarartha-vicara by Mr. V. Subrahmanya Sastri | 1948 | 6 | 0 | 0 |
| 9. | History of Sanskrit Literature – வடமொழி நூல் வரலாறு Do | 1946 | 10 | 0 | 0 |
| 10. | History of Sanskrit Language-வடமொழி வரலாறு by Dr. P. S. Subramanya Sastri | 1950 | 5 | 0 | 0 |
| 11. | Studies in Samskrit texts on Temple architecture by Dr. N. V. Mallayya | 1949 | 10 | 0 | 0 |
| 12. | Bhavanaviveka with Visamagranthi-bhedika by Mr. V. A. Ramaswami Sastri and Mr. K. A. Sivarama Krishna Sastri (Off-prints) | 1949 | 6 | 0 | 0 |

## General

| | | | | |
|---|---|---|---|---|
| * Raja Sir Annamalai Chettiar Commemoration Volume | 1941 | 10 | 0 | 0 |
| Journal of the Annamalai University Vol. I to 18 Each Vol | | 7 | 8 | 0 |

All available off-prints of articles in Vols X. VII to XVIII are for sale.

For Copies apply to

The Registrar, Annamalai University,
Annamalainagar P. O.